UNIVERSAL
LIBRARY
OU_208200
UNIVERSAL
LIBRARY

Thiruvilayadar Puranam


Author Thiruvilayadar

உ

கணபதிதுணை.

திருவாலவாயுடையார்

திருவிளையாடற்புராணம்.



செல்லிநகர்ப்

பெரும்பற்றப்புலியூர் நம்பி

இயற்றியது.

இது,

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பல கையெழுத்துப்பிரதிகளைக்கொண்டு

ஆராய்ந்து

நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

சென்னை:

கேசரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

(இரண்டாம் பதிப்பு)

விலை ரூபா 2—8—0.

பிரபவ வரு சித்திரைமீ.

1927.

Copyright Registered.

Formes 1 to 47 Printed at the Commercial Press, Triplicane and the remaining portion at the Kesari Press.

இப்புத்தகத்தில் அடங்கியவை.

பக்கம்.

க. இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலிய வற்றின் முதற்குறிப்பகராதி ... ... 4.

உ. முகவுரை ... ... 5—13.

ங. இந்நூலாசிரியராகிய பெரும்பற்றப்புலியூர்நம்பியின் வரலாறு 14—20.

ச. நூலாராய்ச்சி ... ... 20—29.

[இதில், நூலிலுள்ள முக்கியமான சில குறிப்புக்கள், அதி வகைகள், நூலாசிரியர் கூற்றுக்கள், பொருளணிகள், மடக்கணிகள், ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளின் அருமைத் திருநாமங்கள், இந்நூலால்தெரிந்த ஊர்களின்பெயர் கள், குலங்கள், சங்கப்புலவர்கள், சாதிகள், பழைய வழக்கங்கள், தனிப்பாடல்கள், தாண்டவம், திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் பதிகங்கள், அவரது திருநா மங்கள், திருவிளையாடல் சம்பந்தமான சிலபழமொழி கள் முதலியன, தீர்த்தங்கள், நாடுகள், நியாயம், நூல் கள், மடங்கள், மந்திரங்கள், மலைகள், மரபு, வித்தை கள், சில அரியமொழிகள் ஆகிய இவற்றை முறையே அறிந்துகொள்ளலாம்.]

ஞ. இதிற்காணப்படும் விசேட வேறுபாடுகள் ... ... 30 - 34.

சு. ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகள் திருநாவுக்கரசுநாயனாருக்குக் காலத்தால் முந்தியவரென்பது ... ... 35 - 6.

எ. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் மூலமும் குறிப்புரையும் க - ஙகச.

அ. சில கையெழுத்துப்பிரதிகளிற்கண்ட கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் ... ... ஙகஞ.

கூ. நூற்சிறப்புப்பாயிரம் ... ... ஙகசு.

கo. திருவாலவாயுடையார் திருவிளையாடற் பயகரமாலை மூலமும் குறிப்புரையும் ... ... ஙகள-ஙo.

கக. கடம்பவனபுராணம், கo - இலீலாசங்கிரக அத்தியாயம் மூலமும் குறிப்புரையும் ... ... ஙஙக-ஙசள.

கஉ. திருவுசாத்தான நான்மணிமாலை, உஅ - ஆம் செய்யுளும் குறிப்புரையும் ... ... ஙசஅ-ஞo.

கங. திருவிளையாடற் கருணைத்திருவிருத்தம், கக - ஆம் பாடல் ஙஞo.

கச. திருவிளையாடற்புராணச் செய்யுண் முதற்குறிப்பகராதி ஙஞக-சச.

கஞ. பயகரமாலைச் செய்யுண் முதற்குறிப்பகராதி ... ... ஙசஞ.

கசு. இலீலாசங்கிரக அத்தியாயச் செய்யுண் முதற்குறிப்பகராதி ... ஙசசு.

கள. அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் முதலியவற்றின் அகராதி ... ... ஙசள அ.

கஅ. அரும்பத முதலியவற்றின் அகராதி ... ... ஙசசு-சஉங.

கஙு. பிழையும் திருத்தமும். ... ... சஉச.

இப்புத்தகத்தில் எடுத்துக்காட்டிய * நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அருணகிரி - அருணகிரிப்புராணம்.
அழகர்கல - அழகர்கலம்பகம்.
இரகு - இரகுவம்சம்.
இ. கொ - இலக்கணக்கொத்து.
இலீலா - இலீலாசங்கிரக அத்தியாயம்.
இறை - இறையனாரகப்பொருள்.
ஐங்குறு - ஐங்குறுநூறு.
கட - கடவுள்வாழ்த்து. ணம்.
கடம்ப, கடம்பவன - கடம்பவனபுரா
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
கல் - கல்லாடம்.
கலி - கலித்தொகை.
கலிங்க - கலிங்கத்துப்பரணி.
குறுந் - குறுந்தொகை.
கூர்ம - கூர்மபுராணம்.
கோயிற்பு - கோயிற்புராணம்.
சிலப் - சிலப்பதிகாரம்.
சீவக - சீவக சிந்தாமணி.
சுந்தர - சுந்தரமூர்த்தி நாயனார்.
சூடா - சூடாமணிநிகண்டு.
சூளா - சூளாமணி.
ஞான - ஞானவாசிட்டம்.
தக்க, தக்கயாக - தக்கயாகப்பரணி.
தத்துவ - தத்துவராயர் பிரபந்தங்கள்.
தாயு - தாயுமானவர் பாடல். [ணம்.
திருக்காளத்தி - திருக்காளத்திப் புரா
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவை யார். [னார்.
திருஞா திருஞானசம்பந்தமூர்த்திநாய
திருநா - திருநாவுக்கரசுநாயனார்.
திருநாகைக்காரோண - திருநாகைக் காரோணப் புராணம்.
திருமயிலை - திருமயிலைத்திரிபந்தாதி.
திருவா - திருவாசகம்.
திருவாத - திருவாதவூரர் புராணம்.
திருவிளை - திருவிளையாடற் புராணம்.
திவ் - திவ்யப்ரபந்தம்.
தே - தேவாரம்.
தொல் - தொல்காப்பியம்.
ந - நச்சினார்க்கினியர்.
நள - நளவெண்பா. [மாலை.
நால்வர்நான்மணி - நால்வர்நான்மணி
நாலடி - நாலடியார்.
பக் - பக்கம்.
பதி - பதிகம்.
பட்டினப் - பட்டினப்பாலை.
பதிற் - பதிற்றுப்பத்து.
பயகர - திருவிளையாடற் பயகரமாலை.
பரி - பரிபாடல்.
பா - பாயிரம்.
பி - ம் - பிரதிபேதம்.
பிரபு - பிரபுலிங்கலீலை.
பு. வெ - புறப்பொருள் வெண்பா
புறநா - புறநானூறு. [மாலை.
பெரிய - பெரிய புராணம்.
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப் படை.
பொருந - பொருநராற்றுப்படை.
மணி - மணிமேகலை.
மது, மதுரை, மதுரைக் - மதுரைக்காஞ்சி.
மதுரைக்கல - மதுரைக்கலம்பகம்.
மதுரைப்பதிற் - மதுரைப்பதிற்றுப்பத் தந்தாதி. [தமிழ்.
மீனாட்சி - மீனாட்சியம்மைபிள்ளைத்
யா. வி - யாப்பருங்கலவிருத்தி.
முருகு - திருமுருகாற்றுப்படை.
வி-பாரத, வி-பாரதம் - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

---

* நூல்களிலுள்ள உறுப்புக்களின் பெயர்கள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

கணபதி துணை.

முகவுரை.

தேவாரம்.

திருக்கிற்றம்பலம்.

வேதியா வேத கீதா விண்ணவ ரண்ண வென்றென்
றோதியே மலர்க ளேவி யோருங்கினின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ்சூடே
மாதியே யால வாயி லப்பனே யருள்செய் யாயே.

திருவாலவாயென்பது பாண்டிவளநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற பதினொன்று ஸ்தலங்களில் முதலாயது ;

பதினொன்குஸ்தலங்களாவன :

"கூடல் புனவாயில் குற்றால மாப்பனூர்
சேடகெல் வேலி யிராமேச-மாடாமே
தென்பரங்குன் றஞ்சுழிய றென்றிருப்புத் தூர்காணை
வன்கொடுங்குன் றம்பூ வணம்" என்பன.

இத்தலம், கருணைக்கடலாகிய ஸ்ரீசோமசுந்தரக்கடவுள் ஆன் மாக்களை உய்வித்தருளவெண்ணி, சுச - திருவிளையாடல்கள் செய் தருளிய ஒப்புயர்வற்ற பெருமைவாய்ந்தது ; இதற்குரிய தேவாரப் பதிகங்களாவன :

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்

தேவாரத்தின் முதல்			பண்
நீலமாமிடற்று	....	....	குறிஞ்சி
மந்திரமாவது	....	....	காந்தாரம்
மானினேர்விழி	....	....	கொல்லி
காட்டுமாவது	....	....	கௌசிகம்
செய்யனே	....	....	,,
வீடலாலவாயிலாய்	....	....	,,

வேதவேள்வியை	....	....	நாலடிமேல்வைப்பு
ஆலகீழல்	....	....	திருவியமகம்
மங்கையர்க்கரசி	....	....	புறநீர்மை

திருநாவுக்கரசுநாயனார்

வேதியா	....	....	திருநேரிசை
முளைத்தானை	....	....	திருத்தாண்டகம்.

இத்தலத்திற்குரிய பழையவரலாறுகளைப் புலப்படுத்தும் வடநூல்களும், வடமொழித் துதிகளும், தனித்தமிழ்நூல்களும், தனிப்பாடல்களும் பல உள்ளனவென்பது யாவருக்கும் தெரிந்ததே. வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யப்பெற்றனவாய் மூர்த்திவிசேட முதலியவற்றை விளங்கத் தெரிவிக்கும் நூல்கள் சில; அவை திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம், திருவிளையாடற் புராணம், அட்டமிப் பிரதக்ஷிணமான்மிய மென்பனவாம்; அவற்றுள், —

க. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமென்னும் இந்நூல், * உத்தரமகாபுராணமென்னும் வடநூலின் ஒருபகுதியாகிய சாரசமுச்சய மென்பதிலிருந்து மொழிபெயர்த்து, செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர்நம்பி பென்பவரால், செய்யுள்நடையாக இயற்றப்பெற்றது. இஃது, ''ஓதிய'' (பக். உக) என்னுஞ்செய்யுளாலும், ''அம்பது மத்தார்'' (பக். ஙகங) என்னுஞ் செய்யுள் முதலியவற்றாலும் விளங்குகின்றது. இந்நூலின் செய்யுட்டொகை, கஎடு. இது பழைய திருவிளையாடல், வேம்பத்தூரார் திருவிளையாடல், திருவிளையாடலெனவும் வழங்கா நிற்கும்; இதனுடைய மற்றவிசேடங்கள் பின்னர் அவ்வவ்விடத்து எடுத்துக்காட்டப்படும்.

உ. கடம்பவனபுராண மென்பது, தொண்டை நாட்டிலுள்ள இலம்பூரிலிருந்த வீமநாதபண்டித ரென்பவரால் நீபாரண்யமாஹாத்மியம் அல்லது கதம்பவனபுராண மென்னும் வடநூலிலிருந்து மொழி பெயர்த்துச் செய்யுள் நடையாக இயற்றப்பெற்றது. இதன் செய்யுட்டொகை, கoகo. இதில் இலீலாசங்கிரக அத்தியாயத்தின் முதலிலுள்ள, சுச - செய்யுட்களாற் கூறப்பெற்ற, சுச - திருவிளையாடல்களும் மேற்கூறிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலுள்ள முறைப்படியே அமைந்துள்ளன. இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

* உத்தரமகாபுராணமென்னும் வடநூல் : இப்பொழுது கிடைக்கவில்லை.

கூ. * சுந்தரபாண்டிய மென்பது, தொண்டைநாட்டிலுள்ள வாயற்பதியிலிருந்த அனதாரியென்னும் புலவர்பெருமானைச் சுந்தர பாண்டியமென்னும் வடநூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யுள் நடையாக இயற்றப்பெற்றுள்ளது; "மிண்டரை வெல்லும் வளைச் சிங்க ராயன் விலைகொடுப்பத், தண்டமிழ் மேக முரத்தூரில் வேதி யன் ருனும்விற்பக், கொண்டவன் பின்சென்று மண்டலத் தேபுகழ் கொண்ட்பிரான், வண்டமிழ்க் கும்ப னனதாரி யுந்தொண்டை மண் டலமே" என்னுந் தொண்டைமண்டலசதகத்தாலும், "கம்பனென் றுந் தாதனென்றுங் † காழியொட்டக் கூத்தனென்றுங், கும்பமுனி யென்றும்போர் கொள்வீரா - அம்புவியின், மன்ன வலர்புகழும் வாய லன தாரியப்ப, னங்காளி லேயிருந்தக் கால்" என்னும் பழைய வெண் பாவாலும் பாராட்டப் பெற்றவர் இந்த அனதாரியேயென்று தெரிகின் றது. இந்நூல் செய்யப்பெற்றகாலம், சாலி. கசஅசு; கி. பி. 1563. இஃது இன்னும் அச்சிடப்படவில்லை; முற்றும் கிடைக்கவுமில்லை.

ச. திருவிளையாடற்புராணமென்பது பரஞ்சோதிமுனிவரென் பவரால் ஸ்ரீ ஹாலாஸ்யமாகாத்மியமென்னும் வடநூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யுள்நடையாக இயற்றப்பெற்றது. இதன் செய் யுட்டொகை கூகூகூ. இக்காலத்து எல்லாராலும் மிகுதியாகப் பாராட்டிப் படிக்கப்பெற்றுவருவது இந்நூலே. இஃது அச்சிடப்பட் டுள்ளது.

ரு. அட்டமிப்பிரதக்ஷிண மான்மியமென்பது தேவாரத்தல முறையை முதலிற்பதிப்பித்தவரும் மதுராபுரி வாஸியுமாக இருந்த ஸ்ரீ இ. இராமஸ்வாமிப் பிள்ளையவர்களால் வடநூலிலிருந்து வசன நடையாக முன்பு இயற்றிப் பதிப்பிக்கப்பெற்று வழங்குகின்றது.

இந்தநூல்கள் ஐந்தனுள், முதலாவதும் நான்காவதுமாகிய நூல் கள் ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளுடைய அற்புதத்திருவிளையாடல்கள் அறுபத்துநான்கையும் மிகச் செவ்வையாக விரித்துப் பாராட்டித் தெரிவிப்பனவாம். இவ்விரண்டனுள் ஒன்றனோடுமற்றொன்றற்குள்ள வேறுபாடுகள் பல.

இந்நூலிலுள்ள மூர்த்தியார்க்கரசளித்த திருவிளையாடல் (நுக) முதலிய மூன்றுகதைகளும் அந்நூலிற்காணப்படவில்லை; அதிலுள்ள வருணன்விட்ட கடலேவற்றச்செய்த திருவிளையாடற்கதை இதி

* இந்தநூல் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையிற் கிடைத்தது.

† காளியொட்டக் கூத்தனென்றும் வழங்குவதுண்டு.

லுள்ள (கஉ) நான்மாடக்கூடலான திருவிளையாடலிலும், அதிலுள்ள நாகமெய்ததிருவிளையாடல், மாயப்பசுவைவதைத்த திருவிளையாடற் கதைகள் இதிலுள்ள (நகூ) மதுரையான திருவிளையாடலிலும், அதி லுள்ள திருநகரங்கண்ட திருவிளையாடற்கதை இதிலுள்ள (நுநு) புலிமுலைபுல்வாய்க்கருத்திய திருவிளையாடலிலும் அமைந்துள்ளன; இதில் திருவிளையாடல்கள் அமைந்துள்ள முறைவேறு ; அதிலமைந் துள்ள முறைவேறு; அது கதையை விரித்துக்கூறுவது ; இது சுருக்க மாகக் கூறுவது; அன்றியும், சங்கச்செய்புட்கள்முதலிய பண்டைத் தமிழ் நூல்களிலுள்ள இந்நகரவரலாறுகளை விடாமல் தழுவிச்செல் வது இஃது ; அஃது அன்னதன்று.

சிலநூற்றாண்டுகளுக்குமுன் இந்நூலை எல்லாராலும் படிக்கப் பெற்றுவந்ததன்றி, இந்நூலிலுள்ள திருவிளையாடல்களின் முறை யையும் இதன் சொன்னடை பொருணடைகளையுமே தழுவிப் பலர் இத்தலசம்பந்தமான நூல்களைச் செய்துவந்தார்களென்று தெரி கின்றது. இது * திருவிளையாடற் பயகரமாலை, கடம்பவன புராணத் துள்ள இலீலாசங்கிரக அத்தியாயம், † திருவுசாத்தான நான்மணி மாலையின், உள - ஆம் செய்புள் முதலியவற்றுல் நன்கு விளங்கும்.

இதுவே திருவிளையாடலென்று முற்காலத்திற் பாராட்டப் பட்டுவந்ததென்பதையும் இதன்செய்புட்கள் பழைய உரைகளில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டுவந்தனவென்பதையும் கோ லமறுத்தற்குத் திருப்போரூர்ச்சிதம்பரசுவாமிகளெழுதியவுரை நன்கு விளக்குகின்றது ;,டெ நூல், எ, ககூ-ஆம் செய்புட்களின் உரைகளைப் பார்க்க.

மேற்கூறிய உண்மை யாவருக்கும் விளங்கும் பொருட்டே பழையவுரையுடன் மிதிலைப்பட்டியிற் கிடைத்ததான டெ திருவிளை

---

* இந்நூலாசிரியரின் பெயர் வீரபத்திரக்கம்பர் என்று ஓர் எட்டுப் பிரதி யால் தெரியவந்தது.

† இந்நூலை இயற்றியவர், நொச்சியூர்ப் பதனியப்பஞ்சேர்வைகாரர் ; இவரும் திருவுசாத்தானத்தின் பழைய தமிழ்ப்புராணமியற்றிய அம்பலவா ணமுனிவரென்பவரும் ஒரேகாலத்தினர். டெ முனிவருடையகாலம், இற் றைக்கு நூஉ0 வருடங்களுக்கு முந்தியதென்றும் இதனை, அம்முனிவர் தமது காத்தால் எழுதிய சதாசிவமியாக்கியானமென்னும் புத்தகத்தில் எழுதப்பட் டுள்ள சகாத்தம் தெரிவிக்கின்றதென்றும் ஆண்டுள்ளார் சொல்லுகின்றன ரென்றுஞ்சொல்லி, டெ நான்மணிமாலையை எனக்குவாங்கித்தந்தவர், பின் னத்தூர், ஸ்ரீ அ. நாராயணஸ்வாமி ஐயரவர்கள்.

யாடற்பயகரமாலை மூலத்தையும் இலீலா சங்கிரக வத்தியாய முதலிய வற்றையும் வேறுசில பழைய பிரதிகளோடு ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து குறிப்புரையுடன் பதிப்பித்து இப்புத்தகத்தின்பின்னர்ச் சேர்த்திருக்கிறேன்.

பயகரமாலை யென்னும் பெயரைப் பயங்கரமாலையெனத் திருத்தி விட்டதல்லாமல், இத்திருவிளையாடலையே மேற்கோளாகக்கொண்டு அதுசெய்யப்பெற்றதென்பதையுமறியாமற் சில பாடல்களை மாற்றியும் சில பாடல்களைக் குறைத்தும் சிலபாடல்களை நூதனமாக இயற்றிச் சேர்த்தும் சற்றேறக்குறைய நூ0 - வருடங்களுக்குமுன் யாரோ ஒருவர் பதிப்பித்து விட்டனர்.

இப்புத்தகத்தில் கஉக, கஙச, கசள, ககo, உஉள-அ-ஆம் பக்கங்களின் கீழே 'இது வெள்ளிபாட்டு' என்றும், 'சிலபிரதிகளிற்காணப்படவில்லை' என்றும் குறிப்பிட்ட செய்புட்கள்யாவும் வெள்ளி பாடல்களென்றே ஓர் ஏட்டுப்பிரதியில் வரையப்பட்டிருந்தன. [வெள்ளி-வெள்ளியம்பலவாண முனிவர்.]

இதுகாறும் கூறியவாற்றால், வெள்ளியம்பலவாண முனிவர், திருப்போரூர்ச் சிதம்பரஸ்வாமிகள், திருவிளையாடற் பயகரமாலைநூலாசிரியரான வீரபத்திரக்கம்பர், இலம்பூர் வீமநாதபண்டிதர், நோச்சியூர்ப்பழனியப்பஞ்சேர்வைகாரர் ஆகிய இவர்களுடையகாலத்திற்கு இந்நூலாசிரியருடைய காலம் முற்பட்டதென்பது வெளியாகின்றது.

இந்நூலால், சங்கநூல்கள் சம்பந்தமான சிற்சில பழைபசெய்திகளும், சிலநாடுகள், சிலமலைகள், சில்லூர்கள், சில புண்ணியதீர்த்தங்களும், சில சிவஸ்தல விசேடங்களும், திருவிளையாடல் சம்பந்தமான சில பழமொழிகளும், சில திருவிளையாடல்கள் முதலியன நடந்தமைக்கு அறிகுறியான இடப்பெயர் முதலியனவும், சில புலவர்களுடையசரித்திரங்களும், அவர்களுள் இன்னார்இன்னார் இன்னஇன்ன அமயத்து இன்னஇன்ன பாடல்கள் இன்னஇன்ன நூல்கள் செய்தனரென்பதும், சில நூற்பெயர்களும், திருவாசகத்துள்ள பதிகங்களுள் இன்னஇன்னபதிகங்கள் இன்னஇன்ன அமயத்துப் பாடப்பட்டனவென்பதும், சில அரசபரம்பரைகளும், பற்பல பழைய வழக்கங்களும், இந்நாளிற் பெரும்பாலும்வழங்காத சிற்சில அரிய சொற்களும் வாக்கியங்களும், இக்காலத்துப் புலப்படாதனவாகிய இசை, குதிரை, நவமணி முதலியவற்றின் இலக்கணங்களும், ஒரு

வகையான யுத்தபரிபாஷைகளும், சில சாதிவகையும், சில குலவகை யும், இன்னும் எத்தனையோ அரியவிஷயங்களும் அறியலாகும்.

ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் இந்நூலுள்ளே பெரும்பாலும் சொக் கனென்றே வழங்கப்பெறுவர். 'சொக்கன்' என்பதற்கு அழகன் என்பதுபொருள்; சொக்கு - அழகு; பேரழகென்றும் பொருள் கூறுவதுண்டு; இதனை, இந்நூல், இந்நிரன் பழி நீர்த்த திருவிளை யாடல், உசு-ஆம் செய்யுளாலுணர்க. பண்டைக்காலத்து இப்பெயரே பெரும்பாலும் வழங்கப்பெற்றுவந்தமையின், இந்நூலாசிரியரால் இத் திருநாமம் மிக எடுத்தாளப்பட்டதென்று தெரிகின்றது. அங்ஙனம் வழங்கி வந்தமையை, சொக்கலிங்கம், சொக்கர்தீபாராதனை, சொக் கத்தாண்டவம், சொக்குப்பாட்டு, சொக்கரப்பம், சொக்கர் தலைக்கீடு (சொக்கர்லேஞ்சு), பழைய சொக்கநாதர் கோயிலென்னும் உலக வழக்காலும், தேவாரம், கடம்பவனபுராணம், சுந்தர பாண்டியம், மதுரை மும்மணிக்கோவை, மதுரைச் சொக்கநாதருலா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, மதுரைத் திருப்பணிமாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், திருவாதவூரர்புராணம், பழைய திருப்பெருந்துறைப் புராணங்கள் முதலிய நூல்களாலு முணர்க. அன்றி, வடமொழிப்பெயராகிய 'சுந்தரர்' என்பதை எடுத்தாளுதலி லும் தென்மொழிப் பெயராகிய 'சொக்கர்' என்பதைத் தமிழ் நூலில் எடுத்தாளுதல் அழகென்று இவர் எண்ணி யிருக்கலா மென்றும் தோற்றுகிறது; சுந்தரரென்ற திருநாமமும் இதிற் சிறுபான்மையாக வழங்கும்.

காமியற்றிய திருவிளையாடற்புராணச் செய்யுட்களைப் படித்துக் காட்ட நினைந்து, ஒருநாள், அந்திப் பொழுதில் மேலம்பத்தூர்க்கு வந்த பரஞ்சோதி முனிவரை அவ்வூர்க்கவிஞர்களனைவரு தண்டிகை பெற்று விளங்கிய பெரியார் அறுபத்துநால்வர் மறுநாட்காலையில் வரச் சொல்லிவிட்டு, இன்னஇன்ன பகுதியை இன்னார் இன்னார் இயற்று தற்குரியரென்று அன்றிரவில் யோசித்துத் தமக்குள் நிச்சயித்துக் கொண்டு ஒவ்வொருவர் ஒவ்வொன்றாக அறுபத்துநான்கு திருவிளை யாடல்களையும் விடியற்காலத்துள் தனித்தனியே செய்து முடித்து அவற்றை ஒருங்குசேர்த்துவைத்துக்கொண்டிருந்து, காலையில்வந்த பரஞ்சோதிமுனிவரை நோக்கி, இதைத்தானுமென்று காமியற்றிய நூலைப் படித்துக்காட்டி, திருவிளையாடற்புராணம் தமிழில் முன்னமே யிருக்கையில் நீர் செய்தது எதன் பொருட்டென்றுவினவ, அம்முனி வர் மனநொந்து சபித்துவிட்டுப் போயினர்; அதனால், இந்நூல் வழங்

காது போயிற்றென்று ஒரு கட்டுக்கதை கூறுவாரும், வடநூல்* ஆதாரமில்லாமையால் இந்நூலை ஒருவரும் அங்கீகரிக்க வில்லையென்று சொல்லுவாரும், சோமசுந்தரக் கடவுளை அருமையாகச் சொல்லாமற் பத்தியின்றி, 'சொக்கன் சொக்கன்' என்று பலவிடத்துங் கூறியிருத்தலால் இதை ஒருவரும் கையால் தொடவில்லை யென்பாரும், பரஞ்சோதி முனிவரியற்றிய திருவிளையாடல் வழங்கத் தொடங்கியபின்பு இது வழங்குதலற்றதென்பாரும், இன்னும் நத்தமக்குத் தோற்றியவண்ணம் பற்பல கூறுவாருமாக அங்கங்கே பற்பலர் உளராயினர்; இவைகள் யாவும் கதானுகதிகந்தியாயமென்பது இந்நூலை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இனிது விளங்கும்.

இப்புத்தக ஆராய்ச்சிக்குக் கருவிகளாக இருந்த தமிழ் நூல்கள் அட்டமிப்பிரதக்ஷிணமான்மியம், அருணகிரிப் புராணம், அழகர் கலம்பகம், இரகுவம்மிசம், இலக்கணக்கொத்து, ஐங்குறுநூறு, கடம்பவனபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம், கல்லாடமும் திருநெல்வேலி மாலையும் பெருமாள் பிள்ளையுலையும், கலிங்கத்துப் பரணி, கலித்தொகை, காளையார் கோயிற்புராணம், வெடி வசனம், குறுந்தொகை, கூடலழகர் புராணவசனம், கோயிற்புராணம், சிதம்பரபுராணம், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, சுந்தரபாண்டியம், சூளாமணி, ஞானவாசிட்டம், தக்கயாகப்பரணி, தத்துவராயர் பிரபந்தங்கள், தாயுமானவர் பாடல், திருக்காளத்திப் புராணம், திருக்கானப்பேர்ப்புராணம், திருச்சிற்றம்பலக்கோவையார், திருநாகைக் காரோணப் புராணம், திருப்பரங்கிரிப் புராணம், திருப்பூவணப் புராணம், திருப்பெருந்துறைப் புராணங்கள் (பழையன, புதியது), திருவாசகம், திருவாதவூரர்புராணம், திருவிளையாடற் பயகர மாலையும் அதனுரையும், திருவிளையாடற் புராணம் (பரஞ்சோதி முனிவர் செய்தது), திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, திருவுத்தரகோசமங்கைப் புராணம், திருவேடகப் புராணம், திவ்யப்ரபந்தம், தேவாரம், தொல்காப்பியம், நளவெண்பா, நாலடியார், பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், பிரபுலிங்கலீலை, புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பெரியபுராணம், மணிமேகலை, மதுரைக் கலம்பகம், மதுரைச் சொக்கநாதர் உலா, மதுரைச் சொக்கநாதர்

* இந்நூல் வடநூலாதாரங்கொண்டே இயற்றப்பெற்றதென்பதை, "குறைவற", "அவைநடு", "ஓதரிய", "வியாதன்வான்மீகி" என்னும் முதற்குறிப்பையுடைய இந்நூற்செய்யுட்களாலுணர்க.

மும்மணிக்கோவை, மதுரைத்திருப்பணிமாலை, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி, மருதவனப் புராணம், யாப்பருங்கல விருத்தி, வில்லி பாரத மென்பன; வடநூல்கள்: ஸ்ரீவாதபுரமாஹாத்மிய முதலியன.

பயகரமாலை முதலியவைகளும் மேற்கோள்களாக இப்புத்தகத் தில் அங்கங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ள பாடல்களும் சிலசில விடத்து அச்சுப் புத்தகப்பாடங்களுக்கு வேறுபட்டுத்தோன்றும்; அங்ஙனம் தோன்றுபவைகள் ஏட்டுப்பிரதிகளிற் காணப்பட்டவை யென்று கொள்க.

முதல் நூல்கள் அகப்படாமையின், இதிலுள்ள குதிரையிலக்கண முதலிய பகுதிகளுட் சிலவற்றிற்குப் பொருள் விளங்கவில்லை; இதன் குறிப்புரையில் மேற்கோள்களாக எடுத்துக்காட்டிய இசை மரபுச் செய்யுள் முதலியன பழைய உரைகளிற்கண்டவை.

படிப்போரும் தேடுவோருமற்ற மூலையிற்கிடந்த இந்நூற் கையெழுத்துப் பிரதிகளிலிருந்த பாடவேறுபாடுகளும் பிழைகளும் அளவுபடுவனவல்ல. ஆதலால், இதைப்பதிப்பித்தகாலத்தில் நேர்ந்த உழைப்பிலும் பொருட்செலவிலும் இதனை ஆராய்ச்சி செய்தகாலத்து நேர்ந்த உழைப்பும் பொருட்செலவும் மிக அதிகம்.

பரிசோதனைக்குக் கருவியாகக் கொண்ட இந்நூற் கையெழுத்துப் பிரதிகள்:

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துப்	பிரதி	க
திருப்பெருந்துறை ஆலயத்துப் புத்தகசாலைப் ...	,,	க
சென்னை இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைப் ...	,,	க
மதுரைத் தமிழ்ச் சங்கத்துப்	,,	க
களக்காடு ஸ்ரீ சாமிநாத தேசிகரவர்கள் வீட்டுப்	,,	க
திருநெல்வேலி ஸ்ரீ கவிராசநெல்லையப்பபிள்ளையவர்கள்வீட்டுப்	,,	க
வேம்பத்தூர் ஸ்ரீ பிச்சுவையவர்கள்வீட்டுப்	,,	க
,, ஷி ஊர் சாமாவையரென்கின்ற ஆண்டிஐயரவர்கள் வீட்டு [சாலி. கசுஎசு; கி. பி. 1753]	}	க
,, பின்னத்தூர் ஸ்ரீ அ. நாராயணசாமி ஐயரவர்கள்தந்த ...	,,	க
,, மதுரை ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள்தந்த	,,	க
கும்பகோணம் மகாதளம் பேட்டை இராமலிங்கதேசிகர் வீட்டுப்	,,	க
பட்டுக்கோட்டையைச்சார்ந்த சிதம்பரவிடுதி கோவிந்த ஐயர்வீட்டுப்		க

இந்நூலாராய்ச்சிக்காக ஸ்ரீ வாதபுரமாஹாத்மியமாகிய வட நூலை வருவித்துதவியவர், மதுரை ஹைகோர்ட் வக்கீல் மஹா-ஸ்ரீ வே. முத்துராமலிங்க ஐயரவர்கள்.

மதுரையின் சம்பந்தமான சில விஷயங்களைச் சொன்னவர்கள் மதுரை ஸ்ரீமத்-பரமேசுவரபட்டரவர்கள் முதலியோர்.

இதன் முதற் பதிப்பு 1906-ஆம் வருஷம் வெளியாயிற்று. அதன் பின்பு செய்து வந்த ஆராய்ச்சியால் இந்நூலும் குறிப்புரை முதலியனவும் அடைந்த திருத்தங்கள் பல.

முதற் பதிப்பில் மூலத்துக்குப்பின்னே தனியே பதிப்பிக்கப் பெற்றிருந்த பாடபேதங்களையும் குறிப்புரையையும் சிலபயன் கருதி மூலங்கள் உள்ள பக்கங்களில் அடிக்குறிப்பாக அமைத்தும், அதில் தனித்தனியே காட்டப்பெற்றிருந்த பழைய தமிழ்நூற்பிரயோகங்களையும் 64-திருவிளையாடல்களைத்தனித்தனி முறையே பாராட்டியுள்ள தேவாரம்முதலிய மேற்கோள்களையும் பிறவற்றையும் உரிய பக்கங்களில் குறிப்புரையோடு சேர்த்தும் படிப்பவர்களுக்கு அனுகூலமாக இருக்கும்படி இது பதிப்பிக்கலாயிற்று.

இந்நூலால் தெரிந்த ஊர்கள் முதலிய வற்றின் பெயர்களும், இந்நூலாராய்ச்சியால் தெரிந்த பல அரியவிஷயங்களும், இந்நூலிற்காணப்பட்ட அரும்பதங்களும், திருவிளையாடற்பயகரமாலை, இலீலாசங்கிரகவுத்தியாயம், திருவுசாத்தானநான்மணிமாலை உ-ஆம் செய்யுள், திருவிளையாடற் கருணைத்திருவிருத்தம், கக-ஆம் பாடல் இவற்றிலுள்ள அரும்பதங்களும் இப்புத்தகத்தில் 'அரும்பத முதலியவற்றின் அகாதி' என்னும் பகுதியில் அமைந்துள்ளன.

நூற்பரிசோதனைக்கு உடனிருந்து உதவிபுரிபவர்கள் விஷயத்தில் நான் கவலையுறுவண்ணம் பலவருடங்களாக மாதவேதனமளித்து ஆதரித்துவரும் ஸ்ரீசேது ஸமஸ்தானாதிபதிகளும், மதுரைத் தமிழ்ச்சங்கத்துத்தலைவர்களும், சென்னைச் சட்டசிரூபணசபையங்கத்தினர்களும், தமிழ் யூனிவர்ஸிடிக்கமிட்டியின் தலைவர்களுமான கௌரவம் பொருந்திய மகாராஜ ராஜஸ்ரீ பா. இராஜ ராஜேசுவர சேதுபதி மகாராஜா அவர்களுடைய பேருதவியை இப்போதும் தமிழகத்துக்குத் தெரிவிக்கிறேன்.

இந்நூலைப்போலவே, இனிப்பதிப்பிக்கக் கருதிய நூல்களுள் ஒவ்வொன்றையும் கருதிய வண்ணம் பதிப்பித்து நிறைவேற்றுதற்பொருட்டும் பிரதியுதவி ஒப்புநோக்குதல் முதலிய உதவிகளை அன்புடன் செய்தவர்கள் பெருவாழ்வடைந்து மகிழ்வெய்தும் பொருட்டும் திருவருள் சுரக்கும்படி சங்கப்புலவர் கடவுளில், மதுரைப் பேராலவாயார் என்னும் திருநாமம்பூண்டு வீற்றிருந்து அவர்களுடன் தமிழாராய்ந்தருளிய ஸ்ரீமீனாட்சிசுந்தரேசருடைய திருவடித்தாமரைகளைச் சிந்திக்கின்றனன்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன் பேட்டை
சென்னை, 15—4—1927.

இங்ஙனம்,
வே. சாமிநாதையன்.

இந்நூலாசிரியராகிய

பெரும்பற்றப்புலியூர்நம்பியின் வரலாறு.

இந்நூலாசிரியராகிய பெரும்பற்றப்புலியூர்நம்பியென்பவர் பாண்டிவளநாட்டுள்ள செல்லிநகரிற் பிராமணவருணத்தில் ஸ்மார்த்தர்களாகிய வேம்பத்தூர்ச்சோழியர்வகுப்பிற் *கௌணியகோத்திரத்திற் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்தநடராசருடைய திருவடிக்கண் மிகுந்த பத்திச்செல்வம்வாய்ந்த குடும்பத்திற் சனித்தவர். இவர்க்குப் பெரும்பற்றப்புலியூர்நம்பி யெனவும், இவர்பரம்பரையிற்பிறந்தவரும் மதுரைத் திருப்பணிமாலையிற் கூறப்பெற்றவருமாகிய ஒருவருக்கு ஆனந்ததாண்டவநம்பியெனவும் பெயர்கள் அமைந்திருத்தலையும் இந்நூற் கடவுள்வாழ்த்திற் பெரும்பற்றப்புலியூர்த்திருமுதலியன அமைந்திருத்தலையும் உற்றுநோக்குகையில், இவர் குடும்பத்தார்கள் சிதம்பரம் ஸ்ரீ ஆனந்தநடராசர் திருவடிக்கண் மிக்க அன்புடையவர்களென்பது வெளியாகின்றது.

இவர்பெயர் தில்லைநம்பி யெனவும் வழங்கும்; வேம்பத்தூர்ச் சோழியர்களில் அநேகருடைய இயற்பெயர்களின்பின் நம்பியென்பது சார்த்தப்பட்டுப் பண்டைக்காலத்தில் வழங்கிவந்ததென்பதை அவர்கள் வீட்டிலுள்ள பழைய ஓலைச்சாதனங்களில் இன்றும் காணலாகும்.

செல்லிநகரென்பது செல்லிநாடென்றும் பரசுராம சதுர்வேதிமங்கலமென்றும் செய்புட்களில் வழங்கப்பெறும்; அக்கிராகாரத்தைச் சதுர் வேதிமங்கலம் அல்லது சதுர்வேதமங்கலமென்றல் மரபு; இது பழைய சிலாசாஸனமுதலியவற்றாலும் விளங்கும்; இங்ஙகர், இக்காலத்துப் பஞ்சூரென்று வழங்கப்படுகின்றது. இது, சங்கரநயினார்கோயில் தாலூகா, கரிவலம்வந்தநல்லூர்ந்துச்சமீபத்தில் உள்ளது; செல்லியாரம்மையென்று பெயருள்ள துர்க்காதேவியைத் தனக்கு அதிதேவதையாக உடைமையின், இவ்வூர் செல்லிநகரென்று பெயர் பெற்றதென்று சொல்லுகின்றனர்.

---

*கௌணிய கோத்திரம் - கௌண்டின்னிய கோத்திரம்; புறநானூற்றிலுள்ள 'நன்னூய்ந்த' (ஙஙக) என்னும் செய்யுளின் ஆசிரியரான சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப்பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பவரும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் இந்தக்கோத்திரத்தினரென்பது அறிதற்பாலது.

[வேம்பத்தூர்]

வேம்பத்தூரென்பது, பாண்டிவளநாட்டில் மதுரைக்கு வடகிழக்கில் இரண்டுகாதத்தில் வையைநதிக்கு வடக்கே உள்ளது; இது நிம்பையென்றும் வழங்கும்; நிம்பம்- வேம்பு; பிரமோத்தரகாண்டத்தின் பாயிரத்தில், "தேசான" என்னும் செய்யுளில், "நிம்பை, யீசான மாமுனிவன்" என இப்பெயர் வந்திருத்தல் காண்க. பண்டைக்காலத்தில் இப்பெயர் வேம்பற்றூரென்றே வழங்கிவந்ததாகத் தெரிகின்றது. மணலூரிலிருந்த குலசேகரபாண்டியனால், இவ்வகுப்பினர்க்கு முன்பு தானஞ்செய்யப் பெற்றதாதலின், இவ்வூர், குலசேகரசதுர் வேதமங்கலமெனவும் பெயர்பெறும்; இவ்வூரைக் குலசேகரபாண்டியர் தானஞ்செய்தாரென்பதை,

> "தனக்கொருபத் தேழு கலிக்கொருபத் தாறு
> புனக்குமிமிக் கோமான் புதல்வன் - மனக்கினிய
> தென்னிம்பை பூதநினச் சீர்மறையோ ருக்களித்தான்
> கன்னன் குலசே கரன்"

என்னும் பழைய வெண்பாவாலுணர்க.

குலசேகரபாண்டியனென்பவன், அகமேமற்றிலிருந்து சாகேதபுரி யென்ற இடத்திலிருந்து பிராமணர் இரண்டாயிரத்தெண்மரை அழைப்பித்து, அவர்கள் காமாவலியைப் பதிந்துகொண்டு, முறையே ஒவ்வொருவருக்கும் மனையும் நிலமும் கொடுத்துக் கொண்டே வந்து, இறுதியில் எஞ்சிய கணபதியென்னும் பெயருள்ளவரை அழைத்தகாலத்து, யாதுகாரணத்தாலோ அவர் வரவில்லை; அப்பொழுது, ஸ்ரீ மஹாகணபதி, ஒரு பிரமசாரி வடிவங்கொண்டுவந்து, 'யான் கணபதி' னென்று கூறி, அவற்றை ஏற்றுக்கொண்டு மறைந்தருளினர். உடனே அரசன் வியந்து பரவசமுற்று அவருக்கென்று கொடுத்த மனையிற் கோயில்கட்டுவித்து, அதில் அவருடைய திருவுருவத்தைப் பிரதிஷ்டைசெய்து நிலத்தையும் தேவதானமாக விட்டனனென்றும் அவ்வூரே இதுவென்றும் ஒரு பழையசரிதம் பாண்டிநாட்டில் கர்ணபரம்பரையில் வழங்கிவருகின்றது. வேம்பத்தூரில் அக்கிரகாரத்திற்குமேற்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹாகணபதிக்கு அமைந்துள்ள இரண்டாயிரத்தேண் விநாயகரென்னும் திருநாமமும் இந்தப் பழைய சரித்தத்தை வலியுறுத்தும்.

வானரவீரமதுரை (மாஞ்மதுரை) யிலிருந்த குலசேகரபாண்டியனென்ற ஓரரசன், இரண்டாயிரத்தெட்டுக் குடும்பத்தார்க்குப் பாண்டி

நாட்டில் வேம்பத்தூர் முதலிய உ00அ-ஊர்களைக் கொடுத்தானென்று கூறுவதுமுண்டு; இதனை, மதுரைத்துதிமணிமாலை யென்னும் புத்தகம் ஒருவகையாகத் தெரிவிக்கின்றது.

வேம்பற்றூரென்பதும் குலசேகரசதுர்வேதமங்கல மென்பதும் இவ்வூர்க்குப் பெயர்களென்பதை இவ்வூர்ப் பெருமாள்கோயிற் கருப் பக்கிருகச்சுவரின் வெளியேயுள்ள சிலாசாஸனத்தாலும்அறியலாகும்; அகநானூறு, கருசு-ஆம் செய்யுளுக்கும், புறநானூறு, கூகள-ஆம் செய்யு ளுக்குமுரிய ஆசிரியரின் பெயராகிய வேம்பற்றூர்க்குமரனு சென்பதி லுள்ள வேம்பற்றூரென்பது இவ்வூராகவே கருதப்படுகின்றது. இவ் வூர்ப்பிராமணச் சிறுவர்களும் தமிழ்க்கவி செய்தலில்வல்லுகராயிருந்த னரென்பதைத் தமிழ் நாவலர் சரிதையும் புலப்படுத்தும். இவ்வூர்ச் சோழியர்களில் அநேகர் வேறு வேறிடஞ்சென்று தங்கள் தங் கள் கல்விமிகுதிபையும் வருத்தமின்றிச் செய்புட்களியற்றும் வன்மை யையும் நன்கு புலப்படுத்திப் பண்டைக்காலத்திலிருந்த அரசர் முத லியோர்களால் நன்கு மதிக்கப்பெற்று முற்றூட்டாக அவர்கள்கொடு த்த ஊர்களைத் தமக்கிருப்பிடமாகக் கொண்டு தமிழ் நூலாராய்ச்சி செய்து வந்தார்கள்; ஆனலும், இவர்கள் வேம்பத்தூரா சென்றே எல்லாராலும் அழைக்கப்படுவார்கள். இவர்கள் அங்ஙன மிருந்த ஊர்களுள் இப்பொழுது தெரிந்தவை: வீரசோழன், அல்லது வீரை, தென்காசி, கீழைப்பாவூர், வல்லநாடு (திருநெல்வேலிக் குக்கிழக்கே ஒரு காததூரத்திலுள்ளது) இருப்பையூருணி (கோயிற் பட்டிக்குக்கிழக்கேயுள்ளது), திருநெல்வேலி, கரிவலம்வந்த நல்லூர், கற்குளம் (வல்லநாட்டைச் சார்ந்தது), பணையூர், குறுங்காவனம் அல்லது குறுங்களாவனம் (கீழைப்பாவூருக்குச் சமீபமாகவுள்ளது) என்பன. இக்குழாத்தின செல்லோரும் ஒரேவிதமான சமயக்கொள் கையை உடையவர்களல்லர்; தங்கள் தங்கள் முன்னோர்கள் தழுவிவந் ததும் வைதிகமாயதுமானகொள்கை எதுவோ அதனையே மேற்கொ ண்டவர்கள். இஃது அவரவர்கள் இயற்றிய நூல்களாலும் தனிப்பா டல்களாலும் விளங்கும்.

பாடுதுறைமுதலிய பற்பல நூல்களியற்றிய தத்துவராயரும், வர துங்க ராமபாண்டியருடைய ஆசிரியராகிய ஈசானமுனிவரும், ஆனந்த லகரி சௌந்தரியலகரி முதலிய நூல்களியற்றிய வீரைக் கவிராச பண்டிதரும், ஞான வாசிட்ட நூலாசிரியரான ஆளவந்தான் அல்லது ஆளவந்தான் மாதவபட்ட சென்பவரும், பகவத்கீதையியற்றிய ஸ்ரீ பட்டரும், பராபரை மாலைபாடிய அம்பிகாபதியும், நெல்லை வருக்கக்

கோவைபாடிய திருநெல்வேலிப் பெருமாளையரும், ஐயாயிரம்பாடலுள்ள பாகவதமியற்றிய செவ்வைச்சூவோரும், அழகர்கலம்பகமியற்றிய கவிகுஞ்சரமையரும், அழகர் பிள்ளைத் தமிழியற்றிய சாமிகவிராளருத்திர சென்பாரும், பிரபந்ததீபிகை இயற்றிய முத்துவேங்கடசுப்பையரும் இத்தவேம்பத்தூர்ச் சோழிய வகுப்பினரே.

இக்குழாத்தினர்க்கு வேம்பத்தூர்ச்சங்கத்தாரென்னும் ஒரு பெயர் பண்டைக் காலந்தொடங்கி வழங்கிவருவதுண்டு; இஃது அழகர்கலம்பக முதலியவற்றுல் விளங்கும்.

முற்காலத்தில் ஏதேனும் நூலியற்றிய தமிழ்ப்புலவர்கள் அந்நூலைக்கொணர்ந்து இவ்வூர்ப்புலவர்களுக்குக் காட்டிச் செவ்வை செய்வித்து இவர்களுடைய உடன்பாடு பெற்றபின்பே அந்நூலைவெளிப்படுத்துதல் பெரும்பான்மையான வழக்கமாக இருந்ததென்று பலர் சொல்லக் கேள்வியுண்டு.

கம்பர் காமியற்றிய இராமாயணத்தை இவ்வூரில்வந்து படித்துக் காட்டி இவர்களால் நன்குமதிக்கப் பெற்றனரென்பதும், காளமேகப் புலவர் இங்கே வந்து இவ்வூரார்பில் ஒருவர் * சமத்தியாகக்கொடுத்த, 'கண்டங்கத் தரிக்கொத்துக் காய்'' என்பதை இறுதியடியாக அமைத்து, கொடுத்தவர் எண்ணிய வண்ணமே ஒரு செய்யுளும் ஆங்கிருந்த வேறுசிலர் விரும்பியவண்ணம் அருமையான சில சிலேடைவெண்பாக்களும் வருத்தமின்றிக் குறித்தகாலத்துட் பாடிமுடிக்க, இவர்கள் நன்குமதித்து இவ்வூருக்குத் தெற்கேயுள்ளதும், ''காளமேகத்தாறு'' என்று இக்காலத்தில் வழங்கப்படுவதுமாகிய கூ-மா அளவுள்ள நன்செய்நிலத்தை அவருக்கு முற்றாட்டாகக் கொடுத்தனரென்பதும் கன்ன பரம்பரைச் செய்திகள்.

திரிசிரபுரம் மஹாவித்வான் ஸ்ரீமீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் முதலியோர்களாற் சிறந்த கவிஞரென்று பாராட்டப்பெற்றவரும் பல வருடங்களுக்கு முன்பு இராமநாதபுரத்தில், பல தமிழ்ப்புலவர்கள் தனித்தனியே கொடுத்தவிஷயங்களை யமைத்து, அவர்கள் குறித்த இரண்டரை நாழிகைக்குள், கூ-சிலேடை வெண்பாக்களை எளிதிற் பாடி, சிலேடைப்புலியென்னும் பட்டப்பெயரையும் உயர்ந்த சில பரிசில்களையும் ஸ்ரீ பாஸ்கரசேது பதியவர்களாற் பெற்றவரும் தனஞ்சயகோத்திரத்தினரும் மேற்கூறிய வீரைக்கவிராச பண்டிதருடைய வழித்தோன்றலுமாகிய பிச்சுவைய ரென்பவரும் வேறு சில வித்துவான்களும் இவ்வேம்பத்தூரார்களே.

---

*ஸமஸ்யாவென்னும் வடமொழி இங்ஙனம் சிலேடைந்து வழங்குகின்றதென்பர்.

இவர்கள் சரித்திரங்களாகக் கன்னபரம்பரையில் வழங்குவன வும் செய்யுள்முகமாக உள்ளனவும் இன்னும் எவ்வளவோ பல; அவை விரிவஞ்சி நிறுத்தப் பெற்றன.

கடைச் சங்கப்புலவர்காலந்தொடங்கி இன்றுவரை, தமிழ் மணங்கமழப் பெற்றுப் பதிபல விந்துவான்கள், தமிழ் நூல்களையே ஆராய்ச்சி செய்துகொண்டும் பாடஞ்சொல்லிக் கொண்டும் நூதன மாக நூல்களியற்றிக்கொண்டும் தமிழ்ச் சுவையைப் பிறருக்குப் புலப் படுத்தி வீற்றிருத்தற்கு இடமாகவிளங்கும் இந்த வேம்பத்தூரின் பெருமை என்போலியரால் எங்ஙனம் சொல்லற்பாலது; * "பாட் டுக் குருகுந் தமிழ்ச்சொக்கநாதரே" அறிந்தருளுவார்.

சற்றேறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன்னே இவ்வூரு க்கு வந்து இவர்களுடைய தமிழ்ப்பயிற்சியையும் செய்யுள் செய்யும் வன்மையையும் குணவிசேஷங்களையுமறிந்து மகிழ்ந்த பழனி மாம் பழக்கவிச்சிங்கநாவலர் மிக்க அன்புடன் இவ்வூரார் விஷயமாகப் பாடிய வெண்பாக்கள் வருமாறு:—

க. "வேதநூல் வாழிதவ வேள்வித் துறைவாழி
நீதிநூல் வாழி நெறிவாழி - ஓதுதமிழ்
வல்லாராய் நிம்பை வளம்பதிவாழ் மாசனங்கள்
எல்லாரும் வாழி யினிது"

உ. "பொங்குகடல் வாழி புவல்வாழி சீர்வாழி
தங்குநூல் வாழி தமிழ்வாழி - துங்கமிகுந்
தேசமெங்கும் போற்றத் திறல்படைத்த வேம்பத்
மாசனங்கள் வாழி மகிழ்ந்து." [தூர்

[நூல் இயற்றிய இடம்]

இந்நூலாசிய நடையவூர் செல்லிநகராக இருந்தாலும், இதனைப் பாடுங் காலத்தில் இவரிருந்தஇடம், கார்வளங்கொண்மண்டலத்திற் கப்பிஞ்சிநா டென்னும் பெயரையுடைய சிறுநாடென்றுதெரிகின்றது; இதனை, "கார்வளங் கொண் மண்டலத்துக் கப்பிஞ்சி நாட்டுரைத் தோன்" [பக்கம் நகசு] என்னும் நூற்சிறப்புப்பாயிரத்தாலுணர்க; கார்வளங் கொண்மண்டலமென்றதை மதுரைக்குக்கிழக்கே யுள்ள தான மழைக்குப்புணை கொடுத்தமங்கல நாடென்று சொல்லுகின் றனர்.

* மதுரைக் கலம்பகம், எசு.

[பெற்றபரிசில்]

இந்நூலை ஆக்குவித்தாளுகிய பாண்டியனெருவன் மிக்கசிறப்புடன் இதனை அரங்கேற்றுவித்துப் பல்லக்குமுதலிய விருதுகளையும் பல இரத்தினபரணங்களையும் கொடுத்தளித்தானென்றும், அப்பொழுது இந்நூலாசிரியர் மகிழ்ந்து, *"பல்லக்கு மேலேறி" (பக்கம், நகசு) என்னும் வெண்பாவைப் பாடிஞரென்றும், பின்னர் மகிழ்ந்து இவருடைய சனனபூமியாகிய செல்லிநகரையும் அதனைச் சார்ந்த ஊர்களையும் இவரும் இவர் பரம்பரையோரும் அனுபவிக்கும் படி முற்றாட்டாகக்கொடுத்தானென்றும், அதுபற்றி, செல்லியூரும் அதனைச்சார்ந்த ஊர்களும் செல்லிநாடென்று வழங்கப்பெற்று வந்தனவென்றும், இவர் பரம்பரையோர் மிகுந்த செல்வமுடையவர்களாகிப் பலதருமங்களைச்செய்து விளங்கினர்களென்றும் சொல்லுகின்றனர். இதனை,

"கன்னலுஞ் செந்நெலுஞ் சூழ்செல்லி நாடன் கவுணியர்கோன்
நன்னர்க ளெண்ணிய வானந்த தாண்டவ நம்பிகற்பாள்†
தென்னவர் போற்றிய வங்கயற் கண்ணம்மை செல்விதிருச்
சன்னிதிக் கோபுரங் கட்டின ‡ டம்மந் தழைக்க வென்றே"

என்னும் மதுரைத்திருப்பணிமாலைச்செய்யுளும் வலியுறுத்துகின்றது.

[காலம்]

மேற்கூறிய செய்யுளிற் கூறப்பட்டுள்ள ஆனந்ததாண்டவநம்பி அம்பிகையின் சந்நிதிக்கோபுரம் கட்டுவித்தகாலம், சாலிவாகனசகாப்தம், ககஙo [கி. பி. கஉஉள - அ; கொல்லம், சoஉ - சoக] என்று மதுரைக் கோயிலொழுகு தெரிவிக்கின்றமையால், ஆனந்ததாண்டவநம்பியென்பவர், இற்றைக்கு எoo-வருடங்களுக்கு முந்தியிருந்தாரென்றுமட்டும் ஒருவாறு தெரிகின்றது; அதற்குமுன், இந்நூலுடையார்காலம் இவ்வளவினதென்று தெரியவில்லை.

---

* இவ்வெண்பாவிலுள்ள, 'பல்லக்குமேலிட்டோம்' என்பதற்குப் பல இரத்தினபரணங்களே மேலே அணிந்தோமென்றும் பொருள்கொள்ளலாம்.

† கற்பாள் - பத்தினியார்; மனைவியார்; ஆனந்ததாண்டவநம்பியேகோபுரம் கட்டியதாக மதுரைக் கோயிலொழுகு தெரிவிக்கின்றது; அஃது எழுதினோரால் நேர்ந்தபிழையோ வேறுயாதோ உண்மைவிளங்கவில்லை.

‡ கம்மம் - காரமம்.

[ஞானசிரியர்]

சிதம்பரம் மாளிகைமடத்திலிருந்த வெண்காடருடைய சிஷ்ய ராகிய விநாயகரென்பவர் இவருடைய ஞானசிரியர்; இவரை இந் நூற் கடவுள் வாழ்த்து, உரை ஆகிய செய்யுளாலுணர்க. இங்கே கூறிய மாளிகைமடத்துத் தலைவரொருவர், வேதாரணியபுராணப் பாயிரத்திலும் திருக்கானப்பேர்ப்புராணப் பாயிரத்திலும் துதிக்கப்பெற்றுள்ளார்.

[குணவிசேடங்கள்]

இந்நூலாராய்ச்சியால்விளங்கிய ஆசிரியருடைய குணவிசேடங்கள் பல; அவை, வேதாகமங்களில் மிக்க பிரீதியுடைமை, வடமொழிப் பயிற்சி, தமிழ்ப்பாஷையில் மிக்க அன்பு, தமிழில் ஐந்திலக்கணவுணர்ச்சி, சங்கத்தமிழ்நூல் முதலியவற்றிலும் பழையவுரைகளிலும் தேவாராதிகளிலும் திவ்பப்ரபந்தங்களிலும் மிக்கபயிற்சி, நடுவுநிலைமை, எல்லாவருணத்தாரிடத்தும்எல்லாச்சாதியாரிடத்தும் அன்புடைமை, சிவபக்தி, அடியார்பக்தி, சிவசின்னங்களில் அன்புடைமை, தம்முடைய கருத்தைப் பிறர் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் செய்யுள் செய்யும் வன்மை, அங்ஙனம்செய்யும் செய்புட்கள் படிப்பவர்களுடைய மனங்களைக்கவரும்படி இடத்துக்கேற்ற சந்தங்களில் அவற்றை அமைத்தல், பலவகைத்துதி செய்யும் அழகு, வடநூற்கருத்துக்களை அங்கங்கேயமைத்தல், பிறரை நல்வழிப்படுத்தநினைத்தல், சரிதங் கூறுகையில், பரமகருணாநிதியாகிய சிவபெருமானுடைய திருவருளின் பெருமையை நினைத்துநினைத்து மனமுருகி இடையிடையே செயலற்றிருத்தல் என்னும் இவையும் பிறவுமாம். இங்கே எடுத்துக்கூறியவையெல்லாம் இந்நூல் அரும்பதமுதலியவற்றின் அகராதியைப் பார்ப்பவர்களுக்கு இனிதுவிளங்கும்.

நூலாராய்ச்சி.

[நூலிலுள்ள முக்கியமான சிலகுறிப்புகள்]

பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலுக்கும் இதற்குமுள்ள வேறுபாடுகள் பலவற்றுள், ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் வையைநதியை அடைத்தற்குக் கூலியாளாக வந்து வேலைசெய்யாமல் உழப்பிய பொழுது, பாண்டியனுடைய ஏவலாளர்கள் சினந்து அவர் முதுகில்

அடித்தாரென்று ஆசிரியர் கூறியிருப்பதொன்று ; * (கூ0) கூஎ - ஆம் செய்யுளைப்பார்க்க ; பலநூல்கள் பாண்டியனே அடித்தானென்று கூறியிருக்கவும் இவர் இங்ஙனம் கூறியதற்குக் காரணம் இன்னதென்று புலப்படவில்லை ; இந்நூலைச்செய்வித்த அரசனுடைய வேண்டுகோளாக இருத்தல் கூடுமென்பது சிலருடைய கருத்து ; '' அந்தகாள் பிட்டுக் காகமண் சுமந்த வரலாறன் னவன்றன தாளா, மைந்தரி லொருவனடித்ததாத் துணிந்தோர் வண்டமிழ்க் கவிஞரே தினனே'' என்பது புலவர்புராணம், திருவாதவூரர். நுஅ.

பழைய நூலாசிரியர்களும் பழைய உரையாசிரியர்களும் பாண்டியர்களிற் சிலரைத் தெய்வப்பாண்டிய ரென்று கூறுதல் மரபு. இந்நூலாசிரியர் அதனைத் தழுவி, சுந்தரமாறரை, ''தெய்வப்பாண்டியன்'' (கட. ககூ) என்றும், ''தெய்வவான்வழுதி'' (சு : ச) என்றும் கூறியிருக்கின்றனர்.

ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோயில், இத்தலத்துள்ள கோயில்கள் பலவற்றிற்கும் காலத்தால் முந்தியதும் பெரியதுமாதலின், அதனை விளக்கவேண்டி இந்நூலாசிரியர் அதனைத் தொல்லையாலயமென்றும் பெரியகோயி லென்றும் அங்கங்கே வழங்குவர் ; இத்தலத்திற் கோயில்கள் பலவுள்ளனவென்பதை, ''நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலு, முவணச் சேவ லுயர்த்தோ னியமமு, மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமுங், கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்'' (சிலப். ஊர்காண். எ - கo) எனவும், ''வடதிரு வாலவாய்திரு நடுவூர், வெள்ளி யம்பல நள்ளா றிந்திரை, பஞ்சவ னீச்சர மஞ்செழுத் தமைத்த, சென்னி மாபுரஞ் சேரன் றிருத்தளி, கன்னி செங் கோட்டங் கரியோன் றிருவுறை, ... ஒருபரங் குன்றஞ், சூழ்கொள விருந்த கூடலெம் பெருமான்'' (கல். 'நெடுவரைப் பொங்கர்' - ஙக) எனவும் வருவனவற்றாலுணர்க.

இந்நூலாசிரியர், இலைமறைகாய்போற் பழைய நூல்களில் அங்கங்கே மறைந்துகிடந்த அரியசெய்திகளை இதனுள் உரிய இடங்களில் அமைத்து விளக்கிச்செல்லுகின்றனர். இதனால், நெடுநாளாக இருந்த ஐயங்கள் ஒருவாறு தீர்வனவாயின. அவற்றுள், சிலவருமாறு:—

க. 'நான்குமாடங்கள் கூடுதலின் நான்மாடக் கூடலென்றாயிற்று. அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திரு

*இங்கேகாட்டிய எண்களுள், ( ) இவ்வடையாளத்திற்குட்பட்டது திருவிளையாடலையும் ஏனையதுபாடலையும் புலப்படுத்துவன ; பின்வருவனவற்றையும் இப்படியேகொள்க.

நடவூர்; இனி, கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்றுமாம்' என்பது, கலித்தொகை, கூஉ-ஆம் பாடல், நச்சினார்க்கினியம். இந்தவுரையில் முன்னுள்ள திருவாலவாய் முதலிய நான்கும் இன்னவையென்று இந்நூல், சஎ-ஆம் திருவிளையாடலாலும் பின்னுள்ள கன்னி முதலிய நான்கும் இன்னவையென்று இந்நூல் திருநகரச் சிறப்பிலுள்ள கஉ-ஆம் பாடல் முதலிய நான்கினாலும் ஒருவாறு விளங்குதல் காண்க.

உ. 'நீலமணியின் குற்றம் வந்த வழிக் கண்டுகொள்க' என்பது சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, ககூ0-ஆம் அடி, அடியார்க்கு நல்லாருரை; நீலத்தின் குற்றம் பன்னிரண்டென்றும் அவற்றின் பெயர்கள் இவையென்றும் இந்நூல், (உரு) ககூ-ஆம் செய்புளால் விளங்குகின்றது. இதனால் அடியார்க்குநல்லாரிலும் இந்நூலாசிரியர் தமிழ் நூலாராய்ச்சியில் மிக்கவரென்பது வெளியாகும்.

[துதிவகைகள் *]

கடவுள் வாழ்த்திலன்றி நூலினுள்ளே அங்கங்கேவந்துள்ள விநாயகர்துதி, சிவஸ்துதி, அம்பிகைதுதி, திருஞான சம்பந்தர்துதி, மூர்த்திநாயனர்துதி முதலியன யாவரும் படித்தறிந்து இன்புறுதற்பாலன.

[நூலாசிரியர் கூற்றுக்கள்]

நூலாசிரியர் கூற்றுக்களாக இந்நூலுள் அங்கங்கே காணப்படுங் கவிகள் பல உள்ளன: அவை ஒருபருதிப் பட்டனவல்ல; அவை வருமாறு :—

க. உலகத்தாரை நோக்கிச் சிவபெருமானுடைய திருவருளின் பெருமையை இவர் கூறுதல் போலவும் பிறர் கூறுதல் போலவும் உள்ளன; (திருநாட்டுச் சிறப்பு) கச, (உஎ) க, (ஙக) உஉ, (ஙஉ) உரு, (ஙச) ககூ, (ஙஅ) எக, (சச) நிஅ, (சரு) கஅ, (சசு) ஙக, (ருச) ரு0, (சுஙு) உக.

உ. திருவிளையாடல்களைச் சொல்லிக் கொண்டு போகையில் அன்பின் மிகுதியால் இடையிடையே இவருடையமனம் உருகிய தென்பதைப் புலப்படுத்துவன: (ஙு0) ஙகூ, (சஅ) ஙஎ.

---

*இவற்றிற்கும், பின்னேயுள்ள பொருளணிகள் முதலியவற்றிற்கும் உரிய பக்க எண்களையும் விவரணங்களையும் அரும்பத முதலியவற்றின் அகராதி யென்னும் பகுதியிற்கண்டு கொள்க.

க. ஒவ்வொருபகுதியின் இறுதியிலே சரித்திரத்தின் அருமையை நினைந்து மனமுருகிச் செய்துள்ள சிவஸ்துதியாகவுள்ளன: (நு) எ, (எ) கக, (கo) நுசு, (கூஉ) உநு, (சஅ) சக, (நுo) கஅ.

ச. படிப்பவர்களும் கேட்பவர்களும் அடையும்பயனைப் புலப்படுத்துவனவாய்ச் சில பாடல்கள் சில திருவிளையாடல்களின் இறுதியிலுள்ளன: (கூஅ) எஉ, (நுசு) ககூ.

நு: பாவத்தால் ஒருவர் வருந்துவதைக்குறித்து வருந்துதலையும், புண்ணியத்தால் ஒருவர் மகிழ்தலைக்குறித்து மகிழ்தலையும் புலப்படுத்துவன:(கூச)உ, ச, (கூஅ) நுக, (கூக) உகூ.

சு. திருவிளையாடற் சம்பந்தத்தாற் பெருமையடைந்த சில சாதியாரின் விசேடத்தைக்கூறுவன:(உகூ) உநு, (நுகூ) கஅ.

இங்ஙனம் வருவன இன்னும்பல.

[பொருளணிகள்]

இவருடைய வாக்கிற் பலவகைப் பொருளணிகள் அங்கங்கே வந்துள்ளன வெனினும் மிகுதியாகக் காணப்படுவன, கருத்துடையடையணியும், கருத்துடையடைகொளியணியுமே.

[சொல்லணிகள்]

சொல்லணியைச் சார்ந்த மடக்கணிகளே இந்நூலிற் பரக்கக் காணலாம் ; அவை வருமாறு :

அத்தியிலத்தி சொரிந்ததால்-யானையானது இலத்தியைச் சொரிந்தது ;

அருகரருகராக்கண்டோம் - சைனர் பாண்டியனைச் சமீபித்தவராகப் பார்த்தோம் ;

ஆவிசேர் தண்ணீர் வேட்டங் காவிசோர்ந்து; ஆவி-தடாகம், உயிர்;

இடையிடையும்படி: இடையும்படி-வருந்தும்படி;

உக்கிரமாய் ஈனிவரக்கண் டுக்கிரவேல் விறற் செழியன் ;

கடல்வலிய சத்திவிடச் சத்திவிட்டகாவலன்: சத்தி-வலி,வேல்;

கரிகரியாக-யானைகரியாக ;

கனககோ கனகவாவி-பொற்றாமரைவாவி;

கூடமதாகக் கற்பித்தருளினன் கூடமில்லான்: கூடம்-மாளிகை விசேடம், வஞ்சனை;

கைதவகேள் கைதவமாகாது - பாண்டியனே கேட்பாயாக; உனக்கு வஞ்சனையாகாது;

கைதவமோவில்லை கைதவ ;

கோதைதன் பரிசனத்தால்....பரிசனங்களோடும்;

கோலக் கோலம்-பன்றித்திருவுருவம்;

சந்திரமாவளித்தான் சந்திரமாகுலத்தான்: சந்திரமா - பொற் குதிரை ;

சம்புமா சமாதியாலே சம்புமாத்தாழ்க்க: சம்புமா - சிவபெரு மானுடைய பெரிய, நரிகளாகிய குதிரைகள்; [தாள் ;

சரங்கொடுஞ் சரம்போற் றைப்பச் சரங்கொண்டாள் சரமிலா செட்டியாஞ்செட்டி - வைசியர்குலத்திற் பிறந்த உருத்திரசன் மராகிய முருகக் கடவுள் ;

செட்டியுஞ் செட்டியா யுதித்தான் ; [குற்றி;

தாணு தாணுவேயெனவிருந்தான்: தாணு - சிவபெருமான்;

துதிக்கைபின்றித் துதிக்கையால் வளைத்தெடுத்து: துதிக்கை- துதிசெய்தல், தும்பிக்கை;

நரிகாணரியாது;

நாமளித்த வேலையற நாமளித்த வேலையெறி: நாமளித்த வேலை- அச்சத்தை உண்டுபண்ணிய கடல், யாம்கொடுத்த வேற்படையை ;

பத்திரங் கொடுத்தெதாங்கிப் பத்திரன் பணிந்து நின்றான்: பத் திரம்-திருமுகம்; பத்திரன்-பாணபத்திரர்;

பயங்கொண்டு வந்தெவரும் பயம் கொள்ள: பயம்-நீர், அச்சம்;

புயலகத்துப் பெரும்புயல்: புயல்-மேகம், நீர்; [னை;

பைங்கண் வேழத்தை....செங்கண் வேழம்: வேழம்-கரும்பு, யா

மாலையங்குழல்சேர் பாணர்மாலையர் மாலையெய்தி: பாணர் மாலை யர்-பாணர்மகளிர், விறலியர்; மாலை-மயக்கத்தை;

மாலையைக் கழுத்திலிட்டோர் மாலை நின்றுலாவ;

மாறன் மாறி: மாறன்-பாண்டியன்;

மாறனுழ்துயர் கெட மாறியாடினர்;

மாறன் மாறனென்றுங்கருங் பெயர் பெற்றோன்;

வளையிலுல் வளைத்தனன்;

வாசியை வாசியாக-குதிரையை விசேடமாக;

விடை விடைகொண்டு-இடபம் விடுத்தல்கொண்டு; "சொல்விடை கேட்டுச் செல்விடை வெற்பும்" என்பது மதுரைமும்மணிக்கோவை, உஅ;

வேடணிடு சூடினிய கேடிறசை நாடுபவர் வேடனுடல் வீடவடு வோர்;

வேலியை யேவவேலி வேலிகல்வேலி யென்று: வேலி - கடல், காலம், தொழில்.

இந்நூலில், வேறுபொருளின்றி விரைவு முதலிய காரணங்களால், சொற்கள் அடுக்கிவருதலும் காணப்படும்; அவை வருமாறு:

அஞ்சேனஞ்சேன், அரகர, இடந்தருமிடந்தரும், உதவுவமுதவுவம், என்கையில் வாளெறிந்ததென்கையில் வாளெறிந்தது, என்னை விடென்னைவிடு, எனக்கெனக்கு, ஒக்குமொக்கும், காத்தருள் காத்தருள், சிவசங்கர சிவசங்கர, தருமநெறி தருமநெறி, திருச்சிற்றம்பலந் திருச்சிற்றம்பலம், திருவம்பலந் திருவம்பலம், துயிலுணர்தி துயிலுணர்தி, நல்ல நல்ல, நில்லும் நில்லும், நிறைந்தன நிறைந்த, பொன்னம்பலம் பொன்னம்பலம், போனது போனது, வணங்குமினீர் வணங்குமினீர், வந்துபோம் வந்துபோம், வரும் வரும், வளர்ந்திட வளர்ந்திட, வாளத்திடும் வாளத்திடும், வாளயல்கொள்ளும் வாளயல்கொள்ளும், விடும் விடும், விடு விடு.

இதில் அவ்வவ்விடத்து வந்துள்ள
ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளின் அருமைத்திருநாமங்கள் :

அடிமைக்குநல்லவர், அடியவர்க் கெளியசுந்தரன், அடியவர்க் கெளியசொக்கன், அடியவர்க்கெளியவர், அடியவர்க்கெளியவெம் பெருமான், அடியவர்திறத்து நல்லவன், அடியவர் நன்மை தின்மையறிபவன், அடியார்க்கு இனியன கொடுக்கும் சொக்கன், அடியார்க்கு நல்லான், அடியார்குறைதீர்ப்பான், அடியார்தங்கட் கெளியவன், அணுக்கட்குநல்லவர், அதிரவீசியாடுவான், அந்தநாயகன், அபிடேகச் சொக்கன், அருடேங்குநாதன், அருந்தவன், அருவமெய்யினன், அருளாகரன், அழகன், அழகார்மெய்யன், அழகியசொக்கன், அழகியபெருமான், அற்றவர்க்கற்றசிவன், அற்றவர்க்கற்றசெல்வன், அன்பர்க்கன்பன், அன்பர்சுமைபூண்டுகொண்டான், அன்பர்தம்பிழைபொறுப்பவன், அன்னையொப்ப அணுக்கட்குநல்லவன், ஆதி, ஆதிநாதன், ஆதிநாயகன், ஆதிமுனி, ஆலவாய், ஆலவாய்த்தருமமூர்த்தி, ஆலவாய் மெய்யன், ஆலவாயமுதமன், ஆலவாயமுதவாக்கன், ஆலவாயமுதவாயான், ஆலவாயமுது, இசைக்குநல்லசங்கரன், இசைக்கு நல்லான், இசைச்சொக்கன், இயற்சொக்கன், உற்றவர்கட்குற்றவன், எளியசொக்கன், எளியவர்க்கெளியசொக்கநாதன், ஒப்பிலமுகன், கருணைமெய்யன், கருணைமேனிப் புண்ணியன், காரணமுதல்வன்,

காரணவான், குஞ்சரந்தாங்குங் கோயிற்குழகன், குஞ்சரந்தாங்குங் கோயிற்கூத்தன், குழகன், கூடமில்லான், கூத்தன், சாலநல்லவன், செந்தமிழ்க்கினிய சொக்கன், செந்தமிழ்பயிலுஞ்சுந்தரன், செழியர் நாதர், சேட்டநாதன், சொக்கமூர்த்தி, சொக்கவேந்து, சொக்கன் (சொக்கர்), சொக்கு, தனக்கு நல்லவர்க்கு நல்லோன், தெய்வப்பாண்டியன், தெய்வவான்வழுதி, தென்னவர்கிளைக்கு நல்லசெல்வன், தொழுபவர்க்கெளியான், நயந்தவையாவையும் நல்கவல்லவன், நல்லடியார்க்குநல்லான், நற்றமிழிறைவன், நற்றவன், நாயனூர் (நாயன்), நேசர்கட்கென்றும்நேசன், பண்ணிசைச்சொக்கன், பத்தர்கள் பதிதன், பத்தர்பத்தன், பத்தர்வாழ்வு, பழிக்கஞ்சுசொக்கன், பழியஞ்சுஞ் சொக்கன், பாண்டிநன்னுடன், பாவறிந்த காவலவன், புகழ்க்கினியான், புகழ்க்குநல்லசொக்கன், புகழ்க்குநல்லோன், புகழ்கொண்டான், புழுகுநெய்ச்சொக்கர், முனிவன், மெய்யர்க்குமெய்யன், மெய்யன், யாவும்வல்லவன், வணங்குவோரிணங்கன், வாசிவாரியப் பெருமான்.

[ஊர்கள்]

ஆலுடையார்கோயில், இராமேச்சரம், இருஞ் சிறை, உத்தரகோசமங்கை, உப்பூர், ஏழூர்கள், கட்டுநல்லூர், கழுவர் படைவீடு, காசி, காவணநல்லூர், காவிரிப்பூம்பட்டினம், காளையார் கோயில், கொடுங்கோளூர், சிதம்பரம், சிகாழி, செல்லிநகர், தனிச் சயம், திருநெல்வேலி, திருப்புத்தூர், திருப்புறம்பயம், திருப்பூவணம், திருமருகல், திருவாதவூர், திருவிடைமருதூர், திருவேடகம், நரிக்குடி, நாமூனூர், பட்டமங்கலம், பரசுராமசதுர்வேதிமங்கலம், பழமதுரை, பெருங்கிராமம், மணலூர், மாடக்குளக்கீழ்மதுரை, மானமங்கலம், வடதிருவாலவாய், வேதாரணியம்.

[குலங்கள்]

ஆகிமசபு, ஆமாத்தியர்குலம், உக்கிரகுலம், கொந்தகக்குலம், சந்திரகுலம், சூத்திரகுலம்.

[*சங்கப்புலவர்கள்]

இடைக்காடர், இறையனர், உருத்திரசன்மர், கபிலர், நக்கீரர், பரணர், மதுரைப்பேராலவாயார்.

---

* இவர்கள் ஆசிரியர், இயல்வாணர், கவிமன்னர், கவிவாணர், சான்றவர், தமிழ்வாணர், நன்புலோர், நாவலர், மாசிலாசிரியர், முத்தமிழ்வாணரென இந்நூலுள்ளே பாராட்டிக் கூறப்படுகின்றனர்.

சங்கப்புலவர்களல்லாத தமிழ்ப்புலவர்கள் : காரியார், ஈரியார்.
சாதிகள்: அதி, பன்றிக்குறும்பர் பன்னிருவர், வன்னியர்.

[சிலபழையவழக்கங்கள்]

ஒருவர் ஒரு செய்தியைச் சொன்னவுடன் அதனை மறவாமலிருத்தற்கு ஆடையின் தலைப்பை முடிந்து கொள்ளுதல், தும்மியவர்கள் சிவாயவென்றல், பரிகலசேடமுண்ணல்.

[தனிப்பாடல்கள்]

பாடல்கள்	ஆக்கியோர் பெயர்
"அங்கங்குலுங்க"	சோமசுந்தரக்கடவுள்
"குன்ற மெறிந்தாய்"	நக்கீரர் [பேரால வாயார்
"கொங்கு தேர்வாழ்க்கை"	இறையனர் அல்லது மதுரைப்
"சங்கறுப்பது"	நக்கீரர்
"நெட்டிலை யிருப்பை"	கபிலர்
"மதிமலிபுரிசை"	சோமசுந்தரக்கடவுள்.

தாண்டவம் : சொக்கத்தாண்டவம்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பதிகங்கள்: சடையாய், செய்யனே, தளிரிளவளர், தேனுறவன்னி, நீலமாமிடற்று, பிரமனூர், போகமார்த்த, மங்கையர்க்கரசி, மந்திரமாவது, மானினேர்விழி, வாழ்கவந்தணர், வானிற்பொலி, வேதவேள்வியை, வேயுறுதோளி.

[திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், அறங்கூரை நாவினர், காழி நகர்ப் பெருமான், கொச்சைமுனி, கொச்சைப்பாலர், கௌணியர் கோன், சிரபுரப்பாலர், சோழியவைதிகச் சிறுவர், ஞானபூரணர், ஞானமாமுனிவர், ஞானவேந்தர், நாலுகவிப் பெருமாள், பொய்யிலாயானை, மறைஞானி, வாது செய்த வாரணம், வைதிகவாரண மென இந்நூலுட் பாராட்டிக்கூறப் படுகின்றனர்.]

[திருவிளையாடல் சம்பந்தமான பழமொழிகள்]

அடியார்க்கு நல்லார் பத்திரம், அழகிய சொக்கனென்னும் தோலாக்கை, ஆபத்துக்குத் தெய்வமேதுணை, இலச்சினைவாயில், உடையவனறிந்திடாத சரக்கிலை, காமனுக்குக்கண்ணில்லை, கொல்லொணப்படை எவர்க்கும் வெல்லொணாது, சடைகொடு வெருட்டல் வேண்டா, சொக்கன்றாசு, தன்னைக்கொல்ல வந்ததாயினும் பசுவைக் கொல்லலாகாது, நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே, பட்டகுணம் சுட்டாலும் போகாது, பாணர்தம்மடியார் பரதேசம்

போனல் விறகையும் சுமந்துகொண்டு மீளவருவார், பார்ப்பான் முறையீடு பசுப்பாய்ச்சலோடு சரி அல்லது முட்டிப்பார்ப்பான் முறையீடு மொட்டைப் பசுவின் பாய்ச்சலோடு விட்டுப்போனது, மன்னவனெப்படி மன்னுயிரப்படி, மின்னுமலிடிக்குமா.

[தீர்த்தங்கள்]

எழுகடல், கங்கை, கம்பளை, கல்லணை, கன்னியாகுமரி, காவணவாவி, காவிரி, கொண்டாழி, சரவணப்பொய்கை, பூதங்கண்டகுளம், பொற்றுமரைப் பொய்கை, மணிகர்ணிகைத்துறை, மாவலிகங்கை, மொய்யார் பொய்கை, வலவை, வையை.

[நாடுகள்]

கப்பிஞ்சிநாடு, கருநாடதேயம், களவேள்வி நாடு, காட்டுநாடு, கார்வளங் கொண்மண்டலம், சேரனாடு, சோழனாடு, துவரைநாடு, பாண்டிநாடு, மிழலைநாடு.

நியாயம்:—காகதாலியம்.

[நூல்கள் (வடமொழி, தென்மொழி)]

இறையனூர் பொருள், உத்தரமாபுராணம், உத்தராகம கோசங்கள், கணிதநூல், கபிலரந்தாதி, கைலைபாதிகாளத்திபாதி அந்தாதி, திருமுருகாற்றுப்படை, நக்கீரரியற்றிய நூலிலுள்ள ஐந்தாம்பனுவல், புரவிநூல், மடைநூல், மயனூல்.

மடங்கள்:—தில்லைமாளிகைமடம், வாசீசுவாமி மடம்.

மந்திரங்கள்:—அகமருடணம், சடாக்கரம், பஞ்சாக்கரம், பிரணவம், மிருத்தியுஞ்சயம்.

[மலைகள்]

இடபகிரி, இலத்திமலை, எண்கிரிகள், கைலை, கொடுங்குன்றம், சமணெளிமலை, திருக்கழுக்குன்று, திருப்பரங்குன்றம், நாகமலை, பசுமலை, பன்றிமலை, பொதியில், முதிய வெற்பு, மேருமலை, யானைமலை.

மரபு : மானமங்கலத்தார் மரபு.

வித்தைகள் : அக்கினித்தம்பம், இந்திரஞாலம், நோக்கு வித்தை.

[அரிய மொழிகள்]

அகம், அங்கம், அங்கம்நூற்றெட்டு, அணரிட்டு, அதி, அவதானம், இராவுத்தராயன், இருப்புமுட்டு, உழப்பாது, உழப்பி, உழை, உளத்தடைத்து, ஊசும், ஒப்பார், கறம், கிஞ்சில், குதிரையிராவுத்

தன், குழப்பி, குழம்பல், கெருடி, கைத்தலை, கொச்சை, கொந்தக் குலம், கொற்று, சாக்கியர், சாத்தலோதல், சாளர சங்கீதம், சாறு, சிலுப்பல், சிறுக்கன், சீரா, சும்மாடி, சொட்டை, தப்பு, தவ்வும், திண்ணிமை, திருக்கைச் சிறப்பு, துவர்பிடித்து மறிப்ப, தொத்துவர், தொப்பாரம், நரியாது, நன்பு, நாயன், நையாண்டிபாடல், பகுத்து, பணிக்கு, பரிச்சாத்து, பரிவேத்தா, பழுத்து நரைத்த, பாஞ்சாலிகம், பாராவாளை, பிசகல், பிறிதுசாபம், புழகு, பூணித்து, பேரிளமை, பொக்கணம், மகன்மை, மச்சம், மலர், மழுப்பவல்லான், மாமடி, மாலை, மாறு, மூசி, மொக்கணி, மொஞ்சகக்கையர், மொத்தம், வகுந்த, வணிக சூரியர், வரிசை, வழிசெய், வன்னியர், விலாவொடித்தல், வேணும், வைபாளி அல்லது வைகாளி.

திருவிளையாடல் முதலியவற்றிலும் கேள்வியாலும் அறிந்த வைகள்: அட்டாலைமண்டபம், அமணமலை, அன்னக்குழி மண்டபம், இந்திரேசுவரர், எழுகடற்றெரு, எழுநூற்றுமங்கலம், ஐராவதகணேசர், ஐராவததீர்த்தம், ஐராவதநல்லூர், ஐராவதேசுவரர், கஞ்சரீடபுரம், காஞ்சனமாலை கோயில், காராக்கிரகக்குகை, காவணநல்லூர், கிழியறுத்தல், குருவிருந்துதுறை, குலசேகரபாண்டியன் வடிவம், கூடை தட்டிப் பறம்பு, கொந்தகை, கோச்சடை, சங்கத்தார்களுடைய திருவுருவங்கள், சங்கத்தார் கோயில், சாம்பனத்தம், சுந்தரமாறன், செல்லூர், தத்தனேரி, தனஞ்சயன் வடிவம், திருப்பாச் சேர்த்தி (மதுரைக்குக் கிழக்கே வையைக் கரையிலுள்ளதேரூர்; சைனர்கள் இட்ட மந்திர வடுகள், திரும்பாமற் சென்று கரையிற் சேர்ந்த இடமென்பர்), திருவாலவாய் நல்லூர், திருவாலவாய்த் தம்பிரானூர், திருவீதிகள் ஐந்து, தின்னநரி, தொடர்நரி, நக்கீரர் கோயில், நக்கீரர் திருவுருவம், நடுவூர், பதஞ்சலி முனிவர் ஸ்தோத்திரம், பரவர், பரிவீரமங்கலம், பாண்டிய மண்டலாதீசுவரர், பாண்டியன் படித்துறை, பாண்டியனகழ்வீதி, பாணர் (தையற்காரர்), பிட்டுத் தோப்பு, பிள்ளையார்பாளையம், பூதகுடி, பூதங் கண்டகுளம், பெருங்கருணை, மடைப்பள்ளிச் சாம்பல், மண்டியூர், மதிச்சயம், மாநகரி, முத்திரைகள் மூன்று, மேலைக்கடை, வளையற்காரமண்டபம், வாகீசசுவாமி மடம், விழுப் பாதராயர், வெள்ளியம்பலத்தெரு, வேப்பமாலை, வேறுநிலை.

வேறு பாடுகள்.

பரஞ்சோதிமுனிவரியற்றிய திருவிளையாடலிற் காணப்பெறாத அரிய விஷயங்கள் பல இத்திருவிளையாடலில் அவ்வவ்விடத்துக் காணப்படுகின்றன; அவற்றுட் சிற்சிலவருமாறு :

(காப்பு) கற்பகவிநாயகர் : இவர் சுந்தர பாண்டியத்திலும் திருவிளையாடற் பயகரமாலையிலும் துதிக்கப்பெற்றுள்ளார். இவர் கோயில் மதுரையில் இப்பொழுது காணப்பட்டிலது.

(கடவுள்வாழ்த்து) இதில், பெரும்பற்றப்புலியூர்த்துதி, பாண்டிநாட்டுத்துதி, இத்தலத்துத் திருநாமங்களுள் கான்கனுதி, மதுரைத் திருச்சிற்றம்பலம், வெள்ளியம்பலம் ஆகிய இவற்றின் துதிகள், உக்கிரப்பெருவழுதியார் துதி, நாற்பத்தெண்ணுயிர முனிவர்கள் துதி இவைகள் உள்ளன.

(பதிகம்) இதன் இறுதியில் முதற்குறிப்புச் செய்யுளொன்று உள்ளது; அச்செய்யுள், பழையகாலத்தில் இப்பதிகம் பாராயணம் செய்யப்பெற்று வந்ததென்பதைத் தெரிவிக்கின்றது.

(திருநகரச்சிறப்பு) மதுராநகரம் கன்னி, கரியமால், காளி, ஆலவாய்த் திருமமூர்த்தி என்பவர்களாற் பாதுகாக்கப்படுவது.

(க) விருத்திர ஹத்தியைப் போக்குதற்குத் தேவலோகத்திற் பலயிமானங்கள் இந்திரனுற் செய்விக்கப்பெற்றன. சிவலிங்கப் பெருமானுடைய அழகிய வடிவத்தைக் கண்டு, இந்திரன், சொக்கென்னும் திருநாமத்தைச் சாத்தினன். இத்தமிழ் நூலுக்கு மூதனூல், உத்தர மகா புராணமென்னும் வடநூலிலுள்ள சாரசமுச்சய மென்னும் பகுதி. இச்சரிதத்தை முதலிற் கூறியவர்கள், வியாசர், வான்மீகி, எச்சரென்பவர்கள்; பின்பு கூறியவர் அகத்திய முனிவர்.

(ங) மலயத்துவசன் ஆதிமரபில் வந்த வடிவமங்கையை மணம்புரிந்தனன்.

(ச) மலயத்துவசன் மலைக்கொடி மன்னனென்றும் கூறப்படுவன். பங்குனி உத்தரத்தில் தடாதகைப்பிராட்டியார்க்குத் திருமணம் நிகழ்ந்தது; முருகக்கடவுள் பக்கத்திலிருந்து திருமணத்தைச் செய்வித்தனர். திருநந்திதேவரே குண்டோதரராகவந்தனர்.

(ஞ) இந்திர விமானத்திற்குத் தென்பாலுள்ளதாகிய வெள்ளியம் பலத்திற் பதஞ்சலி முனிவருக்காகச் சிவபெருமான் திருநடனம் செய்தருளினர்; அது சொக்கத் தாண்டவமென்று பெயர்பெறும் [மதுரையில், திருக்கோயிலுக்குத் தெனபால் வெள்ளியம்பலமென்று பெயருள்ள ஒரு மண்டபமிருத்தலும், அதில் இக்காலத்துப் பங்குனித் திருவிழா நடைபெறுதலும், வெள்ளியம்பலம் தென்பாலுள்ள தென்றதற்கும் பங்குனி உத்தரத்தில் திருமணமுதலியன நடைபெற்றதற்கும் சான்றுகளுள்ளன.]

(ஃ) தடாதகைப் பிராட்டியார் பச்சைத்தேவி (மாகதவல்லி) யென்று வழங்கப்பெறுவர்.

(எ) சிவபெருமானது கட்டளைப்படி குண்டோதரனுர் பல குளங்களை உண்டாக்கினர். அக்குளங்களுட் காவணமுள்ளவாவியைத் தன்பாற்பெற்ற

ஊர் காவணநல்லூரென்று கூறப்படும். ஒரு வாவிக்கரையில், சடங்குக் கந்தர் எழுந்தளிருயிருக்கின்றனர். இங்கே சடங்குக் கந்தரென்றது, திருப்பரங் குன்றத்துக் கோயில் கொண்டெழுந் தருளிய ஸ்ரீ கல்யாண ஸுப்ரமணியக் கடவுளேயென்றுசொல்லுகின்றனர்.

(அ) அக்கினிமூலையிலுள்ள நடாக மொன்றில் எழுகடல்களும் அடங் கின.

(கo) உக்கிரனுர் சடையுடன்பிறந் தார்; அதனால், கோச்சடிலவருமரென்பது அவர்க்கு உபநயனத்திருநாம மாயிற்று. சுந்தரமாறருக்கு விதிகுடு மிப்பெருவழுதி யென்பதும் திரு நாமம் [மதுரைக்கு மேற்கேயுள்ள, 'கோச்சடை' என்னுமூர், கோச்சடி லவருமரால் அந்தணர்களுக்கு முற் றூட்டாகக் கொடுக்கப்பெற்ற அகர மென்று திருவிளையாடற் பயகரமாலை யுரை தெரிவிக்கின்றது.]

(கக) உக்கிரனுர், ஆதிமரபிலவதரி த்த வடிவணங்கை மணம்புரிந்தனர். சுந்தரமாறர் பதினறு தெய்வவருடம் அரசாண்டார்; கிரீடமணிந்து அரச போகத்தை அனுபவித்துக் கொண்டி ருந்ததுபற்றி, சொக்கநாதர், அபிடேக ச்சொக்க ரென்றும் புழுகுநெய்ச்சொ க்கரென்றும் திருநாமம் பெற்றனர்.

(கஉ) வருணன் விட்டகடல், புட்க லாவருத்தமுதலிய நான்கு மேகவேந் தர்களாற் குடித்துக் குறைக்கப்பட் டது; அப்பால் வருணன் கட்டளைப் படி மேகங்கள் பெய்த பெருமழையை மேற்கூறிய நான்கு மேகவேந்தர்கள் நான்கு மாடங்களாகித் தடுத்தனர். அதனால், அவ்விடம் மாடக்குளக்கீழ் மதுரையென்று பெயர்பெறும்.

(கங) எல்லாம் வல்ல சித்தருக்கு ஆக்ஞேச் சித்தரென்பது திருநாமம்.

(கஙி) சோமசுந்தரக்கடவுள் சங்கப் புலவராக எழுந்தருளியிருந்த பொழு தி அவருக்கு மதுரைப் போலவாயா ரென்பதும் இறையனு ரென்பதும் திருநாமம். அவராலியற்றப் பெற்றது இறையனுர் பொருளிலக்கணம். சங் கப்புலவர்கள் தாமியற்றிய பாடல்கள் அப்பொருளிலக்கணத்தின்படி அமை க்கப்பெற்றிருத்தலைக் கண்டு மகிழ்ந் தார்கள்; அவர்களுள், நக்கீரனுர்மட்டும் அழுக்காற்றுல், 'யானியற்றியநூலில் ஐந்தாம்பனுவலுக்கு ஒப்பில்லை' என் று கூறினர்.

(கச) தருமியின்தந்தையார் பெயர் சிவமுனியென்பது.

(கஅ) சிவபெருமான் தமிழ்நூற்கரு த்தை அகத்தியருக்கு நோக்கால் உப தேசித்தனர்.

(கக) இறையனுராகப்பொருளுக்குப் பலரியற்றிய உரைகளுள் உப்பூரி ழார் மகனுர் உருத்திரசன்மர்மெய்யு ரைகளைக்கண்டனர்.

(உக) பழமதுரையை அழிக்கவந்த கடல்சுவறும்படி பாண்டியன் வேலை யெறிந்தான்; அப்பொழுது அக்கடல் வடிந்து அவன் காலைக்கழுவியது; அதுபற்றி அப்பாண்டியற்கு வேலை வடிம்பலம்பநின்றுனென்பது பெய ராயிற்று. அவ்வரசனுக்குச் சங்கமண் டபம் அமைக்கப்பெற்றது.

(உஉ) வேலையரசனுக்கு அதியரைய னென்பதுபெயர். உத்தரகோசமங் கையில் அறுபத்துநால்வர் சிவபெரு மான்பால் ஞானுபதேசம்பெற்றனர். அவர்கள்பால் உத்தராகம கோசங் களைச் சிவபெருமான் வைத்தருளின மையின், அத்தலம் அப்பெயர் பெற் றது; இதனை உத்தரகோசமங்கைப் புராணம் வலியுறுத்தும்.

(உச) காடுவெட்டியென்னும் சோ ழன் பொருட்டு மூர்க்கப்பெற்ற வடக் குமதில்வாயிலுக்கு இலச்ஞினைவாயி லென்பது பெயர்.

(உஙி) மாணிக்கம் பிறத்தற்கு இலங் கைத்தீவிலுள்ள சமனெளிமலையைச் சூழ்ந்த வலவை, மாவலிகங்கை, கம் பளை, கல்லணையென்னும் நதிகள் நான் கும் இடங்களாகும். இதில், நவமணி யின் இலக்கணங்கள் விளங்கவிரித்துக் கூறப்பெற்றுள்ளன.

(உசு) கீழைமதிற்பால் அட்டாலை மண்டபம் தெய்வக்கம்மியாரால் கட்டப் பெற்றது; வில்வீரவடிவங்கொண்டு அதில் எழுந்தருளி யானையை எய்த

சிவபெருமானுக்கு அட்டாலைச் சேவகரென்பது திருநாமம்; யானை சொரிந்த இலத்தி இலத்திமலையென்று பெயர்பெற்றது. யானைமலையிற்பாண்டியன் நரசிங்கமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தனன்.

(உஎ) திருவாதவூர், காளையார்கோயில், திருப்பெருந்துறை என்கிற இத்தலவரலாறுகள் விரித்துக்கூறப்பெற்றுள்ளன. இந்தத்திருவிளையாடல்முதலியவற்றுள், திருவாசகத்துள்ளபகுதிகளுள் இன்னது இன்னது இன்ன இன்ன அமயத்து ஸ்ரீமாணிக்கவாசகஸ்வாமிகளால் அருளிச்செய்யப்பெற்றதென்பது வெளியாகின்றது.

(உஅ) நரிகளைக் குதிரைகளாக்கிய இடம் மிழலைநாட்டில்நிர்குடியென்று வழங்கப்படும். திருவாதவூரிற் சிவபெருமானுடைய பாதச்சிலம்பொலி கேட்கப்பெற்றது [குதிரை இலக்கணங்கள் இதில் மிகுதியாகக் கூறப்பெற்றுள்ளன.]

(உ0) சிவபெருமான் கூலியாளாகி வந்தபொழுது, வேலைசெய்யாததுகண்டு பாண்டியனுடைய வேலைக்காரர்கள் அடித்தார்கள்.

(உஉ) இந்திரனுக்குமுன்னம்ஆடிய ஈசானகோணத்தில், சிவபெருமான் பாண்டியனுக்காக மாறியாடி, திருவடியின்மேற்கொடிகட்டினர். அதனால், அதிரவீசியாடுவார், மாறியாடிக்கொடியிட்டபெருமானென்னும் திருநாமங்கள் அவருக்கு உண்டாயின.

(உஊ) யமதூதர்கள் சில பழங்கதைகளைத் தம்முட்பேசிக்கொண்டார்கள்.

(உஙி) இக்காலத்துவழங்காதனவாகிய யுத்தவிசேஷங்களும் அவற்றிற் குரியபரிபாஷைகளும் இதிற்கூறப்பெற்றுள்ளன.

(உசு) தத்தனென்னும் பாண்டியன் அரசாளுகையில் சமணானுப்பிய நாகமும்மிழ்ந்த விடவாற்றின்கொடுமை சிவபெருமானுடைய சடையிலிருந்த சந்திரனிடத்துள்ள அமுதத்தளியால் சமனமுற்று மதுரமாயிற்று. அதனால், இங்நகர்க்கு மதுரையென்பது பெயராயிற்று. பின்பு அவர்களனுப்பிய மாயப்பசு வதைக்கப்பெற்றது.

(உஎ) திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், இன்னஇன்ன அமயத்தில் இன்ன இன்னபதிகம் பாடியருளினரென்பது இதனால் விளங்குகின்றது.

(உஅ) சைனர்களைவாதுசெய்துவென்றதுபற்றித் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்க்கு வாதுசெய்தவாரணமென்னும் திருநாமமுண்டாயிற்று; சைனர்களை வற்றிய கழுக்களின் வரிசைமுடிந்தவிடம், கழுவர்படை வீடென்று வழங்கும்; சைனர்களோடு பேசியதோஷம் தீர்தற்பொருட்டுத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்திருவேடகத்திற் பிரதிஷ்டை செய்து பூசித்தசிவலிங்கப்பெருமானுக்குச்சீறுமையிற்றெள்ளியாரென்பது திருநாமம். அத்தலத்தில், வையையாற்றின் தென்கரையில், பாண்டியன் படைவீடுசெய்து அதிற் சிலகாலமிருந்து வழிபாடு செய்துவந்தான்.

(உகூ) சுந்தரசாமந்தரென்னும் சேனைபதி, கொந்தகக்குலத்துப்பிறந்தவர்.

(உகூ) மாமனுகவந்தவர்கூறும் வார்த்தைகளில் சிலவர்த்தகபரிபாஷைகள் வந்துள்ளன.

(உஉ) சிவபெருமான் பட்டமங்கலத்தில் அட்டமாசித்தி உபதேசித்தருளினர்.

(உஙூ) உண்ணுதற்குரியநீரிற்சேர்த்தற்குத் தக்க வாசனைப்பொருள்கள் இவையென்பது தெரிகின்றது.

(உசூ) உக்கிரகுலத்துப் பிறந்தபாண்டியன், இந்திரன்பூட்டிய ஆரத்தைத் திருப்பரங்குன்றத்தில் வைத்தனன். திருப்பரங்குன்றம் முருகக்கடவுள்முதலியோராற் பூசிக்கப்பெற்றது. நக்கீரர் பிரமராக்கதத்தால், அங்குள்ளகுகையில் அடைக்கப்பட்டுத் திருமுருகாற்றுப்படையைப்பாட, அதைக்கேட்டமுருகக்கடவுள், அவரை விடுவித்து, 'நம்மைக் கிழவனென்றனையே' என்ன, நக்கீரர், "குன்றமெறிந்தாய்" என்னும் வெண்பாவால்துதிப்ப, அதிலுள்ள, 'என்முமிளையாய்' என்பதைக் கேட்டு, மகிழ்ந்து, திருமுருகாற்றுப்

படையைப் படிப்பவர்கள் வேண்டிய வரத்தைக்கொடுப்போம் ; நீ மதுரைக்குச்செல்வாயாக' என்றருளிச்செய்தனர். பாண்டியன் மேகங்களைப்பிடித்துக்கட்டியஇடம் கட்டுநல்லூரென்றும், அவற்றைச் சிறைப்படுத்தியஇடம், இருஞ்சிறையென்றும், அவன் தனித்துநின்று போர்செய்து இந்திரனை வென்றஇடம் தனிச்சய மென்றும் வழங்கப்படும். மேகத்துக்குப் புணை கொடுத்தவன் களவேள்விநாட்டிலுள்ள எழுரையுடையஒருவன். அவன் புணைகொடுத்தற்கு 'நாம் முன்' என்று சொல்லிக் கொண்டு வந்தமையால், அவனூர் நாமனூரென்று பெயர்பெற்றது. மேகங்கள், தமக்குப்புணைகொடுத்தற்கு முதலில்எழுந்தவர்களுடைய இடமாகிய துவரைநாட்டில் முதலில் மழைபெய்தற்குத்தோன்றி, புணை கொடுத்தவனுடைய இடமாகிய களவேள்விநாட்டிற் பின்பு பெய்யாநிற்கும்.

(சக) சோழனைஉட்கொண்டு ஆழ்த்தியமடு கொண்டாழி யெனப்பெயர் பெற்றது ; அது மதுரைக்கு மேற்கே யுள்ளதோரோடை.

(சஎ) மதுரை, நடுவூர், வாலவாய், ஆலவாய், திருமுடங்கலெனப் பெயர் பெற்றது ; இத்தலம் சிவபெருமானுடைய படைவீடு.

(சஅ) திருவிடைமருதூரில் வரகுணபாண்டியர் சிலகாலமிருந்து பக்தி பரவசராய்ப் பலவகையானவழிபாடுகள் செய்துவந்தனர் [திருவிடைமருதூர்த் திருகோயிலிலுள்ளபாண்டியன் தோரணமென்றவாயிலின் வலப்பக்கத்தே வரகுணபாண்டியருடையதிருவுருவம் அமைக்கப்பெற்றுள்ளது.]

(சக) வரகுண பாண்டியருடைய குமாரர் அட்டாலவீரரைப்பிரார்த்திக்க, அவர் வில்வீராகத்தோன்றிச் சோழன் முதலியபகைவர்மீது விடைக்குறியம்பையெய்தனர்.

(சுக) சிவபெருமான் மூர்த்தியார்க்கு அரசளித்தனர்.

(சூ) காரியார் நாரியாரென்னும் புலவர்களுடைய பாக்களைச் சிவபெருமான் பகுத்துக் கொண்டருளினர்.

(சுக) புலியின் முலைப்பாலைச் சிவபெருமான் புல்வாய்க்கன்றுக்கு அளித்தருளினர். மணலூரிலிருந்துவந்தஒரு வணிகனால் இத்தலம்காணப்பெற்றது [மதுரைப்புதுமண்டபத்திற் கீழைக்கோடியிலுள்ள பெரிய கருங்கற்றூணென்றிலும் திருப்பரங்குன்றத்தில் துவஜஸ்தம்பமண்டபத்தில் வடபாலுள்ள பெரியகருங்கற்றூண்களுள் ஆரூவதிலும் சிவபெருமானுடையதிருவுருவம் புலியைக்கொண்டு புல்வாய்க்கன்றிற்குப் பாலருத்திய வண்ணமாகப் பெரியோர்கள் அமைத்திருத்தல், பண்டைக்காலத்தில் இச்திருவிளையாடல் நிகழ்ந்ததென்பதை நன்குவிளக்குகின்றது.]

(சுச) இதில் இசையிலக்கணங்கள் பலவந்துள்ளன.

(சுஅ) காட்டுநாட்டுள்ள வன்னியர் தலைவன்,கூ-பிள்ளைகளைப்பெற்றான்; அவர்கள் தீச்செய்கையால், முதியவேம்பில், ஒரு பன்றியினிடத்தில் கூ - குட்டிகளாகப்பிறந்தார்கள் [சோமசுந்தரக்கடவுள் பன்றிக்குட்டிகளுக்குத் தாயாகிப் பாலளித்திருவுருவம், மதுரைப்புதுமண்டபத்திலும் திருப்பரங்குன்றத்துத் துவஜஸ்தம்பமண்டபத்திலுமுள்ள ஸ்தம்பங்களில் அமைக்கப்பெற்றுள்ளது.]

(சுக) அப்பன்றிக்குட்டிகள் பன்னிரண்டும் வன்னியர்களாயின. அவைகள் வளர்ந்தமேல் பன்றிமேல் யென்று பெயர்பெற்றது ; அவர்கள் பன்றிக்குறும்பர்பன்னிருவரென வழங்கப்பெற்றார்கள்.

(சுஎ) கரிக்குருவிச்சாதிகள் பிருத்தியுஞ்சயமந்திரம் ஜபித்தலை இன்றும் அறியலாகும். அம்மந்திரம் விரைவிற் பலனை அளிக்கும் [காஞ்சிப்புராணம்,பன்னிருநாமப்படலம்,சஎக-ஆம் செய்யுளைப்பார்க்க.]

(சுக) உக்கிரகுலத்துப்பிறந்த பாண்டியனொருவன் மேருமலையிற் கயலையும் சண்டையும் பொறித்தனன்,

(சுஉ) விடவைத்தியர் இத்தனை வகையினரென்பது இதிற்கூறப்பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் ஒருவனுக்குத் திருமருகலில், "சடையாய்" என்னும்பதிகத்தாலும், ஒருவனுக்குத் திருப்புறம்பயத்தில் திருநோக்காலும் விடநோயைத் தீர்த்தருளினர்.

(சுச) வேதங்களையும் வேதாங்கங்களையும் முனிவர்களுக்குச் சிவபெருமான் உபதேசித்தருளினர்.

பரஞ்சோதிமுனிவரியற்றிய திருவிளையாடலிற்கூறப்பட்டது போல இன்னபாண்டியன்காலத்து இன்ன திருவிளையாடல் நடந்ததென்பதும் இன்ன பாண்டியன்மகன் இன்னனென்று இடைவிடாமற் பாண்டிய பாம்பரையைச் சொல்லிக்கொண்டு போதலும் இதிலில்லை. பின்னுள்ள பாண்டியர்களின் பெயர்கள் மட்டுமே இந்நூலிற் காணப்படுகின்றன:

(க) உக்கிரஞர் ; (உ) சுந்தரமாறர் ; (ங) தத்தன் ; (ச) மலயத்துவசன் ; (ஞ) வருணர் ; (ஈ) வருணருடையமைந்தர் ; (எ) வீரமாறன்.

ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகள்

திருநாவுக்கரசுநாயனுர்க்குக் காலத்தால் முற்பட்டவரென்பது.

திருநாவுக்கரசுநாயனுர் தேவாரங்கள்.

தி ரு வ ா ரூ ர்.

பண் - கா ந் தா ர ம்.

தி ரு ச் சி ற் ற ம் ப ல ம்.

உ. நரியைக் குதிரைசெய் வானு நரகரைத் தேவுசெய் வானும்
விரதங்கொண் டாடவல்லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட முன்பணிந் தன்பர்க ளேத்த
வரவரைச் சாத்திநின் றானு மாரூ ரமர்ந்தவம் மானே.

த னி த் தி ரு த் தா ண் ட க ம்.

தி ருச்சிற்றம்பலம்.

கக. குராமலரோ டராமதியஞ் சடைமேற் கொண்டார்
குடமுழங் தீசனேவா சகனைக் கொண்டார்
சிராமலிதஞ் சேர்விடமாத் திருந்தக் கொண்டார்
தென்றனெடுங் தேரோனைப் பொன்றக் கொண்டார்
பாபரனென் பதுதமது பேராக் கொண்டார்
பருப்பதங் கைக்கொண்டார் பயங்கள் பண்ணி
யிராவணனென் றவனைப்பே ரியம்பக் கொண்டா
ரிடருறுநோய் தீர்த்தென்னை யாட்கொண் டாரே.

மேற்கூறிய இரண்டு பாடல்களுள், முதலாவதிலுள்ள, 'நரியைக் குதிரை செய்வானும்' என்பதற்குப் பொருளும் சரித்திரமும் வெளிப்படை.

இரண்டாவதிலுள்ள, 'குடமுழங் தீசனேவா சகனைக் கொண்டார்' என்பதற்குப்பொருளும் அதிலுள்ள சரித்திரமும் இங்கே ஆராய்தற்பாலன: இந்த வாக்கியத்திற்கு, (சிவபெருமான்) குடமுழாவைவாசிக்கும் திருநந்தி தேவரை ஸ்ரீ மாணிக்கவாசகராக அவதரிக்கும்படி திருவுளத்திற் கொண்டருளினனென்பது பொருள்; குடமுழா - ஒருவகைவாத்தியம்; வாசகன் - ஸ்ரீ மாணிக்க வாசகர்.

பண்டைக்காலத்திற் பூமியிற் பௌத்தமதம் அதிகரித்த பொழுது வேதாகம ஒழுக்கம் குன்ற, அக்குறையை அகற்றக்கருதிய

தேவர்களுடைய பிரார்த்தனைப்படி, சிவாஞ்ஞையால் திருநந்திதேவர் ஸ்ரீ வாதபுரத்தில் ஸ்ரீ சம்புபாதாசிருதரென்னும் பிராஹ்மணரைத் தமருக்கும் அவர் பத்தினியார் சிவஞானவதியார்க்கும் புத்திரராக அவதரித்தருளினரென்பது, திருப்பெருந்துறைபின் வடமொழிப் புராணமாகிய ஸ்ரீ ஆதிகைலாஸமாஹாத்மியம், கூ - ஆம் அத்தியாயத்திலும் ஸ்ரீமாணிக்கவாசகருடைய வடமொழிச் சரித்திரமாகிய ஸ்ரீமணிவாக்கிய சரித்திரம், கூ - ஆம் அத்தியாயத்திலும் விரித்துக் கூறப்பெற்றிருத்தலின், இதற்கு இதுவே பொருளென்று தெரிகின்றது.

இதனால், ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமிகள், திருநாவுக்கரசு நாயனார்க்குக் காலத்தால் முந்தியவரென்று நன்கு புலப்படுதல் காண்க.

மேற்கூறிய வடநூல்களிரண்டினையும் ஆராய்ந்து தெளியும்வண்ணம் நல்ல சமயத்தில் அனுப்பிய திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ ஆளுடையார்கோயில் டிரஸ்டி ஸ்தானீகத்திலிருந்த ஸ்ரீ சுந்தரலிங்கத்தம்பிரானவர்களுடைய பேருதவி ஒருபொழுதும் மறக்கற் பாலதன்று.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாயுடையார்
திருவிளையாடற்புராணம்.

காப்பு.

சுருதிநான் மறைதொழுஞ் சொக்க நாயகன்
திருவிளை யாடலெட் டெட்டுஞ் செப்பிட
முருகலர் சடைமுடி முக்கண் மும்மதக்
கரிமுக னிணையடிக் கமலம் வாழ்த்துவாம். (1)

கற்பகவிநாயகர்.

சொற்பக விஞ்ஞக ஞாலன் றாய்மையோர்
ரற்பக விஞ்ஞக னறுமு கேசன்முன்

குறிப்புரை.

காப்பு.

க. சொக்கநாயகன் - சுந்தரேசர்; க: உரு; சொக்கு - பேரழகு; "சொக்கணிக்த சுடரொளி வண்ணனே", "எக்க ராமமண் கையருக் கெளியே னலேன் திரு வாலவாய்ச் - சொக்க னென்னு ளிருக்கவே", "தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச் - சொக்கனே யருள்" (தேவாரம்); "மொக்கணி யதனின் முழுத் தழல்மேனி, சொக்க தாகக் காட்டிய தொன்மையும்" (திருவாசகம்); "புழுகு நெய்ச் சொக்க ரபிடேகச் சொக்கர்கர்ப் பூரச்சொக்க - ரழகிய சொக்கர் கடம்ப வனச்சொக்க ரங்கயற்கண் - டழுவிய சங்கத் தமிழ்ச்சொக்க ரென்றென்று சந் ததநீ - பழகிய சொற்குப் பயன்றேர்ந்து வாவிக்கென் பைங்கிளியே", "கடற்றீ விடங்கொண்ட சொக்கருக்கே" (மதுரைக்கலம்பகம்: நிகூ, சுஙூ) திருவிளை யாட லெட்டெட்டு: தீதநாட்டுக். க; திருநகரச். கஅ; க: ஙடு; "எட்டெட் டியற்றிய கட்டமர் சடையோன்" (கல்: கூக); "பண்ணிய கலைகள் போலப் பக ரறு பத்தொன்கு புண்ணிய வாடல்செய்து பொலிதரு நகருமுண்டால்" (திரு நாகைக்காரோண. தலவிசேட. சக.)

உ. சொல் பக விஞ்ய். அன்பு அகம் இல் நாயகன். முன் - தமையனூர். பொற்பு அகம்வில் - அழகிய மலையாகியவில்; அகம்: வடமொழி. நாயகனுகிய முனிவன் - சிவபெருமான்; "முன்பே யென்னை யாண்டுகொண்ட முனிவா

(பிரதிபேதம்.) 1திருவாலவாயுடைய நாயனூர் திருவிளையாடல்', 'திருவா லவாயுடைய நயினூர் திருவிளையாடல்'

பொற்பக விஞ்ஞகன் முனிவன் புத்திரன்
கற்பக விஞ்ஞகன் கழல்க ளேத்துவாம். (உ)

சித்திவிநாயகர். வேறு.

வாஞ்ஞழுகு முகின்மேனி வேதன் றேட மதுரைநா யகனடியார் வினைக டீர்ப்பா, னூஞ்ஞழுகு புரம்[1]படைத்த மக்கள் போல்வந் தலாவுதிரு விளையாடற் [2]பனுவல் சொல்லக், கூஞ்ஞழுகு பிறைக் கோட்டுப் பனைக்கை நால்வாய்க் குடவுதரச் செழும்பவளக் குன்றம் போலத், தேஞ்ஞழுகு மலர்க்கடம்ப வனத்துலாவு சித்திவிநா யகனி ருதாள் சென்னி சேர்ப்பாம். (ங)

வாழ்த்து. வேறு.

ஞால மோங்குக நான்மறை நீடுக
சீல மன்னவன் செங்கோல் விளங்குக
கால மாமழை மன்னுக [3]காதலாற்
சால வீச னடியார் தழைகவே. (ச)

கடவுள் வாழ்த்து.

பெரும்பற்றப்புலியூர்.

நிறங்கட்கப் [4]புறநாத னீனேந்துட்சிற் கனஞஞிச்
செறிந்தச்சித் திரகாயந் திருந்தக்கட் செவிகாண
வறங்கட்குப் [5]புகலாகு மகண்டப்பொற் பொதுநாளும்
பிறங்கப்பொற் புடனூடும் பெரும்பற்றப் புலியூரே. (க)

முனிவர் முழுமுதலே" (தி.நவா. எண்ணப்: ங.) சிவபெருமானே அருத்தவன், நற்றவனென்பர் பிறரும்; உ: கஙு; கரு: ரு; "தாழ்சடைப் பொலிந்த வருத்த வத் தோற்கே" (புறநா. கட.) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க.

ங. முகின்மேனி - திருமால். புரம் - உடம்பு. பனுவல்-நூல், செய்யுள்.

கடவுள் வாழ்த்து.

க. நிறங்கட்கு அப்புறநாதன்: நிறம் - வர்ணம்; உருவம். உள்நினைந்து. சித்தனன் - ஞானப்பிழம்பாக உள்ளார். சித்திரகாயம் - புலி; "கடும்புலிக ளயர்த்துசித்ர காயமெனும் பெயர் விளக்க" (அழகர்கலம்பகம், க); இக்கே வியாக்கிரபாதர்; அ: உலகறிசுட்டு; அழகுமாம். கட்செவி - பாம்பு; பதஞ்சலி முனிவர். செறிந்து திருந்தக் காண. 'போற்றி' என்று ஒருசொல் வருவித்து முடிக்க. பின் வேண்டுமிடத்தும் இப்படியேகொள்க.

(பி - ம்.) 1'படைத்தான் மாக்கள்போல்' 2'பாடல்' 3'காதலாஞ் சாலும்' 4 'புறஞகநினைந்துட் சிற்குணஞஞி' 5'புலனுகும்'

திருச்சிற்றம்பலம். வேறு.

பொருப்பைப் பண்பொடிங் குனித்துச் சண்டவெம் புரத்தைப் பொன்றமூன் சிரித்துக் கண்டவன், கரப்பொற் குன்றடிங் திறத்துச் சிங்கமென் கருத்துட் டங்குமஞ் செழுத்துச் [1]சம்புவண், டரக்குக் கொண்பதஞ் சலிக்குத் தென்றலங் தழைப்பத் தொன்தொமென் றிசைத்துச் சந்ததங், திருத்தச் செம்பதம் புரிப்பித் தன்புறுங் திருச் சிற் றம்பலங் திருச்சிற் றம்பலம். (உ)

திருவம்பலம். வேறு.

அருளுந்தொகும் பொருளுந்திருந் தழகுந்தொழுங் குலமுந்தரும் பரிவொன்றுசந் ததியும்புகும் பழியஞ்சுமொண் டொடியும்பொருந் திருவுந்திறம் பிறவுந்துளங் கொளியும்பிறங் கறிவுஞ்செழுந் திருவும்பெரும் புகழுந்தருந் திருவம்பலந் திருவம்பலம். (ஙு)

பொன்னம்பலம். வேறு.

மூன்னங்கருங் கண்ணன்கிடந் திம்மண்குடைந் துண்ணீணந்துறுந் தன்னண்டமென் றன்னம்பறந் தின்னம்பெருங் கின்னம்பயிம் பன்னும்பழஞ் சொன்மந்திரம் பன்னுங்களென் றுன்னும்பதம் பொன்னஞ்சிலம் பின்னந்தரும் பொன்னம்பலம் பொன்னம்பலம். (ஙூ)

சபாபதி. வேறு.

திருமேவுஞ் [2]சதுவேதச் சிரமேவும் பரஞ்சோதி
யருமேவுந் திருவுருக்கொண் டம்மையுடன் செம்மைபெற
மருமேவும் பெரும்பற்றப் புலியூர்மா மணிமன்றுட்
குருமேவும் [3]படிமேவிக் கூத்தாடுங் கழல்போற்றி. (ஙூ)

உ. பொன்றக்கண்டவன் - அழியச்செய்தவர். கரப்பொற்குன்று-யானை; கயாசுரன். தரக்குக்கு - வியாக்கிரபாதருக்கு; தரக்கு - புலி. தென்றலம் - தென்னூடு. புரிப்பித்து - குஞ்சிப்பித்து; வகையச்செய்து. 'திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்' என்பது அடுக்கு; பின்னுள்ளவைகளுமிப்படியே. இங்ஙனம் அன்பின் மிகுதியால் அடுக்கிக்கூறல் ஒருசாராசிரியர் கொள்கை; "அதிரும்படி நடனம்பூரி யதிருங்கழ லதிருங்கழல்" (அருணசலபுராணம், கடவுள் வாழ்த்து, உ) என்பதனுலும் விளங்கும்.

ஙூ. திருவம்பலம் அருள் முதலியவற்றைத்தரும்; சந்ததிமுதலியவற்றைத்தரும்.

சு. நைந்துறும் - நைந்துறுவார். தன் அண்டம் - பிரமாண்டம். அன்னமென்றது பிரமதேவரை. இன்னம்படும்-துன்பமுறுவார். பழஞ்சொல்லாகிய மந்திரம் - பஞ்சாக்கரம். பன்னுங்கள்: முன்னிலைப்பன்மையேவல். பதம் - திருவடி. கண்ணன் இம்மண் குடைந்து உள்நைந்துறும்; அன்னம் பறந்து இன்னம்படும்; ஆதலால் மந்திரத்தைப் பன்னுங்களென்று கூறி, சிலம்பு பதத்தைத்தருதற்கு இடமாகிய பொன்னம்பலமென்க.

ஙி. அரு - அருமை. மரு - மருவுதல்; அர்த்தயாமகாலத்தே ஏனைத் தலமூர்த்திகள் அங்கே மருவுவார்களென்பது புராணவரலாறு. போற்றி - பாதகாத்தருள்க; வியங்கோள்.

(பி - ம்.) 1'சம்புவொண்டரக்குக்கு' 2'சதுர்வேத' 3'படிமேவுங்கூத்து'

சொக்கநாதர். வேறு.

அரியசடை முடிபோற்றி யருள்பொழிசெம் முகம்போற்றி
விரையிதழி மலரணிநூல் விளங்கியமார் பகம்போற்றி
மருவுமுயர் பேரழகு வளருதர நிலைபோற்றி
திருவளர்செந் தமிழ்ச்சொக்கன் திருவடித்தா மரைபோற்றி. (சு)

அங்கயற்கணம்மை. வேறு.

பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
யிங்கெமக் கருள வல்ல வினையிலா வெம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவழமால் வரையை நீங்கா
வங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி. (எ)

பாண்டிநாடு.

ஆவியந் தென்றல் வெற்பி னகத்தியன் விரும்புந் தென்பா
லாவலந் தீவம் போற்றி நாவலந் [1]தீவந் தன்னுண்
மூவர்கட் கரியா னிற்ப மூத்தமிழ்ச் சங்கத் தெய்வப்
பாவலர் வீற்றி ருக்கும் பாண்டிநன் னாடு போற்றி. (அ)

மதுரை. வேறு.

தேனிமிருந் தொடைவாகைச் செழியர்திருக் குலம் விளங்க
வீனமில்பல் லுகங்கடொறு மிருநிலத்தி யா வருமுய்ய
வானபெரு நான்மறைக்கு மரியயற்குந் தெரியாதார்
மானிடராய் விளையாடும் [2]மாமதுரை நகர்போற்றி. (கூ)

கடம்பவனம். வேறு.

தலம்புகழ்தரும்பொரு வரும்பரம[3]சம்புவ ருணம்பனெழி லம்
பொனெலியார், சிலம்படி[4]யலம்பொலி பரம்பிரசதம்படர் சிதம்பர
நிரம்பு மருளா, லலம்பெறநிலம்பெறு நமம்பிகையுமிம்பரு மரம்பைய
ருமும்ப ருமெலா, நலம்பெருகிடும்படி விரும்பிசைநயம்பட நடம்புரி
கடம்ப வனமே. (கo)

சு. இதழி மலர் - கொன்றைமலர். இதில், கேசாதிபாதாந்தம் முறையே கூறப்பெற்றுள்ளன.

எ. பவழமால்வரை - சிவபெருமான்.

அ. ஆவியந்தென்றல் - உயிர்போன்ற அழகியதென்றல்; தென்றல்வெற்பு-பொதியின்மலை. நாவலந்தீவம் - சம்புத்தீவு. மூவர்கட்கரியான் - சோமசுந்தரக் கடவுள்; சோமசுந்தரக்கடவுள்நிற்பச் சங்கப்புலவர்கள் இருந்தது, "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் செய்யுளைக் குற்றங்கூறியவர் யாவரென்றபொழுது; தீருநாட்டுச். கூ; கசு: உo; கள: எ.

கூ. "பல்லுகம்" என்றது நான்கு யுகங்களையும்; தீருநகரச். கஅ.

கo. இரசதம்படர் சிதம்பரம் - வெள்ளியம்பலம். அலம் - நிறைவு.

(பி - ம்.) 1'தீபத்தன்னின்' 2'மதுரைமாநகர்' 3'சம்புவெழி தங்குமொழி கம்பனெலி' 4'அலம்பவொளி பம்பிரசதம்'

கூடல். வேறு.

ஆடுபவர் பாடுமறை யேடெதிர்தெ ஞடுவகை யாடவிளை யாடு
பெரியோர், வேடனிடு சூடினிய கேடிறசை நாடுபவர் வேடனுடல் வீட
வடுவோர், சேடன்மதி யோடுநதி யோடுதலை யோடுவிதி தேடுமுடி
சூடு முரவோர், கூடுமிட நீடுசது மாடமென மூடிமுகில் கூடுமுயர்
கூட னகரே. (கக)

மதுரை. வேறு.

விதுவரவ மிதழிதிரி பதகைதலை பொதிசடையர் விதமருவு கதிய
தருள்வோர், சதுமறைவி புதர்முனிவர் திதிபுதல்வர் துதிசெயிர சத
நிகழ்தொல் பொதுவில் வருவோ, ரதிகாள நதியையதி மதுரமுறு
நதிசெய்திற லதுலருயர் சதுர நிடம்வான், மதிதவழு சுதையிலகு
புதுமைதரு நிதிதிகழு மதிறழுவு மதுரை நகரே. (கஉ)

திருவாலவாய். வேறு.

உருகாத நீச ராயினு முணராத மூட ராயினுங்
கருதாத சீல ராயினுங் கசியாத நேச ராயினும்
வரையாத யாவ ராயினும் வலமாக நாக ராயர்சூழ்
திருவால வாயுண் மேவுவார் [1]சிவமாவ ராணை யாணையால். (கங)

மதுரைத்திருச்சிற்றம்பலம். வேறு.

[2]மூன்மலர்நான் முகன்றிருமான் முனிவர்புரந் தரன்றேவர்
நன்மறைகண் டடிபரவ நலமலிகா லங்கடொறுங்
தொன்மடமா துடனயர்ந்து சுந்தரனன் னடமாடுந்
தென்மதுரை மாநகர்சேர் திருச்சிற்றம் பலம்போற்றி. (கச)

கக. மறைஏடு - தமிழ்வேதமாகிய திருமுகப்பாசுரமெழுதிய ஏடு. வேடன் - கண்ணப்பர்; வேள்தன் உடல் - மன்மதனுடைய உடம்பு. சேடன் - பாம்பு. சேடனையும் மதியையும் ஓடுகின்ற நதியோடு தலையோட்டினையும் முடியிற்சூடும் உரவோன். கூடும் இடம் கூடல் நகர்.

கஉ. விது - சந்திரன். திரிபதகை - கங்கை; ஆகாயம், பூமி, பாதாள மென்னும் மூன்றுவழியாற் செல்லுபவள். விதம் - சாலோக முதலிய நான்கு வகை. திதிபுதல்வர் - அசுரர். கரளநதி - விடநதி; விடநதியை மதுரநதியாகச் செய்த வரலாற்றை, நகர-ஆம் திருவிளையாடலாலுணர்க.

கங. கருதாத சீலர் - நினையாத இயல்பையுடையவர். வரையாத - கொள்ளப்படாத. நாகராயர் - பாம்பின் அரசர்; என்றது மதுரையின் எல்லை காட்டிய பாம்பை; தேவராசசருமம்.

கo-கங. இச்செய்யுட்களில், இத்தலத்தின் காரணப்பெயர்களாகிய கடம்பவனம், கூடல், மதுரை, திருவாலவாயென்பவை முறையே பாராட்டப் பட்டுள்ளன; தீருநகரச். அ - கக.

கச. சுந்தரன் - சொக்கராயகர்; எழுவாய். நன்னடம் - சொக்கத்தாண்டவம்; 'சுந்தர நன்னடம்' என்று பாடங்கொண்டு, சொக்கத்தாண்டவமெனினுமாம்; ருரு: ருரு - ஆம் பாடல்பார்க்க. இத்தலத்தில், சிவபெருமான், திருமால் முதலியவர்கள் பொருட்டுப் பண்டைக்காலத்தில் நடம்புரிந்தருளினரென்பது,

(பி - ம்.) [1]'சிவமாவராவராணையால்' [2]'முன்வழி'

வெள்ளியம்பலம். வேறு.

மருமல ரயன்மா லேத்த மதுரைமா தேவி வாழ்த்தப்
பரவரு முனிவர் [1]போற்றப் பதஞ்சலி முனிவன் காணப்
[2]பொருவருங் கடவுண் முன்னம் பொன்னினம் பலத்து ளாடு
மரு[3]டம் புரிந்த வெள்ளி யம்பலம் போற்றி போற்றி. (கந)

கான்மாறியாடியவர்.

கதிதரு மறைகள் பாடக் கருணைமெய் காட்டித் தென்னன்
துதிசெய [4]வாருங் காணச் சோதிகின் றதிர வீசித்
திதமுறு மதுரை யந்தண் [5]சிற்பர வெளியாந் தொல்லைப்
பொதுவினுண் மாறியாடும் பூங்கழல் போற்றி போற்றி. (கசு)

விநாயகர்.

குறைவற வடசொற் சொல்லுங் கதைதமிழ்க் கொத்தி னூலே
நிறைவுற நடத்து தற்கு நீள்பனைத் தடக்கை வெற்றிச்
சிறுபதப் பெருவயிற்றுச் செக்கர்மூக் கட்க ளிற்றை
யுறவுற விதயகூடத் துரியபா சத்தாற் சேர்ப்பாம். (கஎ)

முருகக்கடவுள்.

விடங்கரு மடங்க லென்ன விண்ணவ ரெண்ண ருந்தத்
தொடர்ந்தமர் கடந்த சீற்றச் சூருடல் பிளந்த ளுந்த

கடம்பவனபுராணமுதலிய நூல்களிற் கண்டவரலாறு; இஃது இந்நூலிற் பரக்கக்காணப்படும்; "நாடிரு முனிவர்க் காடிய பெருமான்", "கூடன்மா நகராடிய வமுதை", "பூதந்துள்ளப் பேய்கள மறிப்ப,வெங்குள வுயிரு மின்பநிறைக் தாட, நாடகவிதியோ டாடிய பெருமான்" (கல்.கக, உ0, உநு) என்பவற்றாலுமுணர்க.

கநு. மதுரைமாதேவி - தடாதகைப்பிராட்டியார்; மதுராபதித்தெய்வ முமாம். பதஞ்சலிமுனிவர்க்காக நடம்புரிந்ததை, "வந்தபதஞ் சலிக்குநடஞ் செய்தவாறும்" (பதி. க.) என்பதனாலும், நு-ஆம் திருவிளையாடலாலுமுணர்க; "பதஞ்சலிக் கருளிய பரமநாடக" (திருவா. கீர்த்தி. கஙஅ.)

கசு. மறைகள்பாட:"அருமறைநாதம்பாட" (கூஉ: கசு.) சோதி - சிவபெருமான்; எழுவாய். நிதம் - நிலை. அதிரவீசி ஆடுமென்க; கூஉ: கஉ, உங; "அதிரவீசி யாடுவாய்" (தே.)

கஎ. வடசொலென்றது, உத்தரமா புராணத்துள்ள சாரசமுச்சயமென்னும் பகுதியை; க: ஙநு. தமிழ்க்கொத்து - தமிழ்ச்செய்யுட்களின் தொகுதி; தமிழ்நூல்களின் தொகுதியுமாம்;"செழுந்தமிழ்க்கொத்தறிவிக்க வல்லாரில்லே" (கஅ: எ); "கோக்குந் தமிழ்க்கொத் தனைத்தும்வாழ்க" (தக்கயாக. இறுதித் தாழிசை.) பாசம் - அன்பு, கயிறு.

கஅ. மடங்கல் - யமன். என்னத்தொடர்ந்து. சூர் - சூரபன்மன்; கடம்பமர் கந்தனென இயைக்க சிவலிங்கப்பெருமானுக்குரிய ஸ்தலவிருக்ஷத்தை அத்தலத்துள்ள முருகக்கடவுளுக்கும் உரியதாகக் கூறுதல் மரபாதலின், 'கடம்பமர்...கந்தனே' என்றார்; ஸ்ரீகாம்பரமூர்த்திக்குரிய மாமரத்தை, "மாவடி வைகுஞ் செவ்வேள்" என முருகப்பிரானுக்கும் கூறியிருத்தல் காண்க; அன்றி,

(பி - ம்.) 1 'போற்றும்பதஞ்' 2 'பொருவரு மமரர் சூழப் பொன்னின்' 3'நடம்புரியும்' 4'யாருங்காணச்' 5'சிற்பரவொளி'

வுடம்பிடிப் படைத்த டக்கை யுத்தம மயூர வூர்திக்
கடம்பமர் மன்றற் ரெருங்கற் கந்தனைச் சிந்தை செய்வாம். (கஅ)

உக்கிரப்பெருவழுதியார். வேறு.

தாரார் நிம்பத் தொடையிலங்கச் சசிமா மரபு தனில்வந்து
பாரார் பெருவாழ் வுறத்தெய்வப் பாண்டிய னென்று முடிசூடிப்
பேரா தாவா லரசாளும் [1]பெருமான் திருமா மகவாய்மூச்
சீரார் சங்கத் தமிழாய்ந்த தென்னன் பொன்னங் கழல் போற்றி. (ககூ)

கலிமகள். வேறு.

புத்தக மக்க மாலை வராபயம் பொருந்து கையாண்
மூத்தணி யணிவாள் வெள்ளை மூளரியா சனத்தாண் மண்ணிற்
சத்தமோ டத்தங் கண்ட தவளமெய் வாணி வேதா
வுத்தம மனைவி வெண்டூ சுடையடா ளிணைகள் போற்றி. (உ0)

சைவசமயாசாரியர் முதலியோர்.

படிபுகழ் சண்பை வேந்தர் மலரடி போற்றி பத்தி
வடிவுடை யியறோ் நாவுக் கரசடி போற்றி மாலை
மூடிகொள்சுந் தரர்தாள் போற்றி மூதுரை வாத வூர
ரடியிணை போற்றி [2]மற்ரேங் கடியவ ரடிகள் போற்றி. (உக)

நாற்பத்தெண்ணாயிரமுனிவர்.

பலந்தரு தவத்தான் மிக்கோர் பத்திவை ராக்கி யத்தோர்
புலங்களுந் கடந்தோ ரீசன் றனையலாற் [3]போற்ற லில்லோர்

"கடம்பமர் செல்வன்" (பரி. அ: கஉசு) எனத் திருப்பரங்குன்றத்துச் செவ் வேள் கூறப்பட்டிருத்தலால், இத்துதி அவரைச்சார்ந்ததென்றலுமாம்; இயல் பாகவே கடம்பின் அடியில் அவர் எழுந்தருளியிருப்பதாகக் கூறுதல் மரபாத லின், பொதுமைபற்றிக் கூறினுரென லுமாம்; "சதுக்கமுஞ் சந்தியும் புதுப் பூங் கடம்பும்" (முருகு. உஉசு), "கடம்பமர் மெடிவேள்" (பெரும்பாண். எடு) என்பவற்றை யுணர்க.

ககூ. பாரார் - பூமியிலுள்ளார். இங்கே, 'தெய்வப்பாண்டியன்' என்றது போல, "தெய்வவான்வழுதி" என்பர் பின்னும் (சூ: ச.)

உ0. அக்கமாலை - உருத்திராக்கமாலை; "அக்கமாலை கொடங்கையினெண் ணுவார்" (தேவாரம்.) வராபயம்-வரமும் அபயமும். கண்ட-செய்த, அறிந்த.

உஉ. சரியையாதி நான்குமார்க்கம் - சரியை, கிரியை, யோகம், ஞானம். நாற்பத்தெண்ணாயிரவரென்னும் பெயர், தில்லைமூவாயிரவர், திருப்பெருந்துறை முக்நூற்றுவர், திருவீழிமிழலை ஐஞ்ஞூற்றுவரென்பதுபோன்ற குழூஉப்பெய ரென்றும், இவர்கள் இத்தலத்திலும் சிதம்பரம், காஞ்சீபுரம், திருக்காளத்தி, திருப்பூவணமுதலிய தலங்களிலும் திருத்தொண்டபுரிந்து எழுந்தருளியிருந்த சிவநேசச் செல்வர்களென்றும் தெரிகின்றன; "எதிரின்றிய நாற்பத்தெண் ணாயிரரும்" (திருவானைக்காவுலா, கருகு); "எப்பற்றுந் தீர்நாற்பத் தெண்ணா யிரவரெனும், ஒப்பற்ற வேடத் தயர்க்தோரும்" (திருப்பூவணநாதருலா,

(பி - ம்.) [1]'பெருமாடருமா' [2]'மற்றுங்கடி யவர்' [3]'போற்றுகில்லோர்'

நலந்திகழ் சரியை யாதி நான்குமார்க் கத்தோர் கீற்று
லிலங்கிய நாற்பத் தெண்ணா யிரவர்தாள் போற்றி போற்றி. (உஉ)

ஆசிரியர்.

வாங்தருந் தொல்லைத் தில்லை மாளிகை மடத்து மன்னு
[1] மருந்தவ முனிவெண் காட னருள்விநா யகன்ம னத்தாற்
பரிந்தெனே யாண்டு கொண்ட படர்சடைக் கடவு ணீதி
திருந்திய பரம ஞான சிவனடி சென்னி சேர்ப்பாம். (உக)

அவையடக்கம்.

அளந்தபே ரறிவி னேங்கு மாசிலா சிரியர் முன்னர்த்
தளர்ந்தசிற் றறிவே னின்று தமிழ்க்கவி சாற்று மாறு
வளர்ந்தகீள் புவன மூற்றும் வந்தபே ரிருளை யோட்டி
விளங்கிய பருதி முன்னர் மின்மினி விளங்கல் போலும். (க)

அவைநடு வோங்குக் தெய்வ வகத்தியன் முன்னஞ் சொன்ன
கவிபொதி கதையை யானுக் தமிழ்செய்வே னென்கை காணிற்
புவிமிசை விசும்பி னீடும் பொருப்பிடை மூடவ னேறிச்
சுவைதரு தேனை யுண்ண வெண்ணுவான் றுணிதல் போலும். (உ)

வேறு.

ஏய [2]பத்தி முனிவ னியம்பிய
சேய [3]சாக்கன் றிருவிளை யாடலைக்
காய்ப சிக்குக் கடலைக் குடிக்குமோர்
நாயை யொக்குக் தமியே னவிழுதல். (ங)

ஓது பாலர் மழலை யுரையையுக்
தாதை தாயர் [3]தயாவுறக் கேட்டெனப்
பேதை யேன்புன் மொழிபெரு மான்புக
ழாத லானல் லறிஞர் வியப்பரே. (ச)

ஆகத்திருவிருத்தம் - ஙக.

கூ0) எண்பவற்றுலு முணர்க; இவர் நாற்பத்தெண்ணாயிர மாகேசனென்றும் கூறப்பெறுவர்.

உங. கடவுள் - முனிவன்.

அவையடக்கம்.

உ. தெய்வஅகத்தியன் - தெய்வமுனிவராகிய அகத்தியர்; "அமர முனிவ னகத்தியன்" (மணி: பதிகம், கக; உஉ: ஙநி.)

ங. முனிவன் - அகத்தியர். தமியேன் கவிலுதல் கடல்குடிக்கும் ஒரு நாயை யொக்குமென்க: "ஒருசுணங்கினை யொக்குக் தகைமையேன்" (பெரிய. அவை.) என்றார்.

(பி - ம்.) [1]'அருந்தமிழ்முனி' [2]'புத்திமுனிவர்' [3]'தயாவுறக்கண்டனம்'

*

[1]பதிகம்.

இந்திரன்வெம் பழிவிடப்பூ சித்த வாறு மிறைஞ்சயிரா வதசா பந் தீர்ந்த வாறு, மூந்துலகாண் மும்மூலையாள் பிறந்த வாறு மூடிசூடி மணந்துபா ராண்ட வாறும், வந்தபதஞ் சலிக்குடஞ் செய்த வாறும் வயப்பூதஞ் சொன்றிமிலே தொலைத்த வாறு, மூந்தியுறு பசிக்கன்னக் குழிகள் காட்டி யுதகத்துக் கியல்வைகை யழைத்த வாறும். (க)

உன்னருமேழ் கடலழைத்த வாறு மாமி யுடனுட மாமனைமண் ணழைத்த வாறு,மன்னுசடை யுக்கிரஞர் பிறந்த வாறும் [2]வனையொடு வேல் செண்டளித்து மறைந்த வாறுந், தென்னன்மா டக்கூட லான வாறுஞ் சீலமலி சித்தரா யுலாவு மாறு, [3]மூன்னோர்கல் லிபங்கரும்பு வாங்கு மாறு [4]மொழியறிசங் கப்பலகை கொடுத்த வாறும். (உ)

மறுவறுபொற் கிழியறுத்த வாறுங் கீரன் வருந்தாமல் வந்து கரை யேற்று மாறுங், குறுமுனிக்குத் [5]தமிழ்நோக்கா லுரைத்த வாறுங் கூறுபொரு ளுரை[6]யூம ணுணர்ந்த வாறுங், கறுவியிடைக் காடன்பின் போன வாறுங் கடல்சுவற வுக்கிரன்வே லெறிந்த வாறு, மெறிகடல்வாய் வலைவீசி மணந்த வாறு மியல்வணிக ணெய்வளையல் விற்ற வாறும். (ங)

க. பூதம்-குண்டோதரன். உக்தி-வயிறு. அன்னக்குழிகள் கான்கு: எ; ங.

உ. சடைஉக்கிரனர் - சடையையுடைய உக்கிரப்பெருவழுதியார்; கo: ங; "நெடுஞ்சடை யுக்கிரப் பயந்தருணிமலன்" (கல். எஅ.) செண்டு- ஒருவகை ஆயுதம்; இஃதுஐயனர் திருக்காத்திலுள்ளது; "செம்பொற்கிரிதிரித்தசெண்டு" (சிலப். நி: கடு-அ, மேற்.) "செண்டு கொண்டுகரி காலனெரு காலி லிமையச், சிமைய மால்வரை திரித்தருளி" (கலிங்க.இராச.க), "மால்வரையைப் பண்டொ ருகாற் செண்டாற் றிரித்தகோ விங்கிருந்தசேய்" (நள.சுயம். கங), "செண்டு தரித்தோன் றிருப்பவளத் தாரமுதம்" (வி. பாரதம், இராச. அo.) "செண் டா லவள்பைங் குழல்பற்றி" (ஷெ-சூது.உகக) என்பவற்றுளுணர்க; இதனைத் திருக்காத்திற் கொண்டிருத்தல்பற்றி இராசமன்னர்கோயிற் பெருமாளது திரு காமம் செண்டலங்காரனென வழங்குகின்றது. கல்லிபம் - கல்லானை. மொழி யறிசங்கப்பலகை; "பாவறிசங்கப்பலகை" என்பர் பின்னும்; கடு: உ.

ங. கீரன் - கக்கீரர். நோக்காலுரைத்தல் - பார்வையால் உபதேசித்தல்; "திருநோக்கா லுபதேசித்து", "பார்வையினு லுபதேசஞ் செய்தபின்னர்" கஅ: எ, கூ. ஐமன் - உருத்திரசன்மனர்.

(பி - ம்.) [1]'திருவிளையாடற்றொகை' [2]'வனைசெண்டு வேல்கொடுத்தமறை க்தவாறும்' [3]'முன்னர்க்கல்லிபங்' [4]'மொழிந்தறிசங்கப்பலகை' [5]'தமிழ்வர்க்க முரைத்த' [5]'ஐமனுரைத்த'

திருக்கடையை விடைக்குறியிட் டடைத்த வாறுஞ் செட்டி யாய் மாணிக்கம் விற்ற வாறும், [1]வருத்தவரும் வாரணத்தை யெய்த வாறும் வாதவூ ரர்க்குபதே சித்த வாறுங், கரக்குமின ரியைமா வாக்கு மாறுங் காவலுறு பரியைநரி யாக்கு மாறும், விருப்பினடி [2]யுண்டியர்மண் சுமந்த வாறும் விருத்தனிளை யோன்பால ஞன வாறும்.

தார்வேந்தன் றெழுமாறி யாடி மாறுஞ் [3]சார்ந்தபடி பழியஞ்சி யாய்ந்த வாறுந், தீராவன் பாதகங்க டீர்த்த வாறுந் திறலுடையோ ணுடனங்கம் வெட்டி மாறுங், காராரு [4]நாகமலை செய்து விட்ட கடி மதுரை மாக்கிநகர் மதுரையாக்கிப், போரேற்றைப் பசுவைமலை செய்த வாறும் [5]பூழியனு ருடல்வெப்பந் தீர்த்த வாறும். (நி)

பாலகனுல் வலியசமண் குண்டர் மாளப் பாண்டியன்மு னீண்ட கழு வேற்று மாறுஞ், சீலமுறு படைமெய்க்காட் டிட்ட வாறுஞ் சேர்ந்துலவாக் கிழிவேந்தற் கீந்த வாறு, மேல்வணிகன் மாமனுய் வந்த வாறும் வியந்தட்ட மாசித்தி பகர்ந்த வாறுஞ், சாலுறுதண் ணீர்ப் பந்தர் சமர்க்க ளத்துத் தற்பணிந்த கொற்றவற்கு வைத்த வாறும். (ந)

மின்னணியோ [6]ரம்பூண விந்திரன்றன் மேன்முடிமேல் வளைசா ட மிக்க மேக,மன்னவரைப் பிடித்துவிலங் கிடச்சிறைந்த மாறனுக்கே சார்வாகி நின்ற வாறும், பொன்னனையா டனக்கருளு மாறுஞ் சோழன் பொன்றக்கொண் டாழிக்கட் டாழ்த்த வாறு, மன்னுநகர் திருநடுவூர் திருமூ டங்கல் வாலவா யாலவா யான வாறும். (எ)

வரகுணற்குப் பிரமகத்தி யொழித்து மண்மேல் வரவழைத்துச் சிவலோகங் காட்டு மாறும், பொருபடையுள் விடைக்குறியம் பெய்த வாறும் புக்கிலுல வாக்கோட்டை வைத்த வாறு, மரசுரிமை மூர்த்திக்கு

சு. விடைக்குறி - ரிஷபமுத்திரை. வாரணம் - யானை.

நி. நாகம் மலைசெய்து-பாம்பை மலையாகச்செய்து; நகர: கசு. கடி-விடம்.

சு. பாலகன் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர். மேல் - அதன்பின். சால் - பாண்டவிசேடம்; மிகுதியுமாம். தற்பணித்த - தன்னைப்பணித்த.

எ. மேகமன்னவர்கால்வர்: கஉ: ச; சச: நகூ, நகூ. கொண்டாழி - மதுரையின் மேற்கேயுள்ளதோர் ஓடை; கொண்டு ஆழ்த்தியதென்பது பொருள்; சசு: உநி, உஎ; "மண்டிருவேட்டுப் பஞ்சவற் பொருத, கிள்ளியுங் கிளையுங் கிளர்படை தான்குந், திண்மையுஞ் செருக்குந் தேற்றமும் பொன்றிட, வெரிவா யுரக நிருணுட் நெருவக், குலிக்கொண் டாழி குறியுடன் படைத்து, மறியப்புதைத்த மதங்கெழு பெருமான்" (கல். அகூ.) நகர்-மதுரை; எழுவாய். திருநடுவூர்: சஎ: கூ. திருமூடங்கல்: நெ. கச. வாலவாய், ஆலவாய்: நெ. நக.

அ. புக்கில் - வீடு. மூர்த்தி-மூர்த்திநாயனுர். புலவர் - காரியார், நாரியார். பகுத்துகொள்ளல் - பங்கிட்டுக்கொள்ளல்; கூo: கூo; நிஉ: கஉ. புல்வாய்-மான்; "புல்வாய் புலியின் முகியுண்ணும்" (திருநாட்டுச். கூ.) இவ்வருமைச்

(பி - ம்.) 1'வருத்திவரும்' 2'உண்டுமண்' 3'சார்ந்தபழியஞ்சியாய்வந்த' 4'நாகமலியெய்து', 'நாகமலியேவி' 5'பூழியன்றன்' 6'ஆரம்பூண விந்திரன்றன் வின்முடி'

கல்கு மாறு மரும்புலவர் பாப்பகுத்து கொண்ட வாறும், வெருவுபுலி முலைபுல்வாய்க் கீந்த வாறும் விறகாளாய்ச் சாதாரி பாடி மாறும். (அ)

பரிந்துதிரு முகஞ்சேரற் கீந்த வாறும் பாணனுர்க் குயர்பலகை யிட்ட வாறுங், [1]கரந்திருந்தே யிசைவாது வென்ற வாறுங் [2]கருணை யுற்றுப் பன்றித்தா யான வாறுங், [3]திருந்துமரிக் குருளைகளீ ராறு மோங்கத் திறலுடைய வன்னியர்க ளாக்கு மாறும், பொருந்துவலி [4]கரிக்குருவிக் கீந்த வாறும் பொன்வரையிற் கயல்செண்டு பொறித்த வாறும். (கூ)

சிவனெடுவன் னியுங்கிணறும் [5]வணிகன் மூல்லைத் தேவிக்குச் சான்றழைத்துக் காட்டி மாறு, [6]கவமுறமீ னயிலாம லேத்தும் பத்தி நாரைக்குச் சிவலோகங் கொடித்த வாறுங், [7]தவமுறுகண் ணுவன்முதலா முனிவர் வேண்டச் சார்ந்தகலி யுகத்திறந்த வேத முற்று, முவகையுற வரு [8]கிருத யுகத்தா திக்க ணுணர்த்தியவா றுஞ் சிறியே னுரைக்க லுற்றேன். (கo)

பதிகமுத னினைப்புச்செய்யுள். வேறு.

இந்திர னுன்ன ரும்பி னியைமறு திருதார் பால
வந்தமின் னணியா ரம்பூ வரபரி சிவனெ டென்றே
சுந்தரன் விளையா டற்குச் சொல்லிய தமிழ்ப்பொ ழிப்பா
மூந்திய கவிபத் திற்கு முதனினைப் புணர்த்தி னேனுல். (கக)

ஆகத்திருவிருத்தம் - சுஉ.

சரிதம், "புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி" (திருவா. போற்றி.) என்பதனுலும், "தழல்விழிப் பேழ்வாய்த் தாக்கின் றுளிமுலை, பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட, வருணிறை பெருமான்" (கல். சஉ) என்பதனுலும், "பொன்னெயிற் கடம்ப வனத்தபுல் வாய்க்குப் புலிமுலை யளித்தபுண் ணியம்போல்" (திருக்காளத்தி. பாத்து. நுகூ) என்பதனுலும்பாராட்டப்பெற்றிருத்தல்காண்க.

கூ. சேரன் - சேரமான் பெருமாள் நாயனுர். பாணனுர் - பாணபத்திரர். பன்றித்தாய் - பன்றிக்குட்டிகளுக்குத் தாய். வன்னியர்கள் - சேனைத்தலைவர்கள்; மந்திரிகள்; சித்தறசர்களென்னும் பொருளிலும் வழங்கும் (ஞான. அயிந்தி. எ); "கருமுகிற் கனிறைத் தழற்கட் பிறையெயிற், றரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச், செங்கோன் முளையிட் டருணீர் தெளித்து, கொலை களவென்னும் படர்களை கட்டுத், தீப்பட ராணை வேலி கோலித், தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கு, நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்" (கல். சo.) பொறித்தல்-எழுதுதல்; "கயலொடு செண்டுக் தீட்டி" என்பர்பின்னும்; சுக: கள.

கo. முல்லை-கற்பு; "தானுடை முல்லை யெல்லாந் தாதுகப் பறித்திட் டானே" (சீவக. சுஅசு.)

கக. பொழிப்பெனினும் பதிகமெனினுமொக்கும்.

(பி - மி.) 1'கரந்திருந்தேழிசை' 2'கருணையுறுபன்றித்' 3'திருந்தேனக்குருளை' 4'கருக்குருவிக்கு' 5'வணிகர்முல்லை' 6'கவமுறுமீன்' 7'தவமுதல்' 8'கிரேதாயுகத்தாதிக்கணுயர்த்திய'

நூல் வரலாறு.

கருத்தினே முடிக்குங் கங்கைத் துறை[1]மணி கன்னி கைக்கண்
மருத்திகழ் மலர்த்த டஞ்சூழ் வளமைசேர் வார ணுசிப்
புரத்தம ரகில நாதன் புண்ணிய மூர்த்தி யென்றன்
சிரத்தினிற் கரம்வைத் தாண்ட சேவகன் றிருமுன் முன்னம். (க)

மேதகு சமதக் கீயன் பராசரன் விசுவா மித்ரன்
சாதுரா ரதன்றூர் வாசன் சனகாதி பிருகு வத்ரி
கோதமன் பரத்து வாசன் கோசிகன் காசி பன்கோ
மூதுரை வசிட்டன் முன்னு முனிவர்யா வருந்தி ரண்டார். (உ)

பூமிதெற் குயரா வண்ணம் பொதியிலி லிருக்க வல்லான்
பாமுழு துணர்ந்தோ னேழு பரவையைக் குறிய கையா
[2]லோமுறை யிருக்கா லள்ளி யொருக்காலா சமித்தோ னங்க
ணுமதி வல்லோன் றெல்லை யகத்திய னென்பான் வந்தான். (ங)

ஆங்கவன் றன்னேமிக்க வருந்தவ முனிவர் யாரு
மோங்குமா சனத்தி ருத்தி யுயருப சார நல்கித்
தேங்கமழ் தாமஞ் சூட்டிச் சிறந்தபூ சனைகள் செய்து
தாங்கரு மூவகை யோடுங் துதி செய்து தாழ்ந்து சொல்வார். (ச)

க. மணி கன்னிகை - கங்காநதியிலுள்ள கட்டங்களுள் ஒன்று; இது மணிகன்றிகை யெனவும் வழங்கும் (கந்த. மார்க்கண்டே. உசு0, பார்க்க.) வார ணுசிப்புரம் - காசி; காரணப்பெயர். அகிலநாதன் - விசுவநாதர். ஆசிரியரைச் சிவமாகப்பாவிக்க வேண்டுவது மரபாதலின், 'என்றன் சிரத்தினிற் கரம்வைத் தாண்ட சேவகன்' என்றார். முன்னம் - முற்காலத்தில்.

உ. சனகாதி - சனகர்முதலியோர். கோ - தலைமை.

ங. ஒருக்கால் - ஒருமுறை; "படுவழி நினக்கொ ருக்காற் பலித்தது கொண்டு" (ருஅ: கஉ); சிதம்பரபுராணம். தன்மத. கஎ, பார்க்க.

உ - ங. 'முனிவர் யாவரும் திரண்டார்' எனவே அகத்தியருடைய வரவும் அடங்குமாயினும் தலைமைதோன்ற வேறுகூறினர்; இங்ஙனங்கூறுதல் மரபு; 'முனிவர் வந்தார் அகத்தியனும் வந்தான்' (தொல். பா. விரு.) என்பதனையு மூணர்க.

(பி - ம்) [1] 'மணிக்கன்னிகை' [2] 'ஓமுற'

[1] முன்புயிர்த் துன்பந் தீர முதல்வனே மலயக் குன்றி
லன்புற விருத்தி ஞாளு மருச்சனே புரியப் பெற்றாய்
தென்புவி விசேட நின்போற் [2]றெரிதர வல்லா ரில்லே
[3]நன்புற வறிவா யாங்க ணவில்வதொன் றுண்டு கேண்மோ. (நு)

நலந்தருங் கங்கை முன்ஞ நதிகளின் கரைக்கண் ணிக்க
பலந்தரும் [4]பெரியதான வைபவம் பலவுஞ் சொற்றாய்
வலந்தருந் தென்ன னூட்டு வைகைமா நதியின் பாங்கர்த்
[5] தலந்தரும் புகழ்வி ளக்கந் தரு[6]சிவ தலங்க டம்மூள். (சு)

சுந்தர மாக வாங்குச் சொல்லுமொண் டானத் தின்க
ணந்தமில் புகழான் மிக்க வருள்வடி விறைவன் செய்த
[7]சிந்தைகூ ரவதா னத்தின் றிறங்களைப் பிறங்க வின்று
[8] முந்தைமா மலய மன்னு முனிவனீ நவிறி யென்ன. (எ)

வேறு.

ஆங்கினிய மந்திரத்துக் காருயிராம் பிரண வம்போ
லோங்கவனி மாமடந்தைக் குயிரதுதென் னவனூடு
வாங்கருஞ்[9]சீ ரங்நாட்டு வளஞ் சிறிது கேண்மின்கள்
பாங்குடையீர் வினவியவா றழகிதென [10]முனிபகர்வான். (அ)

ஆகத்திருவிருத்தம் - நிo.

நி. முதல்வன் - சிவபெருமான். மலயக்குன்று - பொதியில்மலை; இது வைப்புத்தலங்களுள் ஒன்று; "கயிலையும் பொதியிலு மிடமென வுடையார்", "பொதியிலானே பூவணத்தாய்" (தே.) நன்பு-நன்மை; கசு: கூ; கஎ: க; "நன்புறு கல்லூர்ப் பெருமணம்" (தே.); "நன்புருகி ஞானச் சுடர்விளக் கேற்றி னேன்" (தீவ்.)

சு. தானவைபவம் - தலவிசேடம்; தானம் - ஸ்தானம். வைகை - வேக வதி யென்பதன் மரூஉ; வையை யெனவும் வழங்கும்.

எ. சுந்தரமாக ஆங்குச் சொல்லும் ஒண்தானம் - ஸுந்தரகேஷத்திரம். அவதானம்=அபதானம் - திருவிளையாடல்; வடமொழி; "சுந்தர னவதா னங்கள்" என்பர்பின்னும்; கூo: நிசு.

(பி - மி.) 1 'முன்புவித்துயரம்' 2 'தெரிதரவறிவாரில்லே' 3 'நன்குற' 4'பெரியதானம்' 5'தலம்புகழ்தரவிளக்கம்' 6 'சிவன் றலங்கள்' 7 'சிந்தைகூர்தரு தானத்தின்', 'சிந்தைகூரபதானத்தின்' 8 'முந்திமா' 9 'சீர்கன்னுட்டுவளஞ்' 10 'முனிபகர்ந்தான்'

திருநாட்டுச்சிறப்பு.

ஒருவிளை யாட்டி. னுண்மை யொருவரா லுணரா ளுலும்
பெருவிளை யாட்டைங் தாடும் பிஞ்ஞகன் மதுரை மன்ன
னருள்விளை யாட்டி னுலைங்கி யமையறு பத்து நான்கு
திருவிளை யாட்டு நாட்டைச் செப்புவ லொப்பக் கேண்மின். (க)

வே று.

அடிக்குரிய தமிழ்த்தொடைக ளலர்க்குரிய கடிப்பொழில்க
ணடிக்குறுவ துகிற்கொடிக ணஞ்சுறுவ வஞ்சியர்கண்
குடிப்பமது மதகரங்கள் கோடுவன நீடுசிலை
வடிப்படுவ வுடிப்படுமா வளைப்புறுவ நதிப்புதுநீர். (உ)

வே று.

முருகன் சங்கத் திருப்பவனம் முக்கட் கடவு ணிற்பவன்வா
ளரசன் புயலை விலங்கிட்டோ னனலும் புனலு மியலறியும்
புரமூ மதுர மானபுரம் புல்வாய் புலியின் மூலையுண்ணு
நரியும் பரியா நதியிதழி மணக்குங் கன்னி நன்னாடு. (ங)

க. மதுரைமன்னன் - சோமசுந்தரக்கடவுள்; ச: ருை; சு: எ. விளையாட்டு ஐந்து - படைப்பு முதலிய ஐந்தொழில்கள். திருவிளையாட்டுநாட்டை - பாண்டி நாட்டின்வளத்தை ஒப்பச்செப்புவல்.

உ. அடி - அடிபடுதல், பாதம். அலர் - பழிமொழி, பூ. நடுக்கு - அஞ்சி நடுங்குதல், அசைதல். நஞ்சுறுவ - கைக்குறுவன, விடம்போல்வன. மது - கள், தேன். கோடுவன - நல்வழிதப்பிச்செல்வன, வளைவன. வடு - குற்றம், மா வடு. உடு - நக்ஷத்திரம். வளைப்புறுவ - தடுக்கப்படுவன, சூழ்வன. அடி முத லியவற்றை இந்த நாட்டுமனிதர்களினின்றும் நீக்கித்தமிழ்ச்செய்யுட்கள் முத லியவற்றிற் காட்டலால், இச்செய்யுள் ஒழித்துக்காட்டணி.

ங. முருகனென்றது உருத்திரசன்மரை. நம் முக்கட்கடவுள்; அவர் நின்றமை, "மூவர்கட் கரியா னிற்ப மூத்தமிழ்ச் சங்கத் தெய்வப், பாவலர் வீற் றிருக்கும் பாண்டிநன் ஞாடு"(கடவுள். அ) என்பதனாலும் அறியலாகும். வாள ரசன் - உக்கிரகுலத்திற்பிறந்த பாண்டியன். நெருப்பும் நீரும் தமிழின் இயல றியுமென்பதை, "யாரறிவார் தமிழருமை யென்னின் றேனென் னறிவீன மன்றேவுன் மதுரை மூதூர், நீரறியு நெருப்பறியும்" (மதுரைப்பதிற். சருை) என்பதனாலுமுணர்க; தேவாரம்வரைந்த ஏடுகள் முறையே நெருப்பில் வேவாத தும் வையைநதியில் எதிர்த்தேறியதும் இங்கே அறியற்பாலன. புரமும் மதுர மானபுரம்: ஙசு: கரு. மான் புலியின் மூலைப்பாலுண்ணுமென்றதை ருங-ஆம் திருவிளையாடலாலும், இந்நூற்பதிகம் அ - ஆம்பாடலின் குறிப்புரையாலு முணர்க. வையை, கங்கையாதலின், 'நதியிதழிமணக்கும்' என்றார்.

வேறு.

நலமுறு மொழிசேர் நல்ல பெருங்கிளை யென்று நாடித்
தலமிசை யுயர்கு லத்துச் சார்ந்துகண் காண மிக்க
குலவரை யிடத்துத் தோன்றிக் குவலய முழுதும் பெற்ற
நிலவிய மரக தஞ்சேர் நித்திலம் [1]பிறந்த நாடு. (ச)

தாரணி மவுலிக் கொற்றத் தசரதன் மகனுர் வந்து
கூருகி ரெண்கு மூன்னுக் குரக்கின வெள்ளங் கொண்டு
வாரிநீள் குலேப்ப டுத்தி வலியவா ளரக்கற் காய்ந்து
காரண வாளை [2]யேத்தி யரும்பழி கழுவு நாடு. (நு)

பரிபடுங் துறைநெ ருங்குங் குடிபடும் பதிமென் றென்றல்
வரைபடுங் கரும்பு சாலி வயல்படு மணியும் பொன்னுங்
தரைபடுந் துங்கச் சங்கந் தமிழ்படுஞ் சார்ந்த செங்கட்
கரிபடுங் காடு வங்கக் கடல்படும் பவள முத்தம். (சு)

வேறு.

நாளும் புதுநீர்த் தமிழ்நதிப்பா னரந்த மஞ்ச ணெருங்கிஞ்சி
நீளுங் கருணை [3]தாண்முரியக் கதலி புதைய நெடுங்கமுகின்
பாளை பலவின் கனிதெங்கம் பழம்போய்ச் [4]சாடி வீழ்த்திளைய
வாளை யாளை விழப்பாயும் [5]வளைவெண் டரள வயலெங்கும். (எ)

வேறு.

நஞ்சளையஞ் சனச்செங்கட் கருங்குழல்வெண் ணகைமடவார்
பஞ்சளையுஞ் சிறடியிற் பண்ணளநூ புரமேங்க
நெஞ்சளைபொற் பந்தளைகைச் சங்களகம் பலிலீடு
மஞ்சளையிஞ் சியையளையும் வண்டலை [6]தண் டலையெங்கும். (அ)

ச. மொழி - சொல், கணு; "மொழியுமினியீர்" (அழகர்கலம்பகம், சுஎ.) கிளை - குலம், மூங்கில்; "பிறந்தே னல்ல கிளையிலே யெனம றைந்தான்" (உசுகக) கண்காணம்-மேல்விசாரிப்பு; "கண்காணியினெடுத்து" என்பர்பின்; உஎ: உ0. குலவரை - இமயம். மரகதம் - உமாதேவியார். நித்திலம் - சிவபெருமான். நாடிப் பிறந்தவன்க. 'மரகதஞ்சேர்' என்றது, நித்திலத்திற்கு அடை; திருநெல்வேலியில் இறைவன் மூங்கிலடியில் முளைத்ததுபற்றி அவர் திருநாமம் வேய்முத்தெனவழங்கும். இச்செய்யுள் சிலேடையணி.

நு. குரங்கு இனம். குலை - கரை; சேது. வாள் - சக்திரவாள். அரக்கன் - இராவணன். காரணவாளை - சிவபெருமானை; ச: உ0.

சு. துறை - கடற்றுறைகள். நெருங்குங்குடிபடும்பதி: "அயலிடைவேறடி நெருங்கக் குடிநெருங்கி யுளதவ்வூர்" (பெரிய. திருநாளைப். நு.) கடல்படும் பவளமுத்தம்: சு.

எ. தமிழ்நதி - வையைநதி; "தமிழ்வையைத் தண்ணம்புனல்" (பரி. சு: சுo); "தமிழறிந்தவை நிகமுடன் சைவமு நிறுத்தும், அமிழ்த வெண்டிரை வையை" (திருவிளை. நகரப். கள.) சரத்தம் - சரத்தப்புல். வளை - சங்கம்.

அ. பஞ்சு - செம்பஞ்சு. சங்கு - வளையல். வண்டு அலைகின்றன.

(பி - ம்.) 1 'பெற்ற' 2 'ஏத்தவரும்' 3 'தாண்முரித்து', 'தாண்முரிந்து' 4 'சாடிவீழ்த்து' 5 'வளைவண்டானவயல்' 6 'தண்டலையளையும்'

வே று.

அன்னந் திகழும் வயற்களத்து மலைநீர்ப் பொருகே தகிமுகத்தும்
பொன்னஞ் சங்கந் துகிர்முத்தம் படிவ தல்லாற் பொலிவோங்க
மின்னு நுசுப்புப் பாரவட மேரு மூலமங் கையர்களத்துந்
தன்னுங் கிரண மதிமுகத்தும் படுமொண் சங்கந் துகிர்முத்தம்.(கூ)

வே று.

ஏந்துதண் செழுநீர் வாவி யெழுந்தசெங் கழுநீர் விண்டு
[1]வார்ந்தகண் ணீராற் சேறு படும்பழ னங்கண் மாதர்
[2]சேந்தகுங் குமத்தின் விட்ட தெளிதரு பனிநீர் வெள்ளம்
பாய்ந்த[3]சந் தனத்தாற் சேறு படுந்தன மலைத்த டங்கள். (கo)

மொழிதருங் குயில்கள் சாய றருமட மயில்கண் மொய்க்கும்
பொழிறருங் கரைக்கண் டெண்ணீர்ப் பொய்கையுண் மாலைப் போது
முழுகுவான் செல்லு மாதர் முகத்தையுந் தனத்தை யுங்கண்
டழகுதோய் பதும நாணி யலர்வுரு குவிவு ரூவால். (கக)

வே று.

கானெருங்கும் வரை[4]வளங்க டருமென்றுங் கடிக்குறிஞ்சி
யானெருங்கு மினியவளந் தருமென்று மணிமுல்லை
வானெருங்கும் பொழில்வளங்க டருமென்றும் வயன்மருத
மீனெருங்குங் கடல்வளங்க டருமென்றும் வியனெய்தல். (கஉ)

அடுகுறவர் திறம்பெருகு மலர்குறிஞ்சி யாஞயர்
குடிநெருங்கும் படர்முல்லை கொழுமள்ளர் குழுத்துவன்றுங்
கடிமருதம் விளையளவர் கணநிறையுங் கழிநெய்தல்
படைமறவர் [5]நிரம்புநெறி பரன்முரம்பு தரும்பாலை. (கங)

வே று.

பண்டைநான் மறைக்கு மெட்டாப் பராபரன் மனிதர் போல
மண்டலத் திழிந்து வேந்தர் வல்லியை [6]மணந்து கோலி
னெண்டரும் புவன மூன்று மிருந்தர சாளக் கண்டீர்
தண்டமிழ்ப் பாண்டி நாட்டின் றகவுண்டோ மற்றோர் நாடு. (கச)

ஆகத்திருவிருத்தம் - சுசு.

கூ. அன்னம் - அன்னப்பறவை. பொருகேதகி முகம் - கொற்கைத்துறை. பொன் - அழகு. களத்துச் சங்கமும் முகத்துத் துகிர்முத்தமும் படுமென இயைக்க; களம் - கழுத்து.

கo. கண்ணீர் - கள் நீர். [மாதர்.

கக. பொழில் தரும் - பொழிலெவளரச்செய்கின்ற. கரைக்கண் செல்லு

கங. ஆன் ஆயர். வீளை அளவர் - முத்து விளைகின்ற அளத்தையுடையவர். பரல் முரம்பு - பருக்கைக்கல்லாலாகிய மேடு.

கச. வேந்தர்வல்லி - தடாதகைப்பிராட்டியார். ஆள - ஆளுதலால்.

(பி - ம்.) 1 'வாய்த்தகண்ணீராற்' 2 'சேர்த்த' 3 'சந்தனத்தண்சேறு' 4 'வளங்க டருவதென்றும்' 5 'நிரம்புநெறிப்பரன்' 6 'மணந்தகாணவெண்'

திருநகரச்சிறப்பு.

மலரு மித்திரு நாட்டியல் வாணர்சொற் கோலா
1லுலக னேத்தையு நிறுப்பமுன் வாடிடா தோங்கு
மலகில் வண்புக ழுடையது மதுரையாங் கதனே
யிலக யான்சிறி தறிந்தவா றியம்புவல் கேண்மின். (க)

ஊர்தொ றும்பெருங் கம்பலே 2யோங்கசீர் பரந்து
பார மீனுடி மீன்விழப் பாய்தரப் போதா
வாரம் வேங்கைகோங் ககிலெடித் தினமணி கொழித்து
வாரி யெற்றிமுன் 3மதிட்படை பொருவது வைகை. (உ)

வேறு.

புகறற் கரிய வேதத்தின் பொருள்கட் கெல்லாம் பயனுய
4பகர்தற் கினிய வெந்தைபிரான் பஞ்சாக் கரம்போற் றனேயொவ்வா
மகரத் தமரப் பெருங்கடல்சூழ் வையத் தைந்து நிலத்தோங்கு
நகர்கட் கெல்லாம் பயனுய நகர்பஞ் சவன்றன் மதுரைநகர். (ஊ)

நீள வளர்பொற் கோபுரம்வா னிலவும் வெள்ளி யொளிமன்ற
நாளு மமரர் வாழ்மூயர் மேரு வரையை நலத்தோங்குங்
காள நிலவு 5மணிகண்டன் கயிலே மலேயை நிகர்ப்பதலால்
வாள நிரையைப் புறக்கடலே நிகர்க்கு மெயிலும் வானிடங்கும். (எ)

க. நாட்டு - நாட்டில். இயல்வாணர் - புலவர். வாடிடாது-குறையாமல்; "வாடாதவென்றி" (சீவக.பதி.உ.) நிறுத்ததை, "கைத்தல நான்கு" (திருவிளை. தலவி. உ0) என்பதனுலுமுணர்க. "உலக மொருநிறையாத் தானேர்நிறையாப், புலவர் புலக்கோலாற் றூக்க-உலகனேத்தும், தான்வாட வாடாத் தகைமைத்தே தென்னவ, னுன்மாடக் கூட னகர்" (பரி. பக். 174) என்பதன் பொருளே இச் செய்யுள் தழுவிவந்தது.

உ. பரந்து - பரக்கப்பெற்று. உடுமீன் - நக்ஷத்திரம். பாரமீன்பாய்தர. போதா - போய். படை - சுவரும் மதிலும் சமைக்கப்படும்பொழுது அடியிலி ருந்துமுறையாக இயற்றப்பெறும் ஒவ்வொருபகுதியின்பெயர்;"பல்படைப் புரிசை" (புறநா. 224); "படையார் புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே" (தே.),"வையைதன் னீர்முற்றி மதில்பொருஉம் பகையல்லா னோராதார், போர் முற்றென் றறியாத புரிசைசூழ் புனலூரன்" (கலி. சுவ) என்பதனுலும் மது ரைமதில் வையையாற் பொரப்படுதல் உணரற்பாலது.

ஊ. ஒவ்வா - ஒத்து. ஐந்துநிலம் - குறிஞ்சிமுதலியன. ஐந்துநிலத்தையு முடைய நாட்டிற்குத் தலைவனென்னும் பொருளதாகிய 'பஞ்சவன்' என்பதை இங்கேகூறியது ஆராய்தற்பாலது.

எ. வெள்ளி ஒளி மன்றம்-வெள்ளியம்பலம்; "கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில் வெள்ளியம்பலம்" (சிலப். பதி. சo - சக.)

(பி - ம்.) 1 'உலகனேத்தினுநிறுப்ப' 2 'ஓங்குநீர்' 3 'மதிற்படை' 4 'பகர்தற்கரிய' 5 'மணிக்கண்டன்'

சேமப் படுபொன் னகரென்னத் தெருவின் மடவார் விளையாடு
மேமச் சுண்ண நுண்டுகளா லிலங்கு நலங்கொ ணிலமெங்குந்
தாமப் புயிலை மாறுபடத் [1]தருமச் சுருதிப் பெருவேள்வி
யோமப் புகையு மகிற்புகையு மொழியா[2]வகல்வா னுழையெங்கும்.(நி)

சுருதி யோசை முழுவோசை சுகங்கள் பூவைக் கரும்பொருள்க
ளுரைசெ யோசை யியலிசைநீ டோசை யுழவ ருழுவோசை
பொருவி லாலை பாயோசை பொழில்வா யலர்பாய் ஞிமிறோசை
வரிசை மாதர் சிலம்போசை வளநீ ரோசை தனின்மிகுமால். (சு)

வேறு.

தோரணவா யில்கள்விளங்குந் தொழுமன்ன ரிடுதிறைக
டோரணவீ திகள்விளங்குந் திருமலிபல் விழாவளங்கள்
பூரணமா விகைவிளங்கும் பொலன்கொடிதோய் மணிக்குடங்க
டோரணியோ தவைவிளங்குந் தருமநெறி தருமநெறி. (எ)

ஊர்மடக்கு. கடம்பவனம்.

வாவிமருப் பங்கயமா மறுகுமருப் பங்கய மாந்
[3]தாவிவருங் கொண்டலையுந் தண்டலையுங் கொண்டலையும்
பூவையர்பொற் படமலையும் புணரிளைஞர் படமலையும்
பாவறிமாக் கடம்பவனம் படிபுகழ்மாக் கடம்பவனம். (அ)

கூடல். வேறு.

வயங்கொள்வார் சாலிச் சூடும் வளர்ந்துபோய் வானைச் சூடு
மியைந்த[4]மீ னுகத் தென்று மிலங்குமீ னுகத் தென்றும்

நி. ஏமச்சுண்ணம் - பொற்பொடி. சுண்ணமாகியதுகள். தாமம்-ஒழுங்கு. பொற்பொடியால், நிலமெங்கும் பொன்னகரென்ன இலங்கும்; வானிடமெங்கும் புகைகள் ஒழியா.

சு. அரும்பொருள்கள் - அரியதூற்பொருள்கள். வரிசை மாதர் - விறலியர் (பதிற். கஅ-உரை.) வளநீர் - கடல்.

எ. பொலன்கொடி - திருமகள்; பொற்கொடியுமாம். தருமநெறியானது தரும அந்நெறியை; உலகினுக்கென ஒருசொல் வருவிக்க.

அ. வாவி மரு பங்கயம் ஆம்-தடாகங்களில் மணத்தையுடைய தாமரைகள் உளவாகாநிற்கும்; மறுகு மருப்பு அம்கயம் ஆம் - வீதிகளில் தந்தங்களையுடைய அழகிய யானைகள் உலாவாநிற்கும். கொண்டலை - மேகத்தை. தண்டலை - சோலை. கொண்டு அலையும். பொற்படத்தையுடைய மலை - கொங்கை; எழுவாய். பட மலையும் - படும்படி பொராநிற்கும். பாவறி மாக்கள் தம் பவனம் - பாக்களை அறிகின்றபுலவர்களுடைய வீடாகவுள்ளது. உம்மைகள்: அசைநிலைப்பொருளன; வரும் செய்யுட்களிலுள்ளவற்றையும் இப்படியேகொள்க.

கூ. சாலிச்சூடு - நெல்லரி; "சூடுகோடாகப் பிறக்கி" (பொருந. உசகூ); "பீலிகழனியுழவர் சூட்டொடு தொகுக்கும்" (புறநா. கஙூ.) வான் - மேகம். மீனாகத்து என்றும் - மேலிடமாகிய ஆகாயத்திலுள்ள சூரியனும்; மீன் ஆக

(பி - ம்.) 1 'தகுமச்சுருதி' 2 'அகல்வானுலகெங்கும்' 3 'தாவிலருங்' 4 'மீனுகத்தென்றும்'

பயற்கொளா காயச் செல்லும் பரந்துகா வேறச் செல்லும்
வியந்தநான் மேகக் கூடல் விளங்குநான் மாடக் கூடல். (கூ)

மதுரை. வேறு.

தும்பைமலர்த் தொடைமுடிக்குஞ் சூரன்[1]வினைப் பகைமுடிக்கும்
வம்பலர்மட் டளையவிழும் [2]வண்டிறவுட் டளையவிழு
மம்புனற்கே கயமாடி மணிபொழிற்கே கயமாடி
[3]மெம்பெருமக் கடமதுரை யிலங்குமலர்க் கடமதுரை. (கo)

ஆலவாய். வேறு.

பாக மங்கய லேக்கியார் [4]பரிவு மங்கய லேக்கியார்
மோக நந்துற வன்பினன் முனிவர் நந்துற வன்பினன்
மாக மொன்றிய வாய்மையால் வந்தி லங்கிய வாய்மையா
லாக மம்பக ராலவா யமுத மன்றிரு வாலவாய். (கக)

த்து என்றும் இலங்கும் - ஈகூஷத்திரங்களிலுடைய உருவத்தைப்போலவே எக்காலத்திலும் தோன்ற நிற்கும்; இங்ஙகரத்தின் ஒளிமிகுதிகூறியபடி. செல்- மேகம்; எழுவாய். காஏற செல்லும் - சோலையில் ஏறுதற்குப் போகாநிற்கும். நான்குமேகங்களின் கூடுதல் விளங்கப்பெற்ற நான்கு மாடங்களையுடைய கூட னகரத்தில்; "மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்" (மதுரை. சூஉ.)

கo. சூரன்: சாதியொருமை; வினை பகை முடிக்கும்-போரையுடைய பகை யைத் தொலைப்பான். வம்பு - புதுமை; மணமுமாம். மட்டு - தேன். தளை - கட்டு; மட்டை அளைதற்கு விழும்வண்டுகள் உள்ளேயுற மலர்கள் தளையவிழும். புனற்கு கயம் ஆடும் - நீரிற்கண் யானைகள் முழுகி விளையாடாநிற்கும். கே கயம் - மயில். எம் பெருமக்கள் தமது - எம்முடைய பெரியோர்களது; உரை இலங்கும் மலர் கடம் மதுரை - உரைகள் விளங்குதற்கு இடமாகிய பூக்களை புடைய சோலைகள் சூழ்ந்தமதுரையில். பெருமக்கள் - சங்கப்புலவர்கள்; ககo: அ, கூ. உரை - செய்யுட்களுமாம்; ஆகுபெயர்.

கக. அயல் நோக்கி ஆர் மோகம் நந்துற - புறத்தேயுள்ள விடயங்களை நோக்குதலால் நிறைக்கப்பட்ட ஆசையானது கெட, அன்பின் நால் முனிவர் நந் துற - அன்பினையுடைய நான்கு முனிவர்கள் பெருக்கமுற, வன்பினல் - வன்பி னெடு, மாகம் ஒன்றிய ஆய்மையால்-பெருமைபொருந்திய நுண்ணிய பொருள் களாலும், வாய்மையால்- உண்மைப்பொருள்களாலும், இலங்கிய—, ஆகமம்- ஆகம நூற்பொருள்களை, வந்து பகர் - வந்து உபதேசித்த, ஆலம் வாய் அமு தம் மன்- வடவாலமரத்தின்கீழே எழுந்தருளிய சிவபெருமானது, திரு - செல் வம், ஆலவாய் - ஆலவாயென்னும் திருப்படைவீட்டை; பாகம் அம் கயல் நோக்கி யார்- அவருடைய பாகத்திலுள்ள அங்கயற்கண்ணம்மையினது, பரிவும் அங்கு- விருப்பமும் அத்தலத்தேதான். நான்முனிவர்-சனகர்முதலியோர். அமுதமன் - அமிர்தேசர்; மதுரேசர்; அமுதம் - முத்தி, அமிர்தம்; '[5]ஆலவாயமுதவாக்கன்', 'ஆலவாயமுதவாயான்' (ககo:க; உள:க.) பரிவும்: உம்மையிறந்தது தழுவியது. 'கயலேக்கியார் பரிவும்அங்கு' என்றது, இத்தலம் சத்திபீடமென்பதைப்புலப் படுத்தியது.

அ - கக: கடவுள். கo-கூ.

(பி - ம்.) [1]'வினைப்பயமுடிக்கும்' [2]'வண்டிறவிட்டளையவிழும்' [3]'எம்பெரு மாக்கடமதுரை' [4]'பரிவினங்கயலேக்கியார்'

கன்னி. வேறு.

நசஞர் மகிழ்ந்த தான மென[1]வினை யிருள்வா ராம
லாசினக் தாவி ளக்கிட் டந்தகன் றிசைநின் றேத்தித்
தேசுடைக் கருங்கண் முத்த வெண்ணகைச் செவ்வாய்ப் பச்சைக்
காய்சின மயிடற் காய்ந்த கன்னிமுன் காக்கு மூதூர். (கஉ)

கரியமால்.

நினையவெம் [2]பாவ நீக்கும் பதியென நிலத்தி ழிந்தாங்
கினமலி யரக்கற் காய்ந்து குடதிசை யேத்தி நின்று
மனமுடை [3]வியாழத் தோடி மறைவழக் கன்று வென்ற
கனகவெண் சங்கச் செங்கைக் கரியமால் காக்கு மூதூர். (கங)

காளி.

காரிய வுலகுக் கெல்லாங் காரண நகரென் றெண்ணிப்
பேரியல் வடபா லெல்லைப் பிறங்கவர் திருந்து போற்றித்
தாருகற் காய்ந்த சீர்த்தித் தலம்புகழ் வெற்றிக் கொற்றச்
சீருடைக் காளி நாமச் செல்விமுன் காக்கு மூதூர். (கச)

* ஆலவாய்.

தொன்னில மாம டந்தை தோன்றுமு னெவர்க்கு முன்னந்
தன்னுறு திசைக்கட் டோன்று மாலவாய்த் தரும மூர்த்தி
யெங்கிலத் திறுமு யர்ந்த திங்கில மென்று தோன்ற
மன்னுமைக் குரைத்து மற்றை [4]மாதிரங் காக்கு மூதூர். (கரு)

கஉ. அந்தகன் திசை - தென்திசை. மயிடன் - மகிஷாசுரன்.

கங. குடதிசை-மேற்றிசை. கரியமால் - கரியமாணிக்கப் பெருமாள்.

கஉ - கங. "கன்னிசெங் கோட்டங் கரியோன் திருவுறை,.....சூழ் கொள விருத்தகூடலெம் பெருமான்" (கல். சுக.)

கச. செல்வியென்னும்பெயர் இக்காலத்துச் செல்லி, செல்லத்தம்மை யென்று வழங்கும்.

கரு. க-உ: "மேதினி தோன்று முன்னஞ், செவ்வியின் முனைத்தெழுந்த திப்பிய விலிங்கம்" (க:கசு); "முனைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" (தே.தி.நா.) தருமமூர்த்தி: "தருமகாயகன்" (அ: நி.),தன்னுறுதிசை-ஈசான திசை. மற்றைமாதிரம் - ஏழக்குத்திசை.

கஉ-நி. கன்னிமுதலியோர் இக்கோயிலைக்காக்குந்தெய்வமென்பர்;"கன்னிமால் காளியீசன் காக்குமா நகரி"(நி.கசு:கசு); "கன்னி திரு மால்காளி யீசன் காக்குஞ் கடிமதில்சூழ் மாமதுரை" (பயன் முதலியன, நி.) 'தான்மாடங்களாவன: கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்றுமாம்' (கலி. கூஉ, நி. உரை.)

* 'ஆலவாய்' என்றது சிவபெருமானை.

(பி - ம்.) 1 'விளையிருள்' 2'பாவநீக்கும்பதியென நினைத்திழிந்தாங்கு' 3 'வியாளத்தோடுமரைவனக்கன்று' 4 'மந்திரம்'

வேறு.

பூழி யகழ்ந்த குழி[1]நிரப்பும் புலவ ரமல ரெடுமலேவோ
ராழி யேழு மொருதடத்தி லமரு மதுவோ [2]வுலகேழுஞ்
சூழு மூன்று முலேயிருமை யொருபெண் பிறந்து சோதியுடன்
வாழு மதுரை வளங்கூற யாமார் மறந்து மாநிலத்தே. (கசு)

வேறு.

முன்னேயெண் டிசைக்க யங்க டாங்கிடி முதுபே ரண்ட
மன்னுமிந் திரனர் சாத்தும் வானிழி விமான மாகுர்
தென்னவன் சிவனே யாகுஞ் சிவலோக மதுரை யாகு
முன்னரு [3]மனிதர் முற்றுங் கணங்களா [4]மோருங் காலே. (கள)

வேறு.

ஈனமிலா விங்ஙகரி தன்னு ளெக்தை யிலங்குபுக முறுபத்து நான்
குண் டோதின், மீனவர்கோன் [5]குலஞ்செய்த தவத்தி ஞனு மேதினி
மான் முயன்றவருந் தவத்தி ஞனு, ஞானமுனி வர்கள்கேண்மி னுக
மொன் றிற்கு நாலுன்கு நாலுன்கா நான்கு கத்து, மானவவை தமை
யுரைப்ப லாதி மும்மை யகலாத வல்[6]வினேக ளகல வென்றே.(கஅ)

ஆகத்திருவிருத்தம் - அஉ.

நூற்பயன்.

இனிமைசேர் பயன்வி ளம்பி னிவ்வவ னிக்கண் மிக்க
புனிதபங் கயமி ரண்டிற் புரிவுள மாந்த ருள்ளப்
பனிகொள்பங் கயத்தை மற்றைப் பங்கய மலர்த்து கின்ற
தினகரன் போல லர்த்துந் திருவிளே யாடற் பாலு. (க)

கசு. பூழி - புழுதி; திருநீறு; ஒருதடம் - சிவதீர்த்தம். சிவதீர்த்தத்தில் எழுகடலடங்கினமை, "இத்தீர்த்த மாதடத்தி லிறையருளா னெழுகடலு மியைந்த" (கடம்பவன. ச: நுo) என்பதனலுமுணர்க. அதுவோ - அம்மட் டோ. இருமை - பெருமை; "இருமைமும்முலேயிலொன்று" (ச: கஉ.) யாம் ஆர் - யாம் எத்தன்மையையுடையேம்; கூறுதற்கு வன்மையில்லேமென்றபடி.

கள. இச்செய்யுளின் முதலிரண்டடியின்கருத்து, "மணிகொண்ட" (மீனு ட்சி.காப்பு,க) என்பதனலும் விளக்கும். "திகழ்பூவுலகிற் சிவலோக மென்னப், பகர்கூட லாலவாய்" (பூவண.உலா, உகஅ) என்பர்.

கஅ. புகழ் - திருவிளையாடல். 'மேதினி.....தவத்தினனும்': "என்ன புண்ணியஞ்செய்தனிம்மண்" (க: கக.) அகலாத மும்மைவினே - சஞ்சிதம், பிரா ரத்துவம் ஆகாமியம். ஆன: முற்று.

நூற்பயன்.

க. திருவிளையாடற் பாலு - திருவிளையாடலாகிய சூரியன்.

(பி - ம்.) 1 'நிரம்பப்புலவர்' 2 'உலகெங்குஞ்' 3'மனிதர்தாமும்' 4'ஒருங் குங்காலே' 5'குலமுன்செய் தவத்தினனும்' 6'வினேகளகலுமாதோ'

வே று.

தருமம் வாய்மை தவங்குலங் கல்விசேர்
பெருமை செல்வந் திறம்பிற வாகெறி
யரிய புத்தி யருள்சிவ பத்திமற்
றுரிய யாவையு மெய்துவ ருண்மையால். (உ)

கருது காதல ரெய்துவர் கன்னியர்
சுருதி மைந்தர்ப் பெறுவர்கள் சூலியர்
வருபி றப்பி [1]னமங்கல மங்கைய
ரருள்ப டைத்த சுமங்கலி யாவர்கள். (ஊ)

காரி ருட்டிடி துங்கிமித் தங்கடல்
வாரி வெய்ய கலுவழன் [2]மாமருத்
தோரை நாட்டிதி வார [3]மூடற்குறை
[4]சோரர் வஞ்சனை நஞ்சல கைச்சுழல். (எ)

உழுவை வேழ மரியுர காதிகள்
வழியின் வெவ்விடை யூறுமற் றென்செயுஞ்
செழியர் நாதர் திருவிளை யாடலை
யெழுதக் கேட்க நினைக்க வியம்பவே. (ஙு)

வாத பித்தங் கவழுதல் வல்வினை
வேத னைக்குள் விழார்நம னூர்புகார்
தீத கற்றுந் திருவிளை யாடலை
யோதி யத்த முணர்ந்த பெருந்தவர். (சூ)

ஊட்டி நாளிற் றொடங்கி யொழிவற
வீட்டும் வெய்ய வினைகளி யாவையுஞ்
சேட்ட நாதன் றிருவிளை யாடலைக்
கேட்ட காலயி னீங்குங் கிளரவே. (எ)

[5]தாங்க ருஞ்சம ரத்திர சத்திர
நீங்கு நீங்கருஞ் செல்வ நிரந்தர
மோங்கு மோங்கலின் வந்துல கின்றவள்
பாங்க ரர்விளை யாடல் பகரவே. (அ)

உ. புத்தி - அருள், போகம். ஊ. சூலியர் - கருப்பமுடையோர்.

ச. உடற்குறை - குட்டநோய்; கவர்த்தமுமாம். அலகைச்சுழல் - பேய்க் காற்றின் சுழற்சியில் அகப்படல்.

சு. அத்தம் - பொருள்.

எ. ஊட்டுகாள் - அனுபவிப்பிக்கும் காள். சேட்டநாதன் - மகாதேவர்.

அ. சமர் அத்திரம் சத்திரம்.

(பி - ம்.) 1'அமங்கலிமங்கையர்' 2'மாமிருத்' 3'உடற்குறி' 4'சோவஞ் சனை' 5'தாங்கருஞ் சமுசார சமுத்திர, நீங்கும்'

பாத கங்க ளொழியும் [1]பகையுகு
மேத நீங்கு மினிமை தரும்புகழ்
மாது சேருமற் றேதினி வேண்டுமென்
ரோதி மாமுனி தோன்ற [2]வுரைசெய்வான். (கூ)

ஆகத்திருவிருத்தம் - கூக.

க.—இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடல்.

*பொருந்திய வொழுக்கத் தாலும் பொய்யிலா வாய்மை யாலுந்
திருந்திய கல்வி யாலுந் தீதறு புகழி னாலும்
பெருந்திறல் வலியி னாலும் பேரரு ளாலு மிக்க
வருந்தவ முனிவர் கேட்ப வகத்திய னருளிச் செய்வான். (க)

ஆதிநான் மருப்பி யானை யமரர்கோன் மூன்னோர் கால
மேதகு வீர மிக்க விருத்திரா சுரனைக் கொன்ற
வோதரும் பழியா லஞ்சி யொழிக்குமா றெங்ங னென்றென்
றேதமின் முனிவர் வானோர் [3]குருவர னிடத்து ரைத்தான். (உ)

மெய்ப்படத் தேர்ந்தி யாரும் விளம்பிய வாறு கேட்டு
வைப்புறு நான்கு கூறு வரைந்தெமக் களிமி னென்ற
வொப்பரு நீரின் மண்ணின் மரத்தினி லுவமை யில்லாச்
செப்பிளங் கொங்கை மாதர் திறத்தினி னீக்க வாங்கு. (ங)

நீரிடை நுரைய தாயு நிலத்திடை யுவர தாயும்
[4]பாரிய மரங்க டம்மூட் பாய்தரு பிசின தாயும்
வாரணி முலையார் தேத்து மலரெனுங் குருதி யாயும்
பேர்பட [5]நீங்கக் கண்டு பெருநல மவருக் கீந்தார். (ச)

நூற்பயன்.

கூ. ஏதம் - துன்பம். இனிமை - இன்பம்.

(க)

உ. யானை - ஐராவதம். பழி - வீரகத்தி ; "விருத்திராசுரனைக்கொன்ற வெம்பழி", "வீர மிக்க விருத்திரா சுரனை யன்று கொன்றவெம் பாவம்" என்பர் பின்னும்; க: உச. உஎ.

ச. மலர் - பூப்பு.

* இச்செய்யுள் கையெழுத்துப் பிரதிகளிலெல்லாம் ஒவ்வொரு திருவிளையாடலின் முதலிலும் எழுதப்பெற்றுள்ளது.

(பி - ம்.) [1]'பகையுறு' [2]'உரைசெய்தான்' [3]'குருவவரிடத்து' [4]பாரிடை மரங்கள்' [5]'நீக்க'

மருவலீர் ததுதூ நீர்க்குக் கழுவிய மலஞ்சா ராமை
விரிதரு நிலத்திற் கங்க மேவிய [1]வடுவுமெத்த
லுரனமர் மரத்திற் கென்றுங் குறைத்திடக் கிளைத்த லோங்குங்
[2]கருவினு மடமா தர்க்குத் தணிவிலாக் காம வேட்கை. (நி)

சமையமா முனிவர் போற்றத் தானவர் வழுத்த மாத
ரிமையவர் [3]சுரவி சிந்தா மணிதொழ விரும ருங்குங்
கமலமுஞ் சங்கும் வாழ்த்தக் கற்பகச் சோலை சூழ
லமரர்கோ னிருந்தான் வந்தாங் கரிகொளா சனத்தி லங்க. (சு)

கூறரும் பேர வைக்க [4]ணரியபல் கோலங் கொண்டு
தேறுத லுடன யன்று தேவகன் னியர்கள் பாடிப்
[5]பேறுடை நிருத்தஞ் செய்யச் சிலரதைப் பெரிதும் போற்றி
வேறிலை [6]கூத்துப் போல மெய்யுளங் கவர்வ தென்னூர். (எ)

மன்றுறு மவையின் மற்று நின்றவர் வணங்கி வாழ்த்தி
யின்றிது போலொன் றில்லை யென்றுமுன் னவில்வ தென்னை
யொன்றிய மனமுங் கண்ணுங் களிதர வுவமை யில்லா
வென்றிகொ ணலம்ப யப்ப திலங்குமா வேட்டை யென்னூர். (அ)

ஆங்கது கேட்டு வேட்ட வமரர்கோன் விரைவி னந்தப்
[7]பாங்குடை வேட்டைக் கான காட்டினைப் பகரு மென்ன
வோங்கிய வவையின் மிக்க வுத்தமர் கற்ப கப்பூந்
தேங்கமழ் தொடையாய் மண்ணிற் சிறந்தபல் வனங்க டம்மூள். (கூ)

நீண்ட [8]நன் னலங்க ணல்கு நீக்கரும் பாவ நீக்கு
[9]மேண்டரு மவனிக் கெல்லா முயர்ப்புள தியானை கேழல்
காண்டகு மடங்க லெண்கு கலையுழை யுழுவை மற்று
மீண்டிய வனங்க டம்ப வனமலா லில்லை யென்னூர். (கo)

வேறு.

ஆன செய்தி சொல்லு முன்ன திர்ந்தெ ழுந்து [10]வாசவ
னீன மின்றி வில்லெ டுத்தி லங்கு கச்ச ணிந்துவெஞ்
சேனை சூழ வாழி சூழ்ந்தி றந்த மண்ணி ழிந்துகா
வானெ ருங்கு நீள்க டம்ப மாவ னத்து வந்தனன். (கக)

நி. மெத்தல் - நிரம்பல்.

சு. சுரவி - காமதேனு. கமலம் - பதுமநிதி, சங்கு - சங்கநிதி.

அ. மன்று - பொதுமை. மாவேட்டை - மிருகவேட்டை.

கo. ஏண் - வலிமை. 'கடம்பவனம்' என்றது, இத்தலத்தை.

கக. காவால் நெருக்கும்.

(பி - ம்.) 1'வடுமிதத்த, லுறனெழு' 2 'கருவினுண்' 3 'சுரபி' 4 'ணணியபல்' 5 'பேறுற்' 6 'கூத்துப்போலும்' 7 'பாங்குறும்' 8 'நன்னயங்கள்' 9 'ஞண்டருமவனி' 10 'வானவன்'

காடுகாவல் செய்துவாரொ ழுக்கியெங்க ணுங்கலந்
தோடுநாய்வி டுத்தடிச்சு வட்டிஞெற்றி யொல்லையெண்
மாடுகண்வ லைத்தொடக்கி ஞல்வளைத்தொ லிப்பமுன்
கூடி[1]வேறு வேறுநோக்கு தித்தெழுந்த கோடிமா. (கஉ)

ஏனமெய்தி யானையெய்தி ரும்புலிக்கு ழாமெய்தொண்
கானமேதி யெய்துவெங்க லைக்கணங்க [2]ளெய்துமற்
ருனமாம டங்கலெய்த டர்ந்துமேலெ ழுந்துபாய்
மானினங்க ளெய்துவாச வன்மனங்க ளித்தனன். (கஊ)

வேறு.

நெறிவசத் தானு முன்னை நிறைதவத் தானும் வென்றிக்
கறைகெழு குலிச மன்னுங் கையிலா கவத்தி னெடுங்
திறமொடு வடபால் விட்டுத் தென்றிசை நோக்கிச் செல்ல
மறுவறு பரம ஞான மனத்தகத் துதித்த தன்றே. (கச)

இன்றிதற் கேது வேதோ [3]விவ்வனத் தணையா முன்னங்
கொன்றிடக் கூடா துள்ளங் [4]கொடியபல் விலங்குகிற்ப
வென்றிகொள் வேட்டைக் காட்டில் விசேடமுண் டறிதல் வேண்டு
மொன்றிய செயல்வே ருன துரைசெயு [5]மும்ப ரென்ருன். (கடு)

அவ்வுரை கேட்ட தேவ ரறிகுவ மென்னப் போந்து
வெவ்வன மெங்குந் தேடி மேதினி தோன்று முன்னஞ்
[6]செவ்வியின் முளைத்தெ ழுந்த திப்பிய விலிங்கங் கண்டு
மெய்விதிர்ப் போடுஞ் சென்று விளம்புவார் துளங்க வாங்கு. (கசு)

கண்டனம் பெரிதா [7]யாழ்ந்து தெளிபுன லுடைத்தாய்க் [8]கான
வண்டணை பொழில்சூழ் வாவி [9]யதன்வட குடதி ரத்து
மூண்டக வயன்மால் காண முளைத்தெழு சிவலிங் கத்தைப்
பண்டைமா தவத்தா லென்று பரிவொடும் பணிந்து சொன்ருர்.(கஎ)

கஉ. ஒற்றி - உணர்ந்து. எண்மாடு - எட்டுத்திசைப்பக்கம். கண்வலை - கண்களையுடையவலை; "விரலாழிக்கண், பல்வித்தக்கண்கள்" (உஉ: கஙு.)

கச. கறை - இரத்தம். இலாகவம் - இலகுத்தன்மை; "மிகலாகவம்புரிந்து" (தி.நமயில. சுச.)ஞானம் உதித்தது.

கடு. கிடப்பவும், கொன்றிட உள்ளம் கூடாது-கொல்லுதற்கு மனம் துணியவில்லை. வேறுன இடம் வேறுநிலையென்று இக்காலத்து வழங்கும் (தி.நவிளை. இந்திரன். எக.) உம்பர்: அண்மைவிளி.

கசு. "மேதினி....இலிங்கம்": "முளைத்தாலை யெல்லார்க்கு முன்னே தோன்றி" (தே. தி.நநா.) விதிர்ப்பு - நடுக்கம்.

கஎ. கானம் - இசை. வடகுட தீரம் - வடமேற்குக்கரை. காணச்சிவலிங் கத்தைத் தவத்தாற் கண்டனம்.

(பி - ம்.) [1]'வேறுகொண்டுடன்குறித்து' [2]'எய்தமா, ருனமா' [3]'இவ்வனத் தணையாமுன்னம்' [4]'கோடிபல்' [5]'அமரர்' [6]'செவ்வயின்' [7]'ஆழ்ந்தெளி' [8]'கன்னவண்டணி' [9]'மற்றதன்வடதீரத்து'

இந்திரன் கேளா முன்ன ரினிமைகூர்ந் தவர்முன் ஞால
வந்துசந் நாகம் வாங்கி வாவிகண் டதிச யித்துச்
சுந்தமார் நன்னீ ராடிச் சடங்குகண் முடித்துப் பாங்க
ரந்தரா யகனைக் கண்டா ஞலித்தான் மாலுற் றுடி. (கஅ)

அடைந்தவர் பாவ நீக்கு மையனே காணப் பெற்றேன்
மடங்கலெண் குழலை கேழன் மாமத மாக்கண் மற்று
மிடைந்திடுங் 1கொடிய காட்டின் மெல்லிய லொடுந்த னித்திவ்
விடந்தனி லிருந்தா யென்ன புண்ணியஞ் செய்த திம்மண். (ககூ)

அன்புற விறைஞ்சி நின்னை யருச்சிப்பான் விரும்பா நின்றே
னன்புனற் கியைந்த செவ்வி 2கறுமலர் காட்டு கென்றுய்ந்
தின்பமே தருங்கா னத்தி லெங்கணு நேடிக் காணுன்
றுன்பமுற் றாசே யானென் செய்குவ லெனச்3சோ கித்தான். (உ0)

ஆசிலான் கண்டு நீண்ட வாவியெங் கணுமி லங்கப்
பேசரும் வேட்டை யாட்டிற் பெருவிருப் பொழிந்து நம்மைப்
பூசைசெய் வதற்கே நொந்தா னென்றருள் புரிந்து சீத
வாசமா நீழக் கஞ்சம் வருவித்தா னலர்வித் தாங்கு. (உக)

காவலன் வியந்து பல்காற் கண்டுகண் டதிச யித்துப்
பூவினே யடைவிற் கொய்து புளகிதத் தோடுங் கண்ணீர்
மேவமெய் கம்பித் தன்பின் வெள்ளத்து மூழ்கி மிக்க
தேவதே வனைப்பூ சித்தான் விதிப்படி 4சிறந்த நல்கி. (உஉ)

தேசுடை மடவாள் கொங்கை தீண்டிடச் சிவக்கு மேனி
வீசிய காற்றுல் வெய்ய வெயிலிரு ஞைவ தேயென்
றாசிலா வுயர்வி மானஞ் சாத்துவா ஞசை 5கூர்ந்து
மாசிலான் வருந்தக் கண்டு வணங்கியே தெய்வத் தச்சன். (உங)

கஅ. இனிமை - மகிழ்ச்சி. சங்காகம் வாங்கி - கவசத்தைக்கழற்றி. அந்த காயகன் - சுந்தரேசர்; அந்தம் - அழகு. சடங்குகள் - நித்தியகன்மங்கள்; "பொற்கமல வாவினீராடி இனியதஞ் சடங்கு செய்தே" (நி:உ..)ஆலித்தான்-முழங்கினன்.

ககூ. எண்கு உழுவை. "என்னபுண்ணியஞ்செய்தனே நெஞ்சமே" (தே.)

உ0. அருச்சிப்பான் - அருச்சிக்க. காட்டுக என்று. என்செய்குவல் - யாதுசெய்வேன்.

உக. ஆவி - தடாகம். ஈழக்கஞ்சம் - பொற்றுமரை. இலங்க அலர்வித்து வருவித்தான்; ஈழம் - பொன்.

உஉ. தேவதேவன் - மகாதேவர். உங. நோவதே - நோகின்றதே.

(பி - ம்.) 1 'கடிய' 2 'கறுமலரெங்குண்டென்றுய்த்து' 3 'சோதித்தான்' 4 'சிறத்து' 5 'கூர்த்த, மாசிலான்வருத்தம்'

விருத்திரா சுரனைக் கொன்ற வெம்பழி தவிர்ப்பா னெண்ணித்
திருத்துபல் விமானந் தம்மூட் டெளிதரு சிற்ப நன்னூற்
பொருத்தமுற் றளவி றெய்வப் பொலிவொடுங் கூடி நீடி
யிருப்பதோர் விமான மூண்டாண் டிறைவனென் றிலங்கச் சொன்னன்.

மெய்ப்படு சிற்பம் வல்ல வுத்தம விரைந்து நீபோ
யொப்பில்காஞ் சனவி மான[1]மும்பலிற் கொணர்தி யென்ன
வப்பொழு தவன்போ யாசை [2]யானையிற் கொணர்ந்து காட்டத்
தப்பிலா விதியி னேங்கச் [3]சாத்தினன் குளிர்வி மானம். (உடு)

சிந்தைவாழ்ந் திறைஞ்சி யேத்திச் சிறந்தசெய் தியாரும் போற்ற
[4]வந்தநீ டால யத்துக் கணியுற வியைந்தி ருந்த
சுந்தர வடிவங் கண்டே சொக்கெனு நாம மிக்க
வெந்தையே நினக்கல் லாதோர் தேவர்க்கு மியையா தென்றான்.(உசு)

என்றுமென் பதிக்கோர் குற்ற மெய்திடா வண்ணங் [5]காத்தி
வென்றிகொள் வீர மிக்க விருத்திரா சுரனை யன்று
கொன்றவெம் பாவ நான்கு கூறுசெய் தொழித்தேதன் சேட
நின்றன வுண்டே னீக்கி [6]யருளுதி நிமல வென்ன. (உஎ)

இறையவன் மூறுவல் [7]கூரா வறிவுடை யிமையோர் கோவே
செறிதரு புவியின் மாந்தர் செய்ததீ வினைகள் காணு
[8] ரறியினுஞ் சிறிதே யாக [9]வறைகுவ ரதுப கர்ந்தாய்
நிறனுடை யவனைக் கொன்ற பாவமார் தீர்க்க வல்லார். (உஅ)

உடு. உம்பல் - யானை. ஆசை யானை - திக்கஜம். குளிர்விமானம்: "சீதளவிமானமீதால்" (டு : ச.)

உசு. சிந்தைவாழ்ந்து- மனமகிழ்ந்து; "சேனையுந்தானும் வாழ்ந்து" (கூ0.) அணியுற - அழகுமிக. சொக்கு- அழகையுடையவர். 'சுந்தரேசர்' என்பது வட மொழியாதலின், 'சொக்கன்' என்னும் இத்திருநாமத்தையே பண்டைக்காலத் தொட்டுச்சான்றோர் பாராட்டிவந்தனர்; இத்திருநாமம், தேவாரங்களிலும், ஸ்ரீ குமரகுருபரமுனிவர் பிரபந்தங்களிலும், கடம்பவனபுராண முதலியவற்றிலும் பரக்கக் காணப்படும்; "திருவாலவாய்ச், சொக்கன்", "தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச், சொக்கனே" (தே. திருஞா.)"ஐந்தருகாட் டண்ண லரும்பழிக் கா வன்றுதனக், கிவுதிரவி மான மினிதமைத்த - வந்தித், தழகிய சொக்கரென வானதிருநாமம், குழைவுதரு நேசமுடன் கொண்டோன்" (சோக்கநாதநூலா.)

உடு-சு. "வேதியன் படைக்க மாலவன் காக்கப், பெறுதலோர் திருவுருத் தான்பெரிது நினைத்தி, யமுதயில் வாழ்க்கைத் தேவர்கோ னிழிச்சிய,மதமலி யிரு நான்கு பிடர்சுமந் தோங்கிச், செம்பொன்மணி குயிற்றிய சிகரக் கோயிலு,ளமை யாத் தண்ணளி யுமையுட னிறைந்த, வாலவா யுறைதரு மூல காரணன்" (கல். கூஉ.)

உஅ. நிறனுடையவனைக்கொன்ற பாவம் - வீரகத்தி; "மேதகு வீரமிக்க விருத்திரா சுரனைக்கொன்ற,வோதரும் பழியால்" (உ.) காணர்-விளங்க அறியார்.

(பி - ம்.) 1'ஒல்லியிற்' 2'யானையாற்' 3'சார்த்தினன்' 4'அந்தவாலயத் துக்கேற்கவணி', 'அந்தரவாலயத்துக்கணி' 5 'காத்து' 6 'ஆளுதி' 7 'கூர' 8 'அறையினுஞ்' 9 'அறிகுவர்'

ஆயினும் வேட்டை யாட்டி [1]லிளைத்தலி னறு மாரா
[2]கேயமூற் றஞ்சி நம்மை [3]நெறிப்படி வழுத்த லானுங்
காய்வெயிற் குயர்வி மானங் கற்பித்த லானுங் தீராத்
தீயவெம் பாவங் தீர்ந்த தூர்க்குமோர் தீங்கு மின்றே. (உசு)

என்றருள் செய்யக் [4]கேட்ட விந்திரன் வீழ்ந்தி றைஞ்சி
நின்றடி பல்காற் போற்றி நீக்கரும் பழியை நீக்கி
யொன்றிய தூய்மை பெற்றே [5]னுய்ந்தன னென்றென் றூர்த்துச்
சென்றனன் றன்றே யத்துச் சேனையுந் தானும் வாழ்ந்து. (ஈ0)

வே று.

ஆழ்ந்த[6]செழுந் தடம்பொற்ரு மரைமலர வவனிமிசை
வாய்ந்தவுயர் பெயர்பொற்ரு மரையென்ன மருவியதாற்
சேர்ந்ததொரு வாரத்துச் [7]சென்றெவரா யினுமின்றுந்
தோய்ந்து [8]நிளைத் தாடுபவர் பலஞ்சொல்லிற் றெலைவின்றே. (ஈக)

வே று.

கடம்பமா வனத்தி லங்குங் கனககோ கனக வாவி
யடைந்தவர் யாவ ரேனு மாதரத் தகாத ரத்துத்
தடம்படி கங்கை நீரிற் புனிதமாந் தட்ப நீருந்
தொடுங்கையோர் பவந்தீ யென்னச் சுடுமெனச் சுருதிசொல்லும். ()

வே று.

இப்பொழுது மமரேச [9]னினிமையின்வந் தமரரொடுஞ்
செப்பருந்தன் மாதரொடுஞ் சித்திரைச்சித் திரைத்தினத்துத்
தப்பறவேண் டியவரங்க டருந்தடத்துக் குடைந்தாடி
யொப்பிலழ கனேப்பணிவ னெனவுரைப்ப ருயர்ந்தோர்கள். (ஈஈ)

உசு. ஆரா - தணியாத. கற்பித்தல் - செய்தல்.

உசு-ஈ0. "காருடற் பிறையெயிற் றரக்கனைக் கொன்று,வச்சிரத் தடக்கை வரைப்பகை சுமந்த, பழவுடற் காட்டுக் நீராப் பெரும்பழி, பனிமலி பயந்த மாது டன் நீர்த்தருள், பெம்மான்" (கல். கூ.)

ஈக. வாரம் - கிழமை.

ஈஉ. திருவிளை. நீர்த்த. ஈசு. கனககோகனகவாவி - பொற்றமரைவாவி. கனகம் - பொன்; கோகனகம் - தாமரை. இது மடக்கணி.

ஈஈ. சித்திரைச் சித்திரைத்தினத்து-சித்திரைமாதத்தில் சித்திரைநட்சத் திரத்தில்; "சித்திரைச் சித்திரைத்திங்கள்" (சிலப். டு: சூ.) ஒப்பிலழகன் - சுந்தரேசர்.

(பி - ம்.) 1 'இளைத்தலுமன்றி' 2 'கேயமுற்றிறைஞ்சி' 3 'நெறிப்பட' 4 'தண்ட' 5 'உயர்ந்தனனென்று' 6 'செழும்புனல்' 7 'சென்றவராயினுமின்றுங்' 8 'நிளைத்தாடுமவர்' 9 'னிம்மையின்'

வேறு.

*காவமர் கற்ப கஞ்சேர் கடிமலர் மழைபொ ழிந்து
தாவி[1]றுந் துபிக ளார்த்துத் தத்தமங் கையர்க ளோடு
[2] மூவருஞ் விசும்பி லுள்ள மூப்பத்து மூன்று கோடி
தேவருந் துதித்தா ரீசன் திருவிளை யாடல் கண்டு. (உச)

வேறு.

ஓதரிய [3]வுத்தரமா புராணந் தன்னு ளுண்மைதரு சார[4]ச முச்
சயத்து முன்ன, மேதகுகன் கதை[5]விரிவிற் கண்டெ னக்கு வியாத
வான் மீகியெச்சன் சொன்ன வெண்ணெண், ஊதில்விளை யாடல்க
ளிற் பிறங்கு மிந்தத் திருவிளையா டலின்பரப்பைச் சுருக்கி யின்று,
போதமுற நமக்குரைத்தேன் யானுஞ் சொக்கன் புகழினையார் கரை
கண்டு புகலு வாரே. (உடு)

வேறு.

நெறியுளீ ரென்னக் [6]கேட்ட முனிவர்க ணிறைவு கூர்ந்திங்
குறுமதி சயமுடைத்தா முயர்கதை விளங்கக் கேட்டே
மறுவிலா வறிவான் மிக்க மலயமா முனிவ நீதி
யிறைவிளை யாட நம்மு ளின்னுமொன் றுரைத்தி யென்றார். (உசு)

ஆகத்திருவிருத்தம் - கஉஎ.

உ.—†வெள்ளானைக்குச்சாபந்தீர்த்த திருவிளையாடல்.

—•••—

முன்[7]ஞெருகா லழகனையிற் றிரன்றன் பாவமுழுதும்விட வருச்
சித்த விசேடஞ் சொல்ல, மன்னயிரா [8]வதங்கேட்டிக் காண்பான்
வேட்டு மலர்க்கடம்ப வனத்தருளால் வந்துபுக்குப், [9]பொன்[10]னிதழ்ச்

உச. தாஇல் தந்துபிகள்.

உடு. சாசரமுச்சயம் - உத்தரமாபுராணத்துள் ஒருபகுதி.

உசு. நிறைவு - மகிழ்ச்சி (உ : உ.)

(உ)

க. அழகன்-சோமசுந்தரக்கடவுள்; "அழகனீ புயங்களீ" "மூப்புரஞ்செற் றவழக", "அழகனே யாலவாயி லப்பனே" (தே.) நினைகள் - யானைகள்.

* கையெழுத்துப்பிரதிகளிலெல்லாம், இந்த, "காவமர்" என்னும் செய்யுள் முதலியமூன்றும் ஒவ்வொருதிருவிளையாடலின் இறுதியிலும் எழுதப் பெற்றுள்ளன.

† "அத்திக்கருளி" (தி நுவா. திருத்தெள்ளேணம், கஉ).

(பி - ம்.) 1'துந்துமிகளார்ப்பத்' 2'மூவர்கண் முதலாவுள்ளமூப்' 3'உத்தமமாபுராணம்' 4 'சாமுச்' 5 'விரைவிற்' 6 'கேட்டே' 7 'ஒருகாலிந்திரன்றன் பாவமெல்லாம்' 8'பதம்' 9'பொன்னிகர்' 10'இதட்செங்கமலம்'

செங் கமலமலர்த் தடத்தை யுந்தன் பொருவிலருங் கிளைகளினூற் பரிக்கப் பட்ட, மின்னுயர்பே ராலயத்து விரும்பி வாழு மெய்யனையும் பொய்யறக்கண் டிறைஞ்சிற் றன்றே. (க)

குறுகுமுனந் தானவிசே டத்தா னெஞ்சிற் கொளுவுமுயர் ஞா னங்கண் டதிச யித்து, நிறையினெடு தன்[1]சாப நினைந்து சொல்லு நீடியவெண் டிசையுறுமென் கிளையி லுள்ளோ, ருறவுதர வருமுன் னைத் தவத்தி னலே யுயர்புடைநின் றிருக்கோயி றன்னை நீங்கா, திறை யவனே பரித்தருகு நிற்கப் பெற்றூர் யான்பெறுமா றெவ்வாறென் றியம்பக் கேட்டி. (உ)

கொந்தவிழுந் தும்பையிபக் கடவு ளேநின் கோச்சீலம் போன் றிருந்த துன்றன் சீல, மிந்திரனே நமக்குரிய பத்தன் [2]புத்தி யினி மையுட னவன்றன்னை நீங்கா தென்றுங், [3]கந்தமுறப் பரிப்பதே நன் மை [4]யெம்பாற் காமுறவேண் டியவரங்கள் வாங்கிக் கொள்ளென், றெந்தைபிரா னுரைப்பநனி விருப்பமெய்தி யெள்ளலற வெள்ளை [5]யிப மியம்பு மன்றே. (ங)

கேட்டருளாய் பசுபதியே தேவர் தேவே கிளரொளியே வளர் கருணைக் குன்றே யென்றன்,மாட்டகலா திருப்படதொரு கதையியம்ப வானவர்கோன் மனமகிழ்ந்து முன்ன மேமா, வேட்டையினு லவனி மிசை யிழிந்து [6]மீண்டு மேலுலகிற் செலுங்காலை மிக்க வான, நாட்டவரு முனிவர்களும் போற்றிசெய்து நயந்தினிய [7]வுபகார நல்கி னார்கள். (சு)

வேறு.

மூன்றுற வவற்றை யுற்ற முறைமையின் வாங்கி யாங்கு
நின்றியா தடைவிற் சூடக் கண்டுள நேசங் கூர்ந்து
சுந்தர [8]வடிவ மிக்க துருவாச [9]முனிவ னுளநெஞ்
சிந்தைசெய் திறைஞ்சுந் தெய்வஞ் சூடிய சேடமென்று. (ரு)

உயர்பேராலயம்: "உயராலயத்துளிணங்கு" என்பர்பின்; சு0: ரு. 'மெய்யனை யும் பொய்யறக் கண்டி': இது முரண். 'அழகார்மெய்யன்', 'மெய்யர்க்கு மெய் யன்' (கூ: க; சரு : கசு.)

உ. கொளுவுதல் - பொருத்துதல்.

ங. தும்பை இபக் கடவுளே - தும்பைமலர்போன்ற வெண்மைநிறம் பொருந்திய தெய்வயானையே. கோ - அரசன்; இந்திரன். புத்தியினிமை - மன மகிழ்ச்சி. கந்தம் - கழுத்து.

சு. இயம்பக் கேட்டருளாய். உபகாரம் - கையுறை; காணிக்கை; "முனி வர் வானோரீந்திடு முபகாரம்" என்பர்பின்; அ.

ரு. சுந்தரவடிவ: விளி; 'சுந்தரா' (ரு: ங.)

(பி - ம்.) 1'பாபம்' 2'பத்தி' 3'கந்தாரத்துத்தரிப்பதே' 4'என்பாற்' 5'இப மென்னியம்பும்' 6'காண' 7'உபசாரம்' 8'வடிவான்மிக்காய்' 9'முனிவனுருஞ்'

பங்கய நறும்பூ வொன்றும் பசுந்துள வத்தா லொன்றுஞ்
செங்கையி னல்ல வாங்கிச் செழும்பொழிற் கற்ப கப்பூர்
தொங்கல்சேர் முடியிற் சூடா தெழுந்தமுன் ரேன்றி நின்ற
மங்கலம் பொலியு மென்றன் மத்தக மீதெ றிந்தான். (சு)

யானுமுன் செய்த பொல்லா விருங்கொடு [1]வினையி னாலு
மானவெம் [2]மதத்தி னாலு மடியினிற் றுகைத்தேன் வாங்கிப்
பான்மைசேர் முனிவன் கண்டு பயத்தொடுங் கோபத் தோடுந்
தானவை கடிதெ டுத்துத் தன்றனீ முடியிற் சூடி. (எ)

இன்றுமா முனிவர் வாளை நீங்கிடு மூபகா ரத்தை
நன்றென விரும்பி யான்மு னல்கிய வுபகா ரத்தை
யொன்றிய முடியிற் சூடா தொள்ளிய வல்ல வென்று
வென்றியி னெவருங் காண விலக்கிய வாற [3]தென்னை. (அ)

ஆவியிற் சிறந்த வற்றை யவமதி செய்த தாலிப்
பூவல யத்துட் டோன்றும் பூழியன் றடக்கை தன்னின்
மேவிய வளையி னலே மேன்முடி பிளக்க மிக்க
தேவர்கோ னெற்று ணென்று செப்பின னவற்குச் சாபம். (கூ)

பொன்னகர் மன்னி வாழும் புரந்தரன் றன்னைத் தாங்கு
நின்னுயர் பெருமை விட்டு நிலத்திழிந் தழல்வா யாக
துன்னிய வனங்க டோறுஞ் சுழன்று [4]காட் டியானை யாகி
யுன்னவ மதியி னலென் றுரைத்தன னெனக்குச் சாபம். (கo)

இப்படிச் சபிக்கக் கண்ட விருடிக ளிமையோர் கொந்தாங்
கொப்பிலா முனியைப் போற்றி யுயர்தரு தேவர் கோமான்
செப்பருந் தெய்வ யானை செய்பிழை பொறுத்தின் றிட்ட
தப்பறு பெருஞ்சா பத்தைத் தணியெனத் தணிந்து சீற்றம். (கக)

மண்டனிற் சுந்த ரேசன் பத்தரு மாற னலே
யொண்டொடை மவுலி பேத மொருகாலத் துண்டாய் மீண்டு
விண்டலத் துயர்வு பெற்று மேலர சாடி யென்று
கொண்டல்வா கனனுக் கன்பிற் கொடித்தனன் [5]பிறிது சாபம். (கஉ)

சு. தோன்றி நின்ற மத்தகம்.

எ. வாங்கித் துகைத்தேன்.

கூ. பூழியன்- பாண்டியன். வளை - ஒருவகை ஆயுதம். தேவர் கோன்: வினி. எ.முண் - அடிக்கப்படுவாய் (கடம்ப. இலீலா. உ.)

கo. அவமதியினாற் காட்டியானையாகி உழல்வாயாக.

கஉ. பிறிது சாபம் - சாபத்தின்பரிகாரம்; கசு; இது, மறுசாபம்எனவும் வழங்கும்; "மறுபெருஞ்சாபமுங் கொடுத்தான்" (இரு:அ.)

(பி - ம்.) 1'வினையினலே' 2 'மதத்தினலே' 3'தென்னே' 4 'காட்டானை யாகி' 5 'பிரதி'

பொருந்தவோர் காலத் தோர்பாற் புலியிற்காட் டியானை யாகி
வரந்தரும் பெருங்க டம்ப வனத்துறை யிறையைக் கண்டவ்
வருந்தவ னருளி னலே [1]யலைவற நீயு மூன்றன்
றரம்பெறக் கடவை யென்று தந்தனன் [2]பிறிது சாபம். (கஙு)

வே று.

பேறுறவிங் கெறிசபித்துப் போய பின்னர்ப் பிழையாம லன்றிட்ட சாபந் தள்ள, வூறுமத விகாரத்தான் மயங்கி யானு மும்பர்கோனையுமூயர்ந்த துறக்கத் தோங்குங், கூறருகற் பகப்பொழில்க டமையும்விட்டுக் குவலயத்தி [3]லிழிந்ததர கெருப்பா லெந்து, தூறுபடு காடுகளு நாடுங் குன்றுஞ் சுழன்று முன்று திரிந்தனன்வெங் துயரங் கூர்ந்தே. (கசு)

வே று.

வந்தனை வணங்கப் பெற்றேன் மண்மிசை யிழிந்த தாலென்
வெந்துயர்ச் சாபந் தன்னை விடுவித்து விடாது நாளு
மிந்திர விமானந் தாங்கு மியானைகண் மீது வைத்த
சிந்தைகூர் தருபே ரன்பை [4]நல்குக சிறியேற் கென்ன. (கருு)

ஒன்றிய சாப நீக்கி யுயர்புதந் தோமு னக்கே
யின்றுநன் குண்டா நம்மை யினிமையிற் பூசை செய்து
சென்றுவா னகத்தெ மக்குச் சிறப்புடை விமானந் தந்த
வென்றிகொ ளமரர் கோவை விடாதுவா ழெனந வின்றான். (கசு)

அங்கருள் புரியக் கண்டே யகமகிழ்ந் தடியே னுய்ந்தேன்
சங்கர வென்று வாழ்த்தித் தடத்துநீ ராட்டிச் செம்பொற்
பங்கயப் போது சூட்டிப் பூசித்துப் பழுது நீங்கி
யெங்களும் பாவச் சென்ற திந்திர வுலகத் தியானை. (கள)

ஆகத்திருவிருத்தம் - கசச.

கஙு. அருந்தவன் - சிவபெருமான் (நிகழ: உகூ; சுo: சு); "தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே" (புறநா. கட.) தரம் - தகுதி.

கசு. கூறுஅரு - சொல்லுதற்கு அரிய. உதரகெருப்பு - வயிற்றுத்தீ; ஜாடராக்னி.

கள. பழுது - சாபம்.

(பி - ம்.) [1]'அலைவறவெனக்கும்' [2]'பிரதி' [3]'இழிந்தாகம்' [4]'கல்கிடு'

கூ.—[1]தடாதகையாரவதரித்த திருவிளையாடல்

மாசின் மதுரைப் பெரும்பதியின் மலயத் துவச னெனுமாறன்
றேச முழுது மனுவென்னச் செங்கோல் செலுத்துங் காலத்தங்
காசின் மனிதர் முன்புலகா ளரசர் தொகுதி மறந்த றஞ்சேர்
நேச முடைய [2]பேரரசி னிழலே நிழலென் றினிதிருந்தார். (க)

மாலைக் குமர வேளென்ன வயங்கு மிளமைப் பருவத்தா
லேலத் திமிரக் குழற்காவி லிலங்கு மடவார் தமைவைத்துக்
கோலக் களபத் தனதடத்துட் குளித்துச் செவ்வா யமுதுண்டு
சாலப் பரிந்தா னருட்சொக்கன் றனையே சாலுந் தகைமையினான். ()

ஏத மகல [3]வித்தகவி னிருக்கு ஈளி னங்குலத்தோர்
நீதி மாதைக் கொள்வலென நினைந்தீ ரைந்து பொருத்தமுற
வாதி மாபின் வரும்பெரிய வரசர் குலத்தி லவதரித்த
சோதி [4]வடிவ மங்கைதனைச் சுருதி விதியின் மணம்புணர்ந்தான். ()

மற்ற மடவார் தமைவிட்டு மன்னர் குடியிற் பிறந்தாண்மே
[5]லுற்ற வவர்பா லன்பெல்லா மொருங்கே வைத்து நனிவாழ்வோன்
சுற்றும் பெரிய விதிவசத்தாற் றுணைசேர் புதல்வ னிலாமையினான்
முற்றுஞ் சடையான் றனைநினைந்து முயன்றான் றவங்க ணெடுங்காலம்.

ஆன்ற வரிய பேரறங்க ளரிவை யுடனே செயக்கண்டாண்
டேன்ற விளையா டலைவிரும்பி [6]யெழிலார் சொக்க னருள்கூர்ந்து
மூன்று முலையா லொருமகவை யளிப்ப முதிரு மதியென்னத்
தோன்றி யுலகு பதினலுந் துதிப்ப வளர்ந்து [8]துலங்கியதால். (ரு)

க. மலயத்துவசன் - பொதியின்மலையின் உருவமெழுதிய கொடியை யுடையவன்; ச: க. இப்பாண்டியன் அகத்தியமுனிவர் அருளாற்பிறந்தவனுதலின், அவருக்கு இருப்பிடமாகவுள்ளதும் துவசம்போலே உயர்ந்து தோன்றுவதுமாகிய பொதியின்மலையின் சம்பந்தமான பெயரை இவனுக்கு இட்டனரென்று அஷ்டமிப் பிரதட்சிணமான்மியம் தெரிவிக்கின்றது; ச: க-இன் குறிப்புரையையும் பார்க்க.

உ. ஏலம் - மயிர்ச்சாந்து. குழற்கா - கூந்தலாகியசோலை. பரிந்தான் - அன்புற்றான்.

ஈ. ஆதிமரபு: இம்மரபு சூரிய வம்சமென்று கருதுவதற்கும் இடமுண்டு. வடிவமங்கையென்பது அப்பெண்ணின்பெயர்; இப்பெயரைக் காந்திமதியென்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பென்பர்; கக: ஈ.

ச. அன்பெல்லா மொருங்கேவைத்து நனிவாழ்தல், "ஒன்று காதலன்", "காதல்கூர்ந்தகணவன்" (கூ: ச, அ) என்பவற்றாலும் விளங்கும். முற்றுதல்-வளைதல்.

ரு. ஆல்: ஒடி.

(பி - ம்.) 1'மும்மூலைத்தடாதகையார் பிறந்த' 2'பேரரச' 3'இத்தகவன்' 4 'வடிவின்' 5 'உற்றங்கவர்பா லின்பமெலாம்' 6 'எழில்சேர்' 7'மகனே' 8'துளங்கியதால்'

வேறு.

[1]சிதைவிலா விருப்ப மிக்க தேவியோ டினிய தென்ன
னதிசய மூற்று மற்றை யதிகமா மூலையி னேக்கண்
டிதுதகு வதுவோ விந்த வடிவினுக் கெந்தா யந்தி
மதிபொதி சடையா யென்று மலரணைத் துயிலுங் காலை. (சு)

இணையிலான் கனவிற் சென்றோர் மாதிவ ளெனக்கொள் ளாது
[2]தணிதிநீ யேத மந்தத் தனமுமோர் வழியி னீங்கித்
துணையுல காளுமென்னத் துயிலுணர்ந் ததிச யித்து
மணிமுடி யரசன் செய்தி மந்திரி கட்குச் சொன்னான். (எ)

ஐயமில் கணிதம் வல்லா னவரிலோ ரமைச்சன் போற்றிப்
பொய்யல வுதித்த கால பலத்திலுற் புவியை யாளுந்
தையலுக் [3]கியைந்த நாமந் தடாதகை மற்றொப் பில்லா
மெய்யுறு [4]கணவற் கண்டான் மிகைமூலை மறையு மென்றான். (அ)

இந்தநல் லுரைபொய் யாதென் றியைந்தவ ரியம்ப மன்னன்
[5]செந்தமிழ் மூக்கட் சொக்கன் செயலெனத் தெளிந்து தொல்லைத்
தந்திர நெறியி னுமந் தடாதகை யென்று [6]சாத்திச்
சிந்தையா குலங்க ளார்ந்து செலுத்தினான் செங்கோ லோங்க. (கூ)

மையமர் விழிவா ளென்ன மதிமுகம் வனச மென்ன
வையநுண் ணிடைபொய் யென்ன வணிமூலை மலய மென்னச்
செய்யவாய்க் கரிய கூந்தற் சிற்றடிப் பெரிய வல்குற்
றையலாள் வளர்ந்தாள் வாரித் தலமெலாம் வளர வாங்கு. (கo)

பரிவினெண் ணிறந்த கோடிப் பாங்கியர் சூழச் செம்பொ
னரியகந் துகங்க ழுங்கோ டம்மனை யூசன் மற்று
மரியன பயின்று கன்னி யோங்குமா டத்தி ருந்து
கரிபரி யேறி மூற்றக் கற்றனள் [7]கலைகண் முற்றும். (கக)

எ. இணையிலான் - சிவபெருமான். ஏதம்-துன்பம். ஆளும்-ஆளுவாள்.

அ. மிகை - அதிகம்.

கூ. அவர் இயைத்து. 'செந்தமிழ்மூக்கட்சொக்கன்': 'செந்தமிழ்க்கினிய சொக்கன்' என்பர்பின்னும்; நூஉ; உ. தொல்லைத்தந்திரம்- பழமையாகியதூல்; வேதாகமங்கள்.

கo. வாரித்தலம் - பூமி. இச்செய்யுள், "செய்யவாய்ப் பசும்பொன் னேகே" (தூளா. சீய. கoக) என்பதிலுள்ள சொற்றொடர்களைப் பெற்று வந்துள்ளது.

(பி - ம்.) 1 'அதிபய' 2'தணியுநீசேதம் வந்ததனமும்' 3'இயையு' 4'தணவர்' 5'செந்தமிழ்க்குரவன்' 6'சாற்றிச்' 7'கல்வி'

ஒன்றிய வடிவி னனு முதித்தனன் [1]மூகுத்தத் தானும்
வன்றிறல் வலியி னனு மகவுவே றிலாமை யானு
மன்றினர் சிங்கஞ் சிங்கா தனத்திடை யிருத்தி யன்னு
டன்றணி முடியிற் செம்பொற் றனிமணி முடிக வித்தான். (கஉ)

[2]பொருந்துபே ரறங்கள் செய்து போற்றரு மரசர் போற்ற
விருந்தர சுரிமை யெல்லா [3]மிவள்வயிற் கொடுத்திங் கென்ன
வருந்தவஞ் செய்தே னிந்த வணங்கினைப் பெறுதற் கென்று
பரிந்துயர் வான நாடு சேர்ந்தனன் பந்த [4]நீங்கி. (கங)

ஆகத்திருவிருத்தம் - கருஎ.

ச.—*மணஞ்செய்த திருவிளையாடல்.

மன்னு மாதவம் பெருகிய மலைக்கொடி மன்னன்
[5]பொன்னி னுட்டிடைப் போயினி தமர்ந்துவீற் றிருப்பப்
பின்னர் வேறொரு புத்திர னிலாமையிற் பிறங்கக்
கன்னி தானுயர் பிதாவினுக் [6]சூறுகடன் கழித்தாள். (க)

தந்தை யில்லதுஞ் சாற்றருந் தனதெழி லுருவ
[7]மூந்தை மும்மூலை யாயதுங் கொண்டிவண் முடியச்
சிந்தை யாகுலந் தீர்விலா திருந்தர சாண்டாள்
வந்த தெவ்வர்கள் யாரையும் வாளினுன் மாற்றி. (உ)

கஉ. முகுத்தம் - முகூர்த்தம். அன்றினர் - விரோதித்தவர்கள்; அன்றினர் சிங்கம் - மலயத்துவசன். முடி - தலை, கிரீடம்.

(ச)

க. மலைக்கொடிமன்னன் - மலயத்துவச பாண்டியன்; "எருதோடு கலையோடு சிலையோடு மலையோட விபமோட நேர், விருதோடு பொருதேறு புலி நேமி கிரிசூழ விளையாடவே" என்னும் தக்கயாகப்பரணியும், 'பருவதத்தைக் கொடிக்கணெழுதும் பாண்டியன் குலபதி இலாஞ்சனையும்' என்னும் அதன் உரைப்பகுதியும் இங்கே அறியற்பாலன. பொன்னின் நாடு - சுவர்க்கம். வீற்றிருப்ப - கவலையின்றியிருக்க.

*"தென்னுடைய சிவனேபோற்றி" (திருவா. போற்றி. கசுச), "தண்ணுர் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானே" (ஷெ. திருவம்.கo), "மருவித்திகழ் தென்னன்" (ஷெ திருத்தெள்.கரு) "என்னையாண்டுகொண்ட பாண்டிப்பிரான்" (ஷெ திருப்பூவல்லி.உ), "வானந்தொழுந்தென்னன்" (ஷெ. தோணோக்கம்,அ), "பாண்டிகன் னுடரா லன்னே யெனும்" (ஷெ. அன்னே. நு), என்பவற்றிற் சிவபெருமான் சுந்தரபாண்டியராக வீற்றிருத்தமைகூறப்பட்டிருத்தல்காண்க; திருவாசகத்துள்ள பாண்டிப்பதிகமுதலியன இங்கே ஆராய்தற்பாலன.

(பி - ம்.) 1 'மூகிழ்த்தத்' 2 'பொருந்தவேதவங்கள்', 'பொருந்துபோதகங்கள்' 3 'இவ்வயிற்' 4 'நீக்கி' 5 'பொன்னினுயர் நாட்டிடைப்போயினி திருப்பப்', 'பொன்னினுமுயர்' 6 'அருங்கடன்' 7 'மூந்து'

மன்னு மூத்தமத் [1]தணைவனே வரத்தொடு பெறுதற்
[2] கங்கி லத்திடை யிலாதது [3]கண்டடல் வேந்தர்
வெங்கி டத்திசை விசயநாஞ் செய்குவ மென்றே
யெங்கி லத்திறு முலாவின ளெல்லையில் படையாள். (க)

வே று.

திசைவிச யஞ்செய் காலைத் திசைகளி லுருவ மிக்க
நசையுறு [4]மன்னர்க் கண்டா னனிநயந் தெதிர்சென் றங்க
ணசைவற [5]நிற்பாண் மற்றே ரங்கவேள் விகாரங் காணுள்
வசையற [6]முரையி னோடு போகுவாண் மதியா ளாகி. (ச)

இருங்குண திசைமூன் ஞக வெங்கணு முலாவி யுள்ளம்
வருந்துவா டன்னைக் [7]கொள்வா னுசையாய் மதுரை மன்னன்
றிருந்துபே ரருளிற் போந்து சீயமா தங்க மற்றும்
பொருந்திய கயிலை யந்தண் [8]டாள்வரைப் புறத்தி ருந்தான். (ஞ)

வெம்மூனை யரசர்க் காய்ந்து வெல்லரு நிலங்கள் கொண்டு
கொம்மைவெம் மூலையார் சூழக் கோடிமா மன்னர் போற்றச்
செம்மலே [9]றென்னத் தோன்றித் திறையிடான் யாவ னென்று
மம்மர்தீர்த் தாளும் வள்ளல் வாழ்பெருங் கயிலை சேர்ந்தாள். (ட)

கண்டுபா ரிடங்கள் சித்தர் சாரணர் கணப்பி சாசர்
மண்டிய வியக்கர் வானோர் தானவர் [10]மற்றுந் துற்று
மிண்டுகள் பேசிச் செல்ல விசயமா மகுட வல்லி
சண்டவெங் கோபத் தோடுந் தழல்விழித் தெதிர்ந டந்தாள். (ண)

வெந்திறன் [11]ஞாட்பி லேன்ற வீரர்க ளாற்ற ராகி
மூந்திய திறங்கள் விட்டு முற்று [12]மாயுதங்கள் விட்டுப்
பந்திவா கனங்கள் விட்டுப் பதிவன பட்டுப் போந்து
சுந்தரன் கழலில் வீழ்ந்து துதித்துநீ யியர்த்துச் சொல்வார். (த)

க. வெங்கிட - புறங்கொடுக்க; வெரிந: விகாரம். ச. திசைவிசயம்-திக்கு விசயம்.

ஞ. மதுரைமன்னன் - சோமசுந்தரக்கடவுள்; சு: எ. தாள் வரை - மலையின் அடி; 'பாதசயிலம்' என்பர் வடநூலார். மதுரைமன்னன் இருந்தான்.

சு. கொம்மை - வட்டம்.

எ. துற்று - நெருங்கி. மிண்டுகள் - தருக்காற் சொல்லும் சொற்கள். சண்டவெங்கோபம் - மிக்க கோபம்.

அ. ஞாட்பு - போர்க்களம்.

(பி - ம்.) 1'தலைவனே' 2'இக்கிலத்திடை' 3'கொண்டல்' 4'மன்னர்கண்டா' 5 'நிற்பார்' 6 'முறையி' 7 'கொள்ளவாஞ்சையாய்' 8'தாழ்வரை' 9 'செம்மலே யென்ன' 10'மற்றுமுற்று' 11'ஞாட்பினின்ற' 12'ஆயுதங்கழற்றி'

வேறு.

தீர மிக்கமும் மூலசி றக்குமோர் தெய்வ மாதரான் சீறி[1]வந்
தெதிர்த் தார்நிலத் தில்வே றெதிரெ னக்கெனு வரியவத்திரங் கூ[2]வி
டுத்ததும், போர்மு கத்துமென் முறுவல் கூருமுன் பொலிவ ழிந்துகம்
படைமு ரிந்தவா, ரேரி டத்தினுங் கண்ட தில்லரா வுலகின் மண்
ணில்வான் மிசையி லென்றனர். (கூ)

அன்றி ரைர்புரங் குன்ற வென்றவில் லரிய சேவகன் முறுவல்
செய்திடா, நன்று நன்றுசொல் கின்ற தின்றுபோய் நாடி காண[3]வந்
நாரி யாரையாம், வென்று மேவுவ மஞ்ச லஞ்சனீர் வெய்து ரதிரு
மென்று [4]துன்றிமுன், னின்ற சேனையைத் தள்ளி [5]யெய்தினு னீடு
மன்மதன் சேனை பின்வர. (கo)

வேறு.

அரிவையைக் கைப்பி டிப்பா னுசையி னீறு சாத்தி
வரைவிலார் கரத்து வேரேர் [6]வண்ணவெஞ் சிலையும் வாங்கிப்
பொருபடை நடிவு செல்லப் புரிகுழ லொருவ னம்மேல்
வருவதென் மதியா தென்று வந்தனள் பூசல் வேட்டு. (கக)

இறைவனைக் காணு முன்ன ரிருமைமும் மூலயி லொன்று
மறைதல்கண் டதிச யித்து மானம்வந் தொல்கி நிற்பத்
தறைபட முன்னஞ் சொன்ன மந்திரி யிவனே தோலா
மறமலி மாதே யுன்றன் மாமண வாள னென்ரூன். (கஉ)

அப்பொழு திகல்செய் யாத வநங்கவே [7]ளிகலக் கண்டே
யொப்பிலாள் வருத்தங் கூர முறுவல்செய் துவமை யில்லீர்
கைப்பிடிப் பதற்கே வந்தேன் கருத்தறி கில்லே [8]னின்று
தப்பில்வேள் பொல்லான் வெற்போ தனநடி விலையோ [9]வன்றே. ()

கொங்கவி முலங்கற் கூந்தற் கொடியிடை யீரு மக்குப்
பங்கய [10]முகுளந் தன்னைக் கொங்கையாப் படைத்த [11]வேதா
வங்கது கண்டி கண்டீ தலருமென் றச்சங் கூர்ந்தோ
திங்களை வதன மாகப் படைத்தனன் செப்பீ ரென்ரூன். (கச)

கூ. கண்டது இல் - பார்த்ததில்லை.

கo. அன்றினர் - பகைவர். அஞ்சல் - அஞ்சற்க.

கக. வரை வில் - மலையாகிய வில். புரிகுழல்: எழுவாய்.

கஉ. இருமை - பெருமை, (திருக. கசு.) மந்திரி: எழுவாய்; அவன் சொல்லியதை, கூ: அ - ஆம் செய்யுளாலுணர்க.

கங. முறுவல் செய்தவர், சிவபெருமான்.

கச. முகுளம் - அரும்பு.

(பி - ம்.) 1'வக்தெதிர்ந' 2 'விடுத்திடும்' 3 'வன்னரியாரை' 4 'துன்றியே' 5 'ஏகினன்' 6 'வன்ன' 7 'இகல் செயக்கண் டொப்பிலா வருத்தங்கூர்ந்து' 8 'னென்று' 9 'வின்றே' 10 'முகிளந்' 11 'வேதன்'

பொருவருந் திறங்கள் வல்லாள் புகழினு னிறைத்தாள் போதிற்
றிருவினு மூருவ மிக்காள் சிறிதுமென் முறுவல் கூர்ந்து
[1] மருமலி யிதழி யந்தார் வள்ளன்மேற் கடைக்கண் வைத்தாங்
கிருநில நோக்கி மெல்ல வியம்புவா ணயங்கள் கூர. (கடு)

வேறு.

மன்னியதென் புலத்திலங்கும் பாண்டிநாட்டு வளமைதரு மாம
துரை நகரென் பேரூர், நன்னிலைசேர் தந்தையர சுரிமை தந்து நணு
கினன் [2]வானாட்டென் னல்ல யாயுங், கன்னிதனக் கானமண வாளன்
றன்னைக் [3]காணுமா றென்றென்று கலங்கு கின்ரு, ளின்னல்கெட
மீனமதி யுத்த ரத்தங் கெழுந்தருளி மணந்தருளு மென்ரூள் போற்றி.

வென்றிதரு புகழுடையா யுநங்க வாழ்வே விளம்பியதே செய்
வலினி மெலியே லுள்ள, மென்றுவரங் கொடுத்தருளி யிறைவன்
போக வின்பமுறு தடாதகைதன் பெரிய நாட்டிச், சென்றுவளந் தரு
மதுரை நகருட் புக்குச் செய்திபயந் தவட்குநயம் பயக்கச் செப்பி,
யொன்றியநன் னலங்கடரும் பெருங்கல் யாணமுறச் செய்வாளெருப்
பட்டா ணலப்பட் டாங்கு. (கள)

வேறு.

காசில்வா னகல மூட்டக் கனகக்காற் பந்த ரிட்டுத்
தூசுபட் டாடை யான்மேல் விதானித்துத் தூபந் தீபந்
தேசொளி விளங்கு பாளை செறிஞிறை கரகம் வைத்து
மாசில்வெண் டரள மாலை மாணிக்க மாலை நாற்றி. (கஅ)

நிறைபனி நீரெ டுத்து நிலந்தொறுந் தெளித்து வாச
நறுமலர் சுண்ணம் பொற்பூ நவமணி கலந்து சிந்தி
மறுவறு சமிதை நெய்பால் பாலிகை பரப்பி மாசி
லறுகொடி தருப்பை சூட்டி யட்டமங் கலங்கள் வைத்தார். (கசு)

தோரண நாட்டி யெட்டுத் திசைகளுந் தொழில்சேர் செம்பொற்
பூரண குடநி ரைத்துப் பூகநீள் [4]கதலி நாட்டி
வாரண மெருங்கும் வீதி மதுரையிற் சிறக்க மிக்க
காரண முதல்வன் காணக் காவண மலங்க ரித்தார். (உ0)

கள. பயந்தவட்கு - தாய்க்கு.

கஅ. சுபகாலங்களிற் பூரணகும்பத்தின்மீது கமுகம்பாளைகளைச் செருகி வைத்தல் மரபு; "கீழ்பாற் றிசையின் மிசைவைத்த, வெள்ளிக் கும்பத் தினங் கமுகின் பாளை போன்று விரிந்துளதால்" (கம்ப. மிதிலை. எஉ.)

கசு. அறுகு - மங்கலதிரவியங்களில் ஒன்று.

உ0. காரணமுதல்வன் - பரமசிவன்; "காரணவாளை யேத்தி" என்ரூர் முன்னும்; தீருநாட்டு. நி.

(பி - ம்.) [1] 'மருமலரிதழி' [2] 'வானநாட்டென்னல்யாயுங்' [3] 'காணுமா றெங்கென்று' [4] 'கதலிநட்டு'

பல்லியங் கறங்க வெண்ணில் பார்த்திபர் வழுத்த முத்தச்
சொல்லரு மால வட்டந் தோகையர் வீசச் செம்பொ
னல்லசா மரையி ரட்ட நாயகன் வரவு பார்த்து
வல்லிநல் லணியாற் பொங்கி மாசிலா சனத்தி ருந்தாள். (உக)

கந்திமா முனிவன் குண்டோ தரனெனு நாமம் [1]பூண்டோர்
வெந்திறற் பூத மாகி வெண்மதிக் குடைநி ழற்ற
வந்தணர் குணலை கொள்ள வரிவையர் வீசுகள் சிந்தச்
சுந்தரன் வந்தான் முன்னஞ் சொன்னநா டன்னி லாங்கு. (உஉ)

வேறு.

நயந்தரு[2]தாண் மிசைவீரக் கழல்பு னைந்து நன்கரத்துக் கடககங்
கணஞ்செ றித்து, வியந்ததிரு [3]மார்பில்விடு நாண்முத் தாரம் வெண்
புரிநூ லணிந்தணிகுங் குமந்தோய் தோளிற், றயங்கியசண் பகமாலை
கழுநீர் மாலை சாத்திமருங் கார்த்தகி றழைவார் காதிற், புயங்க
வொளி மாணிக்கக் குழையிலங்கப் புதுமலர்வா சிகைமுடியிற் பொ
லிய வந்தான். (உங)

வேறு.

மதிநெறி மாதை வேட்பான் மாமணக் கோலங் கொண்டு
கதிதர வந்தோன் மிக்க கடிமணங் காண்பா னெண்ணி
யிதமுறு தேவர் மூன்று விருங்கண நாதர் முற்றும்
புதுமையின் வந்தார் சூழ்ந்து சயசய வென்று போற்றி. (உச)

ஆதிநான் முகன்மா லேத்த வரம்பையர் வாழ்த்தெ திப்பச்
சோதிசேர் கானம் பாடத் தும்புரு நார தாதி
தீதறு சடங்கு மைந்தன் [4]செலுத்தநன் முகுத்தத் தேற்ப
மேதகு மாதை வேத விதிப்படி மன்றல் செய்தான். (உடு)

உக. ஆலவட்டம் - விசிறி; இது தாலவிர்த்தமென்னும் வடமொழிச் சிதைவு. இரட்ட - மாறியசைய.

உஉ. குணலை - ஒருவகைக்கூத்து; அது பல்வரிக் கூத்தைச்சார்ந்தது: சொன்னநாள், பங்குனி உத்தரம்.

உங. தனிலும் குழையும் இலங்க. வாசிகை - கோத்தமாலை.

உச. மதிநெறி - சந்திரகுலம். சயசய-சயமுண்டாகுக, சயமுண்டாகுக.

உடு. நாரதாதிகள் கானத்தைப்பாட. மைந்தன் - முருகக்கடவுள்; இவர் திருமணச்சடங்கு நடத்தியதை, "மருளாரும் பவத்தொடரை மாற்றியதென் னன்மகளாய் மவுலிசூடிப், பொருளாரும் புலிவிசயஞ் செய்தாசு செலுத்திய மும் முலைப்பூர் தேனைத், தெருளாருந் தமிழ்மதுரை நாதன்மணஞ் செயவிதி நூற் சடங்கு செய்தே, யருளாருங் கடம்பவனத் தறைகுமர குருபரனே யகத் துள் வைப்பாம்" (கடம்ப. பாயிரம், நு) என்னும் திருவிருத்தத்தாலு

(பி - ம்.) [1]'பூண்டோன்' [2]'கான்மிசை' [3]'மார்பிலிடும்' [4]'செலுத்தினன் முகூர்த்தத்தொப்ப'

சேர்ந்தவொண் பாண்டி நாடு செய்தமா தவத்தி னுனும்
1 வாய்ந்தமா மாதைப் பெற்ற மாதுறு தவத்தி னுனு
2 மார்ந்ததொன் முறைமை யிற்பெண் ணுயக மாகா தென்று
3 வேய்ந்தபொன் முடிக வித்தான் விசயமண் டபத்தி ருந்து. (உசு)

பெருமை4யே தருங்கோ வென்னும் பெயர்தன தாத லாலே
குரைகட லுலகின் மிக்க 5கோமாற வரும னுனன்
சுருதிமூ வுலகுங் காக்குஞ் சுந்தர மாற னென்றே
மருவிய வெழுத்து மிட்டான் வாய்மனத் துக்கு மெட்டான். (உஎ)

அருட்புனை நீதி யோங்க வருச்சனை புரிதல் வென்றி
6யுருத்தகு மரசர்க் கென்று மூரித்தென வுவமை யில்லா
7 விருக்கறை சிவலிங் கத்தை யிம்மையே தருவா னென்றே
யுரைத்தவா கமத்திற் பூசித் தருளின னுலகங் காண. (உஅ)

ஆகத்திருவிருத்தம் - ூகஅரு.

மூணர்க. இதுபற்றியே, 'சடங்குக்கத்தன்' என்பர்பின்னும்; எ: கூ. "நான் கெயிற் நெருத்தற் பிடர்ப்பொலி வரைப்பகை, யறுகால் குளிக்கு மதுத்தொ டை யேத்த, முட்டாட் செம்மலர் நான்முகத் தொருவ, னெண்ணிநெய் யிறை த்து மணவழ லோம்பப், புலியளக் குண்ட திருகெடி மாலோ, னிருகர மடிக் இப் பெருநீர் வார்ப்ப, வொற்றை யாழியன் முயலுடற் றண்சுட,ரண்டம் விள ர்ப்பப் பெருவிளக் கெடுப்ப, வளவாப் புலன்கொள் விஞ்சைய ரெண்மரும், வள்ளியிற் கருவியிற் பெரும்புகழ் விளைப்ப, முனிவர் செங்கரஞ் சென்னியாக, வுருப்பசி முதலோர் முன்வாழ்த் தெடுப்ப, மும்முலை யொருத்தியை மணந் தல காண்ட, கூடற் கிறைவன்" (கல். ஈச.)

உசு. "பெருநீர் வையை வளநீர்க் கூட, லுடலுயி ரென்ன வுறைதரு நாயகன், கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி, யைவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து, விரிசடை மறைத்து மணிமுடி கவித்து, விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து, வழுதி யாகி முழுதுல களிக்கும், பேரரு ளாளன்", "மதுரை மாநகர்ப் பூழியனுகிக், கதிர்முடி கவித்த விறைவன்" (கல். உ,உடு.)

உஎ. முடிமன்னர்களின் பெயர்களில் 'கோ' என்பதைச் சார்த்திக் கோச் சேரன், கோச்சோழன், கோப்பாண்டியனென வழங்குதல் மரபு. எழுத்த - கையொப்பம். சோமசுந்தரக்கடவுள், பாண்டியராசாவாக வீற்றிருந்தபொ ழுது, 'சுந்தரமாறன்' என்று கைச்சாத்திட்டருளினர்.

உஅ. இருக்கு - வேதம். "மதிக்குலம் வாய்த்த மன்னவ னுகி, மேதினி புரக்கும் விதியுடை நன்னு, ணடுவூர் நகர்செய் தம்பவர் துடைக்கு, மருட்குறி நிறுவி யருச்சனை செய்த, தேவர் நாயகன் கூடல் வாழிறை" (கல். கசு.)

(பி-ம்.) 1'வாழ்த்த' 2'ஆய்ந்த' 3வேந்தர்' 4'ஏர்தருங்' 5'கோமாறன்மருக னுனன்' 6'உருத்தரு' 7'இருக்கினற்சிவ'

ரு.—பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்.*

பாதிமா துடையான் வேந்தர் பாவையை மணந்த [1]பின்றை
யாதர வயன்மா லாகண் டலன்முத னிறைவு செய்து
நீதியின் விடித்து மற்று நின்றவர் தம்மை நோக்கிச்
சோதிசேர் நன்னீ ராடி மென்றலுந் தொழுதெ ழுந்தார். (க)

முனிவர்[2]கந் தருவர் நாகர் சாரணர் சித்தர் முன்னுக்
கனலெழு பசியாற் [3]போய்ப்பொற் கமலவா வியினீ ராடி
யினியதஞ் சடங்கு செய்தே யேத்தரு நீறு சாத்தி
யினவரும் வாமுன் வந்த வநந்தமா முனிவன் சொல்வான். (உ)

வந்துமா மறைகள் பாட மகிழ்வுட னூடுந் தில்லை
யெந்தைபொன் னம்ப லத்தி னேத்தருங் கூத்தை யேத்திப்
புந்தியா லிறைஞ்சி னல்லாற் [4]புசிப்பதோர் நாளு மில்லை
சுந்தரா போவ லங்க ணென்றடி துதிப்பக் கண்டு. (ங)

நீங்கரும் வெயிலா னெந்து நீபமா வனத்தில் வாவிப்
பாங்கர்யா னளவில் கால [5]முண்டிருந் ததுப ணிந்நீங்
கோங்கிய மகவான் வேட்டை யாடிவா னெருகால் வந்து
தீங்கற வளித்த செம்பொற் சீதள விமான மீதால். (ச)

க. ஆகண்டலன் - இந்திரன். நிறைவு - மகிழ்ச்சி.

உ. சடங்கு - நித்தியகன்மம். அநந்தமாமுனிவன் - பதஞ்சலிமுனிவர்.

ங. ஏத்தரும் - மேன்மையைத்தரும்; துதித்தற்கரியவென்றுமாம்.

ச. நீபமாவனம் - கடம்பவனம். இருந்தது, அளவில்கால முண்டு. பணிந்து அளித்த.

* "கொட்டிசைந்த வாடலாய்", "புன்சடை, பின்தயங்க வாடுவாய்" (தி.ருஞா. தே.திருவாலவாய்), "குழகனே கோலவில்லீ கூத்தனே" (தே.தி.நா. "பதஞ்சலிக்கருளிய பரமநாடக", (தி.நவா. கீர்த்தி: கஉ), "காடிருமூனி வர்க் காடியபெருமான்", "ஒருபாற் பசுங்கொடி.....கூடன் மாநக ராடியவமு தை", "முனிவ ரேமுற வெள்ளியம் பொதுவின், மனமுங் கண்ணுங் கனி யக் குனிக்கும், புதிய நாயகன்" "எங்குள வுயிரு மின்ப நிறைந்தாட, நாடக விதியோ டாடிய பெருமான்", "கூடல், வெள்ளியம் பொதுவிற் கள்ளவிழ் குழலொடு, மின்பநடம், புரியுந் தேவ நாயகன்", "வெள்ளியம் பலத்துட் டுள் ளிய பெருமான்", "இருத்தமிழ்க் கூடற் பெருந்தவர் காண, வெள்ளியம் பலத் துட் டுள்ளிய ஞான்று" (கல். கக, உ0, உஉ, உடு, கூ0, கூசு, எகூ.)

(பி - ம்.) 1'பின்னர்' 2'கந்திருவர்' 3'பொங்கி', 'போகிக்' 4'பொசிப்பது' 5 'உண்டிருப்பது'

திக்குறுந் தலங்க டம்மூட் சிந்தையித் தலத்தே செல்லு
மைக்குழன் மடவா ளோடும் [1]வளம்பட விதன்கண் டென்பான்
மிக்கநீ காண்டி யென்று வெள்ளியம் பலத்துக் காணத்
தக்கநற் சொக்கன் சொக்கத் தாண்டவம் புரிந்தா னன்றே. (டு)

பர[3]முனி வரருண் மிக்க பதஞ்சலி முனிகண் ணுர
வரமுறக் கண்டா னந்த மகிழ்ச்சிமாக் கடலுண் மூழ்கி
யுரைகெழு துதியா லேத்தி யுண்டுநல் விடையிற் போகப்
புரையற யாரு மூண்டு போயினு ரருளா வாழ்த்தி. (சு)

வேறு.

மதஞ்சொரிகொல் குஞ்சரவி ருஞ்சருப [4]கஞ்சுகவ ரன்சயில வஞ்சி கொழுநன், விதஞ்செறிபு ரஞ்சுடரெ டுஞ்சரம்வி டுஞ்சதுரன் விஞ்சையர்வி ரிஞ்சரிறைவ, னிதஞ்செய்கொடி நஞ்சவுர கஞ்[5]சசிமி லெஞ்சசடை யெஞ்சலில சஞ்ச லதுளம், [6]பதஞ்சலிநி றைஞ்சடியி றைஞ்சிடந டஞ்செய்தப ரஞ்சுடர்த ருஞ்சொ ருபமே. (எ)

தலம்புகழ் தரும்.....கடம்பவனமே.*

ஆகத்திருவிருத்தம் - ககூ.

டு. வெள்ளியம்பலம்: "கொன்றையஞ் சடைமுடி மன்றப்பொதியிலில், வெள்ளியம் பலத்து" (சிலப். பதி. சஂ-சக.) சொக்கன்: "ஆலவாய்ச் சொக்கன்", "ஆலவாய்ச் சொக்கனே" (தே. திருஞா.) சொக்கத் தாண்டவ மென்பது, சாக்கிக்கூத்தின் வகையினுள் ஒன்றுன சுத்தநிருத்தம்; சுந்தரதாண் டவமென்றும் கூறப்படும். இது, நூற்றெட்டுக் கரணமுடைத்தென்பர்; (சிலப். பக். அ0.)

சு. பதஞ்சலி முனிவர் செய்ததுதி, சுலோகரூபமாக வழங்குவதுடன் அன்பர்களாற் பாராயணஞ் செய்யப்பெற்றும் வருகிறது.

எ. கஞ்சுகம் - சட்டை. இதஞ்செய் அசஞ்சலன். உளம் நிறைஞ்சு - மனமகிழ்ந்து.

* இச்செய்யுளின் முழுப்பாகத்தை இப்புத்தகத்தில் ச - ஆம் பக்கத்திற் பார்த்துக்கொள்க.

(பி - ம்.) 1'வளன்' 2 'கஞ்சொக்கன்' 3 'முனிவரினுமிக்க' 4 'கஞ்சுகன் வருஞ்சயில' 5 'சசிமலிசத்த' 6 'பதஞ்சலனிறைஞ்சடி'

சு.—பூதமுண்ட திருவிளையாடல்.

பொலிவின் வந்தவர் யாவரு நிறைவுறப் [1]புசித்தே
யலகி னன்கொடு [2]போயின ரரும்பெரு விழாவின்
ரெலிவில் பல்வளத் தொகுதிகண் டிறத்தலை மதித்துத்
தலைமை சேரெழின் மடவர றலைவனுக் குரைப்பாள். (க)

பொருவி லாதவெஞ் சோற்றுயர் பொருப்பினைக் காட்டி
யிரவி தீமதி யுடுகுல மிராசிக டிதிக
ளரிய தேவர்கண் முனிவர்க ளிராக்கத ரசுரர்
பெரிய மானிட ரியக்கர்விச் சாதரர் பிசாசர். (உ)

உரக நாயக ராதியர் யாவரு முண்டுஞ்
சொரியு மிவ்வரை யின்னமூர் தொலைந்ததோ வில்லை
யருளி னலிது தொலைந்திட வயில்பவ ரொருவர்
வரவு காண்கிலே னுண்பவர் [3]யாரினி மண்ணில். (ஙு)

[4]தேசி லங்குகின் னெடுபெருந் திரள்வரு மென்றே
யாசை கூரயான் [5]மடி தீ து நூல்வழி யமைத்த
மாசி லோதனந் தெய்வவான் வழுதிகேள் கிடப்பி
னூசு மேலினி யென்செய்வ துரைத்தரு ளென்ன. (ச)

வேறு.

மங்கையங் கயற்கண் ணிக்கு வாய்த்தவன் மூறுவல் கூரா
விங்கியா வருமை ருந்தி யேகின ருயர்வான் மூட்டப்
பொங்கிய [7]செந்தெ லன்னப் பொருப்பையார் தொலைப்பார் துங்கச்
செங்கயற் கருங்கட் பச்சைத் தேவிசொல் லென்ஞ முன்னம். (ரு)

க. நன்கு - இன்பம். உறத்தலை மதித்தென்று இங்கே கூறியதுபோல, "தன்னிக ரில்லை யென்னுந் தடாதகைவலி" என்பர் பின்னும்; எ.

உ. உடு - நட்சத்திரம்.

ஙு. இவ்வரையென்றது, சோற்று மலையை.

ச. முதமடைதூல்-முதிய பாகசாஸ்திரம். தெய்வவான் வழுதி: விளி; 'தெய்வப்பாண்டியன்' (கூட. கூ.)

ரு. தேவி: விளி.

(பி - ம்.) 1 'பொசித்தே' 2 'போயபின்' 3 'யாவரிம்' 4 'தேசிலங்க' 5 'மடைமுதனூல்','மறைமுதனூல்' 6'யாவருந்திரண்டே' 7'செல்வச்சொன்றிப் பொருப்பை'

சார்ந்தவெம் பசியுந் தண்ணீர்த் தாகமு மலைப்ப வொந்து
காய்ந்தபே ருதரக் குண்டோ தரனெனுங் கடிய பூதம்
வாய்ந்தநீள் கவிகை கொண்டு வருதலா லிளைத்தே [1]னிந்த
வார்ந்தவெண் சொன்றிக் குன்றை யருளென வணைந்த தாங்கு. (சு)

இன்னல்கூர் பசியி னுனைந் திடருறு [2]மெண்மை யும்பின்
[3]றன்னிக ரில்லை யென்னுந் தடாதகை வலியும் போக்கத்
தென்னவன் மதுரை மன்னன் சிறிதுளே [4]முறுவல் கூரா
வுன்னுடைப் பசிதான் றீர வுண்ணென வருள்சு ரந்தான். (எ)

வெள்ளிமால் [5]வரையே போலும் [6]வெண்மையு மிமவான் போலுந்
தெள்ளிய வுயர்வு மூள்ள சோற்றினைச் சிறிது போழ்தி
லுள்ளதே னெய்பால் வாவி யுடைத்துவிட் டிருகை யாலு
மள்ளியுண் டதும டந்தை யதிசயித் [7]தச்சங் கூர. (அ)

விண்ணுயர் பூத முண்ணு [8]மிதவையு மிகவு மாழ்ந்த
தண்ணிய வயிறுங் கண்டு சங்கர னேவ லாலிம்
மண்ணிலோர் பூத முண்டல் கண்டன மற்று மொன்று
நண்ணுமே லுமும் போதே முணவென நயந்தார் யாரும். (கூ)

ஆகத்திருவிருத்தம் - உ0க.

எ.—ஆறழைத்த திருவிளையாடல்.

சொன்றிமலை [9]துய்த்துமுத ரத்தெழுசு டுந்தீ
யன்றைவட வைக்கனலெ னப்பெரித லேப்பக்
[10]குன்றினெரி கர்த்திடு[11]கு றட்டனுவ ருந்தா
நின்றுசிவ னேப்பரவி நேர்படவு ரைக்கும். (க)

தேவர்தொழு தேவவருள் சேரிறைவ முன்னு
ளோவிறிரை [12]வாரிதிய டுக்களையு வந்தா
யாவியுறு சிற்றுணவி லுலறவி ளைத்தேன்
மேவுபசி யின்னுமெனை விட்டதிலை யின்றே. (உ)

சு. சொன்றி - சோறு. பூதம் அனைந்தது.
எ. எண்மை - எளிமை. கூ. மிதவை - சோறு.

(எ)

க. துய்த்தும் - உண்டும். குறள் - பூதம்; தனு - உடம்பு.

உ. அடுக்களை-மடைப்பள்ளி. இறைவனுக்கு உணவாக விடத்தைக்கொடுத் தமையாற் கடல் அவருடைய அடுக்களையெனப்பட்டது. ஆவி-புகை. அற-மிக.

(பி - ம்.) 1 'முற்றவார்ந்தனன்' 2 'மென்மை' 3 'தன்னிகரிலாதவந்தத்' 4 'முறுவல்கூர்ந்தாங் குன்னிடைத்தாகந்' 5 'மலையே' 6 'வெள்ளையும்' 7 'அகமுட் கூர' 8 'மூணைவயு' 9 'துற்றும்' 10 'குன்றினம்' 11 குறட்டனும்' 12 'வாரிதிகடித் தனை'

என்றுமுறை யிட்டலற வீறுளள வுந்தாழ்
சொன்றிதிகழ் நான்குகுழி தோன்றியிட [1]முன்னஞ்
சென்றுகயி லேக்குவடெ னத்தனிதி ரட்டா
வென்றியின்வி ழுங்கியது மேதினிவி யப்ப. (கூ)

ஆங்கதுவி ழுங்கியபி ஞவியெழு தண்ணீர்த்
தாங்கரிய தாகமுற லாலுட[2]ற ளர்ந்தூர்ப்
பாங்குள[3]ம டுக்கிணறு வாவிகள்ப ரந்தே
தேங்குபுன லுள்ளனகு டித்ததுதி கைப்ப. (ச)

இப்படிகு டிப்பவுமெ ழுந்தபரி தாப
வெப்பமம ராமலிறை வாவினேயி னேனுக்
கப்பினேய ளித்தருள கத்தடிமை யென்றே
செப்புமுன ழைத்தனர்செ ழும்புனலி யாறு. (ஞ)

கோகனக வாவிகள்[4]கு லைத்தணைமு றித்தே
யோகையுற வீசுதிரை யோடுநுரை [5]சிந்தி
மாகமுற நீரிரும ருங்கினுகெ ருங்கா
வேகமொடு வந்ததெழ வேகவதி யாறு. (ட)

வேறு.

கண்டனன் காட்டக் குண்டோ தரன் [6]கடி தியாற்றுட் புக்குத்
திண்டிறற் பேழ்வா யங்காற் துறிஞ்சிஞன் சென்ற நீரு
[7]மண்டுறு நீருஞ் சென்று மணலெழக் கண்ட மண்ணூர்
பண்டையின் வியந்தார் பாவை பழிச்சிஞள் பொறுத்தி யென்று.(எ)

கூ. ஈறு - பூமியின்கீழ்எல்லை. அன்னக் குழிமண்டபமென்று ஒருமண்ட பம் மதுரையில் மேலைச் சித்திர வீதியிலுள்ளது; பூதமுண்டதிருவிளையாடல் விழாநடைபெறுதற்கு இடமாகவுள்ளது; இதிற்பலதெய்வவடிவங்கள் உண்டு; இதிலிருந்த குண்டோதரவடிவம் இக்காலத்தில், திருக்கல்யாண மண்டபத் தில் வைக்கப்பெற்றுள்ளது.

ச. மடு - மாணிடாக்காத நீர்நிலை.

ஞ. பரிதாப வெப்பம் - மிக்கவெப்பம். அமராமல் - அடங்காமல். இறை வனைப் பூசிப்போர் முதலியவர் அகத்தடிமை யெனப்படுவர்; "அகத்தடிமை செய்யு மந்தணன்ரு னரிசிற் புனல்கொண்டுவந் தாட்டுகின்றான்" (தே.சுந்தா. அரிசிற்கரைப்புத்தூர்.) அடியேன் அகத்தடிமையென ஒருசொல் வருவிக்க.

சு. எழ - மிக; "கருணைகூர்ந் தெழமுழங்கி" (சூசு: ஞஞ.) வேகவதி யாறு - வையைநதி.

எ. சென்றநீர் - கிழக்கேசென்ற வெள்ளம். மண்டுறு நீர் - மிக்குவரும் வெள்ளம்; மண்துறுநீர், மண்ணிலே ஊறுகின்ற நீருமாம்.

(பி - ம்.) 1'னன்கு' 2'தளர்ந்தெம்' 3'மடுக்கள்கிணறுவிகள்' 4'குலைத்தலை', 'குலைத்தணி' 5'சிந்த' 6'கடியாற்றுட்' 7'மண்டுநீருஞ் சென்றகண்'

ஆரவுந் தொலையா வாழ்ந்த குழியுழை யயினி மூற்றும்
வாரிதி யுருவா யாற்றின் வரும்பெருஞ் சலில மூற்றுஞ்
சேரவுண் டிறிஞ்சி யொல்லைத் தேக்கிடு மவன்ப ணிந்தான்
[1] சாரரு மன்றல் செய்து சகதெறி யாள்வோன் ரூளில். (அ)

கைத்தொழிற் பூதங் கண்ட குளமெனக் [2]கண்டெய் தென்று
வித்தகன் பணிப்ப வெங்குங் [3]கண்டது வியப்பப் பூதம்
பத்திசேர் மணற்ப ரப்பும் பந்தர்நீ ராவி வாவித்
தத்துதெண் டிரைக்க ரைக்க ணிருந்தனன் சடங்குக் கந்தன். (கூ)

வாவியின் பெருமைக் கேற்ப வளமலி [4]கழனி கண்டு
தாவில்பல் [5]பதியுங் கண்டு தலந்தொறு நாட தாக்கி
யோவற [6]விளக்க விப்பா லுயர்ந்ததோர் பதியை யங்கட்
காவண வாவிப் பேராற் காவண நல்லூ ரென்றூர். (கo)

நாலிருங் குழியி லன்ன நாற்பெருந் திரளா யாக
மேலெழ விழுங்கித் தண்ணீர்த் தாகத்தான் மெலிந்து பூத
மோலிடக் கண்டு வேக வதியினை யொல்லை யங்கட்
சாலமுன் னழைத்தா னியாவ னவனடி சரண மன்றே. (கக)

ஆகத்திருவிருத்தம் - உகஉ.

அ. ஆரவும் - உண்ணவும். அயினி - சோறு. வாரிதியுருவாய்: "தெண்டிவருநதி" என்பர்; நஅ: நிருஉ.

கூ. பூதங்கண்டகுளம்: இது திருப்பரங்குன்றத்துக்கு வடக்கேயுள்ள தோரோரி; 'தென்காற்கம்வாய்' எனவழங்கும். குண்டோதரனிய பூதத்தால் வெட்டப்பட்டது; 'இதன்கரை பூதங்கண்டகரை' என இக்காலத்து வழங்கும். இதன் சமீபத்தில் 'கூடைதட்டிப்பதம்பு' எனச் சிறியமலையொன்றுண்டு. வெட்டிய மண்ணையெடுத்துக் கரையிற் கொட்டியகூடையைக் குண்டோதரனிய பூதம் இதில் தட்டியதென்பர். கண்டது - செய்தது. பந்தரையும் நீராவியையுமுடைய வாவி. சடங்குக் கந்தன் - திருமணச்சடங்கை நடத்திய முருகக் கடவுள்; ச: உரு - ஆம் செய்யுளின் குறிப்பைப்பார்க்க.

கo. காவணம் - பந்தர்.

கக. ஒலிட - முழங்க. "பனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாலையைத், திருப்பெரு வதுவை பொருத்திய வக்காட், சொன்றிப் பெருமலை தின்றுகனி தொலைத்த, காருடற் சிறுகைக் குறுந்தாட் பாரிட, மாற்ரு தலந்த நீர்நசை யடக்க, மறிதிரைப் பெருநதி வரவழைத் தருளிய, கூடலம் பதியுறை குணப் பெருங் கடவுள்" (கல். கச.)

(பி - ம்.) 1 'சார்வரு', 'சார்வுறு' 2 'கண்டிடென்று' 3 'கண்டுமீண்டது வெம்பூதம்' 4 'கழனிநாடும்' 5 'பதிகண்டிப்பால்' 6 'விளக்குவித்தான்'

அ.—கடலழைத்த திருவிளையாடல்.

வயமுறு மன்னவ னுகும் வள்ளல்பின்
னயனெடென் செய்தன னெனந வின்றனீர்
பயனுறு முனிவிர்காள் பரவ சத்தைவிட்
டெரதி சயமுள [1]துரைப்பல் கேண்மினே. (க)

கனவரை வில்லினன் கதம்பக் [2]கானினன்
றனதுயர் மனத்தினை நாளிற் சுழ்குழல்
புனைவழி பாட்டினுற் புவியில் வேறொரு
நினைவறத் தன்னுடை நினைவி னுக்கினள். (உ)

சதமுறை துதித்தொரு நாட்ட னித்துநின்
னெனதர்படி மடியனேன் முய மங்கலி
யுததியின் மூழ்குவா னுவகை கூர்ந்தன
ளிதுதிரு வுளத்தடைத் திரங்கி டென்றனள். (ஊ)

[4]நயந்தவை யாவையு நல்க வல்லவன்
பயந்தரு காரியம் பகரக் கேட்டுள
மியைந்துகே ளாதுபோ லிருப்ப நாயகி
வயங்கொளி [5]மதிமுகஞ் சால வாடினுள். (ள)

மற்றவண் மதிமுக வாட்டங் காண்டலுஞ்
சற்றுளே நகைசெய்து தரும நாயகன்
மூற்றுநா மிருந்தது [6]மோன மாகவுன்
சொற்றருந் திருமுகச் சோகங் காணவே. (ஙு)

க. பூதத்திற்கு அன்னக்குழியும் வையையும் அழைத்தளித்ததுபற்றியும், மாமிக்கு எழுகடலழைப்பது பற்றியும் இறைவனே வள்ளலென்றார். பரவசத்தைவிட்டுக் கேண்மின்.

உ. கதம்பக்கான் - கடம்பவனம். நாளில் - காலக்கிரமத்தில்; கஉ: கக. மனத்தினைத் தன்னுடை நினைவின் ஆக்கினள்.

ங. சதமுறை - பலமுறை; ஙஏ: ஙக. அதர்படும்-வழிப்படுகின்ற. தாய் அமங்கலி. உததி-கடல். திருவுளத்தடைத்து - அக்கிரித்து; திருவுளம்பற்றி.

ச. பயம் - பிரயோசனம்.

ஙு. மோனமாக இருந்தது. முகச்சோகம் - முகவாட்டம்.

(பீ - ம்.) 1'உரைப்பக்' 2'கானவன்', 'காவினன்' 3'அதர்வுறு' 4'நயந்தன', 'நயந்தரு' 5 'தருமுகஞ்' 6 'மோனமாகியுன்'

மாதர்க டிலகமே மாசில் கற்புடைக்
கோதையே யென துளங் கொண்ட தெய்வமே
யேதமீ யொழி[1]யொழி யேழு வாரியு
மாதரத் தழைப்பல்கா ணெனவ ழைத்தனன். (சு)

தகநுரை சிதறிவெஞ் சண்ட வெண்டிரை
யிகலிவா ளெடுபொரக் கலித்தி லங்குசெந்
தொகுமணி யொளியிஞற் சிவந்து துண்ணென
மகர[2]மீ னெழவெழ வந்த வாழ்கடல். (எ)

பாங்குடை மதுரையம் பதியு ளோரெலா
[3]மாங்கவை வருதல்கண் டதிச யத்தொடுந்
தாங்கரும் பயத்தொடுஞ் சார்ந்து தாணுவே
யாங்களென் [4]செய்குவ மெனத்து தித்தனர். (அ)

[5]உற்றெருருங் குறவரு முததி யாவையு
மற்புத ஞணையா லங்கி மூலையில்
விற்பொலி கடலென விளங்கி மூற்றிகழ்
பொற்புறு தடத்திடைப் புகுந்த மர்ந்தவால். (கூ)

ஓதரு [6]மஞ்ஞகா முடைத்த டாதகை
யாதரத் தடிபணிந் தருளே வாழ்த்தின
ரூதிலேழ் கடல்களுஞ் சேர்த லாற்றடம்
பூதலத் [7]தெழுகட லெனப்பொ லிந்ததே. (கo)

ஆகத்திருவிருத்தம் - உஉ.

சு. ஏதம் - துன்பம்.

எ. சண்டம் - வேகம்.

கூ. அங்கிமூலை - அக்கினிமூலை. தடம் - சிவதீர்த்தம். "மாமி யாடப் புணரி யழைத்த, காமர் கூடற் கிறைவன்" (கல். உகூ.)

கo. மஞ்ஞகரம் - மகிழ்ச்சி. காஞ்சனமாலைக்காகவருவித்த ஏழுகடல் களும் தன்பால்வந்து அடங்கப் பெற்றமையின், சிவதீர்த்தம் இப்பெயர் பெற்றது; இதன் நிருதிமூலையில் மிகப்பழையதாகக் காஞ்சனமாலை கோயி லொன்று உள்ளது.

(பி - ம்.) 1'பொழிலேழு' 2'நீரெழ' 3'ஆக்கதுகண்டுகண்டு' 4'செய்குவே மென' 5'உற்றெழுங்குற' 6'மஞ்ஞாதம்' 7'எண்கட'

கூ.—மலயத்துவசனையழைத்த திருவிளையாடல்.

மாண்டகு கடல்கள் சுண்டி வழுத்திமுன் றுதிக்கு மாதை
யீண்டுநீ போயுன் மாதா வியைந்தபே ராசை தீரப்
பூண்டகல் வரங்க ணல்கும் புணரியின் மூழ்கு வித்து
மீண்டுவா வென்றான் மீளா வழிதர வல்லான் மெல்ல. (க)

ஆங்கது கேளா முன்ன ரக[1]மகிழ்ந் தியாயின் பாற்சார்ந்
தீங்கொரு கடலா டற்கென் றெண்ணினை யீதொ ழிந்தின்
றேங்குமேழ் கடலுட் வந்த வொருகணத் தெனது கேள்வன்
பாங்குறும் பெருமை யாலிப் பரவையு ளாடு கென்ன. (உ)

பரிவுகூர்ந் தருட்பெம் மானைக் கணவனு வுடைய பாவாய்
பொருவில்கா தலனே டாதல் புதல்வனே டாத லீரும்
வரிசையான் கன்னே டாத லாடித லன்றி வங்க
ரலையுட் டனிபுக் காடார் மடந்தைய ரென்ப ரென்றாள். (ங)

என்றியாய் மொழிந்த மாற்ற மிறைக்குவந் துரைத்தா டற்கு
[2]மன்றன்மா கணவ னில்லை மகவில்லை யென்ற மூங்க
வொன்றுகா தலனே டாடி முத்தம தீர்த்த மாக
வென்றியுன் றந்தை தன்னை யழைக்கின்றே மெலியே ளுள்ளம். (ச)

அவையுறு துறக்க நீங்கி யவனிமீ திழிந்த வாறே
தவமுறு நம்ம மாமி [3]தணிவிலா [4]தரங்கெ டாமற்
புவிபுகழ் பெருங்கல் லோலப் புணரியின் மூழ்கச் சொல்லென்
றுவகைமா மடிக டம்மை யழைத்தன னுலகங் காண. (ஞ)

க. வழுத்தி - சொல்லி; "வழுத்தீர் மதிச் செங்கண்மால்" (அழகர்கல. எஎ). மாதா - தாய். புணரி - கடல்.

உ. பெருமையால் வந்த.

ங. காதலன் - கணவன். ரலை - கடல். மடந்தையர் ஆடாரென்பர்.

ச. யாய் - தாய். மன்றல் - கலியாணம்.

ஞ. அவை - சபை. நம்ம - நம்முடைய; தனித்தன்மைப்பன்மை. கல் லோலம் - அலை. மாமடிகளென்பது மாமனுரென்னும் பொருளைத் தருவதொரு சொல்; "நின்பால் வந்தனன் மாமடி" (உஉ: கஉ); "ஊத்தைத் தலைநீத் துய்த் தொழிந்த வொருமா மடிக ளொருமுருட்டு, மோத்தைத் தலைபெற் றமைபாட மூரிக் கபாடந் திறமினே" (தக்க. சசு); "மாமடிகளிடு சாபமும்" (மீனுட்சி. அம்பலி. கூ.)

(பி - ம்.) 1'மகிழ்ந்தாயின்' 2'மன்னமர்' 3'தனிவிரதன்' 4'அகங்கோடாமற்'

வேறு.

மண்டு செல்வ மலயத் துவசனைக்
கண்ட மானிட ரன்றிக் கணங்களுங்
கொண்டல் வண்ணனுங் கோகன கத்தனு
மண்டர் கோனு மதிசய முற்றனர். (சு)

வந்து போற்றுதல் கண்டு மகிழ்ந்துபோற்
[1] றந்த மாமகட் கன்புறக் காட்டியே
யுந்தை யோடுமுன் முயை [2]யுவப்புற
மூந்தை யாழ்கடன் மூழ்குவி யென்றனன். (எ)

ஏத மீங்கு தடாதகை யின்றுமீ
காதல் கூர்ந்த [3]கணவனெ டாடென
வாத ரித்த கணவனே டாங்கவ
ளோத வேழ்கட லாடி யுவந்தனள். (அ)

மன்று ணுயக வாழ்ந்தனம் வாழ்ந்தன
மென்று [4]வாழ்த்தி யிறைஞ்சல்கண் டித்தம
னன்று தன்னுல கீந்திட வாங்கவர்
சென்ற டைந்தனர் தெய்வத் தனுக்கொடி. (கூ)

ஆகத்திருவிருத்தம் - உகக.

கo.—உக்கிரன்பிறந்த திருவிளையாடல்.

மன்னர்க் கரசன் மலயத் துவசன்
றன்னற் புதமண் முழுதுந் தனியே
பொன்னிற் [5]றிகழும் புரமீ தெனவே
[6]யன்னப் பெடையோ டரசாண் டனனே. (க)

எ. உந்தை - உன்தந்தை.

அ. தடாதகை: எழுவாய்.

கூ. தன்னுலகு - சிவலோகம். தெய்வத்தனு - திவ்யசரீரம்.

(கo)

க. "காடோர் கேரென" என்பர் பின்; கக:டு; "பூமியு மயோத்திமா நகரம் போலுமே" (கம்ப. அரியத். எ.)

(பி - ம்.) 1 'அத்தையாய்மகட்கு' 2 'உறப்புற' 3 'கடலிடையாடென' 4 'பாதத்திறைஞ்சல்' 5 'திகழோர்' 6 'அன்னப்புடையோன்'

அணியார் தமிழும் மருநான் மறையும்
பணிவே தியரும் பசுவுக் திசையாள்
குணமே வியதென் னவர்தங் குலமுங்
தணியா வறமுங் [1]தழைவெய் திடவே. (உ)

தாரார் குழன்மங் கைதடா தகைபா
லாரா வமுதா னவனின் னருளாற்
போர்வே ளெனவே பொருவில் புதல்வன்
[2]பேரார் சடையோ டுபிறக் தனனே. (ங)

மெய்யார் சுரரும் விதமா கரரு
முய்வான் முழவெங் குமொலித் தினிதா
நெய்யா டல்புரிக் துங்கிலங் கடொறும்
பொய்யா மலர்மா ரிபொழிக் தனரே. (ச)

[3]உறவுக் கிரமா னதுகொண் [4]டிருவ
மிறைபொற் பமர்கை யிலெடுத் தணையா
மறையுற் ற[5]நெறிக் கண்வரும் பெயர்பே
ரறிவுக் கிரனென் னவறைக் தனனே. (ஞ)

உளமா ரையுகா ளுமுருக் கியுவக்
தளவார் கலையா வுமுணர்க் தழகா
லிளமா தர்மயங் கவிருக் துலவா
வளர்கீ திவிளங் கவளர்ந் தனனே. (சு)

அறிவால் விறலா லருளா லுயர்பா
னிறைவா லிவனுக் கிவனே நிகரென்
றுறகீ ருவிழா விதிசெய் துலகாண்
முறைசேர் மணிமா [6]முடிசூட் டினனே. (எ)

ங. உக்கிரப்பெருவழுதியார் சடையோடு பிறக்தனரென்பதை, "பஃறலை ப்பாக்தட் சுமைதிருத் தோளிற், தரித்துல களிக்குச் திருத்தகு காளி,னெடுமோட் டிருவயிற் தருளுட னீருக்த, தெடுஞ்சடை யுக்கிரப் பயக்தரு ணீமலன்" (கல். எஅ) என்பதனாலும், "வேலோன் விமலதடா தகைவயினுக் கிரனு ரென்றோர், கன்மகவாய்ச் சடையொடுமுற் பவிக்க" (கடம்ப. இலீலா. கo) என்பதனாலும் உணர்க.

ச. ஒலித்து - ஒலிப்பித்து. நெய்யாடல் - நெய்விழவு.

ஞ. உருவம் உக்கிரமான தகொண்டு. எடுத்தபொழுது திண்ணென்றிருக் தது பற்றிக்கண்ணப்பருக்குத் திண்ணனெனப் பிள்ளைத் திருநாமமிடப்பட்ட தென்பது இக்கே அறியற்பாலது.

எ. முடிசூட்டியவர் சுக்தரமாறர்.

(பி - ம்.) [1]'தழைசெய்திட' [2]'பேரோர்சடை' [3]'அறவுக்கிரம்' [4]'உருவை, பிறை' [5]'நெறிக்கணவற்பெயர்' [6]'முடிமூன்னின்னே','முடிசூடினனே'

வேறு.

எண்பயிலு நெடுஞ்சடிலம் பிறங்குதலா லிலங்கிவனுக்
கொண்புவியோர் கொண்டாடி மூபகயனத் திருநாம
மண்பரவு கோச்சடில வருமனென லியையுமென
விண்பரவ விளங்குவித்தான் [1]விதுகுடுமிப் பெருவழுதி. (அ)

ஆகத்திருவிருத்தம் - உகூ.

கக.—வளைவேல் செண்டுகொடித்த திருவிளையாடல்.

[2]முன்ன மிந்திரன் கடல்வட மேரு முந்துதம் வல்வினை வசத்தான், மன்னு நம்முய ராணையைக் [3]கடப்பர் மதித்தொவ்வொர் காலத்தி லென்று, பின்னர் யாவையு முணர்பவ னதனைப் பேரருட் டிருவுளத் துணர்ந்து, சொன்ன மூவர்தம் பெருவலி தொலைப்பான் சோர்வறச் சிறிதுளே முனிந்து. (க)

வேறு.

அறமலி தனது புதல்வனுக் கிரனுக் கருள்சுரந் தரும்புக ழோங்க, மறுவிலோர் வளையை யிந்திரன் பெரிய மவுலியி லறையென வளித்துச், செறிகடல் வலியை யறவெறி யென்று சிறந்ததோர் வேலினை நல்கி, யறிவட கிரியைப் [4]பந்துபோற் சுழல வடியெனச் செண்டையுங் கொடித்தான். (உ)

ஆதிமா மரபின் வருவடி வணங்கை யறநெறி மணம்புணர் வித்துக், காதல்கூர்ந் தறத்தின் றகுதிசேர் புவனக் கனமெலா மவன்றலை வைத்து, நீதிமூ வுலகு மதிசயித் திரங்க நிறைமலி தடாதகை யோடு, மாதர முறுங்க ணுதிப ரோடு மறைந்தனன் பிறங்கவா லயத்து. (ங)

அ. சடிலம் - சடை. கோச்சடிலவருமனென்னும்பெயர் சிலாசாசனத்திற் பாக்கக்காணப்படுகின்றது. விதுகுடுமிப் பெருவழுதி - சுந்தரமாறர்.

(கக)

க. காலத்திற் கடப்பர். மூவர் - இந்திரன், கடல், மேரு. இச்செய்யுள் கருத்துடை யடைகொளணி.

உ. வளை, செண்டு என்பன ஆயுத விசேடங்கள். அறி வடகிரி - எல்லாராலும் அறியப்படும் மேரு.

ங. 'வடிவணக்கு' என்பது பெயர்; கணநிபர் - கணங்களின் தலைவர்.

(பி - ம்.) 1'விதுக்குடுமி' 2'முன்னு மிந்திரன்' 3'கடப்பர்கண்' 4'கந்துகம் போலவடியென'

வேறு.

ஆண்டகை தெய்வ வீரெட் டாண்டணி மவுலி சூடித்
தூண்டுமா வரசர் போகந் துய்த்துல காள லாலே
பூண்[1]டபி டேகச் சொக்கன் புழுகுநெய்ச் சொக்க னென்னு
மீண்டியர் நன்ரு மங்க ளெங்கணும் [2]பிறங்கு மாலோ. (ச)

மன்னவர் முடிக வித்து மருவிய கணங்க ளோடு
நன்னெற்றி யோங்க நாடோர் நகரென ஞாலங் காண
வின்னர சாள லாலே யமன்றிசை யாய வெய்ய
தென்னவன் பாண்டி நாடு சிவலோக மான தன்றே. (நி)

ஆகத்திருவிருத்தம் - உசச.

க்உ.—நான்மாடக்கூடலான திருவிளையாடல்.*

ஒஒ

சீலமார் வருண ராசன் றிறத்தினுன் முன்னோர் கால
மாலவா [3]யழகார் மெய்யன் பெருமையை யறிவா னெண்ணி
ஞாலமீ கைக்கொ ளென்று நளிபுனற் பெருந்த ரங்க
[4]வேலையை யேவ வேலை வேலைநல் வேலை யென்று. (க)

உரனெடுங் [5]கணத்துப் போதி னெளித்துல கினைத்துங் கொள்ள
வரனுறு தேவர் சித்தர் மானிடர் நாகர் முற்றும்
வெருவரு மூள்ளத் தோடு மாலவாய் மெய்யன் செய்ய
திருவடி சரண மென்ரு லுய்யலா மென்று சேர்ந்தார். (உ)

காலமல் லாத காலத் துததிவா னுறக்க லித்து
மேலெழ வாரா நின்ற தென்செய்கோம் விண்ணோர் கோவே

ச. அபிடேகச்சொக்கன் - கிரீடத்தையணிந்த சொக்கநாயகர்; அபிடேகம் - கிரீடம்; வைஷ்ணவஸம்பிரதாயத்திலும் இப்பெயர் இப்பொருளில் வழக்குகின்றது. 'அபிடேகச் சொக்கர்' (மதுரைக்கல. சச, நிங); 'புழுகு நெய்ச் சொக்கர்' (மதுரைக்கல. நிஉ, நிங; மீனுட்சி. பிள்ளை. ஊசல், க - கo).

நி. இச்செய்யுள், "அப்பாண்டி காட்டைச் சிவலோக மாக்குவித்த, வப் பார் சடையப்பன்" (திருவா. திருவம்மானை, கக) என்னும் திருவாக்கின் பொருளைத் தழுவியது.

(கஉ)

க. 'வேலையையேவ...வேலை' மடக்கணி; வேலை-கடல், காலம், தொழில்.

உ. கொள்ள - கடல்கொள்ள.

*"உம்பரு காக ருலகக் தானு மொலிகடல் சூழ்ந்த வுலகத் தோருமம்புத காள்களா னீடுங் கூட லாலவா யின்க ணமர்ந்த வாறே" (தே).

(பி - ம்.) 1'அவிடேக' 2'பிறங்கிற்றன்றே' 3'அழகார்சொக்கன்' 4'வேலையேயவேலை' 5'கணத்தினுளித்தலகனைத்தினையுங்கொள்ள'

யேலவே யருள்செய் யாயே லிறப்பமிங் கெவரு ஞாலஞ்
[1]சாலமுற் றுங்கா லத்து மீயலா லுண்டோ தம்பம். (ங)

என்றடி தொழுது வீழ்ந்து முறையிட விரங்கி யென்று
மொன்றிய வடியார் தங்க[2]ளுறுகுறை தீர்ப்பான் கண்டு
பொன்றுமுன் காப்ப லென்றே புட்கலா வருத்த முன்ஞ
வென்றிகொ ணான்கு மேக வேந்தரை வரவ ழைத்தான். (ச)

தக்கபே [3]ரணுக்க ளுய்யத் தரங்கவெங் கடனீர் மூற்றும்
புக்குநீர் மாந்து மென்று புகலுமுன் போற்றி செய்து
சொக்கனு ணையெதி னேந்தே சுவறிடக் குடிப்பக் கண்டு
மிக்கவிண் ணோர்கண் முன்ஞ வியந்தனர் பயந்த ணிந்து. (ஞ)

அப்பொழு ததிச யித்தவ் வருணன்மீண் டாங்கா ரித்துத்
தப்பருந் தன்கொண் மூக்க டமையெலாம் வரவ ழைத்து
மைப்பனை யனைய நுந்தம் வள்[4]ளுறை சிதறி யந்தச்
செப்பரு முயிரை யெல்லாம் வருத்திடு மெனச்சி வந்தான். (ட)

பீடுசேர் முகில்கள் சாய்க்கும் பெரு[5]மழைத் துளியால் யாரும்
வாடுதல் கண்டு தொல்லைப் புட்கலா வருத்த முன்ஞ
நாடருங் காம ரூபப் புயல்களை நான்கு மாடக்
கூடம தாகக் கற்பித் தருளினன் [6]கூடமில்லான். (எ)

சோதிசேர் [7]பாதா ளத்தர் துறக்கரங் [8]தரத்தோர் பாரோ
ரேதமீ ருறுதி யாரு மியைந்தகான் மாடத் தும்போய்
வீதியி னெருக்க மின்றி மேதகு புதல்வ ரோடு
மாதர மாத ரோடு மிருமென வருள்சு ரந்தான். (அ)

ங. எவரும் இதப்பம். தம்பம் - பற்றுக்கோடு; ''தம்பத்தினை நீக்கித் தொரு வேள்விதொடங்குஞ், தக்கன்'' (தந்துவ. பிள்ளை. சிற்றில். ரு).

ச. மேகங்கள் நான்குவகை; ''மேக்கு நால்வகை மேகமுன் கீழ்விழ'' (கம்ப. சுந்தர. ஊர்தேடு. கசகூ.)

ஞ. அணுக்கள் - உயிர்கள்; ''சிவனலால், அன்னை யொப்ப வணுக்கட்கு நல்லவர், பின்னருஞ் சிலருண்டோ'' ஈச: ககூ.

ஸ. கொண்மூக்கள் - மேகங்கள். மைப்பனை - கரியபனை. வள்ளுறை - பெரியதுளிகள்; ''வள்ளுறை சிதறி'' முருகு. அ.

எ. 'கூடம...கூடமில்லான்' மடக்கணி. கூடம் - மாடத்தின் மேற்பாகம்; வஞ்சனை; ''அம்புத நால்களா னீடுங்கூட, லாலவாயின் கணமர்ந்தவாதே' (தே. நிருஞா.)

அ. நீர், முன்னிலைப்பன்மை. ஆதரம் - அன்பு. இரும் - இருங்கோள்.

(பி - ம்) 1'சாலகாமுறுங்காலத்து' 2'உறுதுயர்' 3'மனுக்களுய்ய' 4'உறை சிந்தி' 5'மழைத்தளியால்' 6'கூடலில்லான்' 7'பாதளத்தர்' 8'அந்தரத்தர்'

அப்பொழு தெவரும் போற்றி யணுகிமா நகரின் பாங்க
ரொப்பிலா [1]வடைவிற் பொங்கு மூயர்ந்தமா டங்க டம்முண்
மெய்ப்பட நயந்தி ருப்ப மின்னிடி முழக்க மிக்க
மைப்படி கருவி வான மழைவலி தொலைந்த தன்றே. (கூ)

[2]பேசரும் புயல கத்துப் [3]பெரும்புயல் சுவறக் கண்ட
வாசைசேர் வானோர் முன்னு வதிசயித் தச்ச நீங்கித்
[4]தேசிருங் கங்கை யாற்றைத் திருச்சடைப் [5]புரையுட் டேக்கு
மீசனுக் கிதுவு மொன்றே யெனத்துதித் திறைஞ்சி னர்கள். (கo)

அருளின னவரைத் தத்தம் பதியகத் தணைய வேவி
வரிசையி னிருப்பக் கண்ட வருணன்வெற் றிறம்விட் டஞ்சிப்
பெரியவ சிறியேன் செய்த பிழைபொறுத் தருளென் றண்பிற்
றிருவடி பரவி நாளிற் றிகழுளம் வாழ்த்துபோனான். (கக)

வாடுவோர் [6]தம்மைப் போற்ற வயங்கொளி மாநகர்க்கட்
கூடரு மேக நான்கு மாடமாக் கூட லாலே
நாடவ ரதிச யிப்ப நான்மாடக் கூடலென்று
பீடுடை நகர்க்கு நாம மெங்களும் பிறங்கிற் றன்றே. (கஉ)

வேறு.

கொண்மூ மாடங்கள் [7]கூடலின் மீறியு
நண்ணி நீள்கடல் கொள்ளா [8]நகரிதான்
மண்ணின் [9]மாடக் குளக்கீழ் மதுரையென்
றெண்ணில் காலத் [10]திலங்கிய தெங்களும். (கங)

"ஆடுபவர்.....கூடனகரே" (நி-ஆம் பக்கத்திற் பார்க்க.)

ஆகத்திருவிருத்தம் - உருள.

கூ. கருவி - நீர், மின்னல் முதலியவற்றின் தொகுதி.

கo. முதலடி மடக்கணி. புயல் - மேகம், நீர். ஆசை - திசை. சடைப் புரை - சடையின் உள்வெளி.

கக. "பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை போற்றி" (திருவா. திருச்சத. சுசு), "பொறுப்பான்றே பெரியோர் சிறியோர் கடம்பொய் யினையே (ஷெ நீத்தல். சு)

கஉ. போற்ற - பாதுகாத்தற்கு.

கங. கொண்மூ: விகாரம். மாடக்குளக்கீழ்மதுரை: மாடக்குளமென்பது மதுரைக்கு மேற்கேயுள்ளதோரிடம்; அவ்விடத்தில் ஒருகுளமுண்டு; 'மாடக் குளம் பெருகினல் மதுரைபாழ்' என்று ஒருபழமொழி வழங்கிவருகிறது.

(பி - ம்.) [1]'இடையிற்பொங்கும்' [2]'பேசரும்புயலாகத்துப்பெரும்பெயல்' 3 'பெருமழை' 4'தேசுறுகங்கை' [5]'புரைக்கட்டேக்கும்' [6]தம்மைப்போற்றி' 7 'கூடலினீரினும்' 8'நகரீனை' 9'மாடக்குழற்கீழ்' 10'இயன்றது'

கசு.—சித்தரான திருவிளையாடல்.

1 அருவ மெய்யின ருலவாய் நாயகன்
கருதி முன்னமோர் காலங் கருணையின்
மருவி யாவருங் கண்டு மகிழ்வுறப்
பொருவில் 2சித்த வுருவம் பூனைந்தனன். (க)

விண்வி ரும்ப மறலியை 3வென்றுநீள்
கண்ணு மண்பரை யாளுங் கழன்மிசை
வண்ண நண்ணி 4மனோகர மாகிய
பண்ண மைந்த பரிபுரஞ் சாத்திஞன். (உ)

கற்ப வெங்கனற் கண்ணுடை நெற்றிமே
னிற்ப விட்ட 5திலக நிலாவிடச்
சற்ப மாலை தயங்க மனங்கவர்
பொற்பு யத்துறு பொக்கணந் தூக்கினன். (ங)

மெய்யிற் பூசிய நீறும் விளங்குசெங்
கையின் மாத்திரைக் கோலுமென் காதின்மேற்
செய்ய மூத்திரை யுந்6திரு வானவொண்
டெய்ய குஞ்சிச் சடையுந் துளங்கவே. (ச)

யோக பட்டம் விளங்க வுளங்கவ
ராக மூற்று மழகு பொழிந்திடப்
பாக மூற்ற பரிவுடை யாளையுட்
போக விட்டு நடந்தனன் பூமிசை. (ரு)

ஆழி மண்கட வாம னிறுத்திய
தாழ்வில் சித்தன் றமனிய வெற்பினை
ஞாழி யுள்ளவ ரெங்7குலோ கங்களை
மீழ மாக்குவன் 8யாருளர் காணவே. (சு)

உ. வென்று நீள்கழல், ஆளும் கழலென்க. மனோகரம் - மகிழ்ச்சி.

ங. சற்பம்=சர்ப்பம் - பாம்பு. பொக்கணம் - ஒருவகைப்பை; "சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கம்" (திருநெச்சிற். உசஉ) எனவும், "சுட்ட வெண்பொடிப் பொக்கணக் தூக்கிய தோளும்" (திருவிளை. எல்லாம். ங) எனவும் வரும்; "பொக்கணச் சித்தன்" என்பர்; பின், கக.

ச. மூத்திரை - அடையாளம்; சித்தவேடத்திற்குரியகுண்டலம். குஞ்சிச்சடை - சிறுசடை.

சு. ஆழிமண்கடவாமல்-கடலானது மண்ணைக்கடவாமல். ஈழம் - பொன்.

(பி - ம்.) 1'அரவமெய்யினன்' 2'சித்தருருவம்' 3'வென்றநீள்' 4'மனோரதம்' 5'திலதம்' 6'திருவானவெண் டெய்யமூண்டசிரமும்' 7 'உலகங்களை' 8 'யாவருங்காணவே'

ஆதி நாத னறிவ னெனச் சொலீஇத்
தோத கம்பல காட்டித் தொகுபுகழ்
மாது மேவு மதுரைத் திருநகர்
வீதி தோறும் வெளிப்பட் டிலாவினன். (ன)

வே று.

விருத்தரை மைந்த ராக்கி மைந்தரை விருத்த ராக்கிக்
கரப்பெருங் குன்றை யைய கடுகினு ளடக்கிக் காட்டி
யுருத்திக ழும்ப லத்தை விழுங்கிடா வுமிழ்ந்து காட்டி
மரித்தெழுந் திருந்து காட்டி மற்றும்வல் லபங்கள் காட்டி. (அ)

மன்னிய சிறுவர் சூழ்ந்து வரவிளை யாடி யாரு
[1]மின்னருள் சேர்ந்த காந்தன் யாவனென் றதிச யிப்பக்
கன்னிமா தரைம யக்கிக் கடிமனை தொறுங்கு ழப்பித்
தென்னனே மதியா னுகி நடித்தனன் றெய்வச் சித்தன். (கூ)

பொற்பமர் தரங்க வாரிப் புடவியை யடைவிற் காக்கும்
விற்பொலி தடக்கை வேந்தன் வெய்யதன் மனித ராலே
நற்றவன் சரிதை முற்று நாடொறு மூரைப்பக் கேட்டு
[2]மூற்றிய சீற்றங் கூர்ந்து விட்டனன் மூறைசெய் வோரை. (கo)

பொக்கணச் சித்தன் றன்னைப் பொய்செய்து போகா வண்ண
மிக்கணம் பிடித்து வாரு [3]மென்றுமுன் னேவப் போனே
ரக்கணத் தின்கட் கண்டு பிடித்தலு மகப்ப டாமற்
றக்கர மொக்கச் செப்பித் தப்பினன் வெற்றிச் சித்தன். (கக)

தப்பினன் மற்றோர் ஞான்று சங்கரன் விரும்பி வாழு
மப்பெருங் கோயி றுங்கி யனிலமார் மூலை மன்னு
மொப்பருஞ் சிறப்பின் மிக்க வுத்தமக் களிற்றின் முன்னர்
மெய்ப்பட விருந்தான் வந்து வியன்றிரு நோக்கா னேக்கி. (கஉ)

எ. ஆதிநாதன் - சிவசித்தர்களில் ஒருவர்; சிவபெருமானென்பது மற்றொருபொருள். 'ஆதிநாதர்' (சஅ:கஅ.) தோதகம் - தன்பம்.

அ. கரப்பெருங்குன்று - யானை. ஐய - சிறிய. அம்பலம், சிலேடை.

கூ. காந்தன் - தலைவன். குழப்பி - குழம்பச்செய்து.

கo. மூறைசெய்வோர் - ஏவலாளர்.

கக. பொக்கணம்: கூ-ஆம்பாட்டின் குறிப்பைப்பார்க்க. தக்கரம் = தஸ்கரம் - கள்ளத்தன்மை.

கஉ. அனிலமார்மூலை - வாயுமூலை.

(பி - ம்.) 1 'இன்னருட் சாந்தன் காந்தன்' 2 'மூற்செறிசீற்றங்' 3 'என்றுழையேவப்'

தக்கபே ரால யத்துச் சதுமறை முனிவர் வாழ்த்தச்
சொக்கநா யகனைச் சூழ்ந்து துதிசெய்து தொழுவான் போந்த
திக்கெலாம் புகழு மன்னன் சேருங்கான் முன்னர்க் கண்ட
மிக்கவேத் திரக்க ரத்து வெய்ய [1]கஞ்சுகியர் சீறி. (கஉ)

பாண்டிய னிறைவன் றன்னைப் பணிகுவா னடைந்தா னீற்றுப்
பூண்டகு முண்டி யேடா போய்விடு போய்வி டென்ன
வாண்டகை கேளான் [2]போல வசைவிலா திருப்ப வங்கட்
டண்டருந் தூய மேனிப் பாண்டிய வேந்தன் சேர்ந்தான். (கசு)

இனியதாண் மலரே றிட்டு முறுவல்கொண் டிருப்பக் கண்ட
வநுபமன் [3]செழியன் மாற னணைந்தபே ரிளமை யாலே
தனைநனி மதித்து நீயார் [4]தரித்தெழா திருந்த தேது
நினைவுதா னேது ரேது வல்லதே தென்று னீத்து. (கூ)

ஆங்கது பகர வேடா வணைந்தகா ரியத்தி னேகா
[5]தீங்கிலை யுரைத்த தென்கொல் யானெலாம் வல்ல சித்த
னேங்கிய வுலக மெல்லா மதித்தவ னுன்ற னக்கென்
பாங்குகா ரியமோ வில்லை யென்றுபற் றற்றி ருந்தான். (கசு)

திறமுறு [6]முனிவீ ரென்னத் திருவிளை யாட றன்னைக்
குறுமறை முனிவ வின்று கூறிய வாறு கேட்டே
மறமலி திறத்து மன்னன் வரமதி யாதி ருந்த
வறமலி சித்தன் பின்னென் செய்தன னறைதி யென்றார். (கஎ)

ஆகத்திருவிருத்தம் - உஎச.

கஉ. வேத்திரம் - பிரம்பு. கஞ்சுகியர் - சட்டையிட்ட பிரதானிகள்.

கசு. பூண்தகும் நீற்று முண்டி - அணியத்தக்க திருநீற்றுலாகிய திரிபுண்டரித்தையுடையாய். ஏடாவென்பது ஆண்பால் முன்னிலைப்பெயர்; இழிந்தோனை விளித்தற் கண்ணும்வரும்; "ஏடாவேடா வென்னேழை, தன்னை வதைத்தாய் நீயேயென்னு" (திருவிளை. பழியஞ்சின. கச.)

கடு. அநுபமன் - ஒப்பில்லாதவன். செழியன்மாறன் என்னும் பெயரைச் சிலாசாசனத்திற் பரக்கக்காணலாம். நீத்து - வெறுத்து.

கசு. சித்தர் அரசனை நோக்கி ஏடாவென்றார், அவன் தம்மை ஏடாவென்றது பற்றி. மதித்தவன் - மதிக்கப்பெற்றவன். என்பாங்கு - என்னிடம்.

கஎ. என்ன - என்று அகத்தியமுனிவர் சொல்ல.

(பி - ம்.) [1]'கரஞ்சுகியர்' [2]'போலுமசை' [3]'செழிய மாரன்' [4]'தனித்தெதி ரிருந்த' [5]'நீக்கெலாம்' [6]'இதையகத்திருவிளை'

கச.—கல்லானை கரும்புவாங்கின திருவிளையாடல்.

மன்னு நீள்புகழ் வழுதிகண் டெமைமதி யாமன்
முன்னர் யாவையும் வல்லவன் யானென மொழிந்தான்
பின்னெ ராசையற் றிவன்றிறம் பெரிதறி வோமென்
றுன்னெ யொப்பவ [1]ரில்லையோ வுயர்ந்தவ ருலகில். (க)

இத்த லத்துய [2]ராக்கினைச் சித்தரு யிருப்பின்
வித்தை தோன்றவிக் கோயிலின் வெஞ்சிலைக் களிற்றுரற்
சித்த நன்குறச் செப்பிய வாறுபோ லெனது
கைத்த லத்தமர் கன்னலை வாங்குவி காண்பேம். (உ)

இன்று தானிது தின்றிட வேவினை யாயி
னென்று தாழ்வற வுனக்கியாம் வேண்டுப வளிப்ப
மன்று ளாடிய மாசிலா நாயக னறிய
வென்றி நாதனீ யெமக்கென விளம்பினன் விளங்க. (ங)

வேறு.

தென்னன் வார்த்தையைச் சித்தனுங் கேட்டலுந்
தன்னு ளோகை செய்து சடக்கென
மூன்னர் நின்ற [3]மூதியகல் லானையைக்
கன்ன றின்னென வேவினன் கண்கொடி. (ச)

அங்க ணேவ வழல்விழித் தஞ்சமண்
டங்கு நீழலைச் சாடிமுன் காட்டுகைப்
பைங்கண் வேழத்தைக் [4]காணுமுன் பாய்மதச்
செங்கண் வேழ [5]மடர்ந்து செறுத்ததால். (ஞ)

பத்தி மன்னவன் பாணிக் கரும்பினைப்
புத்தி யாரு நயந்து புகழ்ந்திடச்
சித்த னேவிய தெய்வப் பெருந்திற
லத்தி வாங்கி விரைவி னயின்றதால். (ரு)

க. ஆசையற்றமொழிந்தான். அறிவோமென்று அரசன்கருதி.

உ. ஆக்கினைச்சித்தர் - ஏவலினால் எல்லாம் செய்விப்பவர்; இஃது, எல்லாம்வல்ல சித்தமூர்த்தியின் திருநாமமாகவமைகின்றது. நன்குற - தெளிய. களிற்றுரல் வாங்குவி.

ச. சடக்கென: ஒலிக்குறிப்பு; சடக்கெனத் தின்னென இயைக்க; "சடக்கென வாங்கியின்று" (அ.) விரைவாகவென்றுமாம். கண்கொடி ஏவினன்.

ஞ. அழல் விழித்த - தீப்புறப்பட விழித்த. கண் - கணு, விழி. வேழம்-கரும்பு, யானை.

ரு. "நதிமதத் தறுகண் புகர்கொலை மறுத்த, கல்லிய மதனைக் கரும்பு கொள வைத்த, வாலவா யமர்ந்த நீலநிறை கண்டன்" (கல். ருக)

(பி - ம்.) 1 'இலையிலையுயர்ந்தவருலகில்' 2 'அருச்சனைச்' 3 'முதுகல் யானை' 4 'கண்டுமுன்' 5'தொடர்ந்து செறுத்ததால்'

தந்து மேவிய தாமரை நாளமென்
றிந்து மன்னவ னேகா [1]வலியையும்
வந்து வாங்க மறம்படக் கொல்வமென்
றுந்து வீரர்க [2]ளோவெனச் சென்றனர். (எ)

வாங்கு முன்னர் மணிமுத்த மாலையை
யோங்கு மும்மத நால்வா [3]யுவாமலை
தாங்க ருஞ்சினத் தோடி சடக்கென
வாங்க யின்றிடி யென்ன வதிர்ந்ததால். (அ)

மன்ற லந்தொடை மன்ன னழன்றுளம்
வென்றி சித்தர்க் கழகிது மேம்பட
நன்று நன்றென நாணினன் பேணிமுன்
சென்ற வீரரு நின்று செறுத்தனர். (கூ)

அங்க டார்ந்தவர் தம்மை யடர்ந்துமெய்
தங்கு நீற்றினன் சற்று நகைத்துமண்
ணெங்கு மோங்க விமைப்பி லெளித்தனன்
பைங்கண் வேழமும் பண்டைமெய் கொண்டதால். (கo)

அரச னஞ்சி யதிசயித் தன்புடைப்
பெரிய கோயிற் பெருமான் பணியென
மருவு கோபந் தணிந்து வரையறப்
பரசி வான்மிசைப் பன்முறை பார்த்தனன். (கக)

ஆல யத்து ளணைந்து வணங்கிமுன்
சால வேண்டிப நல்கித் தலத்துளின்
போல யாவர்வல் லாரெனப் போற்றினன்
ஞால மெங்கு நயந்து வியந்ததால். (கஉ)

ஆகத்திருவிருத்தம்-உ அசு.

எ. தந்து - தூல். நாளம் - தண்டு. ஏகாவலி - ஒற்றைவடமாகிய முத்த மாலை.

கூ. உளமழன்று. சித்தர்க்கு வென்றி.

கக. சோமசுந்தரக்கடவுளின் ஆலயத்தை யாண்டும் பெரியகோயிலென் பர். பணி - திருவிளையாடல், ஆணையுமாம்.

(பி - ம்.) [1]'வடத்தையும்' [2]'ஒல்லென' [3]'உயர்மலை'

கடு.—சங்கப்பலகைகொடுத்த திருவிளையாடல்.*

மூன்னமோர் காலஞ் சங்கமண் டபத்து முறைமையி னிருப்ப தற் [1]கியைந்தே, மின்னிய பனுவற் [2]காரணமாகி விளங்குபே ராச னம் விரும்பிப், பன்னியல் வாணர் கபிலர்நக் கீரர் பரணர்முன் னுகவா லயத்துத், தொன்னெறி யடியார்க் கினியன கொடுக்குஞ் சொக்கனுக் குரைப்பமென் றடைந்தார். (க)

தேவர்க டேவே நின்னரு நிருக்குஞ் செந்தமி ழோர்நெருக் கின்றி, யாவரு மிருக்கச்சிறக்குமோர் தவிசையீந்தரு ளெனத்தொழுதேத்த, மூவர்க டலைவன் கோணமொத் திலங்கோர் முழத்தினி ஞெருவரே யிருக்கும், பாவறி ஞானப் பலகையொன் றளிப்ப வாங்கிய பாவலர் பகர்வார். (உ)

அருளுடை யரசே யாவரு மிருந்திங் காயநீ டாசனம் விரும்ப, வொருவரே [3]யிருக்கு மாசனந் தந்த தென்னையென் றுளந்தளர் காலை, யிருமையி னிலங்கும் புலவரை யறிந்தீ [4]திடந்தரு மிடந்தரு மென் றோர், பரிவுடை வாக்கு விசும்பிடைத் தோன்றப் பணிந்ததி சயத் தொடும் போந்தார். (ங)

க. இயல்வாணர் - புலவர்கள்.

உ. தவிசு - ஆசனம். கோணம் - சதுரம். பாஅறி ஞானப்பலகை: பதி: உ; கசு: அ.

ங. ஆய - ஆராய. நீடு ஆசனம் - பெரிய ஆசனம். 'இடந்தரும் இட தரும்': மடக்கணி. பரிவு - அன்பு.

* "ஞானசம்பந்த னுரைசெய் சங்கமலி செந்தமிழ்கள் பத்தும்", "பட்டி மன் றென்னன்", "மதுரைத் தொகை யாக்கினுறும்" (தொகை-சங்கம்), "தண் டமிழ்நூற் புலவாணர்க்கோ ரம்மானே" (தே); "சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய வங்கண் மூதூர், நூல்பாயிடத்தும் முள...செய்யுண் மிக்கேறு சங்கம்", "சென் றேணைத்தமதரையினிற் றிருந்தியநூற் சங்கத்து,ளன் றிருந்து தமிழாராய்ந் தருளிய வங்கணர்", "திருவாலவா யமர்ந்த செஞ்சுடரைச் செழும்பொருணூல் தருவானே", "நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தானே" (பெரிய.மூர் த்தி. நு; திருஞா. சஎங, சஅசு; திருஞான.அஅங.) "இவை, தெற்கில்வாயில் திற வாத பட்டிமண்டபத்தோர்பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாக வும்பாடி இன்னவாறுகவெனச் சபித்தற்பொருட்டாய்வந்தமந்திரம் பாட்டாய் வருதலின் அங்கதமாயிற்று" (தொல். செய். சூ. கஎஅ. உரை.) [பட்டி மண்டபம் - சங்கமண்டபம்.]

(பி - ம்.) 1'இயைந்த' 2'காரணமான' 3'இருக்கவாசனம்' 4'இடந்தரு மோர்ந்து போமென்றோர்'

வாங்கருந் தெய்வப் பலகையைச் சங்க மண்டபத் திடைநடு விட்டாங், கோங்கமுன் [1]கீர நிருந்தனர் பின்ன ருயர்புளோ ரொருவ ருக் கிருப்ப, வாங்கது வளர்தல் கண்டுநன் கபில நிருந்தன ரன்பொடு முன்போற், [2]ரூங்குதல் கொடாது வளர்ந்திட விருந்தார் பரணருந் தலமெலா மதிப்ப. (சு)

முற்றிய பயன்க ணன்கிலை விளங்கு முத்தமிழ்க் கொத்தியல் வல்ல, மற்றுள சங்கத் தவருமவ் வடைவின் வளர்ந்திட வள்ர்ந்திட நயந்து, நற்றவ னருளின் பெருமையை வாழ்த்தி யிருந்திட நானிலத் தோர்கள், செற்றமு தகல வறிந்திடங் கொடித்த [3]சித்திரப் பலகை யைத் துதித்தார். (ரு)

சான்றவர் தேர்ந்து தம்மூடைத் தெளிவாற் சயமுறக் கோத்த செந் தமிழைத், தோன்றிய சங்க மண்டபத் தின்கட் சோர்வற வைத் துவைத் தேக, வான்றவச் செய்யுள் காலநீ ளத்தா லளவில வாய்த் தலை [4]மயங்கி, வான்றொட வுயர்ந்த வாங்கவர் திரண்டி வந்தனர் மற் றொரு காலம். (சூ)

சொல்லருஞ் சொல்லின் றகுதியாற் றம்மிற் றொடர்விடா வழக் கினுண் மலிந்து, வெல்லருந் திறத்தைக் கண்டுநந் தமிழுள் விளக்க மில் லாதனவிட்டு, நல்லன கொள்ளக் [5]கடவமென் றியைந்து நயந் தரு பனுவலா ராய்வா,ஞெல்லிபி லழகார் சங்கமண் டபத்து ளேறிரு நிறத்தமை மதித்து. (எ)

வந்தவர் குலைந்து முன்னமே [6]கலைந்து வரையறக் கிடந்தவை யெடுத்து, முந்தவா ராயு [7]மளவிலப் பனுவன் முறைதலை மயங்கலா லழிந்து, சிந்தையா குலத்தோ டென் [8]செய்கே மெனத்தஞ் செழுமு கம் வாடலுங் கருணை, யெந்தைநா யகனும் வந்தனன் முழா தின்றமி ழ்ப் புலவரு யிரங்கி. (அ)

சு. மண்டபத்திடை நடு - மண்டபத்தில் நடுவே; இடை: ஏழாம் வேற்று மையுருபு; இடைநடு - ஒருபொருட்பன்மொழியுமாம். தாங்குதல் கொடாது - தாமதியாது; கஎ: ரு.

ரு. பயன்கள் நான்கு - அறமுதலியன. முத்தமிழ்க்கொத்து - முத்தமி ழ்நூல்களின் தொகுதி; கூ, கo; கஅ: எ. நற்றவன் - சிவபெருமான். செற் றம் - தணியாக்கோபம். சித்திரம் - வியப்பு.

சு. செந்தமிழை - செந்தமிழ்ச்செய்யுட்களை; எ. உயர்ந்த: முற்று.

எ. தொடர் - நட்பு. மலிந்து - மாறுபட்டு.

அ. இரங்கி வந்தனன்.

(பி - ம்.) 1'சோரிருந்திட' 2'தாங்குதலாகவளர்ந்திட' 3'சித்தரும்பலகை' 4 'மயங்க' 5'கடவதென்றெண்ணி நயன்தரு' 6'கலக்து' 7'அளவினிற்' 8'செய் தோமென'

இத்தல மதிக்கக் குற்றமி லெழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரக், கொத்துறு பனுவல் வல்லவர் நீங்கள் குறைவற [1]விருந்திர் செங் கமல, மொத்தநும் முகங்கள் வாடிய தென்னை யுற்றது போக் கலா விருப்பிற், புத்தியா லளந்து போக்குவம் புகுந்த காரியம் புக லுமி னென்ன. (சூ)

மூதுகவிப் [2]புலவ மயங்கிய தெமக்கிம் முத்தமிழ்க் [3]கொத்துநீ கோத்து, விதியினி லளிக்க வல்லையே லுற்பத் தெட்டெனல் விட்டு னைக் கூட்டி, யதர்பட நாற்பத் தொன்பது பேரென் றறைந்திடக் கடவமென் றியம்ப, மதியுளான் விரும்பி யிமைப்பினி லுவப்ப [4] வகைப்பட விதிப்படி கோத்தான். (கo)

யாவையுங் கூட்டுங் கடவுளுக் கியம்பி னிதுவுமோர் புதுமையோ மற்றப், பாவலர் நயந்து சொக்கனே போலும் பழுதற நிறைந்தவா சிரியன், கேவல னல்ல னம்மினு முயர்ந்தோ னென்றுமுன் னிளர் வுறத் துதித்து, மேவிய வரனைத் தம்மொடுங் [5]கூட்டக் கூடினன் மேதினி வியப்ப. (கக)

ஆங்கிடங் கொடுப்ப விருந்திருந் தமிழ்க ளாய்ந்திடுங் காலையி லொருகாற், பாங்குறு பொருளின் றகவறி யாமற் பாவலர் [6]மயங்கி டக் கண்டாண், டோங்கிய பொருணூ லன்பினைக் [7]நினையென் றெடுத் தவ ருவப்புறக் காட்டி, வாங்கரு [7]நினைவிற் பிரித்தன னுரைத்த வண்பொருட் கியைந்த [8]வொண்டமிழ்கள். (கஉ)

சு. இருந்திர் - இருந்தனிர். போக்கலாவிருப்பின் - நீக்குதற்குரியதாக இருந்தால்.

கo. அதர்பட - வழிப்பட.

கக. கேவலனல்லன் - சாதாரணனல்லன்.

கஉ. பொருள் - அகப்பொருளிலக்கணம்; பொருள்நூல் - அகப்பொரு ளிலக்கணநூல். "அன்பினைந்திணை" என்பது, இறையனாகப்பொருளின் முத லசூத்திரத்தின் முதற்குறிப்பு; "உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க, மாறனும் புலவரு மயங்குறு காலை, மூன்றுறும் பெருமறை முனைத்தருள் வாக் கா, லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங், கடலமு தெடுத்துக் கரையில் வைத் ததுபோற், பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத், தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்", "அருமறை விதியு முலகியல் வழக்குங், கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து, வடசொன் மயக்கமும் வருவன புணர்த்தி, யைந்திணை வழுவா தகப்பொரு ளமுதினைக், குறுமுனி தேறவும் பெறுமுதற் புலவர்க,ளிளமெழு பெயருங் கோதறப் பருகவும்,புலமெறி வழக்கிற் புணருல கவர்க்கு, முற்றவும் பெருக்கு முதற்றர் பதர்க்கு, நின்றறிந் தணரத் தமிழ்ப்பெயர் நிறுத்தி,யெடுத்துப் பரப்பிய விமையவர் நாயகன்" (கல்.சூ,சுசு.)

(டி - ம்.) 1 'இருந்த' 2 'புலவர்மயங்கியது' 3 'கொத்துநீதோர்த்துவிதி' 4 'வகைப்படி' 5'கூடக்கூட்டினர்' 6'மயக்குறக்கண்டு' 7'நினைவில்விரித்தனன்', 'நினைவின்விரித்தனன்' 8'வண்டமிழ்க்கள்'

நயமுறு பொருட்குப் பொருந்திய தத்த லகத்தரு மிருத்தமிழ்க்
கண்டே, [1]யியலுடை வாணர் மகிழ்ந்ததி சயத்தோ [2]டிவையிலை
யொள்ளிய வென்னச், சயமுறு கீரன் பொருமையா லங்கண் சாற்
றுவா னென்[3]றனித் தமிழிற், செயிரறு [4]மைந்தாம் பனுவலுக்கொப்
புச் செப்புதற் கரிதெனச் செப்ப. (கக)

வேறு.

கண்ணியவை யிடைவியந்து கவிலுவதே யொருவனெனக்
கண்ணி[5]யின் றரும்பொருளாற் கனத்ததொரு கவிதை [6]தொடா
வுண்ணிறைத்த புலவீர்கா ளிதன்பொருள்கண் டுரைமினெனப்
பண்ணினெடு மூரைசெய்தான் பாவறிந்த நாவலவன். (கச)

ஏயவழு வின்றியிலங் கிருங்கவிதை கேட்டலுமே
நேயமொடு நிறைந்திருந்தார் நேர்கொடுப்ப வுரையின்றி
யாயுமிய னக்கீர னஞ்ஞானத் தாலதனைத்
தீயதென வுரைசெய்யத் தமிழ்ச்சொக்கன் சிரித்தருளி. (கரு)

என்றுமிவன் பொருமையுள னென்னுமதிங் கியாரறியார்
வென்றியுளீ ரவன்றனக்கு வேண்டுவன விளம்பிடுக
வொன்றியநங் [7]கவிதைக்கிங் கிவனெழிய வுங்களிலோர்
நன்றியுளார் குற்றமெனிற் குற்றமது நனியென்றான். (கசு)

இத்தகைமை யியம்பக்[8]கேட் டினிமையினு லேனுரு
முத்தரமொன் றுரையாம லிருக்குங்கா லுயர்விசும்பில்
வித்தகரே றும்வழக்கு [9]விடுவிப்பான் காரணமா
வத்தனும்வந் தானுமைப்போல் விடும்விடுறு மறிவின்மை. (கஎ)

வணங்குமினீர் வணங்குமினீ ரெனமயக்க நீக்கிடுவா
னணைந்தருள்சேர் திருவாக்குத் தோன்றியிட வதிசயித்துக்
குணம்பயில்வோர் பயமெய்திக் கும்பிடுமு [10]னியற்கீரன்
பணிந்தடியேன் செய்தபிழை பொறுத்தியெனப் பழிச்சினனால். (கஅ)

கச. ஒருகவிதைதொடா - ஒருசெய்யுள் தொடுத்து; தொடுத்தவர், சிவபெருமான்.

கரு. நிறைந்திருந்தார் - மகிழ்ந்திருந்தார்.

கஎ. விடுவிப்பான் காரணமா - விடுவித்தற்பொருட்டு. 'விடும் விடும்' அடுக்கு.

கஅ. 'வணங்கு மினீர் வணங்கு மினீர்': அடுக்கு.

(பி - ம்.) 1'இயலுறுவாணர்' 2'இஃதிஃதொள்ளிதென்றேத்தச்' 3'தளித் தமிழில்' 4 'அஞ்சாம்' 5 'வியந்தரும்' 6 'கொணர்ந்து' 7 'நன்கவிதையதிங்கு' 8 'கேட்டிருமையினுல்' 9 'வீடுறுப்பான்' 'உயர்கீரன்'

பெருமைதரும் பெயர்மதுரைப் பேரால வாயனென
வுரைசெய்தே யவைதெடுகா ளிருந்தவனவ் வயிஞெளிப்ப
வருளுடையார் சொக்கனேப்போ லாருளரிங் கெனத்துதித்தார்
1 பொருளதிகா ரம்பிறங்கிற் றிறையனர் பொருளெனவே. (கசு)

ஆகத்திருவிருத்தம் - கூ0டி.

கசு.—கிழியறுத்த திருவிளையாடல்.

உன்னரு மூன்ஞேர் கால மோங்கலங் காரத் தோங்கி
மன்னுமா மதுரை தன்னுள் வாழுமோர் வழுதி வான்ரேய்
2மின்னுமா மதிற்றன் கோயின் மீமிசை விடித லத்துத்
தங்கிக 3ரில்லா மாதர் தம்மொடு முலாவுங் காலை. (க)

பேசருந் தகவு டைத்தாப்ப் பேருளங் கவர்வ தாய
4தேசமா தேவி வாய்ந்த கூந்தலே நீங்கா தோங்கும்
வாசமா ருதவ சத்தால் வரமன மதிச யித்திவ்
வாசிலா வாசம் பூவோ டியைந்ததோ வன்ரே வென்ருன். (உ)

கூரிய வுளத்துட் டேர்ந்து குறிப்பரும் பொருள்பொ திந்து
நேர்சிறப் புடைத்தாய் ஈந்த நெஞ்சினுக் கியைய வின்ரேர்
சீருடைக் கவிதை செய்து வருவரேற் செழும்பு விக்குள்
யாரென 5வேண்டா விப்பொ ணீகுவ லவர்கட் கென்று. (ஊ)

ஆயிரம் பசும்பொன் கூட்டி யடங்கவோர் கிழியாய்க் கட்டி
மாயிரு ஞாலங் காண மாசிலா சிரியர் 6வாழுஞ்
சீயவெண் டரளச் செம்பொற் சித்திரத் தூணப் பத்தித்
தூயமண் டபத்து முன்னர்த் தூக்கினன் சிறக்க வாங்கு. (சு)

கசு. சோமசுந்தரக்கடவுள் புலவர்வடிவங்கொண்டு சங்கப்புலவருக்கு இடையே நெடுநாள் எழுந்தருளியிருந்தபொழுது, அவர்கொண்டருளிய திரு நாமம், மதுரைப்பேராலவாயரென்பது (கஅ: அ.) இது சங்கப் புலவருள் ஒருவர் பெயராகவும் காணப்படுகின்றது.

(கசு)

க. விடுதலம் - நிலாமுற்றம்.

உ. மாதேவி - பாண்டியன்மனைவி. மாருதவசத்தால் - காற்றுவழியால்.

சு. கிழி - துகிற்பொதி; ஆகுபெயர். ஆசிரியர் - சங்கப்புலவர். சீயம் - சிங்கம். தூக்கினன் - தொங்கக்கட்டினன்.

(பி - ம்.) 1 'பொருளலங்காரம் விளக்கித்திறைவனர் பொருளெனவே' 2 'மின்னமர்மதில்' 3'இலாதமாதர்' 4'நேசமார்தேவி' 5'வேண்டாமிப்பொ ணீகுவன்' 6'வைகுஞ்'

பிடைட யுணர்வான் மிக்கோர் பிஞ்ஞகன் சமாதி யாலே
நாடிய பொருடே ராம னல்லன தமக்கி யைந்த
பாடிய கவிதை கொண்டி பார்த்திவன் றிருமுன் னேறிக்
கூடிய மகிழ்ச்சி யோடிங் கூறினர் தேறி யாங்கு. (நி)

காவலன் றனக்கி யைந்த கவியதிற் காணு ஞகி
யாவிநன் குருதி ருப்ப வருங்கிழி கருதி வந்த
நாவலர் சோக மெய்திப் போயினர் நானி லத்துள்
யாவருங் காண மூன்போற் றாங்கிய தியைந்த பொன்னும். (சு)

ஆங்கது தூங்க விப்பா லருள்புனை சிவனே நாளு
நீங்கஇ லாமல் [1]வாழுஞ் சிவமுனி புதல்வ னீதி
யோங்கிய தூய்மை வாய்மை யொழுக்கநல் விழுப்ப மிக்கோன்
ருங்கரும் பத்தி யுள்ளோ ஞமமுங் தருமி யென்போன். (எ)

தந்தைவா னுலகத் தேகத் தளர்ந்துநல் குரவா னெந்து
சுந்தரன் கோயில் புக்குச் சொல்லுவான் மெல்ல நல்ல
வெந்தையே [2]கந்தர் தந்தா யினைத்தனன் [3]பொருளோ வில்லை
மைந்தனுண் டாக வென்னை மன்றல்செய் வித்தல் வேண்டும். (அ)

தாதையுந் தாயு முற்ற சுற்றமுந் தனமு மற்றும்
வேதனை [4]வினையி னேற்கு நீயலால் வேறு முண்டோ
கோதிலா மரபின் வந்த குலந்தலை [5]யழியு மோவென்
ருதிநா யகன்றன் பாதத் தழுதுவீழ்ந் தினைய சொன்னான். (கூ)

வழுத்திய மறையோன் றன்மை கண்டவன் மனத்தி னுசை
யொழித்திடி வான்வி ரும்பி யுரகமா ணிக்கச் செம்பொற்
குழைக்கினை காத ணங்கட் கொங்குதேர் வாழ்க்கை யென்றோர்
கிழிக்கிசை கவிதை பாடிக் கொடித்தனன் கீர்த்தி வேட்டி. (கo)

நி. சமாதி - சங்கற்பம்; உசு: ச; உஅ: உக; சஎ: உ.

சு. அதில் - அக்கவிகளில்; சாதியொருமை. ஆவிகன்கு - மனமகிழ்ச்சி; "என்னுவிமலர்மேன்மிதித்தொதுக்குவாய்" (சீவக. கடிஅ.)

எ. நீங்கஇலாமல் - நீங்காமல்.

அ. தந்தை - சிவமுனி. மெல்லச் சொல்லுவான். இச்செய்யுள் கருத் துடையடையணி.

கo. 'கொங்குதேர் வாழ்க்கை' என்னுங்கவிதை முறை: "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழிமோ, பயிலி

(பி - ம்.) 1'வாழ்வோன்' 2'கந்தர்கோவே' 3'பொருள்வேறில்லை' 4'விதியி னேற்கு', 'வினையனேற்கு' 5'அழியவோ'

பொருவருங் கவிதை யேட்டைப் போற்றிமுன் கொடுபோய் வாய்
யுரியவ [1]ரவைமுன் காட்டி யோங்கிய [2]நீவி கைக்கொ [மை
டருமிகேள் பொருது மற்றுச் சாற்றிய மாற்ற முண்டேல்
விரைவின்வந் துரைமண் மெச்ச வெல்வதற் கைய மின்றே. (கக)

துன்புற லென்று வெய்ய துயரொழித் தினைய சொல்லி
யன்பொடும் விடைகொ டுப்ப வாங்கவ னீங்கி நீங்கா
வின்புறு மனத்தி னோடு மெய்திநீ டவையிற் காட்ட
நன்புலோர் வியந்தாரில்லை தம்முளே நனிக யந்தார். (கஉ)

தெரியவோ ருரைகொ டாமற் செழுங்கவி கொடுப்ப வாங்கி
யரசன்முன் செல்வ லென்றே செல்லுங்கா லறிஞர் கண்டு
விரைவொடுஞ் சென்றூர் சென்ற வேதியன் காட்டக் கண்டு
பரவிய மன்ன னுள்ளப் பான்மையார் பகர வல்லார். (கங)

வே று.

நவையின் றிநயந் த[3]பொருட் கியைபச்
சுவைதந் திடுமெல் லியசொற் கணினேந்
தெவர்சொன் னவரிக் கவியின் றினிதா
வவர்[4]கொள் ளுகவக் கனகக் கிழியால். (கச)

பரிவொன் றியவென் றிகொள்பா வலர்நீ
ரிரு[5]ளொன் றியதுங் களிடத் தடைவே
[6]விரைவின் கணடந் திடுமென் றுவிடித்
தரவந் தருகோ யிலடைந் தனனே. (கஞ)

மிகவின் புறுநெஞ் சுடைவே தியனுந்
தகுசங் கமடைந் ததனக் கிழியைப்
பகைவென் றனமென் றுபகர்ந் [7]தொழியா
நகைகொண் டிகவர்ந் திடுவா னணுக. (கசு)

யது கெழீஇய சுட்பின் மயிலியற், செறியெயிற் றரிவை கூந்தலி, னறியவு முளவோநீ யறியும் பூவே" (குறுந். உ); "பொதியப் பொருப்பன் மதியக் கருத் தினைக், கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப், பொற்குவை தருமிக் கற் புடனுதவி, யென்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்குஞ், கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்" (கல். க.)

கக. கவிதை ஏடு-செய்யுள் எழுதப்பெற்ற ஏடு. வாய்மையுரியவர்-சங்கப் புலவர்; பொய்யடிமையில்லாப் புலவரென்றபடி. நீவி - கிழி. கொள்: ஏவல்.

கஉ. நன்பு - நன்மை. புலவர்கள் வெளிப்படையாகப் புகழவில்லை.

கங. வேதியன் - தருமி. கஞ. அரவம் - முழக்கம்.

(பி - ம்.) 1'அவர்முன்' 2'கவிதை' 3'பொருட்கவியைச்' 4 'கொள்ளுவரக் கனகக்கிழிதான்' 5'இன்றியதுங்களிடத்து' 6'விரைவின்றி டேத்திடும்' 7'ஒளியா'

வே று.

பொற்புறு மவனைக் கண்டு பொருமையா லிருந்த கீரன்
சொற்பொரு ளறியாப் பார்ப்பா னீயிதைச் சொல்லித் தந்த
நற்கவிப் புலவன் றன்னைக் கொண்டுவா நாடியுன்றன்
முற்கவி தைக்குக் குற்ற முண்டுபோ வெனமு னிந்தான். (கஎ)

ஊழுடை முனிவன் வாடி யொல்லையா லயத்து நண்ணி
யாழி[1]நஞ் சுண்ண வல்லீ ரறிஞர்க ணுமது [2]நல்ல
சூழிசைக் கவிக்குக் குற்ற முண்டென்றூர் சொலவல் லீரேற்
றுழ்வறச் சொல்லி யன்றே வென்கையிற் றருவீ ரென்றான். (கஅ)

ஈசனுங் கற்றுச் சொல்வோர் பின்வர விகலிற் கூடித்
தேசுடைச் சட்டை சாத்தித் திருமுடிச் சாத்துஞ் சாத்தி
யாசிலா மலர்க்க ரத்தி லாழிகள் செறித்தி லங்க
மாசிலாப் புலவர் தேத்து வந்தனன் புலவ னாகி. (ககூ)

வருந்திநான் முகன்மா றேட வளர்ந்தழற் பிழம்பாய் நின்றூ
[3]னெருங்கிநீர் மண்ணும் விண்ணு மெங்கணு நிரம்பி நின்றூ
னரும்பொரு டரும்பே ரண்டத் தப்புறத் தப்பா னின்றூ
னிருந்தமிழ்ச் சங்கத் தின்கீழ் [4]நின்றன னெவருங் காண. (உ0)

மன்னுமிச் சங்கத் தேறி யிருந்தவர் தம்முள் வாளா
வென்னுடைக் கவிக்குக் குற்றஞ் சொன்னவன் யாவ னேடா
முன்னுறச் சொன்மி னென்ன முத்தமிழ்க் கீரன் கண்டு
நன்னெறிப் புலவ குற்றஞ் சொன்னவ ணன்கா ணென்றான். (உக)

வே று.

அங்கங் குலுங்க வரிவாளி னெய்யென்றூர்
பங்கக் கவிதை பரமன் [5]சொலவிளித்து
சங்கறுப்ப தெங்கள்குலந் தம்பிராற் கேதென்றூர்
துங்க முறுங்கவிதை சொன்ன னெதிர்துணிந்து. (உஉ)

கஎ. பார்ப்பான்: விளி. இதை - இக்கவியை. நீ கொண்டுவா.

ககூ. கற்றுச்சொல்வோர் - கற்றுச்சொல்லிகள். திருமுடிச்சாத்து - தலைக்கட்டு; "தனிமுடிச்சாத்துஞ் சாத்தி" (உருட்சு.) ஆழிகள் - மோதிரங்கள். தேத்து - இடத்து.

உ0. பிழம்பு - திரட்சி. இச்செய்யுள், இறைவனுடைய அருமையையும் எளிமையையும் புலப்படுத்திக்காண்டு விளங்குகின்றது. "மூவர்கட் கரியானிற்ப முத்தமிழ்த் தெய்வச்சங்கப் பாவலர் வீற்றிருக்கும் பாண்டி நன்னாடு" (கடவுள். அ) என்றார்மேல்.

உக. வாளா - சும்மா.

உஉ. கவிதைகளிரண்டும் வருமாறு:—வெண்பா: "அங்கங் குலுங்க வரிவாளி னெய்தடவிப், பங்கம் படவிரண்டு கால்பரப்பிச் - சங்கதனைக், கீரீ

(பி - ம்.) 1'நஞ்சுணவோவல்லீர்' 2'வல்ல' 3'நெருங்குநீர்' 4'நின்றனன் புலவர்காண', 'அவருங்காண' 5'சொலவிழித்து'

வேறு.

இயற்சிவ னவைக்குன் மிக்க விருங்கவி வாணர் முன்னே
[1]யியற்றமிழ்க் கவிதைக் குற்ற மெங்ஙனே கவிறி யென்னச்
செயற்கருங் கூந்த ருணுஞ் சிக்குமே ஞறு மேமூன்
செயற்குரித் தான செய்யா விடினெனச் செப்பி ஞன்மூன். (உசு)

மற்றது சொல்லக் [2]கேட்டே வானுறு தெய்வ மாதர்
கற்றையங் குழற்கு [3]மொக்கு மேயெனக் கடவுள் கேட்பச்
செற்றிநெய்த் திருண்டு நீண்டு தீண்டுதற் கரிய தான
வற்றருங் [4]குழற்குஞ் செய்கை யலாதிலை யியற்கை யென்ரூன்.(உஎ)

மொழியறி யாத வெய்ய மூர்க்கரீ யென்ன சொன்ஞ
யெழுதரி தாய கோலத் [5]தியைந்தகங் கவுரி தன்பே
ரழகமர் கூந்த ருணு மப்படி யேயோ வென்னப்
பிழையிலை யென்று கீரன் முன்னுரை பின்னுஞ் சொன்ஞன். (உஏ)

கண்டது நெடும்பே ரண்டங் கண்டவோ திமங்கா ணுத
விண்டருங் [6]கங்கை தோய்ந்த விரைமுடிச் சடிலங் காட்டத்
தண்டமிழ் வல்ல வென்னைச் சடைகொடு வெருட்டல் வேண்டா
மண்டல மறியு மென்ரூன் வல்வினை வசத்தாற் கீரன். (உசு)

தீயவெம் புரங்[7]க டந்த சேவகன் சிறிது சீறிக்
காய்தழ னெற்றிக் கண்ணைக் [8]காட்டமுன் கனன்று வேவா
[9]னேயெனச் சுற்று முற்று மெங்கணு நெருப்புக் கண்ணே
யாயினுங் குற்றங் குற்ற மென்றன னஞ்சா ஞகி. (உஏ)

ரெனவறுக்குங் கீரனை வென்கவியை, யாராயு முள்ளத் தவன்"; "சங்கறுப்ப தெங்கள்குலக் தம்பிரான் கேதகுலம், பங்கமுறச் சொன்னஞ் பழுதாமோ - சங்கை, யரிக்துண்டு வாழ்வோ மரனுரைப் போல, விரக்துண்டு வாழ்வ திலை." 'சங்கரஞர்க்கேதகுலம்' என்றும் பாடம். விளிக்து - காணமுற்று.

உசு. செய்யாவிடின் மேற் சிக்குறாறுமே.

உசு. ஒக்குமே - பொருக்துமா. செற்றி - நெருங்கி. அல் தரும். இயற்கை இலை.

உருி. கொண்ட கொள்கை விடாமைபற்றி 'மூர்க்க' என்ரார்; "மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா" என்பது ஒரு பழக்தமிழ்நூல் வாக்கியம்.

உசு. அதுகண்டு - அதுதெரிக்து. சடிலம் - சடை. 'நெற்றிக்கண் காட்டினுலும் குற்றம் குற்றமே' என்னும் பழமொழியின் கருத்து இச்செய்யுளில் வக்துள்ளது.

உஎ. ஏயென - விரைவாக.

(பி - ம்.) 1'நயத்தவொண்கவிதைக்' 2'கண்டு' 3'ஒக்குமோவென' 4'குழற் செய்கை' 5'இயையுநங்கவுரி' 6'கங்கைதோய்ப்பால்' 7'கடிக்த' 8'காட்டுமுன்' 9 'நேயனேசுற்றுமுற்றும்'

அன்னிய ரொருவர்க் கஞ்சே [1]னஞ்சுவ னினக்கே யென்று
பின்னரு முரைப்ப வெந்தை திகைத்தவன் பேச்சைக் கண்டு
நன்னெறி [2]வழக்கே காணுய் நன்கிலா விகலே விட்டிங்
குன்னருங் கவுரி கூந்தற் கொக்குமே மற்றோர் கூந்தல். (உஅ)

வளந்தரு மடநாண் முன்ன வருங்குண நித்த மாபோ
லுளங்கவ ரிருள்வா சந்தே சுரியன நித்த மாகுந்
தெளிந்தறிந் தீலியோ பேதாய் [3]சிற்புட்ப கேசி யென்று
குளிர்ந்தமா மறைக ணுன்குங் கூப்பிடு கின்ற வாறு. (உகூ)

[4]இன்னபூ வாச கேசி தன்னையா ரறியா ரென்னப்
பின்னெருத் தரமு மின்றிப் பேரழற் கண்ணுல் வெந்து
தன்னுளே பரித விந்துத் [5]தண்ணினீர் வேட்டுக் கூப்பிட்
டன்னமார் வாவி யிற்போய் வீழ்ந்தன ஞற்ரு ஞகி. (ஈ೦)

காமனைக் [6]காய்ந்த கண்ணன் காலனைப் [7]பாய்ந்த காலன்
பாமறைக் கெய்தா மெய்யன் பாவலர் ஈண நின்று
ஈமறச் சொன்ன செற்ற ஈற்றமிழ்ப் புலவ னேப்பொற்
ரூமரைத் தடத்துட் போகக் கண்டனன் றமிழ்க்கி ரங்கி. (ஊக)

பாந்தளஞ் சடில முக்கட் பாவல [8]ஞெளிப்பக் கண்டு
சூழ்ந்தவர் சொக்கன் றன்மூன் சொல்லியார் வெல்வா ரென்றே
யேந்ததி சயத்தோ டஞ்சி யேத்தினர் குணலை கொள்ளா
வாழ்ந்தனன் முனிவன் றூங்கும் பூங்கிழி வாய்த்த தென்றே. (ஊஉ)

விரைவொடுஞ் சென்றி யாரும் வியப்பநன் கிழிய றுத்துப்
பரமனை யடைந்து வாழ்த்திப் போந்ததன் [9]பண்பிற் கொத்த
திருவினு முருவ மிக்க தேவியை மணந்து ஞாலம்
பரவவாழ்ந் திருந்தா னூழி [10]பழுதறு சிறுவர்ப் பெற்றே. (ஊஈ)

உஅ. பேச்சைகண்டு-சொல்லை யறிந்து: 'சொல்லக்கண்ட' (ருள: கரு.) இகலிவிட்டு வழக்கைக் காணுயென்க.

உகூ. சிற்புட்பகேசி-ஞானப்பூங்கோதை; இது, சோளத்திலுள்ள அம்பி கையின் திருநாமம்; "இன்னபூவாசகேசி" என்பர்பின்; ஈ೦. கூப்பிடுகின்ற வாறு தெளிந்தறிந் தீலியோ.

ஊக. காமற - அச்சமற.

ஊஉ. குணலை- மகிழ்ச்சி மிகுதிக்கண் ஆடும் ஒருவகைக்கூத்து. வாய்த்த தென்று வாழ்த்தனன்; "நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதரு மிக் கருளினேன்காண்" (திருநா. தே. திருப்புத்தூர்.)

ஊஈ. மிக்க தேவியை. ஊழி - பலகாள்.

(பி - ம்.) 1 'அஞ்சினேனினக்கே' 2 'விளக்கே' 3 'சிறப்புமகேசியென்று, குளுந்த' 4 'இன்னமாமஞ்சகேசி' 5 'தண்ணீர்' 6 'கண்ட' 7 'காய்ந்த' 8 'ஒளிப்புக் கண்டு' 9 'பணியிற்கொத்த' 10 'பழுதறச்சிறுவர்'

வேறு

திருந்திருக் குளத்தர்தந் தெள்ளு நீற்றெளி
தருந்திருக் குளத்தெழுந் தழல்சு டத்திரை
பொருந்திருக் குளத்[1]துறு புனலிற் போய்விழும்
பெருந்திருக் குளத்துளான் பின்னென் செய்தனன். (கூச)

ஆகத்திருவிருத்தம் - கூகூ.

கஎ.—நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடல்.*

—❧✻✻✻❧—

இன்ப நாவல ரிடர்படி னீரனுக் கிரங்கி
யன்பர் தம்பிழை பொறுப்பவற் கறைகுவ மென்றே
தன்ப னெஞ்சொடுந் தொல்லையா லயத்[2]தணைத் தலகி
னன்பு கூர்தமிழ் நலமுற [3]நவின்றுமுன் றுதித்தார். (க)

துய்ய கீரன்முற் சூழ்வினை யாலறி யாமை
மையல் கொண்டுநின் முன்சில வார்த்தைக ணவின்ரு
னைய னேயருள் வாரியே யருந்தமி ழாசே
தையல் பாகனே பொறுத்தரு டமியரை வேண்டி. (உ)

கூச. திருந்து இருக்கு உள் அத்தர் - திருந்திய வேதம் தியானிக்கின்ற தலைவர். திரு குளத்து - அழகிய தெற்றியில். திரை பொரும் திருக்குளத்து- அலைகள்மோதுகின்ற பொற்றமரையில். உளத்து பெருந்திருக்கு உள்ளான்- உள்ளத்திற் பெரிய மாறபாட்டையுடைய நக்கீரர். இச்செய்யுள் திரிபு.

(கஎ)

* "சிறியேன் சொன்ன வறிவில் வாசகம், வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும், வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து, கீதம் பாடிய வண்ணல், பாதஞ் சென்னியுட் பரவுவன் பணிந்தே" (கக - ம் திருமுறை- நக்கீரர் திருவெழுகூற்றிருக்கை); "பணிந்தேனின் பாதம் பரமேட்டி பானீ, றணிந்தால வாயி லமர்ந்தாய் - தணிந்தென்மேன், மெய்பெரிவு தீரப் பணித்தருளு வேதியனே, யையுற வொன்றின்றி யமர்ந்து" (ஷெ. ஷெ. இறுதிவெண்பா); "கூட லாலவாய்க் குழக னவ, தமியா தருந்தமிழ் பழித்தன னடியே, னீண்டிய சிறப்பி னிசையடிக்கீழ் நின்று, வேண்டு மதுவினி வேண்டுவன் விரைந்தே" (ஷெ. பெருந்தேவபாணி); "விரைந்தேன்மற் றெம்பெருமான் வேண்டியது வேண்டா, திகழ்ந்தேன் பிழைத்தே னடியேன்- விரைந்தென்மேற், சிற்றத்தைத் தீர்த்தருளு தேவாதி தேவனே, யாற்றவுநீ செய்யு மருள்" (ஷெ ஷெ. இறுதி வெண்பா.)

(பி-ம்.) [1]'எழுபுனலில்' [2]'அடைந்தகில நன்குகூர்தமிழ்' [3]'நவின்றுபின்'

கன மீதுதோய் கொடிமுடிக் கயிலைகா ளத்தி
யில மீதுபே ரன்புடைப் பதியென வறிந்தே
முகைகொ டாமரைத் தடத்திடை மொய்ம்பறக் கிடந்து
சகமெ லாம்புகழ் தருமொரந் தாதியு முரைத்தான். (கூ)

ஓங்கு பேரரு ளங்கயற் கண்ணிதன் னுடனே
யாங்கு சென்றடைந் தருந்தமிழ்ப் பெருந்துதி கேட்டித்
தீங்கி லாத[1]நின் செழுமலர்த் திருக்கரங் கொடுத்தே
[2]பாங்கர் நீள்கரை யேற்றெனப் பகர்ந்தனர் பழிச்சி. (கூ)

வேறு.

ஆங்கவர் பணியத் திருவுளத் திரங்கி யங்கனே யொடுமட வன்னந், தூங்கலர் வாவிக் கரையடைந் திருந்து சொல்லெனுஞ் செழுந் தமிழ்கேட்டுப், பாங்குடை யுளஞ்சேர் நிறைவொடு நீங்காப் பரிவொடு மூறுவல்கூர்ந் திமைப்பிற், முங்குதல் [3]கொடாது மலர்க்கரங் கொடித்துத் [4]தடத்தினின் றடித்தினி தெடுத்தான். (கூ)

மாலய னறியா வடிவமுங் காட்டி வன்னிவெங் துயரமு மொழித்து ஞாலமேழ் புகழுஞ் சான்றவ ருடனே நணுகுதி நாவலர் தம்மூட் சாலவு நல்லே மசைவிலா மனஞ்சேர் தண்டமிழ்ப் பாவல வென்றுங் கேலவார் குழலி தன்னெடுமறைந்தா னடியவர்க் கெளியவெம் பெருமான்.

சேணுளார் போற்றப் பெற்றநக் கீரன் றிருவருட் பெருமைகண் டுன்பிற், பூணவா லயத்துச் சென்றடி பரவிப் [6]போவதங் கில்லென நிற்ப, நீணெறி யறிஞ ரரியதாள் வருந்த [7]நிற்பதே யிருப்பாய்க்கடை யேன், தாணுவே யென்று பன்முறை பணிந்து போயினர் சங்கமண் டபத்து. (எ)

ஆகத்திருவிருத்தம் - கூசசு.

கூ. ஓர் அந்தாதி - கயிலைபாதிகாளத்திபாதியந்தாதி. "அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல் வாவியிற் கேட்ட காவியங் களத்தினன்" (கல். நுஉ) என்பதனாலும் நக்கீரர் வாவியிற் கிடந்தபடியே அந்தாதிபாடி னமை விளங்கும்.

சு. பழிச்சி - துதித்து.

நு. மேற்கூறிய அந்தாதியின் முதல்வெண்பாவின் முதல், "சொல்லும் பொருளுமே" என்பதாதலின், 'சொல்லெனுமருந்தமிழ்' என்றார். தாங்குதல் கொடாது - தாமதியாமல். அடித்து நின்று தடத்தினின்று இனிதெடுத்தா னென்க.

சூ. வன்னியென்றது நெற்றிவிழித்தீயை. சான்றவர் - சங்கப்புலவர். 'அடியவர்க்கெளிய வெம்பெருமான்' இங்ஙனமே சோமசுந்தரக்கடவுளின் திரு நாமம் 'அடியவர்க்கெளியசுந்தரன்', 'அடியவர்க்கெளியசொக்கன்', 'அடியவர்க் கெளியவர்' என்று இத்தலத்தில் பலவாறு காணப்படுகின்றது. [சங்கப்புலவர்.

எ. பூண - தொண்டுபூண. 'அங்கு' என்றது சங்கமண்டபத்தை. அறிஞர்-

(பி - ம்.) 1'நன்செழுமலர்த்' 2'பாங்குநீள்' 3'விடாது' 4'தடத்தினினிடத்தினின்று' 5'அப்பிற்' 6'போவதெங்கேயென' 7'நிற்பதென்'

கஅ.—குறுமுனிக்குத் தமிழுரைத்த திருவிளையாடல்.

சோதிசேர் கடவு ளுளந் தொண்டுசெய் கீரற் கண்டாண்
டோதுசொல் லிலக்க ணங்கள் குறையுமொண் கவியுங் குன்று
மாதலா லாங்கா ரித்தே யறிஞரை யிகழா தின்ரூன்
போதமார் செய்ய வல்லா ரென்றலும் பொருப்பின் பாவை. (க)

அண்ணலே யடியேன் முன்ன மறிந்ததோர் கதையுண் டன்பிற்
கண்ணுறு செவியு நெஞ்சுங் களிதரு வதுகே ளெண்ணில்
பண்ணுறு கின்ன ராதி [1]பரவயாம் பரிந்து வெள்ளி
விண்ணுறு கயிலை யத்தண் வெற்பகத் திருக்கு நாளில். (உ)

வேறு.

வாய்ந்தபுவி வடகிழக்குத் தாழ்ந்து தென்றல் வரைபயிறென் மேற்குயர வானோர் மண்ணோர், தேர்ந்தவிரு டிகளியக்கர் சித்தர் நாகர் சேர்ந்தபய மென்றுபய மெய்திப் போற்றித், தாழ்ந்ததல மொத் திருப்பர் னின்போ லாக்கிச் சங்கரா வொருவரையங் கேவி டென்ன, வாய்ந்தவர்கள் பயங்கண்டு கருணை கூர்ந்து னருட்கமல மலர்க்கரத்தா லஞ்ச லென்றே. (ஊ)

எண்ணரிய தொகுதியெலா நிற்ப நின்போ லிய[1]லொப்ப வகத்தி யனைத் திருக்கண் சாத்திப், புண்ணியமா முனிவர[2]ரும் போல நீயப் புவிமூலை யுயராமற் போகித் தென்றல், [4]விண்ணிவரு மலயத்தி லிரு த்தி யென்று விளம்புங்கா லுளங்[5]குளிர்ந்து விண்ணோர் முன்னுக், கண்ணுதலே யருட்கடலே யருள்பு ரிந்த காரியனே றென்றுகழல் வணங்கி ஞரால். (எ)

ஆதரஞ்சேர் குறுமுனியு மெனையொன் றுக்கி யருள்செய்தா [6]யருள்செய்த படியே செய்வ, லோதருந்தென் பூமிதமிழ்ப் பூமி யென்பா ரொண்டமிழிற் குரியவெலா மடிமைக் கிங்கே, போதமுற வறிவித்தல் வேண்டு மென்று போற்றுங்கா லெழுத்துச்சொற் பொ ருண்முன் னுனை, நீதியுடைச் சூத்திரங்க ளறியும் வண்ண நெறியின்க ணறிவித்தாய் [7]நேசங் கூர்ந்தே. (ஏ)

நற்[8]றமிழ்நூற் கருத்தினைநாம் விரும்பி வாழு நன்கடம்ப வனத் தனைக்கு ணவில்நின் றேமென், றுற்ற[9]மூளிக் கினையதனித் தருளிச்

க. போதம் - போதித்தல்.

ஈ. தென்றல்வரை - பொதியில். சேர்ந்த அபயமென்று.

ஙி. "ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய, மாதொரு பாகனே வணங் குதும்" (தனிச்செய்யுள்), "சழற்பொலி விழிக்கடவு டத்ததமிழ் தத்தான்" (கம்ப. அகத்திய.) என்பவை இங்கே அறியத்பாலன.

(பி - ம்.) 1 'பாவையர்பரிய' 2'ஒப்பாமகத்தியனைத்' 3'நம்போலுயிம்பு லிமூலை' 4'விண்ணமரும்' 5'குளுந்து' 6'அடி செய்த' 7'நெஞ்சை' 8'தமிணூற்' 9 'மூனிக்கதனையளித்தருளிச்செய்து'

செய்தாண் டவகையொடும் விடைகொடுத்தா யென்றி றைஞ்சப், பொற்றவது தனேக்கேட்ட பத்தர் பத்தன் புகழ்க்கினியா னயந்து வியர் தொக்கு மொக்கு, மற்றுங்க ரொவ்வாத மடமா தேயான் மறந் தனனீ நினேந்திருந்தாய் வழக்கு நன்றே. (சு)

தென்மலயக் குறுமுனியை யொழிய மண்ணிற் [1]செழுந்தமிழ்க் கொத் தறிவிக்க வல்லா ரில்லே, மன்னியகீ ரனுக்கவன்ற ஞலே யின்று வண்டமிழ்[2]நூ னிறைவிக்கத் தகுவ தென்று, ளுன்னுமுணர் வுண் டாகத்தான் [3]மெய்ஞ் ஞான வுபதேசந் திருநோக்கா லுபதேசித்தாண், டன்னவனே நயந்தழைப்பத் தாழா தெய்தி யருமறைநூல் விதியின் மல ரடியில் [4]வீழ்ந்தான். (எ)

வந்தனேசெய் தருந்தமிழ்ச்சூத் திரம்போ தித்தென் மனமயக்க முள்ளவற்றை மாற்றி டென்ன, வெந்தைபிரான் மதுரைப்பே ராலவாயா னிரங்கியிரு செவிப்புலனு நிறையும் வண்ணம், புந்தியுள வகத் தியமா முனியே நல்ல போதமுறக் கீரனுக்கிவ் வுபதே சத்தைச், சிந் தையுற நாமுரைத்த படியே நீயுஞ் செப்புகெனத் திருநோக்கா லுப தே சித்தான். (அ)

[5] பார்வையினு லுபதேசஞ் செய்த பின்னர்ப் பண்டையினு மிக் கவறி வுடையோ னுகிப், [6]பூரணனு யடிதொழுது நின்று மிக்க போத முறக் கீரனுக்[7]கவ் வுபதே சத்தைச், சீர்மையொடு முபதேசஞ் செய் யக் கண்டு திருவுள்ள மிகமகிழ்ந்து [8]பரிசஞ் செய்தே, யார்வமொடும் விடைதரமெய்க் குருவா மெந்தை யடிபரவி மலயகிரி யடைந்தா னன்றே. (கூ)

வே று.

மன்னு மன்னுழை போய பின்னர் வணங்கி யாதர மாதராண் முன்ன மேவிய கீர னுக்குப தேசி யேனென முதல்வநீ சொன்ன தென்னெயெ னத்தி ருந்திய தூய்மை மேவிய வாய்மையா னன்ன மேயது கேளெ னக்கடி தன்பி னோடருள் செய்குவான். ()

அரிய வொண்பொரு ளீப வர்க்கடி மைத்தி றம்புரி வோர்களுக் குருகு நெஞ்சுள வர்க்கி தந்தரு முட்பொ ருமையி லாதவர்க்

சு. பொற்ற-பொலிவுபெற்ற. 'பத்தர்பத்தன்' : உசு: சு; நகு: சக; 'ஒக்கு மொக்கும்': அடிக்கு.

கூ. பரிசஞ்செய்த - தீண்டி.

கஅ. அன்னுழை-அவ்விடம்; "அன்னுழை யுமையவ ளகத்துளோர் செயன் மூன்னி" (கந்த. டார்ப்பதி. க.) வாய்மையான் - சிவபெருமான்; எழுவாய்.

(பி - ம்.) 1'செந்தமிழ்' 2'நூலறிவிக்க' 3'மெய்யான' 4'வீழ்ந்தே' 5'பார் வையால்' 6'பூரணமாய்' 7'இவ்வுபதேசத்தைச்' 8'பரிவுஞ்செய்தே, யார்வினு ம்' 9 'அருளிச்செய்வான்'

கிருட ரும்பொய்க டிந்த வர்க்கிக ழாத வர்க்கரு ளேதருங்
குருவி னுள்ளம றிந்த வர்க்குப தேச மீகை[1]கு ணந்தரும். (ககஎ)

இக்கு ணங்களி லாத வர்க்குப தேச மீகைத காதுகாண்
மிக்க கீர னயந்து தன்னெவி யந்து நானெனு மேன்மையா
னக்க ரம்பிறர் கண்பொ ருதவ ஞத லாலவ னுக்குநாந்
தக்க வித்தைகொ டித்தி லேமென வொக்கு மென்றன டையலும்.(ஏ)

இனிமை [2]கூர்தரு நூலி னுக்கிய லேய முன்னுற [3]கின்றபின்
றனையொ வானுரை செய்த செய்யுளுந் தானு ரைத்தத மிழ்க்களு
[4]கினையு நீதியை [5]யாழ்ந்து கண்டித னீடு செய்யுளை கிந்தியா
மனக வானுரை செய்த செய்யுளை வாழ்த்தி ஞனிரு ணீக்கினன். (ஐ)

தென்ற மிழ்க்குரு வெங்தை கண்டுசி ரித்து நல்லது ரைத்துமுன்
னின்று சங்கம தெய்தி டென்ன [6]கிறைந்து சங்கம தெய்தியே
தன்றி ருக்க[7]கல் வித்தல் செய்துத மிழ்க்கண் மெல்லவி ரித்தன
னின்ற நாவலர் கண்டு மாசறு நேச வீசனை வாழ்த்தினர். (ககச)

ஆகத்திருவிருத்தம் - ஈகூ0.

கஎ—* ஊமை தமிழறிந்த திருவிளையாடல்.

அறிபவ னெங்கு முள்ளா [8]லவா யமுத வாக்க
னிறையவன் முன்னஞ் சொன்ன விரும்பொருட் சூத்தி ரத்திற்
குறுமுரை யெழுதித் தத்த முரையினை வியந்தோர் கால
மறுவறு [9]கவிதைச் சான்றோர் மலிந்தனர் மாறு பட்டே. (க)

சொல்லுகம் முரைய னைத்துஞ் சோர்வற நன்னூ லெல்லாம்
வல்லவன் றிருமுன் சொன்ஞன் மகிழ்ந்தவ னிவற்றுட் டேர்ந்து
நல்லதென் றுரைத்த தொன்றை நயந்திடக் கடவ மற்றைப்
புல்லிய வுரையை விட்டென் றனைவரும் பொருந்தி ஞரால். (உ)

கக. "தன்மக ஞசான் மகனே" என்னும் சூத்திரப் பொருளைப் பெரும்பா லும் இது தழுவியது. [சகியாதவன்; அக்கரம்: ஆகுபெயர்.

கஉ. பிறர்கண் அக்கரம் பொறுதவன் - பிறரிடமுள்ள வித்தையைச்

கஈ. தமிழ்க்களும் - செய்யுட்களும். இருணீக்கினன் - நக்கீரர்.

(ககஈ)

க. "ஆலவாயமுதே": "ஆலவா யமுத வாயா" என்பர் பின்னும்; உ0: ஈ; உஎ: க. பொருட்சூத்திரத்திற்கு - இறையனாரகப்பொருட்சூத்திரத்தி ற்கு. ஒருகாலத்தில்.

* "மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி, யிறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப், பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும், பாயபா ரறிய நீயே யாதலின்" (கலி. முருகர்துதி.)

(பி - ம்.) 1 'குணந்தகும்' 2 'கூர்ந்தரு' 3 'கின்றுபின்' 4 'கினைவுநீதியை' 5 'ஆய்ந்து' 6 'கிறைந்தசங்கமது' 7 'அகல்வித்தசெய்ய' 8 'ஆலவாயழகார்சொக் கன்' 9 'கவிதைசான்றோர்'

ஆங்குய ராலை யத்து ளஞ்சலி செய்து சென்று
பூங்கம லத்தா ளேத்திப் புலவகே ளிவற்று ளாராய்ந்
தீங்குரை நல்ல தொன்றை யருளுந் யெமக்கென் றியாரு
மோங்கமூன் றுமு மைத்த வுரையுரை யாவு மைத்தார். (கூ)

தென்றமிழ்ப் புலவ ஞகிச் சேர்ந்தியல் வான ரின்று
நன்றுநீர் நவின்ற திவ்வூர் நம்முடைப் 1பத்த ஞகி
யொன்றிய 2வணிக ஞப்பூர் கிழார்மக ஞமன் பாலன்
றன்றிற முரைப்பின் வென்றிச் சரவண குகனே யாகும். (சு)

உவமையின் ஞானி நாம முருத்திர 3சன்ம னென்போ
னவையிலா வுரைய னேத்து மவன்றன்மு னவின்ரு லொன்றை
யவையிடைக் கைக்கொண் டானே லஃதுரை யைய மில்லை
கவலுற வேண்டா வென்னக் கண்டவர் தொண்டிற் போற்றி. (டு)

தோன்றுநாட் டொடங்கி யூமன் சொற்றர 4வலஞ்ஞ வென்ன
வேன்றசெந் தமிழ்தேர் 5செட்டிக் கியாதொரு செய்யுள் கேட்டாற்
ரூன்றிய 6புளக மெய்யுந் துளிபடு கண்ணு முண்டோ
வான்றவச் செய்யுள் செய்யு ளல்லது செய்யு ளன்றே. (சூ)

ஒருவரு மிகல வேண்டா வொத்துநம் மிடத்தி ருத்தி
7வரனுறக் கேண்மி னென்றே மறைந்திட 8மலைதல் விட்டிங்
கிருவரு மறியா வெந்தை 9யிலங்கிட நம்போல் வந்து
பரிவொடும் பகரப் பெற்றேம் பகர்ந்ததே செய்வ மென்ரூர். (எ)

பத்தியிற் 10போந்து தெய்வப் பாவறி மண்ட பத்துச்
சித்திசேர் மூங்கை தன்னைச் சிறப்பொடு மழைத்துச் 11சிங்கச்
சுத்தமார் தவிசி னேற்றித் தூபதீ பாதி நல்கி
யொத்துமுன் ருமு மைத்த வுரையெலா மூரைத்தா ரோங்க. (அ)

சு. இயல்வாணர்: விளி. உப்பூர்கிழானென்பது உருத்திரசன்மனுருடைய தந்தையார் பெயர். உப்பூர்: பரம்பக்குடிக்கு ஈசானத்திலுள்ளது.

டு. உருத்திரசன்மனென்பதற்கு, உருத்திரனுலடைந்த பிறப்பையுடையவ னென்பது பொருள். இந்தவாலாறு உஉ - ஆம் திருவிளையாடலாலும், "திருத் தமிழ் மதுரைதன்னிற் சிவன்பொரு ணிமித்தக்கு மாற்ரூல், உருத்திர சன்மனுகி யுற்றே கிமலன்" (கந்த. சூரபன்மன்வதை, உசுக) என்பதாலும் இறையனர் கப்பொருளுரையாலும் நன்கு விளக்கும்.

சு. யாதொருசெய்யுள் - எந்த உரையை; உரையும் செய்யுளென்று வழங் கப்பெறும்; "இலக்கண மிலக்கிய முரையெனப் பெயர்பட், டிருக்குமென் றெண்ணுக செய்யுளி னியல்பே" (இ. கோ. ஒழி. சடு.) என்னும் சூத்திரத் தாலும் அதன் உரையாலும் உணர்க. உண்டோ - உண்டாமோ.

அ. பாவறி மண்டபம் - சங்கமண்டபம்.

(பி - ம்.) 1'பத்தராகி' 2'வணிகர்' 3'சருமன்' 4'வற்ரே' 5'செட்டியா தொரு' 6'புளகுமெய்யும்' 7'வரதுறக்' 8'மலைதல்விட்டு' 9 'இலங்கும்போலும் வந்து' 10'பொருந்தி' 11'சங்கச்'


வே று.

1 வளமுறு கீரன் றரைபுகழ் கபிலன் மாசறு பரணனிம் மூவர், தளர்வறு மூரையைக் கேட்டலு மூங்கை தணிவரு பெருவிருப் பெய்தி, புளகித மெய்யுந் துளிபடு கண்ணும்பொருந்தல்கண் 2டதிசயித்தியாரு, முளம்வரும் பொருளிப் பொருள்கடா மென்றே யொப்பரு மப்பொருள் கொண்டார். (கூ)

தல்மிசை யெங்கும் விரித்தியற் சொக்கன் றகைமையை மிகமிக வாழ்த்தி, யலகிலா வூழி யிருந்தன ரிருந்த வருந்தமிழ்ச் செட்டியாஞ் செட்டி, யிலகிய மயின்மீ தறுமுகத் தோடு மினியபன் னிருகரத் தோடும், புலவர்கண் டிறைஞ்ச வருளினல் விளங்கிப் போயினன் 3 சாபமு நீங்கி. (கo)

ஆகத்திருவிருத்தம் - ஈஎo.

உ ஏ.—இடைக்காடன்பின் போன திருவிளையாடல்.



முன்னமோர் காணுன் மாட மதுரையின் முழுது ணர்ந்தோன்
பின்னமில் கபிலன் றேழன் பெயரிடைக் காட னென்போ
னின்னியல் வானர்க் கெல்லா மிதவியோன் 4கவியான் மிக்கோன்
றென்னனைக் கவிதை பாடிக் கண்டனன் சிறப்பி னெய்தி. (க)

நன்கவி கேட்ட வேந்த ஞனெனு மதத்தாற் போவென்
றன்புசெய் யாமற் றள்ள வாங்கவன் கண்டு ராணி
முன்பொருத் தரமுஞ் சொல்லான் முற்றிய துயரிற் போந்தின்
றென்பொலா மணிக்குச் 5சொல்வ லென்றிறை கோயில் புக்கான். ()

கo. செட்டி - வணிகன், முருகக்கடவுள்; "செட்டியுஞ் செட்டி யாயுதித்தான்" (உஉ: கூ).

(உo)

க. "தோழனுங்கபிலன்" என்பர் பின்னும்; நி. இதவியோன் - இன்பத்தைச்செய்பவன்; "இதவிய புல்லு மிட்டேம்" (உக: சு.)

உ. பாண்டியன் இடைக்காடரைத் தள்ளியது, "உன்னுடை மதித்தாற் றள்ளி யோட்டிய தென்னை" (கக) என்பதனாலும் துணியப்படும். பொலா மணி=பொல்லாமணி-துளையிடாதமணி; சிவபெருமான்; "புகலே தகேனுனக் கன்பருள் யானென்பொ லாமணியே" (திருவா. திருச்சத. கo); "என்பொ லாமணியைப் புணர்ந்தே" (திருவா. புணர்ச்சி. க); "என்பொலா மணியை யேத்தி" (திருவா. அச்ச. கூ); "என்பொலா மணிமன மிரங்கிற் றென்பவே" (பிரபு. முனிவர். சு.)

(பி - ம்.) 1 'வளனுறு', 'வளர்வுறு' 2 'அதிசயித்தாரும்' 3 சாபமுநீக்கி' 4 'யார்க்குமிக்கோன்' 5'சொல்வனென்று'

மன்னிய சொல்லுன் மாது மாசறு பொருணீ யுண்மை
[1]யென்னகின் றறற்றும் வேத மாதலா லெனையோ வல்ல
வன்னமா ராய வொண்ணு வாலவா யமுதே தென்ன
னின்னையு நின்னை நீங்கா மின்னையு நிகதை செய்தான். (கூ)

தக்கதோ வெனத்து தித்துத் தனித்துரைத் தேகக் கண்ட
சொக்கரா யகன்மா தோடுந் துண்ணென நடுக்க முற்று
மிக்கமா நிலனுஞ் செம்பொன் மேருமால் வரையு [2]மற்றெண்
டிக்கும்வா னகமு நோவ நொந்திரு செவிபு தைத்தான். (சு)

தொழுதுபோ மிடைக்கா டற்குந் தோழனுங் கபில னுக்கு
மெழினலங் கூர யாமு மெய்துவ [3]மின்னே டென்று
செழுமதில் வடபால் வையைத் திருநதித் தென்பான் மேவப்
பழுதறு சங்கத் தாரு மேவினர் பாதம் போற்றி. (ரு)

மறுவறு முனிவர் வானோர் வணங்கியின் னருளே வாழ்த்திக்
குறைவறு சங்கத் தோடுங் கூடியாங் கிருப்ப விப்பா
னெறிபட வணங்குந் தொண்டர் நேர்படப் புலரு முன்ன
மிறைவனைத் தொழுவான் வந்தார் கண்டிலர் திகைத்தா ரேங்கி. (சூ)

மண்மிசைப் புரண்டார் வீழ்ந்தார் மயங்கினர் முகத்த றைந்தார்
கண்ணினீர் சோர வாய்விட் டலறினர் கையி திர்த்தா
ரண்ணலே யெங்கொ ளித்தா யரசனீ தறிந்தா லென்னு
மெண்ணமொன் றிலாம லந்தோ விளைந்ததே யென்னு குற்றம். (எ)

அவனிவேந் தற்குத் தாழா தறைகுவ மென்று சென்று
தவமுடை வேந்தே நந்த மாலவாய்த் தரும மூர்த்தி
புவிபுகழ் கோயில் விட்டுப் போய்நதிக் கரையி லேறிக்
கவிமன ரோடு மங்க ணிருக்கின்றன் கண்டா யென்றார். (அ)

செப்பிய மாற்றங் கேட்ட தென்னன் மெய்ந் நடுங்கி வீழா
மெய்ப்படி பயத்தி னோடு மேதகு மாதி னோடு
மொப்பரு மமைச்ச ரோடு மொல்லைகா னடையிற் [4]சென்றிங்
கிப்படி போதற் கென்னு குற்றமென் றிறைஞ்சி வீழ்ந்தான். (கூ)

கூ. இதில், சொல் உமை, பொருள் சிவபெருமா னென்றதை, "என்னை யிகழ்ந்தனனுசொல் வடிவாய்நின் னிடம்பிரியா விமையப் பாவை, தன்னையுஞ் சொற் பொருளான வுன்னையுமே யிகழ்ந்தனன்" (திருவிளை. இடைக்காடன். கo) என்பதனாலுமுணர்க.

நு. மின - உமாதேவியார். மேல - சிவபெருமான் எழுந்தருள; "முன்னிடைக்காடன் பின்னெழ நடந்து" (கல். எகூ.)

எ. எண்ணமொன்றிலாமல் - புத்தி பூர்வமின்றி.

அ. கவிமனர் - கவியரசர்; சங்கப்புலவர். கூ. கால் கடை.

(பி-ம்.) 1'என்னுமதற்றும்' 2'எண்ணெண்டிக்கும்' 3'நின்னேடென்று' 4 'சென்றங்கு'

நெஞ்சம்[1]வே ருகி மால்போ னின்றுகண் ணருவி சோர
வஞ்சியுந் தானும் வாழ்த்த [2]வானவர் துதிக்கு மேலோன்
பஞ்சவ வெனக்கு னேப்போற் பத்தர்க ளில்லே யிந்த
மிஞ்சிய தலமுங் கிஞ்சில் விருப்புடைத் தலமே யாகும். (கo)

நின்னெடு [3]செற்ற மில்லே நெறிதர வெனையக் தாதி
சொன்னவன் கபிலன் ரேழன் சொல்லிய கவிதை [4]சற்று
மன்னிய பொருளாற் சொல்லால் வழுவிலா [5]திருப்ப வோரா
துன்னுடை மதத்தாற் றள்ளி [6]யோட்டிய தென்னே னென்னல். (கக)

கல்வியிற் சிறந்தி ருப்பக் காரண மின்றிக் குற்றம்
புல்லர் போ [7]லுரைத்தா யின்று போதுமோ வுனக்கெ மக்கு
நல்லவன் வந்து சொல்ல நமக்குநம் புடைமா துக்குஞ்
சொல்லிட வரிது [8]நேர்ந்த தென்றலுஞ் சோர்ந்து வேந்தன். (கஉ)

என்னறி வின்மை தன்னே யெங்தையே பொறுத்தி யென்று
மின்னெடு [9]பின்னுங் தாளில் விழுப்பிழை [10]பொறுப்போ ஞறி
யின்னியல் வாண ரோடு மின்றிடைக் காட னேடு
மன்னவ வருவல் போவென் றரசனே விடித்தான் வாழ்த்தி. (கங)

சேர்ந்தநன் புலவ னேடுஞ் தென்றிரு வால வாயிற்
சார்ந்தநா வலர்களோடுஞ் சார்ந்தனன் றலங்து திப்ப
வாய்ந்தவத் தலத்தி னுமம் வடதிரு வால வாயென்
ரூர்ந்தது [11]கண்ட தொண்ட ராடினர் பாடி னரால். (கச)

பொன்முடி மன்னன் வந்து பொருந்துடைக் காடற் போற்றி
யென்னையா ஞடையா [12]னின்பி னெய்திலு னென்று முன்னர்ப்
பன்னிய தமிழ்கொண் டோடைப் பருப்பதத் தெருத்தத் தேற்றி
மன்னவ ரென்ன வாழ்வித் [13]தருளினன் வரிசை கூர. (கடு)

ஆகத்திருவிருத்தம் - கஅடு.

கo. வஞ்சியும் தானும் - தேவியும் தானும்; "மின்னெடுபின்னுந்தாளில் விழு" (கங) கிஞ்சில் = கிஞ்சித் - சிறிது; இது, மலேயாட்டுவழக்கு.

கக. அத்தாதியென்றது, சிவபெருமானீதிருவந்தாதியினை; இது, கக-ஆம் திருமுறையிலுள்ளது. சொன்னவனுகிய கபிலன். எனினே - யாது.

கஉ. உனக்குப் போதுமோ - உனக்கு இத்தன்மை உண்டாதல் தகுமோ. நமக்கும் நம்புடை மாதுக்கும் நேர்ந்த துன்பம் சொல்லிட வரிது.

கச. நன்புலவன் - இடைக்காடர். வடதிருவாலவாய் - இஃது இடைக் காடருடைய பிணக்கைத் தீர்க்கும்பொருட்டுச் சோமசுந்தரக்கடவுள் எழுந்த ருளியிருந்தவிடம்; இக்கோயில் இக்காலத்துப் பழையசொக்கநாதர் கோயிலென வழங்குகின்றது. [டல்கர். ஓடைப்பருப்பதத்து எருத்தம்-யானைப்பிடர்.

கடு. முன்னர்ப் பன்னியதமிழ் - இடைக்காடர் முன்பு பாடியதமிழ்ப்பா

(பி - ம்.) 1'வேரையும்மால்போல்' 2'மன்னவர்துதிக்கு நல்லோன்' 3'செற்ற முண்டோ நெறிதாட' 4'மற்று' 5'இருப்பதோராது' 6'ஒட்டினெயென்னை' 7 'உரைத்தலின்று' 8'கொக்கதென்றலுஞ்' 9 'மின்னுத்தாளில்' 10 'பொறுப் போனுகி' 11'கண்டுதொண்டர்' 12'அன்பின்' 13'அருளினனருளே வாழ்த்தி'

உ க.—கடல்சுவற வேலெறிந்த திருவிளையாடல்.*

பார்மிசையின் முன்னொருகாற் பழமதுரை தனைநாடி
1 வாரிதிகொள் வாளெலித்து வரைபுரையுந் திரையெடித்துச்
சேர்வதுகண் டமரருமற் றேனைவருந் தெருமரலுற்
றோரிடமுங் கிடையாதெங் கொளிப்பமெனத் துதித்தனரால். (க)

விழுமியபே ரருட்சொக்கன் மெய்ஞ்ஞான விழியாற்கண்
டிழையின்மல ரணைத்துயிலு முலகாண்மன் னனைக்குறுகித்
தொழுகழலுக் கிரச்செழிய 2துயிலுணர்தி துயிலுணர்தி
பழமதுரை தனைக்கொள்வா னெழுந்ததுநீர் பரந்தகடல். (உ)

தேமலித்த நாவல்பயி றென்புலத்தோர் தமக்கெல்லா
நாமலித்த வேலையற நாமலித்த வேலையெறி
நீமனத்துச் சலியாது நின்றெதிர்சென் றெனக்கனவிற்
காமுறத்தான் மதியுரைத்துக் கங்குற்க ணெளித்தனனால். (ங)

இக்கனவு 3காண்டலுமே யிரும்பரவை விடிவதன்முன்
னுக்கிரமாய் 4நனிவரக்கண் டுக்கிரவேல் விறற்செழியன்
மிக்ககன வமைச்சருடன் விளம்புங்காற் சிவனேநின்
றக்கதிரு வுளத்திருந்து செலுத்துகின்றான் றவறறவே. (ச)

உந்தையருள் செய்ததுசெய் தருளுலக முடியாம
5 லந்தமதின் றெனைக்கேட்டுத் தாழாதஞ் சலித்தெழுந்து
சுந்தரனே நினைந்துதனி வேல்வாங்கித் துணிவொடுசென்
றுந்திவரும் பெருங்கட 7லு ணடுவெறிந்தா னுலகுய்ய. (ஞ)

க. பழமதுரை: இது கடல்கொள்ளவந்த மதுரை; இப்போதுள்ள மதுரைக்குக் கிழக்கே இருந்ததாகத்தெரிகிறது. "தமிழொடுபிறந்து பழமதுரையில் வளர்ந்த கொடி" (மீனாட்சி. சப்பாணி. க - ஞ.) பழமதுரைமேடென்ற ஓரிடமும் பழமதுரைமுனியென்ற ஒரு முனியின்கோயிலும் அங்கேயுண்டு.

உ. உழை - வீடு.

ங. நாவல்பயில் தென்புலம் - நாவலந்தீவு. நாம் அளித்த வேலை அற - அச்சத்தைக்கொடுத்த கடல் வற்றும்படி. சென்று எறி.

ச. பரவைவரக் கண்டு.

*"முந்நீர்விழவி னெடியோன்" (புறநா. கூ); 'முந்நீர்க்கண் வடிம்டலம்ப நின்றனென்ற வியப்பால், நெடியோ னென்ற ரென்ப' (வெ. வே. உரை); "அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி, வடிவேலெறிந்த வான்பகை பொறாது,...கொடுங்கடல் கொள்ள,...தென்றிசையாண்ட தென்னவன்" (சிலப்.கக: கள-உஉ) "மற்றவன் றன்னுல் வடவையின் கொழுந்துசுட், டாற்ற டைலமு மமைக்குறு முத்தமும், விளர்த்துநின் றணங்கி வளைக்குல முழங்குங், கருங்கடல் பொரிய வொருங்கு வேல்விடுத் தவற்கருள் கொடுத்த, முதற்பெரு நாயகன்' (கல்.எஅ).

(பி - ம்.) 1'வாரிதி' 2'துயிலுணர்தி யெனவெழுப்பிப்' 3'கண்டலுமே' 4 'நகர்வரக்கண்டு' 5 'அந்தமதி னன்றெனைக் கேட்டஞ்சலிசெய்தே யெழுந்து' 6 'நனிவேல்' 7 'உண்டுறவெறிந்தான்'

வென்றிபடச் சிவந்தெறியக் கருங்கடல்வெவ் வலிதொலைந்து
முன்றெறு[1]மம் புடைந்துபங்கப் பட்டலறி மோதிவிழா
நின்றவடி வடிம்பலம்ப நின்றதுகண் டேஞ்ரு
மின்றிது[2]கண் டனம்புதுமை யெனப்பயம்விட் டெழத்துதித்தார்.()

மாலைமுடி யோன்வேலை வடிம்பலம்ப நின்றதனால்
வேலைவடிம் பலம்பநின்ரு னென்றெங்கும் விளங்கியதா
லாலவாய் நகரான்போ லருளுடைய கடவுளர்யார்
ஞாலமிசை வானமிசை யெனத்துதித்தார் நாவலர்கள். (எ)

கடல்வலிய சத்திவிடச் சத்திவிட்ட காவலற்குப்
புடவிபரி வுறவேண்டும் வரங்கொடுத்துப் புதுமைபட
வடைவுட[3]னேங் கியசங்க மண்டபமு மமைத்தூழி
தடமுடைநா வலர்[4]போற்றத் தமிழ்ச்சொக்க னினிதிருந்தான். (அ)

வேறு.

மனத்தின்பம் பயக்கும்பொன் மதிட்டங்குந் தமிழ்க்கூடற்
றனித்தென்றுஞ் சிறக்குந்தண் டமிழ்ச்சங்கந் தனைப்பண்டி
னினைக்குங்கண் முதற்சங்கம் மிடைச்சங்கந் [5]நிலைத்தாகு
மினிச்சங்கம் புனற்கங்கைக் கரைப்பங்கின் புறத்தென்ப. (கூ)

ஆகத்திருவிருத்தம் - ஈகூச.

சு. அடிவடிம்பு அலம்ப - அடியின் ஓரத்தைக்கழுவ.

சு-எ. இவ்விரண்டு செய்யுட் களாலும் கடல் வடிம்பலம்ப நின்ரு னென்ற பெயர்க்காரணம் விளக்கப்பட்டிருத்தல் காண்க. "ஆழி வடிம்பலம்ப நின்ரு னும்" (நள. சுயம். கஎஈ), "கடல் வடிம்பலம்ப நின்ற கைதவன்" (வில்லி. பாரதம், கரு - ஆம் போர். கஅ.)

அ. சத்தி - வலி, வேல்.

கூ. நினைக்குங்கண் - நினைக்குமிடத்து. தமிழ்ச்சங்கம், முதற்சங்கம் இடைச்சங்கம் இவற்றின் நிலையையுடையதாகும். கங்கைக்கரை - பொற்ரும ரைக்கரை; கங்காதீர்த்தக்கரையுமாம்; ஸ்ரீஹாலாஸ்யமாஹாத்மியம், கஈ-ஆவது லீலை, சசு-ஆம் சுலோகமுதலியவற்றைப்பார்க்க.

(பி - ம்.) 1'அப்புடைத்துபங்கப் பட்டலறி விழாமுன்னம்' 2'கண்டிலம்' 3 'ஓங்குயர்சங்க' 4 'துதிப்ப' 5 'நிலத்தாகும்'

உ உ.—வலைவீசின திருவிளையாடல்.*

அருளாருந் திருமதுரை யாலவா யியற்சொக்கன்
பரிவாக மூன்ஞெருகாற் பரபோக முத்திதரும்
பொருளாரு மாகமங்கள் [1]பொருப்பரையன் றவப்பயஞந்
திருவான வுமைகேட்பச் செழுந்திருவாய் மலர்ந்தனஞல். (க)

கேட்டருளுங் காலையினக் கிளிமொழியாள் பெருவிருப்பு
வாட்டமுற வெகுண்டு[2]ஈனி கேட்டவரை மடமாதே
நாட்டமுற நினக்கிங்கு நாமுரைத்த வரும்பொருளை
மீட்டுரையாய் கேட்டபடி காண்பமென [3]விளம்பினஞல். (உ)

பிடிநடையா ளுடனடுங்கிப் பெரிதஞ்சி யடியிறைஞ்சி
யடியவர்கட் கெளியானே யரியயர்கட் கரியானே
மடமகல விரித்துரைத்த மாசறுபே ரரும்பொருளின்
புடையையமற் றனன்சிறியே னறிவின்மை பொறுத்தியென. (ங)

வேறு.

வெறிகமழ் சடிலச் சொக்கன் விடிவிடுன் ஞங்கா ரத்தா
லறியா ஈவின்ற நூலை யவமதி செய்தாய் வேலைத்
துறைபயின் மீனம் வீசுந் தொழிலுடை வலைஞர் பொல்லா
[4]மறமலி யிழிகு லத்து வந்துதி யெனச்ச பித்தான். (ச)

மழைமதத் தொந்தித் தந்தி மத்தகப் பிள்ளை சீறித்
தொழுதுதான் றுதிக்கை யின்றித் துதிக்கையால் வளைத்தெ டுத்துப்
பழுதிலா கமங்க டம்மைப் பௌவமீ தெறியக் கண்ட
வழிவிலான் பெருவ யிற்றற் [6]கழகிதென் றென்று ரைக்கான். (ரு)

க. ஆகமங்களைத் திருவாய்மலர்ந்தனன். உ. ஈனி வெகுண்டு.

ரு. தந்திமத்தகப்பிள்ளை - விநாயகர்; மத்தகம் - தலை. துதிக்கை-துதித்தல், தும்பிக்கை. பௌவம் - கடல்.

* "அலைகடன் மீமிசை நடந்தாய்போற்றி" (திருவா. போற்றி. உஅ); "ஆராவமுதா யலைகடல்வாய்...வாரியனே" (திருவா. திருவம். உ); "மணிவலை கொண்டு...பிரானுவாரே" (திருவா. திருவார்த்தை. ங); "ஏதில் பெரும்புக... பிரானுவாரே" (திருவா. திருவார்த்தை. அ); "மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே" (திருவா. திருப்படையாட்சி, க.)

(பி-ம்.) 1'பொருப்பரசன்' 2'தனிகேட்ட' 3'விளம்பினன்' 4'மறவலியிழி 5'தற்றுதிக்கையின்றி', 'அநாதிதிக்கையின்றி' 6'அழகிதிக்கென்று'

மறைப்பொருள் கொளுங்கா லியார்க்கு மனமயக் குண்டா மீது
பொறுப்பதல் லாலி யாயைச் சபித்தனே யெனப்பொ ருளுய்ச்
செறுத்துயர் திருக்கை மேவுந் தெய்வவா கமத்தை வந்து
[1] பறித்ததை யன்றிக் காணக் கிழித்தனன் பலகைக் கந்தன். (கூ)

ஆங்கது கண்டு நீயு னறிவினே மதித்து வந்து
[2] காங்கெயா புத்த கத்தைக் கிழித்தனே கையில் வாங்கி
யோங்குநம் மதுரை மன்னு முயர்குல வணிக னுக்கோர்
மூங்கையம் புதல்வ னுகப் பிறத்திபோ வெனமு னிந்தாள். (எ)

வே று.

இத்தகைமை யிற்றிகழு மெல்லியினி லுட்புகவி லங்குகண நாத
னெருவன், முத்தனது கண்டிகடை விட்டதிரு நந்தியையு னிந்[3]தி
னிய சாப மிடுவா, னத்தியுழை பிற்சுறவு ருக்கொடுபு குந்துலவி டாக
மமை டுத்தெ னுமுனம், புத்தியுடை நந்தியுமு தித்துலவி னன்பெரிய
புத்தக[4]மெ டுத்து முடியில். (அ)

வே று.

எழிலுமை கலங்கி யிறைஞ்சல்கண் டிரங்கி யிலங்கதி யரைய
னம் மன்ப, னுழையிடை யினிய புதல்வியா யுதித்தா னுலகுளோர்
காணவந் தனேயா, மழகுற மணந்து காவனந் தியையு மாட்கொள்வ
மஞ்சனீ யென்று, செழுமையின் விடுப்பத் தொழுதருள் பெற்றே
செட்டியுஞ் செட்டியா யுதித்தான். (கூ)

தடமலி செல்வத் தோங்கதி யரையன் றவப்பெரும் [5]பயத்தி
னுற் போந்து, [6]புடையுமை யணங்கு தோன்றுமூன் பெரிய [7]போற்
றரு மவயவ நிரம்ப, நடமலி தந்தை தாயதி சயித்து நார்[8]வடி வன்
றியே தெய்வ, வடிவொடும் விளங்கு [9]மிவடனக் கியைந்த மாமண
வாளனு ரெனுங்கால். (கo)

கூ. பல கை - பன்னிருகைகள்.

எ. மூங்கையம்புதல்வன் - ஊமைப்பிள்ளை.

அ. கணநாதனெருவன் உட்புக. அத்தி - கடல். ஆகமமெடுத்து உலவிடு. புத்தி - ஞானம்.

கூ. அதியரையன் - வலேச்சாதிக்கு அரசன்; 'அதிபத்தர்' என்பதனது மூணர்க; கo, கஅ. இவ்வரசனுடைய ஊரின் பெயர் விக்கிரமமென்று திருவுத்தரகோசமங்கைப்புராணம் தெரிவிக்கின்றது. காவல்கத்தி. செட்டி-முருகக் கடவுள்; "செட்டியப்பனே" தே.

(பி-ம்.) 1'பறித்ததுமன்றி' 2'காங்கையா' 3'இனியசாபம்' 4'முடித்து' 5'பலத்தினுற்' 6'புடையுழை' 7'போற்றரும் வைபவம்' 8'வடிவின்றியே' 9'இவடனுக்கியைந்த'

பிறிவிலா வரலும் பிறிவிலா மயிலைப் பிரிந்தினி திருக்கமாட்டாம, லெறிவலை வாணர் தம்முருக் [1]கொண்டாண் டெய்திவாழ் பரதனே ணண்ணி, நெறியுடை யவனே யெனக்குநின் மகளை யளிப்பையே னினக்குநன் றென்ன, வறிவுளோன் விரும்பி வடிவஞ யிருந்தா யார் கொனீ யறியவோ தென்ருன். (கக)

துன்றெயின் மதுரை நகர்வரும் பெரிய தொல்லைமீன் வாணிகப் பிள்ளை, வன்றிறற் நெழிலா [2]லுயர்ந்தவ னின்பால் வந்தனன் மாமடி யென்ன, நின்றவ னையுற் றுரையிஞ லாகா நின்நெழில் காண மீன் வீசு, முன்றிகழ் வலையை முடியென மறைநூன் முறைதரு கயிறுகைக் கொண்டான். (கஉ)

வே று.

வெல்லவுட் கயிறு [3]வாங்கு கயிறிட்டு விரலா ழிக்கண்
பல்விதக் கண்கள் சேர்த்துப் பாரமீன் வலைக்க வல்ல
வெல்லைவிட் டிருப்புப் பார வினமணி விளிம்பு றக்கோத்
தொல்லைமீன் வலைமு டிந்தா னுற்றவ ரதிச யிப்ப. (கங)

ஏர்படப் பிடித்தற் காமீ னெங்குள தென்ன மாம
னூர்வரு மரக்க லங்க ளுலாவிடா வகையு டைத்துச்
சீர்மைமீ னனைத்துந் தின்று திசைதொறு நடிக்கஞ் செய்திவ்
வாரியுள் [4]வரைபோ லோங்கித் திரிவதோர் மகரமுண்டால். (கச)

[5] உற்றவ வதனுற் சால மிடித்தன மூளமஞ் சாமன்
மற்றது தனைப்பி டிக்க வல்லையேல் வலைஞர்க் கெல்லாங்
கொற்றவ னீயே மற்றென் குலக்கொடி தனையு மின்றே
வெற்றியி னினக்க [6]ளிப்பன் வேண்டுவ சிறக்கச் செய்தே. (கரு)

என்றது சொலவி யைந்தார் வலியினுள் வங்கத் தேறிச்
சென்றணி வலைதோ ளேற்றிச் சிலைத்துமேல் வலைத்து வீசி

கக. பிறிவு - பிரிவு. வலைவாணர் - வலைஞர். பரதன் - வலைஞன்.

கஉ. மாமடி - மாமனுர்; விளி; கூ: நு-ஆம் செய்யுட்குறிப்பைப் பார்க்க. மறைநூல் முறைதரு கயிறு - வேதமாகிய நூலால் முறையே உண்டாக்கப்பெற்ற கயிறு; வேதக்கயிறு.

கங. வாங்கு கயிறு - சுறுக்கேமறித்து வாங்கும் கயிறு. கண்கள் - வலையின் இடைவெளி. மணி - உருண்டைகள். "ஒரு சிறுகுடிப் பரதவனுகிப், பொன்றலைப் புணர்வலை கொடுங்கர மாக்கி, நெடுங்கடல் கலக்கு மொருமீன் படுத்த, நிறையரு ணுயகன்" (கல். கக.)

கரு. மிடித்தனம் - வறுமையுற்றேம்; "இடைமிடித் தார்தமைத்தேடி" (திருவேங்கைக்கோவை, நக.)

(பி - ம்.) 1 'கொண்டேயெய்தி' 2 'உயர்ந்தவன்கேட்டு' 3 'வாங்கிக்கயிறிட்டு விரலாளிக்கண்' 4 'மலைபோல்' 5 'உற்றதுவதனுல்', 'உற்றதாங்கதனுல்' 6 'அளிப்பல்வேண்டுப'

வென்றிகொண் மகரக் தன்னைப் பிடித்துமெய்ப் புத்த கங்க
[1] ளொன்றுமே காமற் கைக்கொண் [2]டேறிஞ ணும்பர் போற்ற. (கசு)

நந்திதன் னுருவம் பெற்று நயந்தடி வணங்கி நிற்ப
வந்தடி தொழுதார் போற்றி வலைஞர்க ளதிச யித்துச்
சென்துவர் வாய்க்க ருங்கட் சிற்றிடைப் பெரிய வல்குற்
பைந்தொடி யணங்கைச் சாதிப் பண்பினின் மன்றல் செய்தான். ()

வே று.

காதலியோ டதியரையன் கனகமழை பொழிந்திறைஞசி
யாதிகொளற் கென்னதவஞ் செய்தேனம் மணங்கையென
மாதிலெடு நந்தியொடும் வந்துடனு கமமெடித்துப்
போதுகண [3]நாதரொடும் போயினன்வான் மிசைகாண. (கஎ)

ஆங்கணேக்த பெருங்கிளைஞ ரருங்கனவோ மாயையோ
வீங்கிதுதா னறியகிலோ மிறைபணியே யெனத்துதித்து
நீங்கரிய நல்குரவு நீங்கியிருந் தனர் வருணன்
வாங்கருமன் பொடுதுதித்தா னனிபொழிந்து மலர்மாரி. (கசு)

சோதியுருப் பெற்றவுமை தொழுதியலா கமங்கடமை
யாதரவிற் கேட்பலினி யருட்கடலே குணக்குன்றே
யோதியருள் செயல்வேண்டு மூத்தமனே முத்திதரு
மாதிமுனி வித்தகனே யெனவேத்த வருண்மூர்த்தி. (உ0)

வே று.

உன்னரும் விசேட மிக்க வுத்தர கோச மங்கை
யென்னுமப் பெருந்தா னத்து ளெய்திபாங் கிறைவி யைப்பார்த்
தன்னமே விளம்பக் கேளென் முசிலா முத்தி நல்குந்
தொன்னெறி யாக மங்கள் சுரிகுழற் கருளிச்செய்தான். (உக)

அருந்தவம் புரியா முன்ன ரறுபத்து நால்வ ரங்கட்
பொருந்தல்கண் டெமக்கு ஞானம் புகன்றுருக் காட்டென் றேத்தத்
திருந்துப தேச நோக்காற் செய்துமா முனிவ ருய்யப்
பெரும்பொரு ளுரைத்தான் மன்றற் பேதையோ டிருவங் காட்டி. ()

கஅ. "அதியரைய மங்கை யமர்ந்தான் றன்னை" (திருநா. தே. திருவதிகை) என்ற திருவாக்கு, சிவபெருமான் அதியரையன் திருமகளோடிருந்தபடி மணஞ்செய்தருளிய இவ்வருமைத் திருவிளையாடலையும் புலப்படுத்தி விளக்குதல் காண்க. ஆதி: "ஆலவாயி லுறையுமெம் மாதியே" (திருஞா. தே. க-கo.)

கக. இறைபணியே - சிவபெருமான் திருவிளையாடலே.

உ0. ஆதிமுனி: விளி.

உஉ. புரியா - புரிந்து. "எண்ணெண்ணுத்தமப்பத்தர்" என்பர் பின்னும்; உங. பெரும்பொருள் - மகாவாக்கியப்பொருள். மன்றற் பேதை - மங்களேசுவரி. திருவுத்தரகோசமங்கைப்புராணம், அத்தலத்தில் தவஞ்செய்த முனி

(பி - ம்.) [1] 'ஒன்றுபோகாமற்' [2] 'ஏகினனும்பர்வாழ்த்த' [3] 'காதலெடும்'

வித்தக வேடங் காட்டும் விமலனீள் புணரி சூழ்ந்த
வெத்தலத் தினுஞ்சி றந்த தித்தல மே[1]யென் றெண்ணை
ணுத்தமப் பத்தர் தங்க ணுத்தரா கமகோ சங்கள்
வைத்துமா மதுரை நோக்கிப் போயினன் மாதி லேடும். (உங)

அன்றுமைக் கருளிச் செய்த வரியவுத் தரமோ சங்கண்
மன்றுற வைத்த லாலே வாதவூ ராளிபோற்று
மொன்றிய நகர்க்கு நாம முத்தர கோச மங்கை
[2]யென்றுமை மங்கை பேரால் வழங்கிய [3]திலங்க வெங்கும். (உச)

ஆகத்திருவிருத்தம் - சகஅ.

உங.—வளையல்விற்ற திருவிளையாடல்.*

முக்கண னுல வாயன் முன்னமோர் காலஞ் சென்று
தக்கமா முனிவர் வாழுந் தருமவாச் சிரமந் தன்னுட்
புக்குநற் பிச்சை கொள்ளுங் காலையிற் [4]புனித மாதர்
மிக்கபே ரெழில்கண் டியாரும் விரும்பியொள் வளையி ழந்தார். (க)

விரும்பிய மடவார் நெஞ்ச வேறுபா டறிந்து கேள்வர்
பொருந்தலின் றெமக்கிங் காகீர் பொழிறிகழ் மதுரை மன்னுந்
திருந்திய வணிகர் தூய்மை சேர்குல துதித்தங் கெல்லாந்
தரும்பரன் றன்னைச் சாரு மென்றவர் தமைச்ச பித்தார். (உ)

ஆங்கவர் முன்னர்ச் செய்த வருந்[5]தவப் பயத்தாற் போந்து
வாங்கருஞ் செல்வத் தோங்கும் வணிகர்தங் குலத்துட் டோன்றி
யோங்கிய வடிவத் தோடு முலகுளோ ரநேச யிப்ப
நீங்கரு மொழுக்கத் தோடு நிரம்பினர் [6]பிறங்க வங்கண். (ங)

முன்னவ னியாவும் வல்ல முதியவன் சமாதி யாலே
பின்னரொண் புதல்வ ரின்றி யினைவரும் பெண்ணே யாக
மன்னிய வினிமை கூர்ந்த வணிகர்கண் டியார்க்க ளிப்பே
மன்னிய ரல்லா ரில்லே யென்றுளத் தழுங்கிப் புக்கார். (சு)

வர்கள் ஆயிரவரென்றும் அவர்களுக்குக் காட்சி காடுத்தருளியவருடைய திரு நாமம் காட்சிகொடுத்த நாயகரென்றும் கூறுகின்றது; அப்புராணத்துள்ள பார்ப்பதி சிவம்புரிந்த அத்தியாயம் பார்க்க.

உங. பத்தர் தங்கண் - பத்தரிடத்து. உத்தர ஆகம கோசங்கள் - விடையாகிய ஆகம புத்தகங்கள்.

(உங)

ச. சமாதி - சங்கற்பம். [வாய்.)

* "வளவிலியா யெல்லார்க்கு மருள்செய்தானை" (தே. திருநா. திருவால

(பி - ம்.) [1]'என்றெண்ணி' [2]'என்றெழின்மங்கை' [3]'இலங்கையாங்கும்' [4]'புனிதர்மாதர்' [5]'தவப்பலத்தால்' [6]'பிறங்கவன்றே'

துப்பமர் மெய்யன் வையந் தொழுபவன் வணிக ரூகி
யொப்பருங் கங்கை மாதை யுமைமாதை யொளித்துப் போந்தே
யப்பெருங் கன்னி மாரைப் [1]பரிசிப்பா ளுசை கூர்ந்து
செப்பரு மதுரை தன்னுட் சேர்ந்தனன் வணிகர் வீதி. (ரு)

கழையதண் டேன்றி மூன்று விரல்படக் கடிநீ றிட்டுத்
தழையவொண் கலிங்கஞ் சுற்றித் தனிமுடிச் சாத்துஞ் சாத்திப்
பழையதோர் குடைக வித்துப் பசும்பைதோ ளேற்றிச் செங்கை
யழகெழ மோதி ரங்கா ணிகொள்கண் டிகைக டாழ. (சு)

வேறு.

இளமை மெய்வி டாதி லங்க விருமி யுள்வ ளைத்துசொற்
றளர வெள்ளை நரை[2]பு னைந்து சால வீழ்வி ருத்தனு
யளவில் வண்ண வளைகள் கொண்ட ரும்பெ ருந்தெ ருத்தொறும்
[3]வளையல் கொள்ளும் வளையல் கொள்ளு மென்று கூறி வந்தனன். ()

வந்துகூறும் வணிக னல்ல [4]வடிவி னுல நங்களே
யிந்த மாய நரைப ரந்த தின்ன தென்ற றிந்திலாஞ்
சுந்த ரேசன் மாயை யோதெ ரிந்தி டாதெ னச்சொலிப்
[5]பந்த மாற யாவ ரும்ப ழிச்ச கின்று லாவினன். (அ)

இணையில் வண்ண வளையல் கண்டெ னக்கெ னக்கெ னப்பகர்ந்
தணிக லன்கள் பொலிய வும்ம நங்க ணன்ம னங்குலக்
துணர்வு மின்றி மடனு மின்றி யொல்லை வந்த மூல்லைசேர்
வணிகர் தங்கண் மங்கை மாரை வளையி னுல்வ ளைத்தனன். (கூ)

கருதி நின்று தொழுது செய்ய கைத்த லங்க ளேப்பிடித்
[6]துருவ மிஞ்சு மாதரீரு [7]மக்கு மிக்கி லங்கயாம்
வரிசி றந்த நல்ல நல்ல வளைக ளுண்டு பரிவொடுந்
தருது நில்லு நில்லு மென்று சாற்றி மாலை யேற்றினன். (கo)

வேறு.

மின்வளை தன்னையெ டுத்துவி ரித்துவி ரைந்திடு வார்போல
மன்னிய [8]கைகள்பி டித்துவி டாதுவ னைக்கிம யக்குதல்கண்

ரு. துப்பு - பவழம்; தூய்மையுமாம்.

சு. கழையதண்டு - மூங்கிற்றண்டு. கலிங்கம் - ஆடை. முடிச்சாத்து - தலைப்பாகை. காதணிகளும் கண்டிகைகளும் தாழ.

எ. 'வளையல்கொள்ளும் வளையல்கொள்ளும்': அடுக்கு.

கூ. முல்லை - கற்பு. வளைத்தனன் - அகப்படுத்திக்கொண்டார். வளையி னுல வளைத்தனன்: மடக்கு.

கo. 'நல்ல நல்ல', 'நில்லும் நில்லும்': அடுக்கு. மாலை - மயக்கத்தை.

(பி-ம்.) 1'பரிசிப்பின்' 2'புணர்ந்து','பரந்து' 3'வளைகள்கொள்ளுமென்று கூறிவளையமாகவந்தனன்' 4'வடிவினுனவங்களே, யிந்தமாயை' 5'பந்தமற்றி யாவரும்' 6'உருவுமிஞ்சு' 7'உமக்குமக்கு' 8'கைகண்மடித்துவிடாதுவனக்கி'

டன்னைய ருக்கறி விப்பமெ மக்கித டாதென [1வச்சமுறுத் [ரும்.
தென்னைவி டென்னைவி டென்பரு ளத்தெழு மின்பம றைத்தெவ

இப்படி சொல்லிய தேது[2]ப ழுத்துக ரைத்தவி ருத்தனியா
ஞெப்பமர் கைகள்பி டித்தத னுமம குற்றவர் தாமிகழார்
செப்பிணை யோமுலை மைப்புய லோகுழல் செங்கய லோவிழிவாய்
துப்புரு வோதுதல் விற்பிறை யோவிது வல்லியர் சொல்லுமென. ()

வேறு.

நன்குறு மொழியிற் பட்டு நாய்களைக் காண்பான் வேட்டின்
றென்னகையில் வளைகெ ரிந்த தென்கையில் [3]வளைகெ ரிந்த
தன்புடை யவனே நல்ல வணிவளை யெமக்கி டென்று
முன்பிடும் வளைகெ ரித்துச் சொல்லுவார் முடுக வாங்கு. (கஉ)

[4]இனக்கன வளையி டாதிங் கேகுவா யாயி னெங்கண்
மனத்தமர் சொக்க னுர்த மாணையால் வளைப்பே மென்னத்
தனக்குநல் லவர்க்கு நல்லோன் றயாவொடு மூறுவ லோடுங்
கனத்தபல் வளைக ணீட்டுங் கைத்தலத் திலங்க விட்டான். (கச)

பூனையுமா யிரம்பொன் னிற்குப் புரிவளை யொன்றே யென்றென்
றானைவரும் விரும்பக் கூறி யருமபெருந் தனத்தை வேட்டாண்
டினவளை விற்பான் வந்தோ னிலங்கிய தனங்கொ டுத்துக்
கனவளை கொள்வான் வந்த கன்னியர் வளையுங் கொண்டான். (கரு)

இந்திர னையன்மா லாதி யாவருந் தீண்டொ ணாத
சுந்தர வருவங் [5]தீண்டத் தோன்றுபே ரின்பந் தன்னைச்
சிந்தையா லணுப விப்போர் செட்டியார் நாளு மிங்கே
வந்துபோம் வந்து போமென் [6]றவாவற வழுத்தக் கண்டு. (கசு)

[7]பழுதிலா மார வேளைப் பாலலோ சனத்தாற் காய்ந்தோ
னழகிய மடந்தை மீர்கா ளப்படிச் செய்வ லின்றிவ்
விழுமிய வொளிவ ளைக்கு விலைதர வேண்டா நாளை
யுழைதொறும் வந்தாற் முரு [8]மென்றன னுவகை நீட. (கஎ)

கச. வளைப்பேம் - தடுப்போம்; "வள்ளலீங்கப்பெறுய்வளைத்தெனை" (சீவக. அஅ0.)

கரு. தனம் - கொங்கை, பொன். "இதழியுக் தும்பையு மதியமுக் கரந்து, வளைவிலே மாக்கள் வடிவெடுத் தருளி, முத்தமிழ் தான்மறை முளைத்தருள் வாக்கால், வீதிகூறி விரித்தமுன் வரத்தாற், கருமுகில் விளர்ப்ப வறனீர் குளிப்பக், கண்புதை யாப்புத் திணியிருள் விடிய, வடறொறும் பிணித்த பாவமும் புலரக், கண்டநீள் கதுப்பினர் கைகுவி பிடித்துக், குருகணி செறித்த தனிமுத னுய கன்" (கல். சசு.)

கசு. செட்டியார்: விளி.

கஎ. பாலலோசனம் - நெற்றிக்கண். உழைதொறும் - வீடுகள் தோறும்.

(பி - ம்.) 1'அச்சமுறுது' 2'பழுத்த' 3'வளையகன்றது' 4'இனக்கினவளை' 5 'தீண்டித்' 6'அவரவர்' 7'பழுதிலான்' 8'என்பனீர்த்துவகைநீட'

இன்னன பகர்ந்து காவ லிலங்குபே ரிடங்க டோறு
மூன்னுற நடப்ப மேனி வித்தகையு மூதிரா மென்மைப்
புன்முறு வலையுங் கண்டு புதுமையீ தறிவ மென்றே
நன்னெறி [1]வணிக வூரே தார்கொனீ ரவிறி யென்றார். (கஅ)

அழகிய சொக்க ரமை மறுமுகச் செட்டி மைந்தன்
பழவுற வளகைக் கோவு லறிகுவர் பதியு மீது
மழவுறக் கங்கை யாடி வந்தனன் குமரி யாடக்
கிழவனியான் பிறந்தே னல்ல கிளையிலே யெனம றைந்தான். (ககூ)

ஆங்கவன் மறையா மூன்ன ரரன்பரி சனத்தா லாங்க
ணேங்குகன் னியர்சூல் கொண்டு வீங்கிய வுதரங் கண்டே
யேங்கிகங் குலமு டிந்த தின்றென வெருவி யாருந்
தாங்குதல் கொடாது தீயிற் [2]சார்வதற் கொருப்பட் டார்கள். (உ0)

அருளுடைச் சொக்க னஞ்சி யவ்வயின் விடையிற் ரூன்றிப்
பொருவரு மிருடி மாதர் சாபத்தாற் [3]போந்தார் நும்பாற்
பரிவொடும் வஞைய லிட்டுப் பரிசித்தே நாமே சாத
லொருவரும் வேண்டா மற்றெக் குலத்தினு முயர்ந்தீ ரென்ன. (உக)

நடமொடு துதித்தார் யாரு நானிலத் [4]துயர்ந்தோ நாமே
யுடையவ [5]னறிந்தி டாத சரக்கிலை யுரைக்கு மெட்டான்
[6]கடையரேம் பயந்த புன்மைக் கன்னிமங் கையரை வந்து
படிமிசை விரும்பற் கென்ன பாக்கியஞ் செய்தோ மென்றே. (உஉ)

ஆர்ந்தமங் கையர்கண் மூற்று மரன்பரி சனத்தாற் பண்பு
சேர்ந்தகன் புதல்வர்ப் பெற்றுத் திருந்திய வொழுக்கத் தானும்
வாய்ந்தநல் வடிவி ஞனு மறுவற விளங்கி நாளுஞ்
சூழ்ந்ததஞ் சுற்றம் போற்றத் துயர்கெட விருந்தார் வாழ்ந்து. (உங)

அறமலி மதுரை மன்னும் வணிகர்க ளன்று முன்னு
வெறிகமழ் செச்சைக் கண்ணி வேளென விளங்கி னூர்க

ககூ. 'அழகிய சொக்கன்': மதுரைக்கல. சா. நிஞ, கூச; மீனுட்சி. காப்பு. ச. ளகைக்கோன் - குபேரன்; கோனென்னும்பெயர் வணிகருள்வழங் கும். மழவுற - இளமையுற. மழவுறுதற்குக் குமரியாடவந்தனன்; குமரி, சிலே டை. இளை - நல்லகுலம், மூங்கில். இச்செய்யுள், "வந்தவரவெள்ளை" (சீவக. உ0உ0) என்னும் செய்யுளின் கருத்தைத் தழுவிவந்தது. அச்செய்யுளின் ஒற் றுமைப்பகுதியைப் பார்க்க.

உ0. பரிசனம் - ஸ்பரிசம். தாங்குதல் கொடாது - பொறுமல்; கள: நி.

உக. 'அஞ்சி' என்றார், பழியஞ்சியாதலின்.

உஉ. 'உடையவனறிந்திடாத சரக்கிலை' என்பது ஒருபழமொழி.

உச. செச்சைக்கண்ணி - வெட்சிமாலை.

பி - ம்.) [1]'வணிகருரோது' [2]'சாவதற்கு' [3]'போந்தாரும்போற்', 'போந்தா ரிங்கே' [4]'உயர்ந்தோர்நாமே' [5]'அழித்திடாத' [6]'கடையரேம்பயந்தோர்தம்மைக் காணகங்குலம்போல்வந்து'

ணெறிதரு தூய்மை வாய்மை நீதிநூல் லறிவு செல்வங்
குறைவற நிறைந்து மற்றெக் குலத்தினு நனிசி றந்தே. (உச)

கொள்ளவோர் [1]புதல்வ ரின்றிக் குலங்கெடு மென்று கண்டு
மெள்ளநங் கிளையா னென்று [2]மெய்யுணர்ந் தெய்தி யொப்பித்
தொள்ளிய யிட்ட தன்றி யுமையொடும் [3]விடையிற் றோன்றித்
தெள்ளியீர் மணந்தே நாமென் றிறையருள் செயப்பெற் றார்கள். ()

ஆகத்திருவிருத்தம் - சசகூ.

உச.—இலச்சினையிட்ட திருவிளையாடல்.

பாங்கடியார் பரவுக ழாலவாயான் பதம்பணிவான் முன்னொரு காற் பத்தி மிக்கோ, னீங்குபுகழ்க் காடுவெட்டி யென்றோர் மிக்க வுயர்தலைவன் வைகை[4]வட தடத்தி னெய்த, வீங்கதனை யறிந்தணுகா வாறு கோயி லெயிற் கடைதன் னிலச்சினையிட் டழைத்து மாறன், றுங்கரிய படையெடுப்பான் முயன்றுன் யாறுந் தனிப்பரவை யெனப் பெருகப் புகுந்த தன்றே. (க)

மண்முழுதும் பலதீர்த்தங் கண்டி றைஞ்சி மனமகிழ்ந்தேன் மற்றவற்றுள் வளமை கூர்ந்த, கண்ணிறைந்த பதியையுமப் பதியி லோங்குங் காரணமா நின்னையுநீ கருதி வாழு, மெண்ணிப[5]மெண் ணெண்ணமரர் மடங்க லெண்ணுன் கேந்துயரா லயத்தினையு மிலரி மை மிக்க, தண்ணமர்பொற் றுமரைவா வியையுங் காண்பான் றணி விலா விருப்பெய்திச் சார்ந்தே னிங்கே. (உ)

இன்னருள்சேர் தயாநிதியே யமர ரேறே யெங்தையே யென் செய்கேன் பகைவனைய, தென்னெனெடு பேராறும் வாராவாறு [6]தீங்கு செயக் கண்டனைமற் றியாவும் வல்ல, நின்னையலான் மனக்கருத்து முடிப்பா ருண்டோ நிசியிடையின் றென்கருத்து முடித்தி டாயேன், மன்னுயிரை முடிப்பதலால் வாழே னென்று மதுரைவளம் பதி நோக்கி வருந்த வுற்றுன். (ஊ)

உரு. இச்செய்யுள் கவிக்கூற்று.

(உச) [முத்திரை.

க. காடுவெட்டியென்பது, இவ்வரசன்பெயர். தன் இலச்சினை - மீன

உ. ஆலயம் - இந்திரவிமானம்; அஃது அ - யானை, சுசை - கணகாதர், ஈடு - சிங்கங்களால் தாங்கப்பெறுவது; "கரியெட்டுஞ் சினமடங்க வலெட்டு மெட்டெட்டுக் கணமுந் தாங்க" (திருவிளை. இந்திரன். அகூ.)

ஊ. 'தென்னெனெடு' என்பது முதலியவற்றை, "வழுதி யன்றியும் வையை யும்பகை யான தென்று வருந்தினன்" (திருவிளை. விடை. கக) என்பது தழுவிவந்திருத்தல் காண்க.

(பி - ம்.) 1'புதல்வனில்லை' 2'மெய்யுணர்ந்தெய்தி' 3'விடைமேற்' 4'வட தீரத்து' 5'எண்ணுன்கமரர்' 6'தீங்குசெய்தல்'

மருவுபுக ழானருள்சேர் பத்தர் பத்தன் மற்றவன்றன் மனக்
கருத்தை முடிப்பா னெண்ணிப், பொருவருந்தன் கோயிலெயில் வாயி
னுன்கும் பூவியன்மீன் முத்திரைகண் டிடமுண்டாகப், பரவு[1]மதி
லொடுவடவா யிலைமூரித்துப் பாதி[2]யிர விற்சென்றே ரியந்திரத்தாற்,
[3] கரிபரியோன் றினைநுதித்தென் கரையி லேற்றிக் கண்டவெயின்
முரிவாயாற் கொண்டு புக்கான். (ச)

ஓங்கிருளே [4]யவனளவில் வெளிய தாக்கி யோதரிய சோதிவிமா
னத்தை யும்பொற், பூங்கமல வாவியையுந் தனது நீங்காப் பொருவி
லுரு வையுங்காட்டக் கண்டு போற்றி, [5]யாங்கவனுட் கசிந்துதொழு
தாடிப் பாடி யினைவதற்கிங் கென்னதவஞ் செய்தே னென்று, நீங்க
ரிய மயிர்ப்புளகம் [6]பொடிப்பக் கண்க ணீர்ததும்ப மேல்[7]விதும்ப
நிறைந்து நின்றான். (ஞ)

அரியயர்கட் கரியபிரான் காடு வெட்டி யன்புகயங் கண்டாரா
வன்பு கூர்ந்து, பொருவருநல் வரங்கள் கொடுத் [8]தழைத்தாற் போலப்
பொருபுனல்சேர் தடினிவட தடத்தி னேற்றிப், பரிவுடைய நம்பத்த
செழிய னோடு படைபொருவான் படையில்லை விடியு முன்னம்,
விரைவொடும்போ வென்றுநிசி யாக்கிப் போக்க விரைந்தருள்கண்
டதிசயித்து நயந்து போனான். (கூ)

வே று.

ஆங்கவன் போய [9]பின்ன ரல்லிடை மெல்ல மேவி
யோங்குபே ராணை யாலே யுயரெயின் முரிவாய் தன்னைத்
தீங்கறத் தீர்த்தோர் வாயில் சிறக்கவிட் டடைத்து முன்ன
ரீங்கி[10]யா வருங்கா ணத்த னேற்றிலச் சினையு மிட்டான். (எ)

சுரிகுழ லுமை மயிற்குச் சொல்லியா லயத்தி ருப்ப
விரிகடை காப்போ ரஞ்சி விடியுமு னரசற் கூடிப்
பொருவிலோர் வாயில் வேறுப்ப் பொறித்தமுத் திரையும் வேறுய்
மருவிய மதிலும் வேறு யிருந்தது வடபால் வாயில். (அ)

ச. 'பத்தர் பத்தன்': கஅ: கூ, கூக: சக. முரித்து - இடித்து. இயந்திரத்தால் ஏற்றி. எயில் முரிவாய் - மதிலை இடித்த வேறொரு வாயில்; "உயரெயின் முரிவாய்" என்பர் பின்னும்; எ; "சுங்கொரு வாசல்விட் டேதொழு வித்திட" (பயகா. உச.)

ஞ. மேல் விதும்ப - உடல்நடுங்க; "பொதும்பருள் விதும்பினரே" (சீவக. உகசஅ.)

கூ. ஆராஅன்பு - தெவிட்டாத அன்பு. தடினி - ஆறு; "நஞ்சத்தடினி வெம்மையையுங்கண்டு" (க சூ: கசு); "உணர்வுடைத்தடினி" (க அ: ஞச.)

எ. ஏற்று இலச்சினை - இடபமுத்திரை.

(பி - ம்.) 1'மதிலொரு' 2'நிசியிற்' 3'கரியபெரியோன்றனைத்' 4'அவ்வள லில்' 5'ஆங்கவனுமகிழ்ந்து' 6'பொறிப்ப' 7'வெதும்ப' 8'அணைத்தாற்' 9'பின்னு லவ்விடைமேவியெங்கும்' 10'யாவருங்காணத்தனேற்றிலச்சினை

என்றது சொல்லச் சீறி யெய்திய வமைச்சர் தம்மைச்
சென்றறி மின்க ளென்னச் சென்றவர் வந்து சொல்வார்
வன்றிறன் மன்ன கேண்மோ மாயையோ புகுந்த வாறின்
ரொன்றுமிங் கறிந்தோ மில்லை யுரைத்தவா ரொக்கு மென்றார். (கூ)

இருந்திறல் வழுதி மற்றிங் கியார்செய வல்லா ரீது
பொருந்திய தறிவான் யாவும் வல்லவ னென்று போத
வருந்தியூ ணிழிந்து செய்ய மலரணைத் துயிலுங் காலைத்
திருந்திய கனவின் மாயை வவ்லவன் சென்று சொல்வான். (கo)

ஞாயில்வாய் மதின்மு ரித்து நள்ளிரு ளெல்ல தாக்கி
நேயமுள் ளவரீ யிங்கே வரவிட்டு நீங்க விட்டுச்
சேயதோர் வாயில் விட்டுச் சேவுறு குறியு மிட்டே
மேயவின் றியாங்கா ணென்ன வதிசயித் தெழுந்தான் போற்றி. (கக)

வந்தெயி லிடப மிட்ட வாயில்கண் டதிச யித்துச்
சுந்தர னல்லா லுண்டோ தொழுபவர்க் கெளியா னென்று
மந்தையி னன்பு செய்தான் மன்னவன் முறைமை வாயி
லிந்தமா நிலத்து நின்ற திலச்சினை வாயி லென்றே. (கஉ)

ஆகத்திருவிருத்தம் - சருரு.

உரு.—மாணிக்கம்விற்ற திருவிளையாடல்.*

மூன்னமோர் தென்னர் கோமான் முறைமையி னவனி காத்து
மின்னெயின் மதுரை தன்னு ளிருக்குநாள் விதிவ சத்தான்
மன்னுநன் குலமா தர்க்கோர் மகவின்றிக் [1]காதன் மாதர்க்
கின்னெறி யில்லா மைந்த ரெண்ணில ராஞ ரன்றே. (க)

மற்றது கண்டு சால [2]வாடிய மன்ன னேர்ந்தா
ளற்புத சொக்க மூர்த்திக் கறைகுவ மென்று சென்றே
முற்றுமிங் களிக்க வல்ல முதல்வனே புதல்வ னில்லை
யிற்றது குலமென் றேத்த வீந்தன மென்னப் போந்தான். (உ)

கo. போத - மிக.

கக. வாய்மதில்: விசேஷத்தொகை. சேவுறுகுறி - இடபமுத்திரை.

கஉ. முறைமை வாயில் - இந்த வரலாற்றை யுடையவாயில்; இலச்சினை வாயிலென்று ஒருவாயில் பண்டைக்காலத்து இருந்தது போலும்.

(உரு)

க. இன்னெறி - இனியநெறி; கல்லாமை.

*"கதிர்நிரை பரப்பு மணிமுடித் தேவர்கள், கனவிலுங் காணப் புனைவருந் திருவடி, மானிலக் தோய்ந்தோர் வணிக ஞகி,.....இவையெனக் கூறிய நிலை ருட் கடவுள்" (கல். சரு.)

(பி - ம்.) 1 'காவன்' 2 'மயங்கியே'

[1] இறையவ னருளா னல்ல விலக்கணத் துடனோர் மைந்தன்
மறுவறு குலமா மங்கை வயிற்றகத் துதித்தை [2]யாண்டு
குறைவற [3]வளர்ந்தா ளந்தக் கொற்றவன் வேட்டை போகித்
திறமுறு முழுவை கையிற் சேர்ந்துயர் துறக்கம் புக்கான். (கூ

வேறு.

அவமுறு புதல்வ ரிகல்செய்து [4]காவ லறையழித் தரும்பொருள்
கவர்ந்தே, புவிமிசைத் தூரந் தங்குறை யறிந்து போயினர் யாரையு
மறைத்துக், கவினுறு குலக்கோ மைந்தனைக் காத்த வமைச்சர்கள்
கரிபரி முதலா, நவையறு படையை வெருவுறு குடியை [5]யடைவுற
நயமொடு கூட்டி. (சு

வரந்தரு [6]மரசன் குமாரனுக் கடைவின் மணிமுடி சூட்டுவா
னெண்ணி, யிரும்பொரு மேடிடக் கண்டிடா தறையி னியைந்தசாம்
பூனத மான, வருஞ்செழுங் கனகக் தேடினுஞ் சிறந்த வணிமுடிச்
காகவ மணிக, டெரிந்தன வெங்ஙன் றேடுவஞ் சொக்கன் றிருவுள
மறியகி லேமால். (ரு)

விதுமர பிலங்க விவற்[7]கபி டேகம் விரைவுடன் செய்திடா
தொழியி, னதிர்வுறு முலக மென்செய்கே மென்றென் றழுங்குதல்
கண்டருள் சுரந்து, நிதமுறு சொக்கன் பலசிறப் போடுஞ் செட்டி
யாய் மணிவில்லை கூறிப், பதியுயர் பெரிய [8]பட்டின மீங்கள் பார்ப்பதிங்
கென்னென வடைந்தான். (சூ)

[9] வருந்துபே ரமைச்சர் நயந்துசென் றுளத்து மருவுகா ரிய
முரைத் துன்னைப், பொருந்துமுன் றுன்பம் போனது சொக்கப்
புனிதனே வறிகிலே மென்ன, வரும்புரை யிரேகை களங்கமின்
துக்க ளற்றவை குற்றமொன் றிலலை, யொருங்கமுன் பார்த்துக்
கொள்ளுமின் முடிக்கா மொன்பது மணியுமுண் டென்றான். (எ)

போதுகாய் வெயிலின் வாடிய பயிர்க்குப் பொழிபுன லுதவிய
புயல்போற், றீதிலா வடிவின் வந்தமா ணிக்கச் செட்டிகேள் யாங்க
ளீங் கறியக், கோதிலா மவுலிக் கானவை தெரிந்து குணங்குறை

ச. காவலரை - காக்கப்படுதலையுடையபொருள்களை. யாரையுமறைத்து மைந்தனைக்காத்த அமைச்சர்களென்க; "முடிசூடுவான் மறைத்துக்காத்தவமைச்சர்" (கடம்ப. இலீலா. உரு.)

ரு. சூட்டுவான் - சூட்ட.

சு. உலகம் அதிர்வுறும் - உலகம் நடுங்கும். பட்டினம் - காவிரிப்பூம் பட்டினம்.

எ. புரை - காகபாதம். இச்செய்யுளால், இரத்தினத்தின் குற்றங்கள் இன்னவையென விளக்கும்.

(பி - ம்.) [1]'இறையவனதருளால்' [2]'ஐந்தியாண்டு' [3]'வளரவாழ்ந்த' [4]'காவலரை' [5]'அறிவுற' [6]'அரசகுமாரனுக்கு' [7]'அபிடேகம்விரைவொடு' [8]'பட்டணம்' [9]'வருந்துமேரமைச்சர்'

பிறங்கிலக் கணங்க, ளோதியா தரத்திற் ருவெனக் கேட்ப வுத்தம னத்திற முரைப்பான். (அ)

வாசவன் வேள்விக் கிரங்கியோர் பசுவாய் வந்திடும் வலவனைச் சிரத்தா, லாசற வரிந்த வுறுப்பினை வாளே ரருந்தமண் விழுந்தன தப்பிக், காசறு வித்தாய் மலையினுஞ் சிறந்த [1]கடலினுந் தீவினும் புது மை, பேசரும் பெரிய [2]நாட்டினும் பிறந்து விளைந்தன பிறங்கிட வன்மேற. (கூ)

பரியவா ளென்பு வயிரநீ டிறைச்சி பவழமென் கருவிழி நீலம், பொருவரு மொளிமீசர் கவம்புரு டராகம் பொருந்துசெங் குருதிமா ணிக்க, மருவிய மயிர்வை டூரிய நிணங்கோ மேதகம் வாணகை முத் தங், குருவளர் பித்து மரகத மென்று கூறுவர் குலமணிப் பிறப்பே.

சுடர்கொண்மா ணிக்கத் திறம்வகுப் பவரார் சொல்லுவல் சுருங் கநான் கிடமும், படருநால் [3]வருணத் திலகிய பெயரும் பன்னிரு குணமுமீ ரெட்டி, நெடியபுன் குறையுந் தகுமெழு நான்கு நிறங்க ளும் பிறங்கிய விலேயு, [4]மிடமுறு பத்தி பாய்தலு மென்ன வெழுவ கை யிலக்கண முடைத்தால். (ஙக)

கருதிடின் [5]வலவை மாவலி கங்கை கம்பளை கல்லணை யென் னுந், தருசம னெளிசூழ் நதிகளுன் கிடமாஞ் சாதிநான் கந்தணன் வெள்ளை, பரிவுறு மரசன் சிவப்புவாழ் வணிகன் பச்சைசூத் திரன் கறுப் பவைதா, மருவிய பெயர்கோ மளங்[6]குரு விந்தம் பதுமரா கம் பணு மணியே. (கஉ)

கூ. வலவன் - வலாசுரன். தப்பி மண்விழுந்தவைகள்.

கo. வலமுடைய என்பு வயிரம், இறைச்சி பவழம், கருவிழி நீலம், கவம் புருடராகம், இரத்தம் மாணிக்கம், மயிர் வயிடூரியம், நிணம் கோமேதகம், பல் முத்தம், பித்து மரகதமென்க.

கக. மாணிக்கம் எழுவகை இலக்கணமுடைத்து; இவற்றை "மாணிக் கத் தியல் வகுக்குங் காலைச், சமனெளி சூழ்ந்த வொருநான் கிடமும், நால்வகை வரு ணமு நவின்றவிப் பெயரும், பன்னிரு குணமும் பதினறு குற்றமு, மிருபத் தெண்வகை யிலக்கிய நிறமு, மருவிய விலேயும் பத்தி பாய்தலு, மிவையெ மொழிப வியல்புணர்ந் தோரே" (சிலப். கச: கஅசு - எ, உரை) என்னுமேற் கோளாலும் தெளிக.

கஉ. சமனெளி - இலங்கைத்தீவிலுள்ள ஒருமலை; இதனை, "இலங்காதீ வத்துச் சமனெளி யெனலுஞ், சிலமபினை" (மணி. உஅ: கoஎ - அ) என்ப தனாலும், அம்மலையை நான்குநதிகள் சூழ்ந்துள்ளனவென்பதை, "குடுமிச் செ ககர்ச் சமனெளி சூழ்ந்த, நிரைநதி நானகு னிகழ்ந்தன குறியும்" (கல். சஎ) என்பதனாலுமுணர்க. வலவை, மாவலிகங்கை, கம்பளை கல்லணை என்னும் நதி கள் நான்கும் இலக்கைத்தீவில் சமனெளியிலிருந்துண்டாவன.

(பி - ம்.) [1]'கடலினுந்தீயினும்', 'கடலினுநதியினும்' [2]'நாட்டினும்பாய்ந்து வளர்ந்தன' [3]'வருணத்தியற்கையும் பெயரும்' [4]'இடமுறுவத்திப்பாய்தலு மென்னும்' [5]'வலைகமாவனகங்கை' [6]'குருவத்தம்', 'குருபத்தம்'

மின்னிய நெருப்பிற் சேரினுங் தகட்டின் மேலினும் [1]வெயிலி னுங் கரத்து, மன்னினு மோரந் தன்னினுந் தூக்க மருவினுந் தேய்ப் பினும் பிறங்கிக், கொன்னுறச் [2]சிவந்து பார்க்கவந் தோங்கிக் [3]குச்சி முன் பரந்துசேர்த் திடின்முன், பன்னிய வொளித்தாய் [4]மத்தக சுத்தி யுடையது பன்னிரு குணமால். (கஉ)

[5]மிகவுறு தராச மத்தகங் குழிதல் [6]வெச்சமி லெச்சுமி வெகுளி, [7]புகையொடு திருகன் மூரணெடு செம்ம ணிறுகுதல் கருகுதல் பொரிவே, யிகலுறு புடாய நெய்ப்பிலி [8]சந்தக் கேடிலீள் வெய்யகீற் றென்ன, வகைபடு குற்ற மெண்ணிரண் டாக வகுத்தனர் மாசறு புலவோர். (கச)

வேறு.

பங்கயஞ்செங் கழுநீர்சா தகக்கண் சூத பல்லவமின் மினிகோ பம் [9]பரிதிதீப, மங்கிவிழு [10]தழற்குன்றி யுலோத்தி ரஞ்செவ் வரத்த முய லிரத்தமா தளவீ வித்தச், செங்கலில விதழ்குரவு பாட லப் பூத் திலகமுருக் கிதழ்மஞ்சட் [11]டேறு கோவை, தங்கொளிச்சிங் குர ங்குக்கிற் கண்ண சோகின் றளிர்கிறங்க [12]ளவணையோ டெழுநான் கென்பர். (கரு)

எண்டருதே சிடையளவே [13]விலேகோ டன்க ணியைந்த வற்றி ஞெளிபரத்தல் [14]பத்தி பாய்த, றண்டளத் நியல்வகுப்பிற் பிறப்புப் பாம்பிற் சங்கினின்மீ னின்றலியிற் றழைநெற் ரூளி, [15]லொண்டொ

கஉ. இதிற்கூறிய மாணிக்கத்தின் பன்னிருகுணங்களை, "தேய்க்கி னெருப்பிற் சேர்க்கி னங்கையிற், றூக்கிற் றகட்டிற் சுடர்வாய் வெயிலிற், குச்சையின் மத்தகக் குறியிலை ரத்தி, னெய்த்துப் பார்வையி னோர்த்து சிவந்தாங், கொத்த நற்குண முடையபன் னிரண்டும்" (கல்.சள) என்பதனாலும் தெளிக.

கச. மாணிக்கத்தின்குற்றம் பதினெனபதை, "கருகிநொய் தாதல் கீற்று வெகுளி, திருகன் மூரணை செம்ம ணிறுகன், மத்தகக் குழிவு தராச யிலேச்சுமி, வெச்சம் பொரிவு புகைதல் புடாயஞ், சந்தைநெய்ப் பிலியெனத் தருபதி னொன்றும்" (கல். சள) என்பதனாலும் தெளிக.

கரு. அங்கியும் அதில்விழுதழலும். சாதுரங்கமுதலியவை மாணிக்கத்தின்வகை; இங்கே மாணிக்கத்திற்குப் பொதுவாகக்கூறிய இருபத்தெட்டு நிறங்களை நால்வகைப்படுத்தி, சாதுரங்கத்திற்குப் பத்துநிறங்களும் குருவிந்தத்திற்கு எட்டும் சௌகந்திக்கு ஆறும் கோவாங்கத்திற்கு நான்குமாகக் கூறுவது முண்டு; "தாமரைகழுநீர்" (சிலப். பக். கூஎஅ) என்னும் மேற்கோள் முதலியவற்றையும், "கதிர்நிரைபரப்பும்" (கல். சள) என்பதையும், "சாதுரங்க நிறம்" (தீநுவிளை. மாணிக்கம். ஙூ) என்னும் செய்யுள் முதலியவற்றையும் பார்க்க. மேற்கூறியவற்றில் ஒத்தும் ஒவ்வாதும் இருப்பனவுள.

(பி - ம்.) 1 'வெயிலினுங்காற்று' 2 'சிவந்தபராகம்வந்தோங்குங்குச்சி' 3'குச்சை' 4 'மரதகசுத்தி' 5'மிகவுறுகாசம்' 6 'வெச்சமிலச்சுமிவெகுழி' 7'பகையொடு' 8'சக்தைக்' 9'பருதி' 10'தணற்குன்றியிலோத்திரஞ்செவ்வாத்தி' 11'சேறு' 12'ஐவணைபோடு' 13'வலிகோடின்களியைத்த'14'வத்தி' 15'ஒண்டிறன்'

டிமங் கையர்களத்தி லியானைக் கோட்டி லுயர்கழையிற் காகவா கனர்திண் டோளிற், கொண்டலிலிப் பியிலேனைக் கொம்பி லிக்கிற் கொக்கிலெனப் பகர்வர்வியப் [1]பிப்பி முத்தால். (கசு)

தங்கியமுள் ளேறுமுகங் கறுத்தல் செங்கீர் சார்வனமண் ணேறிடப்புத் [2]திருகல் கோணை, மங்குறு[3]சிப் பிப்பற்றுக் [4]காக வன்னி மருண்டிருத்தல் குறைபத்தே குணமே தட்பம், பொங்குடித்தே சுருட்சிகனம் வயிரம் வைரா கரமேருப் பொருப்பிமவா னேம கூடங், [5]துங்கசவா லக்கமவர் திகமா தங்கந் தொகுமருண மெனுமெட்டா கரமே தோற்றம். (கள)

கீற்றுமலஞ் சப்படியே பிளத்தல் கோடி [6]கெடுதல்கரி தளை விந்து காகபாத, மாற்றருஞ்சீர் தருகோடி மூரித ருரை மழுங்கலிருக் தெனப்பகர்வார் குறையே ராறும், போற்றிடுநற் குணந்தாரைச் சுத்தி [7]நோன்மை புரந்தரசா பம்பலகை யெட்டு மிக்க, வேற்றமுடைக் கோணமா றெனவைந் தாமற் றிலங்கியநீலத்தினிய லியம்ப லுற்றேன்.

அணிபொழில்வாழ் குயிற்கழுத்தே [8]குவளை வண்டே யாகுலக் கண் செழுமேக மவிரிச் சாறே, யிணைபிலுயர் [9]பூவைப்பூ நெய்தற் போதென் றிலங்கு மொளி யெட்டென்பர் குறையெட் டெண்ணிற், றணிவில்[10]சர சரப்பிரசத் தோடு பொல்லாச் சாரசமஞ் சணிவளிமண் சார்ந்த கிட்டம், [11]பிணிகொளிலைச் சுபியாகுங் குணநெய்த் துச்சி பிறங்கலொளி வளர்பவளம் பேசக் கேண்மின். (ககூ)

கசு. தேசிடையளவே விலேகோள், ஒளிபரச்தலே பத்திபாய்தல். முத்துக்கள் தலசம் சலசமென இருவகைப்படும்; அது பதின்மூன்றிடத்துப் பிறக்குமென்பர், பாண்டோதிபனீவர்; திருவிளை. மாணிக்கம். நுங - ச. இங்கே 'காகவாகனர்திண்டோள்' என்றவிடத்து, அதில், 'ஐவாய்மான்கை' என்பது கூறப்பட்டுள்ளது.

கள. "உடுத்திர ளனைய காட்சி யுருட்சிமா சின்மை கையா, லெடுத்திடிற் றிண்மை பார்வைக் கின்புறல் படிக மென்ன, வடுத்திடு குணமாறு" (திரு விளை. மாணிக்கம். நுஅ) என முத்தின்குணம் ஆறென்பர். வயிரம் பிறக் குமிடம் எட்டு.

கஅ. வயிரத்தின் குற்றம், கஉ; குணம், நு; "சரைமலங் கற்றுச் சப்படி பிளத்த, றுளைகரி விந்து காகபாத, மிருத்துக் கோடிக ளிலாதன மூரித, ருரை மழுங்க றன்னே, டீராறும் வயிரத் திழிபென மொழிப", "பலகை யெட்டுங் கோணமாறு, மிலகிய தாரையுஞ் சுத்தியுந் தராசமு, மைந்துங் குணமென் றறைந்தனர் புலவ, ரிக்கிர சாபத் திகலொளி பெறினே" (சிலப். கசு: கஅ0 - அங, விசேடவுரை) என்றுமேற்கோள்களாலுமுணர்க.

ககூ. ஆகுலக்கண் - பசுவின்கண். பூவைப்பூ - காயாம்பூ. நீலத்தின் ஒளி வகையை, "கோகுலக் கழுத்துக் குவளை சுரும்ப, ராகுலக் கண்க ளவிரிச்

(பி - ம்.) 1'இப்பர்முத்தால்' 2'திருகல்கோணம்' 3'சிப்பியிற்பற்றுக்காக வர்ணி' 4'காகவர்ணமண்டிருத்தல்' 5'துங்கவாலக்கமவந்திதம்' 6'கேடுறுதலை', 'கேடுறுதல்கரை', 'கெடுதல்சரி' 7'நொய்ம்மை' 8'தவளைவண்டேயாகுலிக்கண்' 9 'பூஞைப்பூ' 10'சரகரப்' 11'பிணிகொளிபச்சுமி', 'பிணிகொளிவச்சுமி'

துன்னியசிங் துரமீ[1]ச்சஞ் செங்காய் செம்மண் டீதுவளீ முசு முசுக்கை துளங்கு வீரைப், பன்னியசெங் கனியென்பர் நிறந்தி ருக்குப் பைங்[2]க ருப்பத் துளைகல்லேய் முடங்கல் பொல்லா, மன்னும் வெளி றென்பர்[3]குறை பச்சை கிள்ளீ மயிற்கழுத்து நெல்லினிளம் பயிர்பொன் வண்டின், மின்னுதரம் பொன்மையொடு பசுத்த னெய்த்தன் மேற் [4]பத்தி பாய்தனிறங் குணங்க ளென்பர். (உ0)

கருகல்வெளி றெருடெபெரிரிவே கல்லே மண்ணே [5]காற்றிறுக றராசமொடு குற்ற மெட்டா, மாகதம்விட் டியர்புருட ராகஞ் செம் பொன் வண்டகட்டிற் றேனெழுகு நிறமே யென்ப, ருரியவயி டீரிய ம்பொன் மேன்மு லேப்பா லொழுகுமொளி யென்பர்கோ மேத கத்தை, மருவுவயி டீரியத்தின் மீது தூய மதுத்துளிமே வியதென்பர் வண்ணந் தானே. (உக)

முறைமைகெடா [6]விவைதமக்கு நீதி யொன்றே மும்மணியா வனசொன்ன புருடராக, முறுவயிடி ரியங்கோமே தகமே யென்றுங் கோதுவர்மற் றிவற்றின்க ணுதித்த வெண்ணின், [7]மறுவலுதோ ராவல்லி கனக தோராவல்லிமுத லாயினவுண் டென்பர் மற்று, நெறியுரைப்பி னுளபலவிங் கரசர் மாட்டு நேசமுடை யாருமைப்போற் கண்டி லேமால். (உஉ)

சாறு,.....காயா நெய்தல் கனத்தல் பத்தி, பாய்த லெனக்குணம் பதிஞென் றுமே'' (சிலப். கச: ககூ, விசேடவுரை) என்னுமேற்கோளாலும் உணர்க.

உ0. வீரை - ஒருவகைமரம். பவழத்தின் குற்றம் இன்னவென்பதை, ''கருப்பத் துளையவுங் கல்லிடை முடங்கலும், திருக்கு நீங்கிய செங்கொடி வல்லியும்'' (சிலப். கச: ககஎ - அ) என்பதனாலும், பச்சையின் குணங்களை, ''நெய்த்தன் மயிற்கழுத் தொத்தல்பம் பயிரிற், பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல், வத்தி பாய்தல் பொன்வண் டின்வயி, றொத்துத் தெளிதலொடெட்டுங் குணமே'' (சிலப். கச: கஅச - ரு, விசேடவுரை) என்பதனாலு முணர்க.

உக. பச்சையின்குற்றம் எட்டும், ''கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்றுப், பொரிவு தாரை யிறுகுதன் மரகதத், தெண்ணிய குற்ற மிவையென மொழிப'' (சிலப். கச: கஅச - ரு, விசேடவுரை) என்பதனால் ஆராய்ந்து கூரியன.

உஉ. தமிழ்ப்பிரபந்தங்களுள் ஒன்றாகிய மும்மணிக்கோவையென்னும் பெயரிலுள்ள மும்மணியென்பன இவையென்பது, இதிலுள்ள மும்மணியாவன என்னும் வாக்கியத்தால் தெளிவாகின்றது. தோராவல்லி, தோரமல்லி யெனவும், கனகதோராவல்லி, கனகபுட்பராகமெனவும் வழங்கும்.

(பி - ம்.) 1 'ஈச்சங்காயே' 2 'கருப்புத்துளை' 3 'குறைமற்றுக்கிள்ளை' 4 'வத்தி' 5'காற்றிறுக்கல்' 6'அவைதமக்கு' 7'மறுவலுதோராவல்லி கனகதோராவல்லி'

வேறு.

மறுவறு [1]சிறப்பிற் பெருவிலை மணிகள் [2]வாய்த்தன விலையெனக் காட்டி, யுறவுறப் பேசி விற்றிடக் கொண்ட வுத்தம நிலக்கணங் கண்டே, நிறைவுறு மகிழ்ச்சிக் கடலிடை மூழ்கி நெறிப்பட நவநவ மணிகண், [3]மறைபறை யுலகிற் கண்டிலோ மென்று மவுலியும் விதிப்படி யமைத்தார். (உக)

அரசிளங் குமரர்க் குயர்விழா நடத்தி யணிமுடி மறைநெறி சூட்டிப், பெருமைசேர் வணிகன் றனையப் பிப்பான் பெரும்பொருள் கொண்டுமுன் செல்லக், கருதிய பொருள்கள் வேண்டுவ வளிக்குங் கடவுள்கண் டெழுந்தளே நகைத்தாங், குரியவா லயத்தை நோக்கினோர் போகி யொளித்தனன் றுதித்ததி சயிப்ப. (உச)

[4] ஆங்கனை மறையோ ரமைச்சரன் புடைய வழகிய சொக்கெனத் தேறி, யீங்கிவ னளித்த மணிமுடி சூடற் கெத்தனை தவஞ் செய்தா னிதனுற், பாங்குடை யுலகந் தனிமுழு தாண்டு பகைகடிந் [5]தூழிவாழ்ந் தறத்தி, னேங்குவ னென்று போற்றியா லயத்தி லுத்தம னடிபணி வித்தார். (உடு)

[6] அதர்படத் துதித்து மன்னவன் மகிழ்ந்தே யவனியோர் நாளும்வாழ்ந் திலங்க, நதிபொதி சடையா னருளினுல் [7]விளங்கி நாற் பெரும் படைநனி படைத்து, நிதிகவர் ஞாதிப் பகைகடிந் தெதித்த நீணிதி கவர்ந்துய ரறத்தின், மதிமர போங்க விருந்தர சாண்டான் வரமனு வெனநெடுங் காலம். (உசு)

ஆகத்திருவிருத்தம் - சுஅக.

உசு.—ஆனையெய்த திருவிளையாடல்.

தவமுறு பத்தித் [8]தென்னவ னொருவன் சைவநூல் சிவபுராணங்கள், சிவனையு மொளிவெண் ணீற்றையு நாளுந் தெய்வவஞ் செழுத்தையும் போற்றிப், புவியொடு தானும் பொருளெனக் கொண்டு பூண்டியர் மதுரையம் பதியிற், பவநிசி யகல வருளினுல் விளங்கிப் பகையற வாழுநா டன்னில். (க)

உக: நவம் - புதுமை, ஒன்பது. மறை பறை - வேதம் சொல்லுகின்ற.

(உசு)

க. பவ நிசி - பாவமாகிய இருள்.

(பி - ம்.) [1]பிறப்பிற்' [2]'வாய்த்தன' [3]'மறையறையுலகிற்' [4]'ஆங்கனமறையோர்' [5]'ஊழிவாழ்த்ததனின்' [6]'அதிர்படத்' [7]'விளக்கு' [8]'தென்னவன்றேர்த்து'

தந்திர மிக்க மூன்தையோர் சோழன் ரூனையால் வெல்லமாட்
டாமன், மந்திர வாதஞ் செய்துகை தவனே மதுரையம் பதியொடுங்
கூட,முன்துற வெல்லக் கடவமென் றெண்ணி முடிவில்[1]பல் பொருள்
களுங் கொடித்து, வெந்திற லமணர் தங்கள்பாற் செல்ல விட்டனன்
[2] கட்டிநெட் டோலை. (உ)

வே று:

நம்பெரு மடிகள்[3]காண்க நலந்தரும் வளவ னோலை
யெம்பெரும் பொன்னி நன்னாட் டிலங்குபர் பதிகண் மிக்க
[4] செம்பொனே டளிப்ப லின்று செழியனை மதுரை யோடும்
வம்புறக் கோறல் வேண்டு மந்திர வாதத் தென்றே. (ஊ)

மூட்டவெண் கிரிக்கண் வாழு முதல்வரெண் ணுயி ரத்தோர்
கட்டவிழ்த் தடைவி னோலை வாசகங் கண்டு வாழ்ந்து
சட்டெனக் கூடி யின்றோர் தந்தியைத் தோற்று வித்து
விட்டிமைப் பொழுதிற் சேர விழுங்குவிப் பேமென் றெண்ணி. (எ)

[5]மன்றுநீ டசோக நீழன் மந்திர வாதஞ் செய்ய
வொன்றிய [6]தூமத் தீயி னோமடார் சத்தி யாலே
வென்றியி [7]னடக்கு மேரு வெள்ளவோர் வேழந் தோன்றி
நன்றிகொள் புவன மூன்று நடுங்கிட வதிர்ந்த தன்றே. (ஏ)

உ. "மதமலி யமண ரெல்லா மந்திரவாதஞ்செய்து" என்பர்பின்; ஊசு:உ எண்ணி நெட்டோலையைக்கட்டி விட்டனன்.

ஊ. பதிகள் - ஊர்கள். என்று நெட்டோலையைக் கட்டிவிட்டனனென முன்னேகூட்டுக.

எ. எண்கிரி - எட்டுமலை; அவை பலவாறு வழங்கும்; அவற்றின்பெயர் களை, சைனர்களுள் வழங்குவதாகிய, "பரங்குன் றெருவகம் பப்பாரம் பள்ளி, யருங்குன்றம் பேராந்தை யாலை - யிருங்குன்ற, மென்றெட்டு வெற்பு மெடுத் தியம்ப வல்லார்க்குச், சென்றெட்டு மோபிறவித் தீங்கு" என்னும் பழைய வெண்பாவாலும், "அஞ்சனங் கொளஞ்சங் கோவத் தனக்கிரி கூடங் காஞ்சி, குஞ்சர சைய மேம கூடமே விந்த மென்னு, மஞ்சிவர் வரைக ளெட்டும் வைகுறு மமணர்" (திருவிளை. யானை. எ) என்பதனாலு முணர்க; மதுரையைச் சூழ்ந்த எட்டு மலைக ளென்பாருமுளர். வாழ்ந்து - மகிழ்ந்து. சட்டென - விரைவாக.

ஏ. மன்று - பொதுவான இடம்; அசோகமரம் அருகர், சித்தர், உபாத் தியாயர், ஆசிரியர், சாதுக்களென்னு மிவர்கள் தங்கிய ஐந்திடங்கள் கூடிய மன்றின்கண் நிற்பதாகச்சொல்லப்படுமாதலின், 'மன்றுநீடசோகநீழல்'என்றார்; "சந்தியைத்தந் தம்மூடன் கூடி, வந்ததலை மயங்கிய வான்பெரு மன்றத்துப், பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்" (சிலப். கக: கசு - உக) என் பதனாலுணர்க.

(பி - ம்.) [1]'ஒண்பொருள்களுங்' [2]'கட்டி நீட்டோலை', 'சுட்டியேயோலை' [3] 'காண' [4]'செம்பொனுடளிப்பன்' [5]'மன்றனீடசோக' [6]'ஓமத்தீயில்' [7]'அடர்க்குமேரு'

மொஞ்ச[1]கக் கைய ரந்த மும்மத வருவி பாயும்
வெஞ்சினத் [2]தறுகட் செங்கட் குஞ்சர வெற்பை நோக்கிப்
பஞ்சவன் றன்னே யந்தண் பதியொடு மெடித்துச் சேர
விஞ்சவோர் கவள மாக விழுங்கென வறைந்து விட்டார். (சு)

ஆலகா லங்க டிப்ப வடர்ந்தகிம் புரிவெண் கோட்டாற்
கோலமா முகிலைப் பீறிக் குத்திவான் முகடு சாடி
மேலுடி வுதிர்த்து நாகம் வெருக்கொள [3]பிதித்துக் கூடச்
[4] சாலும்வெஞ் சமண ரோடி நடந்தது தரணி யேங்க. (எ)

[5] மதுரை[6]நீட் டைந்து கூப்பி டெனவட கீழைக் கோணத்
ததிர்வொடு தோன்றக் கண்ட வச்சமி லாத வென்றி
மூதுவலிச் செழிய னஞ்சி முடிமணி [7]யெனக்க ளித்த
விதமுடி யாற்கு ரைப்ப லென்னவா லயத்து மேவி. (அ)

[8] பெருமகின் னருளி னலே பிறிதொரு வருக்கு மஞ்சே
னருகர்மந் திரித்துச் சேர விழுங்கென வறைந்து விட்ட
பரியகைக் கூற்ற மென்னும் பகட்டினுற் கலங்கி னேனிங்
கொருவரு மிலைநீ யல்லாற் காத்தரு ளொல்லை யென்றான். (சூ)

அரசகேள் கீழ்பா லிஞ்சி யணையவட் டாலை கட்டின்
[9] றுரஞ்சுடும் வில்லா ளாகி யொல்லைவந் தெதிரும் ானைக்
கரிகரி யாக வெய்வல் கலங்கிடே லென்றேர் வாக்குத்
தெரிவுற வாகா யத்திற் சிறந்திடக் கண்டா னன்றே. (கo)

[10]தொழுதிறை திருவாக் கென்று சோகம்விட் டகம கிழ்ந்து
பழுதிலா வமைச்ச ரோடும் பன்முறை பழிச்சிப் போந்து
முழுவதும் வல்ல தெய்வக் கம்மியர் தம்மான் முன்ன
ருழைமதி தவழெ யிற்பா லுரைத்தவா றேங்கச் செய்தான். (கக)

சு. மொஞ்சகம் - மயிலிறகின்தொகுதி; மந்திரித்தற்குச் சைனர் கையிற் கொள்வது; "தழையுலாங்கையர்" (திருவிளை. விருத்த. க.)

அ. நீட்டு - தூரம். கூப்பிடு - கூப்பிடுதூரம். அதிர்வு - முழக்கம். 'முடி மணியெனக்களித்த' என்றதனால், இவன்காலத்து இரண்டுதிருவிளையாடல்கள் நடந்தன வென்பது அறியப்படுகின்றது.

கo. அட்டாலை - மதின்மேன் மண்டபம்; அது ஞாயிலென்றுங் கூறப் படும். கரி கரியாக- யானைகரிக்கட்டையாக; கரியாகச் சாட்சியாக வென்று மாம்; "கரியாய் மொழியுங் கரியாய் விடாமல், எரியார் தழல் வீழ்ந் தெழுந்து" என்றார்; நால்வர் நான்மணி. உரு. கண்டான் - கேட்டறிந்தான.

கக. முன்னர் உழைமதி தவழ் எயில்-நிழக்குமதில்; "கீழ்பாலிஞ்சி" (கo) என்றார். முன்னர் - முதலிலென்றுமாம்; உழை - மான்.

(பி-ம்.) 1'கைக்கையர்' 2'துங்கச்' 3'மதித்து' 4'சாலவெஞ்' 5'மதுரைஊர் கூப்பீடென்ன வடகீழ மூலைக்கோணத்து' 6 'நீடைத்துகூப்பீடென' 7 'எமக் கணித்த' 8பெருகுநின்' 9'உரவொடும்' 10'தொழுதனன்'

தெற்றிசேர் தலத்துட் டோன்றிச் சிலையுட னம்பொன் றேந்திக்
குற்றுடை வாளுங் கட்டிக் குலவு[1]தொப் பாரங் கட்டி
முற்றுமெய் யணிவி ளங்க முகங்குறு வியர்ப னிப்ப
வெற்றிகொள் புரங்கள் செற்ற மேருவில் வாளி நின்றான். (கஉ)

நண்ணரு முருவங் கண்டு நயந்துபூ மழைபொ ழிந்து
விண்ணவ ரயன்மா லாகண் டலன்வியன் முழவ மார்த்தார்
மண்ணவர் துதித்தார் வேந்தன் வாழ்த்தெழ வியந்தான் சூழ்ந்த
வெண்ணரும் கன்னி மாத ரினவளை சிந்து ஞரால். (கங)

ஊறிடு மருவி யோங்க [2]ஓரணை முழக்கங் காட்டத்
தேறினின் றதிச யித்துச் சிரித்தவா றுறச்[3]சி லைத்து
மாறணுஞ் துயரந் தீர மதுரையம் பதியோ ருய்யக்
கூறரு மிலக்கை நாடிக் [4]குறித்துநீள் கணைவி டுத்தான். (கச)

மானமில் சமண [5]ரெண்ணின் மந்திர வாதஞ் செய்து
[6]தேனலர் தொடையன் மார்பச் செழியனே மதுரை யோடும்
போனக மாகக் கொள்ளென் றேவின புழைக்கை மத்த
யானையை யெய்தான் முன்னம் யானையை யுரித்த வீரன். (கரு)

யானையாழ் துயரந் தீர்த்தீதான் யானைதாங் கண்டங் கண்டோன்
யானைவா கனத்தோன் போற்ற யானையா லயத்தி ருந்தோன்
யானையா னனனைத் தந்தோன் யானைவந் தனையு வந்தோன்
யானையை யுரித்த தன்றி யானையை யெய்தா னன்றே. (கசு)

செல்லமெ ரியிலட் டாலைச் சேவகன் விட்ட கொற்ற
[7] வில்லரி முகமால் வாளி வேழத்தை நாடிச் சென்று
மல்லலங் குளத்து மூழ்கி வயிற்றுறு நிணம ருந்தி
[8] யொல்லையி னிலத்தி வாயா லோடிய துதப்பி யோட. (களி)

கஉ. தொப்பாரம் - வீரர்கள் தலையிலணியும் முடிவிசேடம்; இஃது இக்காலத்தில் இப்பெயருடன் விஷ்ணுவாலயங்களிற் பெரும்பாலும் காணப்படும்.

கங. எழ - மிக.

கச. அருவியோங்கல் - யானை. சிலைத்து - முழங்கி. இலக்கு - லக்ஷியம்.

கரு. யானையை - தாருகாவனத்து முனிவர் அனுப்பிய யானையை.

கசு. திருமாலும் பிரமனும் இந்திரனும் போற்ற. யானை ஆலயம் - எட்டு யானைகளாற் சுமக்கப்படும் இந்திரவிமானம். யானை ஆனனன் - விநாயகர். யானை வந்தனை - ஐராவதஞ்செய்த வணக்கத்தை.

களி. செல் - மேகம். அட்டாலயம் - மதில் மேல்மண்டபம். அட்டாலைச் சேவகன்: உஅ. அரிமுகமால் வாளி - நரசிங்காஸ்திரம். குளம்,

(பி - ம்.) 1 'தோற்பாரம்' 2'உரணிடி.' 3'சலித்து' 4'குறித்த' 5'எண்ணி மந்திர' 6'தேனலங்' 7 'வில்லரிக்கணைவானமுட்டும்', 'வில்லுறுகணை' 8'ஒல்லைமா சிலத்திவாயால்'

வே று.

வீரன் விட்ட கணைபட விண்பயங்
கூர விட்ட குருதிப் பெரும்புனல்
வாரியொப்ப விளங்க வரையெனச்
சோரு மத்தி யிலத்தி சொரிந்ததால். (கஅ)

[1] கடிகி மோதிக் கதறி விழாமுனம்
படியின் [2]மாமகண் முன்னம் பரவினள்
கொடிது காத்தரு ளென்றுபொற் கோயில்வாழ்
கடிய வெட்டிக் களிறுங் களித்தவே. (ககூ)

பிடிக ளோடும் பெரும்பயம் போய்த்திசை
முடிவில் யானைக ளெட்டு முழங்கின
வடைய மானிட ரச்சந் [3]தவிர்ந்தனர்
நடந வின்றனர் தொந்திவி நாயகர். (உ0)

உரன ழிந்து விழுந்த வுவாவினை
யிருமை மிக்க விலத்தியை நாட்டவர்
தரும மிக்க தனிவிளை யாடலின்
வரிசை காண வரையுரு வாக்கினன். (உக)

வே று.

முடிசிகையினர் விடுசடையினர் முண்டித்தவர் கொன்றைக்
கடிகமழ்சடை யரனடியவர் கடிவிசையுட னணுகிப்
[4]படிதருதலை பறியமணர்கள் பயமொடுநனி குழறத்
தடிகொடுதலை சிதறினர்சய சயவெனநட நவிலா. (உஉ)

கெற்றி, வாலி; சிலேடை. இலத்திவாய் - அபானம். உதப்பி - வயிற்றிற் சீரணியாமலிருக்கு முணவு.

கஅ. அத்தி இலத்தி சொரிந்தது - யானையானது இலத்தியைச் சொரிந்தது; "இலத்தியுள் விளை பாண்டமென்னுது" அரங்கத்தந்தாதி, ஙக.

ககூ. பொற்கோயில் - சோமசுந்தரக்கடவுளின் ஆலயம்; "செம்பொனாலயத்துப் புக்கு", "பைம்பொனாலயத்துப் புக்கு" "பொருவருங்கோயின் முற்றும் பொன்னினால் வேய்ந்து" என்பர் பின்; உஎ: உஎ, எஎ; கூ0: நிகூ.

உ0. மானிடர் அடைய - மனிதர் எல்லாரும்.

உஉ. முண்டித்தவர் - தலையை மழித்துக்கொண்டவர். தலைபறி - தலை மயிரைப்பறித்துக் கொள்கின்ற.

(பி - ம்.) [1]'கடிகை' [2]'மாமகளும்முன்' [3]'தணிந்தனர்' 'படர்தருதலை புறியமணர்கள்'

வேறு.

கன்றிய சமணர் மாளக் கவரிய னணுகி யானை
பொன்றிய தல்லாற் கல்லாம் புதுமையைப் பாரீ ரெய்த
வென்றியைப் பாரீ ரந்தோ வெல்லயார் வல்லார் நந்தந்
தென்றமிழ்ச் சொக்க னல்லாற் றெய்வம்வே றுண்டோ வென்ரூன்.

வடிவுடைக் கடவு [1]ளங்கண் மறைகுவா ளெருப்ப டுங்கால்
விடுவிசைப் புரவி மேன்முன் [2]விரைந்திறை யேவப் போனேன்
படிபுக முமைச்ச ரோடும் பன்முறை [3]பணிந் தெழுந்து
கடிகமழ் கமலப் பொற்ரூள் பிடித்தனன் கருத்துட் கொண்டு. (உச)

இவ்விடத் தென்று நின்றே யிக்திருக் கோலந் தன்னை
மெய்வரப் [4]பழிச்சு வோர்க்கு வேண்டிய வரங்க ணல்கிச்
செவ்வையிற் காத்தல் வேண்டுக் கீர்த்தனே பத்தர் வாழ்வே
கொவ்வையங் கனிவாய் மங்கை கொழுகனே யெனத்து திந்தான். ()

திச்சையி னடியார் தங்கட் கெளியம்மா மாத லாலே
நிச்சய மாக விங்கு நிற்கின்றே நின்போ லெம்பாற்
கச்சமி லாத வன்பற் கண்டில மடிவி டென்று
நச்செயிற் ரரவக் கச்சை நாயக னருளிச் செய்தான். (உசு)

அருளினை னிறைந்த தென்ன னடிக்கம லங்கள் விட்டுப்
பொருவில்பல் சிறப்புஞ் செய்து போற்றினன் புலியோர் போற்றப்
பரிவொடு நின்ரு னங்கண் பணிவுடைப் பத்கர்க் கென்றும்
பெருகவேண் டுவகொ டுப்பான் காரணம் பிறங்க வென்றே (உஎ)

ஊனெழு குன்றை யானை மலையென வொழிந்த குன்றை
யீனமி லாவி லத்தி மலையென வெய்த கோவைத்
தேனலர்த் தொடையட் டாலைச் சேவக னென்ன நாம
மாநிலத் தன்று முன்னு மன்னிட [5]வழங்கு மன்றே. (உஅ)

உக. கல் - மலை.

உச. வடிவுடைக்கடவுள் - சுந்தரேசர்.

உடு. இச்செய்யுளால், பண்டைக் காலத்தில் அட்டாலைச் சேவகருடைய திருவுருவமிருந்ததென்றும் அது வழிபடப்பெற்றுவந்ததென்றும் தெரிகின்றது.

உசு. 'அடியார் தங்கட் கெளியம்மாம்': 'அடியவர்க்கெளிய சுந்தரன்', 'அடியவர்க்கெளிய சொக்கன்', 'அடியவர்க்கெளியவர்'. 'அடியவர்க்கெளிய வெம்பெருமான்' என்று இந்நூலில் பலவிடங்களில் வந்திருத்தல் காண்க. கச்சம் - அளவு.

உஎ. பிறங்க நின்ரூன்.

(பி-ம்.) 1'ளங்கன்' 2'விரைந்தருள்புரியப்போனேன்' 3'பணிந்தபோந்து' 4 'பழிச்சினோர்க்கு' 5'வழங்கிற்றன்றே'

1பாவியர் விட்ட கொற்றப் பருப்பத விபத்தை வீழ
மூவர்க டலைவன் சிங்க முகக்கணை விடுத்த லாலே
காவல 2னவதா னத்தைக் காகினி காண நண்ணி
மேவரு நரசிங் கத்தை யிருத்திஞன் வேழக் குன்றில். (உசு)

ஆகத்திருவிருத்தம் - நிகo.

உஎ.—3ஞானோபதேசஞ்செய்த திருவிளையாடல்.*

அழகினுக் கழகார் மேனி 4யாலவா யமுத வாயான்
பழுதில்சாத் தவர்கள் சூழப் பல்பெருஞ் சிறப்பிற் சேரன்றிப்
பொழிலுல கனைத்துங் காணப் புரவிநூற் கியைய மிக்க
செழியன்முன் குதிரை யிட்ட திருவிளை யாடல் கேண்மின். (க)

சந்திர குலத்தி னீடோர் தாளைவேல் வாகை மாற
னந்தமின் முன்னோர் போல வவனியை யடைவிற் காத்துச்
சுந்தரற் கன்பு பூண்டு 5துலங்குமா மதுரை தன்னுண்
மந்திரத் தலைவர் சூழ வளம்பட வாழு நாளில். (உ)

உசு. பருப்பத இபத்தை - மலைபோன்ற யானையை. காவலன் இருத்தினன்.

(உஎ)

க. இச்செய்யுள் கவிக்கூற்று. 'அழகினுக்கழகார் மேனி': "அழகெனு மதுவு மோரழகு பெற்றதே' (கம்ப. மிதிலை. நுச); "அழகினுக் கழகு செய்தார்" (வடி. கோலங்காண். நு.) 'ஆலவாயமுதவாயான்': 'ஆலவாயமுதமன்' (திருநகர. கக), 'ஆலவாயமுதவாக்கன்' (கசு: க.) சாத்தவர்கள் - சென்றுசென்று வியாபாரம் செய்யும் வாணிகர்திரள்; இது, ஸார்த்தமென்னும் வடமொழியடியாகப் பிறந்ததென்பர். புரவிநூல் - அசுவசாஸ்திரம். குதிரையிட்ட - குதிரைகளை அளித்த; "இனப்பரியிட்டதன்றி" என்பர் பின்னும்; நo: நிo. திருவாதவூர்புராணத்துள்ள குதிரையிட்டசருக்கமென்னும் பெயரும் இங்கே அறியற்பாலது.

உ. வளம்பட - பலவகைச் செல்வமும் உண்டாக; "வளம்பட வேண்டார் யார்யாருமில்லை" நாலடி. கoசு.

* "சுராமலரோ டாமதியஞ் சடைமேற் கொண்டார் குடமுழநீர் தீக
ணவாசகனுக் கோண்டார்" (திருநா. தனித்திருத்தாண்டகம், கக); "உனக்குக், கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு, கலந்தா னிலாத சிறியேற்கு கல்கி, நிலந்தன்மேல் வக்தருளி நீள்கழல்கள் காட்டி, நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத், தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" (திருவா. சிவபுராணம், நிசு - சுக); " அந்தண னாகி யாண்டுகொண் டருளி, யிந்திர ஞாலங் காட்டிய வியல்பும்", "திருவார் பெருந்துறைச் செல்வனுகிக், கருவார் சோதியிற் கரந்த

(பி - ம்.) 1'பாவிகள்' 2'அவதானங்கள்' 3'குதிரையிடு ஞானவுபதேசஞ் செய்த' 4'ஆலவாயான்மகிழ்ந்து' 5'தளங்கு'

நீதிமா மதுர நீழ னெட்டிலை யிருப்பை யென்றோர்
காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனூர் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துலங்கக் காட்டும்
வேதநா யகனூர் வாழும் வியன்றிரு வாத வூரால். (ங)

கள்ளமும்" (ஷே. கீர்த்தி. சஉ - ங; நிசை - நி); "பரமா னந்தப் பழங்கட லதை வே,.....அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க" (ஷே. திருவண்டப் பகுதி, சுசு - கூடு); "என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி, யறைகூவி யாட் கொண் டருளி, மறையோர் கோலங் காட்டி யருளலும்" (ஷே. ஷே. கசள - கூ); "அருபரத் தொருவ னவனியில் வந்து, குருபர னுகி யருளிய பெரு மையை","மெய்தரு வேதிய னுகி வினைகெடக், கைதர வல்ல கடவுள்போற்றி", "என்னையு மொருவனுக்கி யிருங்கழல், சென்னியில் வைத்த சேவக போற்றி" (ஷே. போற்றி. எடு - சு, அஅ - கூ, கஉங - கஙo); "ஈறி லாதநீ யெளி யை யாகிவந் தொளிசெய் மானிட மாகநோக்கியும்" (ஷே. திருக்கச்சதகம், கூக); "செங்க ணெடுமாலும்.....வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மா னுய்" (ஷே. திருவம். க - கச); "நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை, யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி, யாடப்பொற் சுண்ண மிடித்து நாமே" (ஷே திருப்போற். அ); "வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னுடைய, கன்னெஞ் சுருக்கிக் கருணையினு லாண்டு கொண்ட,.....பொன்னங்கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ","அருவாய் மறைபயி லந்தணனு யாண்டுகொண்ட, திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ" (ஷே.திருக்கோ. கக, கச); "உருநா மறியலோ ரந்தணனு யாண் டு கொண்டான்", "வாவாவென் றென்னையும் பூதலத் தேவலித் தாண்டுகொண் டான்" (ஷே. திருத்தெள்ளேணம், க, எ);"பெருந்துறையான், சீரார் திருவடி யென் றலைமேல் வைத்தபிரான்" (ஷே. திருப்பூவல்லி, கo); "கருணையினுற் றேவர்குழா, நாணுமே யுய்யவாட் கொண்டருளி" (ஷே. திருப்போன்னூசல், நி); "அந்தண னுகிவந் திங்கே யழகிய சேவடி காட்டி.....ஆட்கொண்டரு ளும்,.....தேவர்பிரான்" (ஷே.திருப்பிற்பத்து,கo); "அந்தண னுவதுங் காட்டி வந் தாண்டா யாரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே" (ஷே. திருப்பள்ளி. அ); "நாயேன் றனையாண்ட பேதாய்", "முன்னே யெனையாண்ட, பார்ப்பானே" (ஷே. புணர்ச்சிப்பத்து, கூ - கo); "ஆண்டுநீ யளித்த வருளினை மருளி னுன் மறந்த, வஞ்சனேன்" (ஷே. வாழாப்பத்து, சு); "திருவடி யென்றலை மே னட்டமையால்" (ஷே. தூலாப். அ); [ஷே. அருட்பத்து, அற்புதப்பத்து சென்னிப்பத்து ஆகிய இவைமுதலியவற்றைப் பார்க்க.] "பெருந்துறையெம் புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப், பேதங் கெடுத்தருள்செய் பெருமை யறியவல்லார்" (ஷே. திருவார்த்தை, எ).

ங. மதுரகம் - இருப்பைமரம்; 'நெட்டிலை யிருப்பை' என்னும் அகவல், "நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ, வாடா தாயிற் பீடுடைப் பிடியின், கோடேய்க் கும்மே வாடிலோ பைத்தலைப், பரதர் மனைதொறு முணங்குஞ், செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே" (கபிலர்வாக்கு) என்பது. இது தமிழ்நா வலர் சரிதையிற் கண்டது. இருப்பையும் மகிழும் அத்தலத்திற்குரிய விருக்ஷங்களென்று தெரிகின்றன: "கமழ்மதுர மகிழ்வாத புரத்தி" (கடம்ப. இலீலா. உஎ.)அத்தலத்தில், ஸ்ரீமாணிக்க வாசகர்க்குச் சிவபெருமன் திருச்சி லம்பொலியைக் காட்டியருளினர்; "வாதையம் புரத்தாண்ணி மணிச்சிலம் போ

ஆதியா தித்தன் [1]சோம னக்கினி தமது பேரால்
வேதியர் தமைவந் தேத்தி விளம்புமுன் னுகங்கண் மூன்றுங்
காதலின் வணங்கக் கண்டு கடையுகம் வாத ராச
னீதியின் வணங்க வாத புரமென நிகழு மூதூர். (சு)

தெரிவையர் விழியை யேய்க்குஞ் சேல்வளை களத்தை யேய்க்கும்
பரிபுரப் பதத்தை யேய்க்கும் [2]பங்கயம் பழனந் தோறுந்
தருமுகிற் ருனை போர்த்துத் தாரகை முத்தம் பூணக்
கருதிலீள் கமுகை யேய்க்குங் கன்னலைச் செங்கை லேய்க்கும். (ரு)

மன்னுமிந் நகரி தன்னுண் மானமங் கலத்தா ராகுக்
தொன்னெறி [3]மூனிவ ராமா மாத்தியர் தொழுகு லத்து
நன்னெறி விடையிற் போற்றோர் நன்கணத் தலைவர் நாம
மின்னெறி வாத வூர ரென்னவந் துதயஞ் செய்தார். (சூ)

மன்னுமுற் ரெடர்பி ஞலே மாசற வீரெட் டாண்டிண்
முன்னைநூ னீதி நூன்மற் றியாவையு மூற்றக் கற்றுக்
கொன்னுற வளரக் கேட்ட [4]கொற்றவ னயந்த ழைத்துத்
தன்னுடை [5]நன்னு மத்தாற் றலைமைசேர் நாமஞ் சாத்தி. (எ)

சைகாட்ட" (உஅ: கச); "வாத வூரினில் வந்தினி தருளிப், பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" (கீநுவா. கீர்த்தி. ருஉ - ரூ) என்பதனுலு முணர்க. வேத நாதரென்பது, அத்தலத்துச் சிவபெருமானுடைய திருநாமமாதலின் 'வேதநா யகனூர்' என்றார்; 'வேதியர்' என்பர்மேலும்; ச. திருமால் வந்து பூசித்தபொ ழுது "வேதாஹம்" என்ற சுருதி, சிவலிங்கப் பெருமானிடமிருந்து தோன்றி னமையின், இத்திருநாமம் அமைந்ததென்று அத்தலத்து வடமொழிப்புரா ணம் தெரிவிக்கின்றது.

ச. ஆதியாகிய ஆதித்தன். சோமன்-சந்திரன். வாதராசன்-வாயுதேவன்.

ரு. வளை - சங்கு. "கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்ன" (பெரிய. நாடு. கரு) என்பதை இச்செய்யுளின் ச - ஆம்அடி ஒத்துள்ளது.

சு. மானமங்கலமென்பது திருவாத வூரருடைய முன்னேயோரிருந்த ஊரி ன் பெயரென்று தெரிகின்றது; மானபுரமெனவும் வழங்கும். இந்நூல், உஅ: அ-ஆம்செய்யுளிலுள்ள, "இருநி லிருநின் மானபுரமென்னுங் கொடிமை பொறு க்க கிலேன்" என்பது ஆராயத்தக்கது. ஒருகணநாதர், சிவபெருமான் கட்டளைப் படியே வந்து திருவாதவூராக அவதரித்தனரென்பதை, "கணநாதர் தமிலொ ருவன் விடையிற் போந்து கமழ்மதுக மிழ்வாத புரத்து வாழ்நர், தணராமாத் தியர்குலத்துட் டோன்றி" (கடம்ப. இலீலா. உஎ) என்பதனுலும் உணர்க. இந்நூலிலுள்ள "இத்தகைமை யிற்றிகழு மெல்லியினி லுட்புக விலங்குகண நாத ஞெருவன்" (உஉ: அ) என்றது இங்கேஅறியற்பாலது. இச்சரிதவிரிவை, திருவுத்தரகோசமங்கைப்புராணம், பார்ப்பதி தவம்புரிந்த அத்தியாயத் தாலுமுணர்க.

எ. முன்னைநூல் - வேதமுதலியன. தன்னுடை நன்னுமத்தால் தலைமை சேர்காமம் - தென்னவன் பிரமராயரென்பது; ஆல்: ஒடு; "தென்னவன்பிரம

(பி - ம்.) 1'சோமனசனிகள்', 'சோமனசுவினி' 2'பங்கயப்பழனக்' 3'முனி வராயமாத்தியர்' 4'கொற்றவன்வந்தழைத்து' 5'மன்னுமத்தாற்'

மல்லலஞ் சிறப்பி னோங்கும் வரிசைகள் பலவு நல்கி
யெல்லையில் [1]சேனைக் கேற்ற தாழ்வுகேட் டிருத்தி யென்னக்
கல்வியின் மிகுதி யானுங் கருத்துணர் கூர்மை யானுஞ்
சொல்லரு மமைச்சர்க் கெல்லாந் [2]துளங்குமுற் றலைவ ராஞர். (அ)

கரிபரி திண்டேர் வென்றிக் காய்சின வீர ராற்றுந்
தரைபுகழ் செய்திக் கெல்லாந் தலைவரா யவனி வேந்தர்
வரவிடு திறையுங் கண்டு மற்றவர்க் கினிய செய்து
[3] பரிவுடைத் தென்னன் பாரந் தம்வயிற் பரித்துப் போந்தார். (கூ)

துளங்கிய பத்தி பூண்டு சொக்கநா யகன்வி ரும்ப
விளங்கிய நலங்கள் செய்து மேதகு தொண்டர் மாட்டுங்
குளிர்ந்ததங் கிளைஞர் மாட்டுங் கொடுத்தரும் பொருண்மற் றெங்கும்
வளர்ந்தபே ரறங்கள் செய்தார் மனத்திலோ ராசை யில்லார். (கo)

மன்னவ ரிவரே யென்ன வாழுநா டனிலுஞ் சாதி
மெய்ந்நெறித் தரும நீங்கா வேதிய ரமைச்சி னாலே
முன்னையிற் றனது செல்வ முடிவிலா தோங்கக் கண்டு
தென்னவன் மகிழ்ச்சி [4]யெய்திச் சிறக்குநா டம்மி லோர்நாள். (கக)

வே று.

கோதி லாத குதிரைத் துறையவர்
தீதின் மாறன் திரு[5]மு னணைந்தவன்
பாத மீது பணிந்தாங் [6]கொடுங்கினின்
ரோது வார்க ளுறுபெருஞ் செய்திகள். (கஉ)

நீதி மன்னவ ரேறே நினைவறச்
[7] சீத வெம்மையிற் றேய்ந்தன சில்பரி
வாத நோயிடை மாய்ந்தன சில்பரி
யாதி வெப்பி லழிந்தன சில்பரி. (கங)

கண்ட மாலை கவுசி மகோதர
மண்ட சாலம்வெஞ் [8]சூலை யலகுநோய்

சாயனே காண்க" என்பர், பின்னும்; சுக. பிரமராயனென்பது, பிரமாதிராய னெனவும் சிலாசாதனங்களிற் காணப்படுகின்றது.

அ. ஏற்ற தாழ்வு கேட்டிருத்தல் - புகுந்துள்ள குறைகளைவிசாரித்துப் பரிகரித்திருத்தல்; அமைச்சர்க்கெல்லாம் வாதவூரர் தலைவரானமை, "அமைச்சர் கடம்மூட் கற்றறிவுள்ள தலைவனே" (கஎ) என்பதனாலும் அறியப்படும்.

கூ. செய்தி - நாற்படைச்செய்தி.

கங. இதில் குதிரைகளின் நோய்கள் கூறப்படுகின்றன.

கச. கோடகம் - குதிரை.

(பி - ம்.) 1'சேனைக்குற்றத்தாழ்வு' 2'தலைக்குமுற்' 3'பரிவொடுத்தென்னன்' 4'செய்யச்' 5 'முனடைத்து' 6'ஒதுங்கி' 7 'சீதவெம்மை' 8 'சூலமலகை நோய்'

தண்டை நோய்[1]பிர மேகந் தலைக்கனங்
கொண்டி மாண்டன சில்பெருங் கோடகம். (கச)

குற்ற மற்றை வரிசைத் துரகமும்
வற்றி யுய்யுமுய் யாவென மன்னினை
பொற்பி லங்கு புதுப்பரி யிங்குகங்
கொற்ற மோங்க விரைவிற் கொளப்படும். (கடு)

மண்ணி னீண்மறு மண்டலங் கொள்பவர்க்
கெண்ணி லங்கொ ரிலக்க மிவுளிகள்
கண்ணு பந்தியிற் கட்டத் தகுமென
வுண்ணி றைந்த விருப்பி னுரைசெய்தார். (கசு)

வேறு.

மற்றவ ரியம்பக் கொற்றவன் கற்ற வாதவூர் முனிவரை யழைத்
திங், குற்றுயர் புறுகங் காரிய மனைத்து நின்னுணர் வாலுணர் கின்றே,
நற்பிர மாணி யீயலா லுண்டோ ஞானிலத் தமைச்சர்க டம்மூட்,கற்றறி
வுள்ள தலைவனே னினக்கோர் காரிய [2]முணர்த்துவங் கேண்மோ.(கஎ)

பகர்ந்தனர் வந்து பரித்துறை யாளர் பரிவுறு நம்பரி யனைத்து,
மகந்தரு நோயால் வீந்தன வென்றே [3]யறைப்படுங் காசணி தூசு, தகு
ம்பெருங் கனகம்வேண்டுப வெடித்துத் தாவுமாவிறங்குபட் டினத்துப்,
புகுந்துயர் பரிகொண் டுணைந்திட வேண்டும் புரவிநூ லிலக்கணத்
தியைய. (கஅ)

வேறு.

என்றது [4]சொல்ல வாழ்த்தி யான்சொன்மி னெனவே சொன்னர்
நன்றருள் செய்த மாற்ற நாதனே விரைவிற் [5]செய்வ
லின்றுநீ விடைதா வென்ன வியம்பிநல் விடையிற் போந்து
துன்றுபொன் னறைமாட் டெய்தக் காவல ரெதிர்து தித்தார். (கக)

கடு. தற்ற - நெருங்கின. கொளப்படும் - கொள்ளல்வேண்டும்; தேற்ற விகீன.

கசு. மறுமண்டலம் - வேற்றரசர் தேயங்கள். பங்தி - குதிரைச்சாலே. கட்டத்தகும்: தேற்றவிகீன.

கஎ. அகம் - பாவம். வீந்தனவென்று பகர்ந்தனரெனக்கூட்டுக. அறை-பொன்னறை. புரவிநூல் - அசுவசாஸ்திரங்கள்; சூரியனுலும் சாலிகோத்திரரா லும் அந்நூல்கள் செய்யப்பட்டுள்ளனவென்பர்.

கக. மாற்றம் நன்றென்க. விடை - உத்தரவு, காலை; சிலேடை.

(பி - ம்.) 1'பிறமேகத்தலைக்கணங்' 2'உணர்த்துவல்' 3'அறைபடுங் காச மைதூசு' 4'சொல்லா முன்ன ரிறைஞ்சியான் சொல்வதானேன்', 'சொல்ல வாழ்த்த சொல்லினனெனவே' 5'செல்வல்'

வேறு.

பொன்னி னீடிய புஞ்சமா ரறையினுட் புக்குத்
துன்னு பல்பொருள் சூழ்ந்தகண் காணியி னெடித்துப்
பன்னு நீதிசேர் பல்பெருங் [1]கணக்கினும் படித்து
மூன்வி ருப்பொடு கட்டினர் பெட்டக முட்ட. (உo)

வேறு.

பொய்ம்மை [2]யின்றிப் பரிக்கும் புகழுடைச்
செம்மை யோரைத் தெரிந்து பரிவொடும்
வம்மி னென்ன வரவழைத் தாங்கவர்
தம்ம னங்[3]களிப் பத்தன ரல்கினர். (உக)

ஆங்கி லங்கு மளப்பரும் பெட்டகந்
தாங்கு மென்றவர் தம்வயிற் சேர்த்தரு
டேங்கு ஞாதன் றிருவால வாயுமை
[4] பாங்கி ஞனைப் பணிவமென் [5]றெய்தினர். (உஉ)

வேறு,

எண்ணில்பெரும் பாவ மிமைப்பளவி னீக்குவிக்கும்
புண்ணியநன் னீர்பொலியும் [6]பொற்றா மரையதனு
ணண்ணிநெறி யாசமித்துப் போந்து நலங்கடரும்
பெண்ணே யனதுதிக்கைப் பிள்ளை யுழைச்சேர்ந்தார். (உங)

ஆங்குமர ணெங்கியபே ரண்டம் வலம்வரவே
யோங்குமரன் றன்னேவலம் வந்தாங் குறுகனியை
வாங்குசதி ரோனே மதவா ரணவரசே
தேங்கு[7]புக ழைங்கரனே செய்யமலர்த் தாள்போற்றி. (உச)

காத்தருளா யென்று தொழுது கரங்கூப்பி
யேத்தி யருள்பெற்றுப் போந்தாங் [8]கினிமைதருஞ்
சீர்த்தி பொலியு மிமவான் றிருமகளார்
வாய்த்த திருக்கோயில் புக்கார் மதியுடையார். (உரு)

உo. புஞ்சம் - தொகுதி. கண்காணியின் - மேற்பார்வையுள்ளோனல்; இப்பெயர், இப்பொருளில் தென்னாட்டில் வழங்குகின்றது.

உக. பரிக்கும் செம்மையோர்- சமத்தற்குரிய கல்லொழுக்கமுடையோர்; "பொன்பரித்தவரை" என்பர் பின்னும்; சக.

உங. பெண்ணே அன துதிக்கை பிள்ளை - பனைபோன்ற துதிக்கையை யுடைய பிள்ளை; விநாயகக்கடவுள்; "பனைக்கையும்மத வேழம்" (தேவாரம்.) பெண்ணே, பிள்ளையென்றது சொன்முரண்.

உச. ஆம் குமரன் - பெருமையை யுடையவராகிய முருகக்கடவுள். ஓம் சும் அரன். கனி - மாங்கனி.

(பி-ம்.) 1'கணக்கினுட்படுத்தி' 2'யன்றிப்பரிக்குப்' 3'களிப்பத்தர' 4'பாங் கினரைப்' 5'ஏகினர்' 6'பொற்றமரைவாவி' 7'புகழையனே' 8'இனியதருஞ்'

என்ரூர் வரைமயிலே யேழ்பொழில்வாழ் [1]கோகிலமே
யொன்ரூய வேதா கமவாவி யோதிமமே
பொன்ரூத வெண்ணெண் கலேபேசும் பூவையே
மன்ரூர் கடம்பவன மானே யடிபோற்றி. (உசு)

வே று.

இவ்வண்ணந் துதித்தி றைஞ்சி யின்னருள் பெற்றுப் போந்து
செவ்வண்ணச் சொக்கன் மிக்க செம்பொ ஞலயத்துப் புக்கு
மைவண்ணக் கண்டத் தானே வாய்த்தபே ரண்டத் தானே
மெய்வண்ணப் [2]பாதத் தானே யென்றுசூழ்ந் திறைஞ்சி வீழ்ந்தார். (உஎ)

விழுந்தவர் திருமுன் சென்று விண்ணப்பஞ் செய்வார் வேந்தர்
செழும்பொருள் கொடுபோய்க் கொள்ளுங் காரியக் தீங்க தின்றி
யொழுங்குறப் பலித்தல் வேண்டு மூனேயலா லுதவி யில்லென்
[3]றழுந்தமுன் னுரைத்துப் போது மளவினி லருளா லாங்கு. (உஅ)

வெண்டிரு நீறு கொண்டோர் வேதிய னுவந்த ளிப்பக்
கண்டது வாங்கிச் சாத்திக் காரியம் பலிக்கு மென்று
கொண்டகங் [4]களித்துப் போந்து குறைவிலாக் கனகத் தோடு
மண்டிய தானே யோடும் புறப்பட்டார் மதுரை விட்டு. (உக)

கற்றைவெண் கவரி வீசக் [5]காயகர் கீதம் பாடக்
கொற்றவெண் குடைநி ழற்றக் கோதையர் மருங்கு வாழ்த்த
மற்றுமன் னரைநி றுத்தி மாணிக்கச் [6]சிவிகை யேறி
மூற்று[7]பல் லியங்க ளேங்கப் போந்தனர் முடுகி வன்றே. (கo)

சாலிநீள் கழனி தோறுந் [8]தண்டுலங் கதிரா வீனும்
பாலுறு தடங்க டோறும் பணிலநித் திலம்[9]பி றக்கு
மேலுறு சாபந் தீர விந்திரன் வெள்ளை யானே
காலிவர் திறைஞ்சுந் தொல்லைக் [10]காளையம் பதிய டைந்தார். (கக)

உசு. என்றுஆர் - சூரியன் பொருந்துகின்ற; சூரியனே ஒத்த வென்பது மாம். இச்செய்யுளில், மயில்முதலிய பறவைகள் உரியஇடங்களுடன் பாராட்டப்பட்டுள்ள நயங்கள் மிகப்பாராட்டத்தாலன.

உஎ. வாய்த்த பேரண்டத்தான் - அண்டங்களைப் பெற்றருளியவர்.

கo. காயகர் - இசைப்புலவர். மற்றுமன்னர் - வேறுஅரசர்கள்.

கக. காலி - சிவபெருமான் திருவடியை. காளை- திருக்கானப்பேர்; காளையார்கோயில். ஐராவதம், தனக்கிருந்தசாபம் தீரும்பொருட்டுச் சிவபெருமானை வழிபட்டதென்பது அத்தலபுராணவரலாறு; "மானமா மடப்பிடி வன்கையா லலகிடக், கானமார் கடகரி வழிபடுங் கானப்பேர்" (திருஞா. தே.) என்பதனாலு முணர்க. ஐராவதத்தால் உண்டாக்கப்பெற்ற மிகப்பெரிதான தடாகமொன்று யானைமடுவென்னும் பெயருடன் இன்றும் அத்தலத்தேயுள்ளது.

(பி - ம்.) 1'கோகுலமே' 2'போதத்தானே யென்றடிதொழுது' 3'அழுந்தி' 4'களிக்கப்' 5'கானவர்' 6'சிவிகைமீது' 7'பல்லியங்கறங்க' 8'தண்டுலக்கதிராய்' 9'பிறங்கு' 10'கானலம்பதி'

வேறு.

ஆரண மும்பகலு மிந்துவு மாடரவு மந்தண னும்மரியுந் தும்
புரு [1]நாரதரும், வாரண முந்திருமான் மைந்தனு மிந்திரனும் வானு
யர் தேவர்களுங் [2]கோடிடை மாமுனியும், பூரண காமகளும் பூமக
ளும்முமையும் பூழிய னுந்திருவோ [3]டேழுல கும்பரவுங், [4]காரண
வன்குரவார் கந்தவ னச்சோமன் காளம ணங்கமழுந் தாளவ ணங்
கினரால். (கூஉ)

வேறு.

கருதுமப் பதியை விட்டுக் காதங்கள் பலவு நீங்கி
வருநெறி வசத்தி னனு மாசின்மூற் றெடர்பி னனு
மருள்புனை வாத வூர ரன்புடைச் சம்பு வாழுந்
திரைபொரு [5]மொய்யார் பொய்கைத் திருப்பெருந் துறையைச் சேர்ந்தார்.

வளைமதி காட்டப் பூக மரகதங் காட்டக் கொன்றை
நளிநிதி காட்டக் காட்ட நாக[6]நித் திலமெ வர்க்கு
முளமகிழ் துறக்கங் காட்ட வுயர்சிவ புரத்துச் செல்லக்
கிளரொளி வழியீ தென்று கேதகை காட்டச் சென்றார். (கூச)

நிறைபெருந் தவத்தோர் வேள்வி நீங்கரும் பெருமை மிக்கோர்
மறுவிலா மூன்றுநூறு மறையவர் விளங்கு மூதூர்

கூஉ. பகல் - சூரியன். அத்தணன் - பிரமன். திருமான்மைந்தன் - மன்மதன். கோடிடைமாமுனி - கலிக்கோட்டுமுனிவர், பூமகள் - பூமிதேவி. பூழியன் - பாண்டியன். காரணவன் - சுந்தரேசுவரர். சோமன் - சோமேசுவரர். காளை - காளையீசர்; அத்தலத்திற் சுந்தரேசுவரர், சோமேசுவரர், காளையீசரென்று மூன்று சிவலிங்கப்பெருமான்களுடைய சந்நிதிகள் உள்ளன. விக்கிரம சோழன் மகள் சுகந்தகேசியை மணம்புரிந்த வரகுணபாண்டியர், அவளுடைய அழகின் மிகுதியைக்கண்டு அத்தலத்திற் சிவபெருமானுக்கு அர்ப்பணஞ்செய்தனனென்பதும் அவளுடைய கூந்தலின் நறுமணம் எங்கும் பரவியதுபற்றி அத்தலம் சுகந்தவனம் அல்லது கந்தவனமென்று பெயர்பெற்றதென்பதும் அத்தலபுராண வரலாறுகள்.

கூகூ. 'மொய்யார்பொய்கை' என்பது, திருப்பெருந்துறையிலுள்ள ஒரு தீர்த்தம்; "மொய்யார்தடம் பொய்கைபுக்கு" (திருவா. திருவெம். கக) என்பதனையுமுணர்க. திருப்பெருந்துறையென்பது, பிருகத்தீர்த்தமென்று வடமொழியில் வழங்கும்; இத்தலம் இக்காரணப்பெயர்பெற்றதை, திருப்பெருந்துறைப் புராணத்துள்ள பெருந்துறைப் படலத்தாலுணர்க.

கூச. வளை - சங்கு. நாகம் - புன்னை; நாகம் நித்திலம்காட்ட; நித்திலம் - முத்து; இது புன்னை யரும்பிற்கு உவமை.

கூடு. மூன்றுநூறுமறையவர் - மூந்நூற்றவர்; இவர்கள் இத்தலத்திற் சிவபெருமானைப் பூசித்தல் முதலிய வழிபாராட்டிற்குரியோர்; தில்லைமூவாயிரவரைப்போல. இறையினின் அமரராக்குமென்க.

(பி - ம்.) 1'நாரதனும்' 2 'தோடிடைமா' 3'ஏழுகமும்' 4 'காரணன்வண்' 5 'மெய்யார்' 6,நித்திலமேயார்க்கும்'

நிறையினின் மருங்க ணேந்தோ ரியாவரா யினும்பி றங்கப்
பிறிவிலா வமர [1]ராக்கும் பெருந்துறை முக்தைப் பேரூர். (கடு)

வே று.

அருந்தவர் சிந்தைசெ லுந்துறை வந்தணை யந்தணர் மூன்தைமகம்
புரிந்துசெ யுந்துறை சந்தைப டிந்துறை புந்தி[2]க டந்தபதந்
தருந்துறை யிந்திரை வந்துறை யுந்துறை தொந்திகொ டந்திடுகும்
பெருந்துறை யெந்தைப ரிந்துகு ருந்தினி ருந்தபெ ருந்துறையே. ()

வே று.

வயலெலாங் கன்னல் செந்நெல் வனமெலா நாகம் பூக
மயலெலாந் தேர்வி மான மவையெலா முனிவர் வாணர்
[3] புயலெலா [4]மாட கூடம் புறமெலாம் வேள்வி யோமங்
கயலெலாந் தாவும் [5]வாவிக் கரையெலாந் தவஞ்செய் வோரால்.(கக)

வே று.

சகம்[6]பரி வறுகலைச் சங்க மேறிய
மகந்தரு மறையுரு [7]வங்க மாறற
முகந்தரு பவக்கடன் முடிய வோடியே
தொகும்பொருள் படுபெருந் துறையைச் சார்ந்ததால். (கஅ)

வே று.

அங்கக ரணையா முன்ன [8]ரங்கநெஞ் சுரைவே ருகித்
துன்னுபே ரன்பு நீடத் துணைவிழி யருவி பாய
வுன்னரு மயிர்சி [9]லும்ப வுயர்கரங் குவிய வாரூ
வன்னிசேர் மெழுகே யென்ன வுருகினர் வாத வூரர். (கஉ)

திருந்துமுற் றவத்தி னுலே செல்வமே லாசை விட்டுப்
பரந்தநெஞ் சொடுங்கக் கண்டு பன்முறை யதிச யித்திப்
பெரும்பதி யடையா முன்ன ரடைந்தது பேரன் பெந்தை
பொருந்திய தலங்க டம்முட் டலமிது [10]போலொன் றின்றே. (சo)

கசு. சந்தை - வேதம்; சிவபெருமான் உபாத்தியாயர் வேடம்பூண்டு அத்தலத்தில் ஓரிடத்திற் சிலாளிருந்து மேற்கூறிய முந்நூற்றுவர்களுடைய பிள்ளைகளுக்கு வேதத்தை ஓதுவித்தமையின், 'சந்தைபடுந்துறை' என்றார்; "வேத நாயகற்கு" என்பர்பின்னும்; சுசை. ஓதுவித்த இடம் பள்ளிக்கூடமென்று இன்றும் வழங்குகின்றது. தொந்திகொள்தந்தி - விநாயகர். குருந்தமரம் - இத்தல விருக்ஷம்.

கஅ. கலைச்சங்கம் - வித்தையின்தொகுதி; ஆடையின்தொகுதியென்பது மற்றொருபொருள்; சிலேடை. மறையுருவங்சம் - திருவாதவூர்.

கஉ. சிலும்ப - சிலிர்ப்ப.

(பி - ம்.) 1'ஆகும்' 2'கடந்து' 3'புயலெலாங்கூடுமாடம்புறம்' 4'மாடப் புறம்' 5'வாவிகளை' 6'பரவுறு', 'புரிவுறு' 7'வங்கமாற்றரு' 8'அங்கணெஞ்சு' 9 'சிலிர்ப்ப' 10'போலின்றின்றே'

பரிவினிங் கெய்தற் கென்ன பாக்கியஞ் செய்தே மிக்க
வரியசெங் கனகத் தோடு மமர்வமென் [1]றறுதி யிட்டுப்
பொருவரும் படையை மிக்க பொன்பரித் தவரை மற்றும்
வரிசையுள் ளவரை யங்கண் வரவழைத் தருளிச் செய்வார். (சக)

வே று.

வரர்[2]புக ழாடித் திங்களிற் குதிரை வந்திடா தாவணி மதியிற் [லாம்
கரைதொறு மிறங்கு மையமோ வில்லை காவல்கூ ரரும்பொருட் கெல்
பரிகணி கொண்டி வருகுவ லியானே பாண்டியற் [3]குரையுமிச் செய்தி
தெருமர லுறுது கடிது[4]போய் நீங்கள் சிவன்செய தெரிந்திடா தென்றார்.

வே று.

ஆங்கவர் போயு வப்ப வரசனுக் குரைப்ப விப்பா
லீங்கிவ [5]ரொப்பார் போல யாவையும் விட்டுப் பொய்கை
யோங்குநீ ராடி வெண்ணீ றணிந்துய ராலயத்துப்
பாங்குறு மிறைவன் றன்னைப் பணிகுவான் றனிய டைந்தார். (சஙூ)

திருந்திய சிகையு நூலுஞ் [6]செவ்வியிற் றுளங்க வானுள்
விரிந்ததா ரகைக்க ணத்துள் விளங்குதண் மதிய மென்னப்
பரிந்துமா ணவர்கள் சூழப் பத்தனர் வரவு பார்த்துப்
பெருந்துறைக் குருந்த நீழ லிருந்தனன் பெரிய [7]வாசான். (சஙச)

காசிஞன் மறைமு ழங்கக் கருணையிற் சிறந்தி ருந்த
[8] தேசிகே சனைக்கா ணுமுன் செயலழிந் துடலங் கம்பித்
தாசிலா விதியி னெட்டா லஞ்சினன் மண்ணிற் றோயப்
பாசமூன் றகல வீழ்ந்து பன்முறை பணிந்து நின்றார். (சஙரு)

நின்றவர் தம்மை யன்பு நீடிய திருநோக் கத்தால்
வென்றிகொள் சிரமூன் ஞக மேவுதா ளீற தாக
வொன்றிய மந்தி ரத்தா னேக்கினோக் குபதே சத்தான்
மன்றுற வுபதே சித்து மூன்னுற வரவ ழைத்தான். (சஙசு)

சக. பாக்கியம் - புண்ணியம். அறுதியிட்டு - நிச்சயித்து.

சஎ. நீங்கள்போய் உரையும்.

சஙூ. ஒப்பார்போல - இராசகாரியங்களை ஒழுங்குபடச்செய்யும் இயல் புடையவரைப்போல; "பெரியசெல்வரொப்பார்போல்", "மனமகிழ்ந்து விரைத் தொப்பார்போலச்சென்று" என்பரபின்னும்; சுசை, எக; "ஒவ்வாதார் தாமெ னினவ ரொப்பார்மற் றெனினவர்' (சீவக. கருசஙூ) என்பதையும் அதனுரையை யும்பார்க்க.

சரு. காசுஇல் நான்மறை. எட்டால் - அஷ்டாங்க வந்தனத்தால். அஞ் சினல் - ஐந்து அங்கவந்தனத்தால். பாசமூன்று - மும்மலம்.

சசு. நோக்குபதேசம் - சகூஷுர் தீக்ஷை.

(பி - ம்.) 1'உறுதி' 2'புகலாடித்' 3'உரையுமிச்' 4'போகீங்கள்' 5'ஒப்பர்' 6 'செவ்வையிற்' 7'வாணன்' 8'தேசிகன் றனை'

அன்னவ ரொல்கி மெல்ல வஞ்சியஞ் சலியிற் செல்லப்
பன்முறை முறுவல் கூர்ந்து பாவனை செய்து பண்பிற்
றன்னடி சூட்டி நாமஞ் சாத்தியா சாரம் பூட்டிச்
சின்மய வஞ்செ ழுத்தைச் செவிப்புலத் துபதே சித்தான். (சஎ)

நோக்கினுற் பாவ கத்தா னுவலரும் பரிசனத் தாற்
காக்குமீ னுடல டக்குங் கமடமொண் பறவை யென்ன
வாக்கினு னுக்கு முன்ன ரடைந்தது பரம ஞானம்
வாக்கினு மடன்தை சேர்ந்தா ளகன்றன மலங்கண் மூன்றும். (சஅ)

வே று.

[1]தேடு நீசிவ பாக்கியஞ் செய்தனை
நாட வேண்டுவ கண்டனை யானமைப்
பாட வேண்டு மெனப்பரங் கண்டவ
ராடி வாசக மோதுவ ரன்புற. (சகூ)

மருவு பொற்பத [2]மன்னுறக் கண்டுள
முருகி யற்புத வாசக மோதுவார்
பரவு சென்னியம் பத்தெடுத் தோதியே
யரிய பாடலச் சோவென வோதினர். (ருo)

வே று.

சிரித்த முகமுங் [3]கவின்குழலுந் தீரா வருவிக் கண்மலரும்
விரித்த கரமுஞ் சபவடமும் வெண்ணூன் மார்புந் திருநீறுந்
தரித்த திருவா சகமொழியுஞ் [4]சாந்த மெய்யுங் குறுவியர்வு
மரித்த மனமும் புளகமுமாய் நின்றார் வாத வூர்முனிவர். (ருக)

வே று.

பதியின்வை பவத்தி னுணும் பதிந்தமெய்ஞ் ஞானத் தாணு
முதிரும்வெம் பிறவிப் பாச மறுத்தவர் மூர்த்தி நாதன்
விதியினிற் காண்டி யென்ன [5]மேதகு சாத்த லோதும்
புதுமைகூர் பிரம சாரிப் புதல்வரை விதியிற் கண்டார். (ருஉ)

சஅ. முதலடியிரண்டும் நிரனிறை.

சகூ. சிவபாக்கியம் - சிவபுண்ணியம்; என - என்றுசொல்ல. பரங்கண்டவர் - திருவாதவூரர்.

ருக. சபவடம் - ஜபமாலை. மரித்த-நினைத்த (ஸ்மரித்த), இறந்தவென்றுமாம்; "மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" (தாயு. பரா. கசுகூ.)

ருஉ. சாத்தல் - வேதம்; திவ்யப்பிரபந்த மோதலைச் சாத்துமுறை யென்னும் வழக்கமும் இதனை வலியுறுத்துகின்றது.

(பி - ம்.) 1'தேடி நீள்சிவ' 2 'மன்னிடக்கண்டுள, முருக' 3 'கவிகுழலுங்' 4 'சார்ந்த மெய்யும் புனைவடமு, மரித்த வுரோமபுளகமும்' 5'மேதரு'

[1]நன்புளீர் நீங்க ளென்ன புண்ணியஞ் செய்தீர் நாதன்
றன்பரி வெய்தி நாளுஞ் [2]சார்ந்தரு கணையப் பெற்றீ
ரின்புறு மெனக்கு மிப்பா லிருப்பதோர் கருமு மில்லை
யன்புளீ ரடைந்தி னென்பா ரதிசயப் பத்தெடுத்தார். (நுக)

வே று.

அங்க ணிவ்வா [3]றறைந்திடுங் காலையப்
பொங்கு ஞானப் புதல்வர்க டம்மொடு
மங்கை நாயகன் மாணிக்க வாசக
விங்கு நில்லென் றியம்பி மறைந்தனன். (நுச)

ஆதி நாயக ஞென்றெழுந் தாயிரம்
போத மேவும் [4]புதல்வர்க டம்மொடு
மோது ஞானங்கள் காட்டி யொளிக்குமுன்
வாத வூரர் வலியபித் தேறினர். (நுந)

[5]குழுவி னோடு குருவை நினைந்திணை
விழிக ளாறு பொழிய விழுந்தெழுந்
தழுது விம்மி [6]யரற்றி யரற்றினின்
றெழிவில் வாசக மோதத் தொடங்கினர். (நுசு)

வே று.

[7]மாறனின் றென்னை யென்னு மாறிலொண் கோயிற் பத்துத்
தேறல்வண் புணர்ச்சிப் பத்துச் செத்திலாப் பத்து மற்று
மாறிய பிரார்த்த னைப்பத் தாசைப்பத் துயிரு ணிப்பத்
தேறிய புலம்பல் வாழாப் பத்தெண்ணப் பத்தெ டுத்தார். (நுள)

அரும்பெரு நகரி னிற்போந் தவ்வயிற் றிகழ்வ கண்டே
[8]பொருந்துமம் மனையே சுண்ணங் கோத்தும்பி புகழ்த்தெள் ளேணந்
திருந்துபூ வல்லி யுந்தி தோணெக்கஞ் சிறந்த [9]பாவை
மூரண்கடி சதக மெய்யென் [10]றீரிதிரு நோதப் புக்கார். (நுஅ)

நுச. ஞானப்புதல்வர்கள் - ஞானபுத்திரர்கள்; சிஷ்யர்கள்.

நுந. குருந்தமரத்தின்கீழே சிவபெருமான், தொளாயிரத்துத்தொண்ணூற் றொன்பது மாணக்கர்களுடன் ஞானசாரியராக எழுந்தருளியிருந்தனரென்று உணர்க; திருவுத்தரகோசமங்கைப்புராணத்தில், பார்ப்பதி தவம்புரிந்த அத்தியாயத்திற் கூறப்பெற்றுள்ள, திருவாதவூருடைய பண்டைவரலாறு இங்கே அறியற்பாலது. புதல்வர் - மாணக்கர்.

நுஅ. திகழ்வ-அம்மனை முதலிய விகாயாட்டுக்கள். 'மெய்'என்பது, திருவாசகத்தில், திருச்சதகத்தின் முதற்குறிப்பு.

(பி - ம்.) 1 'கன்குளீர்' 2 'சார்தருமதனைப்பெற்றீர்', 'சார்ந்தருங்கருணை பெற்றீர்' 3'அடைந்திடுங்' 4'புனிதர்கள்' 5'குழுவினீடு' 6'அரற்றியுரற்றினின்று', 'உலற்றினின்று' 7'மாறிலொண் கோயிற்பத்து மாறினின் றென்னையென்னுந் தேறலொண்' 8'பொருத்துமின்னியறெய்சுண்ணங்' 9'மற்றும்' 10'ஓரிரு வார்'

வே று.

வருந்தியுட லூணுறக்க மின்றி யாங்கண் வாசகமோ திடக்கே ட்ட தொண்ட ரெல்லாம், பொருந்தியதி சயித்திலைமுன் கேட்ட வல்ல புதுமையெனச் சூழ்ந்திறைஞ்சிப் போற்றல் கண்டு, பெரும் புரவி கொளவந்த பொருளனைத்தும் பின்வருங்கா ரியமொன்றும் பாராராகிப், பரிந்துகொளு மெனக் கொடுத்தார் சிறிது நாளிற் பாண் டியனு ரீண்டுபொருண் மாண்ட தாங்கே. (ருகூ)

தருங்கனகக் குவையனைத்து [1]மளித்து நாளுந் தாமேயோர் சங் கையறப் [2]பாடிக் கொண்டு, குருந்திலெடு மறுகிலெடு மறுக விப் பாற் குணமொழித்துத் தனமழித்த செய்தி முற்றுந், திருந்து[3]நெறி மதியமைச்சர் திரண்டு சென்று செப்பக்கேட் டளத்தாருச் சீற்றத் தோடு, மிருந்துமணி [4]முடிதுளக்கிச் செங்கோன் மாற னிகற்றூதர் கரத்தோலை யெழுதி விட்டான். (சுஎ)

வே று.

தென்னவர் பரவுந் தென்னவ னெலை தென்னவன் [5]பிரம ரா யனே காண்க, டொன்னிறை யறையிற் பன்முதல் கொண்டு புரவி கொண் டீணவான் பரிவொடும் போனு, னென்னினைந் தின்னம் வந்தில னமைச்சற் கிப்படிச் செய்யத் தக்கதோ கடிது, மன்னிய வா டற் புரவிகொண் டடைவின் வருவது கருமம் மற்றது பழுதால். (சுக)

வே று.

இத்திரு மூகத்தை யாங்க ணெய்திய தூதர் காட்டப்
பத்திசெய் தடைவின் வாங்கிப் [6]பாசுரங் காணுமுன்ன
முத்தம மன்னன் சித்த மூணர்ந்தனர் கெடிது யிர்த்தார்
[7]புத்தியு ளிளைத்தார் சாலக் கலங்கினர் புலம்பி னாரால். (சுஉ)

நிகு. ணண் உறக்கமின்றி உடல்வருந்தி. ஆங்ஙண்-அவ்விடத்து. கேட் டனை அல்ல. சூழ்ந்து - ஆராய்ந்து.

சுஎ. கனகக்குவை - பொற்குவியல். சங்கை - சந்தேகம். மறுக-சுழலா கிக்க. ஆறு - தணியாத. முடிதுளக்கி - தலையசைத்து.

சுக. தென்னவர் - தென்னாட்டினர். தென்னவன் பிரமராயன்: இது வாதவூரருக்கு அரசன் முன்பு கொடுத்த பட்டப்பெயர். இப்பெயரைச் சிலாசா ஸனங்களிற் பரக்கக்காணலாம்.

சுஉ. பாசுரம் - ஓலையிலுள்ள வாக்கியம்.

(பி - ம்.) 1 'அழித்து' 2 'பாடிக்காணக், குருந்தமொடும்' 3 'நெறிதரும்' 4 'முடிதுளங்கச்', 'முடித்துங்கச்' 5'பிரமாதிராயன்', 'பிரமாதராயன்' 6'பாயி ரம்' 7'புத்தியினிணைத்தார்', 'புத்தியுளிழைத்தார்'

தென்னவ னமைச்ச னேயா [1]னென்னகா ரியஞ்செய் தேன்மே
லென்னதாய் விளையுங் கெட்டே னிவ்விளிகொள் வதற்கே வந்தேன்
பொன்னேயே [2]யழித்தே னந்தோ புகலவோர் மாற்ற முண்டோ
மன்னவற் பிழைத்த லாகா மற்றினி யாவ தென்கொல். (சுஙு)

ஆதரித் தடிய னேனை [3]மாலழித் தாண்டு கொண்ட
வேதநா யகற்குச் சென்று விண்ணப்பஞ் செய்வ லெல்லாங்
கோதகரும் பெரிய செல்வ [4]ரொப்பார்போ லச்சத் தோடுஞ்
சோதியா லயத்துப் புக்குத் தொழுதுநின் றழுது சொல்வார். (சுசு)

வே று.

தேமா லயனு மறியாத தேவ தேவே தயாநிதியே
வாமா கொண்டு வரச்சொல்லி வழுதி யோலை வரவிட்டான்
ரூமா வொன்றுங் கொண்டதில்லை தனமு மடியார் தமக்கிட்டேன்
போமா றுரையாய் கண்பாரா யுவியி லினியார் துணைசெய்வார். ()

பொருந்து திலேல வனங்கடந்து [5]போந்து வேந்தற் சேர்ந்தருளின்
வருந்த வுடலந் தனிவிருத்த மறையோ னுகி மறையோர்கட்
கிரங்கி யருங்[6]கீழ் நீர்காட்டி யிரங்கன் மீட்ட பெருமானே [ற்றி.
குருந்த வாம்பிற் கரந்தமறைக் [7]கொழுந்தே [8]செழும்பொற் ருள்போ

வே று.

போற்றியென் வாழ்முத லேயென வெடுத்துப் புலருமுன் னினி
யவா சகத்தா, லேற்றுயர் கொடியுடை யானையங் குணர்த்தி யினிய
ரற் றுதிகளாற் றுதிப்பச், சாற்றருங் கொடுந்துயர் கூர்ந்தவர் துயரந்
தணித்திடு வானருள் கூர்ந்து, தோற்றிய தவ்வுழி மேற்றிகழ் விசும்
பிற் றுளங்கிட வுபர்திரு வாக்கு. (சுஎ)

சுஙு. கெட்டேன் - ஐயோ. மாற்றம் - விடை. மன்னவற் பிழைத்தல். இராசத்துரோகம். ஆவது - செய்யத்தக்கது.

சுசு. வேந்தன் - பாண்டியன். உடலம் வருந்த. இதிலுள்ள வரலாறு, இங்கே கூறப்பட்ட வண்ணம் திருப்பெருந்துறைப் பழையபுராணத்துள்ளது; இக்கதையிற் சிலபகுதி, திருப்பெருந்துறைப் புதியபுராணத்துள்ள பெருந்துறைப் படலத்தாலும் கண்குபுலப்படும். 'கீழ்நீர்காட்டி' என்பதன் வரலாற்றைத் திருப்பெருந்துறைப் புராணத்தின் உ - ஆம் பதிப்பு முகவுரையின் கரு - ஆம் பக்கத்துள்ள குறிப்பாலுணர்க.

சுஎ. போற்றி - பாதுகாத்தருள்க. உணர்த்தி - தயிலுணர்த்தி.

(பி-ம்.) [1]'என்னகாரியத்தைச்செய்தோம்' [2]'அளித்தேன்' [3]'மாலளித்து' [4]'ஒப்பர்போல்' [5]'விண்ணப்பஞ்செய்வார்' [6]'நீணீர்காட்டி.' [7]'கோவேசம் பொற்' [8]'சிற்பொற்ருள்'

வே று.

நினக்கி யாமுண் டுளமஞ்சே னிலைமை யுடனே கைதவற்குக்
கனத்த புரவி வருமென்று கருணை யுறவேண் டுபவிட்டுப் [ட
பனைப்[1]பை யோலை நிறைத்தெழுதிப் பரிவின் [2]விடுப்பா யெனக்கேட்
டினைக்க ணில்லார் களித்தெழுதி விட்டார் நெடிய கட்டோலை.(சுஅ)

வே று.

ஓதுபுகழ் [3]வாள்வழுதிக் கடியேன் வாதவூரனேன் விண்ணப்ப
[4] முணர்ந்து கொள்வாய், தீதுமொழி கேளாதைத் தாறு நாளிற் றிரளி
வுளி வருஞ்சிறந்த [5]பந்தி கட்டி, வீதிபட நீர்க்குவிடுக் தடங்கள்
வெட்டி வீதிநகர் வையாளி யலங்க ரித்தாங், கேதமொழிக் தடியேனை
நயந்து முன்போ லெழுந்தருளி யிருந்தருண்மெய் யென்றே தேறி.()

இத்தகவிற் றூதர்கரம் விடுத்துத் தம்பா லியைந்தபெரும் பாரம்
விடுத் தாலயத்து, மெத்தனவிற் றுயிலுங்கான் மருங்க ணேந்து
மெய்த்தவகே ளன்புடையார் நின்போ லில்லை, சித்தமுறு காரியநா
முடித்த நிண்ணந் தீரமொடு தென்னவனுள் வருமுன் சென்று,
புத்திகளி தாத்தக்க துரைத்தி யென்று புகன்றெளித்தா னன்பர்
சுமை பூண்டு கொண்டான். (எ0)

கனவுநிலை நீங்கியபின் போவலென்றே கருணையுடை நாயகனை
வணங்கி வாழ்த்தி, மனமகிழ்ந்து விரைந்தொப்பார் [6]போலச்சென்று
மதுரையடைந் தமைச்சருடன் மண்ட பத்தின், முனமெழுதி வரு
மோலை கண்டு ளத்து முனிவொழிந்த மன்னவனைக் காண மன்னன்,
றனதருகு வரவழைத்தாங் கிருந்தோர்ப் போக்கித் தனித்துரைப்பா
னுளத்தினிய [7]தயாமீக் கூர்ந்தே. (எக)

வே று.

மறங்கடி பொருட னக்கு வாசியெவ் வளவு கொண்டீ
ரிறங்கிய துறைநா டேழ்த தெவ்வள வுயர்பு போது
நிறங்கடா மென்னை மக்கேற் றூனதென் போது நீதி
பிறங்கிலக் கணங்க ளென்னே [8]பேசிடீர் கூச லின்றி. (எஉ)

சுஅ. உளம் அஞ்சேல். வேண்டுப இட்டு - வேண்டுவனவற்றைச் சேர்த்து. பை ஓலை - பசிய ஓலை. வினைக்கண் நில்லார். கட்டு ஓலை - கட்டினையுடைய ஓலை.

சுக. கேளாது உணர்ந்து கொள்வாய். ஐந்தாறு நாளென்பது, ஐந்தும் ஆறுமாகிய பதினொரு நாளெனவும் முப்பது நாளெனவும் பொருள்கொள்ள இடந்தருகின்றது. வையாளி - குதிரையை நடத்தும் இடம். ஏதம் - துன்பம்.

எ0. மெத்தன - மெல்ல. தீரம் - தைரியம்.

எஉ. மறம் - பாவம். துறை ஏது, நாடு ஏது; ஏது - யாது. உயர்பு எவ்வளவு போதும் - உயர்ந்த குதிரைகள் எவ்வளவு வரும். கூசல் - நாணமுறல்.

(பி - ம்.) 1'பேயோலே' 2'விடுவாயெனக்' 3'மாறனுக்கிங்கு' 4'உணரக்', 'உணரக்கேளாய்' 5'பத்தி' 6'போலப்போக்கு' 7'தயாவு' 8'பேசிடுங்'

என்றுரை செய்யக் கேட்ட வினியமா முனிவர் தேறி
மன்றுளு தனெங் னேந்து பகருவார் மன்ன ரேறே
வென்றிமா ராட்ட கங்காம் போசமா ரியஞ்சாம் ப்ராணி
துன்றுசைந் தவமுன் ஞன துரகமோ பெருகக் கொண்டேன். (எக)

புகலருஞ் செலவு டைத்தாய்ப் புணரியின் மூழக்க மிக்குப்
பகைபட வொன்றுக் கொன்று பிணைத்தெழும் பெருமை கூர்ந்து
சகமதி சயிப்பத் தோன்றுந் தாண்டுவெம் பரிமா நிற்க
வகைபடு மறுகாற் பொங்கு மதுரையு மிடம்போ தாதால். (எச)

மன்னிய விலக்க ணத்தால் வருணத்தாற் கதியான் மிக்க
நன்மைகள் சொல்லத் தக்க வல்லவோர் 1நாவா லின்று
முன்னுற வந்த வாறே காண்கின்றாய் மூழுது மீங்கே
யென்னையான் வியந்து கூறே னென்றனர் 2நிலைமை பூண்டு. (எடு)

உற்றது கேளா முன்ன ருவகைகூர்ந் தணியல் வாசி
கொற்றவெண் குடை3க ளாசி கோவைசேர் முத்த மாலை
பொற்புறு மாணிக் கப்பூண் பொற்படாம் பட்டுக் கூறை
மற்றும்வேண் டுவகொ டுத்து விடுத்தனன் வரிசை கூர. (எசு)

விரைவொடும் விடையிற் போந்து வேண்டுப தமக்கு நல்கும்
பரிவுடைச் சொக்கன் வாழும் பைம்பொழு லயத்துப் புக்குக்
கரையழி யன்பி னேடுங் கசிந்துநின் றிறைஞ்சி யேத்தி
யுரைசெய்வார் தனித்து மெல்ல வுற்றகா ரியத்தை யாங்கு. (எஎ)

செ வ லு.

நந்தார்கரர் செந்தாமரை வந்தார்தொழு மெந்தாய்
நாதாவதி பூதாசதுர் வேதாவித கீதா
பந்தார்விரல் வண்டார்வரி வண்டார்குழல் கொண்டாள்
பாகாவென தாகாபர யோகாசிவ லோகா
முந்தாதர கங்காதர சங்கார4வி டங்கா
மூலாகம நூலாகுண சீலாதிரி சூலா
தந்தாவென நின்றாடிய பொன்றாழ்மணி மன்றூர்
தாளாவரு ளாளாகின தாளாவெனை யாளே. (எஅ)

எக. முனிவர் - மாணிக்கவாசகர்.

எச. வகை - குறுக்கெருக்கள். மறுகால் - வீதிகளால்.

எடு. வருணம் - நிறம். ஒருநாவாற் சொல்லத்தக்கவோ.

எசு. அணியல் - ஆபரணம். களாசி - காளாஞ்சி. கோவை - கோத்தல். பொற்படாம் - பீதாம்பரம். பட்டுக்கூறை - பட்டாடை.

எஎ. உற்றகாரியத்தை உரைசெய்வார்.

எஅ. கீதம் - இசைப்பாட்டு. வண்தாரில் வரிகளையுடைய வண்டுகளார்ந்த. ஆகம் - மனம்.

(பி - ம்.) 1 'நாவின்' 2 'நிழமை' 3 'காளாஞ்சி', 'களாஞ்சி' 4 'விடங்கா மூதார்கள மீதேயணி யாலா குணசீலா'

வே று.

மன்னு துரகம் வருமென்று வழுதி மகிழ வுரைசெய்தேன்
பொன்னு மடியார் தமக்கிட்டேன் போமா றுரையாய் கோமானே
யென்னே யடிமை 1யாக்கொண்ட விமையோர் தலைவா வுமைபாகா
வுன்னே யொழிய வறியேனென் றுரைத்தா ரிடும்பை யுடம்பாளர். ()

வே று.

ஈங்கிது சொல்ல வானத் திசைசந்ததோர் பெரிய வாக்காங்
கோங்கிய தஞ்ச லஞ்ச லென்னவவ் வுரைமே லாமு
னீங்கரும் பரிவிற் போந்து நீதிதம் மனைக்க ணெய்தி
யாங்குயர் நாய ஞரைப் பூசைசெய் தமுது செய்தார். (அ0)

உண்டலுஞ் செய்தி 2யெங்நன் முடியுமென் றுளத்த முங்கிக்
கண்படை கொள்ளுங் காலைக் 3கண்ணன கிளைஞர் வந்து
பண்பினி 4னுணர்த்தி மன்னர் நீதிநூல் பரக்கக் கற்றுத்
தண்புக ழமைச்ச ஞனுய் சாதுமார்க் கந்த விர்ந்தே. (அக)

மன்னவ நிதய மாரே யறிகுவார் வாத வூரா
வென்னது நினைந்தா யந்தோ வருவதே யினியா ருண்டி
நின்னுறு கிளைஞர்க் கென்ன விடும்விடி நீரார் யாமா
ரன்னிய ரல்லான் 5ஞாலத் தார்வெறுப் பாரு வப்பே. (அஉ)

ஈசனேர் மனிதன் போல வென்னைவந் தாண்டி கொண்டான்
மாசறு பிறப்பும் விட்டேன் மன்னவற் பிழைத்த லாகா
பேசிலிங் கதனுல் வந்தேன் பெரும்பொருட் டனிசு மின்றே
யாசிலோ ருபாயத் தாலே போக்குவ 6லைய மின்றே. (அங)

7 இங்குளீர் போமி னுங்கள் காரியத் தென்று நீக்கப்
8 பங்கய விலையு நீரு மெனவவர் பற்றற் றுங்குத்
தங்கணெஞ் சகத்து தொக்து போயினர் தரும மாறன்
மங்கல முறைசெய் வோர்கள் வந்தனர் மற்றை ஞான்று. (அச)

எங. இடும்பை - துன்பம்.

அ0. நாயனர் - தலைவர்; "உத்தம நாயனரை" (சடு: கo), "நாயன் சொல்லை மறுத்திடல் பாவம்" (டுடு: கo), "செங்கெதிநாயன்" (சூo: கடு.)

அக. எங்நன் - எங்ஙனம். தவிர்த்து அமைச்சனுனுய்.

அஉ. கிளைஞரைப் பாதுகாத்தற்கு இனி யாருண்டென்று சொல்ல. ஆர் வெறுப்பு ஆர்உவப்பு - ஆர்பகை ஆர்நட்பு.

அங. தனிசு - கடன். 'மன்னவற் பிழைத்தலாகா':சூங.

அச. பங்கயவிலை - தாமரையிலை. மங்கல முறைசெய்வோர் - நற்குண முடைய ஏவலாளர்; "நன்னெறி முறைசெய்வோர்" என்பர் மேலும்; அஅ.

(பி - ம்.) 1'யாட்கொண்ட' 2 'யென்னுய்' 3 'கண்ணிணைக்' 4'னுணர்த்தி' 5 'ஞானத்து' 6'ஐயமின்றி' 7'இங்குநீர்' 8'பங்கயத்திலையு நீருமென்றவர்'

புரவிவந் தனவோ வென்ன மெய்ப்பட வருமிப் போது
விரைதல்வேண் டாம்பொ றுத்து வீதிகோ டிக்கச் சொன்மின்
கருதினீங் [1]கென்னே யின்றேர் கலியாண ஞகக் காண்மி
ஞரைசெய்த மாற்றந் தப்பா தரைசெயு மரசற் கென்றூர். (அடு)

ஆங்கவர் போந்து செய்தி யறைந்திடக் கேட்ட வேந்தன்
பூங்கமு கரம்பை நாட்டிப் பூரண குடங்கள் வைத்துத்
தேங்கமழ் தாம நாற்றித் திசைதொறுந் தீப மேற்றி
யோங்குபட் டாடை யான்மேல் விதானித்தா னுயர்வான் மூட்ட. ()

[2] பந்திவை யாளி சங்க மண்டபம் பண்ட சாலே
கொந்தவி முலங்கன் மாட மாமடங் கோபு ரங்கள்
சுந்தரன் பெரிய கோயி றேரண வாயில் வீதி
யிந்திர நகரி யென்ன வெங்கணு மலங்க ரித்தான். (அள)

மெய்ந்நெறி மன்னர் மன்னன் விளம்பிய காலஞ் சென்ற
தின்னமும் வந்த தில்லே யினப்பரி யென்று சீறி
நன்னெறி முறைசெய் வோரை விடுப்பவாங் கவர்க ணண்ணி
முன்னுறக் கேட்பப் பின்னு முன்புபோன் மொழிந்து விட்டார். ()

கே ஷ.

மல்ல லோங்கு மலய முனிவகே
ணல்ல தோர்[3]வினே யாட னவின்றனே
கல்வி மன்னன் கனக [4]மழித்தவொண்
செல்வ மாமுனி பின்னரென் செய்தனன். (அசு)

ஆகத்திருவிருத்தம் - நுகூ.

உ அ.—நரி குதிரையான திருவிளையாடல். *

இத்தகு தியினி ருக்குங் காலையி லெழுந்தி றைஞ்சி
யொத்தபே ரமைச்சர் முன்னின் றுரைசெய்வா [5]ரரச ரேறே
மத்தன்வார்த் தையினைக் கேட்டு வளநக [6]ரலங்க ரித்தாய்
பித்தனீ யல்லா லுண்டோ பேசுவ தென்னே யாங்கள். (க)

அடு. கோடிக்க - அலங்கரிக்க. கலியாணன் - நல்ல தடையையுடைய வன்; "நல்ல கல்யாண னன்றே" (உகூ: கஉ.)

(உ அ)

க. மத்தன் - மயக்கமுடையவன்.

* "அரியொடு பிரமற் களவறி யொண்ணு, னரியைக் குதிரை யாக்கிய நன்மையும்", "மதுரைப் பெருநன் மாநக ரிருத்து,குதிரைச் சேவக ஞகிய கொள் கையும்", (திருவா. கீர்த்தி. நுடு - சு; சச - நு); "பத்தம்பதிய பரிமேற்

(பி - ம்.) [1]'எனேயுமின்றேர்' [2]'பந்திவைகாளி' [3]'விளேயாட்டுகவின்றனே' [4]'அளித்த' [5]'அரசர்கோவே' [6]'அலங்கரிப்பாய்'

பெருந்துறை யடைந்த போதே பித்து[1]மேற் கொண்டா னங்கண்
டிருந்துசெங் கனக மூற்றும் போக்கிஞன் செயல்வே ருஞன்
பொருந்துகோ வணமூ மோடி மல்லதேர் புரவி யில்லை
[2] யிரங்கிடேல் வளைத்து வாங்கு பொன்னிழ வாதே யென்றார். (உ)

வே று.

துய்ய மன்னவ [3]னன்னவர் சொல்லரீ யிசைத்துச்
செய்ய தாமரைக் கண்மலர் தியெழ விழித்து
மைய னெஞ்சினை வளைத்திடும் வளைத்திடு மென்ன
வெய்ய சொல்லுடைப் பிரம்படிக் காரரை விடித்தான். (ஊ)

இன்னல் செய்குவான் சென்றவ ரிடர்கெட வோது
முன்ன ரும்பெருஞ் செய்திகள் கண்டுள மஞ்சித்
துன்னு மன்பிது கண்டில மென்றுகை தொழுதே
மன்னு [4]மேனியி னேவன செய்திலர் வளைத்தார். (சு)

மற்று மூ[5]ழைழித் திளைத்தவர் வளைப்பிடை யிருப்பக்
கொற்ற மன்னவன் பின்னருங் கூற்றினை யனைய
வெற்றி வீரரை விடித்தனன் சிறைசெயு மென்றே
செற்ற மோடெழ [6]வைதனர் வைத்தனர் சிறையில். (எ)

கொண்டான் தக்த, வக்தமிலா வானக்தம்'' (தீருவா. திருவம்மாளை. ஊ);''ஞால மிகப் பரிமேற்கொண்டு நமையாண்டான்'' (தீருவா. திருப்பொன்னூசல், அ); ''பாய்பரிமேற் கொண்டென், னுள்ளங் கவர்வரா லன்னே யென்னும்'' (தீருவா. அன்னை. எ); ''நற்பரிமேல் வருவானை'', '' தாவிவரும் பரிப்பாகன்'' (தீருவா. குயிற்பத்து, சு, அ); ''வான்புரவி யூரு மகிழ்ந்து'' (ஷெ திருத்தசாங்கம், சு); ''தெரிவற நின்றுருக்கிப் பரிமேற்கொண்ட சேவகனுர்'', ''பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட பாண்டியனுர்'', ''பாண்டியனுர், புரவியின்மேல் வர'' (ஷெ திருப்பாண்டிப்பதிகம், க, ஊ, கூ);''ஈரிகளெல்லாம், பெருங்குதிரை யாக்கியவா தன்றேயுன் பேரருளே'' (ஷெ திருவேசறவு, க); 'ஆட லமர்ந்த பரிமா வேறி யையன் பெருந்துறை யாதியங்கா, ளேடர்க ளேயெங்கு மாண்டு கொண்ட வியல்பறிவார்'', ''வண்சாத்திஞேடுஞ் சதுரன் பெருந்துறை யாளி யன்று,மங்கையர் மல்கு மதுரை சேர்ந்த வகையறி வார்'' (ஷெ திருவார்த்தை, சு, கo); ''தேவருங் காணுச் சிவபெருமான் - மாவேறி, வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க'' (ஷெ திருவெண்பா, கூ); ''பரியின் மேல்வந்த - வள்ளன், மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள்'' (ஷெ பண்டாயநான்மறை, உ); ''ஈரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லா மிகழ்வித்து'' (ஷெ ஆனந்தமாலை, எ); ''கூடற் பதிவரு மாடற் பரியோன்'' (கல். கூகூ.)

உ. ''ஓடுங் கவந்தியு மேயுற வென்றிட்டு'' (திருவா. தூலா. க.) [சுவந்திகோவணம்.] வளைத்த - தடுத்த; ''வள்ளனீங்கப் பெறாய் வளைத்தேனென'' (சீவக. அசுகூ.)

(பி-ம்.) 1'மால்கொண்டான்' 2'இரங்கிடலழைத்துவாங்கு' 3'அன்னது' 4 'மேனியைநேவன' 5'ஒழிக்திளைத்தவர்' 6'வைதவர்'

வேத னேப்பட விருத்திய வெங்கொடுஞ் சிறையாற்
போத நீடிய கடுந்துயர் பொறுக்கமாட் டாம
லாதி நாதனே நினைந்தழு [1]தலர்க்கணீர் சொரிய
வாத வூரரும் புலம்புவார் வாசக மோதி. (சு)

வே று.

மன்னுசுந் தரனே வாசி வந்தன வில்லையென்று
தென்னவன் வஞ்சித்து வைத்துத் தீயெழ நெருக்கா நின்றான்
முன்னது பொறுக்க கில்லேன் முடிப்ப[2]னென் னுயிரை யீயன்
றென்னை[3]யாண் டனையென் வேண்டி யின்றிரங் காத தென்னே.

வே று.

[4] பொருவி லெரிவாய் சொரிந்ததெனப் புரவி வரவு சொலச்
சொலவிங், [5]கிருகி லிருநின் மானபுர மென்னுங் கொடுமை பொறுக்
கலிலேன், வரிசை கூர வீற்றிருக்கு மன்னர் வாழ்வு மினியமையு,
முரையும் பொருளுங் கடந்தமறை யொளியே [6]வெளியே யுதியாயே.

மின்னும் புகழா வருளாளா மெய்யே மனிதர் போல்வந்திங்,
கென்னெஞ் சுருக்கி யுரைத்தவுரை தப்பா தெனவந் தியானுரைத்
தேன்,மன்னன் காண்பான் விழிகுழிய வழியை நோக்கி யிராநின்றான்,
றன்னும் புரவி கொடுவிரைவிற் றேன்றாய் தோன்றாய் தோன்றாயே.

வே று.

ஆரிய [7]மொழியு ளோரு மருந்தமிழ்ச் செய்யு ளோருங்
காரிய முறைசெய் வோரும் யாவருங் கசியச் சொல்வார்
[8] சோர்வறக் குழைத்தா யென்றுஞ் சோதியே சுடரே யென்றுஞ்
சீரிய நாம மோதத் தரித்திலர் [9]தேவர் தேவர். (கo)

வே று.

ஒழுக்கந் தருமந் தவந்தான முறவு வாய்மை பொறைமற்றும்
விழுப்ப முள்ள சூத்திரர்வாழ் மிழலை [10]நாட்டு நரியெல்லா
மழைத்துத் [11]தெருட்டி விளையாட லவனி மீது ளனிவிளங்கத்
தழைத்த தலத்தை நரிக்குடியென் [12]றின்றுஞ் சொல்வர் சான்றோரே.

எ. என்னேண்டி என்னையாண்டனே.

அ. இரு, கில்: ஏவல். மானபுரம் - மானமங்கலம்; இது, குடிப்பெய ரைக் கூறியிகழும் இகழ்ச்சிக் குறிப்பு.

கo. ஆரிய மொழியுளோர் - வடமொழிப்புலவர். 'குழைத்தாய்' என்பது குழைத்தபத்து. 'சோதியேசுடரே' என்பது அருட்பத்து.

கக. மிழலைநாடென்பது திருப்பெருந்துறையின் பக்கத்திலுள்ளது; அதி லுள்ள வேளாளர்களின் பெருமை மிழலைச்சதகத்தால் விளங்கும். நரிக்குடி யென்பது, இப்போது புதுக்கோட்டையைச்சார்ந்த ஊராகவிருக்கின்றது.

(பி - ம்.) 1'அலர்கணீர்' 2'னின்னுயிரை' 3'ஆண்டனேயேல்' 4'பொரிவி' 5 'இருகிலிரு நிலியமபுரம்' 6'வெளியினுதி' 7'மொழியனேரும்' 8'சேர்வறுபொ ருள்கடோர்த்து' 9'தேவதேவே' 10'நாட்டுணரியனேத்து' 11'திரட்டி' 12'இன்னும்'

வே று.

அண்டம் [1]விள்ள வடிப்பர் பிடிப்பர்க
ணண்டு ணுங்நரி [2]காணரி யாதுநீர்
கொண்ட மன்ன னிடங்குறு காமுனம்
பண்டை நுங்குரல் காட்டும் பயமற. (கஉ)

வே று.

குணங்கொண் டினைய போதித்துக் குதிரை யாக்கித் தற்பிரியா
திணங்குங் கணங்க டமக்கடைத்துப் புறப்பட் டாளெ ரிவுளிமிசை
வணங்குங் கணங்[3]கோ மாயுவுமா மாயப் புரவி மீதேறி
யணிந்து புறப்பட் டதுதுறையா [4]ளுடைநா யகனைப் புடைசூழ்ந்து.

வே று.

ஆதர வடியார் மூற்று மடிபணிந் தேத்தப் போந்து
வாதையம் புரத்து ணண்ணி மணிச்சிலம் போசை காட்டத்
தீதற [5]வாண்ட வெந்தை திருச்சிலம் போசை யென்றே
யேதமா முனிவர் தேறி யிசைபடத் துதிக்க வுற்றார். (கச)

வே று.

கணங்கொள் சிறுவ ரிடியெனமுன் னூதுங் காளங் கறங்குற்ற
துணிந்து புடவி விசேடமுயர் துறக்கத் துணர்த்தச் செல்வதுபோன்
மணங்கொண் மதுரை காதமென வாசித் [6]தூசி வீசியதங்
கணங்த தறியா ராயறிவா னறைவா ரீசன் றிசைநோக்கி. (கரு)

வே று.

கோலிய பொன்னே வில்லை குதிரையோ வரவு காணேன்
[7]காலவெந் தூதர் போலக் காவல னேவ லாளர்
மேலெழ நெருக்கா நின்றார் மெலிவுறும் வினையே னுற்றே
னுலவா யானே சால வஞ்சினே னஞ்சி னேனே. (கசு)

கஉ. நரியாது - நரித்தன்மையில்லாமல்; "நரிப்பாய் நாயே னிருப்பேனே" (திருவா. கோயின்மூத்த. கூ.)

கங. அடைத்து - ஒப்படைத்து. கோமாயு - நரி. துறை - பெருந்துறை; ஆளுடைநாயகரென்பது, அங்கே ஸ்வாமி திருநாமம்; வாதஊரை ஆட்கொண்ட ருளினமைபற்றி இப்பெயர் இவருக்குண்டாயிற்று; திருப்பெருந்துறையை ஆளுடையார் கோயிலென்பதும் இதுபற்றியே.

கச. வாதையம்புரம் - வாதவூர். இறைவன் மணிச்சிலம்பின் ஓசைகாட்டியதை, "வாதவூரினில் வந்தினி தருளிப், பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" (திருவா. கீர்த்தி. நிஉ - ங) என்பதனாலு முணர்க.

கரு. ஈசன் திசை - ஈசானதிசை.

(பி-ம்.) [1]'பிள்ள' [2]'காணலியாது' [3]'கோமாயுவுயர்மாயப்' [4]'உடையநாய தணைச்சூழ்ந்து' [5]'வாழ்ந்த' [6]'தூளி' [7]'காலன்வெந்'

நாதனே யருளிச் செய்த வார்த்தையை நம்பி வந்தேன்
வேதனே [1]யுறவோ நாயேன் மெய்ம்மொழி மொழிந்தே னுகச்
சோதிநீள் வாசி கொண்டு தோன்றெனப் புறம்போந் தள்ளத்
தேதமுற் றழுங்கா முன்ன மெய்திய தூதர் சொல்வார். (கஎ)

புண்ணிய வடிவ ரேயொண் புத்தியுள் ளவரே யிந்த
மண்மிசை யமைச்சர்க் கெல்லா மன்னர்நீ ரல்லா லுண்டோ
வெண்ணரும் புரவி வந்த வின்புறக் கண்டோர் தாழா
துண்மகிழ்ந் தேத நீங்கி யுரைசெயு மரசற் கென்றூர். (கஅ)

அத்திறங் கேளா முன்ன ரகமகிழ்ந் தரசன் பாற்சென்
றுத்தம மன்னு சீற்ற மொழி[2]யொழி நகரின் பாங்கர்த்
தத்துமா [3]வந்த வென்று சாற்றினர் தூத ரென்னச்
சித்திர மண்ட பத்துச் சேர்ந்தனன் வாழ்ந்து வேந்தன். (ககூ)

நிலவுசா மரையி ரட்ட நித்திலக் குடைநி ழற்றத்
[1]தலமகி ழால வட்டந் தையலார் நின்று வீசத்
தொலைவிலா மன்னர் போற்றச் சூதமா கதர்கள் வாழ்த்த
வலகிலா [5]வணியாற் பொங்கி யரிகொளா சனத்தி ருந்தான். (உ0)

வெம்பரி வரவு பார்த்து வீதிவா யிருக்குங் காலைச்
சம்புமா சமாதி யாலே சம்புமாத் தாழ்க்கக் கண்டு
வெம்பிநீ டம்பி னோடி யோசனை மீண்ட தூதர்
செம்பரி வரவு [6]நான்கு திசையிலு மில்லை யென்றூர். (உக)

மற்றது சொல்ல நல்ல மந்திரி வாய்த்தா னந்தோ
வுற்றநம் [7]பொருளே யெல்லா மழித்தலு மன்றி யோங்குங்
கொற்றமா வீங்கிப் போது வரும்வரு மென்று கூறி
முற்றிய பொய்ங்க டாத்தா நின்றன னெனமு னிந்தான். (உஉ)

[8] நீக்கினைக் கடியார் தம்மை நிரைநிரை வரவ ழைத்துக்
கோக்கட னுகு நீங்கள் கொண்டுபோ யஞ்சிக் கூசா
தூர்க்குள புளிக்க ணைங்கி யுள்ளமா றனைத்தும் வெட்டி
மூர்க்கமந் திரியி வன்றன் முதுகிடைப் போக்கு மென்றான். (உங)

கக. தத்துமா - தாவிச்செல்லும் குதிரை.

உ0. சூதர் - நின்றேத்துவார்; மாகதர் - இருந்தேத்துவார்.

உக. சம்புமா சமாதியாலே - சிவபெருமானது பெரிய சங்கற்பத்தாலே. சம்புமா - நரியாகிய குதிரை.

உங. நீக்கு இல் கோக்கு அடியார் - ஒழிவில்லாமல் நோக்குதலையுடைய ஏவலாளர். மாறு - மலாறு; மிலாறெனவும் வழங்கும்.

(பி - ம்.) [1]'உறுமல்' [2]'பொழினகரின்' [3]'வந்ததென்று' [4]'தலம்புகழ்' [5]'மணியாற்பொங்கும்' [6]'நாலுதிக்கிலும்' [7]'பொருளனைத்தும்' [8]'நீக்குநோக்'

அங்கவர் கொடுபோய் நோவ வடிப்பதற் கணையக் கண்டு
செங்கணீர் வார வாரத் திருமுகம் வேர்ப்ப வேர்ப்ப
வங்கணன் றனெதி னேந்தாங் கடைக்கலப் பத்து முன்னுத்
துங்கவா சகங்க ளோதத் தொடங்கினர் வடக்கு நோக்கி. (உச)

ஏ வ று.

வாதை மறலி தண்டமென மன்னன் சிறைசெய் கூடத்துப்
போது [1]திகழ்பூம் பொழிலணைந்த பூங்[2]கோ கிலத்தைப் பார்த்தருளிக்
கீத மினிய குயிலேயென் றெடுத்த திருவா சகங்கிளர
வோதி முடியா முனமெங்கு முள்ளா னுள்ளத் தருள்சுரந்தான். (உடு)

ஏ வ று.

தெரிதரு காள வோசை யவனியைச் [3]செவிட தாக்கி
மருவிய கடை[4]நாட் பொங்கு மழைமுழக் [5]கதனைக் காட்டப்
பரியெழு குரஞ்சேர் தூளி பகன்மறைத் திரவைக் காட்ட
விருமைசேர் ஈகரி தன்னு ளெய்தின வெவருங் காண. (உசு)

மாவல வீரன் வந்தான் வணங்குவோ ரிணங்கன் வந்தான்
[6] பாவலர் புலவன் வந்தான் பாண்டிநன் னுடன் வந்தான்
காவலர் பெருமான் வந்தான் கடம்பமா வனத்தான் வந்தான்
றேவர்க டேவன் வந்தா னென்றன தெய்வச் சின்னம். (உஎ)

வழுதிகண் டதிசயித்து [7]மயங்கிமால் கொண்டோர் போலத்
தொழுதுகொண் டெவருங் கண்ணீர் துளிப்பவா சகங்க ளோதி
[8] யழுதிடு நாய னுரை யழைத்தரு கணைத்தி ருத்திப்
[9] பொழிதரு கண்ணி னீரைத் துடைத்தனன் பொறுக்கச் சொல்லி.

ஏ வ று.

குழுவொடு திரண்டுஞ் சிதறியும் பரந்துங் கூடியுங் கடன்முது திரைபோற், கழறிகழ் பதத்துக் [10]கறுழ்பொரு செவ்வாய்க் [11]கடையின்வெண் ணுரைநில நினைப்ப, [12]விழுமிய வெண்சா மரைமுக மசைய [13]விண்ணெனைத் தார்மணி யார்ப்ப, முழவொடு [14]சுற்று முற்றையுங் காத்து வந்தது [15]முதுபரிச் சாத்து. (உகூ)

உச. வார வார - ஒழுக ஒழுக.

உசு. குரம் - குளம்பு. இருமை - பெருமை; இரண்டு தன்மையுமாம்.

உஎ. இணங்கன் - நண்பன்; "இணங்கரின்மையால்" (கம்ப. மரா. க00.)

உஅ. நாயனர் - மாணிக்கவாசகர்.

உகூ. கறுழ் - கடிவாளம்; "கறுழ்பொருத செவ்வாய்" (புறநா. கஅ.) தார் - கிண்கிணிமாலை. பரிச்சாத்து - குதிரைத்திரள்.

(பி-ம்.) 1'பொழிபூம்' 2'கோகுலங்கடமைப்' 3'செவிடு' 4'ஞாட்பொக்கு' 5'கென்னக்' 6'பாவலபுலவன்' 7'மலங்கி', 'மல்கி' 8'அழுதுயர்' 9'பொழிமழைக்' 10 'கவுள்பொரு' 11 'கலினவெண்' 12'விழுமுசாமரைகள் முகமொடுமசைய' 13'விண்ணெழத்' 14'சுற்றி' 15'மூரிமாச்'

கே வு.

கடப்பன குதிப்பன பகைத்தவை தனித்தனி களித்தனு மனிப்ப
வொருபா, னடப்பன நிலத்துறு பணப்பணி நெறுக்கென நடிப்பன
நெறிக்க ணொருபா, லடர்ப்பன மிகைத்தக கணப்பரி திறப்பரி யையச்
சமு றுவிப்ப வொருபால், விடக்கடல் [1]கொதித்தென மிகைத்தெவ
ருமூட்கிட மிதிப்பன விதத்தி ணொருபால். (கo)

கே ஙு.

வாளகிரி நூறுபட நூறுவன மாறுபட வானமுறு பேரண்ட
நீள், கோளகையின் மூட்டுவன பட்டமுறு மெட்டியர்கு லக்க[2]ரிகண்
மத்தகமிசைத், தாளதிர வைப்பவம ரேசன்விடு மாவிணெடு தண்டு
வன மண்டியொழியா, நீள்கடலு டுத்தவட மேருவைநெ ருக்கியெழ
நேரிடுவ மற்று மொருபால். (கக)

கே சு.

இசைப்படு மூகிற்குல நிகர்ப்பன நிலத்தினே யிலத்தியி னிறைப்ப
வொருபாற், றிசைப்படு குலக்கிரி களெட்டையு மூழக்குவ செறுத்து
மறுவற்ற வகல்வான், மிசைப்படு முடுக்குல முதிர்ந்திரு சுடர்க்களும்
வெருக்கொள வுகைப்ப வொருபால், வசைப்படு [3]மணத்தொடு பெரு
த்திடு மிலக்கண வகைப்படு வயப்ப ரிகளே. (கஉ)

கே ஙு.

எற்றிகழ் பலவி தஞ்சேர் பொற்றலைக் கீடி லங்க
வுற்றபன் மணியாற் பொங்கு மொப்பில்குப் பாய மின்னக்
கற்றையங் கவரி துற்ற வாயுதந் கையில் வாங்கி
வெற்றிகொள் கொற்ற வீரர் வீதியிற் ருண்ட விட்டார். (கஙு)

கே ஙு.

மன்னியநித் திலமாலை நிலவெ றிப்ப மாணிக்கக் குண்டலங்கள்
வெயில்வி ரிப்பத், துன்னுலகுக் கொருகுதிரை யாளாஞ் சோதி சோ
திவிடு குப்பாய மெய்ப்பான் [4]மின்ன, முன்னேமறைப் பரியைநெறி
யைந்து மோங்க மூடுகிவல மிடம்பரி[5]வத் தனஞ்செய் வித்து,[6]மின்ன

கo. களித்த அணுமனிப்ப. நெறுக்கென: ஒலிக்குறிப்பு. ககனம்·ஆகாயம்.

கக. நூறு - புழுதி. பட்டம் - நெற்றிப்பட்டம். குலக்கிரி - ஐராவத முதலிய எட்டுயானைகள். தண்டுவன - பொருந்துவன.

கஉ. "சோருமத்தி யிலத்தி சொரிந்ததால்" (உசு: கஅ.) குலக்கிரிகள் எட்டு - சைனர்களுடைய மலைகள்; "ஆனை மாமலை யாதி யாய விடுக்க ளிற்பல வல்லல்சேரினர்கள்" (திருஞா. தே.); "எண்பெருங் குன்றத் தெண்ணி யிரவரு மேறினர்கள்" (பெரிய. திருஞா. அருது); "வேதப்பகைவர் தம்முடம்பு வீழ்க்கத் தூங்கும் வெங்கழுவில், கேதப்படுமெண் பெருங் குன்றத் தெல்லா வசோகு மெறிகெனவே" (தக்க. உகசு.)

கங. தலைக்கீடி - தலைச்சாத்து. குப்பாயம் - சட்டை.

கச. மெய்ப்பால் - சரீரத்தின்கண். நெறி ஐந்து - கதியைந்து. பரிவத்

(பி - ம்.) 1 'கொதித்ததென மிக்கெவருமுட்கெட மதிப்பன' 2'ரிகண்' 3 'மனத்துடல்' 4'மன்ன' 5'வத்தஞ்செய்' 6'மின்னுண்மணிப்'

வணி பொலன்கலினக் குசைவ லித்து விளங்குகர வாளங்கை துளங்க வந்தான். (நச)

வே று.

வெல்பரி நிறத்தாற் பீடா லொலியிஞ லுரையான் மிக்க
பல்கடல் கிளர்ந்த வென்னக் கிளர்ந்தன பல்க டற்பாற்
சொல்லரு மளவில் கோடி சூரிய ருதித்தா லென்ன
வெல்லொடி விளங்கி ஞர்க ளியைந்த[1]சாத் தவர்க ளியாரும். (நடு)

விழுமிய குதிரை யீடு காண்பதற் கணைந்த விண்ணோர்
வழுவிலா முனிவர் நேமி மாலயன் மகவான் மற்றுங்
தொழுதிரு மருங்கு மீண்டித் துதிசெய்தார் கற்ப கப்பூஞ்
செழுமலர் பொழிந்து வாழ்த்திச் செயசெயென் றடி[2]சே வித்தார். ()

துங்கவெம் பரிமேற் ரூன்றுஞ் சொக்கனைக் கண்ட வீதி
மங்கையர் சங்கி ழப்பார் வண்டுகில் சரிந்து நிற்பா
ரங்கமேற் செம்பொன் பூப்பா ரறிவுநா ணைகல்வா ரெங்கும்
பொங்கிய [3]பெருஞ்சூல் கொள்வார் புலம்புவார் வீழ்வார் சோர்வார். ()

[4] அடியிணை காணீ ரென்பா ரலர்ந்ததா மரைக்கண் செவ்வி
வடிவினைப் பாரீ ரெல்லாம் வல்லசுர் தரனே யென்பார்
படிமிசைக் காண்டற் கென்ன பாக்கியஞ் செய்தோ மென்பார்
கடிவிசைப் புரவி நம்மை யொட்டுமோ காண்டற் கென்பார். (நஅ)

அன்னவர் புலம்பக் கண்ட வாடல்சேர் பாட லன்பர்
மின்னனூர் தம்மை வேத மொழியரென் றெடுத்து மெல்ல
வின்னிய லன்னே யென்னு மென்றிசை படமு டித்துக்
கன்னல்சே ரன்னைப் பத்தாங் கோதினூர் களியிற் கூடி. (நக)

இக்நெறி பரவ முன்போக் தெண்ணில்பல் லியங்க றங்கப்
பொன்மணிக் குடைநி ழற்றப் பொலன்கொள்சா மரையி ரட்ட
மன்னும்வெண் டோரை வீச வந்துவை யாளி வீதித்
துன்னிய கணங்க ளோடுந் துளங்கிஞன் வளங்கொ ணுதன். (சo)

தனம் - சுற்றுதல்; "இடம்வலம் பரிவத்திப்ப" என்பர் பின்னும்; நுசு. கர வாளம் - கைக்கத்தி.

நடு. சாத்தவர்கள்-குதிரைவாணிகர்கள்; "குதிரையைக் கொண்டு குடகா டதன்மிசைச், சதிர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்" (திருவா. சீர்த்தி.

நசு. குதிரை ஈடு-குதிரைகளைக்கொடுத்தல். சயசயவென்று. [உ-அ.)

நஎ. சங்கு - வளையல். அறிவும் நாணும். காட்சியாற் சூல்கொள்ளுதலை, "விரும்புசூல் கொள்வார் வீழ்வார்" (நுசு: உசு) என்பதனாலும், "பருப்பதக் கொடி புரைதவ சத்திகள் பரமன், திருப்ப தத்திடை வணங்கினின் றவனிடைச் சிந்தை, விருப்பம் வைத்தலு முனிவர்த மகளிர்போல் விரைவிற், கருப்ப முற் றனர்" (கந்த. தேவர். கூ) என்பதனாலு முணர்க.

நஅ. காண்டற்கு ஒட்டுமோ. 'என்னபாக்கியஞ் செய்தோம்': உ: சக.

நக. அன்பர் - திருவாதவூரர். சo. தோரை - பீலிவிசிறி.

(பி-ம்.) [1]'சாத்துவர்கள்' [2]'சேவிப்ப' [3]'பொருமல்' [4]'அடியினைக்காணீர்'

ஆங்குறக் கண்ட வேந்த னதிசய மூற்றி யாரு
மோங்குமா யுதமும் பூணும் பருவமு முருவு மொத்துத்
தாங்குறை வற்றி ருந்தார் தலைவர்யா ரென்னக் [1]கேட்பப்
பாங்கணை வாத வூரர் தோன்றுவர் பரியி லென்றூர். (சக)

அவ்வயி னெங்குந் தானே யாதார மாயி ருப்பத்
தவ்வுமோர் கோட கத்தை யாதார மாக்கிச் சால
வெவ்விய மூன்று பாச மறுக்குமென் கரத்து மிக்க
செவ்விய விரண்டு பாசம் பிடித்தனன் றிறமை கூர. (சஉ)

கருதிடி னெருகா லத்து மசைந்திடாக் கமலத் தாளைப்
பரிவொடுங் காண யாரும் பன்முறை யுறவ சைத்து
மருமல ரயனுன் மாலான் மறையினு லளக்க வொண்ணுத்
தருமமீ திருவத் [2]தாணு தாணுவே யெனவி ருந்தான். (சங)

கள்ளநீங் கிடவ டிக்குங் கசையொலி யசனி மான
வுள்ளபே ரண்டம் விள்ள வுயர்மிடற் றோசை காட்ட
வெள்ளிமால் வரைமேற் றோன்று மேருமால் வரை[3]யே யென்னத்
துள்ளுவெண் புரவி மீது தோன்றினன் றரணி நாதன். (சச)

புண்ணியஞ் செய்த மேனிப் பூழியா வாழி வாழி
கண்ணிமை யாது [4]சற்றுக் கண்டிடி கண்டி டென்று
பண்ணியல் குதிரை வீரர் மெச்சுசே வகன்ப ரிந்து
மண்மிசை [5]யேறி ஞனவ் வாசியை வாசி யாக. (சரு)

வே று.

கூருந் தொடையும் பெயர்ச்சியுஞ் செல்லுங் குறிப்பொடு குசை [6] கசைக் குரலும், யாருங் காணச் சீருந் தொழிலு மிதம்பட விதம்பல காட்டிச், சேரும் பாடு [7]நேரும் விலங்குந் திறல்வல வோட்டிட வோட்டுஞ், சாரும் மாக வாளியு [8]மற்றுஞ் சாற்றரு மார்க்கங்க டோன்ற.

சஉ. தவ்வும் - தாவும்; "தவ்வுபுனல்" என்பர்; க 0: கூஉ.

சங. தாணு - சிவபெருமான், கட்டை.

சஉ-கூ. இந்த இரண்டு செய்யுட்களின்கருத்தை, "அண்டமெலா மாதார மாகத் தாங்கு மானந்தத் தனிச்சோதி யண்டத் தாங்குஞ், சண்டமதைப் பரிதன க்கா தார மாகித் தரிக்கவொரு காலத்து மசைவி லாத, புண்டரிகத் தாளசையப் பாச நீக்கும் புனைகரத்தாற் பரிபூண்ட பாசம் பற்றிக், கொண்டாச னெதிர் போந்து மன்னு வெங்கள் குதிரையேற் றஞ்சிறிது காண்டி யென்றூர்" (திரு விளை. நரிபரி. எசு) என்பது தழுவிவந்திருத்தல் காண்க.

சச. கசை-குதிரையையோட்டுங்கருவி. சரு. வாசி-குதிரை, விசேடம்.

சசு. வலவோட்டு - வலமாக ஓட்டுதல்.

(பி - ம்.) 1'கேட்டபாங்கணைமுனிவர் முன்னேன் னாம்பரியுகைப்பனென் றூர்' 2'தானுன்' 3 'யொப்பென்னத்தள்ளி' 4 'நம்மைக்' 5 'ஏறுவானகு' 6 'கசை குரலும்' 7'தேரும்விலக்கும்' 8'மற்றுச்'

கவ று.

1விக்கிதம் வற்கி தம்மூப கண்ட மேவரு 2மூபசவஞ் சவமாஞ்
3சிக்கிலா நடைவெம் புலவுதூ வாளி சிறுகின மெய்ந்நிறை கடிப்புப்
புக்குள பஞ்ச தாரையோ டத்த 4புளகித மத்தமண் டலம்பே
ருக்கிர பெகிர மண்டலங் கோமூத் திரியெனு மொன்பதும் விளங்க.

கவ று.

மின்பரிவு கூரவெழில் 5வெவ்விடைந டாத்தித்
தென்புலமி லங்கவரு தேவர்தொழு தேவ
னன்பரிரு பாலுமலர் சிந்திநனி யார்ப்ப
வின்பமுறு வெம்புரவி யேறினனு வந்தே. (சஅ)

கவ று.

அரனரி யயனச் சுறவர சுழலு
யிரமுக 6சுபதக் ரமமுறு நெறியே
சரிகம பதனித் தகவனு மனியா
வருமறை யயமுய்த் தனன்வய முறவே. (சகூ)

கவ று.

மனத்துறு செருக்கொடு மருத்தைநிகர் வெற்றிச்
சினப்பரி பொருத்தமமர் செண்டுவெளி தன்னுட்
டனத்தன தனத்தன 7தனத்தன வெனத்தன்
வினைப்பட நெறிப்படி 8மிதித்தது நடித்தே. (நo)

முந்திய செழுங்கவரி நின்றசைய மூற்றும்
பந்தமுறு கஞ்சமணி கொஞ்சவெழு பண்ணிற்
9சந்துறு சதங்கைகள் சலன்சல னெனத்தன்
சுந்தர 10விசைப்படி நடித்ததது கைத்தே. (நக)

கவ று.

தருமப் பரதச் சவுதத் தடைவே
தெரியத் தனதத் தனதத் தெனவே
11புரையற் றுருகிப் புவிமெச் சிடவே
பருமப் பரிசற் பதம்வைத் ததுவே. (நஉ)

சஅ. மின் - தடாதகைப்பிராட்டியார்.

சகூ. சுபதக்ரமம் - சுபத்தைக் கொடுக்கிற நடை. அனுமனியா - ஒலித்து. மறை அயம் - வேதமாகிய குதிரை.

நo. மருத்தை - காற்றை. செண்டுவெளி - குதிரையின் வையாளிவீதி.

நக. கஞ்சம் - வெண்கலம்.

நஉ. பரதச்சவுதம் - பரதநூல். பருமம் - குதிரை முதுகிற்கவிசு.

(பி - ம்.) 1 'விக்கிரவக்கிரம் விளங்குபதண்டமேவருமுபசுமஞ்சலமாஞ் 2 'உபவசம்' 3 'சிக்கினடை' 4 'புளகயம்' 5 'வெல்லிடை' 6 'சுபதக்கிரமுறு' 7 'வெனத்தனித் தகைத்தே வினைப்படி' 8 'மீதித்தடி' 9 'சந்தறு' 10 'னிசைப்படி' 11'புரைவுற்று'

மெத்துக் தகவும் விதமும் படவே
[1]தித்தொக் தொக்தொக் தித்தீ யென்றென்
ரெத்துக் தாளத் தொக்கத் தத்தித்
தத்தும் பரிதன் ரூள்வைத் ததுவே. (நிக)

வே று.

பதிந்துமுன் காட்ட வெய்யோன் படியுமால் வரையிற் பாயா
வுதைந்துபின் காட்ட வெய்யோ னுதிக்குமால் வரையிற் ரூவா
விதம்பட விடத்துக் காட்ட யமன்றிசைக் [2]கிரியின் மூட்டா
விதம்பட வலத்துக் காட்ட மேருவைக் கடந்த தாங்கே. (நிச)

குறைவின்[3]மண் டலம்வ ளைப்பக் கொள்ளிகொள் வட்ட [4]மன்றி
மறுவற விளங்கிற் ரூங்கு வளைந்ததோர் குதிரை யென்னத்
துறைநிறை வீதிகாட்டத் தொடுகணைச் செலவே யன்றி
நிறைவொடு பிறங்கிற் ரூங்கு நீண்டதோர் குதிரை யென்ன. (நிரு)

இடம்வலம் பரி[5]வத் திப்ப விரண்டியர் குதிரை யென்னப்
படிமிசை விளங்கிற் றந்தப் பார்த்திவ னதிச யிப்ப
வடிபடும் வேத மென்ன வருந்தவஞ் செய்த தென்றே
யிடபமால் குதிரை யாவே மன்னன்றி யா னெனப்ப ணிந்தான். (நிசு)

மண்ணகத் தெவருங் காண வாதவூ ரர்க்கா வந்து
கண்ணுதற் கரிய வீரர் நாறபெரும் திசையு மூட்டப்
பண்ணுறத் [6]தூண்டு நீதிப் பரித்துகட் கிமையா விண்ணோர்
கண்ணிமைத் தார்விண் [7]மண்ணு னதுகட நிடரா யிற்றே. (நிள)

ஏறலு மற்று மூள்ள விருங்கண [8]நாத ரெல்லாங்
கூறரு மல்ல மார்க்க மயின்மார்க்கங் குரக்கு மார்க்கம்
[9] வீறுடை மூயலின் மார்க்கங் கணைமார்க்கம் வியரால் வீதி
சேறுற வுகைத்தார் மற்றுங் கதிகளாற் சிறக்க வாங்கு. (நிஎ)

இடவிய கதியின் வாசி யொருவர்போ லேறற் கிந்தப்
படிமிசைக் [10]கண்டே மில்லை தலைவர்யா ரென்னப் பல்கா
லடியிணை பரவி வந்த வருங்கண நாதர் யார்க்குங்
கடவுள ரிவர்கா ணென்று விரல்கொடு காட்டி ஞரால். (நிகூ)

நிச. வெய்யோன் படியும் மால்வரை - அத்தமயகிரி.

நிரு. மண்டலம் - வட்டம். வீதி - தேரோடல்.

நிசு. இடபமால்-இடபவடிவங்கொண்ட திருமால். என்று-எக்காலத்தி.

நிள. கடல் திடராயிற்று.

நிகூ. பல்கால் தலைவர் யாரென்ன.

(பி - ம்.) 1'தத்தொக்' 2'கிரியை' 3'மண்டிலம்விளைப்ப' 4'மின்றி' 5'வர்த்திப்ப' 6'தாண்டும்' 7'மண்ணுய்க்கடற்டலாயிற்றன்றே'8'நாதர்முற்றுங்' 9'வீறுள மூயலின்மார்க்கம் வெறிகணைமார்க்கம்வீதி' 10'கண்டதில்லை'

ஆங்க1வற் காணு முன்ன ரவசமா யெழுந்த தங்கள்
தேங்கமழ் முடியிற் ரூமே சென்றன கரங்க டென்னன்
பாங்கல வெழுந்தி ருத்தல் பார்த்திவற் கென்றி ருந்தா
னீங்கரு 2மனிதர் மூற்று நின்றிலர் தொழுது வீழ்ந்தார். (சுo)

மிக்கமந் திரிகா ளிந்த வெம்பரிச் செட்டி நந்தஞ்
சொக்கனே போ3லெ னக்குத் தோன்றிடா நின்ரூன் வந்த
கொக்கினைப் பாரீர் காலந் தாழ்த்ததா யிலுங்கொ ணர்ந்த
மிக்கமந் திரியைப் பாரீ ரென்றுபன் முறைவி யந்தான். (சுக)

கொற்றவன் றிருமு னின்று கூறுவான் குதிரைச் செட்டி
யுற்றநின் னமைச்சன் றந்த வுயர்பெருங் கனக மூற்றும்
கற்கிக ளிடுவ தாக நம்முளோர் கைக்கொண் டார்கள்
வெற்றிகொண் மன்னு கொற்ற வெம்பரி நீதி கேண்மோ. (சுஉ)

வேறு.

புரிதீபாந் தரத்திமவான் புறத்தி னின்று 4போந்துபெருந் துறை
யிறங்கி வந்த வின்றிங், கருமறையிற் கடலமுதில் விதிகண் ணீரி லா
ரழலி லுலாகத்தி லண்டந் தன்னி, லுரியதிசை யிருநான்கு தேவர்
தம்மி லுயர்ந்தவெழு பிறப்பினவா யுரைசேர் மண்வாழ், சுரரசர்
வணிகர்சூத் திரர்நாற் சாதித் தோற்றத்த காணிந்தத் துரக மொத்தம்.

வேறு.

மருவுநாய் கழுதை 5கோழி வாயதம் வெருகு கூகை
நரிபசா சேனம் பொல்லா நல்லன மயூரங் கீரி
பொருவிடை மடங்க லன்ன மகரம்வா னரம்பு ழைக்கைக்
கரிபுலி முனிவர் வா ரூனர் கடும்பரிச் சுபாவ மன்றே. (சுச)

சுக. கொக்கு - குதிரை.

சுஉ. குதிரைச்செட்டி கூறுவான். கற்கிகள் - குதிரைகள்.

சுங. பெருந்துறை - பெரியகடற்றுறை, ஒரு திருப்பதி. உலாகம் - கோட்டான். குதிரை, வேதமுதலிய தழிடத்திற் பிறந்தன என்பதை, "வெடி வாற் பைங்கட் குறுகரி யினத்தினை, யேழிடத் தோன்றி யினனூற் கியைத்து, வீதி போகிய வாலுளைப் புரவி, யாகிய விஞ்சைப் பிறைமுடி யந்தணன்" (கல். அ) எனவும், "மிக்க செழுமறை நாவிற் கமலநாதன் விழிப்புனலில் விண்ணோர்க ளெண்மர் தம்பான், மைக்கடன்மே லமிர்தத்தி லங்கிமீதின் மல்கு கருப் பையிலுலக வண்டந் தன்னிற், றெரிக்கவெழு பேதமெனு மிவற்றிற் ரோன்றுந் தொன்மையவா யிரண்டு துணைத்தா ணெற்றி, யொக்கவெளுக் கும்பரிக ளுளவாய் வானி லொண் புனலிற் செல்லுகெறி யுளவுமாகி" (திருவாத. குதிரை. சo) எனவும் வருவனவற்றாலுணர்க. மொத்தம் - தொகுதி; "பரிக்குமிப் பரிமா மொத்தம்" என்பர் பின்னும்; எஉ.

சுச. வாயதம்=வாயசம் - காக்கை. வெருகு - பூனை. ஏனம் - பன்றி. நாய் முதலியவற்றின் இயல்பையுடைய குதிரைகள் பொல்லா; மயூரமுதலிய

(பி - ம்.) 1 'அவர்க்காண்' 2 'மனிதரெல்லா' 3 'எமக்குத்தோன்றிட' 4 'பொருத்து' 5 'ஓரி'

வே று.

உத்தம விரலிற் காயமுஞ் சுழியு மொழிகளு நடைகளுந் துளங்
குஞ், சித்திர நிறமு நாற்றமுங் குரலுங் [1]திறப்படு மனமுமிவ் வெட்
டுஞ், சுத்தமா வுடைய விந்திரன் றனுப்போற் றுளங்கவா டரவுபோ
னலத்தான், [2]மெத்திநேர் வளைந்து திரண்டுநீண் டுயர்ந்து விளங்கிய
கழுத்தன காண்ண. (சுடு)

வே று.

மல்லிகை கோங்கு காயா மாதுளை மலர்பூங் கிள்ளை
நல்லன மற்று மிக்க நவமணி நிறத்த வாகி
மெல்லிய சிவந்த நாவும் வெளுத்துமெய்த் தொத்த பத்திப்
பல்லுமாற் றக்கு யுத்த கன்னமும் பழுதி லாரு. (சுசு)

வே று.

[3]இறுகிக் குவிந்து குழிந்ததகர்க் குரம்போற் குரமு மிளநவ்வி
மறியிற் கண்ணு [4]மகன்றுதணி முதுகு நீண்ட வாலதியுங்
குறுகிச் சிவந்த மேட்டிடரும் குறுகா முகமும் வியனுதலுஞ்
சிறுகித் திரண்ட வண்டமுமெய் யழகுஞ் [5]செழிய காணுமே. (சுள)

வே று.

மேலெழின் முகமுஞ் தூய விதழுடை நான்கு தாளும்
பாலதின் வெளுத்த சுத்தப் பஞ்சகல் யாணன் பாராய்
வாலதி தலைநெஞ் சொக்க மற்றவற் றெடும் வெளுத்த
வாலிய [6]மணஞ்சி றந்த வட்டமங் கலங்கள் பாராய். (சுஅ)

உயர்கன வட்டம் போரா [7]னுரனுளான் கொங்கான் கங்கான்
மயில்வரி நீலான் பொல்லான் மகிழ்விதை [8]மௌவான் சேயா
னயனவஞ் சனம்பொன் மாரி பாடல நளினி பச்சை
பயமிலா மரீசி கோரம் பட்ட[9]வர்த் தனங்கள் பாரே. (சுக)

கஞ்சுகம் விலங்கு கொங்கை கவைக்குளம் புலக்கை கௌவ
மஞ்சுதா ளிரட்டை நாவோ ரண்டம்வேற் றண்டங் கொள்ளி
நஞ்சாத் தொழுநோய் காள முகந்திரி கன்னங் கொம்பு
மிஞ்சிய மற்றுங் குற்ற மொன்றிலை விளம்புங் காலே. (எ0)

வத்தின் இயல்பையுடைய குதிரைகள் நல்லன; திருவாதவூரர்புராணம், குதிரையிட்ட சருக்கம், நசு, நஎ - ஆம்பாடல்களைப் பார்க்க.

சுசு. ஷெ புராணம், ஷெ சருக்கம், நஎ - ஆம்பாடலைப் பார்க்க.

சுள. வாலதி - வால். மேட்டிடரம் - ஆண்குறி. ஷெ புராணம், ஷெ சருக்கம், நக - ஆம்பாடலைப் பார்க்க.

சுக. ஷெ புராணம், ஷெ சருக்கம், சக - ஆம்பாடலைப் பார்க்க.

எ0. ஷெ புராணம், ஷெ சருக்கம், நச, நடு-ஆம்பாடல்களைப் பார்க்க.

(பி - ம்.) 1'திடம்படுகலமும்' 2'மெத்துதோல்' 3'இறுகிச்சிவந்தகரக்குரம் போலிருகாற்குரமும்' 4'அகன்றதனி' 5 'செய்ய' 6 'மனஞ்' 7'னுரானளான்' 8 'மௌவல்லையான்' 9'வத்தனங்கள்'

1 மன்னதீ மனம்வி திர்த்தல் 2பிசகல்கான் மடித்தல் வீழ்த்த
3 லின்னெறி விலங்க லச்சப் படுதன்4மே லேறப் பாய்தள்
5 முன்னெழல் கடித்தல் வீதி நிற்ற6ருண் முகஞ்சா டித்தல்
பின்னெழ லிருத்தன் 7மற்றுங் தீங்கிலே பேசற் கின்றே. (எக)

கருதின்8வண் கதிவெங் கால கந்துக நிலைமை யோங்க
மருவிய குலமா மங்கை முகமுக மடங்கல் வாவல்
பொருவரு நடிகள் வைப்பிற் புயலொலி யொலியே மிக்க
பரிவுடை மன்ன நின்னைப் பரிக்குமிப் பரிமா மொத்தம். (எஉ)

மூருக்கும்வெம் பட்ட யானை முகத்தலாற் முள்கள் வையா
9 கருத்தினி லுலவு மாக்கள் கருத்தனைத் தையுங்க டக்கு
மூருத்தெழ வொலிப்பின் வானத் தும்பர்கோன் பரியு மஞ்சு
மருத்தினுங் கடிய மாக்கள் வாய்த்தன சம்பு வாணை. (எங)

வேறு.

இப்பரி மாவொரி லக்கம வற்றினு ளிக்குழு வோரொருமா
10மூப்பஃ தாயிர மோர்பழு தின்றிமு தற்றர 11மித்தரமும்
வைப்பதி னூறுகு றைந்தன பின்னிவை யாயிர மற்றிலையு
மப்படி பெற்றவி லப்பொனி லக்கம னேத்துமு ணர்ந்துகொளே. ()

வேறு.

ஆரிருள் விடப்பே ரண்ட மாயிரங் கதிர்வி ரிக்குஞ்
சூரிய ஞளுஞ் சூழ்த லுரிதமார் பரியா லேகாண்
கூரும்வா ரிதிகொ ளாமற் குவலயங் கிடத்தல் 12கௌவை
வாரிதி குடிக்குந் தீவாய் வடவையம் பரியா லேகாண்.* (எசு)

13திண்டிறன் மன்னர் சென்று செற்றவர் மண்ட லங்கள்
14கொண்டுதம் மன்ன ராளக் கொடுப்பதுங் குதிரை யேகாண்
மண்டுபோ ரினில்வென் னிட்ட மன்னரைப் படக்கொ டாமற்
கொண்டுபோய் விரைவி லுய்யக் கொள்வதுங் குதிரை யேகாண். ()

எக. மற்றும் தீங்கு இல்ல - வேறும் உள்ளனவாகிய தீங்குகள் இல்லை.

எஉ. கதிவெங்கால - நடையை விரும்புகின்ற கால்களையுடையன. கந்துகம் - பந்து.

எங. 'சம்புவாணை' என்பது சிலேடை.

எச. இதில் குதிரைகளின் வகைகள் கூறப்பெற்றுள்ளன.

எசு-கூ. இவற்றுற் குதிரையின் பெருமைகள் கூறப்பெற்றுள்ளன.

* இதுமுதல் ஐந்துபாடல்கள் சில ஏட்டுப்பிரதிகளிற் காணப்படவில்லை.

(பி - ம்.) 1'மன்னதி' 2 'மசகல்' 3 'இன்னெறியிலங்கல்' 4 'மேலெற்றப்' 5'முன்னெழுக' 6'காழ்' 7'மற்றுத்' 8'வன்கதி' 9'கருத்தெனில்'10'மூப்பதொராயிரம்' 11'மானதகாண்' 12'கேணல்' 13'திண்பகை' 14'கொண்டுளே'

அரும்பெருஞ் செந்தீ யில்லா வந்தணர் வாழ்வு போலும்
விரும்புதா ரகைக ளில்லா விளக்கமி லகல்வான் போலுஞ்
சுரும்புசூழ் மலரில் லாத சோலையுந் தடமும் போலு
நெருங்கிய தூக மில்லா நீள்பெருஞ் சேனை மன்னே. (எஎ)

[1] பரியகை யானை திண்டேர் பதாதிக ளனும்ப டைக்குப்
புரவியில் லாத போது பொலிவுடைத் தன்று [2]மண்ணும்
வரிசையு மற்று முற்றுந் தருவது மன்ன வர்க்குத்
தூரகமே யல்லா லுண்டோ தென்னவ சொல்லுங் காலே. (எஅ)

வரும்பரி தாழ்த்த வாகேள் வளர்சரா சரங்க ளெல்லாம்
புரிந்திளைப் பாறுந் தில்லைப் பொதுவினு [3]ளாட லாலே
யரும்புக ழாயி வற்றுக் கச்சுவ மென்னு நாமந்
திருந்தவோர் பொழுது நில்லா தெனுமது கொண்டு தேறே. (எகூ)

ஆதலா லறிஞர் மூன்னு [4]வறவுறப் பேசிக் கொண்டு
நீதியிற் கைக்கொ ளின்று நின்னது புரவி யாக
வீதியிற் கயிறு மாறி விட்டபி னன்மை [5]தின்மை
யோதுவ நமது பார மல்லமே லுன்ன வென்றான். (அ0)

அத்திறஞ் சொல்ல [6]நல்ல வறிவனீ யறைந்த தொக்கு
மூத்தம நன்மை [7]தின்மை யுன்கைவிட் டென்கை புக்கா
லெத்தையு மறிதல் வேண்டா [8]வென்னவே மூற்று மென்னச்
சித்திர மாக்க டம்மைத் தென்னவன் கைக்கொ டுத்தான். (அக)

ஏத்திமா வறிஞர் மூன்னு வினியபே ரன்பிற் கூடிச்
சேர்த்துநம் மிடத்துண் டான செழுங்கன கங்கண் முற்றும்
பார்த்திடி னின்றி வற்றேர் பரிக்குநேர் விலைபோ தாவால்
வாய்த்தன குதிரை யென்று மன்னவன் வாங்கிக் கொண்டான். ()

அய்யமில் லாமன் மூன்னின் முவணி மூல நன்னுட்
டெய்யபே ருலகுக் கெல்லாந் தூளங்கி[9]ரா வுத்த ராயன்
மெய்யைமெய் யுடைய [10]மெய்யன் மெய்யடி யானை வேண்டிப்
பொய்யிலா மன்னன் காணப் பொய்ப்பரி மாற்றஞ் செய்தான். (அசு)

எகூ. ஆடலாலேதான் தாமதமாயிற்று. 'ஓர் பொழுதும் நில்லாது' என்பது, சிலேடை. அச்சுவம் - வியாபிப்பது.

அ0. தின்மை - தீமை; ஓதுவனவாகிய நன்மைதின்மை; "அடியவர் நன்மை தின்மையறிபவன்" என்பர்; கூடு: கக; "தின்மையும் பாவமுஞ் சிதைத்து தேயுமே" (கம்ப. பயன். உ.)

அக. 'சித்திரமா' என்பது சிலேடை.

அசு. இராவுத்தராயன் - குதிரைச்சேவகன்; இராவுத்தனென்பது, இராஜபுத்திரனென்னும் வடமொழிச் சிதைவென்பர்; "இனிமைசூர்ந் திராவுத்தற்கு"

(பி - ம்.) 1 'பரவரும்' 2 'மன்னும்' 3 'ஆதலாலே' 4 'அழகுறப்' 5 'தீமை யோதுவர்' 6 'நல்லறிவுநீ' 7 'தீமை' 8 'என்னதுமுற்றுமென்னச்' 9 'ராகுத்த' 10 'மன்னன்'

மின்னிய வுலகு தன்னில் வித்தின்றி [1]ஈறு செய்வோ
னன்னெறி யில்லாப் பொல்லா நரகரைத் தேவு செய்வோன்
மன்னிய நரிக டம்மை மறுகெலாம் [2]வாவி யேறித்
தென்னன்முன் குதிரை யாகச் [3]செய்புதோன் ரூமல் விட்டான். ()

வந்துறக் கயிறு மாறி விட்டபின் வரிசை கூரப்
பந்தியுட் கட்டுமென்று பரித்துறை யாளர் கையின்
மூந்துற [4]வடைப்பப் போற்றி யவரவர் மூதுபே ரன்பிற்
றந்தமில் வகையிற் [5]சேர்ந்து தனித்தனி கைக்கொண் டாரால். (அநி)

இந்நெறி மன்னர் மன்ன னினிமை[6]கூர்ந் திராவுத் தற்கு
ணன்மைகூர் வரிசைத் தூசு நல்குவ மென்று நல்கக்
கொன்னுறு காஞ்சேர் செண்டி லேற்று[7]மூற் கொம்பிற் சேர்த்துத்
தன்னடி யாரை வேண்டிச் சடைமிசைப் [8]பூனேந்து கொண்டான். ()

[9] பாடன்மா முனிவ ரேத்தப் பாண்டியன் றிருமுன் னெய்தி
நீடுமா றேடுஞ் சொக்க னீள்பரி யுகைத்துக் காட்டிச்
சேடன்மா நிலத்தா ரன்றிச் சேணுளா ரெல்லாங் காணச்
சூடலாற் றூசு சொக்கன் றூசென [10]வழங்கிற் றன்றே. (அஎ)

ஆங்கது செண்டி லேற்பச் சீறிய வரசற் கண்டு
[11]தீங்ககல் வாத வூரர் தேசவா சார மென்ன
வோங்கிய தியாக வேந்த ரெனக்குமென் றெவர்க்குந் தூசு
தூங்ககில் லாம னல்க [12]வாங்கிமுன் சூடி னூரால். (அஅ)

முன்னுறச் சென்று பன்றி நேடிதாண் முளரி சூடிப்
பின்னியன் முனிவ ரங்கண் பிடித்தபத் தெடுத்துப் பாட
நின்னுடை நினைவு வந்து முடித்தன நேச மிக்க
நன்முனி யடிவிடென்று நாயக னருளிச் செய்தான். (அகூ)

நற்றிரு மேனிக் கீடு நவையற விட்டுக் கையிற்
[13]பொற்றகை வாளம் வாங்கிப் புரவிமேற் கொண்டு காணச்
சற்றடி வடிம்ப சைத்துச் சடைமுடி யிலங்குந் தூசு
மற்றுமோர் கங்கை யென்ன வருபவ னுருவம் போற்றி. (கூ0)

என்பர் பின்னும்; அசு; "கலாபத் தனிமயிலேறு மிராவுத்தனே" என்பது கந்த லங்காரம், ரு0.

அச. காறு - காற்று. இச்செய்யுள், "நரியைக் குதிரைசெய் வாலு நரகரைத் தேவுசெய் வானும், விரதங்கொண் டாடவல் லானும் விச்சின்றி காறுசெய் வானும்" (தி.நநா. தே. திருவாரூர்) என்பதன் கருத்தைத் தழுவிவந்துள்ளது.

அசு. வரிசைத்தூசு-சம்மானமாகக்கொடுத்த ஆடை. செண்டு-ஓராயுதம்; அஅ. தூங்கஇல்லாமல் - தாமதியாமல். [கொம்பு - அதன்முன் பாகம்.

கூ0. திருமேனிக்கீடு - கவசம். கைவாளம் - கைக்கத்தி; "கரவாளம்" என்றார் முன்னும்; ஙச. அடிவடிம்பு - அடியின் விளிம்பு.

(பி - ம்.) 1'ஞாறு' 2'வாளி' 3'செம்பு' 4'அடைவிற்' 5'சேர்த்து' 6'கூரிரா குத்தற்கு' 7'மூற்காம்பிற்கோத்துத்' 8'அணிந்து' 9'பாடலமுனிவ' 10'தளங்கிற்' 11'தீங்கிலா' 12'வாங்குமுன்' 13'பொற்கரவாளம்'

பல்வித வலங்கா ரஞ்சேர் பாய்பரி யுகைக்கு மிக்க
செல்வமார் சிறப்பி ஞசை யுடையஞ மீசன் றென்ன
ஞெல்லியி னீர்த்த தூசு சூடிஞ ஞம்பர் காண
மல்லல்கூர் கமலக் கையிற் கபாலமார் வாங்கு வாரே. (கூக)

கண்டவ ரமைச்ச ஞரைக் கடவுளே வியந்து செங்கை
மூண்டகங் குவிய நெஞ்ச மூண்டக மலரக் கண்க
ணுண்டுளி சிந்த விந்த நுவலருங் குதிரையீடு
கண்டன மென்ரு னந்தக் [1]கடலிடைத் திளைத்தாரன்றே. (கூஉ)

வாழ்ந்துபொற் பட்ட முன்ஞ வரிசைகள் வாதவூரர்க்
கீய்ந்துகல் விடையிற் போக்கி யெழுந்ததன் னுழைக்கண் வேந்த
ஞர்ந்தபல் லியங்க ளாலே யவனியை நிறைத்துச் சார்ந்தான்
ரூழ்ந்துசெவ் வந்தி மாலை தபனஞர் சாத்தக் கண்டி. (கூங)

குணந்தரு கணங்களோடு குறுநகை செய்து தேவர்
பணிந்துபின் வரமுன் போன பத்தர்கள் பத்தன் ரூனும்
பிணைந்தபல் செய்தி யெல்லாம் பிறங்குதன் பெரிய கோயி
லணைந்துபே ரங்க யற்க [2]ணுமைமயிற் கருளிச் செய்தான். (கூச)

சயந்தரும் பெருமை மிக்க சம்புவின் குதிரை யீடு
வியந்துகற் பவர்ப ரிந்து கேட்பவ ரிடத்து மெல்ல
மூயங்குநல் குரவு நீங்க மூத்தவ ணீங்க நீங்கா
நயந்தரு மிளைய [4]மங்கை நண்ணுதற் கைய மின்றே. (கூடு)

வே று.

அரிய நாயக ஞர்விளை யாடிய
புரவி யீடு புகன்றனை மன்னவர்
பரவு மன்னவன் பந்தியிற் [5]கட்டிய
பெரிய கோடகம் பின்னரென் செய்தவால். (கூசு)

ஆகத்திருவிருத்தம்-- சுகூடு.

கூக. ஆசையுடையனென்பது சிலேடை; விருப்பமுடையவன், திக்காகிய ஆடையையுடையவன்.

கூங. உழை - வீடு. செல்வர்திமாலையென்பது சிலேடை.

கூச. பத்தர்கள் பத்தன் - சிவபெருமான்; ஈஈ: உசு; ஈடு: உஅ; ஈசு: உஅ; ஈஅ: ஈ; சo: எ; சக: எ; சசு: உள; சள: அ.

(பி - ம்.) [1]'கடலிடையலைத்தாரன்றே' [2]'உமையவட்கு' [3]'நல்குரவுநல்கு மூத்தவணீங்கி', 'நல்குரவுநீங்கி' [4]'நங்கைகணுகுக்கு' [5]'கூடிய'

உகூ.—குதிரை நரியான திருவிளையாடல்.

இருமைதரு [1]மதுரைநகர் நின்றமாய வினப்புரவி மூகமூகம் பார்த் தென்னே நென்னல், வெருவவடி யுண்டதல்லாற் கழுத்துங் காலும் வெங்கயிற்றூற் கட்டிண்டே மேலு நிற்பிற், குருதிபடப் புண் படுவே முணவுமில்லே கொள்ளிடுவர் புல்லிடுவர் பாவம் பாவ, நரருமி னித் [2]தொத்துவர்நாம் விடியு முன்னர் நம்மூருவங் கொடுநழுவக் கடவோ மென்றே. (க)

வேறு.

[3]மிடற்றிலுறு கயிறெயிற்றூற் கங்குற் போதே மென்றறுத்து மதியாது நரிக ளாகிக், கடைத்தெருவும் வாயில்களு மடமு மன்றுங் கடிமனே யு மங்கணமு நுழைந்து மற்றெவ், விடத்திலும்புக் கொன் றுக்கொல்லா றுறுமிச் சள்ளிட் டிரும்பசியா லிகல்செய்து நகரி தன் னுட், புடைத்தெவரு மெழுந்திருப்பச் சுழல வோடிப் போகாம லோலையிட்டுப் புகுந்த வன்றே. (உ)

வேறு.

மண்டு மமரர்கள் கண்டு நகையுற மாறன் வெருவுற நீளவே, தொண்டை விடுவன வண்டம் வெடிபட நண்டை நினைவன துன்றி யே, பண்டை நெறியினின் [4]மண்டை யகழ்வன பந்தி மனமறு கெங் கணுங், கண்ட வவரவ ரஞ்ச வுறுமுவ கள்ள முறுமன முள்ளவே.()

வேறு.

மற்றது கண்டு நின்ற வகைத்துறை யாளர் முற்று
மூற்றிய பயத்தோ டென்னுய் முடியுமீ தெனக்க லங்கிக்
கொற்றவன் றிருமுன் சென்று கூறுவார் புலரு முன்னம்
பற்றல ரேறே நந்தம் பற்றியுள் விசேடங் கேண்மோ. (ச)

இன்னவென் றறிந்தோ மில்லை யிரவிடை யாணர் மாக்க
ணன்னரி போற்சி றுத்து [5]நம்மூளோர்க் காணு முன்ன

க. முகமூகம் பார்த்து - ஒன்றன் முகத்தை ஒன்று பார்த்து (சூக:உக); "கண்மல்கு நீரார் முகமூகங்க ணேக்கினரே" (சீவக. கஅ0அ.) கயிற்றை மென்று. தொத்துவர் - தொத்திக்கொள்வார்.

உ. அங்கணம் - சலதாரை. சள்ளிடல் - நரியின் ஒலிக்குறிப்பு.

ங. தொண்டை விடுவன - கூவுவன. உள்ள - உள்ளன.

ச. வகைத்துறையாளர் - பலவகைப்பட்ட துறைகளைப் பாதுகாத்தலையுடைய வேலையாளர்.

ஞ. யாணர்மாக்கள் - புதியனவாய் வந்த குதிரைகள்.

(பி - ம்.) 1'மதுரையினுளின்ற' 2 'தொற்றுவர்' 3 'மிடற்றிறுகுங்கயிறு' 4 'மண்டி' 5'நம்முளோர்காணும்'

மூன்னெழ வெருவிக் கையி லகப்படா தோடி முற்றுங்
தன்னமார் தொண்டை யாலே தரணியை நிறைக்கக் கண்டேம். (நு)

பழுதில்கண் டியின்றே மில்லே பருப்புநெய் கருப்புக் கட்டி
1 யெழிறர மட்டித் திட்டே மிதவிய புல்லு மிட்டேங்
கழுவிய பயறுங் கொள்ளுங் கடலையுந் துவரை யோடு
மூழுவதுஞ் சிறக்க விட்டே மொக்கணி முட்டக் கட்டி. (கூ)

உற்றவை மற்ற வற்று ளொன்றயி லாது பண்டை
வெற்றிகொள் புரவி 2தள்ளு மறிக்குழு வேழக் கன்று
குற்றமி னல்லி யாடு குக்குடஞ் சூக ரங்கண்
மற்றுமிங் குள்ள வற்றின் மணிக்குடர் பிடுங்கக் கண்டேம். (எ)

இக்நெறி விளைந்த வென்ன வேங்கிநீ 3யிர்த்து வீழா
4 மின்னற விடிக்கு மேயோ விளைவதற் கேது வேதோ
நன்னெறிப் பொருட்குந் தீங்கு நணுகுமோ நெறிக்கே நின்டோ
செந்நெறி யோர்க்குக் குற்றஞ் செய்தன வுளவோ வின்றே. (அ)

குருமொழி பிழைத்த துண்டோ கோளர்வாய்க் கேட்ட துண்டோ
தருமநேர் குன்றிற் றுண்டோ தகாக்கொலை செய்த துண்டோ
5 வராழக் கொண்ட துண்டோ மறைநெறி கோடிற் றுண்டோ
வாவிதி வசமோ வேதோ வறிகிலே னெனவ யர்ந்தான். (கூ)

விரைகொண்மண் டபத்துப் போந்து மெலிகுவோ னென்கொ லென்
பொருவருஞ் சிறப்பின் வந்து போற்றிடி மமைச்சர்க் கண்டு [று
தெரிவுறப் புகுந்த வாறு செப்பநீ டியிர்த்தி யாரு
மிருநில நோக்கி நின்றே ரியம்பவோர் மாற்ற மின்றி. (கo)

தகவொடி நாளுஞ் செய்யுஞ் சடங்குகண் முடித்து ளத்து
ணைகையொடும் வாத வூரர் நணுகியீ தறியார் போலப்
புகலருந் தழலிற் றோய்ந்த புண்டரீ கம்போன் மிக்க
முகநனி புலரு மன்னன் முன்பணிந் தென்கொ லென்றூர். (கக)

கூ. மட்டித்து - கலந்து. இதவிய - இனிய. மொக்கணி - குதிரைக்குக் கொள்ளுமுதலிய உணவுகட்டும்பை; "மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி, சொக்க தாகக் காட்டிய தொன்மையும்" (திருவா. கீர்த்தி. கூ - ச.)

எ. மறி - ஆடு. சூகரம் - பன்றி.

அ. 'மின்னுமலிடிக்குமா' என்பது ஒரு பழமொழி.

கூ. வரர் - சிறந்தவர், தலைவர். அர - அரனே; இஃது இரக்கப்பொருளிலும் வரும்.

கo. நீடு உயிர்த்து யாரும் நின்றூர்.

கக. சடங்குகள் - நித்தியகன்மங்கள்.

(பி - ம்.) 1 'எழிறருமட்டியிட்டேயிதவிய' 2 'தள்ளுமறிகளும்' 3'உயிர்த்தழன்று', 'உயிர்த்தழன்று' 4'மின்னன்றி','மின்னிற' 5'வரர்கோக்கொன்றது'

மாடிறக் கண்டு நல்ல மதியுடை யமைச்ச னேநீ
நாடிலிங் குனையா ரொப்பார் நல்லகல் யாண னன்றே
கூடிய பரிசன் முகக் கொண்டுவந் தனையே யுண்டோ
தேடிய வருமை சற்றே [1]தீங்குவே றுண்டோ வென்ன. (கஉ)

பகையிலா வேந்தே யெங்கும் பழுதற நேடி நல்லோர்
புகழயான் கொணர்ந்த தெய்வப் புரவியிற் பொல்லாங் குண்டோ
வகைவகை நெருநற் போதே வரையறுத் தறிஞர் மூன்று
வகமகிழ் வொடுகைக் கொண்ட தாரறி யார்கூ றென்றார். (கங)

அணைந்தது நெஞ்சஞ் சாம லறைவதெ னெருநற் கண்ணீ
கொணர்ந்தமா நரிக ளாகிக் கொடுங்குரல் காட்டி யூருட்
பிணம்படா யாவுங் கொன்று திரிகின்ற செய்தி பித்தா
வுணர்ந்தனை யிலையோ கெட்டே னினியுன சுதியோ வின்றே. (கச)

மேலுயர் குருவின் மாட்டும் வேந்தர்கண் மாட்டுங் தூய்மை
சாலுநான் மறையோர் மாட்டுந் தயாவுடைத் தோழர் மாட்டுஞ்
சீலமா தவத்தோர் மாட்டுஞ் சிந்தையஞ் சாது வஞ்சங்
கோலுமூர்க் கருக்குத் தண்டங் கொலையலா [2]லுண்டோ வேறு. (கரு)

வெந்திறற் சிவையை யெல்லாம் வெம்பரி யாக்கி யின்றென்
[3]மந்துரை தன்னுட் கட்டப் பண்ணினை மதிம யக்கி
யிந்திர ஞாலஞ் செய்வ தெம்மூட னேயோ சாதி
யந்தண னுனை யான்மற் றறைவதிங் கென்னை நின்னை. (கசு)

வேந்தர்பொன் னழித்தோர் நல்லோர் வீடு[4]மார்க் கஞ்சா திப்போர்
வாய்ந்தமா வுகைத்த வாசி வாரியப் [5]பெருமா னெங்கே
சேர்ந்தசாத் தவரோ சொல்லாய் திண்ணிமை யோடு மெல்லச்
சார்ந்தகின் மேனி மூற்றுங் தண்டிக்க வடிக்குங் காணே. (கஎ)

ஆரண மோதிற் றிந்த வடைவு[6]செய் வதற்கோ வென்று
கோரமா மொழிகள் கூறிக் கூற்றென முறைசெய் வோரைத்

கஉ. 'நல்ல கல்யாணனன்றே' என்று இகழ்ந்தான்; "என்னையின்றேர் கலியாண னுகக் காண்மின்" (உஎ: அரு) என்றதை உட்கொண்டு.

கச. கொணர்ந்தமா - குதிரை. [செய்யுள் தெரிவிக்கின்றது.

கரு. இன்னர் இன்னர்மாட்டு வஞ்சனை செய்யலாகாதென்பதை இச்

கசு. சிவை - நரி. மந்துரை - குதிரைச்சாலை. இந்திரஞாலம் - இந்திர சாலம்; "இந்திர ஞாலங் காட்டிய வியல்பும்" (திருவா. கீர்த்தி. சகூ.)

கஎ. வாசிவாரியப்பெருமான் - குதிரைச் சேவகர்களின் தலைவன்; வாரியர் - தடுத்துச் செலுத்துவோர். சாத்தவர் - வியாபாரிகள்; "குதிரையைச் கொண்டு குடாநா டதன்மிசைச், சதிர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்" (திருவா. கீர்த்தி. உஎ-அ.) திண்ணிமை - வன்மை, தைரியம். [யறை-சிறைச்சாலை.

கஅ. ஆரணமோதிற்று - நீ வேதமோதியது. கோரம் - கொடுமை. சிறை

(பி - ம்.) 1'தீங்குதிலுண்டோ' 2'உண்டோவென்றே' 3'மந்திரை' 4'மாற்கஞ்' 5'பெருமாளெக்கே' 6'செய்யற்கோ'

1 தீர்வற வழைத்து வெய்ய சிறையறை வளைத்து வைத்துச்
2 சாரரும் பொருள னேத்துந் தண்டித்து வாங்கு மென்றூன். (கஅ)

ஆங்கவர் தம்மைக் கைக்கொண் டகன்றவ ரிணையி லாத
வோங்குபே ரன்பு கண்டுள் ளுருகிமெய்ந் நலியா ராகி
யீங்கிறை பணித்த வாறு செய்திடா விடினெ மக்குத்
தீங்குறு மென்று வெய்ய சிறையறை வளைத்து வைத்தார். (ககூ)

பிறங்கிய வடிவான் மிக்க பெரும்பருந் தரக மெல்லாங்
குறும்3பெரு நரிக ளாகி 4நெடுங்குரல் காட்டக் கூற்றிற்
றிறம்பட முனிந்த தென்னன் சிறைபுகுந் தழுங்கி மிக்க
வறந்தரு முனிவன் பின்னென் செய்தன னறைதி யென்றூர். (உ0)

ஆகத்திருவிருத்தம் - எகடு.

கூ0.—மண்சுமந்த திருவிளையாடல்.*

பொறையகத் துடைய வேந்த னமைச்சரைப் போக வேவி
யறையகத் தொழியாத் துன்பத் தொடுபுகுந் தழுங்க விப்பான்
மறையகத் தோரி ரும்பு தருமனத் தேனை யென்று
சிறையகத் 5தோதா முன்னஞ் சிவனகத் தருள்சு ரந்தான். (க)

வே று.

பொதியில் வரைசேர் தமிழ்நாடும் பொய்யா வையை மாநதியு
மதுரை நகரும் பாண்டியனு மண்ணுஞ் செய்த தவத்தானுந்
துதிசெய் தொண்ட ரகமகிழத் தொண்டி செய்து பிட்டளிக்கு
முதுமா மங்கை தவத்தானு முகிழ்ந் யகனே நினைப்பிட்டான். (உ)

உ0. குறும்பெருநரிகள்: முரண்.

(கூ0)

க. அறையகத்து - அறையில். "இரும்புதரு மனத்தேனை" என்பது திருவாசகத்தில் திருவேசறவின் முதற்குறிப்பு.

உ. 'பொய்யாவையை மாநதி' என்பது "வையை யென்ற பொய்யாக் குலக்கொடி" (சீலப். கநு: கள) என்பதைத் தழுவியது. முதுமாமங்கை - பிட்டு வாணிச்சி; இவள்பெயர் செம்மனச்செல்வி.

* "மணியார் வைகைத் திருக்கோட்டி னின்றதோர் திறமும் தோன்றும்" (திருநா. தே. திருப்பூவணம்); "ஆங்கது தன்னி லடியவட் காகப், பாங்காய் மண்சுமக் தருளிய பரிசு, முத்தர கோச மங்கையு ளிருந்து, வித்தக வேடங் காட்டிய வியல்பும்" (திருவா. கீர்த்தி. சசு - கூ); "கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை, மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு, புண்சுமந்த

(பி-ம்.) 1'தீரவுற்றழைத்து' 2 'சாருறும்', 'சாருமப்' 3'பரிநரி' 4'கொடுங்' 5 'ஏகாமுன்னஞ்'

பணிந்த வருணன் றனைநோக்கிப் பண்டே நமக்கு நனிநல்ல
குணஞ்சேர் வேத முனியிருக்குங் கொடிய சிறையைக் கண்டனையே
கணஞ்சேர் பொழுதிற் றுழாது கங்குற் கண்ணே கரைகடப்ப[தான்.
மணஞ்சேர் 1பொருள்கொண் டுறுதியை வருவிப் பாயென் றறிவித்

மேக நாத னெழுந்திரங்கி மெய்கள் கருகி மழைவிடக்கண்
டாகங் கலங்கி வேகவதி யருங்கால் கட்ட நில்லாது
பூகந் தெங்கு பறித்தெறிந்து பொரு2மீன் மறியப் பரந்தழுங்கி
மாக முட்டப் பயங்கொண்டு வந்த தெவரும் பயங்கொள்ள. (சு).

மன்ற றிகழ்தென் கரைகடந்து மதுரை நகருட் புகக்கண்டு
துன்று மிரவிற் பறையறையுஞ் சும்மை கேட்டு வாள்வழுதி
கன்றி மனமென் ஞகுநதி கால மொழிந்த காலத்திங்
கின்று பரவை யெனப்பரந்த 3தின்றே முடிவென் றழிந்தெழுந்தான்.

ஆண்ட வதிகா ரியையழைத்4திண் ணருள்சேர் முனியை வலைத்ததலை
லீண்ட வந்த தேவறியே னிறைவன் செயலோ தெரியாது [ட்டு
மாண்ட கரையை விரைவினிற்போய் மனைக டொறுங்கோ லறையி
வேண்டி யடைப்பா யெனப்போக விட்டான் விடிந்த திருங்கங்குல்.

செருவார் கணக்க ருடன்கூடிச் செல்வோன் றண்டஞ் செய்5தூரி
னரைசேர் கிழவர் சிறியோர்கண் முதலோர் நடுங்க வடித்தெற்றித்
திரைசேர் கரையை யளந்திட்டுக் கொடுப்பத் தெருமந் தவர்பெரிய
வரையே யெனத்தங் கோலறைகண் மகிழ்ந்து6சுமத்தப் புகுந்தனரால்.

பொன்மேனி பாடுதுங்காண்'' (ஷெ. தீருவம். அ); ''மண்பான் மதுரையிற் பிட்டமுது செய்தருளித், தண்டாலே பாண்டியன் றன்னைப் பணிகொண்ட, புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ'' (ஷெ. திருப்பூவல்லி, கசு); ''பிட்டு கேர்பட மண்சுமந்த பெருத்துறைப்பெரும் பித்தனே'' (ஷெ. திருக் கழக்குன்றப்பதிகம், உ); ''மண்ணகழ்ந் தெடுத்த வருபுனல் வையைக், கூலஞ் சுமக்கக் கொற்றூளாகி, நரைத்தலை முதியோ ளிடித்திடு கூலிகொண், டடைப்பது போல வுடைப்பது நோக்கிக், கோமக னடிக்க வவனடி வாங்கி, யெவ்வுயி ரெவ்வுல கெத்துறைக் கெல்லா, மவ்வடி கொடுத்த வருணனை நாயகன்'' (கல். சகூ.)

ரு. வேதமுனி - வாதவூரர்.

சு. கால்கட்ட - வாய்க்கால்களின் தகிப்பிற் படலிட. பயம் - நீர், அச்சம். 'பயங்கொண்டு...பயங்கொள்ள': மடக்கணி.

டு. வெள்ளமிகுத்த விடத்துப் பறையறைவித்தல் மரபு. சும்மை = ஒலி. மனம்கன்றி. என்ஞகுமோ.

சூ. கோல் - அளக்குங்கோல்; அறை - வரையறை செய்த கோட்டம்; கோலால் அறுதிசெய்த இடமுமாம்; ''குரம்புகொண் டடைப்பன் யானே கோலறை முழுது மென்ன'' (தீருவாத. மண்சுமந்த. கூரு.)

எ. தண்டம் - தண்டனை; ரூசு: கரு.

(பி - ம்.) 1'புனல்' 2'மீனுகளப்பாய்த்தழுங்கி' 3'இன்றேமுடிவெள்ளழிந் தொழிந்தான்' 4'இன்னருள்' 5'ஊருள்' 6'சுமக்கத்தொடங்கினரால்'

மூது1பேர் நகரிற் றென்கிழை மூலே மனையி லிருப்பாளோ
ரிதமார் பிட்டு வாணிச்சிக் கிடுங்கோ லறைக்கோ ராளின்றி
விதிரா வழுது விழுந்தெழுந்து மேவு தண்ட மாற்றுமற்
பதிவா யுழன்று திரியுங்காற் கண்டா னெங்கும் பரந்துள்ளான். (அ)

நாதப் பறையன் பெருங்குயத்தி பங்கன் றுங்க நஞ்சுண்டோன்
வாதைக் கிழவி பிட்டுதிர்க்கு மகிழ்ந்து மண்மீ தருக்கொள்வான்
சோதிக் காதிற் றழைசெருகிச் சும்மா டம்மா மதியாக்கிப்
பேதித் தறுதற் கச்சைபுனைந் ததிலே விட்டான் பெருங்கொடுக்கு. ()

மழுவைப் பிரமன் றலையோட்டை மண்வெட் டியுங்கூ டையுமாக்கி
யழகார் தோளின் மிசைவைத்தொன் றணிமா மூடியிற் கவித்தொன்று
பழுதி லொழியா நகைதுளங்கப் 2பதிஞ ரூண்டின் பருவத்துப்
புழுதி படைத்த திருமேனி பொலிய வலிய நடைநடந்தான். (கo)

வருந்து மவடன் பாற்கிட்டி வாரா யம்மே விழுந்தெழுந்து
பரந்து திரிகின் 3றனையிந்தப் பார்மே னினக்கின் றென்போலத்
திருந்து கொற்றுள் கிடையாது வேண்டு மாயிற் செப்பெவரும்
விரும்பி யழைப்பப் போகாதிங் கணைந்தே னின்னே வேண்டியென. ()

வே று.

நல்ல வவதரத்தே நண்ணினீர் நாயகரே
தொல்லை வினையறுக்குஞ் சொக்கோ வறியகிலேன்
மெல்லியமெய்ந் நோவ வடிப்பரிகள் வேந்தராள்
வல்லையினின் மண்சுமக்க வல்லீரோ நீரென்றுள். (கஉ)

வேலை யுலகில் விறகு சுமப்பதல்லாற்
4 சாலுமுடி மேல்வைத்துத் தண்ணீர் சுமப்பவன்யா
னேலவரு மண்சுமக்க வல்லே னிளையாமற்
கூலியெனக் கேது தருவா யெனக்கூற. (கங)

அ. விதிரா - நடுங்கி.

கூ. நாதமாகியபறை; 'நாதப்பறையன்'என்பது "நாதப்பறையினர்" (திரு வா. அன்னே. க) என்பதைத் தழுவியது; நஞ்சுண்டோன்: சிலேடை. நஞ்சுண் டோனென்பது, கள்ளர்வகையில் ஒன்றன்பெயர். பிட்டு உதிர் - உதிர்ந்த பிட்டு. கொடுக்கு-ஆடையின் தொங்கல். இச்செய்யுளிற் சிலசாதிப்பெயர்கள் தொனித்தல் காண்க.

கக. அம்மே - அம்மையே. கொற்றுள் - மண்வேலை செய்பவன்; "மண் ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக், கூலஞ் சுமக்கக் கொற்று ளாகி" (கலி. சக), "கொற்றுள விவரி லீங்கோர் கூடைமண் சுமந்தா ரில்லே" (உங) என்ப வற்றாலு முணர்க. கொற்று, படியென்னும் பொருளிலும் வழங்கும்.

(பீ-ம்.) 1'பொன்னகரில்' 2'பதினறியாட்டைப்' 3'திரிகின் றனையென்ன' 4 'சாலமுடி'

அந்தித் திருக்கும் பொருளில்லை யையரே
கந்தித்து வெய்தாய் நறுவிதாய்க் கண்ணுக்குச்
சிந்தைக் குவந்திருக்குஞ் செவ்விகூர் பிட்டுண்டு
முந்தத் தருகுவல்யா னென்றுண் [1]முதுநரையாள். (கச)

சிட்டனருட் சொக்கன் றிருவுளத்துக் [2]கொத்தவணீ
வட்டமுறு பிட்டென்ன வேண்டா வரைந்தம்மை
யிட்ட மதுகே ளெனக்கிங்கு நீயிட்ட
பிட்டிதிரு மாமென்றுன் வேள்வி யவியுவந்தான். (கடு)

வே று.

தக்கதோ மனிதர் பொல்லார் கோலறை தாழா தோங்க
விக்கணத் தின்க [3]ணூற்றங் கரையடைந் தயின்றி வற்றை
யொக்கமண் வெட்டி மூட்டச் சுமத்திடு முழப்பா தென்று
மிக்கமென் பிட்டுச் சுட்டுக் கொடுத்தனள் விருப்பங் கூர்ந்து. (கசு)

நின்றது வாங்கிக் கச்சைச் சுற்றுழை நெருங்கக் கட்டித்
தின்றிது போலொன் றில்லை சிவனறி குவனென் றுடி
மன்றலம் பொழில்சூழ் வையைக் கரைமருங் கடைந்து மாறு
வொன்றிய நகையி னோடு மூலாவிஞ [4]னகில நாதன். (கள)

இனியன பெற்று னல்லோ ரெவர்க்குமிட் [5]டயில்வ தல்லாற்
றனியயி லார்க ளென்று சாற்றுவார் பழையோ ரென்று
கனவிய வட்டப் பிட்டுக் கைக்கொடு பிட்டுப் பிட்டு
வினைபடச் சுமக்குங் கூலி வேலையா ளர்க்கு மீந்தான். (கஅ)

வளந்தரு பிட்ட னேத்து மாண்டபின் மீண்டு மெய்தித்
தளர்ந்திடே லம்மை சாலத் தளர்ந்தியான் பசியால் வந்தே
னளந்தகோ லறைபார் சென்று சிறிதொழிந் தவற்று ளெல்லாந்
துளங்கவா னுறச்சு மந்தேன் சொக்கனு ராணை யென்றுள்.

சச. அந்தித்திருக்கும் பொருள் - முடித்து வைத்திருக்கும் பொருள்; "வேதம், அந்தித்து மறியான்" (திருவிளை. நகர. கஅசு.) கந்தித்து - மணம்வீசி. உண்டி - உள்ளது.

கரு. வட்டமுறு பிட்டு - வட்டவடிமாகக் கிண்ணத்தாற் கொட்டி அமைத்து வைத்திருக்கும் பிட்டு; "கனவிய வட்டப் பிட்டுக் கைக்கொடு பிட்டுப் பிட்டு" (கஅ.) அம்மை: விளி.

கசு. உழப்பாது சுமக்திடும்.

கஅ. இச்செய்யுளின் முன்னிரண்டடிகள், "இனியவை பெறினே தனி தனி றகர்கேம்" (பதிற். நஅ: கந) என்பது முதலியவற்றைத் தழுவி வந்துள்ளன.

கக. அம்மை: விளி.

(பி - ம்.) 1 'நரைமுடியாள்' 2'ஓப்பாநீ' 3'யாற்றங்கரை' 4'உலகநாதன்' 5 'அயிலினல்லாற்'

சுத்தமா வுதிரை வேண்டிச் சுமந்திடான் சுடந்தே னென்ன
வுத்தம மெய்தோய் மண்கண் டிவகைகூர்ந் தரசே யின்னுஞ்
சித்திரப் பிட்டுச் சுட்டுத் தருகுவல் செல்லு மென்று
[1] வித்தகப் பிட்டுச் சுட்டுக் கொடுத்தனள் வெம்மை கூர. (உ0)

புகழ்ந்தது வாங்கி யொல்லை போந்திரும் புனலி யாற்றின்
றகுங்கரை யடைந்து முன்போற் றுனையின் றெவர்க்கு நல்கி
யுகந்தகொற் றுளார் நாப்பண் வளம்பல வுரைத்து நல்ல
சுகம்பட வடைப்பான் போல வுடைப்பன்மண் சுமவா ஞகி. (உக)

ஓங்குகோ லறைய ளந்த வுயர்பெருங் கணக்க ரங்கட்
டூங்கறச் சுமக்கு நல்லா டெரிப்பதற் கணையக் கண்டு
வாங்கரு விரைவி னேகும் வந்துபேர் சொக்க னல்லா
லீங்கெனை யொப்பா ரில்லை யென்னைமுன் றெரியு மென்றான். (உஉ)

மற்றுள பெருங்கொற் றுளார் சுமவாது மருட்டி யெங்குந்
தெற்றிய விவனை யோமூன் றெரிப்பதின் றெனவி லக்கக்
கொற்றுள விவரி லீங்கோர் கூடைமண் சுமந்தா ரில்லை
மூற்றுமிங் கியானே நின்று சுமந்தன னெனமொ ழிந்தான். (உங)

[2] செம்மையின் வேலை யொன்றுஞ் செய்தில னேனுஞ் சொல்லு
மம்மர்தீர் வார்த்தை யாலே யாரையு மழுப்ப வல்லா
னம்மையுங் கோலு மைக்கத் தகுமிவ னென்ன நாடித்
தம்மூளை வெருவி முன்னர்த் தெரித்தனர் தமிழ்க்க ணக்கர். (உச)

கொடியதிண் கணக்கர் போகக் [3]குழம்புகொற் றுளார் நாப்பண்
மூடியணை கூடை யாக முறுவல்கூர்ந் தினிய பாடித்
தடமிசைக் கொட்ட ணைத்துத் தாண்மிசைத் தாளை நிட்டுக்
கிடையற வுலக மெங்கும் படர்ந்தவன் கிடந்தான் மெல்ல. (உரு)

வளர்கரை பார்ப்பான் வந்த மன்னவன் மனிதர் கண்டு
கிளரமண் சுமவா ஞகிக் கிடப்பவன் யாவ னென்னத்
தளர்வுடை வேலை யாளர் சாற்றுவார் மற்றிவ் வூரு
ளொளிவளர் பிட்டு விற்பா ளிட்டவா ளெனவு ரைத்தார். (உசு)

உ0. என்ன - என்றுசொல்ல. உதிரை - பிட்டு. 'வித்து கெற்பிட்டு' என்ற பாடத்திற்கு விதைகெல்லரிசியாலாக்கிய பிட்டென்று பொருள்கொள்க.

உஉ. கோலதையை. நல்லாள் - நன்மையையுடைய ஆட்களை. வாங்குதல் - கொள்ளுதல்.

உங. கொற்று - கொத்து.

உரு. குழம்புதல் - கலங்குதல். கொட்டு அணைத்து- மண்வெட்டியைத் தழுவிக்கொண்டு. கிடை - கிடத்தல்; ஒப்புமாம்.

(பி - ம்.) [1]'வித்துகெற்பிட்டு' [2]'செம்மையன்' [3]'குழப்பு'

நெறிப்படக் கிடப்ப தென்னை வடிவனீ நின்னை யாருந்
துறைச்சமை யாளென் றிங்குச் சொல்கின்ரு ரின்று னக்குக்
குறித்தகோ லறையி [1]லாங்கோர் கூடைமண் ணிட்டா யில்லை
கறுத்ததி காரிக் குன்னைக் காட்டுவம் போது கென்ரூர். (உஎ)

நல்லகா ரியம தென்று நயந்தவ ரோடுஞ் செல்லக்
கொல்லெறி யடிகுத் தென்று கூற்றெனத் தண்டஞ் செய்யும்
வல்லதி காரி கண்டு மனத்ததி சயித்துச் சால
மெல்லிய வடிவ னீயார் விளம்பிடு விளங்க வென்ரூன். (உஅ)

தந்தைதாய் கட்டோ ருற்ரோர் சகோதரர் [2]பொருளொன் றில்லை
யிந்தமா நகரி லியாரேர் மூலையி லிருக்குங் கொற்ரு
ளுய்ந்திட வெவர்க்கு நாளு முதவுவ லென்னைக் கொண்டி
பந்ததி காரிக் கென்ன காரியம் பகர்தி யென்ரூன். (உகூ)

புத்தியு ளொழியாச் சீற்றம் பொருந்ததி காரி நல்ல
பத்திசேர் குணவான் போலப் பகர்ந்தனை [3]பகுந்து னக்கு
வைத்தகோ லறைக்கோர் கூடை மண்சுமக் கிட்டா யில்லை
யுத்தரஞ் சொல்லா நின்ரூய் கண்டில மூனைப்போ [4]லெங்கும். (கூ0)

சதமுறை யடித்தற் குன்னைத் தகுந்தகா தல்ல வுன்றன்
விதமுறு வடிவங் கண்டே மெய்யொருப் பட்ட தில்லை
யதர்பட விரைவொ டும்போ யடையடி படாதென் றேவப்
புதியவ னடையா ளுகிக் கிடந்தனன் போந்து முன்போல். (கூக)

வே று.

அவ்வயினில் வெய்ய வரசன் விடையின்வருஞ்
செவ்வி முறைசெய்வோர் தீரக் குறைபார்த்துக்
கவ்வை விளைத்து வருங்காற் கரையழித்து
தவ்வுபுனற் கோலறையைக் கண்டார்க டாழ்வாக. (கூஉ)

உஎ. வடிவன் நீ - அழகுடையவனாகிய நீ: "மெல்லிய வடிவனீ" (உஅ.) கறுத்த - கோபித்த; தொகுத்தல்; கறுத்தென்றுமாம்.

உஅ. நயந்து அவரோடும்.

உகூ. பகுந்து - வகுத்து; திசைச்சொல்; இது 'வைத்து' என்பதுபோலப் பொருளின்றிப்பயிலுவதொரு சொல்.

கூ0. பகுந்து - பங்கிட்டு.

கூக. சதமுறை - பலமுறை. அதர்பட - வழிபட.

கூஉ. தீரக்குறை - கரையின் குறையை. கவ்வை - துன்பம்; ஒலியுமாம். தவ்வுதல் - தாவுதல்.

(பி - ம்.) 1'இன்ரோர்' 2'பிறரொன்று' 3'பணித்து' 4'இங்கே'

காய்ந்து விரைவி னிகலிக் கறங்கென்னச்
சேர்ந்து சுமக்கின்ற சிற்றூளை யெற்றுபுன
லூர்ந்தகரை யெங்கு மூயர வுயராமற்
முழ்ந்ததிது யார்கோ லறை[1]விரைவிற் சாற்றுகென. (கூக)

மன்ற றிகழ்பிட்டு வாணிச்சி கோலறையீ
தின்றிங் கவளிட்ட கொற்ற [2]ளிவணுழப்பி
வன்றிறலீர் யாங்கள் சுமப்பமதி யாதுகிடந்
தின்று விளையாடு கின்றுன்போ யென்றூர்கள். (கூச)

வெந்தழல்கண் சிந்த வெகுண்டாங் கவர்கண்டு
சிந்தைசிறி தஞ்சாது தீரத்து மண்சுமவா
திந்த விளையாட லெக்கா ரணமென்னக்
கந்தரோ வச்சுமப்பல் காரணமொன் றில்லென்றூன். (கூடு)

இன்று விரைவி லெழுந்து சுமவாயேற்
பொன்ற வடிப்பமென வஞ்சினஞ் போலெழுந்து
மன்றறிகழ் கொட்டா லொருகூடை மண்வெட்டா
வென்றிமுடி மேல்வைத்து மெல்ல நடையிட்டான். (கூசு)

வே று.

உன்னவரி யான்மேன்மை யங்க யற்க ணுமைகொங்கை படச்
சிவக்கு மெய்யன் முற்றுங், தன்னுருவ மென்னுமது மண்ணிற் காட்
டத் [3]தளருநடை யிடக்கண்டு தண்டஞ் செய்யுங், தென்னன்முறை
[4]செய்வோர்க ளந்தோ வந்தச் சிற்றூளைக் கொற்றூளின் [5]கையிற்
சற்று,நன்மையிலை [6]யுடைப்படையா னெனப்பி டித்து நடுமுதுகிற்
கறுத்தடித்தார் சிவக்க நாடி. (கூஎ)

வே று.

மன்னிட வடிப்பக் கங்கைக் கரையுயர் மண்ணை யோங்கக்
கன்னல்சேர் செந்நெல் வைகைக் கரையிடா முறுவ லோடு
மென்னையே னடிக்கின் றீரென் றியைந்தகொற் றூளர் நாப்பண்
டன்னுரு வொளித்தான் புக்குத் தன்னைத்தான் பிடித்த டித்தான்.()

படுமெழு மதிபை நந்தம் பாண்டியன் மரபெ னத்தான்
முடிமிசைச் சுமத்த லன்றி முடிமிசை யுவந்து வைத்த
வடிவுடைக் கங்கை யாறு தென்னவன் வைகை [7]யாற்றிற்
கடிபட மண்சு மந்தா னவன்றிரு வருளுக் குண்டோ.* (கூஅ)

கூஅ. கங்கைக்கரையுயர்மண் - திருமுடியில் வைத்திருந்த மண்.

கூக. திருவருளுக்கு உண்டோ - திருவருளுக்கு எல்லையுண்டோ.

* இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1'என்றுசாற்றுமென' 2'அவன்' 3'தள்ளி' 4'வாரியர்கள்' 5 'னகையின்றுற்றும்' 6 'அடைப்பவெனப்' 7'யாற்றி, லடி'

இறையவ ளெளிப்ப ஙின்ற விறைமுறை செய்வோ ரோடிக்
கறுவியெங் கொளித்தா னென்று கேடிமுன் காணு ராகி
வெறிகமழ் பிட்டுச் சுட்டு விற்பவ ளிடத்தி மைப்பிற்
குறுகியாங் கவளைக் கண்டு தண்டிப்பான் கோலி னூர்கள். (சஅ)

ஆங்கவர் கோலா [1]முன்ன ரருளினு லெவருங் காண
ஙீங்கரு மிளமை பெற்று நிலத்தினின் றெழுந்து தெய்வப்
பாங்குடை யுருவத்தோடும் பரசிவ லோகத் தேகத்
தேங்கிய முறைசெய் வோருந் திகைத்ததி சயித்து ஙின்றார். (சக)

வே று.

அடித்தபுளி மாறுபல சொல்வ தென்னை யரசன்முது கோவல்ல நம்பி ராட்டி,முடிக்குரிய விந்திரனுன் முகன்மா லாதி மூப்பத்து மூக் கோடி தேவர் தம்மிற், பிடித்தவரி லடித்தவரிற் பாலர் பார்ப்பார் பெண்டிரின் மூத்தோரி னிற்ப வற்றி, னடப்பவற்றிற் பறப்பவற்றி லூர்ப வற்றி னடிமுதுகி னிடைப் [2]புடைப்பு ணணுகிற் றன்றே. (சஉ)

பொருந்துதலத் தோர்நகரோர் புறத்தோர் நாட்டோர் பூழியன் பாற் சென்றறிவ மென்று சென்று, வரைந்தொருவன் மேலடியிங் கியாவர் மாட்டி மன்னியதென் னெனமாறுன் [3]மாற னென்றுங், கரும்பெயர்பெற் றேனுந்தன் முதுகு காட்டி யருட்சொக்க னறிகுவ னென் றிருப்ப வாங்கண், டிருந்த வெழுந் ததுவிசும்பி லெவருங் கேட்பத் திருவாக்குத் திருவாத வூர்க் காக. (சங)

பாண்டியனே வேதஞ்சொல் [4]யாண்டு வாழி பாக்கியமன் னுமக்கு வாதவூரன், பூண்டதொண்ட னிவன்முகத்தா னம்மு ளோர்க்குன் பொருளறத்தின் வந்ததனுல் வாங்கி யிட்டேம்,வேண்டுவன பரியுமிட்டேம் விடுவித் தற்குன் வேலையின்மண் சுமந்தடியும் பிட்டு முண்டே, மீண்டுவிடு விடுகினைக்கே ணன்மை சால விவனைத்தன் வழி திரிதற் கிரங்க லென்றே. (சச)

சக. பிட்டு வாணிச்சி ஏக.

சஉ. புளிமாறு-புளியின் மலாறு. புடைப்பு-அடியாலுண்டாகிய வீக்கம்.

சங. மாறனென்பதன் பெயர்க்காரணத்தை இக்கே புலப்படுத்தி யிருத்தல் அறிதற் பாலது.

சச. வேதஞ் சொல்யாண்டு - ஞாயிறாயம். இவன்முகத்தால் - இவன் வழியால். விடுவித்தற்கு - சிறையினின்றும் நீக்குதற்கு. தன்வழி திரிதற்கு இவனே விடுவிடு.

(பி - ம்.) [1]'முன்னின்றருளினுல்' [2]'புடைப்ப' [3]'மாறனென்றேங்கு' [4]'யாண்டும்'

அந்தவுயர் திருவாக்குத் தோன்ற யாரு மதிசயித்து மன்னவனே கோக்க மன்னன், சிந்தைபய மெய்தியுறு புளகத் தோடுந் தேவர் பிரான் பரிமதுரைத் தெருவி லேலுங், கொந்தகன்வாக் கிதுபரிமாற் றுநீ யென்று கொடுஞ்சிறையின் விடுத்தருகு வரவ ழைத்து, வந் தனைசெய் தினியபல வுபசா ரத்தால் வணங்கினன் றிருவாத வூரர் தாளில். (சரு)

சார்ந்தவென தறியாமை யாலே மிக்க தாழ்வுகள்செய் தேன வற்றைப் பொறுத்தருச் சாலச், சேர்ந்தருகிங் கெழுந்தருளி யிருப்பீர் போவீர் [1]திருவுளத்தி லடைத்தபடி செய்யுந் தூய,வேந்தர்[2]புக ழருட் சொக்கர் நும்மேல் வைத்த மெய்யன்பு வையகத்துக் [3]கண்டே மில்லே, யேந்துதிரு வாதவூர் நாய னீரே யெனத்துதிப்ப யாரும்[4]வியந் திறைஞ்சி னார்கள். (சசு)

செந்நெறிசேர் விசும்பிடையிற் றோன்றுஞ் சொல்லெத் திருவாக் கே யெனத்தெளிந்தாய் தேவே றுண்டோ, நின்னையடைந் ததுகொண் டிப் பேறுபெற்றே னீக்கரிய வெம்பாசத் [5]தடுக்க றுத்தே, னென் வழியிற் போகுவலின் றயநீக்கி யிணையில்லா வெந்தையுண் டென்று ணர்ந்த, வுன்னருமிப் பிரமாணத் தானின் செல்வ மோங்கி யிடுங் தீங்கின்றி யுண்மை [6]யென்றே. (சள)

வேறு.

வைத்தரு ணமச்சி வாய வாழ்கவென் றெடுத்தாங் கோதி
யுத்தமர் போகக் கண்ட வுவகைகூர் செழியர் கோமான்
பத்தியிற் பின்சென் றேத்திப் பணிந்துநல் விடையிற் போந்து
சித்திர மண்ட பத்து ளிருந்தனன் செயலே வாழ்த்தி. (சஅ)

வாழ்ந்தருள் பெற்ற வேந்தன் மந்திரித் தலைவ ரைப்பார்த்
தேய்ந்தகா ரியந்தா னுவ தழிவதிங் கினி[7]நீள் வாரி
சூழ்ந்தமா நிலத்துத் தூய சூத்திர மொழிந்து நீதி
வேந்தர்மாட் [8]டமைச்சி னுக்கு வேதிய ராகா தென்றான். (சகூ)

சரு. மதுரைத் தெருவில் பரியேறும். கொந்தகன் - படைத்தலைவன்; "கொந்தகப் பெருமானென்றுகன்னெறிப்பட்டங் கட்டி நல்கினன் பரிவட்டங் கள்", "கொந்தகப் பெருமான் கேண்மோ" (சி0: உஎ, கூஅ.) பரிமாற்று - குதி ரையை மாற்றுதல்.

சஅ. 'நமச்சிவாய வாழ்க' என்பது, திருவாசகத்திற் சிவபுராண அக வலின் முதற்குறிப்பு.

சகூ. தாயசூத்திரர் - சற்சூத்திரர்.

(பி - ம்.) 1 'திருவுள்ளத்து' 2 'புகழ்தரு' 3 'கண்டதில்லே' 4 'விழுந்து' 5 'தடக்கு' 6 'ஈதால்' 7 'நீர்' 8 'அமைச்சனால் வேதியராகாது'

தொன்னெறி வாத வூரர் சொக்கரு லயத்துப் புக்கின்
றென்னேயா ளுதற்கு ஈதா வினப்பரி [1]யிட்ட தன்றி
மன்னிய முடிவ ருந்த மண்சுமந் தீனையே யந்தோ
[2] வன்னமா மேனி நோவ வடியுமுண் டீனையே யென்ன. (கரு0)

உத்தர கோசமங்கை கழுக்குன்றங் குருவங் கண்டு
சித்திரக் கோவை பாடித் தில்லையம் பலத்து வாவென்
றத்தன்வா னத்து ரைப்பப் போந்தருந் தமிழ்கள் பாடிப்
புத்தன்வா தையும்வென் றியாரும் போற்றுபொற் பதம டைந்தார். ()

தொல்லைமா மன்ன னெந்தை சுத்தரு விருப்ப வேடன்
பல்லுறு மிறைச்சி நஞ்சம் பாலக னிறைச்சி யம்மை
நல்லபிட் டயிலக் கண்டே கல்லடி யார்க்கு நல்லான்
மெல்லியல் பாக னல்லால் யாருள ரெனவி யந்தான். (கரு2)

பொருவருங் கோயின் முற்றும் பொன்னிழன் மேய்ந்தி யாரும்
பரவவெண் குடை[4]க ளாசி பகுசிரா மரை[5]தூ சேரு
னரிவையர் மூதலா கல்கி முன்னையி னன்பு பூண்டு
தரையினே யளவில் காலந் தருமகன் னெறியி ணின்டான். (கரு4)

வெருவரா முற்றும் பட்ட வெந்திற லடியும் வேய்ந்த
வொருதனிக் கூடை மண்ணு லுயர்ந்தநீள் கரையு மூத்த
நரைமக ளுயர்ந்து றக்க நண்ணிய வாறுங் கண்டு
பரவிய மனிதர் முன்னிற் பல்பெருஞ் சிறப்பின் வாழ்ந்தார். (கரு5)

நிறைவுறு மதியங் கண்ட நெடுங்கடல் போலச் செல்வம்
பிறிவற விளங்கி மன்னன் பெருதபே ருலகம் பெற்றான்
மறைபறை யிறைவன் [6]பிட்டிண் டடியுண்டி மண்சு மந்த
வுறுகதை கற்போர் கேட்போ ருயருல காள்வ ரன்றே. (கரு6)

கரு0. அன்ன: நெஞ்சறி சுட்டு. மா - அழகு. என்ன - என்று திருவாத வூரர் துதிக்க.

கரு1. சித்திரக்கோவை - திருச்சிற்றம்பலக்கோவையார்.

கரு2. மன்னன் - பாண்டியன்; எழுவாய். வேடன் - கண்ணப்பர். பாலகன் - சிறுத்தொண்டரின் புதல்வர். அம்மை - செம்மனச் செல்வி (பிட்டுவாணிச்சி.) அடியார்க்கு நல்லான்: "ஓங்கடியார்க்கு நல்லான் கன்றல் வேண்டானமக்கோர் கருணையுள்ளான்", "அடியார்க்கு நல்லானேகநாயகன்" (கருபு: சு, [கசு.)

கரு4. மேய்ந்து - வேய்ந்து. ஏறும் ஆனும்.

கரு5. உயர்துறக்கம் - சிவலோகம்.

கரு6. பறைதல் - சொல்லுதல். இறைவன் - சிவபெருமான்.

(பி - ம்.) 1'இடுவதன்றி' 2'அன்னமார்' 3'மக்கைகரினுமுருவங்காட்டி' 4'காளாஞ்சி' 5'தூசென்றுக்கு' 6'பிட்டினடியுண்டு'

சுந்தர னவதா னங்கள் சொல்லுவோர் கினைப்போர் கேட்போர்
சந்தத மூனிவர் வாழ்நர் சாரணர் சித்த ரேத்த
மூன்தொளி விமானத் தெய்தி மூவுல கத்தி னோடு
மிந்திரன் முடிமேற் சூள்வைத் தேதுவர் சிவலோ கத்தே. (நிசு)

ஆகத்திருவிருத்தம் - எஎக.

ங.—விருத்தகுமாரபாலரான திருவிளையாடல்.*

சீர்விளங்கு முன்னெருகாற் பாண்டி காட்டுச் சிறந்தபெருங் கிரா மத்தோர் மறையோன் செல்வம்,பார்புகழுங் குலமொழுக்கம் விழுப்ப மிக்கோன் பணிமதுரைச் சொக்கற்கே பத்தி பூண்டோன், பேரிய லாண் மகவின்றி யருமை யாவோர் பெண்பயந்து வேதத்தால் வடி வாற் சொக்கை, நேரவரு மூயர்பிரம சாரிக் கிந்த நேரிழையைக் கொ டுப்பமென நிச்ச யித்தான். (க)

இத்தகவி னிருந்தோணெண் டொடிக்கு நல்யாண் டெட்டுநிறை தருகாலை யோதி மிக்க, [1]புத்தியிலோர் பாகவதப் பிரம சாரி புக்கிலு ழைப் பிச்சை கொள்வா னணுகக் கண்டு, வித்தையினல் வடிவான் மற் றொன்றுங் காணுன் விரைவொடிகன் னியையுதகஞ் செய்யக் கண்ட, சுத்தமுடை மாதாவுஞ் சுற்றத் தாருங் துயருழந்து கனிவெ குண்டி சோகங் கூர்ந்தே. (உ)

குன்றமனங் தாதையையிப் பிரம சாரி குடிமுதல்கே ளாதினிய வேதங் கொண்டே, னன்றிபுனை கன்னிதனை யுதகஞ் செய்தாய் னன்ற றியா யென்றிகழ கல்ல தாதை, யொன்றியிவன் கோத்திரசூத் திரங் கேட் பாமிங் கும்பர் பிரா னருளினு [2]லொத்த வாயி, னின்றிது காண்

நிசு. அவதானங்கள் - திருவிளையாடல்கள்.

(ங க)

க. பெருங்கிராமம் - ஐந்நூறு குடிகள் கிடைத்தவூர்; (சூடா. இடப்பெயர். நகூ.) புல்லியென்னு மூரில், கௌரி அவதரித்தனனென்று சுந்தரபாண்டியம்; கௌரிச்சருக்கம், முதற்செய்யுள் முதலியவற்றால் தெரிகிறது.

உ. பாகவதப் பிரமசாரி - வைணவப்பிரமசாரி. புக்கில் - வீடு. உதகஞ் செய்ய - தாரைவார்க்க.

ங. மனங்குன்ற. கன்னி-எட்டுப் பிராயமுடையவள்; "அகவை யிருகான் குடையாள் கன்னி" (மாயூரப்புராணம்.) இடுகுறி-இடப்படு நெற்றிக்குறி.

* "பாலவிருத்தருமானுர்தாமே", "பாலவிருத்தனு மானுன்கண்டாய்" (திருநா. தே.)

(பி - ம்.) [1]'புத்தியன்' [2]'ஒத்தாயின்'

பேமென்று கேட்பச் சொன்ன னிடுகுறிகோத் திரமுதன்மற் றியா வுங் தோன்ற. (கூ)

இன்பமுறு பாகவத னியாவுஞ் சொல்லி யிடுகுறிவே றென்ன வு மேயேங்கி நின்றே, ரன்புமுதற் பலகுணங்க ளுண்டா னலு மல னிமீ தொருகுற்றம் யாவர் மாட்டுங், துன்பமுற வுண்டாகா திராது வேத சூத்திரங்கோத் திரங்கல்வி யொழுக்க மற்று, [1]நன்புதரப் பெற் றேமென் [2]ருரியாரு நலந்திகழ்மா தாவையுஞ்சொன் னயத்தா லாற்றி.

தந்திரநூன் மறைவிதியிற் சாறு செய்தே சடங்குமுடித் துதக நெறி தப்பா வாறு, மூங்கவளித் தினியபல நல்கி நல்ல மொழிமொழி ந்து வழிவிடுப்ப வணங்கி னோடுஞ், சிந்தைமகிழ்ந் தருமறையோன் மாம னீந்த செல்வமொடுந் தன்பதியிற் செல்லக் கண்ட, பந்தமுறு தந்தைமுத னல்லுற் றூர்கள் பரிவுகள்செய் தெதிர்கொண்டார் பண் பின் வாழ்த்தி. (ங)

ஆங்கினிய பரதேசம் போன பிள்ளை யணிபொலிய மணஞ்செ ய்து மாதினோடு, பாங்கின்வர வென்னதவஞ் செய்தா யென்று பலர் புகழக் கண்டிருந்தும் பாவி மாதா, வீங்கிவளோர் சைவன்மக ளென் னக் கேட்டா ளெரிதருவெப் பத்தினெஞ்சிற் றலையை மோதித், தாங்க லருந் துயருழந்தா ணெடிது யிர்த்தாள் சாற்றுமா றென்னென்ரு டணியா ளாகி. (சு)

வளமைமறை யோனிறைவன் செயலா லந்த வடிவுநிறை பவித் திரைபான் மனம்வை யாம, விளமைதரு பருவத்தே யிருப்ப ளாரூ மீசனுக்கே மனம்வைத்த நேச வல்லி, யளவிறந்த பாகவதர் புரித்தல் கண்டாண் டாழ்துயருற் [3]றின்னமுது படைத்து நந்தந், தளர்வகல நுதனீறு விளங்க விங்கோர் தவமுனிவர் நணுகாரோ வென்பாள் சாற்றாள். (எ)

மூன்னெயவ ணல்வினையான் மாமன் மாமி முதலாவவ் வுழைநின் றும் பிறிதோ ரில்லத், துன்னருமோர் காரணத்தாற் போக வோர்நா ளூற்றவர்கட் குற்றவன்மற் றியாவும் வல்லான், றென்னனையா ளுடை மதுரைச் சொக்கநாதன் றிருநீறு விரன்மூன்றுந் திகழச் சாத்தி, [4]மின் னணிநூன் மணிமார்பில் விளங்க மூத்த விருத்தர்தள ருருக்கொண் டான் விரும்பி மாதை. (அ)

ச. வேதசூத்திரம் - வேத சம்பந்தமான சூத்திரங்கள்.

ஞ. சாறு - கலியாணம். நெறிதப்பாவாறு உதகம் அளித்து; உதகம்-தாரை. இனியபல - ஸ்திரீதனங்கள்பல. பந்தம் - உறவு, முறை.

(பி - ம்.) [1]'நன்கு' [2]'ருரியாரும்' [3]'யாமமுது' [4]'மின்னெளி'

வேறு.

முன்வளை தனுவன தனுவு மூத்ததோர்
பன்னக வுரியன பழைய மேனியு
[1]மென்மர லனகரை முடியும் வீழ்ந்தெழு
நன்மைகொ டளர்நடை யொடுங் கக்கமும். (கூ)

கையுறு குடையொடு தண்டுங் காதினிற்
செய்யகுண் டலமும்வீ முடையுஞ் செவ்விசேர்
துய்யபுன் முறுவலுந் துளங்க மங்கலத்
தையனீ பிச்சையி டென்னச் சார்ந்தனன். (கo)

வேறு.

உழையிடை யழுது படையெனக் கண்ட வுத்தம வணங்கெதிர் வணங்கித், தொழுதுபே ருலகிற் றனிவிளை யாடுஞ் சொக்கனே வறி கிலே னடியே, னெழினுத னீறு காணுமுன் போன திடரென்ன புண் ணியஞ் செய்தே, னழகுடன் றிகழுந் தலைவரே யழுதென் றகத்தினு ளெழுந்தரு ளுதற்கே. (கக)

நாதனே கடியள் [2]கொடியளென் மாயி னன்குள வறைக்கத வடைத்திப், போதிலோ ரகத்துப் போயின ளழுது படி[3]புறம் பில்லை யென் செய்கே, னேதுமே லழுது செய்யுமா றென்ன வுத்தமன் சித் திர வணங்கே,[4]சோதிசேர் கதவந் திறக்குநீ செலுங்காற் [5]றுணிந்தினி யகம்புகுந் தெடுத்தே. (கஉ)

பரிவொடு பருப்பு மன்னமு மாகப் படைவயிற் றுறுபசி பெரி தென், றருள்பட வுரைப்பக் கேட்டலும் பதறி யறைக்கடி வாயிலிற் செலுங்கா, லுரணுறு கதவஞ் [6]சடக்கெனத் திறப்ப வொண்டொடி கண்டதி சயித்து, [7]விரைவினுட் புகுந்து சிறந்தன வெடுத்தாங் கமைத் தனள் விருப்புடை யடிசில். (கங)

கூ. தனு - வில், உடம்பு. மரல்அன - மரல்காரை யொத்த.

கூ - கo. இந்த இரண்டு பாடல்களும், "அணங்கர வுரித்ததோ லனைய மேனியன், வணங்குநோன் சிலையென வலைத்த பாக்கையன், பிணங்குநூன் மார்பினன் பெரிதொர் புத்தக, முணர்ந்துமூப் பெழுதின தொப்பத் தோன்றி ஞன்", "வெண்ணரை யுடம்பினன் விதிர்த்த புள்ளியன், றுண்ணவி றுவைய ஞெரிந்த நோக்கினன், கண்ணவிர் குடையினன் கைத்தண் மேற்றினன்" (சீவக. உoo - கo) என்பவற்றை யொத்துவிளங்குதல் காண்க.

கக. படை: ஏவல்.

கஉ. அழுதபடி - அரிசி. மேல் அழுது செய்யுமாறு ஒது மென்ன.

கங. படை - படைப்பாய். சடக்கென - விரைவாக.

(பி - ம்.) 1'மின்னமர் னன்னரை' 2'கொடியளம்' 3 'புறமில்லை' 4 'சோதி நீள்' 5'தணிந்துநீயன்புகூர்ந்து' 6 'சடனெனத்' 7'விரைவொடு'

அரம்பையங் குருத்து மருங்குற விரித்தாங் கடைவின்மென் போனகம் படைப்ப, [1]விருந்தின னுதர பூரண மாக வுண்டெழில் வி ரைமணக் கோலப், பெருந்தக விலங்க வெண்ணிரண் [2]டாட்டைப் பிள்ளையாய் விளங்கினன் கண்ட, கருந்தடங் கண்ணி யதிசயித் [3]தஞ்சி னின்றனள் காமனும் வருத்த. (கச)

வே று.

வாசிகை முடியி றங்க [4]மார்புதாழ் மாலை மின்னத்
தூசெழின் மருங்கி லங்கத் துளங்குதண் கலவை சாத்தித்
தேசுடை யணிய ணிந்து திருமுகங் கவினெ றிப்ப
வாசைகூர் தருமெய் கொண்டி விளங்கினு னகங்க [5]ளுண. (கரு)

இன்றெறி கிகழுங் [6]காலை யேந்திழை [7]தனது மாமி
பொன்மனை வாயில் [8]வந்து புகுந்தவர் யாரோ வென்ன
வன்னமோர் [9]மாற்ற மின்றி யங்கையை நெரித்து நின்ரூள்
பன்னகா பரணன் கண்டோர் பாலக னுருவங் கொண்டான். (கசு)

வே று.

துன்னுபன் மணியி னல்லணி சிறந்த [10]தொட்டிலுட் பட்டணை நிரம்பப், பொன்னரை ஞாணு நன்னுத னீறும் பொலியநோக் கஞ்ச னங் [11]துலங்க, மென்னகை செய்து தன்னடி மலரின் மேதகு பெரு விர லமுதுண், டன்னையில் புதல்வன் முன்னிளை யாடி யழுதனன் பவளவாய் நெரித்து. (கள)

அவ்வயின் வந்த தீவினை மாமி யகத்திடைப் புகாமுனங் கண்டே, வெவ்வுரை யோடி மூள்ளழன் மண்டி வெகுண்[12]டுமுன் னிவ்வணைக் கிடந்த, செவ்விய பால னுரென வினவத் தேவியுந் தெருமர லுற்றுக், கொவ்வையங் கனிவாய் திறந்துரை செய்வாள் கூடனு யகன்றிரு வருளால். (கஎ)

வே று.

தீதிலா வடிவி னெங்குந் திருவினு னென்றூர் மிக்க
மாதவ முடையா ளிந்தத் தொட்டிலுள் வளர்த்தி வைத்திப்
போதுதன் கணவ னோடும் போயினு ணோக்கிக் கொள்ளென்
றூதர மாமி கேளென் றடைவினி [13]னெடுங்கிச் சொன்னுள். (கஅ)

கடு. வாசிகை - மலர்மாலை.

கள. பட்டு அணை - பட்டாலாகிய அணை. நோக்கு - கண்ணில். அன்னையில் புதல்வன் - தாயில்லாத பிள்ளை; பிறப்பில்லாதவர்; "தாயில்லாப் பிள்ளை முகந்தனை நோக்கி" (திருவிளை. விருத்தகுமார. கூ.)

கக. திருவினுள் - லக்ஷ்மி. வளர்த்திவைத்து - தங்கச் செய்துவைத்து விட்டு.

(பி - ம்.) 1'இருந்திதுதர பூரணமாவுண்டெழிலரு' 2'ஆண்டிரண்' 3'இதை ஞ்சி' 4'மார்பினீண்' 5'னென்ன' 6'வேலை' 7'தன்னம்' 8'வந்தாள்' 9'வார்த்தை' 10'தொட்டிலும்' 11'தளங்க' 12'டுமுவ்' 13'னெடுங்கிச்சொல்வான்'

தரும்பிறர் பாலன் றன்னைத் தையலாய் நீயோ காப்பா
யிருந்தவா றழகி தைய கோவென [1]விடித்து [2]வீழ்த்துப்
பரந்தவொண் டொட்டி லோடும் பாலனைப் புறத்துப் போக்கி
[3]வருந்திடக் கதவ டைத்தாண் மருமக டனையுந் தள்ளி. (உ0)

வள்ளன்மென் முறுவல் கூரா மழவுருக் கரந்து பண்டைத்
தெள்ளுபே ருருவங் கொண்டு தீதிலா மடமா துக்கு
மொள்ளிய கற்பான் மிக்க வுமையுருக் கொடித்துக் கூட்டி
மெள்ளயான் சொக்க னென்று போயினன் விசும்பிற் காண. (உக)

அடியவர்க் கெளிய சொக்க னருடனைப் பாரீர் காணப்
பொடியணி மாது போன புதுமையைப் பாரீ ரென்று
படிமிசை யோர்க ளெல்லாம் பரவினர் நெடுமா [4]லேத்தக்
கடிகமழ் சடையி னனுங் காவல்சேர் மதுரை புக்கான். (உஉ)

ஆகத்திருவிருத்தம் - எகூ.

கூ உ.—மாறியாடின திருவிளையாடல்.*

முன்னமோர் காலந் தொல்லை முறைமையி னவனீ காத்து
மன்னுமோர் தென்னர் கோமான் மதுரையம் பதியி லோங்கும்
பொன்னெயி லிலங்கு கோயிற் புனிதனுக் கன்பு பூண்டு
பன்னெறித் தாணை சூழப் பகையற வாழு நாளில். (க)

குன்றவி லீச னூடுங் கூத்தினைக் கற்க லாகா
தென்றஞ் தொழிந்த கல்வி யாவையு மூற்றக் கற்று
வென்றிகொ ணுமை மெண்ணெண் கலைவல்லா னெனவி ளம்பி
யொன்றிய புகழை யெங்கும் பரப்பினு னுலகத் தோங்க. (உ)

அன்புறு வளவன் மிக்க சீர்த்திகேட் டாடன் முன்னு
வின்புறு கலைகள் யாவுங் கற்பமென் [5]றிகலிக் கற்றுத்
தன்பெய ருலகி லெண்ணெண் கலைவல்லா [6]னென்று சாற்றி
நன்புட னிருப்ப வாங்கோர் பாடக னடைந்தா னொடி. (கூ)

(கூ உ)

உ. அஃது - பாததூல்.

கூ. மிக்க சீர்த்தி, பாண்டிய னுடையது. வளவன்கேட்டு. இகலி-மாறுபட்டு; "இகல்விட்டு" (உகூ) என்பதனுல் சோழன் இப்போழுது மாறுபட்டிருத்தமை வலியுறும்.

* "பஞ்சவ னிறைந்த வன்புடன் வேண்ட, மாறிக் குனித்த நீறணி பெருமான்" (கல். உஎ.)

(பி - ம்.) [1]'அடித்து' [2]'வீழ்த்து' [3]'வருந்திவன்கதவு' [4]'வாழ்த்த', 'போற்ற' [5]'இகலித்' [6]'என்னச்'

எந்தைகேண் முற்றுங் கற்றூர் கீயலா லுண்டோ வென்று
மூந்துறப் [1]புகழ்ந்து வாழ்த்தி முடிவில்படல் சிறப்பு நல்க
வந்தநல் வரிசை யிற்போந் தாடக மாடக் கூடற்
கந்தனே யனைய கல்விக் கைதவன் றன்னைக் கண்டான். (ச)

மனத்தினைக் கவரு நல்ல வார்த்தைகள் சொல்ல வல்ல
வினைக்கொள்பா டகன்வ ணங்கி மீனவர் குலவி ளக்கே
கனத்தமா நிலத்து ளெண்ணெண் கலைவல்லா னென்னு நாம
நினக்கல வனைத்தும் வல்ல நேரியற் காகு மன்றே. (ஞ)

வளம்படு கூத்தும் வல்லன் மற்றதோ வறியாய் நீயென்
றுளம்பட வஞ்சா ஞகி யுரைத்திடக் கேட்ட மாறன்
றளர்ந்துரை செய்வான் கல்வி சாற்றின்மா நிலத்தி யாவு
மளந்தறி வாரு முண்டிங் கறிந்திடா தாரு முண்டே. (சு)

இன்னியல் வாண வென்ன யாசக ஞெக்கு மென்று
பின்னரு முரைப்ப வுட்கிப் பேசரும் விளிவிற் [2]கூடி
மன்னவன் காட்டா ஞகி [3]வாழ்த்தியா சகனே வேண்டும்
பொன்னணி யாடை நல்கி விடுத்தனன் பொலிவு கூர. (எ)

மந்திரி கட்குச் சொல்லி வழங்கிய விருதை நோக்கி
யந்தவொண் புயங்க நட்ட மாடிட வேண்டு மென்று
சந்துற வாமத் தாண்மேல் வரவலத் தாண்மே னின்று
சிந்தையால் வருந்தி [4]மூற்றக் கற்றனன் சிறிதுநாளில். (அ)

நானில மூய்ய முன்ன நாயக ஞடுங் கூத்தை
மானிட ராட லாகா தென்றநாம் வருந்திக் கற்றே
மீனமி லாத சென்னி செற்றத்தா லென்று சால
மீனவன் றுயர மூற்று நெஞ்சக மெலிவா ஞளும். (கூ)

அன்றியு மொரு[5]தா ஞன்றி யடித்ததாள் வளைத்தெ டுத்து
நின்றது நோவக் கண்மே நினைப்பிலோர் கணத்துப் போது
மின்றுநின் றிடவொண் ணுதா யிருந்த[6]திங் கென்றுங் கெட்டேன்
மன்றுற நின்ரு னந்தோ மாறி[7]நின் ரூடா தென்பான். (கo)

சு. உளம்பட - மனம் மெலிய ; இசசெய்யுளின் முன்னிரண்டடியால் அக்காலத்திருந்த கலைவாணர்களுடைய நன்றியறிவும் அஞ்சாமையும் வெளியா கின்றன.

எ. விளிவு - அவமானம்.

அ. விருது - எண்ணெண் கலைவல்லானென்பது. புயங்க நட்டம் - ஒரு வகை நடனம், "புயங்கனீ" (திருஞா. தே.) வாமத்தாள் - இடத்தாள்.

கo. நின்றல் - நிற்றல்; மெலித்தல். கெட்டேன்-ஐயோ.

(பி - ம்.) 1'புகழவாழ்த்து' 2'கூடி' 3'வாழ்த்தும்' 4'முற்றுங்' 5'தாளன்றி' 6 'இக்கென்னே' 7'நின்றுடிலொன்றே'

தருகன முதுபே [1]ரண்ட சராசர மனைத்துந் தாங்கும்
பெரியவ னுத லாலே பேசருந் தாள்வ ருத்தங்
கருதினங் குண்டா காதா யிருக்கினு மிருக்குங் காணிற்
றெரிவரி தவன்றன் செய்தி யெனமனந் தெளிவன் றேறுன். (கக)

இப்படி வருந்தல் கண்டே யிரங்கியீ சான கோணத்
தொப்பருந் திருமன் றத்தி லும்பர்கோன் வேண்ட மூன்ன
மெய்ப்பட வாடுங் கூத்தை விட்டுமெல் வலத்தாள் குஞ்சித்
தப்பெரும் புதுமைக் கூத்தை யாடினன் றிர வீசி. (கஉ)

வே று.

பேறு[2]சால் பதஞ்சலி முனியும் பேரருள்
வீறு[3]சால் வியாக்கிர முனியுங் கண்டுகண்
ணூறுபாய் தரமுன மாடுங் கூத்தனுர்
மாறனுழ் துயர்கெட மாறி யாடினுர். (கங)

வர்தரும் வலப்பத மிடம்வ ரப்பணை
சார்தரு மிடக்கரம் வலம்வ ரத்தனி
வாதுறு கூத்தினை யாடி மாசறு
கோதைசூழ் தாண்மிசைக் கொடியுங் கட்டினன். (கச)

ஏழிறரு மன்னவ னெழிவி லேதமும்
பொழின்மிசை யாடுவ்வார் வலியும் [4]போக்கிட
வழகுடன் மாறினின் ருடுங் கூத்தினைத்
தொழுதவம் பிகையும்வெற் துயர நீங்கினுள். (கடு)

வே று.

நத்தமார் நடுநள் ளியாமத் தருமறை நாதம் பாடப்
பெத்தமா னிடரா லாடுங் கூத்தினை யொழிந்து பீடா
ருத்தம வருங்கூத் தாட வும்பர்கோ னயன்மா லாதி
யித்திற மியார்வல் லாரென் றதிசயித் திறைஞ்சி ஞரால். (கசு)

தொண்டர்கள் விடியு மூன்சென் றுரைசெயத் தொழுதுட் கண்ட
வண்டமிழ் மாறன் வைத்த மனத்தினுங் கடிது வந்து
பண்டருங் கூத்துக் கண்டான் பரவினன் றெழுது வீழ்ந்தா
னண்டர்நா யகனே யுய்ந்தே னெனவதி சயித்தா லித்தான். (கள)

கஉ. ஈசானகோணம் - வடகீழ்மூலை. அதிரவீசி ஆடினுன்என்க; "அதிர வீசியாடுவாய்" (திருஞா. தே.) 'அதிரவீசியாடுவான்' என்பர்பின்; உசு.

கங. இதன் இறுதியடியிலுள்ள சொல்லெயம் பாராட்டத்தாலது.

கச. பணை - வாத்தியம்; உடுக்கைப் பறை. 'மாறியாடிக் கொடியிட்ட பெருமான்' என்பர்பின்னும்; உசு.

கள. பண்டு அருங்கூத்து - முன்பில்லாதகூத்து; பண்தரும்-இசையைத் தருகின்ற வென்றுமாம்.

(பி - ம்.) 1'அண்டஞ்சராசரம்' 2'சார்' 3'சார்' 4'போக்கிய'

வேறு.

தெரிதரு கருணைச் சோதியே[1]வலப்பொற் சேவடி யாலுள திருக்கூத் தரைசெயி லுலகத் தெங்கணுங் காண வுளதது புதுமையோ வல்ல வருமையா [2]விடப்பொற் சேவடி யாலிங் காடிய திதுபெரும் புதுமை [3]கருதிநின் றடியே னினியுனை வேண்டிக் கொள்வதோர் காரிய முண்டால்.

படியக மிசையிற் பரிவுள நினக்கே பரிவுள மதிக்குலம் விளங்க, வடிவுறு திருக்கூத் தென்றுமிவ் விடத்தே மன்னிட வேண்டுமென் றேத்த,முடியுடை வேந்தே யதுசெய்வ லென்றே முழங்கிட வுயர்திரு வாக்குக், கடிகொள்வான் மிசையிற் ரோன்றிடக்கண்டு துதித்தனன் களித்தகண் மலிப்ப. (கசு)

வேறு.

மன்னிய பெரிய சிற்றம் பலத்தினை வரிசை கூரப்
பொன்னிலுன் மேய்ந்து முத்தாற் புரிவலித் தணிசி றந்த
மின்னெளி மாணிக் கத்தால் விளிம்புசேர்த் திலங்க வெங்கும்
பன்மணித் தாம நாற்றிச் சிறப்பித்தான் பண்பு கூர. (உ0)

மதியினை நிகர்த்த முத்தக் கவிகையு [4]மாணிக் கத்தாட்
கதிர்விடு கொற்றக் கற்றைக் கவரியும் வயிரஞ் [5]சேர்ந்து
நிதிதரு கனக சிங்கா தனமுமீண் முடியும் பூணும்
புதியவா சிகையு மற்றுப் புவியும்[6]வேண் டுவகொ டுத்தான். (உக)

வேறு.

மன்னவர் மன்னன் பன்முறை வணங்கி மகிழ்ச்சிமாக் கடலிடை மூழ்கித், தன்னுடை யிடத்துப் [7]போந்தடி யவர்க டம்பெருந் துயரறிந் திரங்கும், பன்னியற் பெருமான் றன்வயின் [8]வைத்த பரிவினைக் கண்டுகண் டுவந்து, மின்னெளி விளங்கு மடங்கலா சனத்து மேதினி வியப்பவீற் றிருந்தான். (உஉ)

வேறு.

அன்றுமுன் னதிர வீசி யாடுவா னென்று மேவார்
குன்றமுன் மாறி [9]யாடிக் கொடியிட்ட பெருமா னென்று
மன்றுற வழங்கக் கேட்ட வளவனு மிகல்விட் டன்பிற்
சென்றுமுன் வழுத்தி ஞனச் சிவனிணுஞ் செழியர் கோவை. (உங)

கசு. வடிவுறுதிருக்கூத்து - சொக்கத்தாண்டவம்.

உ0. முன், "தென்மதுரை மாநகர்சேர் திருச்சிற்றம்பலம் போற்றி" (கடவுள்: கச) என்றார். புரிவலித்து - சுயிறுகட்டி.

உக. மாணிக்கத்தாள் - மாணிக்கத்தாலாகிய காம்பு.

உஉ. இயற்பெருமான் - சொக்கநாயகர்; இயல் - அழகு.

உங. மன்றுற - பலரறிய; கசு-இன் குறிப்பைப்பார்க்க.

(பி-ம்.) 1'இடப்பொற்' 2'வலப்பொற்' 3'கருதினிங்கு' 4'மாணிக்கக்காற்' 5 'சேர்த்து', 'சேர்த்த' 6'வேண்டுப' 7'பொருந்தடியவர்' 8'சேர்த்த' 9'ஆடக்'

இத்திருக் கோலந் தன்னைத் தொழுபவ ரென்றுங் குன்றுப்
புத்தியும் [1]பொருவி லாத பத்தியும் புகழு முண்டாய்ச்
சத்திய ஞால முற்றுந் தனிக்குடை நிழலி ணுண்டு
முத்தியும் பெறுவர் தீரா மும்மல [2]மம்மர் தீர்ந்தே. (உ)

[3] கோடிய லேன மாகிக் குவலய மிடந்து முன்னந்
தேடிய தெமொல் காணச் [4]செழுஞ்சுடர் மேனிச் சொக்கர்
வாடிய மாறன் றேற மதுரைமா மன்றுண் மாறி
யாடிய பாதங் கண்டே னருவினை கண்டி லேனே. (உடு)

ஆகத்திருவிருத்தம் - அகஅ.

கூ.கூ.—பழியஞ்சின திருவிளையாடல்.

மாசிலா மதுரையிலோர் மறையோன் முன்னுள் வனிதையொடு மூலைப்பாலுண் பால ரூடு, [5]கேசமுடன் மாமனிடத் தணையப் போங் கா னெறியிடையா தவன்வெய்ய கதிரா னெந்து, பேசரிய வருந்தண் ணீர்த் தாகத் தாங்கோர் பெருமைதரு வடதருவி னீழன் மேவி, [6]யா சின்மட மாதினைத்துக் கிடப்பக் கண்டே யகன்றனன்முன் றண்ணீர் கொண் டணைவா னெண்ணி. (க)

விரைவொடுபோ யினபின்னர் முன்னூர் வேடன் வேட்டை யின்மேல் வந்துவிழுங் கிளியை யெய்து [7]பரியவிலைக் கொம்பின்கட் டொங்கி [8]ஞான்ற பகழி[9]மருத் தாலசைந்து பாவை மார்பிற், கருகி விழா முதுகின்க ணுருவி [10]யப்பாற் கழலுங்காற் புனல்கொண்டு வந்து கண்ட, வரியகண வன்றரியா னுற்றுநுகி யழுதுவிழுந் தலமந் தா னுவி சோர. (உ)

அழகினு லருங்குலத்தா லன்பா னின்போ லாரொப்பா ரெனக் கினியா ருண்டென்[11]றறு, விழிபெருக முகத்தறைந்து கொளுங்கால் வேறூர்வேட்டை[12]வேட் டொருவேடன் விரைவிற் றோன்றப், பழி கருது மிவன்கண்டு வாரா யிந்தப் பழுதிலா வெழின்மாதை யேது வேண்டி, யிழிவுபடு குலத்தவனே கெடுவாய் கொன்ற யென்றுனஞ் சினனஞ்சா [13]வீரன் றானும். (ங)

(கூ.கூ)

க. ஆதவன் - சூரியன். வடதரு - ஆலமரம்.

உ. எய்து - எய்தலால். தொங்கி ஞான்ற - தொங்கிய; ஒருபொருட்பன் மொழி. பகழி - அம்பு.

(பி - ம்.) 1'புகழும்' 2'மாசு' 3'கோடுடையேனமாகி' 4'செஞ்சுடர்' 5'கேச முடை' 6'ஆசிலா' 7'பருவவிலை' 8 'றின்ற' 9'மாருதத்து' 10'ஆவி' 11 'ஆறு' 12'வேட்டடு' 13'நீசன்றானும்'

பறையுமது கொடிதடியேன் கொன்ற தில்லை [1]பழியையே
ரூராய்ந்து கொள்ளு மென்ன, மறையவன்போ காவாறு வெகுளி
பொங்கி மறித்தவனே நெறிப்படிமண் ணுலகாண்ம ன்ன, னறமலியும்
வாயிலிற்போ தென்று கொண்டாங் கழுங்குழவி யொடுமுறையிட்
டரற்றிச் சென்று, நெறியுடைய வமைச்சர்கா [2]ளிவ்வெவ் வேட
னெறியிடைக்கொன் ரூனெய்[3]தென் மாதை யென்ரூன். (சு)

[4] மந்திரிக ளவன்வருந்திப் புகன்ற வாறு மாறனுக்கு விண்ணப்
பஞ் செய்ய மாறன், சிந்தைபரி தவித்துநெடு வாயில் வந்து தீராம
[5] லழுங்குழவி தனையுமிக்க, வெந்துயரத் தொடுமுறையிட் டெய்தா
னென்னும் வேதியனே யுங்கண்டு மெலிதல் வேண்டா, வந்தணனீ
யெனச்சொல்லி யாற்றி வெய்ய வடுங்கணவே டனேநோக்கி யருளிச்
செய்வான். (ரு)

வினையுறுவே டுவநின்னைக் கொல்வ தில்லை மெய்ப்படநீ செய்தி
யுரை யென்ன வேடன், கனைகழற்ரூண் மன்னவனே நீதி வேந்தே
கருணையனே நாயடியேன் கொன்ற தில்லை, மனுநெறியி ரூராய்ந்து
கொள்க வென்று வணங்கியுட னடுங்கி[6]வியர்த் துரைப்பக் கண்டு,
தனதுளமொந் தருமறையோன் மனத்த கத்துத் தணியாத பெருந்
துயரந் தணியச் சொல்வான். (சூ)

ஏதமொழி மறையோனே கரிய வேட [7]னியம்புமொழி கேட்
டனையே யாமா ராய்ந்து, நீதிபடச் [8]சொலநின்றே மம்பால் வீந்த நே
ரிழைகுன் ரூவாறு நலஞ்செய் [9]தெய்திங், காதியதி யொருவராற்
[10]றடுப்ப வொண்ணு ததநீயு மறிதியே யெனவி டுப்ப, வேதி
யன்[11]போய் நனியழுங்குங் கிளைஞர்க் கூட்டி விதியின்கட் டகுந்தக
னஞ் செய்தான் விம்மி. (எ)

செந்நெறிசேர் சுந்தரனுக் கன்பு பூண்ட தென்னவன்வே டனை
யழைத்துத் தெளிந்திப்போ தே, யுன்னையும்வே ருடன்களவன் சிறை
யிற் போகென் றுயர்ந்த[12]கொடுஞ் சிறைக்கூடத் தடைத்துத் தானே,
யென்னையு[13]மா ரூடைமதுரைச் சொக்க நாத னெங்குமூளான் யாவு
மளந் தறிவான் மூன்னர்; மன்னியிது விளங்கினல்லால் விளங்கா
தென்று வரிசைதிக ழாலயத்து வந்து புக்கான். (அ)

சு. பறையும் அது - சொல்லிய அச்சொல். போது - வா.

சூ. உடல்நடுங்கி.

எ. ஏதம் ஒழி - துன்பம் ஒழிவாயாக. இங்குஎய்து - இங்கேவா. தகும் தகனம் - தன்மானமாக இறந்தவர்க்குச் செய்தற்குத்தக்க தகனம்.

(பி - ம்.) 1'பழியையுநீர்' 2'இவ்வெய்வேடன்' 3'ரூனெம்மாதை' 4'மந் திரிகடியருழந்துகண்ட' 5'அருங்கணீ' 6வெயர்த்து' 7'இயம்புமது' 8'கொல நின்றேம்', 'கொல்நின்றேமைப்பால்வீந்த' 9'இந்த,வாதிவிதி' 10'தப்ப' 11'போய்த் தனியழுங்குங்' 12'பெருஞ்' 13'ஆளுடைச் சொக்கநாத னெங்கோன்'

தென்றமிழ்நா டுடையானே யறஞ்சொல் கோவே தேவாதி தே
வேகின் னருளால் வைய, நன்றிபயக் திடக்காக்கு மடிமைக் கின்று
நாடரிய பெரும்பழிவக் தடைந்த தெங்கு, நின்றறிய வல்லானீ யல்லா
லுண்டோ நினக்கடிமை வேண்டினறி விக்தி தோன்ற,வென்றலுமஞ்
சினவீச னகர்சோ திக்தற் கெய்[1]தெய்தி னறிவிப்ப மென்ரூன் றேற.

மன்னவன்விண் மிசைக்கேட்டு மகிழ்ந்தா லித்து வளமைபுனை
தன்னிடத்து [2]வந்து விள்ளான், முன்னைமுறை யுண்டி[3]கழித் தரு
ளாற் ரூனே முற்றியகங் குற்[4]போதி னகர்சோ திப்பான், றன்விரை
விற் போந்துலவுங் காலைச் சேர்ந்தோர் தவப்பிரம சாரிமணஞ் செய்யா
கின்ற, மின்னு[5]மனைப் புறத்துறுதிண் ணையின்க ணியாரும் [6]வெருவு
முருப் புனைந்திருவர் மேவக் கண்டான். (கo)

வே று.

[7]தெரிவுற விவரை யறிகுவ மென்று சென்றரு கணைந்துரு வொ
ளித்துப், பொருவரும் வீர னின்றிடங் காலைப் புலப்பட நிலைப்பட
ருசைப்பார், விரையுருப் புனைந்து மணஞ்செயு மிவனை விரைவொடு
புதுமையா வின்று, பரிவொடு கொண்டு போய்விட வேண்டும் பந்த
ரோர் பரிந்திட வென்ரூர். (கக)

ஈங்கிது பகரக் கேட்டவாள் வேந்த னிலங்கவீ தறிகுவ மென்
றே, நீங்கருங் கருணைச் சொக்கநா தனையே நினைந்துகன் ஞண்மையே
துணையா, வோங்கிய மனத்தின் வெளிப்பட நணுகி [8]யுரன்பட மருங்
குற நின்றே, [9]யாங்குல குயிர்க ளேங்கிடு முருக்கொண் டணைந்தநீர்
யார்கொலோ வறியேன். (கஉ)

இங்குரை செய்த வாறுகேட் டனனின் றெப்படி மெய்ப்பட
மன்ற, றங்கிய பெருங்கல் யாணமுன் செய்யுந் தார்மண வாளனின்
னுயிரை,மங்குறக் கவர்வ துரைசெயு மென்ன மற்றவர் தீரரு யிருந்
தாய், [10]கொங்கவிழ் தாம வீரனே யாங்கள் [11]யமபடர் கொண்டு[12]போ
மாகேள். (கஙு)

இம்மண வாளன் மெல்லிள மாதை யினியகைப் பிடித்திடு மள
விற்,செம்மனை யகத்துக் கொல்லவற் ரூன திறம்படி [13]கோடிலா மொ

கூ. 'அஞ்சினவீசன்' என்பது, சொக்கராயகர் பழிக்கு அஞ்சியதைப் புலப்படுத்தியது.

கo. விள்ளான் - சொல்லானாகி. [ளவை.

கக. படர் - யமதூதர். விரை - மலர் சந்தனம் முதலிய கறுமணமுள்

கச. வற்ரூன - வன்மையையுடையதான. ஓர்ந்த தும்பு-கட்டியகயிறு.

(பி - ம்.) 1 'எய்தெயதறிவிப்பல்' 2 'வைத்து' 3 'களித்து' 4 'போதுள்' 5 'மதைப்' 6'வெருவவுரு' 7'தெரிவுறுமிவரை' 8'உரம்பட', 'உரன்பெற' 9'ஆங் குலவுயிர்கள்' 10 'கொங்கலர்', 'கொங்குவீழ்' 11 'யமன்படர்' 12 'போமதி' 13'கொட்டிலா'

ட்டை, வெம்மைசேர் பசுவுண் டார்த்ததும் பறுத்து [1]விடுப்பமற் றது
திரண் முழவின், சும்மையின் [2]வெருண்டு முட்டிடக் கொண்டு போகு
வர் தொழுதியு ணுடி. (கச)

வேறு.

இயம தூத ரைய மில்லை யென்று சொல்ல மன்னவ
னயம தெய்தி நீதி வாயி னண்ணி வாடு முனிவனைப்
பயமு ருத முழைத்து வந்து படர்கள் பின்னி றுத்தியே
யயமு ருது படர்கள் சொல்லு மறிவு கேளெ னச்சொனன். (கஞ)

நன்றி கொண்ட முனிவ னெஞ்சு தேற நாத னருளினு
னின்ற தூத னுக்கு மற்று யர்ந்த தூத னினைவுறக்
கொன்ற [3]வீறு கூறு மொன்று குன்ற மன்ன குஞ்சர
மொன்று சீய மொன்று நாக மொன்று புண்ட ரீகமால். (கசு)

மன்னு நீதி கோடி டாத வையு மாளு மன்னவன்
றன்னை யும்[4]ம றைத்தி றச்ச டங்கடங்க லும்முடித்
துன்ன ருந்த வத்தி ஞ்[5]லுயர்ந்த யாக முனியையு
மின்ன மூண்டு கொன்ற தெந்தை யந்த கன்ற னேவலால். (கள)

ஆல நீழ றன்னின் மன்னு மழகின் மிக்க பழுதிலோர்
மேல்கு லத்து தித்த [6]செவ்வி வேதி யன்றன் மாதைமுன்
னேல வேட ஞேர்சு கத்தை யெய்து [7]கொம்பின் ஞான்றதோர்
கோல சைத்து வீழ்த்தி யாவி கொண்ட தின்று கண்டனை. (கஅ)

மாணம் வந்த காற்று ரும்பும் வச்சி ரம்ம தாய்விடுங்
[8] கருதி யிங்க தெங்ங னென்று காணின் முன்ன மன்னுமென்
பெரிய தந்தை யசனெ னுந்[9]தொல் பெருமை மிக்க காவல
னிரிமை கொண்ட வடிவ மங்கை யுயிர்க வர்ந்த வாறுகேள். (கசு)

வடிவ மிஞ்சு கவினி னிந்து மதியை ஞாலம் வெருவமென்
கொடியி லங்கு பூவின் மாலை வீழ வாவி கொண்டனன்
விடுவி டின்று கதையை யிந்த வெய்ய தேனு வான்மணங்
திடுமி லங்கு பிரம சாரி யினிமை கூரு முயிரினை. (உ0)

கஞ. அயம்=ஐயம் - சந்தேகம்.

கசு. உயர்ந்ததூதன் - இருந்தவனுகிய பெரியதூதன். கூறும்-கூறுவான்.

கஅ. சுகத்தை - கிளியை. கோல் - அம்பு. எய்ததை உ - ஆம் செய்யுளீற்றுப் பலவின்பால் வினைமுற்று. கண்டனை - முன்னிலை ஒருமை வினைமுற்று.

கக. பெரியதந்தை: எழுவாய். அசன் - அசமகாராசர்; இரகு மகாராசருடைய புத்திரர்; தசரதருடையதந்தை. வடிவமங்கை - இந்துமதி.

உ0. இந்துமதி - அசமகாராசர் மனைவி; நாரதமுனிவர் வீணையிற் பூண்டிருந்த பூமாலை காற்றால் வீழப்பெற்று இந்துமதி இறந்தனளென்பது, இரகு

(பி - ம்.) 1'விடுதலும்' 2'வெருட்டி' 3 'வீறுகவில்லனென்று' 4 'மறைத்திடச்' 5'உகத்தயாக' 6'செல்வி' 7'தொக்கி' 8'கருதினீங்கது' 9'சொல்'

வே று.

விரைவொடு கொடி[1]போ கேமேல் வெய்யநங் கூற்று வேந்தன்
பரிவுற முனிவ னென்று பன்முறை தம்மிற் கூற
வரமுனி யதிச யித்து வழுதிகே ளிவர்கள் சொன்ன
வருளிலா வுரைகள் கேட்டே னறிவதொன் றின்னு முண்டால். (உக)

இம்மண வாளன் [2]மேய வின்னுயிர் மருப்பில் கோவாற்
செம்மையிற் கவர்வ மென்றூர் சிறிதுபோ திங்கு கின்று
மெய்ம்மையோ வன்றே வென்று விளங்குவ மென்னக் கேட்ட
வம்மனு வேந்தர் வேந்த னதுதகு மென்று நின்றான். (உஉ)

நன்னெறிக் கன்னி மாதை நயந்துகைப் பிடியா முன்னந்
துன்னுபல் லியமு ழக்கிற் றும்பிடைக் கிடந்த தேனு
முன்னெழ [3]வெருட்சி பொங்கி முளைத்தளை யறுத்து மொட்டை
மன்னிய சிரத்தான் முட்டிக் கொன்றது மன்ற லோனே. (உங)

வே று.

அணிபொலி மறையவன் வீய வக்கண
மணமனை பிணமனை யாக மற்றவ
ணணுகிய மனிதர்கள் கண்டு [4]நாமொடு
தணிவற வரற்றினர் தலையை மோதினர். (உச)

உயிர்நிலை யாமையை யுணர்ந்து மன்னனும்
பயமொடு கூடினன் படரும் போயினர்
நயமுறு மாமுனி தெளிந்து நாவுறச்
செயிரற வழுத்தினன் றென்ன னீதியை. (உரு)

வம்சம், அ-ஆம் சருக்கத்திற் கூறப்பெற்றுள்ள கதை. இதனைத் தமிழ் இராகவங்கீசம், இந்துமதி பிறப்புநீங்குபடலம், சஉ-ஆம் செய்யுள் முதலியவற்றாலும், "நன்ஞண மதியக் குடையோன் குலோத்துங்க ஞகைவெற்பிற், பொன்ஞ ளயோத்தியி லுண்டாய பாவம் புனத்துமுண்டோ, அங்காளும் பெண்பழி கொண்டது மாலையென் றருஞ்சொல்வா, ரிங்காளும் பெண்பழி கொள்ளவிம் மாலை யெதிர்பட்டதே" (குலோத்துங்கசோழன் கோவை, கசரு) என்னுஞ் செய்யுளாலுமுணர்க. தேனுவால - பசுவினால.

உஉ. மருப்பு இலகோ - கொம்பில்லாதபசு.

உங. முனைத்தளை - முனையிற்கட்டியகட்டு.

உச. "மன்றல் கறங்க மணப்பறை யாயின, வன்றவற் காங்கே பிணப்பறையாய்" (நாலடி. உங), "மணமகனே பிணமகனுய் மணப்பறையே பிணப்பறையாய், அணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலி யாய்க்கழிய" (திருவிளை. பழியஞ்சிய. உக) எனபவை இக்கே யறியற்பாலன. ஈம்-அச்சம்.

(பி - ம்.) 1'போதேமேல்' 2'மேவுமின்னுயிர்' 3'வெருட்சி' 4'காவுற'

வே று.

அரிய வெங்கை செயல்கண் டதிசயித் தந்த ணன்றன் னெடுங்
தன் னிடத்திடைப், பரிவி னோடு மடைந்தாங் கமைச்சரைப் பரிந்
தோற்றத் தழைத்துப் பழுதறத், தெரிய வோதிட யாமினி யிற்புக்க
செய்தி யாவையுங் கேட்டருட் டென்னவ, தருமை நூனெறி யாய்ந்திடு
மன்னவர் தலைவ னீயல தில்லெனச் சாற்றினர். (உசு)

வழுத்த மைச்சரை நோக்கி[1]யின் றிங்கெனை வரிசை கூரப் [2]புக
ழுவ தென்கொனீ, ரிழுக்க தாமிப் பழிக்கஞ்சி நீக்கினன் யாவும் வல்ல
வருட்சொக்க நாயக, னழித்தி யாவையு மாக்கவல் லான்றன தருளை
வாழ்த்து மெனவாழ்த்தி யேத்தினர், பொழிற்குள் வாழு மனிதருஞ்
சுந்தரன் பொருவி னீதிகண் டேத்திப் புகழ்ந்தனர். (உஎ)

வேட னைச்சிறை விட்டவ னெஞ்சகம் விரும்ப வேண்டுப [3]நல்கி
நின் னுற்றவர், தேடி முன்னரீ போகெனப் போக்கியே தீதி லாத முனி
க்குஞ் சிறப்புட, னடி நன்மணஞ் செய்யென் றிரும்பொரு ணல்க வா
ங்கி நயந்து வியந்துபோ, யாடி நன்மணஞ் [4]செய்தொண் புதல்வனை
டருளை வாழ்த்தி யிருந்தன னந்தணன். (உஅ)

வே று.

அத்தனப் படுப ழிக்கே யஞ்சியக் கணத்துத் தோன்ற
வுத்தமப் பத்தி மாறற் குணர்வுற [5]வுணர்த்த லாலே
பத்தர்கள் பத்த னுக்குப் [6]பழியஞ்சுஞ் சொக்க னென்றோர்
வித்தகப் பெரிய நாமம் விளங்கிய தவனி மீது. (உக)

வே று.

[7]மூட்டிப் பார்ப்பான் மூறையீடு
மொட்டைப் பசுவின் பாய்ச்சலொடும்
விட்டுப் போன தெனவின்றும்
வட்டத் தலத்து வழங்கியதே. (ஈ0)

ஆகத்திருவிருத்தம் - அசஅ.

உசு. யாமினியில் - இரவில்.

உஎ. யாவையும் அழித்தது ஆக்கவல்லான் - எல்லாப்பொருள்களையும் சங்
கரித்துச் சிருட்டித்தருள வல்லமையுடையவர்.

உக. சோமசுந்தரக்கடவுள் பழிக்கஞ்சியதை, "தென்றமிழ் நாடு" (கூ) என்
னுஞ் செய்யுளாலும் உணர்க; "பாவமே பாவம் பழியஞ்சுஞ் சொக்கருக்கே"
(மதுரைக். உக.)

ஈ0. இச்செய்யுளின் பொருள் ஒருபழமொழியாக வழங்குகின்றது.

(பி-ம்.) 1'யிங்கென்றனை' 2'புகலுவ' 3'நல்கிமுன்' 4'செய்து' 5'உரைத்த
லாலே' 6'பழியஞ்செ', 'பழிக்கஞ்செ' 7'சூட்டிட்'

கூச.—மகாபாதகந்தீர்த்த திருவிளையாடல்.

—✻✻✻—

வளவியதோர் நன்னுட்டு முன்னோர் கால மாசிலா வுயர்மறையோன் றனக்கு மிக்க, விளமைதரு பருவத்தே மனைவி யுண்டா யிவள் வயினோர் புதல்வன்விதி வசதாற றோன்றி, யளியினுற வளர்ந்தநங்க னேவா லேவுண் டன்புடைமா தாவைமன மருட்டிப் புல்ல,வுளமறிந்த தாதையவ மானவஞ்ச முணர்வுடையோர் விளளாரென் றெளித்துப் போந்தான். (க)

பிறரறியி னீதிகுன்று மென்று கொண்டு பேணியுள மெலிந் திருப்போன் றனிததோர் காளிற, பொறையறியா மைந்தனுமா தாவுந் தம்மிற் புணருமிடத தறியாது செல்லக் கண்ட, வுறுபுதல்வன் மண் வெட்டுங் கொட்டால் [1]வெட்டா வுயிர்கவர்ந்தான் மற்றிதனை யோர்ந்து பார்ப்பி, னறிவிலிவேள் [2]கொடுங்கணை[3]பட் டுளைந்தார்க் கந்தோ வற மெங்கே நெறியெங்கே யன்போ வெங்கே. (உ)

மற்றவனுந் தந்தையுயிர் [4]செகுத்த பின்றை வஞ்சமுடன் றற் சேர்ந்தார் தம்மைக் கூட்டி, யுற்றதுரை யாளினிய பாலுஞ் சோறு மூண்ணுங்கா லெயில் விக்கிச் செததா னென்று, சற்றுமிரங் காதிருண்ட கங்குற் போதே தாழாம லெடுத்தழலுந் தழலிற் சுட்டுப், பெற்றகொடும் பாவியொடு மிலலத் துள்ள பிறங்குபொருள் கவர்ந்தகன்றான் [5]பெரிது தூரம். (ங)

ஆங்கொருவ ரறியாம லிரவிற் போங்கா லாறலைக்குங் கொடுவே டர் கண்டு சோர, வீங்கிவன்ற னுடல்[6]புடைப்ப வடித்துக் கையி னிரும்பொருளுங் [7]கவர்ந்தெழின்மா தையுங்கைக் கொண்டு, தாங்க ருது மீயகினர்மற் றென்னேவினரு சாற்றுவது தலத்தின்க ணெவரும் காணத், தீங்ககல நினைப்பதொர்கா ரியந்தா னுருஞ் சிவன்கொடுபோய் விடுவதொர்கா ரியந்தானுமே. (ச)

ஆறிடையி லலறிவிழுந் தெழுந்து வெய்ய வரும்பாவி யடியுண்ட புண்ணீ மொய்ப்ப, வேறெருவர் துணையின்றிப் புழுத்துத் தானே வீர்த்தசிரத் தொடுந்துணிக்கா வணைத்துநெடு, நாமுமுட லகத்தோடு

(கூச)

க. அவமானவஞ்சம் - அவமானத்தைத் தரும் வஞ்சனைத்தொழில்; "அவ மான வஞ்சம பிதர்கருை யார்க ணலோர்" என்பர் பின்னும்; கூறு: கo.

உ. கொட்டு - மண்வெட்டி.

ங. புண்ணில் ஈமொய்ப்ப. ஆரோவென்னத் திரிந்தான்.

(பி-ம்) 1'வெட்டி' 2'கொடுங்கணையேபட்டுழைப்பார்க்கு' 3'பட்டாலக்தோ' 4 'செகுத்துப்பின்னர் வஞ்சமுடைததாசேர்தா' 5'பெரிய' 6'புடைப்பவிடித் துக்', 'புடைப்பப்பிடித்துக்' 7 'கவர்ந்தினள்'

[1]மடவி தோறு நாணமின்றி மனைகடொறுஞ் சென்று சென்று, சோறிரந்து [2]தின்றுழன்று திரிந்தான் கண்டோர் சொல்லுகொடும் பாவியிவ ஞரோ வென்ன. (கு)

தன்னுணர்வால் விதிவசத்தை நினைந்து நொந்து சார்ந்தபெரும் பாதகத்தைத் தணிப்பா னெண்ணி, [3]முன்னருந்தீ வினைதீர்க்குங் கங்கை கன்னி முதலான தீர்த்தங்கள் விரும்பிப் போங்காற், பன்னெறி சேர் பிரமகத்தி [4]பற்கடித்துப் பயமுறுத்திப் பின்றொடரப் பரிந்து பார்ப்பான், பின்னொருவர்க் காணுன்முன் னதனைக் கண்டு பிரமிப்பன் வெருவிப்பன் முறைகம் பிப்பன். (சு)

ஆர்ந்தபெரும் புனற்றீர்த்தத் துறைசெ லுங்கா லாடாமற் புறத்தீர்த்துப்போடக் கண்டு, போந்தவனி யோரிடத்துந் தரிப்ப தின்றிப் புகழ்த்தாதை வதைபொருவில் கருணை யாயைச், சேர்ந்தகொடும் பாவமிரண் டானு நொந்து திரிதருவோ னெந்நாளும் யாவ ரேனுஞ், சார்ந்தவர்வெம் பாவங்க ணீக்குஞ் சொக்கன் றகுகடம்ப மாவனத்தைச் சார்ந்தான் வந்தே. (எ)

நீக்கலரும் புகழ்க்கினியான் கருணை மெய்ய னீதிதிகழ் பதியி னெறி வசத்தான் முன்ன, ராக்கியுறை றவத்தால்வந் தணையுங் காலை யங்கயற்கண் [5]மங்கையைநல லணிதி ருத்தி, நோக்கியசு துரைசெய்வா னுமையே மார னுவலரும்பூங் கொடிங்களேயை தைத்தால் யாவர், காக்க[6]வலா ரரிதரிதெவ் விடதது மந்தக் கணைக்கிலக்கா காதாரு முண்டோ [7]காணின். (அ)

மதனகணையா னெந்தவன்ரூன் வரைந்த கற்பின் மனைவியின்க ணின்றுமேன னிரயங் காணு, னிதஞ்செய்பிறர் மனைச்சேறல் விரும்பி ஞனே லினிமைதரு முயர்துறகங் காணுன் மற்றும, வதங் கடரு [8]மகங்களே யிலவாழ் வுக்கோர் வேராவா ஞலென வரம்பி னிலலான், பதங்கொடுத்த நமையும் விடா னவனுக கென்றும் பட்டகுணஞ் சுட்டாலுந் தீரா தன்றே. (கூ)

வேறு.

இன்னன சொல்லி நல்ல வினைமைகூ றின்பந் துய்த்து
மன்னவீற் றிருக்குங் காலை வருவரும் பாவி மண்ணிற்
றன்னிக ரிலலா வாதத் தானவை பவதத் தாலே
முன்னுறச் சென்றுரூன் கண்டான் மூவருங் காணு தானே. (கo)

கு. கன்னி - கன்னியாகுமரியம்மன். ஆறு. கம்பிப்புன் - நடுங்குவன்.

எ. புறத்துஈர்த்து - வெளியேஇழுத்து.

கூ. 'படடகுணம் சுட்டாலுந்தீராது' என்பது ஒருபழமொழி.

கo. தானவைபவம் - தலவிசேடம்.

(பி - ம்.) 1 'அடவிதோறு நாடோறும் வழிதோறு காணமின்றி' 2 'திரிந்துழன்றுதின்றுரூன்' 3'முன்னிருந்' 4'பலலிறுக்கி', 'பல்லுறுக்கி' 5'அம்மையை' 6 'வலாரிதரிதெவ்' 7'என்ன' 8'அருங்களேவில் வாழ்க்கைக்கு'

அறமலி நந்தி 1தேவ ரருங்கொடும் பாவி நீயார்
மூறையிலா தவனே சீசீ போவெனக் கேட்ட மூக்க
ணிறையவன் கருணை மெய்ய ஞைகலா லிரங்கிக் 2கெட்டே
னறிவிலான் யாரு மில்லான் வரவிடென் றருள்சு ரந்தான். (ஙக)

ஆக்கிய வுலகத் தின்க ணறிவுடைப் பெரியோ ராலு
நீக்கருங் கொடிய பாவ நின்னிடத் தடைந்த தந்தோ
போக்கவோர் 3விதியு மில்லை யாயினும் போக்கு கின்றேம்
பாக்கிய வசத்தா னம்மைக் காணலாற் பரிவு கூர்ந்தே. (ஙஉ)

ஒண்பொரு ணின்கை யில்லை யுயர்ந்ததா னஞ்செய் யென்னப்
பண்புறக் 4கேணி னக்குப் பரிந்தியாம் விதிக்கு மாறு
மண்புகழ் 5தருகோ வுக்குப் புற்பிடி வழங்கு நந்தம்
விண்கொளா லயத்தை யங்கப் 6பதக்கிணஞ் செய்மெய்ந் நோவ. (ஙங)

இன்புற வினிய காயத் திரியையா யிரத்தெட் டோது
நன்புறு முருத்தி ரத்தை நாளுமத் தியய னஞ்செ
யன்பின்மெய்ம் முழுதும் பூதி யணியெழுத் தைந்து மோது
மென்பொரு டருந்தொல் வேத விதியிவை யின்னுங் கேண்மோ. ()

ச வ லு.

நம்மடி யவர்க டம்மடி மலரி னணுகுமொண் புனல்பரு குரைப்பின், மெய்ம்மையை யுரையா மாடிய புனலில் விதியின்முச் சந்தியு மூழ்கு, செம்மையோர் பொழுது பிச்சைகொண் 7டுண்டைடம் புலனெயுஞ் செறுவிடா திவற்றை, மும்மைசேர் யாண்டு நோக்கிரும் பாவ நீக்குவை 8மூனிவரும் வியப்ப. (ஙரு)

அப்பெரும் பாவிக் கித்திறஞ் செய்யென் றடைவுற விதித்தல் கண்டெழில்சே, ரொப்பரும் பரிவி னங்கயற் கண்ணி யுளத்ததி சயித்தடி பரவிச், செப்பரும் பாவிக் கருள்சுரந் தறங்கள் செப்பிய தெப்படி யென்று, மெய்ப்பட வினவத் துப்பமர் மெய்யன் 9விருப்புற வறத்திற முரைப்பான். (ஙசு)

ஙக. இறையவன்: எழுவாய்.

ஙஉ. பரிவுகூர்ந்து போக்குகின்றேம்.

ஙங. தானஞ்செய்யென்று சொல்லுதற்கு உன்கையிற் பொருளில்லை. கோவுக்கு - பசுவுக்கு.

ஙச. நன்பு - நன்மை. உருத்திரம் - ஸ்ரீருத்திரம். பூதி - விபூதி.

ஙரு. செறு - அடக்கு. நோக்கு - செய்.

(பி - ம்.) 1 'கேசர்' 2'கேட்டே' 3'விதியினில்லையாயினும் போக்குவோம் யாம்' 4'கேண்மோ நின்னைப்பரிந்து நாமுரைக்குமாறு' 5'கோவினுக்கு' 6'பிதக் கணம்', 'பிரதக்கணம்' 7'உண்மை' 8'மூவரும்' 9விதிப்புற

மங்கைகே ளறிவு [1]பொறையற நீதி வாய்மை[2]நே ரச்சமன் புடையோ, ரங்கவர்க் காப்ப தரிசய மல்ல வாங்கவை யவர்தமைக் காக்குந் தங்கிய விவற்றுட் பிறங்கிட வொன்றுஞ் சார்விலா தின்னு யிர் தளர்வோ, [3]ரிங்கவர் தம்மைக் காத்தல்கா ணுலகி லரிசய மியம் பிடி லன்றே. (கள)

ஆதலா லிவன்கட் கருணையாஞ் செய்தே மென்றுபே ரன்பொ டிங் கூடி, வேதநா யகனு மாநிநா யகியும் [4]விருப்புவைத் தறத்திறம் வினவி, நீதியின் மறைய மறையவ[5]னிறைவ னிகழ்த்திய வாறுசெய் தொழிவில், பாதக [6]நீக்கி விளங்கின னெவரும் பன்முறை யதிச யித் தேத்த. (கஅ)

வே று.

உன்ன ரும்பெரும் பாவ மொழித்தது
முன்னங் கண்டனிர் மூக்கட் சிவனலா
லன்னே யொப்ப வணுக்கட்கு நல்லவர்
பின்ன ருஞ்சில ருண்டோ பிதற்றரே. (கக)

உருகாதநீச.....ஆணையால். [முழுப்பாகத்தைரு-ஆம் பக்கம்பார்க்க.]

ஆகத்திருவிருத்தம் - அசுள.

கூரு.—அங்கம்வெட்டின திருவிளையாடல்.*

தெண்டிரை[7]வா ரிதியுடுத்த மண்ம கட்குத் திலக[8]மெனு மது ரையின்கண் முன்னோர் காலம், பண்புடையா ளொருபணிக்கன் றோன்றி யெண்ணில் பத்திரிகழ் புதல்வர்க்குப் பலவி தஞ்சே,ரொண் டிறலா யுதகலைகள் பயிற்றி[9]யங்க ணொருசாமப் பொழுதொழித்தா லயத்தி னண்ணி, வண்புகழ்சேர் சொக்கனருள் கூர நாளும் வலஞ் செய்தன் பாற்[10]றொழுவன் மற்றெப் போதும். (க)

கக. அணுக்கட்கு - உயிர்களுக்கு.

(கூரு)

க. பணிக்கன் - யுத்தமுறையைக் கற்பிப்பவன்; கச.

* "தாரமுய்த்தது பாணத்கருளோடே" (தீருநா. திருவியமகம், திருவால வாய்); "ஒருகனி யடியாற் குதவுதல் வேண்டி, மண்ணவர் காணவட்டணை வா ளெடுத், தாதி சாரணை யடர்ந்திலப் பார்வை, வாளுட னெருக்கன் மார்பொடு மூனைத்தல்,பற்றிநின் றடர்த்த லுட்கையின் முற்றத், லானனத் தொட்ட லணி மயிர்ப் புரோக, முட்கலக் தெடுத்த லொசிந்திட மழைத்தல், கையொடு கட்டல் கடிந்துள ளழைத்தலென், றிவ்வகை பிறவு மெதிரம சேறி,யவன்பகை முறித்த வரும்பெருங் கடவுள்" (கலி. நிக.)

(பி - ம்.) 1'பொறையறை' 2'தேர்', 'சேர்' 3'இங்கிவர்' 4'விருப்புடை யறத்திறம்வளம்பி' 5'நிகழ்' 6'நீக்கிப்போயினன்' 7'வாருதி' 8'அன்ன' 9'அங் கோரொருசாமப்' 10'ரூழ்தெழுவன்'

எற்றிகழு மூடன்மூத்தோன் மனைவி தானு மிளமைதரு பருவத் தே கற்பான் மூத்தாண், மற்றவன்றன் கைப்பட்ட புதல்வ ரெல்லாம் வழிபாடு செய்ததமக் கியன்றதொன்று,குற்றமறக் கொடித்தடைவிற் போதுங் [1]காலக் குழுவின்கட் சித்தனெனு மொருவன் [2]கூடாச், செற்றமொடு மனத்தொன்று [3]வைத்து ஞாளுஞ் செய்தொன்று பின் றிரிவன் [4]சிறந்தோர் போல. (உ)

தீதிலா வினிமைதரு மூயர்ப ணிக்கன் றீங்கறியா ஞதலிஞற் றீமைகூரு, மேதிலா வுளக்கருத்தை யறியா ஞகி யிட்டதிசைச் சொட்டைமுத லெண்ணில் கோடிக், கோதில்படைக் கலமுற்று மன்பு கூர்ந்து கொடித்தனையா சொப்பனைக் [5]கூற மண்ணிற், சாத னையா லெனைவெல்வா ரில்லை யென்று தனைவியந் [6]தாங் காரித்துத் திரிவன் சால. (ஙூ)

வே று.

என்றவங் கங்கள் வென்றே யிகல்படத் தானும் வேறோ ரான்றவொண் கெருடி கட்டி யளவிலா மைந்தர்க் கூட்டித் தோன்றமுன் சாதிப் பித்த [7]றாகெறிச் சிரம நீதி சான்றவ ராய மற்றைத் தயாவுளோர் கண்டு சீறி. (ச)

ஆயுத கலைகள் வல்ல வசைவிலா சானை நண்ணி நாயனீ ரேநீ ரொன்று மறிகிலீர் நம்மு ளோரை நேயமி லாத வஞ்ச நெஞ்சகச் சித்த னீக்கித் தாயமாய்க் கெருடி கட்டிச் சாதிப்பிக் கின்ற னின்றே. (ஞ)

என்றவர் கூறக் [8]கேட்ட வினையிலா னவன்செய் குற்ற மொன்றையுங் [9]காண னம்பே ரோங்கடி யார்க்கு நல்லான் கன்றல்[10]வேண் டான மக்கோர் கருணையுள் ளானென் றுறி [11]நன்றிகூர் பணிக்கு மீந்து போதுகா[12]ணஞ்ச நெஞ்சன். (சு)

உ. எல் - ஒளி. கூடா - கூடி; வஞ்சுசேர்ந்து.

ஙூ. சொட்டை - ஒருவகை ஆயுதம்; "சொட்டைவாள் பரிசை" (வி. பா ரத. இருட்டின. கoக.) ஆங்காரித்து - அகங்காரங்கொண்டு.

ச. அங்கம் - போர், யுத்தபரிபாஷை விசேடம். கெருடி - வில்வித்தை முதலியவை பயிலும் கூடம். மைந்தர் - மாணாக்கர் சிரமம் - யுத்தப்பயிற்சி; "சிலைக்குரு விறற்குரு குலக்குல ரருக்குவரு சிரமசிலை காண்மினென" (வி. பா ரத. வாரணவத. ஞிச.)

ஞி. நாயனீரே - தலைவரே, கெருடிகட்டி நம்முளோரை நீக்கிச் சாதிப்பிக் கின்றனென இயைக்க.

சு. அடியார்க்கு நல்லான் - சோமசுந்தரக்கடவுள்; ஙo: ஞூ; ஙூ: கசு. கன்றல் - வாடுதல். பணி - வில்வித்தை முதலியவற்றைக் கற்பிக்குந்தொழில்.

(பி - ம்.) 1'காலைக்', 'காலவ்' 2'கூரச்,செற்றமொன்றுமனத்' 3'வைத்துத் தானும்' 4'சிறந்தவன்போல்' 5 'கூறிச்' 6 'ஆங்கரித்துத்' 7 'தாய்கெறிச்' 8'கேட் டன்னிணை' 9'காணநம்பேர்' 10'வேண்டாகமக்கோர்' 11'கன்று' 12'ளஞ்சா'

நற்குரு மனைவி தன்னைக் கவருவா னயந்து கொண்டாங்
குற்றகா ரியத்தை யுள்ளத் தொளித்தொழுங் குள்ளான் போலப்
பொற்புறு மனைக்கண் வந்து நல்லன மொழிவன் போற்றி
மற்றவன் றனைக்கா ணுனேல் வளஞ்சொல்வ [1]னிறைஞ்சி மெல்ல. ()

நன்னுதன் மாத ராரே [2]நாதரெங் கடைந்தா ரென்ரு
லின்னருண் மடந்தை சார்ந்த விவன்கருத் தறியா ளாகிப்
பொன்னெயி லால யத்துப் போயினர் போந்த தேதிங்
கென்னவாய் விடாமற் போவா னுடொரு மிடம்பெ றுமல். (அ)

[3]மிண்டுறு கயவ னேர்நாள் வேறொரு வர்க்கா ணுமற்
கண்டுமா தினைப்பி டிப்பக் கற்புளா ளாத லாலே
புண்டரு நெஞ்சத் தோடும் போயினு ளுதறி விட்டு
மண்டிய பயத்திற் போனுன் வஞ்சகக் கயவன் ரூனும். (கூ)

பின்னவ மான வஞ்சம் பிறர்க்குரை யார்க ணல்லோ
ரென்னுமவ் வுரையை நோக்கி யேதமின் மூல்லை வல்லி
[4]தன்னுயிர்த் தலைவ னுக்குஞ் சாற்றிடா ளெங்கு மூள்ள
வின்னெறிச் சொக்கன் ரூனே யறிகுவ னெனவி ருந்தாள். (கo)

அடியவர் நன்மை தின்மை யறிபவ னறிந்தி ரங்கிக்
கடிதிவன் வடிவங் கொண்டு கயவனே ணுணுகிச் சொல்வான்
வடிவிலே யவனீ யாலே கிழவன்மா நிலம திப்பப்
படிமிசை மறுகி லேறி வெட்டவா பாடை கூறி. (கக)

நின்றெனை [5]வென்ரு யேனீ நினைத்தகா ரியம்ப லித்தற்
கின்றுகே ளைய மில்லை யிருந்திடு மேடி யாயி
னன்றியோ ராணே யாயிற் புறப்படி புறப்ப டங்கம்
வென்றியில் லானே யென்னப் புறப்பட்டான் வெகுளி பொங்கி. ()

பலகைவாள் கடிது வாங்கிப் படைக்கல வினைஞர் தம்மு
ளிலகிய வுலகத் தென்னே டெதிர்ப்பவ ரில்லை [6]யின்று
வலியிலாக் கிழவ னீயோ வெதிர்ப்பவ னென்று வஞ்சப்
புலையனு மெதிர்த்தான் மற்ரே ரெதிரிலாப் புனிதனேனும். (கக)

எ. அவன்றனை - ஆசிரியனை; வளம் - தனதுபெருமை.

அ. அருள் - தொடர்புபற்றுதே யாவரிடத்தும் தோன்றும் இரக்கம். இடம் - சமயம்.

கூ. மிண்டு - இடக்கரானமொழிகள்.

கo. முல்லை - கற்பு. சொக்கன்தானே அறிகுவன் - சொக்கநாயகர் இயல் பாகவே அறிந்தருளுவார்; யாம் விண்ணப்பிக்க வேண்டுவதில்லை. [சபதம்.

கக. தின்மை - தீயசெயல். மறுகில்: "வீதியிலேறி" (கச.) பாடை - கங. மற்று ஓரெதிரிலா.

(பி-ம்.) 1'நின்று' 2'நாதனெங்கடைந்தான்' 3'மிண்டொரு' 4 'தன்னுயர்' 5 'நீவென்றுயேல்' 6'என்று'

கோதிலா மனப்ப ணிக்கன் குலத்தினைக் காக்க வேண்டி
வீதியி லேறி யங்கம் வெட்டுதற் கியைந்து நின்றான்
காதிய [1]புரங்க டன்தோன் கணத்திடை வெட்டி [2]வீழ்த்துத்
[3]தீதட வல்ல னுகி யிருந்துமே செய்யா னுகி. (கச)

வலம்படு திறத்தி னோடும் வர்[4]தியை யாவ லத்தி
லிலங்குபத் திரத்தி னோடி மிடம்படு தடியி னோடுங்
கலங்கிட [5]வொட்டி முட்டிப் பிடித்தனன் கையும் வாளும்
விலங்கெனு மணியணிந்து மேதினி யதிச யிப்ப. (கரு)

நாகமா புரத்து வாழ்வோ னல்லடி யார்க்கு நல்லோ
னேகநா யகன னிந்த வணியினுக் கிகல்வே [6]றின்றிப்
போகெனிற் போகொ ணுதாய் வரவெனில் வரவொ ணுதா
யாகம்வேர்த் தஞ்சி நின்ரு னங்கநூற் [7]றெட்டும் வென்ரூன். (கசு)

அஞ்சிய நெஞ்சன் றேறி யறிகிலேன் முன்போ [8]லல்லே
நெஞ்சுளோ ரஞ்சும் வித்தை நீணிலத் தெங்கே கற்ரூய்
மிஞ்சுபத் திரத்தோ டொள்வாள் [9]வெட்டுவோ மென்ன விட்டுக்
கஞ்சவாள் பலகை வாங்கி [10]நடந்தனன் கடிமை கூர. (கள)

இலகுவாள் [11]விதிர்ப்பக் கண்ட விமையவ ரருளைவாழ்த்த
வுலகிலா சாரம் பேணி யுலாவிட வுணராச் சித்த
னிலமிசை யஞ்ச முட்டி வெட்டுவ னியமத் தோடும்
வலியதீ பார்த்துக் கொள்ளென் றிறக்கினன் வலிய தோர்கை. (கஅ)

செறுத்துமே னடத்தல் கண்டு [12]சிறிதுமெய் [13]வியர்த்துக் கம்பித்
[14]தறத்துளா னெவர்க்கு மஞ்சா [15]னஞ்சினர் போன டித்தாங்
[16]கிறக்கின கைக்கு மாரு விட்டகை பிறக்கி முன்னங்
குறித்தவன் கொள்வ தான நிலத்தையுங் [17]கொண்டு சொல்வான். ()

வடிதர நொட்பத் [18]தூண்ட நூக்கமட் [19]டயங்கு ளிப்ப
[20]நடுவெழு வீசச் சாரக் [21]கலப்பமேர் [22]நடக்க முட்டக்

கரு. பத்திரம் - ஒரு வகைக்கத்தி. ஓட்டி - சபதஞ் செய்து.

கசு. நாகமாபுரம் - மதுரை; "அதோரகாக் யஸ்ய புரஸ்ய நாதம்" (ரகு வம்சம் சு-ஆம் சர்க்கம், நிகூ.) எனவும் "உரகமா நகரான் தென்னனிவன்" (இரகு. மாலே. கஅச) எனவும் வருவனவற்றுள் 'உரகாக்யஸ்ய புரம்' எனவும், 'உரகமாநகர்' எனவும் மதுரை கூறப்பட்டிருத்தல்காண்க.

கள. நெஞ்சுளோர் - தைரிய முடையோர். கஞ்சவாள் - வெண்கலத் தாற் செய்தவாள்.

(பி - ம்.) 1'புரங்கடிந்தோன்' 2'வீழ்க்கத்' 3'தீதறவல்லானுகி யிருக்கவும்' 4 'இயையாவயத்தின்' 5' ஓடி' 6'இன்று' 7'எட்டு' 8 'இன்று' 9 'வெட்டுமோ' 10'நடத்தினன்கடிமை' 11'விதிர்த்துக்' 12'சிரித்து' 13'விதிர்த்துக்' 14'அறுத்து' 15'அஞ்சினர்போல்' 16'இறக்கினன்' 17'கூறிக்கொள்வான்' 18'தூண்ட' 19'டங் கழிப்ப' 20'நடுவெழுவீச்சை' 21'கலப்பு' 22'நடக்கன்முட்டல்'

[1] கடகுள கோச ரக்கை [2]வெட்டவுட் கணக்கி லாதாய்
படிமிசை வலக்கை வீழ வெட்டிவல் [3]பார்த்தி யென்ரூன். (உ0)

இந்திர னயன்மால் சோம [4]னெனவிகல் பேசி மூட்டி
[5] மூன்துற வெட்ட வெட்டிங் கையினைப் பிடிப்பான் மூன்தும்
வெந்திறற் பணிக்கன் கையை மீளவும் விட்டி வெட்டச்
[6] சன்துடன் வீழ்ந்த வந்தத் [7]தலத்திடை வாளுங் கையும். (உக)

கையற வெட்டா முன்னங் [8]கட்டிய [9]சொட்டை யாலே
வெய்யசொற் சொன்ன நாவை விரைவொடி மரிந்து நாளும்
பொய்மைசெய் தொழுகு நெஞ்சைப் புரையறக் குத்திப் பத்திச்
செய்தியின் வணங்கி டாத சிரத்தையு [10]மறுத்து வீழ்த்தான். (உஉ)

கண்டவர் பயந்த ணிந்து கடிமைகண் டதிச யித்து
வெண்டலை விருத்த ராயும் விளங்குநம் [11]பணிக்கர் தம்மை
மண்டலத் தாரே யொப்பார் மற்றிவ ருருக்கொண் டெய்தி
யண்டர்நா யகன்வெல் ரூஜை வென்னுமுன் ஞெளித்தா னூர்த்து. ()

வென்றிகொண் மைந்த ரெல்லாம் வென்றவர் தமைக்கா ணுமற்
சென்றணி பொலியில் லத்துத் தேவியை வணங்கி வாழ்த்தி
வன்றிற ஞத ரெங்கே போயினு ரென்ன மங்கை
கொன்றையஞ் சடிலச் சொக்கைக் கும்பிடப் போனு ரென்ரூள். ()

அவ்வுரை தெரியக் [12]கேட்டே யவரவர் முகமு கம்பார்த்
திவ்வுரைக் கேது வென்கொ லென்னுங்கா லிரும்ப ணிக்க
னவ்விசேர் கையி னூனை நலந்தரு தாளி னூனைச்
[13]செவ்வியி னிறைஞ்சி [14]வந்தான் செபவடக் கரமுந் [15]தானும்.(உடு)

வந்தவன் ரெழுது கின்ற வாயிலிற் [16]ரெருதி கண்டிங்
கெந்துநீர் [17]புதல்வீ ரெல்லா மிப்பொழு [18]தணைந்த தென்ன
மூன்து[19]நும் முருப்போல் வந்து முன்னைநம் பகைவ ஞய
வெந்திறற் சித்தன் றன்னை வென்றன [20]ரெருவ னென்ரூர். (உசு)

விரைவொடுங் களத்து வீழ வெட்டிடா மறைந்தோர் தம்மைத்
தெரிவுற வென்றீர் நீரென் றிருந்தனஞ் [21]சிறியே மென்னக்

உஉ. சொட்டை: ங-இன் குறிப்பைப்பார்க்க.

உசு. வென்றிகொள் மைந்தர் - ஆசிரியருடைய வெற்றியைத் தமதாகக் கொண்ட மாணாக்கர்கள். சித்தனை வென்றமையின், 'வன்றிறனுதர்' என்ரூர்.

உசூ. எந்து - என்ன; நிசைச்சொல்; "அதெந்துவே யென்றருளாயே" (தீருவா. அருட்பத்து, க-கo.)

(பி - ம்.) 1'கடவுள' 2'வெட்டக்காண்' 3'பார்பார்' 4'வென' 5 'மூன்துறத் தொட்டு' 6'சன்தொடும்' 7'தலத்தொடு' 8'கடியதோர்' 9'கொட்டை' 10'அறுத் தான்வீழ்த்து' 11 'பணிக்கரைப்போல்' 12 'கேட்டோரவாவற' 13 'செவ்வையி' 14'வந்தார்' 15'தாமும்' 16'தொழுதி' 17'புதல்வர்', 'மைந்தர்','வீரர்' 18'அணைந்தி ரென்ன' 19'நம்' 20'ரொருவர்' 21'செல்வாவென்னக்'

கருதியாங் கவன்முன் னுற்ற கருத்தறி [1]யாமை யாலே
புரையிலா மனையிற் புக்கான் புகலவோர் மாற்ற மின்றி. (உஎ)

சித்திர மனைய கோலத் தேவியை வினவத் தேவி
பொத்திய செய்தி சொல்லிப் புனிதனே வென்ரு னென்ன
மெத்திய பரிவிற் போந்து வெளிப்பட வெவர்க்குங் கூறிப்
பத்தர்கள் பத்த னல்லா லாருளர் பழுது [2]தீர்க்க. (உஅ)

மேவிய புதல்வீ ரென்று விளம்பியா லயத்து ணண்ணித்
தேவதே வனைவ ணங்கிச் செப்புவா ளெப்பி லானே
யாவிரா யகனே நின்பா லன்பிலா வென்பால் வைத்த
வோவிலா நின்பே ரன்பை யெப்படி யுரைக்கு மாறே. (உகூ)

[3] கருதியென் னுயிரை யின்றென் குலத்தினைக் காக்க வேண்டிப்
பொருவின்மெய் கரந்து பொல்லாப் புலையனே னுருப்பு னேந்திங்
கரியபே ரங்கம் வெட்ட [4]வியைந்தனை யடிமை வேறு
தரைமிசை [5]யின்மை யாலோ தலைவனே யெனத்து தித்தான். (கo)

மற்றுமன் னவன்முன் ஞன மனிதர்கண் டதிச யித்துப்
பற்றிய வடியார் தம்மேற் பழுதுவா ராமற் காக்கு
முற்றவன் றன்னைக் கற்பார் மடந்தையை யுண்டென் றேத்தும்
வெற்றிகொள் பணிக்கன் றன்னே வியந்தனர் நயந்து வாழ்த்தி. (கக)

பணியடி யார்க்கு நல்லார் பத்திர மென்னுஞ் சொல்லு
மணிபொலி திறத்தி னுங்கு மழகிய சொக்க னென்னுங்
துணிவுடைத் தோலாக் கையுந் துளங்கிட வன்று முன்னு
வினையிலா வுலகத் தின்கண் [6]வழங்கின வெவரும் போற்ற. (கஉ)

ஆகத்திருவிருத்தம் - அகூக.

கசு.—மதுரையான திருவிளையாடல்.

மன்னிய புகழ்க்க டம்ப வனத்திரு நகரி தன்னுட்
சென்னெறித் தத்த னென்னும் பெயருடைச் செழியர் கோமான்
முன்னெறி மறைது திக்குஞ் சுந்தரற் கன்பு பூண்டு
முன்னமோர் காலந் தால முறைமையிற் [7]பரிந்து காத்தான். (க)

உஅ. பொத்திய - மறைத்த. மெத்திய - நிரம்பிய.

கக. 'உண்டென்றேத்தும் வென்றிகொள் பணிக்கன்' என்றது ஆஸ்திக னென்றபடி.

(பி - ம்.) 1'யாமலேதான்' 2'நீக்க' 3'கருதியின்னுயிரை' 4'விரைந்தனை' 5'யில்லையாயோ' 6'விளங்கியதெவரும்' 7'புரிக்க'

அறமலி வைதி கத்தி னருடரு நெறிபொ ருமற்
கறுவியாங் கதகு லைப்பான் வேண்டுப கணத்திற் கூட்டி
மறமலி யமண ரெல்லா மந்திர வாதஞ் செய்தோர்
திறலுடை யரக்கன் றன்னைத் தோற்றுவித் தார்தி ரண்டு. (உ)

வெண்பிறை யெயிற்றுக் கொற்றக் கருநிற விரிசெங் குஞ்சிப்
பண்பிலா வரக்கன் ருளோர் பாம்புருக் கொள்ளப் பாம்பு
விண்படர் வரைபோற் ரோன்றி மேதினி நடுங்க நஞ்சங்
கண்பட விழித்துச் சீறி யெழுந்தது கனன்றுபொங்கி. (ஊ)

செல்வமார் செழியன் மிக்க சிவபத்தி [1]முதிர்வா னம்மைக்
கொல்லுமா றெண்ணி ஞனீ கூசிடா [2]தணுகி யாங்க
ணெல்லைமா நகரி யோடு மூரனுடை யவனை நின்வாய்ப்
பல்லுற விழுங்கி டென்று பாம்பினை யேவி னார்கள். (சு)

தூவிட வெண்பற் செங்கட் கருநிறச் சுத்தத் துத்திப்
பாவகப் பகுவாய் நாகம் படம்விரித் தடர்ந்து கீண்ட
வால்விதிர்த் துடன்மு றுக்கி வச்சிர விரட்டை நெட்டை
[3]நாவசைத் துயிர்த்து ரத்திற் சேர்ந்தது நகரின் பாங்கர். (ரு)

தானது கண்டோ ரோடித் தலத்துளோர் தம்மை யெல்லா
மூனுயிர் கொள்வான் கூற்ற மணைந்ததோ வறியோ மோங்க
[4]வானுறு வரைபோ லின்ரோர் மாசுணம் வந்த தென்று
மீனவற் குரைப்பக் கேட்டு வந்தனன் விரைவிற் [5]கூடி. (சூ)

[6]தெரிவுறத் தடுப்பான் வந்த தென்னவன் போகி நெட்டை
வரையுயர் வடிவங் கண்டு தேதென மருண்டு நின்று
பெரியபாம் பணியுஞ் சொக்கப் பிஞ்ஞகா வென்று நெஞ்சத்
துரனெடுங் தியானித் தெய்தா னொருதனிப் பாணங் காண. (எ)

உ. கறுவி - கோபித்து.

ஊ. இக்காகம், திட்டிவிடமென்பார், 'நஞ்சங்கண்பட விழித்து' என்றார்; இது நஞ்சுவிழியரவமெனவும் வழங்கும்; "நஞ்சுவிழியரவினல்லுயிர் வாங்கி" (மணி. உஅ: அச); "கண்டிழித் தமிழ்விடக் கனலரா வரசு" (கம்ப.தாடகை. கo.)

சு. பாவகப் பகுவாய் - நெருப்பைக்கக்குகின்ற பிளந்தவாய். உரத்திற் சேர்ந்தது - மார்பால் நகர்ந்து வந்தது; உரம் - வலியுமாம்.

எ. 'பெரியபாம் பணியுஞ்சொக்கப் பிஞ்ஞகா' என்றது, கருத்துடையணி.

(பி - ம்.) [1] 'முதிர்ந்து' [2] 'அஞ்சி' [3] 'நாவிசைத்துயிர்த்துயிர்த்துச்' [4] 'வானுறைவளி' [5] 'கூட்டி' [6] 'தெரிவறத்'

வாளர வதனைத் தாவி வருமூனங் கடிப்பத் தேறி
மீளவும் விட்ட கொற்றப் பஃறலை வெவ்வாய் வாளி
நீளுருச் சின்ன மாக வீர்ந்திட நீத்த மென்னக்
கோளழல் விடத்தை வாயா லுமிழ்ந்தது கொடிய நாகம். (அ)

[1] கடியபாம் புமிழ்ந்த வேகக் கடுவிடம் பெருக்கா ருகிப்
படிபுகழ் நகரிற் சென்று பரந்திட வழலாற் ருமற்
குடிதழூஉ மன்னன் முன்ரு மாளிடர் சூழறிச் சென்று
சடைமுடி யழகன் கோயி லடைந்தனர் சரண மென்று. (கூ)

வே று.

அரவா பரணஞ் சரணஞ் சரணம் மடியார் துயரங் களைவாய் சர
ணங், குருமா மதிசேர் சடையாய் சரணங் கொடுமா [2]விடமுண்ட
வனே சரணந், தரைநா யகனே சரணஞ் சரணந் தக்கோர் பரவுஞ்
சொக்கே சரணங், கருதார் புரமெய் தவனே சரணங் கருணை கரனே
சரணஞ் சரணம். (கo)

பாரோர் பரவும் பரனே சரணம் பணிவா னவர்கட் [3]கணியாய்
சரணம், வீரா விதழித் தாரா சரணம் மெய்யா [4]வுழைசேர் கையா
சரணந், தேரா விருவர்க் கரியாய் சரணந் தெளிவா ரொருவர்க் கெளி
யாய் சரண, மாரா வமுதே சரணஞ் சரண மழகா வருளா கரனே
சரணம். (கக)

மழுவார் படையாய் கொடுமால் விடையாய் வரிதோ லுடையாய்
புடைமா துடையா, யழகா வென்றிப்[5]புழகா வன்பர்க் கரியா யன்பர்க்
கெளியா யிந்தத், தழலார் வஞ்சக் கொடுமா நஞ்சைத் தணியா யிங்
குத் தணியா யென்றுய்த், தழுவார் தொழுவார் விழுவா [6]ரெழுவா ரா
னூர் சோர்வா ராரு ரவரே. (கஉ)

வே று.

புகலென வந்து போற்றப் புண்ணியச் சொக்க மூர்த்தி
பகரரு மனிதர் முற்றும் படிந்துயர் தனையு மஞ்சச்

அ. அதனைக்கடிப்ப - அப்பாணத்தைக் கடிப்ப.

கூ. அழல் - விடம். அழகன் - சோமசுந்தரக்கடவுள்; "அழகனீ புயங்கனீ", "மூப்புரஞ் செற்றவழக" (தி.நா. தே.); "அழகனே யாலவாயி லப்பனே" (தி.நா. தே.)

கக. ஆரா அமுதே- தெவிட்டாத அமுதமே.

கo-கக. விடத்தின்பத்தைப்போக்க வேண்டுமென்பதற்குக் கூறிய அடை களும், 'கருணைகரனே', 'அருளாகரனே' என்று கூறியிருத்தலும் ஆராய்தற்பாலன.

கஉ. புழகு - மலையெருக்கம் பூ. வன்பர்க்கு அரியாய்.

(பி - ம்.) [1]'கடியவாயு' [2]'புரமுண்' [3]'இனியாய்' [4]'உழைசேர்லையாய்' [5]'புகழா' [6]'அயர்வார்'

சகமிசை யோடு நஞ்சத் [1]தடினிவெம் மையையுங் கண்டு
மிகவருள் சுரந்தான் கோளை [2]விரைவினிற் றணிப்பா னெண்ணி. ()

சடைமுடி [3]யமுத விந்து விந்துவைத் தெறித்துச் சார்ந்த
விடமெலா மதுர மாக்க வெப்பமுற் [4]றடைந்தோர் யாற்று
ளிடரெலா [5]நீங்கப் புக்காங் [6]கின்பமெய் தித்தி னீத்து
நடநவின் றூர்க ளெந்தை பெருமையை நயந்து வாழ்த்தி. (கச)

திருவம ரருள்சேர் சொக்கன் றேவர்க டேவன் [7]வெய்ய
வரவுமி ழால வாற்றை மதுரமாக் குதலா லாங்கு
வரர்புகழ் பதிக்கு நாம [8]மதுரைமா நகரி யென்றே
[9] பரிவுற வன்று மூன்னுப் பரந்தது பாரின் மீது. (கந)

காவல னெய்ய வெய்ய கடிவிட முடியக் கக்கி
யேவொடு மறிந்து கம்பித் தின்னுயிர் விட்ட பாம்பைத்
தேவியு நயப்ப மண்ணிற் றிருவிளை யாடல் காண
மாவரை யாக்க நாக மலையென வழங்கிற் றன்றே. (கசு)

வே று.

விதுவரவ.....மதுரைநகரே.*

வே று.

நாணமி லாதோர் மீண்டு நச்சரா மாண்டி மைப்பிற்
சேணுயர் விலங்க லாதல் கண்டும்பின் றெளியா ராகி
மாணுடைத் தத்தன் றன்னை [10]மதுரைமா நகரி யோடுங்
காணமூற் கொல்வோ மென்றுங் கவரவர் [11]கழறிப் பேசி. (கள)

வே று.

நறையி லங்க சோக நீழ னண்ணி யெண்ணி லாதவா
மறம லிந்த [12]சந்த மிஞ்சும் வஞ்ச மந்தி ரங்களா
லிறையி னம்பர் வெள்ளி வெற்பை யெள்ள வுள்ள மஞ்சவோர்
திறம்வி ளங்கு வலியி லங்கு தேனு வைப்ப டைத்தனர். (கஅ)

கஙு. தடினி - ஆறு. கோள் - விடம். [யை.

கச. அமுத இந்து விந்துவை - அமிர்தமயமாகிய சந்திரனிடத்துள்ள துளி

கள. இங்கே சமணரை, 'நாணமிலாதோர்' என்றதுபோல் "மானமில் சமணர்" என்பர் பின்னும்; உரு. காண-காணும்படி. கழறி-சபதங்கூறி.

கஅ. எள்ள - ஒப்ப; உவமவுருபு. தேனு - பசு.

* இச்செய்யுளின் முழுப்பாகத்தை நு-ஆம்பக்கத்திற் காண்க.

(பி - ம்.) 1 'தடினியினுரனுங்' 2 'விருப்பினிற்றடுப்பான்' 3 'யிருந்த' 4 'அணைந்தோர்' 5 'நீக்கிப்' 6 'இன்பமேமெய்திளைத்து' 7 'பைவாய்' 8 'மதுர' 9 'பாவுத' 10 'மதுரமா' 11 'கமலப்' 12 'தந்த'

படைத்த வெய்ய பசுவை யீசர் பத்தர் வாழு மதுரையைப்
புடைத்த ழித்து ழக்கெ னப்பு கன் று போக விட்டலுங்
கடித்த வெஞ்சி னத்தி ஞெடி கால [1]மேக மென்னவே
யிடித்த திர்ந்து சென்ற தெங்கி லத்த ரும்வெ ருக்கொள. (கசூ)

வே று.

வெல்லருங் கோவைக் கண்டி வேந்தன்மூன் ஞேர்ந் திங்கிக்
கொல்லொணுப் படையெ வர்க்கும் வெல்லொணு தென்று கொற்றத்
தொல்லேயா லயத்துச் சென்று சொக்கனே யென்ன வெல்லாம்
[2] வல்லநா யகனி தற்கென் செய்குவே மாற்றற் கின்றே. (உ0)

அறமறக் கொல்ல வந்த தாயினும் பசுவைக் கோறன்
மறைவழக் கல்ல வீரம் வாங்குத றகுமென் றெண்ணி
மூறையிடு பவரைக் காப்பான் வரையென மூன்கி டந்த
திறலுடை யடல்வெள் ளேற்றை யேவினன் றேனு மீது. (உக)

படிமிசை யெவருங் காணப் பாற்கடல் கிளர்ந்த தென்ன
விடைவிடை கொண்டெ ழுந்து வெள்ளிமால் வரைமீ தேற
விடிதரு பெரிய வெள்ளே யிகலுடைக் கடிய மேக
நடையொடி செல்வ போலச் சென்றது நாசி மூசி. (உஉ)

வாவுறு வடிவா னேற்றைக் கண்டபோ தேம யங்கி
மேவுவீ ரியத்தை யெல்லாம் விட்டிணை விழியை மூடி
யாவுரு நடுங்கி வீய வார்த்தெழுந் தகிலத் தோர்க
டேவதே வனைத்து நித்தா ருறுபயந் தீர்ந்து தேறி. (உங)

தாருறு நெடிய சேவாற் பேருடற் [3]றழைந்த தாடிக்
கூரிய பெரிய கோட்டுக் கோவுயிர் விட்ட பின்னர்ச்
சீரிய பிறங்க லாக்கித் திருவிளை யாடல் காணப்
பாரிசை வழங்கு வித்தான் பசுமலே யென்ன வாங்கு. (உச)

கசூ. விட்டல் - விடல்; விரித்தல் விகாரம். காலமேகம் - ஊழிக்காலத்து மேகம்.

உ0. 'கொல்லொணுப்படை யெவர்க்கும் வெல்லொணுது' என்பது ஒரு பழமொழி. எல்லாம் வல்லநாயகன்- சோமசுந்தரக்கடவுள்; "சிவமெனும் பொரு ளுமாதி சத்தியொடு சேரி னெத்தொழிலும் வல்லதாம்" (ஆனந்தலகரி, க) என்பர்.

உக. 'அறமற...வழக்கல்ல' என்பது ஒருபழமொழி.

உஉ. விடை விடை கொண்டு: மடக்கணி. "சொல்விடைகேட்டுச் செல் விடை வெற்பும்" (மதுரை மும்மணிக்கோவை, உஅ.) மூசி - மூச்சுவிட்டு, மோந்து.

உச. தார் - இண்டினிமாலே. தாடி - அலைதாடி. பிறங்கல் - மலே.

(பி - ம்.) [1]'வேகம்' [2]'வல்லநாயக விதற்கென் செய்குவேன் மாற்றற்கென் றான்' [3]'தளர்ந்த'

மந்திர வாதஞ் செய்த மானமில் சமணர் தந்தம்
வெந்தசந் தங்க ளோடும் போயினர் விளிவோ டஞ்சிச்
சிந்துரத் துங்கச் செங்கட் பெருந்திமிற் றிரண்ட நேர்வாற்
சந்திரப் பகிர்ம ருப்புச் சுந்தரத் தருமை வேறு. (உடு)

கொடுந்தலே மேரு வெற்பைக் கோட்டுமண் கொண்டு வெய்யோ
னெடுங்குமால் வரையின் பான்மேய்ந் துதயமால் வரையிற் ரூஉ
யடுங்கட லேழு நீருண் டவனிகாற் சிறைகொண் டுப்பா
லிடங்கொள்பே ரண்ட முட்ட [1]விட்டிறுத் திட்ட தாங்கு. (உசு)

வினையற வந்தி றைஞ்சு மெழின்மழ விடையை நோக்கி
மனமகிழ்ந் தணிக ளோடு மதிதவ ழுயர்பி ஞெடு
மினிமையிற் கிடத்தி நாம மிடபவெற் [2]பென்னப் போந்த
தனுவொடுங் கிடந்த தோங்கத் தண்டலே மலையதாகி. (உஎ)

ஆங்கது கண்டோ ரெல்லா மதிசயித் தருளே வாழ்த்தித்
தாங்கரு [3]மூவகை கூர்ந்தார் தனிவிளை யாட ரன்னைப்
பாங்குமைக் கருளிச் செய்து பத்தர்கள் [4]பத்த னங்க
ணீங்கரும் விடையை நோக்கி யிருந்தன னேசங் கூர்ந்தே. (உஅ)

ஆகத்திருவிருத்தம் - கூஉஎ.

கூஎ.—வெப்புத்தீர்த்த திருவிளையாடல்.*

ஞான முற்றிய வெற்றிகொ ணற்றவர்
பானி றத்திரு நீறு [5]பரப்பியே
மீன வற்சுடு வெப்ப மொழித்துறு
கூனி மிர்த்த திருக்கதை கூறுவாம். (க)

உடு. சக்தம் - இயல்பு.

உசு. கோட்டுமண்கொள்ளல் - களிப்பின் மிகுதியால் மண்ணைக் கொம்பாற் குத்தியெடுத்தல்; இத்தப்பிரயோகத்தைச் சீத்தாமணி முதலியவற்றிற் காண்க; "கோட்டுமண் கொள்ளா" (முத்தொள்ளாயிரம்.) காற்சிறைகொண்டு - காலிடங் கொண்டு. உப்பால் - பின்பக்கம்; முதுகு; "ஊழையு முப்பக்கங் காண்பர்" (திருக்குறள், சுஉ0.)

உஎ. தண்டலேமலே - சோலைமலே.

உஅ. நீங்கரும் விடை - ஸங்கிதியிலெழுந்தருளிய இடபமூர்த்தி.

(கூஎ)

க. ஞானமுற்றிய வெற்றிகொள்நற்றவர் - திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். வெப்பம் - சுரம்.

* திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருளிச் செய்த திருவாலவாய்த் தேவாரங்கள் ஆராய்தற்பாலன.

(பி - ம்.) [1]'இட்டிருக்கின்றது' [2]'எனப்போவென்னத்' [3]'இனிமை' [4]'பத்தன்மற்று' [5]'பரப்பவே'

வே று.

நன்னெறிசேர் காவிரிசூழ் நன்னாட்டு முன்னொருகாற்
பன்னிரண்டு பெயருடைய செழும்புகலிப் பழம்பதியுண்
மன்னுமறை யோர்குலத்து வைதிகவா ரணமென்றோர்
கன்னன்மொழிப் பாலகனார் கவுணியகோத் திரத்துதித்தார். (உ)

பானலங்கட் கவுரிமுலைப் பாலமுது செய்தருளி
யூனமிலா வருங்கலைக ளோதாம வுணர்ந்துயர்ந்த
ஞானநிறைந் தரும்பதிகம் பாடிமறை காடரிய
மானமர்கை யான்மாட்டு வரிசைகள்வேண் டுபெற்றார். (ஊ)

அன்புடைநா வுக்கரசோ டாதிமறைக் காட்டெய்தி
நன்புறுகா விரிநாடு திருநீறு நனிவிளங்க
மன்புகழ்சேர் புனலவையை வளநாடு சமணர்களாற்
றுன்புறுமென் றேறலொருஞ் சொல்கின்ற ரென்றழுங்கி. (எ)

சாதிமுறை யறியாத சமணர்வழி யொழிவித்தே
யாதரவி னுமந்த நாட்டணுகி யஞ்செழுத்தும்
வேதநெறி யுஞ்சால [1]விளங்குவிக்க வேண்டுமென
வோதரிய திருவுள்ளத் துணருங்கா லிறையருளால். (ஏ)

மன்னமைச்சன் குலச்சிறையும் வளவர்கோன் றிருமகளார்
தென்னவன்றன் மாதேவி திருவுடைமங் கையர்க்கரசு
முன்னரிய சிவபத்தி முதிர்ச்சியினு லொளித்தீதாலே
யின்னல்கெட வந்தாரங் கெய்துயவா றதுகேட்டு. (ஐ)

வே று.

அருண்ஞான சம்பந்தர்க் கடிமை யாற்றூ வலைமானி குலச்சிறைவிண் ணபப[2]மின்று, பெரியோராற் றிருவுள்ளப் பெருமை கேட்டேம் பேசரிய துறத்தமணர் தம்மை முறையும், விரைவாக வெழுந்

உ. பன்னிரண்டு பெயர்களாவன: பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, சீகாழி, கொச்சைவயம், கழுமலமெனபன; காழியெனவும் கொச்சையெனவும் வழங்கும்; பெரிய. திருஞான. கச - ஆம் திருவிருத்தம் பார்க்க.

ஈ. ஓதாமலுணர்ந்துயர்ந்த: நிஎ. வரிசைகள் - பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துப்பந்தர் முதலியன.

ச. மறைக்காடு - வேதாரணியம்.

ஞ. சாதிமுறை யறியாத சமணர் என்றது, கூட்டத்தினென்பதைப் புலப்படுத்தியபடி; "குழுவுடையமண்" என்பர் பிறரும்; சுகூ. உணருங்கால = ஆராயுமிடத்து; உணர்தல - ஆராய்தல்: "சுத்தமடவெழுந் துணர்வார்" சுஅ: ஈ.

எ. மானி - மங்கையர்க்கரசியார். பறித்தலையர் - சமணர். பழுதாமென்று ஓலை வந்ததாகென முன்னே கூட்டுக.

(பி - ம்.) [1]'விளக்குவிக்க வேணுமென்றருளு' [2]'என்று'

தருளி வெல்ல வேண்டும் வெண்ணீறு மஞ்செழுத்தும் விளங்க விங்குப், பரிவோடு மெழுந்தருளா தொழியி னூடி பறிதலைய ராற் சாலப் பழுதா மென்றே. (எ)

வேறு.

சென்ற வோலையின் செய்திகண் [1]டின்புறூ
நன்றி கூர்தரு ஞானசம் பந்தரும்
வென்றி யாலவாய் மெய்யனே வாழ்த்துதற்
கின்று கால மெனவொருப் பட்டனர். (அ)

சார்ந்த நாவுக் கரசுந் [2]தவாநலஞ்
சேர்ந்த மாந்தருஞ் செங்கெறிப் [3]பாலரே
வாய்ந்த நாட்டிதி வாரம்பொல் லாவெனச்
சூழ்ந்து பன்முறை சொல்லி விலக்கினர். (கூ)

என்னை யாளுடைச் சொக்கை யிறைஞ்சுதற்
குன்னு நெஞ்சுடை யேனுக் குணர்வுளீர்
புன்மை நாளும் புனிதமா மென்றுயர்
நன்மை யாப்பு நவிலுவா ரின்புற. (க0)

வேறு.

ஏயுற வச்ச முற்ற மாந்தர்க ளினிமை கூரப்
போயுறு காரி யங்கள் பலிப்பதன் பொருட்டு முன்னர்
வேயுறு தோளி பங்க னென்றுயர் மேன்மை கூர்ந்த
பாயிரப் பதிக மோதிப் புறப்பட்டார் பரிய யாரும். (கக)

மெய்திக ழுப்பர் தம்மை விடித்தியன் மதுரை நோக்கி
வைதிக நெறியைக் காக்க மானமில் சமணர்க் காயப்
பொய்யிலா [4]ஞான யானை மதம்பட்டுப் போகா நின்ற
தையம தில்லை யென்ன வறைந்தன காக ளங்கள். (கஉ)

கழுமலப் பால ரேலே கருணைகூர் மானி யோடு
விழுமிய வமைச்சன் காண்க மேதினி முழுது மெச்சக்
[5] குழுவமண் குண்டர் தம்மைக் கூவிவா தித்து வென்று
வழுதிநா டடைய நீறு பரப்பிட வருகின் றேமால். (கங)

அ. சென்ற - வந்த. [4]ஆலவாய் மெய்யன்' ங: உஅ; சஉ: ச.

கூ. காள்-ஈக்ஷுத்திரம்; திதியிலும் நாறு மடங்கு வலியுடைத்தாதல்பற்றி, காள் முற்கூறப்பட்டது.

கக. "வேயுறு தோளிபங்கன்" என்பது கோளறுபதிகத்தின்முதற்குறிப்பு.

கஉ. மானமில் சமணர்: ங: உடு.

(பி - ம்.) 1'இன்புற' 2'தயாவுடைச்' 3'பாலக' 4'யாகைஞான' 5'குழுத் திகழ்'

வே று.

ஐயமிலை யென்றினிய திருமுகத்தை முன்னடைந்தோர்
துய்யகரம் [1]விடுத்தடைந்த தொண்டர்குழாஞ் சூழ்ந்தேத்தச்
செய்யபுனற் காவிரிசூழ் சென்னிவள நாடகன்று
வையைநதித் தென்பாண்டி நன்னாடு வந்தடைந்தார். (கச)

[2] ஏந்துமறை வேந்தர்திருப் புத்தூ [3]ரிறைஞ்சிமதி
தோய்ந்தகொடுங் குன்றந் தொழுது திருப்பதிகஞ்
சேர்ந்திசையின் வானிற் பொலியென்று தேர்ந்தோதிப்
போந்துமது ரா[4]புரியி னெல்லை புகுந்தனரால். (கஞ)

வே று.

மல்லல்சேர் நகரத் தேயெண் வரையகத் தமணர் முற்றுஞ்
சொல்லருந் தீக்க ளுக்க ளின்னிமித் தங்கள் கண்டு
வெல்லரும் பகையுண் டாகு மென்றவர் வெருக்கொண் டுள்ளத்
தொல்லையின் மன்னன் பாற்சென் றுரைசெய்வார் பரசி மெல்ல. ()

பிண்டிவே ரற்று வீழப் பிரம்புநேர் பிளப்பக் கையிற்
குண்டிகை யுடையப் பாய்முக் குடையுகக் கழுவா யேறக்
கண்டனங் கொடுங்க ளுத்தோள் கண்ணிடந் துடிக்கு மூர்வேம்
பண்டிகழ் கூகை யாந்தை பாழிமேற் குழறுங் காணே. (களு)

இன்னதென் றறியே மென்னு மெனவஞ்சா வரச னஞ்சித்
துன்னியோர் தமைவி டித்துத் துயருறத் திருமு கங்கண்
டின்னநீர் மானி யாரு மின்புறு மமைச்ச ருரு
நன்னிமித் தங்கள் செய்யக் கண்டுள நனிந டந்தார். (கஅ)

இந்தவா றுறுங்கா லங்க ணினிமையிற் சிலர்வந் தெய்தி
மந்தர மூலயி னுர்க்கு வைதிக யானை நந்தஞ்
செந்தமிழ் நகரின் பாங்கர்ச் சேர்ந்தசென் றுரைகை கூறத்
தந்திர வமைச்ச னுரை யேயினர் தயாவு கூர்ந்து. (கக)

ஆண்டுமுன் சென்று காணு மறிவுடை யமைச்ச னர்முன்
பூண்டபே ரன்பு மீடப் [5]புளகெழு வுடல்கம் பிப்ப
வீண்டுகண் ணருவி சோர வெதிர்ந்துதித் திறைஞ்சி வீழ்ந்தார்
காண்டகு பிள்ளை யாருங் கண்டெடுத் தணைத்தார் வாழ்த்தி. (உ0)

கரு. கொடுங்குன்றம் - பிரான்மலை; இஃது உக்கிரகிரியென்றுவடமொழியில் வழங்கும்; 'வானிற்பொலி' என்பது அத்தலப்பதிகத்தின் முதற்குறிப்பு.

கசு. நகரத்து ஏய். எண்வரை: கூஎ-ஆம் பக்கத்துக் குறிப்பைப்பார்க்க.

களு. பண்டிகழ் கூகை, இகழ்ச்சி. பாழி - குகை.

கஅ. என்னும் - யாதாமோ. திருமுகம் - ஓலை.

கக. வைதிகயானை - திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்.

(பி - ம்.) [1]'விடுத்தினிய' [2]'ஏந்துமதி' [3]'இஞ்சிமதி' [4]'புரியெல்லை' [5]'புள கெழுத்துடல்', 'புளகம்பவத்துடல்'

முதிருமா மறைமு ழங்க முத்தமிழ் வாணர் போற்றக்
கதிர்விடு முத்தக் கொற்றச் சிவிகைமேற் கவிகை துன்றப்
புதியசா மரையி ரட்டப் [1]பொருவரும் வாது காண்பான்
றுதிசெய்து வந்த, வானோர் சூழ்ந்தலர் மாரி பெய்ய. (உக)

வே று.

சுரருலகு புகவொலிக்குந் துன்றுசெழுங் காகளங்கள்
பரசமய கோளரிவந் தானென்று பணிமாற
வரிசைகள் [2]கொண் டெதிர்கொண்ட மாமறையோர் குணலையொடும்
பொரியலர்சிந் திடத்தொண்டர் போற்றிசய சயவென்ன. (உஉ)

வே று.

அதிர மாமுழ வருடரு மிருடிக ளார்த்துத்
துதியி னேத்திடச சாத்திய சுட்டிநீ றிலங்க
வெதிரி லாதசெம் பவளவெண் ணகைகிலா வெறிப்பப்
பதியின் மேவினர் நித்திலப் பந்தரி னீழல். (உங)

வே று.

அறமுற [3]ரண் ணியஞான முனிவரள விடவொண்ணு
மறுவிலுயர் கோபுரம்பொன் மதிலிலங்கு நகர்கண்டிங்
கிறைவர்திரு வாலவா யெம்மருங் [4]க தெனுமளவிற்
றுறவுநெறி தரும்பெரிய தொண்டரர கரவென்றே. (உச)

மாசறுபூம் பொழில்புடைசூழ் மதில்வாள கிரிகாட்ட
வீசுகொடி விசும்பளப்ப விண்ணவர்சூழ் மேருவெனத்
தேசொடுவான் [5]முகமதொடுஞ் செழுமணிக்கோ புரமிலங்கு
மீசனுறை திருவால வாயிதுவ் வெனக்காட்ட. (உடு)

உஉ. பணி மாறுதல் - இங்கே ஊதுதல்; ''பணிமாறுந் தனிக்காளத் தெழுத்த வோசை'' (பெரிய. தி.ஞான. ஈகக.) குணலை - ஒருவகைக்கூத்து; ''குண்டிகை குசையிசை தண்டுகள் கொண்டதிர் குணலை மலிந்தனர்'' (கோயிற்பு. பதஞ்சலி. கச.)

உங. சுட்டியும் நீறும்.

உக-ங. ''சதுரா னனனுஞ் சக்ரா யுதனுஞ் சந்த்ரா தபரும் மித்ரா திபரும், மதுரா புரிவா தறிவா மெனமேல் வரவந் தனன்வை திகவா ரணமே'' (தக்க. கஅஉ.)

உடு. திருகர: ச.

(பீ - ம்.) 1 'பொருவருமதரை', 'பொதுவறும்வாது' 2 'கண்டு' 3 'எண்ணிய' 4 'ஏதெனு' 5 'முகத்தோடுஞ்'

வே று.

மாசில்கை [1]கூப்பிக் கண்டமுன் பதிக மங்கையர்க் கரசியென்
றெடுத்துக், கூசியா லயத்துச் சென்றெழு நிலைசேர் கோபுரத் தணைந்
துவீழ்ந் திறைஞ்சிப், பேசருந் துதியால் வலஞ்செய்துட் புகுந்து பெ
ருங்கவிப் புலவனைக் கண்டு, நேசமார் விதியின் வணங்கியொண் பதிக
நிலமா மிடற்றென வெடுத்தார். (உசு)

வே று.

உளகெ கிழ்ந்திட வொழிவிலா விழிபுனல் சொரியப்
புளக மேவிடப் பொடியணி மெய்விதிர் விதிர்ப்பக்
கிளர வோதிடுங் கீதவொண் பவளவாய் குழறக்
களிகொள் வேதியர் மூழ்கின ரானந்தக் கடலுள். (உஎ)

போது மெல்லியிற் புகழுடைச் செம்பியன் மகளார்
காது நெஞ்சுடைக் காரமண் குண்டர்க டம்மை
வாதின் வெல்லுவான் பிள்ளையார் வந்தன ரென்றே
யாதி யாலவாய் மெய்யனே வணங்கவென் றடைந்தார். (உஅ)

வந்து [2]காதலிற் பிள்ளையார் மலரடி வணங்கிச்
சந்து மேவுடல் புளகெழக் கண்ணினீர் ததும்பச்
சிந்தை யன்புறக் [3]கண்டுநின் றிருமுகங் காண்பா
னெந்தை யேயென்ன புண்ணியஞ் செய்தன [4]னின்றே. (உகூ)

வே று.

மையறுகற் பகக்கன்றே வரையரையன் றிருமகளார்
தய்யதனத் தமுதுண்டு சோதிவிடு மணிவிளக்கே
மெய்முகிலே தமிழ்க்கடலே யருட்குன்றே மேதினியோர்
செய்தவமே மறைப்பயனே செழும்பதுமப் பதம்போற்றி. (ஙo)

வே று.

என்று போற்றிட விரக்கமுற் றருமறைத் தலைவர்
மன்ற லங்குழற் பாண்டிமா தேவிகேண் மகிழ்வி
னின்று வந்தன னின்பரி வாலென நயந்தாங்
கொன்ற வேண்டுப நல்கிமுன் போயின ரொல்லை. (ஙக)

வே று.

இன்னருள்சே ரமைச்சரு நிடங்காட்டப் போந்தினிய
தொன்னெறிசேர் வாகீசச் சுவாமி[5]மடத் தவதரிப்ப
வன்னதுகேட் டிருஞ்[6]சமணர் திரண்டறிவான் விடுத்ததிறன்
முன்னிகழொற் றினர்சொல்ல [7]மூட்டிச்சஞ் சலமுற்றார். (ஙஉ)

உசு. 'மங்கையர்க்கரசி', 'நீலமாமிடறு' என்பன பதிகங்களின் முதற்குறிப்புக்கள்.

உஎ. ஒழிவிலா - ஒழிவில்லாமல். உஅ. காதும் - தன்புறுத்தும்.

ஙஉ. வாகீசசுவாமி மடமென்று ஒருமடம் மதுரையில் முன்பு இருந்ததாக

(பி - ம்.) 1'கூப்பக்' 2 'காவலிற்' 3 'கின்று' 4 'என்றே' 5 'மடத்தவரிருப்ப', 'மடத்தவர்தரிப்ப' 6'சமணாண்டறிவான்' 7'மூட்டிச்'

வே று.

விட்ட வாறது கேட்குமூன் வெய்யவாழ் கிணற்றுட்
கட்டி வீழ்ந்தனர் சிலர்சிலர் களத்திடைக் கயிறுங்
கிட்டி ஞான்றனர் சோர்ந்தன ரெட்டிதின் றசோகின்
மூட்டி மாண்டனர் [1]புரத்தமண் குரத்தியர் முடிய. (கூக)

மதியி லாதவ ராங்கது கண்டுளம் வாடி
யெதிரி லாதஞ் சமயமின் றிறந்தது விரைந்தே
மூதிரு மூன்னர்யா மொழிகுவம் [2]வழுதிமாட் டெனவே
யதிர்வி னோடுசென் றுரைசெய்வா ரரசனைப் பரசி. (கூச)

வே று.

மறைஞானி யென்பானோர் சோழியவை திகச்சிறுவன் மதுரைமேவிப்
பொறையாருஞ் சுந்தரன்ற னடிவணங்கித் தானறிந்த புதுமை கூர்ந்த
வறமாருந் தமிழ்பாடி யருவிவிழி யொடும்புளகத் தோடு நின்று
துறையாரும் வாகீசச் சுவாமிமடத் தவதரித்தான் சுருதி பாடி. (கூடு)

மன்னவகேண் மதியாதிக் ஙகர்வந்தா னவனம்மை வாதின் வெல்வா
னின்ஙகர்வந் ததுகண்டே யேனோரு மூட்டானே மென்னக் கேட்கு
மன்னவனு மடிகளே யான்கேட்டு மூட்டென்ன வருக செல்லா
பின்னழலை மந்திரித்து விடுத்தேக விடுவமுள [3]மெலியே லென்றார்.

செங்கெறியி னுற்றதுசெய் தோட்டுமெனக் கேட்டெழுந்து சிற்
றத் தேகி, வன்னியைமந் திரித்தேவச் [4]செல்லாது நின்றுழன்று மறு
கக் கண்ட, பின்னரிவன் சிறியனலன் பெருநெருப்பை யிடுவமெனக்
கங்குல் பேர்முன், மன்னுமடத் தெரியிட்டார் தங்கள்வயிற் றெரியிட்
டார் மறைந்து சென்றே. (கூஎ)

வே று.

இங்கது காணு முன்ன ரெங்குமாஞ் சொக்கன் மங்கை
[5]தங்கிய வங்கங் கம்பித் தெரிதரு தழல்சு டாம
லங்குமூன் சென்று காப்ப வருந்தமிழ்க் காழி வேந்தர்
தங்கிய தறியா ராகித் தனியணைப் பள்ளி கொண்டார். (கூஅ)

இதனால் தெரிகின்றது; கூடு. "வாகீச முனிகளென்ன, ஆண்டொரு தொருவர் வேண்ட வவர்திரு மடத்தி லன்பு, பூண்டெழு காத லோடும் போயினர் புகலி வேந்தர்" (திருவிளை. பாண்டியன் சுரம். கூ.) அவதரிப்ப - தங்க. அறிவான் - அறியும் பொருட்டு. மூட்டு - இக்கே கேட்டு மூட்டு (சைனபரிபாஷை.)

கூக. கட்டி - கல்லைக்கட்டிக்கொண்டு. ஞான்றனர் - தொங்கினர்.

கூச. அதிர்வு - நடுக்கம். 'இறந்தது' என்றார், தணிவுபற்றி.

(பி - ம்.) 1 'புதத்தமண்' 2 'வழுதியற் கெனவே' 3 'மெலியலென்றார்' 4 'போகாது' 5 'தங்கியலக்கம்'

காதல்சே ரடியார் சூழ்ந்து கைவிதிர்க் கொண்[1]டு ணர்த்த
நீதியி னெழுந்தி தற்குக் காரண நிருப னென்றே
நாதனை நினைந்து மானி மங்கல நன்ஞண் பார்த்தாங்
கோதிலர் செய்ய னேயென் றுயர்திருப் பதிக மோங்க. (கூசு)

வே று.

சண்பை நாயக ரேவிய தழலிறை யருளாற்
றெண்டர் வாழ்திரு மடத்தினைச் சுடாதுபோய் விரைவிற்
குண்டர் [2]கேள்வியான் கூனுடை மீனவ னுடன்மேன்
மண்டி வெப்பென வருத்திய தியாவரும் வருந்த. (சo)

வரிசை நீடிய ராடக மாளிகைப் புறத்து
விரைகொள் சோலையும் வெஞ்சுரூட் கொண்டது வெப்பாற்
கருதி மெல்லணைப் படுத்ததண் கதலியங் குருத்துஞ்
சருகெ ழுந்தது புலர்ந்தன சந்தனம் பனிநீர். (சக)

மூடி பாயுடைக் கையர்கண் முகமுகம் பார்த்து
நாடி யொல்லைவந் திரவிடை நாமிடு நெருப்பு
நீடு [3]மிம்மடஞ் சுட்டதி லென்றுநீ தியிரா
வோடி [4]யாழ்ந்ததம் பாழியின் விடியுமு ளெளித்தார். (சஉ)

வே று.

பழுதினூல் வல்ல மருத்துவர் முதலோர் [5]மருந்தினுற் பார்ப்பவுந் [6]தணியா, தெழுமனல் கண்டீ தென்கொலென் றறியோ மெங்களாற் றணிந்திடா தென்னச், செழியனு மவரை வெருவுற மூணிந்து சிறந் தயந் திரங்கண்மந் திரங்கண், முழுவதும் வல்ல வடிகண்மார் தம்மை முடுகவிங் கழையுமி னென்ருன். (சகூ)

ஆங்கது சொல்லப் பாங்குறு மடியா ரவரவர் தொடர்விடா தேகி, நீங்கரும் துயரச் செய்தியைத் தோன்ற நீதியி னிகழ்த்திநின் றழைப்ப, வோங்கிய திறஞ்சே ரெண்பெருங் குன்றத் துறையுமெண் ணூயிரஞ் சமணர், தாங்கரும் விரைவிற் றிரண்டுவந் தாற்றுத் தழலெழு மரச னைக் கண்டார். (சஎ)

கண்டவர் வருந்தே றிண்டிறன் மன்னு கடிதினிக் [7]கொடுங் கடுஞ் சுரத்தை, மண்டல மதிப்ப மாற்றுவ மென்றே [8]வரைந்தயந் திரங்க ணம்மந் திரங்கள், கொண்டுறப் பார்க்கு மளவினின் முன்னர்க் கொடுஞ்

நகூ. கைவிதிர்க்கொண்டு - கையை உதறிக்கொண்டு. உணர்த்த-எழுப்ப. 'செய்யனே': தி.நஞா. பதிகத்தின் முதற்குறிப்பு.

சக. சுருட்கொண்டது: பெரிய. திருஞான. எகஉ.

சஉ. பாய் உடை - பாயாகிய உடை; "பாயுடையார் விடுத்ததழல்" (தி.ரு வி.ளை. திருவால. க)

சஎ. எண்பெருங் குன்றம்: பக்கம், கஉஎ-பார்க்க.

(பி - ம்.) 1'உரைப்ப' 2'கேள்வியாங்' 3'அம்மடஞ்' 4'வாழ்ந்தம்' 5'மருந் தினிற்' 6'தீராது' 7'கடுங்கொடுஞ்' 8'வரைத்தியக்'

சுர மாங்கலை கண்டு, பண்டையின் வருத்த நிலத்தினு மரசன் றரித்
திலன் மிகப்பரி தவித்தான். (சடு)

வேறு.

அனைவரும் புறத்துப் போந்தீ தென்கொலென் [1]றலையக் கண்டு
புனிதநீ றணியா தஞ்சிப் புனல்கொடி நீறு சாத்து
மனமுடை மானி யாரு மந்திரித் தலைவ ஞரு
நினைவறிந் திருந்து சொல்வார் நிலைமையோ டரசற் கூடி. (சக)

நறைமுடிச் சொக்கை [2]யேத்த ஞானசம் பந்த ரென்றோர்
சிறுவர்வந் தாரிவ் வெப்பந் தீர்ப்பரோ வறியோம் யாரு
மறமலி சத்தி மானென் றறைகின்றார் வரவ ழைத்தற்
கிறைவனின் றிருவு ளத்தா னறிகிலே மெனப்ப னிக்தார். (சஎ)

மெல்லெனச் சொல்லக் கேட்ட மீனவன் சீறி யாறிக்
கொல்சுர நீக்க நீங்கள் கூறிய புதல்வன் வந்தா
னல்லமண் கேள்விக் குள்ளே முழுகுவேன் றன்னை நண்ணிச்
சொல்லருஞ் சாம்பல் கொண்டு தொடுவனே சொன்மி னென்றான். ()

பண்டிதர் தமையு மந்தப் பாலகன் றனையு மின்று
[3]தண்டமிழ் மன்ன நின்றன் சந்நிதி வரவ ழைத்து
மண்டமுன் மாற்று மென்று விளம்புக [4]மாற்றி யிட்ட
வொண்டிறற் சத்தி மானைக் கைக்கொள்கென் றுறுதி சொன்னார். ()

ஆசிலீர் நல்ல தொல்லை யழையுமி னெனவ ழைப்பப்
பேசிவந் தமணர் முன்ன ரிருந்தனர் பிள்ளை யாரும்
[5]பூசுநீ றிலங்க முன்னிற் பொருவருஞ் சிறப்பி னெய்தி
யீசனை நினைந்தி ருந்தா ரிட்டசிங் காச னத்து. (ரo)

திறம்படு கொடிய வெண்ணீ றிரம்பெருஞ் சிங்க நாப்பண்
மறங்கடிந் தளதோர் யானைக் கன்றுகேர் மன்னிற் றென்னக்
கறம்படு மனத்தி லேங்குங் காமமண் குண்டர் நாப்ப
ணறங்கரை நாவி னுனு நிகழ்ந்தன னருளுட் கொண்டே. (ரக)

கழுமல முனியை மன்னன் காணுமுன் சிறிது வெப்ப
மொழியநீ ரெங்கு ளீரென் றுவகையின் வினவக் கண்டு
பழுதறு பிரம னூரென் றெடுத்தரும் பதிக மோதக்
குழுவொடி [6]திரண்ட மற்றைக் குவலயத் தருக யந்தார். (ரஉ)

சஎ. அறமலி - தருமமலிந்த; அற - மிகவென்றுமாம்.

ரக. கறம் - கருமை; "அறங்கரை நாவினுன் மறை முற்றிய" (தொல். பாயிரம்.)

ரஉ. கழுமலம் - சீகாழி. 'பிரமனூர்' என்றது, திருச்சக்காமாற்றென்னும் பதிகத்தின் முதற் குறிப்பு.

(பி - ம்.) 1 'அறையக்' 2 'ஒத்த' 3 'தண்டல' 4 'மாற்றவல்ல' 5 'பூசி' 6 'நின்ற'

வேறு.

எழின்மட மாத ரமைச்சனுர் திரண்ட வேதிலார் திறங்களைக்
கண்டே, செழியனுக் கருக ரருகாக் கண்டேஞ் சேர்ந்தனி ரிங்குநம்
முகத்தாற், குழுவில்வெல் பவர்யார் தோற்பவ ரியாரென் றறிகிலே
மெனப்பயங் கூர்ந்து, தொழுமதி யாது மானினோர் விழியென் றெடித்
தனர் தொடுத்திரும் பதிகம். (ருகூ)

குன்றியோர் தமைமெய் யறிகுறி யாலுங் குளிருவித் திருப்பமற்
றருகர், வென்றிமக் திரிசேண் மங்கைகே ளின்று மெய்தரு நீங்கள்
சான் ருக, வன்றிறன் மன்ன னிடப்புறத் தழலே மாற்றுவம் யாங்க
ளீங் கிவனு, மொன்றிய விசைவின் வலப்புறத் தழலே யொழித்திடக்
கடவனென் றுரைத்தார். (ருசு)

இப்பொழு தளந்திங் கிவன்றிற மறிவோ மென்றுதங் கல்வியை
மதித்துச், செப்பிய [1]மொழியை மாறனுங் கேட்டுச் செழுமுனி
மேவிஞ னம்மை, மெய்ப்பட நீற்றுற் றெடுமெனக் கூசி வெருவிய
நெஞ்சமு மிருப்ப, வப்படிச் செயுமென் றியைந்தனன் முன்ன ரரும்
பெருந் தவத்திரும் பயனுல். (ருஙு)

அங்கவ னியைய ரனிமன மகிழ்ந்த வமைச்சரு மாசமங் கையரும்
வெங்குரு வரசே யங்கணோய் மருந்தே விளங்குநின் சன்னிதிப் பட்ட
பொங்கொளி யரசற் கிவ்வழ றகுமோ வெனவிழிப் புனலுக ணின்று
செங்கரங் கூப்பி யடிமிசை வீழ வெழுந்தனர் திருவுளத் திரங்கி. ()

உரைகெழு வேத மாகமம் புராணம் யாவையு மோதிடா துணர்ந்தோர்
விரைகமழ் நீற்றுக் கோயிலு ணீற்றை மென்கரத் தள்ளிமந் திரித்துப்
பரிவுறு சிவனே [2]நயமுற ரினேந்து பாண்டியன் றனேநணு குங்காற்
பெருநிறை யமணர் நில்லென வெழுந்து பேசுவா ரிடியென முழங்கி.

மண்டழன் மாற்ற வல்லமேயன் மாற்று மற்றுநின் வழிகளைக்
கொண்டே, பண்டைநின் கரத்துக் கொண்டநீ ருகா [3]பகைமருந் திட்
டநீ றின்று, கண்டிடிற் சென்னி மண்டலத் தவனீ யென்றுமுன் கண்
டது விலக்க, முண்டக வதன மழகெழச் சிறிது முறுவல்கொண்
டுரைசெய்வார் முனிவர். (ருஅ)

செந்தமிழ் [4]பயிலுஞ் சுந்தரன் கோயிற் றிருமடைப் பள்ளியுட்
கிடக்கு, மந்திர நீற்றை நீங்களே யெடுத்து வரினுமா மென்றலும் வெ
குண்டி, வெந்த[5]நீ றியாங்க டொடுவமோ வென்று விளம்பநந் தொண்

ருகூ. 'அருகரருகா: மடக்கணி. 'மானினோர் விழி': தீருஞா. பதிகத்தின் முதற்குறிப்பு.

ருசு. வெங்குரு - சீகாழி. ருஎ. நீற்றுக்கோயில் - விபூதிப்பை.

ருஅ. நின்வழிகளைக்கொண்டேமாற்று.

ருகூ. 'செந்தமிழ்பயிலுஞ்சுந்தர': 'செந்தமிழ்க்கினிய சொக்கன்' (ருடீ:உ.)

(பி-ம்.) 1'வாறு' 2'மனமுற' 3'பலமருந்து' 4'பாவுஞ்' 5'நின்சாம்பல்'

டர்போ யெடுத்து, வந்திடி கென்னூர் மிண்டர்க ளதுவும் விலக்கினூர் வழக்கல வென்றே. (நுகூ)

மன்னிய விபூதி கொடுவரு வதற்கு மனத்திலோர் சூழ்ச்சியு மில்லீ, ரென்னிது பகர்ந்தீர் நீங்களோ ணணுகீ ரெம்மூளோர் போகவு மொட்டீர், [1]புன்னெறி யிலாதோர் தமைவிடு நுமக்குப் பொருந்தி ஞே[2]ரெமக்குமா மென்ன, மன்னவன் முறையோர் தம்மைமுன் விடு ப்ப வந்தனர் [3]வெள்ளீ நள்ளி. (சுஐ)

வே று.

மற்றவர் கொடுப்ப வாங்கி மந்திர [4]மென்றெ டுத்து
மூற்றிய பதிகத் தாலே [5]முதிர்ந்தன பாடி யிந்தக்
கொற்றவன் றனைநங் கையாற் ரொடத்தகா தென்று கூசி
நற்றிரு நீற்றை யள்ளி யெறிந்தனர் [6]வலப்பா னண்ணி. (சுக)

துய்யநீ றணுகா முன்னங் குளிர்ந்திடச் சூழ்ச்சிக் கையர்
பையுண்மந் திரங்கள் கொண்டு பன்முறை [7]யடித்துப் பார்க்குங்
கையுறு நொய்ய பீலி படப்படக் கனன்றெ ழுந்து
நெய்யுறு ரெருப்பே யென்ன நீடிய தப்பால் வெப்பம். (சுஉ)

பண்டைமந் திரங்கள் வெந்து படைத்தவெந் திரங்கள் வெந்து
பிண்டியுந் தண்டும் பாயும் பீலியுங் குடையும் வெந்து
மண்டழ றணிப்பா னங்கண் டெளிப்ப[8]மந் திரித்த கையிற்
குண்டிகை நீரு நின்று கொதித்திடக் கண்டார் குண்டர். (சுங)

ஆங்கது [9]கண்ட மன்ன னரு[10]வருத் தவரை யெள்ளி
யீங்குநீர் தொடத்தொ டத்தீ யெழுந்திரா நின்ற தின்றே
ரோங்கிய கொச்சைப் பால ரெளிள்ளிய நீற்றை யள்ளிப்
பாங்குற வெறியும் [11]பாகங் குளிர்ந்தது பரிவு கூர. (சுச)

சுஐ. 'பொருந்திஞேர்' என்பதை, எமக்கும் பொருந்திஞேரெனப் பின் ஞங் கூட்டுக. ஆம்: அசைநிலை.

சுக. 'மந்திரம்': "மந்திரமாவது நீறு" என்னும் பதிகத்தின் முதல்.

சுஉ. கையர் - வஞ்சகர். பையுள் - துன்பம்.

சுங. பிண்டி - அசோகமரம். தண்டு - பிரம்பு; இச்செய்யுளும், "ஆலி வெந்து மந்திரம் வெந்து யந்திரம் வெந்த மைந்தகைப், பீலி வந்து பாயும் வெ ந்து பிண்டி யேற மண்டவே" (தக்க. களவி) என்பதும் ஒத்திருத்தல் காண்க.

சுச. கொச்சை - சோழி.

(பி - ம்.) 1'புன்மை' 2' நமக்குமாம்' 3'வெந்தநீறு' 4 'ஆவதென்றெ' 5 'முதிர்ந்தமாடண்டி' 6'இடப்பால்' 7 'அடர்த்துப்' 8 'மந்திரத்த' 9 'கண்டு' 10'வரைத்' 11'பக்கங்குளுந்தது'

என்னது நீங்கள் செய்யுங் காரிய மியம்பு மென்ன
மன்னவர் மன்ன கேண்மோ விங்கெறி வந்த வாறு
முன்னிவ னழுத பாகத் தணைதலாற் றீர்த்தான் முன்னம்
புன்மைசேர் விடத்தாற் றீரா திருந்த[1]திப் புறத்து வெப்பம். (சுநு)

ஆங்குண மிதுவே யென்ன வருந்தமிழ்க் காழி வேந்த
ரோங்குபுன் முறுவ லோடு மூரைசெய்வா ரரச ரேறே
யீங்கிவர் விளிவில் லாம லிம்மொழி மொழிந்தார் காணத்
தீங்குறு மப்பால் வெப்புந் தீர்த்திடக் கடவ மென்றார். (சுசு)

ஐயமில் பதிகத் தோடு மப்புறத் தணையா மூன்னர்
வெய்யபால் குளிர்ந்த தங்கண் மேவுவெப் பாலு மிப்பாற்
பொய்யர்கள் பார்க்கும் பீலி சுருணுறிப் புகைத்து முன்னிற்
கையற வெந்த தந்தக் கைதவன் கண்டு வைதான். (சுஎ)

பண்டிதர் நீங்கு மென்று [2]பலவித்தத் தவரை நீக்கிக்
கொண்டலங் குழலி னுரைக் குலச்சிறை யாரை வாழ்த்தி
மண்டலத் தாரே யொப்பா ரிவர்க்கென வரிசை கூர
முண்டகக் கரங்கள் கூப்பி முனிவரைத் துதிக்க லுற்றான். (சுஅ)

பழுதறு சத்தி மானே பாலனே யான்முன் செய்த
வழலுறு பெரும்பா வத்தா லழுந்தின னிந்நாண் [3]மேலிக்
குழுவுறை யமண்கைப் பட்ட கொடுவினைச் சேற்றை நீற்றூற்
கழுவியாட் கொள்ளு கென்று வணங்கினன் கமலத் தாளில். (சுகூ)

மன்னுநோக் குபதே சத்தால் வழுவற வுபதே சித்தாங்
கின்னருள் [4]சுரந்து நீற்றை யிருகரத் தாலு மள்ளி
வெங்கொடு முன்னுந் தொட்டுப் பூசுமுன் வெப்புத் தீர்ந்து
முன்னிமி ராத கூனு நிமிர்ந்ததம் மூர்க்கர் காண. (எ0)

கொடியவெஞ் சுரந்தணிந்து கூனிமிர்ந் [5]திலங்கி நல்ல
வடிவொடு [6]மெழுந்து பல்கால் வணங்கிடு மரசற் கண்டே
சுடர்முடி மன்ன நின்பேர் சுந்தர மாற னென்றே
படிமிசை தனில்வ ழுங்கப் படுவதென் றருள்சு ரந்தார். (எக)

பொன்னுயர் பீடத் தேற்றிப் புரத்தினை வலங்கொண் டார்த்து
மின்னவேண் டுபகா ரத்து வேந்தன்முன் விடுப்பக் கண்ட
வன்கர மோரு மிந்த வரும்[7]பொருட் பாலன் காணிற்
பன்னிய கந்த னென்றே பணிந்தன ரணிந்து நீறு. (எஉ)

கூஎ. 'சுருள்' கூஎ: சக.

எ0. வெங் - முதுகு.

(பி - ம்.) 1'அப்பாலவ்' 2 'பரிபவித்', 'பரிதவித்' 3 'மேனி' 4 'கூர்ந்து' 'எழுந்து' 6'நின்று' 7'பொடிப்'

[1]வரிவிழி மானி யார்க்கு மந்திரி யார்க்கு மிக்க
கருணைசெய் தடைந்த வன்பர் கருத்தினே மூடிப்பா லைய
சுருதியா லிலங்கு நீதிச் சொக்கனு லயத்துப் புக்குப்
பரவியொண் புகலி வேந்தர் பண்டைமா மடத்த ணைந்தார். (எக)

பழுதுளம் வேவா நின்ற பறிதலைக் கையர் மூற்று
மொழியவோர் மாற்ற மின்றி மூட்டுப்பட் டினிக ளோடி
மழலுறு பாழி செல்லக் [2]கதுப்பிடை யழுமு கங்கள்
சுழியநீள் விரல்கொண் டிட்டுக் குரத்தியர் துரத்தி வைதார். (எச)

சுந்தரன் [3]றனைத்து தித்துச் சுந்தர மாறன் கோயில்
வந்துமா பூசை செய்து மவுலிமா ணிக்க வாசி
முந்துசிங் காத னம்பூண் முத்துமேற் கட்டி பட்டங்
கந்தமார் கவரி திண்டேர் கற்பகத் தருவோ டுந்தான். (எடு)

செல்வமார் செழியர் கோமான் செய்யவெம் மெய்யிற் சார்ந்த
கொல்லும்வெஞ் சூரமுந் தீர்ந்து கூனிமிர்ந் ததுவுஞ் சொற்றாய்
மல்லல்கூர் மலய வெற்ப வல்லப மெல்லாம் வல்ல
வெல்லருஞ் சமணர் பின்னென் செய்தனர் விளம்பி டென்றார்.(எசு)

வேறு.

கட்டு செஞ்சொண் மலயக் கடவுள்கே
ணிட்டை நீங்கி [4]நிசியிடை யெய்தியே
மட்டு லாவு மடத்து மறைந்தெரி
யிட்ட பாதக வஞ்சக ரென்செய்தார். * (எஎ)

ஆகத்திருவிருத்தம் - கஂ0ச.

கூஅ.—கழுவேறின திருவிளையாடல்.

கட்டுகழன் மாறனுறு காசினிவி ளங்கச்
சிட்டர்புகழ் கொச்சைமுனி சென்றருளின் விட்ட
மட்டவிழ்பொ ழிற்றிரும டத்திலெரி யிட்ட
துட்டர்கழு வேறுகதை சொல்லலுறு கின்றேன். (க)

எச. பாழி - குகை. கதுப்பு - கன்னம். குரத்தியர் - தவமுது மகளிர்.
எடு. வாசி - திருவாசிகை. கற்பகதரு - வாகனவிசேடம்.

(கூஅ)

க. மாறனுறு காசினி - பாண்டிநாடு. கொச்சைமுனி - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

* இச்செய்யுள் சிலபிரதிகளில் இல்லை.

(பி - ம்.) [1]'வரிசைகொண்மானியாருமந்திரியாருமிக்க, கருணையினிலகக்' [2]'கொடிற்றிடை' [3]'தனைத்துதித்தான்' [4]'நிலையிடை'

வே று.

கன்னன்மொழி மடவாரு மமைச்ச னுருங் காழிகர்ப் பெருமா
னைத் தனிய ழைத்து, முன்னவில்வா ருயர்ந்தசிவ சமயங் குன்றி மூழு
லிலமுஞ் சமண்மூடிற் றியாவும் வல்ல, வின்னருள்சேர் சைவசிகா
மணியே வெல்வ தெங்ஙனவர் பலரொருவர் [1]நாம கிழ்ந்த, தென்ன
னெனின் மன்னருள மறியொ ணாது திருவுள்ள மறியகிலே மெனப்ப
ணிந்தார். (உ)

இத்தகவென் னவில்கின்றீ ரிறையுண் டஞ்ச லேகுமென விடித்
துமடத் தமளி மேவி, நத்தநடி வெழுந்துணர்வார் புகன்ற தொக்கு
நாமொருவ ரவரெண்ணு யிரவர் காணின், மெத்தியசூழ்ச் சியும்வல்லா
ரவர்க டம்மை வெல்வதற்குப் பல்புகழ்க்கு நல்ல சொக்கன், பத்தர்
கள்பத் தினையல்லாற் றுணைவே றில்லை பரசியவன் றிருவுள்ள மறிவோ
மென்றே. (ஊ)

வே று.

சோதி வேதியர் தூணைசெயு மவரொடுங் கூடி
யேத நீங்கிட விடியுமுன் னுலயத் தெய்தி
வேத வேள்வியென் றெடுத்திசை மேதகு பதிக
மோது மெல்லையோ மோமென வோங்கிய [2]தோர்சொல். (எ)

அனைத்தும் வல்லவ னருட்டிரு வாக்கெனத் தேறி
நினைத்த காரிய முடித்தபே ரமைச்சரு நிறைந்த
மனத்து மாதரங் களித்தடி வணங்கிட நயந்த
வினைக்க ணில்லவர் சொல்லுவர் பின்னரு மெல்ல. (ஏ)

கலக வெஞ்சமண் கையரைக் களைந்திடா தொழியி
னிலகு சைவசித் தாந்தமுன் னிறந்திடி மிறந்தா
லுலகில் வேதமும் வேள்வியு மழிந்திடி மழிந்தா
லுலக வேந்தனு மாரியு முலகமுங் கெடுமால். (ஐ)

உ. குன்றி - குன்ற. நாமென்னு முன்னிலையுளப்பாட்டுத்தன்மை உயர்வு தோன்ற முன்னிலைக்கண்வந்தது; "நாமரையாமத்தென்னுவந்து" (திருச் சிற். கசுச.); "நெருநலடந்தவரோ நாமென்ன" (கம்ப. சூர்ப்ப. ககக.) தென்னனெனின் மன்னனென ஒருசொல் வருவிக்க.

ஊ. இறையுண்டி - சிவபெருமான் உளர். அஞ்சல் - அஞ்சற்க; வியங்கோ ளெதிர்மறை.

ஈ. 'வேதவேள்வி' என்பது அத்திருப்பதிகத்தின் முதற்குறிப்பு; இது காலடி மேல்வைப்பு. 'ஓம்' என்பது உடன்பாட்டையுணர்த்தும் வடசொல்; "ஒன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி" (வி. பாரதம், திருட்டி

ஏ. வினைக்கண் இல்லவர் - வினைகளிடத்து இல்லாதவர். [னன். சo.)

(பி - ம்.) 1'சொல்லளித்த' 2'ஓங்க'

ஐய மில்லென வறைந்திட வாங்கவர் விரைந்து
வைய மன்னனே வருநலக் தீங்கினுக் குரியான்
றுய்ய காரிய மவன்வயிற் சொல்வமென் றடைந்து
பைய வோதுமுன் வழுதியும் பழுதிலை யென்றான். (எ)

பின்ன மாநெறிச் சமணரைப் பெருந்தண்டஞ் செய்வான்
கன்னி மன்னவ னியைந்தது கேட்டலுங் கடுகித்
தென்னன் முன்னரின் முன்னையிற் சிறப்பொடு மடைந்தே
மன்னு மாசனத் திருந்தனர் வைதிகத் தலைவர். (அ)

வேறு.

மற்றவ ரிருப்பக் கேட்டெண் வரைப்பெருந் தலைவ ராய
செற்றமில் சமண ரெண்ணு யிரவருஞ் செற்றங் கூர்ந்து
கொற்றவன் காண வென்றி குலைத்திடக் கடவே மென்றே
வெற்றிகொண் மூரச மெற்றி யடைந்தனர் [1]விரைவிற் கூடி. (கூ)

கருதினிச் சிறுவ னெண்ணெண் கலைமுதற் கல்வி யாவு
முரைகெழு முளத்து ளோதா துணர்ந்தவ னுயர்த ருக்க
மரியபல் கலையால் வெல்ல லரிதுகை கண்ட நந்தஞ்
சுருதிமந் திரத்தால் வெல்வந் தோன்றவென் றெண்ணி யாரும். (கo)

[2]வாரடா சிறுவ நீதான் மந்திர மேத றிந்தா
யோரினின் வேத நான்கி னோதிய வெழுத்த னைத்தின்
வீரியம் புழுத்தி ரண்டு வெட்டிய தொப்ப தல்லாற்
காரிய முண்டோ வென்றி சண்டிங்ங்ன் களித்தல் வேண்டா. (கக)

பகிவழி னினக்கொ ருக்காற் பலித்தது கொண்டா லித்தாய்
விடுவிடு காகஞ் [3]செல்லப் பனைக்கனி விழுந்த தொக்குங்
கடைவழி யிதுகொண் டோநீ சாதிக்க வந்தாய் கற்றுப்
புடவியி லெம்மை வெல்வா ரில்லைகாண் புகலுங் காலே. (கஉ)

மணிதிக முன்றன் மிக்க மந்திரந் தனையு மெங்க
ளிணையிலா வீர மிக்க மந்திரந் தனையு மின்று
துணிவுற வெழுதி யேட்டைத் தோற்பவர் வெல்வார்க் காணத்
தணிவிலா நெருப்பி லுப்பண் டனித்தனி யிடவா காண்பேம். (கங)

எ. ஐயம் இல் - சந்தேகமில்லை.

அ. கன்னி - கன்னிநாடு, கன்னியாகுமரி, அழியாமை.

கூ. செற்றம் - பிறரைவருத்துதல். எற்றி - அறைந்து.

கக. வாரடா - வாடா; "வாரடாவுனக் கியாதுதானர்தம் மகளடுக்குமோ" (வி. பாரதம், வேத்திர. கஉ.)

கஉ. காக்கையேறப் பனம்பழம் விழுந்ததென்பது ஓர் நபழமொழி; இது காகதாலீயமென்னு நியாயம்.

(பி - ம்.) [1]'விளிவிற்' [2]'வாருதற்' [3]'சேரப்'

வேகாவே டுடையா ரீங்கு வென்றவர் போது கென்னப்
பாகாரு மொழியாள் கொங்கைப் பாலமு துண்டோர் மெல்ல
வாகாதோ வென்றி யைந்தாங் கெழுந்தணி மூரச மார்ப்பப்
போகாமுன் முருட்டுக் கையர் புறப்பட்டார் புரட்டுப் பேசி. (கச)

வஞ்சனை செய்வா னெண்ணி மறைந்துநின் றுதவி செய்யுங்
குஞ்சரந் தாங்கு கோயிற் கூத்தன்வாழ் தேத்தி ஞகா
தெஞ்சழல் [1]வடகீழ்க் கோணத் திடுமென வேவல் செய்வோர்
[2]மிஞ்சிட நெருப்பிட் டார்கள் விண்குடி வாங்க வாங்கு. (கடு)

மானமி லாதோர் தம்மை மதித்துமு னடைந்த தேத்து
ஞானமா முனிவர் தாமு ணுணுகிடக் கண்ட வீச
னீனமில் புனிற்றி ளம்பாற் கன்றின்பி னிரங்கிச் செல்லுங்
தேனுவே யெனக்க ரந்து சென்றன னிரங்கி யாங்கு. (கசு)

நீதிசேர் செழியர் கோமா னேசமார் தேவி யோடு
மாதர வமைச்ச ரோடு மளவில்சான் றவர்க ளோடுங்
தீதில்பல் லியங்க றங்கச் சிறப்பொடு விளங்கி மிக்க
வாதினைக் காண்பா ஞசை யுடையனு யடைந்தான் வந்து. (கஎ)

சுற்றுநற் றவர்க ணெஞ்சந் துயருழந் தென்னு மென்ன
வெற்றியே நமக்கென் றெண்ணி விரைந்தியந் திரங்கண் மற்றுங்
கற்றமந் திரங்க ளெல்லாங் தனித்தனி கனத்த வேட்டி
லெற்றருந் தலைவ ரெண்ணு யிரவரு மெழுதி யிட்டார். (கஅ)

சிரபுரப் பால ரெந்தை திருவுள்ள மறிவே மென்றே
கருதிநின் [3]ரெழுங்கி முன்னர்த் திருமுறை வகுந்த காலைப்
பொருவரும் போக மார்த்த பூண்முலை யென்னு மிக்க
வரர்புகழ் பதிகந் தோன்ற வாங்கினர் மலர்க்க ரத்து. (ககூ)

கழறுமா மறை[4]வி ளங்கக் கையுறு துய்ய வேட்டைத்
தழைவுறு பதிக மோங்கத் தளிரிள வளரென் ரேந்தி
யழலிடை யிடவே வாம லாதிமெய் யாத லாலே
பழுதற விளங்கிற் றியாரும் பரிவுறப் பச்சை யாகி. (உ0)

கரு. "குஞ்சரத்தாங்கு கோயிற் குழகன்" நிசா: ககூ. "கூத்தனே" (திரு நா. தே.) எஞ்சு அழல் - குறையச்செய்கின்ற நெருப்பை.

ககூ. தம்மைமதித்து மானமிலாதோர் அடைந்த.

கஅ. என்னும் - யாதாகுமோ. எற்றுஅரு - பிறரால் வெல்லுவதற்கரிய.

ஙக. ஒழுங்கி - ஒழுங்குபடுத்தி. வகுத்த - வகிர்ந்த; பிரித்த. "போகமார்த்த பூண்முலை" என்பது, திருஞானசம்பந்தர் திருப்பதிகத்தின் முதற்குறிப்பு.

உ0. 'தளிரிளவளர்' என்பது, திருஞானசம்பந்தருக்குரிய வேறொருதிருப்பதிகத்தின் முதற்குறிப்பு. 'ஆதிமெய்' என்பது, தேவாரத்தை; வேதம் சிவபெருமானது திருவுருவமென்பர்.

(பி-ம்.) 1'வாழ்கீழ்க்' 2'விஞ்சையர்' 3'ஒழுகின்முன்னைத்திருமுறை' 4'முழங்கு'

தருக்கமார் சமணர் தேர்ந்தெண் [1]ணுயிரர் தகுதி யாக
வரிப்பட வெழுதி யிட்ட மந்திர வேட. னேத்து
நெருப்பிடை நணுகா முன்னர் நின்றவர் நகைப்ப வற்றற்
கருப்பிலை போலெ ரிந்து கணத்துநீ றெழுந்த தாலோ. (உக)

யாவையும் வேவ வேவா திலங்கிய வேடெ டித்துப்
பாவமை முறையிற் கோப்பப் பத்தர்க ளெள்ளி யார்த்தார்
காவலன் முதலா வுள்ளோர் களித்தனர் காண்பான் வந்த
தேவரு மதிச யித்தார் செழுமலர் மாரி பெய்து. (உஉ)

தெளிவுறக் கண்டுந் தீயிற் றெளித்துநீ ரரித்துப் பார்ப்போர்
விளிவிலா துரைப்பா ரங்கித் தம்பனை கொண்டு வென்ற
யொளியுறக் காணுங் காலை மும்முறை யுண்டு வாது
களியுற வேண்டா வின்னுங் காண்பமுன் கல்வி யென்றார். (உங)

பெருகிமுன் விரைவி னேடுஞ் பெரும்புனல் வையை யாற்றுட்
பரிவுற [2]வெதிர்போ யேறும் பத்திரம் வென்ற தாக
நரபதி சான்ற தாக நானிலத் தெவருங் காண
விருவர்மந் திரத்தை யுஞ்சேர்த் தெழுதியிங் கிடவா [3]காண்பேம். ()

சிறுவனின் னேடெ திர்ந்து சென்றதே லின்று னக்கே
யறிவுடை யாங்க ளெல்லா மடிமையாக் கடவே மற்றும்
பறைதலிங் கொன்றும் வேண்டா பாடைக்குத் தப்பே மென்னப்
புறவமா நகர்வாழ் ஞான பூரண ரருளிச் செய்வார். (உஙி)

அடிமையி லாசை யில்லை யின்றுநீ ரவையிற் சொன்ன
படிபுகழ் வாதுஞ் சொக்கன் பரிவிலுல் வென்றே மாயிற்
கடிமையி னும்மை முற்றுங் கழுதுதி யேற்று தற்கு
முடியவே யாசை யென்று ரியைந்தனர் வினையான் மூடர். (உசு)

உக. வற்றற்கருப்பிலை - காய்ந்த கருப்பங்தோகை.

உஉ. அதிசயித்துச் செழுமலர்மாரி பெய்தார்.

உங. நீர்தெளித்து. அங்கித்தம்பனை-அக்கினித்தம்பனவித்தை. வாதமும் முறை உண்டு.

உசு. 'விரைவினேடும் பெரும்புனல்வையை'என்பது, வேகவதியென்னும் பெயர்ப்பொருளைப் புலப்படுத்தியது; "தாக்கருந் திறலொடும் வரும்வெம்மை" என்பர்பின்னும்; நிசா. பத்திரம் - ஏடு.

உஙி. பறைதல் - சொல்லுதல்; பாடை - பாவை, சபதம்; 'பாடைக்குத் தப்புவராதவன்' என்று உலகில் வழங்கும்.

உசு. கடிமைஇல் - விளக்கத் தன்மையில்லாத. முடிய - முற்ற. 'ஆசை' என்றது, அவரை அஞ்சுவித்தற்பொருட்டு; இவர்கருத்து இன்னதென்பதை, சஙூ-ஆம் செய்யுளாலுணர்க.

(பி - ம்.) 1'ஆயிரத்தகுதி' 2'எதிரேயேறும்' 3'தேர்த்து'

உளப்படி மைசச ஞரை [1]யுயிர்க்கழு வினவா மூன்ன
ரளப்பருந் தயாவு கூர்ந்திங் கையரே கையர் தம்மைக்
களத்தள வேற்றற் கென்றே கருதியான் முன்னஞ் [2]செத்திக்
[3]குளத்துற விட்டு வைத்தே னருளினு லெனக்கொ ணர்ந்தார். (உஎ)

ஆங்கது கண்டி சால வதிசய முற்று மற்றைப்
பாங்கிறீ வினையான் மூடிம் பாதகர்க் கருள்சு ரந்தே
யோங்குநன் னலங்கள் கண்டி முணர்விலா மூர்க்கர் நீங்க
ளீங்கிதற் கியைந்த தென்ன காரிய மெடித்தற் கின்றே. (உஅ)

வேறு.

பவங்க ணீக்கும்வெம் பாதக மாற்றுநற்
றவங்க ணல்குந் தலைமை தருந்தொழுஞ்
சிவந்த தாணிழல் சேர்த்துடுங் காத்திரத்
துவந்து பூணி னுருத்திர சாதனம். (உகூ)

வேறு.

நினைவினை முடிக்குந் தூய்மை யாக்கும்வெம் பாவ நீக்கு
மனவிடர் விடம்பேய் தெவ்வு மறலிவா ராமற் காக்கும்
புனையற மின்பம் வீடு பொருண்முத லெவையு நல்கும்
வினைடி [4]நால்வே தத்து மிக்கமந் திரவெண் ணீறு. (கூ0)

குலந்தரு நீதி மிக்க குணந்தரும் வேதஞ் சொல்லும்
பலந்தரு மூயர்ந்த சாயுச் சியந்தரும் பழுதிலாத
தலந்தரு மெல்லாம் வல்ல சயந்தரு நிறைந்த செல்வ
நலந்தரும் பெருமை குன்ரு நயந்தரு நமச்சி வாய. (கூக)

[5] நாணிலீர் மன்னன் முன்னு நல்லசொல் கின்றேன் கண்டி
பூணும்வெண் ணீறு பூசும் போற்றியஞ் செழுத்தை யோதுங்
காணுறை முத்தி யின்பங் காணலா மென்னக் கேட்ட
கோணுறு சமண ரெண்ணு யிரவருங் கொதித்தெ ழுந்தார். (கூஉ)

உஎ. உயிர்க்கழு - ஒருவகைக்கழு. களம் - கழுத்து. செத்தி - சீலி.

உகூ. காத்திரம் - உடம்பு. உருத்திரசாதனம் - உருத்திராக்கம்.

கூ0. தெவ்வு - பகை.

கூக. "குலந்தரும் செல்வந் தந்திடும்.....காராயண வென்னு நாமம்" (பெரியதிருமொழி, க. பத்து. க.)

உகூ - கூக. இவற்றுள் முறையே உருத்திராக்கம், திருநீறு, பஞ்சாக்கர மென்னும் இவற்றின் பெருமைகள் கூறப்பட்டன.

கூஉ. கண்டி - உருத்திராக்கமாலை.

(பி - ம்.) [1]'உயர்கழு' [2]'சேர்த்திக்' [3]'குளத்தளவு' [4]'வேதநான்கின்', 'கல் கைநீரின்' [5] 'நாணுவீர்'

மூற்றிய சீற்றம் பொங்கி மொழிவன கேட்டுக் கெட்டேன்
வற்றிய தவத்தார் தும்போற் கண்டிலம் வைய கத்திங்
கிற்றைநாட் டோற்பின் யாமே யேறுவ மென[1]வியைந்தீர்
பொற்புடைக் கழுக்க டம்மை வாங்குமி னெனப்பு கன்றார். (நந)

வே று.

எண்டோ ளுஞ்சொன்மு குந்த னிறைஞ்சொளி
வண்டோ துங்கழல் [2]வாழ்த்தவர் பாத்தொகை
கண்டோ ளுந்[3]தொலிக் காளத்தர் ஞான்றுமேற்
கொண்டோ தும்மெனக் காளங் கொடுத்தனர். (நச)

வே று.

மெய்யுறக் கேட்டி னக்கிம் மிகையெலா மென்கொல் வேண்டா
கையறத் தோற்பி னன்றே கழுமுதி யீணவோ மென்று
தய்யவை [4]யங்கை வாங்கித் தோளில்வைத் தங்கை வீசி
வையமா நதியின் பாங்கர் நணுகினர் மன்னன் காண. (நரு)

மேவிய [5]திறங்க ளோடு மவரவர் வீரம் பேசித்
தீவினைப் [6]பயத்தி னூலே வரும்வினை தெளியா ராகிக்
காவல்சேர் மந்தி ரங்கள் கற்றயந் திரங்கண் மற்றும்
யாவையுங் காண வேட்டில் யாற்றிடைத் [7]தீட்டி யிட்டார். (நசு)

வே று.

காழி நாயகர் கருணைசே ழகனை நினைந்து
வாழ்க வந்தண ரென்றுயர் வண்டமிழ்ப் பதிகந்
தாழ வோதியே தடமலி யேட்டிடைத் தீட்டி
யாழ மாற்றிடை யிட்டன ரகிலமுந் தழைப்ப. (நஎ)

கொடிய நெஞ்சுடைக் கூற்றினை யனையவர் [8]வரைவுற்
றடைவின் மூக்குற விட்ட வெண் ணுயிர வேடு
மிடையி னின்றவர் கிளர[9]ணை கையுற விமைப்பிற்
[10]கடுகி நீர்வழி யோடிமூன் புகுந்தன கடலுள். (நஅ)

நந. கழுவேறுவோர் அதனைவாங்கித் தோளில்வைத்துச் செல்லுதல் மரபு.

நச. தய - பஞ்சபாண்டவர்க்குச் சென்றதை; உம்மை: அசைநிலை. இறைஞ்சுகழல். மேற்கொண்டுஞான்று ஊதுங்கள்; ஊதுதல் - உடம்புபுடைத்தல். காளம் - ஒருவகை வாத்தியம், கழு. இச்செய்யுள் திரிபு.

நரு. மிகை - அளவுகடந்தசெய்கை. கை - செயல். தய்யவை-கூர்மையையுடையவை.

நசு. ஏட்டில் தீட்டி.

நஎ. "வாழ்க வந்தணர்" என்பது திருப்பாசுரத்தின் முதற்குறிப்பு.

(பி - ம்.) 1'இயைந்திப்' 2'வாழ்த்தலிர்' 3'தனிக்காளத்தர் வாதுமேற்' 4 'இயைத்' 5 'வறங்க' 6 'பயத்தலாலே' 7'நீட்டி' 8'ஐயுற்று' 9'வின்னகை' 10'கடியநீர்வழி'

மாறி லாமறை ஞானசம் பந்தர்தம் மனத்துட்
டோறி யிட்டவொண் செந்தமிழ் மந்திர வேடு
கூறும் வெம்மொழிச் சமணர்கள் கூரிய கழுக்க
ளேற வேறிய தெழுவரு மாற்றிடை யெதிர்த்தே. (ஙசூ)

வே று.

இயல்பட வெங்குரு வரசர்[1]ப தம்பெற வெழுதிவ ரைத்திடுமே
டியர்தரு தண்புன னடிவுகி ழிந்திட வரலெடு திர்ந்திடவே
நயமலி யன்பர்கண் மறைமொழி யந்தணர் [2]நடமிடு தொண்டருளோர்
செயசெய வென்றன ராகர வென்றனர் சிவசிவ வென்றனரே. (சo)

வே று.

பொங்கு மங்கைய ரமைச்சனர் பூழியன் முதலாத்
துங்க வைதிகஞ் சைவமோங் கியவெனத் துதிப்ப
விங்கெ ழுகுமென் றிரங்கிய முனிவர்க ளமரர்
சிங்க [3]நாதங்கள் செய்த[4]லர்ச் செழுமழை பொழிந்தார். (சக)

வே று.

நிறங்கள்வே ரூய்வி யர்த்து நெஞ்சுலர்ந் தாங்கா ரங்கள்
குறைந்துகை தவமோ வில்லை கைதவ வென்று கூறி
யறம்புரி பால னூர்த மணிமலர்ப் [5]பாதம் போற்றி
மறம்புரி யமண ரெண்ணு யிரவரும் வணங்கி னாரால். (சஉ)

நேசமார் ஞான வேந்தர் நெடுங்கழுத் தரித்த போதே
யாசற விருந்தீ ரின்னு மறைகுவ மடிதல் வேண்டா
பூசுமி னினிய நீற்றைப் போற்றுமி னீசன் ரூளை
மாசற நீரு நாமும் வாழலாங் கூடி யென்னார். (சங)

முன்னையூழ் [6]வினையால் வென்ற முனிவகேண் மடிவ தல்லாற்
சொன்னவெஞ் சாம்பல் சீசீ தொடுவமோ வென்று கொண்டு
நன்மைகள் சொல்லா நின்ற ஞானசம் பந்தர் தம்மைப்
புன்மைகள் சொல்லக் கண்டு பொறுத்திலர் பூதித் தொண்டர். (சச)

வே று.

கையர் தங்களைக் கொலையுமின் கொலையுமி னெனவே
துய்ய மன்னவன் சொல்லுமுன் கறுவினர் தொண்டர்
பொய்செய் பாதகக் குழுவெலாந் தொலைந்திமைப் பொழுதில்
வெய்ய நீள்கழு வேறினர் மெலிந்துயிர் பதைப்ப. (சரு)

ஙசூ. எதிர்த்து ஏறியது. சo. பதம் - இன்பம்.
சஉ. "கைதவமோவில்லை கைதவ": மடக்கணி. சங. இருந்தீராயினீர்.
சரு. கறுவினர் - கோபித்து. தொலைந்து - தோற்று.
(பி - ம்.) [1]'பதந்தொறும்' [2]'நடனவில்' [3]'காதமுஞ்' [4]'அலர்த்திரு' [5]'பா தப்போதில்' [6]'வினையாலேடா'

புகல்வ தேதெதி ரிருந்திடுங் குதவழிப் புகுந்து
பகைகொண் மூட்டுடைப் பட்டினி [1]வயிற்றிடைக் குளித்துத்
தகவில் வஞ்சக நெஞ்சகந் தனினிண மருந்தி
யிகழும் வாய்முகங் காட்டிட [2]வேறினர் கழுக்கள். (சசு)

வேறு.

பவமுறு கையர் வெய்ய பாறுசெங் குடர்பி ரிங்கச்
சிவையவை சூழக் காக நிழலிடத் திரண்டோர் தாளிற்
றவமுய லலகை யென்னச் சாலவே வாயங் காந்து
கவடிவெண் பற்கள் காட்டி யிருந்தனர் கழுக்க டோறும். (சஎ)

சாணகம் பூசி யேடா சுட்டிடத் தரியே மென்பார்
கோணில்கன் றெடுத்து நீறு தருந்திருக் கோயி லென்பார்
காணநீ றின்றி வெள்ளை கண்டன வணிவா ராகி
வீணழிந் தொழிந்த கையர் விலாவொடி யாக்கி ஞரால். (சஅ)

தளம்புநெஞ் சுடைய வெண்ணூ யிரஞ்சமண் டலேவ ராயோ
ருளம்பரி வொடுகி ழுக்கண் யோசனை யகல மேற
வளம்பட வாது செய்த வாரண மென்னு நாமம்
விளங்கிய தன்று முன்னு மேதகு தராத லத்தே. (சசூ)

வேறு.

பாசமற நீறணிவான் பாக்கியமில் சாக்கியர்க
ணேசமுற விருந்தகழு நிரைமுடிந்த விடமின்னும்
பூசுரர்கள் பணிந்தேத்தும் பூவணநன் னகர்மருங்கிற்
காசினிமேல் விளங்கியது கழுவர்படை வீடெனவே. (ரூ0)

வேறு.

உறைத்த மன்னவன் முன்ன ருயர்ந்திடக்
குறித்த சாமரம் பெற்றது குற்றமோ
பொறுத்த தோணி புரத்தவர் தம்மொடுங்
கறுத்த செங்கழுக் காணிச் சமணரே. (ரூக)

சசு. எதிர் புகல்வதேது. முட்டுடைப் பட்டினி வயிறு - கண்டுமுட்டு, கேட்டுமுட்டுக்களால் பட்டினியிருக்கும் வயிறு. முகம் - கழுவின்முகம்.

சஎ. பாறு - கழுகு. சிவை - நரி. கவடி - பலகறை.

சஅ. சாணகம் - சாணம். கன்று - பசுக்கன்று. விலாவொடி - விலாப் பக்கம் ஓடியும்படி சிரிக்கும் சிரிப்பு; "விலாவிறக்கு" (மணி. கச: ஈசு.)

சசூ. தளம்புநெஞ்சு - அலைம்புகின்ற மனம்.

ரூ0. சமணர்களுக்குச் சாக்கியரென்றும் ஒருபெயருண்டு; கழுவர் படை வீடென்பது இக்காலத்துக் கழுவேறுமடை, கழுவேறு கடையெனவழங்கும்.

ரூக. சாமரம் - சாமரை, கழுமரம். இக்கவி, வஞ்சப்பழிப்பணி.

(பி - ம்.) 1 'வயிற்றினைக்கிழித்து' 2 'ஏறின'

வேறு.

நன்னெறி யேடு காண்பா ஞசையாய் நலங்கள் செய்து
மன்னவன் றுதிப்ப நாலு கவிப்[1]பெரு மாண்ம கிழ்ந்து
மூன்னுறக் காட்டி கின்றேம் போகென மூடுகிச் சென்றூர்
கன்னல்சூழ் புனலி யாற்றங் கரைவழிக் குடபா ஞைக்கி. (கூஉ)

வேறு.

[2]ஆர்ந்து செல்கதி கண்டுகண் டன்புறு நெஞ்சம்
வாழ்ந்து செல்வுழி மந்திரச் சொந்தமி ழேடு
சூழ்ந்த தெண்டிரைக் கடலென வருகுதித் துறைக்கட்
சேர்ந்து மூழ்கிய தோசனை யொன்றரை சென்று. (கூக)

ஆங்குக் காணுமு னிழிந்தன ராதர முதிர்வா
லோங்கு நாயக ஞணையா லுணர்வுடைத் தடினி
தாங்க ருந்திற லொடிவரும் வெம்மையைத் தணிந்தே
பாங்க றிந்துதாள் படிந்தது பாரதி சயிப்ப. (கூச)

வேறு.

வடகரை யேறி யேறு மேடுகா ணுமல் வாடிப்
புடைவரும் புதல்வர்க் கண்டு புதுமைவே றுண்டோ வென்னப்
படிபுகழ் நிரையான் மேய்ப்போம் யாங்கள்கேள் பழைய தாய்நன்
குடையதோர் சிவலிங் கந்தா [3]னுண்டுகா ணென்றூர் காட்டி. (கூடு)

ஞானசம் பந்தர் கண்டு நணுகியா லயத்தி றைஞ்சித்
[4]தேனுற வன்னி யென்று செந்தமிழ்ப் பதிக மோதப்
பானரை பிறங்க மூத்துப் பழுத்தவோர் விருத்த ஞகிக்
கூனிவந் துயர்காப் பிட்டான் சேடனூர் மேடு கோமான். (கூசு)

மிக்கபா லகமே லிந்த வேடெதிர் மேவி யாற்றுட்
புக்கியான் மூழ்குங் காலென் காலிடைப் பொருந்தல் கண்டு
திக்கறிந் தெதிர்த்தேன் மூத்தே ஞதலாற் றெரிந்த தில்லை
மக்களுண் டவர்க்கு நல்க வாசித்துத் தருதி யென்றான். (கூஎ)

கூஉ. ஆசையாய்த் துதிப்ப.

கூக. "வாரிதி யுருவா யாற்றின் வருபெருஞ் சலில முற்றும்" என்றூர் மூன்னும்; எ: அ. ஓசனை - யோசனை.

கூச. தடினி - ஆறு.

கூசு. "தேனுறவன்னி" என்பது திருவேடகப் பதிகத்தின் முதற்குறிப்பு. காப்பு - திருமேடு. சேடனூர் - திருவேடகம்; ஆதிசேடன் பூசித்த தலமாதலின் இவ்வாறு இப்பெயர்பெற்றது; சுசு-ஆம் பாடலிற்பார்க்க.

கூஎ. புக்கு - புகுந்து. நல்க - நான் கொடுத்தற்கு.

(பி - ம்.) 1 'பெருமான்' 2 'ஆழ்ந்து' 3 'உண்டுபோ' 4 'தேனுறை'

சித்திர நுதற்க ணிட்ட தெய்வநீ றிலங்க வுச்சி
வைத்தவொண் சிகைவி ளங்கப் பிணங்குநூன் மார்பின் மின்ன
வித்தக வடிவின் வந்த விருத்தவே தியரே நும்மை
யுத்தமச் சிவனே யென்ன வுதிக்கின்ற துளத்தெ னக்கே. (நிஅ)

சிறியனேன் பனுவல் கல்வி சிறந்தநின் றிருமைத் தர்க்கு
முறுவலே தருவ தல்லால் வேறிலே முடிகிக் காண்பான்
மறுவறு தென்னன் வந்தான்[1] வருந்தியோர் கார ணத்தா
லிறையவ காட்டல் வேண்டு மென்றுமெய் யொடுங்கிச் சொன்னார்.()

அவ்வுரை கேளா முன்ன ரருமறைக் கிழவ னக்கென்
செவ்விய மைந்தர் கட்குத் தேடிவே றளிப்ப ரேன்ற
மெய்வரு தென்னன் கையின் மேதினி முழுது மெச்ச
விவ்வுரை தீட்டு மேட்டை யீயென வீந்தா னன்றே. (சுo)

வே று.

சிறுபா லகனீ சிவபத் தனுமா
யறிவால் விறலா லருளா லுயர்வா
னிறைவா கியிருந் தனைநீள் பகைவென்
றுறவா ழுநிநான் மறையோ தியநாள். (சுக)

எனவாழ்த் தியொளிக் குழுனின் பழுதுந்
தனியா னெயிலந் துயர்தா னையொடு
மனவா தரவால் வரு[2]மன் கரமீ
தனைவோ ரும்வியப் பவளித் திடவே. (சுஉ)

வே று.

மன்னவ னதிச யித்து வந்தவா றெங்ங னென்னத்
தன்னிக ரில்லா விந்தத் தலத்திடை நயந்தி ருக்கு
முன்னிகழ் சிவன்[3]மெய் மூத்தோர் முனிவனில் வந்த வித்தா
னென்னுமுன் பணிந்தான் [4]பல்கா லேத்தினன் கூத்து மாடி. (சுங)

இகலமண் பரிச னத்தா லேறிய பாவ நீங்கச்
சிகரீள் கோயில் கண்டு சிவனைநா டொறும்வ ழுத்தித்
தகுநதித் தென்பா [5]னன்கு தரும்படை வீடு செய்து
பகையற விருந்தா னங்கண் பாண்டியன் சிறிது காலம். (சுச)

நிக. பனுவல் முறுவல் தருவதல்லால்.

சுo. மெய் - உண்மை வழி.

சுஉ. தனி யானை - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்; எழுவாய்.

சுச. பரிசனம் - ஸ்பரிசம்.

(பி - ம்.) 1'வணக்கி' 2'மன்னர்காத்து' 3'மேன்மூத்து' 4'அன்பால்' 5 'நான்குதரும்படைவீட்டைச்'

வே று.

விரைவோ டிகலா விடுமே டெதிர்போய்க்
கரைசேர் தலினு லுறைகா ரணனைப்
பரவே [1]டகனென் றிடவே பதியுந்
திருவே டகமென் றுசிறந் ததுவே. (சுடு)

வே று.

உன்னி மாலு [2]மூவணனுஞ் சேடனு
மன்னு சாத்தனு நான்குகம் வாழ்த்தகந்
துன்னு பல்பொரு டோன்றி யொடுங்கக
மென்னே யாளுடை யானுறை யேடகம். (சுசு)

வே று.

அறநெறிக் காழி வேந்த ராதரத் தேடெ திர்ந்த
துறைவயிற் சமண ரோடும் பாடித்த தோடந் தீர
வுறவுறத் தமது பேரா லுயர்வுடைச் சிவலிங் கத்தைச்
சிறுமையிற் றெள்ளி யாரென் றருச்சித்தார் செழியன் காண. (சுள)

வே று.

பொழிலார் மதுரா புரிமே விவியர்
தழகா யதனு ரணரா யகனைத்
தொழுதாய் தமிழ்பா டியபின் றுதியா
லெழிலா லயமற் று'மிறைஞ் சினரால். (சுஅ)

புகழ்நீ டியபூ ழியன்மண் டலமும்
மிகநா ளுமுளத் துவிளக் கமுறத்
தகவார் தருமந் தருமீ சனையும்
மகிழ்வா லணிநீ றுமறந் திலதே. (சுக)

நயமெய் தியதென் னவனு டடைவே
வியனீ றுபரப் பியவித் தகனு
ரியலோ டியர்தென் னனிலங் கவிருந்
துயர்கா விரிநா டுறமே வினரால். (ஏ০)

சுடு. இகலா - (சைனரோடு) மாறுகொண்டு.

சுசு. சாத்தன் - ஐயனர்.

சுள. பாடித்த - பாவித்த, பேசிய.

சுக. மண்டலமும்: உம்மை, சோழமண்டலத்தையன்றியென இறந்தது தழுவியது; கூ எ: ச-ஆம் பாடல்பார்க்க.

(பி - ம்.) 1'அழகன்னெனவே' 2'அயனுமூவணமும்'

வேறு.

1 தூண்டிரும் பாக்கி யின்றேர் தருப்புதூ ணுக்கி யேமூன்
முண்டிலோர் புதல்வ ரெலெண் ணுயிரஞ் சமணர் தம்மைக்
காண்டகு கழுவி லேற்றல் 2கண்டுநீ றணியா தந்தோ
மாண்டகு கடவுள் வேறுண் டென்பரே மதியி லாரே. (எக)

கொல்சுர நீக்கி மன்னன் கூனிமிர்த் தழலி னீரின்
வெல்லவே டெழுதி யிட்டு வெல்லருஞ் சமணர் தம்மைச்
சொல்லிநீள் கழுவில் வைத்த தொல்கதை கற்போர் கேட்போர்க்
கெல்லையில் செல்வ மெல்லை யெய்துதற் கையு மின்றே. (எஉ)

ஆகத்திருவிருத்தம் - கoஎசு.

கூகூ.—மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்.*

பூமகட்கு மணிமுடியா மதுரையந்தண் புரத்தின்கண் முன்னெ
ருகான் மன்னர்க் கென்றுஞ், சேமமுறு படைத்தலைவ ருகும் வென்
றித் தேசுடைய வுயர்கொற்றக் குலத்துட் டோன்றித், தூய்மைதரு
சுந்தரனுக் கன்பு பூண்டு சுந்தரசா மந்தனெனு நாமம் பெற்றுக், காமு
றுபே ராண்மையினோர் தோலா வீரன் கசிந்தன்பர்க் கன்புசெய்து
போது நாளில். (க)

ஆங்குலக மனுநெறிகோ டாமற் காக்கு மடல்வீர மாறனெனு
மரசன் றன்மேற், றேங்குபுகழ் வன்னியர்க டலைவ ருய சேதிபர்கோ
னென்பானோர் கிராதர் கோமா, னோங்குபெரும் பலபடையி னோடுங்
கூடி பொருப்படுவா னெண்ணியவா றுற்றறி கேட்டுத், தாங்கரிய
விரைவினெடும் போந்து வாய்ந்த தருமநெறிக் கவுரியனைச் சார்ந்து
சொன்னார். (உ)

முன்னமது கேட்டலுமே விரைவிற் கூடி 3மூரணடுபல் படை
4யாள்வே மெனக்க ணித்துக், கொன்னுனைவேற் சுந்தரசா மந்தனெ
ன்னுங் கொடுந்திறற்சே னபதியை யழைத்துச் சொல்வான், செந்
நெறிசேர் வடதிசையாள் கிராதர் கோமான் சேதிபர்கோ னென்பா
னோர் பெரியோ னம்மேன், மின்னுபடை யொடும்பொருவான் வரு
கின் றனும் விளம்புங்கா ரியமொன்று விளங்கக் கேண்மோ. (ஙூ)

(கூகூ)

க. கொந்தக்குலம் - கொத்தகக்குலம்; இக்குலத்திற் பிறந்தோர் சேனபதிக
ளாதற்குரியவர். [கவுரியன் - பாண்டியன்.

உ. சேதிபர்கோன் - பெயர்; ஙூ-ஆம்செய்யுள் பார்க்க. கிராதர் - வேடர்.

ஙூ. படை ஆள்வேம் - சேனைகளை வருவித்துப் பாதுகாப்போம்.

* "மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு, தக்கா ரெருவ ரெனிய தன்
மையும்" (திருவா. கீர்த்தி. சுசு-எ.) [மௌனத்தனித்துக்'

(பி - ம்.) 1'தூண்டுரும்பாக' 2'கண்டீர்' 3' மூரண்டரு' 4 'ஆள்வே

பல்படையைப் பல்படையாற் றள்ளல் வேண்டும் பார்புகழ்வீ
ராபடையோ மாண்ட தில்லை, யொல்லையினஞ் சரக்கறையிற் புக்கு
வேண்டு மொண்கனக மெடித்திட்டுப் படையா ளென்று, புல்லியரு
ளொடுந்திருக்கைச் சிறப்பு மிட்டுப் போவென்று விடைகொடுப்ப
விரைவு கண்டு, சொல்லிலிவன் றனக்கொப்பிங் கிவனே யென்று
சுடர்மணிமா முடிச்செழியன் றுதித்தான் சால. (சு)

அரியபெருஞ் சரக்கறையிற் காவ லோடு மடைந்தடைவிற் பெ
ரும்படைக ளாளத் தக்க, பொருள்பலவும் வகைவகைகைக் கொண்டி
கல்ல போர்வீரர் தமைத்[1]தேடி வாரு மென்று, பரிவிலெடுத் தன்ன
[2] டைந்தோர்ப் போக்கி நோக்கிப் பரிப்பவராற் கொடுபோந்து தனதில்
லத்து, விரைவிலெடும் புகுந்தான்செங் [3]கனகங் கண்டான் விதிர்
விதிர்த்தான் சிவனடியார்க் கிடுவா னெண்ணி. (ரு)

வேறு.

மிஞ்சிட வடைந்த கைப்பொருள் கொண்டே மெய்ப்பொரு
டேடுவான் விரும்பிச், செஞ்சுடர் மகுடக் கோயிலுள் வேந்தன்
செழும்பொரு டன்னெடுத் சென்று, பஞ்சின்மெல் லடியா ளங்கயற்
கண்ணி பங்கனே யங்கையாற் றொழுது, மிஞ்சுமிப் பொருளுன் னடி
யவர்க் கிடுவான் விருப்புறு முளக்கருத் தெனக்கே. (சூ)

நம்பனே யும்பர் தம்பதி பரவு நாதனே காத்தரு ளெனக்குன்,
றம்பமே யல்லாற் பிறிதிலை யென்று சாற்றிமுன் போந்தடி யவரைக்,
கம்பமா ருடலு மம்புசோர் விழியுங் கசிதரு நெஞ்சுமா யிறைஞ்சிச்,
[4] சம்புவே யென்ன வழுதுசெய் வித்தான் றனங்கள்வேண் டுப
வெடித் தளித்தே. (எ)

நட்பொடு மெல்ல[5]மன்னன்பொன் முழுது நாடொறு நாடொறு
மெடித்தாங், குட்பய மின்றி மாதொடுங் கூடி யுவகைகூர்ந் தரனடி
யவர்தங், கட்பய மெய்தி யாவரா யினுமுட் கருத்தறிந் தழுதுசெய்
வித்துத், தட்பமார் மனத்தன் மூவிரு துங்க டம்முளத் தனமெலா
மழித்தான். (அ)

சு. மாண்டதில்லை - மாட்சிமையுற்றதில்லை. சரக்கறை - பொன்னறை. படையாள் - சேனைகளை ஆள்வாய். திருக்கைச்சிறப்பு-ஏஞ்திமோதிரம். விரைவு கண்டு - (சௌந்தரசாமந்தன்) விரைந்து செல்லுதலைக்கண்டு.

ரு. விதிர்விதிர்த்தான்-விரைந்தான்; "மெய்தா னரும்பி விதிர்விதிர்த்து" (திருவா. திருச்சதகம், க.)

எ. உம்பர்தம்பதி - இந்திரன். தம்பம் - ஆதாரம். கம்பம் - நடுக்கம். "கம்பமாருடல்.....இறைஞ்சி": "சிந்தை யிடையுரு வன்புக் திருமேனி தன்னி லசைவுங்.....வந்திழி கண்ணீர்மழையும்" (பெரிய. திருஞா. உஎ0.)

அ. அடியவர்தங்கண் - அடியவரிடத்து.

(பி - ம்.) [1]'நேடி' [2]'அடைந்தோர்போக' [3]'கனகத்தேரும்' [4]'சம்புநீரென்ன' [5]'மன்னர்பொன்னெலாது'

அரசனுந் திங்க ளாறுசே றலுமே யடற்படைத் தலைவனை யழைத்துப், பரிகர மெவள வாண்டனை யென்னப் பழுதுரை யாதவ னுரைப்பான், திருவரு ளதனாற் சொக்கநா யகனைச் சிந்தைசெய் துள்ள தை யன்றிப், பொருபடை மன்ன வொருபடை யாண்ட திலையிது பொய்யல வின்றே. (கூ)

வந்தனை யடியேன் கருத்தினை முடிப்பான் வழிபடு மடியவர்க் கெளிய, சுந்தர னுண்டு வேண்டிய பொழுது படையுமுண் டெனத் துணிந் துரைப்ப, வந்தமன் னவனு மென்கொலா மீதென் றதிசயித் துன்னினை வின்க, ணெந்தைநா யகனும் வருவனேற் காண்பே மின்று போய் நாளைவா வென்றான். (கo)

கருத்துடைச் சேனைத் தலைவகே ளுனைக் காலையி னின்படை மெய்க்காட், டிருப்படக் காண்பேம் போவெனப் போந்த வுத்தமன் புத்தியுட் சால, வருத்தமுற் றென்ன மெனத்தனக் கினிய வள்ளலுக் குரைசெய்வா னெண்ணிப், பொருத்தவா லயத்துச் சேர்ந்துபொற் கமலப் பொய்கையு ணண்ணினீ ராடி. (கக)

நீறணிந் தருள்சேர் கடவுளை யடைந்து நியதியெண் ணுன்கறஞ் செய்வாள், கூறனே யடியே னென்செய்கே னுரையாய் [1]கொற்றவன் [2]றனமெலா மெடித்துன், வீறுடை யடியார் தங்கள்பா னிறைத்தே னுனைமெய்க் காட்டெனப் போந்தே, னுறுபூ மவுலி மாறனூர் திருமு னுன்படை காட்டுமா றென்கொல். (கஉ)

வே று.

பன்னிய பொருளு மில்லை படையுமோ வாண்ட தில்லை
தென்னன்மு னீயுண் டென்று செப்பினே னுனைப்பி லாளை
மன்னவர் தண்ட மாரே யாற்றுவார் வழிசெய் யாயே
லின்னுயிர் செகுப்ப தல்லால் வேறிலை யெனப்ப ணிந்தான். (கங)

வே று.

நெறியிலை சாத லலாதெனக் கேட்ட நிருமலனிரங்கிநீள் விசும்பி, லறிவுற வுரைப்பா னுறுபடைத் தலைவ வசைவிலா மனத்தொடு [3]சென்னீ, குறைவற வேண்டும் படைகொடு நாளைக் கொற்றவன் காணயாம் வருவேம், திறமுறு படையின் றகுதிகண் டிவந்து சேலையுந் தருவனு னமக்கே. (கச)

கூ. பரிகரம் - சேனை. [ளியவெம்மை பருமான்' கள: சு.

கo. வந்தனை அடியேன் - பணிதலையுடைய அடியேனது. 'அடியவர்க்கெ

கஉ. நியதி - நியமம். இச்செய்யுள் கருத்துடையடையணி.

கங. தண்டம்-தண்டனை. ஆரே ஆற்றுவார்-ஆர்பொறுப்பார். வழி-வகை.

கச. சாதலலாது நெறியிலை; பின், "இன்னுயிரளித்த கோவே"(கo) என் பது இதனை வலியுறுத்தும். அசைவு - மெலிவு. மேக்குச் சன்மானமாகச் சேலையையும் அரசன்தருவன். [மெலாமளித்து' 3'அடைநீ'

(பி - ம்.) 1'கொற்றவர்' 2'தனமெனுதழித்து', 'தனமெலாமழித்து', 'தன

என்னுமத் திருவாக் கதிசய முறக்கேட் டினிமையி னெழுந்து கூத் தாடி, யுன்னருங் களிப்பிற் போந்ததன் னுழையி னுற்றதன் மனையவட் குரைப்பத், தன்னுடை யச்சந் துண்ணெனத் தள்ளித் தலைவகே ணிலைமையை விடாது,நின்னுடைத் தருமங் கைதரு நாளை யுதவுவ னேசவெம் பெருமான். (கநி)

வெறிகமழ் குழலா ஞய்ந்தன மென்றே மெய்ப்பட வித்திற முரைப்பக், கறைகெழு நெடுவேல் வீரனு மற்று மற்றைநாட் காலையி லெழுந்து, நிறமுறு படைக்காம் பல்கலன் பூண்டு சிறிதுசே வக மொடுங் கூடிப், பிறையணி சடையான் றனையுளத் திருத்தி நடந்த னன் பெரியவாள் வாங்கி. (ககூ)

தன்னுழை கடந்து மன்னவன் வாயிற் றலைப்படுங் காலிறை யருளாற், பொன்னக ரமரர் முன்னிரு மருங்கும் பூமழை பொழிந்து நின் ரூர்ப்பச், சின்னமுஞ் சங்குந் தாரையுங் கொம்புஞ் செம்பொ னின் காளமுங் குழலுந், துன்னுவங் கியமுந் [1]தம்முனெம் மருங்குந் தொகுபுவி செவிகிறக் கறங்க. (கள)

சீர்மணி தாளஞ் சச்சரி கஞ்சஞ் சிலம்பவின் றண்ணுமை தடாரி, பேரிகை கரடி மத்தளஞ் சல்லி பெரும்பறை [2]துடிகடி முர சம், பார்புக ழிடக்கை யுடுக்கைகன் னியாளம் படகம்வண் டிமிலை [3]தெண் டிடுமை, வார்படு படகம் பெருந்தகு ணிச்ச மெங்கணும் [4]வானுற முழங்க. (கஅ)

வில்லொடி கணைவாள் கேடகங் கடகு வேன்மழுக் கடைத்தலைக் கழுக்கோ, ருல்கதை [5]பாரா வளைவளை யெறிகோல் சுரிகைபத் திரங் கொடுங் கணிச்சி, பல்வித முயல்கு ந்தமொண் பிண்டி பாலம்வெஞ் சூலநீள் கழைக்கோல், [6]கொல்லெழுத் தண்டி முதலிய வளவில் கோடி பல் படைக்கலம் பிறங்க. (கஉ)

பொருந்துபூங் கொடிக ளாடைக ளாடப் பொருவருஞ் சாமரை யிரட்டத், திருந்துபல் கவிகை நிழற்றவெம் மருங்குஞ் சேர்தரு தோரைகள் வீச,நெருங்கடை யாளந் துளங்கமட்பாம்பு நெளிய[7]துண் டீரிவான் முட்டப், பெருங்கட லென்னப் படர்ந்தொலி மிக்கு நடந் தது பெரும்படைச் சாத்து. (ஙo)

கநி. அச்சத்தைத் தள்ளியவள் மனைவி.

ககூ. வீரன் நாம் அற்று.

கஅ. நியாளம் - ஒருவகைப்பறை.

கஉ. பாராவளை - வளைதடி.

ஙo. பூங்கொடி - அழகியதுவசம். தோரைகள் - மயிலிறகால்செய்த விசிறிகள். மட்பாம்பு - ஆதிசேடன். படைச்சாத்து - சேனைத்திரள்.

(பி - ம்.) 1 தம்மின்' 2 'துடியடி' 3 'ஒண்டுடுமை' 4 'வானெழ' 5 'பாரு' 6 'கொல்லெழில்' 7 'வெண்மீரிவான்மூட'

வே று.

இப்பெருங் கொற்றத் தானை யிரும்படைத் தலைவன் முன்னு
மெய்ப்படத் தோன்றக் கண்டு வேந்தனீ தென்கொ லென்று
செப்பரும் பயத்தி னெஞ்சுஞ் செல்லவாள் வல்ல வீர
னப்பொழு தடிவ ணங்கி நம்படை யஞ்சே லென்றான். (உக)

ஓடுவன் மீள்வ னிற்ப னுன்மத்தர் போலே நோக்கி
யாடுவ [1]ணணிவன் முண்டி யரகர வென்று லிப்ப
னேடவி ழலங்கற் றென்னு விடுபடை மெய்க்காட் டின்று
கூடிமுன் காண்பா யென்று கூறுவன் றேற வாங்கு. (உஉ)

ஓதரும் பரிவு கூர்ந்து காண்பதற் கொருப்பட் டந்த
மாதவச் செழியர் கோமான் மந்திரத் தலைவர் சூழத்
தீதறு பொலிவிற போந்து சித்திர மண்ட பத்து
மீதுற விருந்தான் சால வியந்தலங் காரத் தோங்கி. (உங)

விசையவெம் படையைத் தோன்ற வீரரீ காட்டி டென்னத்
திசைவரும் பரி[2]க ரத்தைச் செல்லநில் வரநில் லென்று
வசையொடுஞ் செறுத்து ரைத்து வகைவகை தொறுநி றுத்தி
நசையுறக் காட்டி வானந் நானில மன்னன் காண. (உச)

வே று.

வங்கர் கலிங்கர் தெலுங்கர் நலங்கிளர் மாளவர் கோளர்வெங்
கொங்க ரிலாடர்கள் பாகதர் மாகதர் குச்சர் பப்பர[3]திண்
செங்கரு நாடர்கள் காடவர் வேடுவர் சிங்களர் கொங்கணர்மற்
றிங்கிவ ரிங்கிவ ரங்கவ ரங்கவ ருங்குவ ருங்குவரே. (உரு)

துன்னிய வெய்ய [4]துருக்க ரிரக்கமில் சோனகர் சீனர்கண்மா
மன்ன ரிரட்டிய தொட்டியர் தொட்டியர் வத்தவர் கத்திரியர்
செந்நெறி யாரியர் கோசலர் போசலர் சேதிபர் யாதவர்மற்
றிந்நிரை யிந்நிரை யந்நிரை யந்நிரை யுந்நிரையே. (உசு)

வே று.

[5] இன்னன வகையிற் கூறி யினப்படை முற்றுங் காட்ட
[6] மன்னனிவ் வீர னேப்போற் கண்டிலே மெனம கிழ்ந்து
கொன்னுற வழைத்து நாமங் கொந்தகப் பெருமா னென்றே
நன்னெறிப் பட்டங் கட்டி நல்கினன் பரிவட் டங்கள். (உஎ)

உரு-சு. பரி. ச: ஙஞ-ச-ஆம்அடிகளின் குறிப்பைப்பார்க்க. "அ அவனும் இ இவனும் உ உவனும் கூடியக்கால், எ எவனே வெல்லாரிகல்" (யா. வ்.)

(பி - ம்.) 1'நினைவனண்டி' 2'கலத்தை' 3'மாச்' 4'துலுக்கரிலக்கம்' 5'இன்னணம்' 6'மன்னிய'

இறையவ னழகு பொங்க விரும்பெரும் பரிமேற் கொண்டு
விறலுடைக் குந்தம் வாங்கி வெண்மதிக் கவிகை நீழன்
மறையநின் றுலாவக் கண்ட மன்னனங் குலாவு கின்ற
வுறுபடைத் தலைவன் [1]யார்கொல் வீரநீ யுரைத்தி யென்ன. (உ அ)

இனிமைகூர் செழியர் கோவே யாவரிங் கறிவார் சூழ்ந்த
மனமுடை யமைச்ச ரோடுங் [2]கேட்டிநீ யுரைக்கு மாற்ற
[3] நினையினிங் கடிய னேற்கா நின்பெரும் பொரு[4]ட னக்குப்
பனிமதிச் சடையர் காணிப் [5]பரிகரங் கொணர்ந்தா ரென்றான். (உ கூ)

[6] நன்றெழில் வீர நீசென் றழையென நயந்து சென்றே
யின்றுயி ரளித்த கோவே யெழுந்தரு டென்னன் காண்பா
னுன்றனை விரும்பா நின்ரு னென்றலு மூவகை கூர்ந்து
வென்றிகொள் படையை நீக்கி வேந்தனை நணுகிச் சொல்வான். (கூ ஒ)

மன்னகேள் புள்ளி சொல்லிற் களத்திடை மறுவொன் றுண்டு
முன்னிகழ் வடிவுஞ் சொல்லின் முடியில்லிற் றழும்பொன் றுண்டிங்
கென்னைமு னெழுது நல்ல சேவக னுனக்கெ னேப்போ
லுன்னரு மூலகத் தெய்தா னென்றன னுவகை கூர. (கூ க)

[7] என்னவின் னுடலங் கம்பித் தெழுவதற் குன்னி நின்ற
துன்னரு மிருக ரங்க ளொருவழிக் கொள்ளா நின்ற
வன்னையே போலு நல்ல வருளுடைச் [8]சொக்கே யென்ன
நின்னையான் காணுந் தோறு நிகழ்கின்ற துளத்தெ னக்கே. (கூ உ)

நின்னெழிற் புரவி யேற்ற நீதியைக் கண்டா லுன்னை
யென்னதேட் டெழுது கின்றே னெனத்துகி [9]லளிப்ப வாங்கித்
தன்னடி யானை வேண்டிச் சடைமிசைப் பூணைத்து கொண்டு
தென்னவ காண்டி யென்று செழும்பரி யுகைப்பன் காண. (கூ கூ)

தே வு.

அற்புறநி னைப்பவர கத்தினுளி ருப்பவன னைத்தையும [10]டக்கு
பவனீள், கற்பனைக டப்பவ[11]ன டக்குபுரி டித்துறுக திப்படவு
கைப்ப வடபால், வெற்பின்மூது கிற்றிசைமி சைக்கரிமு கத்தினின்மி
தித்ததொழி யப்பி லமதார், சற்பமும்வெ ருக்கொளக டித்ததும
ருத்தைநிகர் தத்துகவ னத்து ரகமே. (கூ ச)

உகூ. சூழ்ந்த - ஆராய்ந்த.

கூக. உடம்பில் தழும்புடைய வீரர்கள் சிறந்தவர்களாதலின், இங்ஙனம் கூறினர்.

கூஉ. கம்பித்து - நடுங்கி.

(பி - ம்.) 1 'யாவன்' 2 'கேளுநீ' 3 'நினைவினுங்' 4 'தனக்கப்' 5 'பரிகலம்' 6 'நன்றெனவீரனைச்' 7 'என்னதின்' 8 'சொக்கன்' 9 'நல்க' 10 'அடக்கு மவன்' 11 'டத்துபு'

வேறு.

பரிவொடு கண்ட மன்னன் பன்முறை யதிச யித்துப்
பொருபரி யுகைக்க வல்லா ரிப்படிப் புவிமீ தில்லை
யரிசரி தெனவி யப்ப வைத்துதா ரையினுந் தூண்டி
[1]விரைவிலங் கொளித்தா னந்த வெங்கொடும் படையுட் புக்கு. ()

அவ்வயின் வருந்தித் தேடி மாசன்முன் விரைவின் வந்தோர்
பொய்வழி யுரையாத் தூதன் புகலுவா னரச ரேறே
தெவ்வுறு படையான் மிக்க சேதிபர் கோமான் றன்னை
வெவ்வலிச் சிங்கங் கொன்ற தென்றனன் வேட்டைக் காட்டில். ()

அத்திறங் கேட்ட வேந்த னென்கொலென் றருளை வாழ்த்திச்
சித்தநன் பரிவு கூர்ந்து திகைத்ததி சயித்தி ருப்ப
வத்தலத் தமைச்ச ராலை ராதரத் தோடுங் கூடி
யுத்தர மற்றி ருந்தா ரும்பர்[2]கோ னருளை யேத்தி. (கஎ)

கொந்தகப் பெருமான் கேண்மோ கொகும்பகை போன திந்த
வெந்திறற் றந்தி ரத்தை வருத்தவேண் டுவதோ வில்லை
தந்தம திடத்துப் போகச் சாற்றுதி தாழா தின்று
சுந்தர னமக்குண் டாக வேண்டுமோ துணையிங் கென்றான். (கஅ)

கிறுத்துதல் [3]கரும மென்று கிரம்பிய படையை [4]வாழ்த்திச்
சிறப்பொடும் போக வேவ வாங்கது சிலைத்தெ ழுந்தே
யிறைப்பொழு தின்க ணங்கண் மறைந்திட வெழுந்து துள்ளி
யறப்பெருந் தவத்தி னனு மூழ்கினு னனைந் தத்துள். (கக)

பொய்யிலாத் தெய்வச் சேனை பொலிவொடு மறையக் கண்ட
வையகத் தோருஞ் சொக்க னருளினை வியந்தார் வாழ்த்தித்
துய்யபே ரன்பன் முன்னிற் சுந்தரற் கன்பு பூண்டு
மெய்யொடு மடைந்தான் முலில் விண்ணவர் வியக்க வாங்கு. (சஎ)

அரசனு லயத்துச் சென்றுங் கடியவர் கினைவு தன்னிற்
பரிவொடுஞ் செல்லும் பத்தர் பத்தினை யல்லாற் றெய்வங்
கருதின்வே றுண்டோ வென்று களித்தடி துதித்தா னேத்திப்
பெரியவா சிகைமா ணிக்கக் [5]கோவைகள் பிறவு நல்கி. (சக)

ஆகத்திருவிருத்தம் - ககக.

கஙி. தாரை - கதி.

கஅ. தந்திரம் - சேனை. தாழாது - தாமதியாமல்.

கக. சிலைத்து - முழங்கி.

(பி - ம்.) 1 'விரைவினில்' 2 'கோன்செயலைவாழ்த்தி' 3 'தருமமென்ன' 4 'சாற்றிச்' 5 'கோளகை'

சo.—உலவாக்கிழிகொடுத்த திருவிளையாடல்.

வளமை மீடிய மதுரையின் மூன்றெரு தென்னன்
றளர்வில் செல்வமுஞ் சாற்றருஞ் சேனையு மோங்கி
யெளிய சொக்கனே யிறைஞ்சிமுச் சந்தியு மினிதா
வளவில் வெம்பகை கடிந்துல காளுநா டன்னில். (க)

தெரிய முத்தழ னுன்மறை வேதியர் தேத்துப்
பரிவு செய்திடா திகழ்ந்துயர் பரனையே வழுத்த
வுரிய வேள்விக ளொழுக்கநல் குரவினு லொழிந்து
சுருதி யந்தணர் தாழ்ந்துபுன் றொழிலிடை யிழிந்தார். (உ)

வே று.

ஈனமா நெறிக டம்மி [1]லிழிந்தபி னினிய தேவர்
போனக வேள்வி போகப் போனது பொய்யா மாரி
பானலங் கழனி மேய நென்மூதற் பல்வ ளங்க
ளானவை விளைவுபோன போயின [2]வறமூன் னுன்கும். (ங)

வாரிதி யுலகின் மிக்க மதுரைமண் டலத்து வாழுஞ்
சீரிய மனிதர் குன்றித் திசைதிசை [3]போனர் மன்னன்
வாரணம் புரவி குன்று மாதனங் கோதனங்க
ளோர்பொலி யாரா மங்கள் யாவையுங் [4]குறைந்த மன்னே. (ச)

ஓங்கிய மன்னன் சால வுலைந்துல கேதங் கண்டே
யீங்கிதற் கேது வென்கொ லிலங்கவீ தறிவா னெங்கு
நீங்கருஞ் சொக்க னல்லா லிலையென நினைந்து நெஞ்சத்
தாங்குய ரால யத்து ளணைந்தடி பணிந்து சொல்வான். (ரு)

அய்யனே செய்ய கோவே யடியனே னின்னை யென்றும்
பொய்யற வணங்கி [5]வாழ்த்தப் புவிதுய ருறுவ தென்னை [ந்து
மெய்யுற வுணர்த்தல் வேண்டும் விளங்கவென் றுரைத்துப் போ
துய்யபே ரமளியின்கட் டியொடுந் துயிலுங் காலை. (சு)

உத்தம னெத்த லத்து முயிர்க்குயி ராகி நிற்கும்
பத்தர்கள் பத்தன் வந்து பகருவா னென்பா லன்பு
வைத்தவ ஞத லாலே மாறனே தேற வின்று
சத்திய மாவு னக்குச் [6]சாற்றுவன் புக்க வாறு. (எ)

க. எளிய - அடியார்க்கெளிய. மூச்சந்தி - காலை, உச்சி, மாலை.
உ. பரிவு - அன்பு. கல்குரவினுல் வேள்விகளும் ஒழுக்கமும் ஒழிந்து.
ச. மா தனம் - மிக்கபொருள். கோதனம் - பசு. ஆராமம் - சோலை.
ரு. உலகு ஏதம் - உலகத்தின் துன்பம்.

(பி - ம்.) 1'இழிந்து' 2'அறங்களுன்கும்' 3 'போக' 4 'சுருங்கிற்றன்றே' 5 'போத' 6'சாற்றுவம்'

வே று.

மேலறு நான்மறை நமக்கு மெய்யதற்
கியாவர்நல் லவரவர் தமக்கி யாங்லோ
மார்வுறு மேதினிக் கமர ராகிய
சார்வுறு மறையவர் தமை[1]யி கழ்ந்தனே. (அ)

ஆதலா னல்குர [2]வெய்தி யாங்கவர்
சோதிசேர் மறைவழித் தொழின்ம றந்தனர்
சோதிசேர் மறைவழித் தொழின்ம றத்தலாற்
கூதிர்வான் பொழிமழை குன்றிற் நிம்பரே. (கூ)

நெறிதரு மறையவர் நெஞ்சம் வாழுமேன்
முறைதரு வையக முழுதும் வாழுமா
னெறிதரு மறையவர் நெஞ்சம் வாடுமேன்
முறைதரு வையக முழுதும் வாடுமால். (கo)

பாமறை யந்தணர் தம்மைப் பார்த்திப
நாமவ ராகவே நாளுங் கண்டிடி
நாமவ ராகவே நாளுங் காண்பையேற்
பூமட மாமகள் போவ தில்லையே. (கக)

[3]நன்புடை யறத்தவர் நமக்கு நல்லவர்
துன்பமெய் தாதவர் துன்ப மெய்தலா
லின்புறு மண்டல மினிமை குன்றிய
தன்புடை யாயுனக் கறியக் கூறினேம். (கஉ)

வே று.

இன்புற வழைத்த வர்க்கா மினிமைசெய் விரைவிற் சால
[4]நன்புற நினக்கு மிக்க நலந்தரு செல்வ முண்டாந்
தென்புவி நயக்க நீங்காச் செல்லலே நீக்க [5]வற்றோர்
பொன்பொதி கிழியும் வாழத் தருகுவம் புதுமை கூர. (கங)

அக்கிழி யிற்பொன் கோடி யழிப்பினுங் [6]தொலையா தானம்
மிக்கபே ராணை யாலே வேண்டுப வெடுத்த ளித்துத்
தக்கவர் தமக்கு [7]மிட்டித் தருமமுஞ் செய்து நீயுன்
புக்கிலி லியாரும் [8]வாழ வாழுதி புவிமீ தூழி. (கச)

கo. நெஞ்சம் வாழுமேல் - மனம் மகிழுமாயின்.

கங. நீக்கவற்று - நீக்கவல்லதாகிய. இழி - இழித்த தனியாற்செய்த மூடிப்பு.

கச. "கோடிபொன் னெடுப்பினுங் குறைவிலாததோ, ராடக நீவி" என் னர்பின்னும்; உo. புக்கில் - வீடு.

(பி - ம்.) 1 'மறத்தனே' 2 'ஆதி' 3 'நன்குடையதத்தினர்' 4 'நன்கூர்', 'நன்குற' 5 'மற்றோர்' 6 'தொலியாதென்றன்' 7 'மிக்குத்' 8 'வாழத்தருகுவல்'

வேறு.

அஞ்ச லஞ்சலென் றன்புடைத் தென்னவ
னெஞ்சில் வேண்டிய நல்கிடு நீவியைப்
[1]பஞ்சின் மெல்லணைப் பான்முடிப் பான்மிசை
வஞ்ச [2]மாசற வைத்து மறைந்தனன். (கடு)

வேறு.

தனமுறுபொற் கிழிகண்டு துயிலுணர்ந்த தார்வேந்த
னெனையடிமை யுடையானை யல்லதுவே றிருநிலத்து
நினையிலெரு தேவுண்டோ நேசமுளா ரெனவியந்து
கனவுநிலை யுரைசெய்யக் கேட்டபெருங் களியமைச்சர். (கசு)

வேறு.

கனவிடைக் கண்ட செம்பொன் கண்டதுன் கருத்துட் [3]டங்கு
நினைவதற் கரியவீச னல்கலா னீடு சிங்கா
தனமிசை வைத்துப் பூசித் தருளுதி தணிவ [4]தில்லே
யினியுனக் குயர்ந்த செல்வ மியைவதற் கைய மின்றே. (கள)

ஓப்பிலா னுரைத்தல் போல வொண்பெருந் தனமெ டுத்துச்
செப்பரு மறையோர் தம்மைச் சிறப்பொடும் பூசை செய்து
மெய்ப்படுந் தலத்தி ருத்தி வேண்டிவ நல்கி டென்ன
வப்படிச் செய்வ லென்று செய்தன னரசர் கோமான். (கஎ)

நல்லவர் பரவுஞ் சொக்க நாயக னருளி னாலே
தொல்லையா குதிக ளோங்கிச் சுருதியும் [5]வழங்கி யெங்குஞ்
செல்லனல் குரவு நீங்கித் திங்கண்மும் மாரி பெய்து
பல்விதம் விளைவும் பொங்கி நிறைந்தது பாண்டி நாடு. (கஅ)

வேறு.

கோடிபொன் னெடுப்பினுங் குறைவி லாததோ
ராடக நீவிகண் டதிச யத்தொடு
நாடவர் துதித்தனர் நாடி நாடொறும்
பாடினர் செந்தமிழ்ப் பனுவல் சான்றவர். (உo)

வேறு.

செய்தவ முயற்சி யாலே சிவனடி யார்க ணன்பும்
வைதிக நெறிக்க ணன்புங் கண்டுமண் டலத்தோ ரெல்லாங்
கைதவன் றனையு மந்தக் கைதவற் கன்பு பூண்ட
மெய்திகழ் சொக்க நாதன் றன்னையும் வியந்தார் சால. (உக)

ஆகத்திருவிருத்தம் - ககஉக.

கடு. நீவி - இழி. கள. தணிவதில்லே - குறையாது.
கஉ. செல்லல் - துன்பம். உo. ஆடகநீவி - பொன்முடி.
(பி - ம்.) 1'பஞ்சிமெல்' 2'மாறற' 3'தங்கி' 4'இல்லாது' 5'விளங்கி'

சக.—மாமனுகவந்துவழக்குரைத்த திருவிளையாடல்.

தளர்வில் பல்புகழ் மதுரை யம்பதி தன்னின் முன்னொரு காலதீ
ளளவில் செல்வமு முற்ற சுற்றமு மமைவி ஞெடிவி ளங்கிமற்
றுளம்வி ரும்பிய வாணி கஞ்செய்தொ ழுக்கம் வாய்மை சிறக்குமோர்
வளமை சேர்தன பால னென்றொரு வணிகன் மாசற வாழ்ந்தனன்.

செல்வ முற்றிய வண்மை முற்றிகழ் நீதி லொண்குல மோங்குவா
[1]னல்வி னைத்தணி வால ளித்தவொர் மைந்த னந்தவி லாமையா
லொல்லை யிற்றனு டன்பி றந்தவண் மைந்த னைத்தனு வப்பொடு
மெல்லை யற்றசி றப்பொ டும்மக வாவெ டித்துவ ளர்த்தனன். (உ)

வளர்த்த ருன்புதல் வன்வ யிற்றன்வ ளந்த ரும்பொருள் யாவையு
மளித்தி யைந்தத னத்தொ டும்புதல் வற்பெ றப்பெரு காசையா
லுளத்து நல்லன பேர றங்களு வந்து செய்துயர் கங்கைநீர்
குளித்தி யாம்வரு வேமெ னத்தனி கூறி மாதொடு மேகினன். (ஊ)

வே று.

ஆங்கவன் போய பின்ன ரடுத்திறற் ருயத் தார்க
டாங்கிளர்ந் திறந்தா னென்று மனையொடு தனமுங் கைக்கொண்
டீங்குநீ யேடி யார்கொல் போவென விகழ்ந்து கூறி
யோங்குமா தினையு மைந்தன் றன்னையு மொதுக்கி ஞரால். (எ)

ஆடைசோ றளவு மீயா தகற்றிட வகன்ரு ளுள்ளம்
வாடிமுன் னுவர்ப்பி டித்து மறிப்பவு நில்லா ராகி
யாடகம் பலர்க்கு நல்கி யளவில்வா ணிகங்கள் செய்து
நாடரும் வலியைக் காட்டி யிருந்தனர் நடுக்க மின்றி. (ஏ)

உ. வண்மைமுன் நிகழ் - கொடை முதலியவைகள் விளங்கப்பெற்ற. ஈத்த - பெருக.

ச. இறந்தானென்று தெளிந்து,

ஞ. துவர்பிடித்து - செம்மைநிறமுள்ள ஆடையைப்பிடித்து; கo-ஆம் பாடல் பார்க்க; துவர்: ஆகுபெயர்.

* "முன்னொரு வணிகன் மகப்பே றின்மையின், மருமான் றன்னை மகனெ னச் சடங்குசெய், துள்ளமும் காணமு மவனுழி யொருக்கி, முக்கவர்த் திரு நதி தூணியுடன் மூழ்கி, யப்புலத் துயிர்கொடுத் தருட்பொருள் கொண்டபின், மற்றவன் ருயம் வவ்வுறு மாக்கள், காணிலகக் கொண்டமறுமை மைத்தனை, நிரை த்துக் கிணைகொ ணெடுவழக் குய்த்தது, மைந்தனுங் கேளிரு மதிமுடிக் கடவு ணின், புந்தியொன் றின்றிப் புகல்ல மென்றய, ரவ்வுழி யொருசா ரவன்மா தலனென, வற்வொளி நிறைவே யோருருத் தரித்துவந், தருள்வழக் கேறி பவர்வழக் குடைத்த, கூட ணுயகன்" (கல். சரு.)

(பி - ம்.) [1]'நல்வினைக்கணிலாளளித்தவொர் மந்தனந்த வில்லாமையால்'

மங்கல நாணி ழுந்த மடந்தையோர் மதிநி னைந்து
செங்கணீர் வார வாரச் சிறுவனே டிவ்வி டுக்க
ணங்கயற் கண்ணி பங்கன் றனையலா லாற்று வார்க
ளிங்கொரு கேளி ரில்லை யென்றிறை கோயில் புக்காள். (கூ)

மைத்திக ழுளகஞ் சோர மைந்தனை நிலத்துப் போகட்
டத்தநேர் குவித்து முன்னின் றறநெறி வளர்க்குங் கோவே
சத்தியக் குன்றே மிக்க தயாப்பெருங் கடலே போற்றும்
பத்தர்கள் பத்த னேயான் பகர்வதொன் றுண்டு கேண்மோ. (எ)

வையகத் தோர்கள் காண மருகனை [1]மகன்மை கொண்டு
செய்வன வடைவிற் செய்து செல்வமுள் ளனவு நல்கித்
தூய்யவென் னுடன்பி றந்தான் போயினன் றூரத் தின்று
வெய்யதா யத்தார் தள்ளி மிகைகள்செய் கின்ரு ரன்றே. (அ)

பற்றலர் சொல்லும் வெய்ய படிற்றுரை பொறுக்க கில்லேன்
மற்றெரு கேளி ரில்லை மன்னவ ஞனை யில்லை
பெற்றதாய் தந்தை நீயே யென்றுபே ரவசத் தோடு
மற்றவர்க் கற்ற செல்வன் சங்கிதி யரற்றி வீழ்ந்தாள். (கூ)

மற்றது கண்டி ரங்கி மாசிலா னணுகி மாதே
யுற்றதின் புதல்வ னோடு மெழுந்துசென் றுலகோர் காணப்
பற்றலர் தம்மை நாடிப் பயப்படே றுவர்ப்பி டித்துச்
சற்றுமோ ரடியி டாமற் றடித்துவா தரும [2]மன்றுள். (கo)

மன்றிடை முன்னோன் றந்த மாசறு பொருள்க ளெல்லா
மொன்றிய வணிக ருகி யுற்றவர் முற்றுங் காண
வின்றியாம் வந்து தோலா திகல்பட வழக்குப் பேசி
யொன்றுமே காமல் வாங்கித் தருகுவ முண்மை யீதால். (கக)

இன்னதீர்ந் துள்ளந் தேறி யேகென மறையக் கண்டு
தன்னுளே யதிச யித்துத் தாங்கரு மவச நீங்கிப்
பின்னரொன் றுரையா ளாகி யெழுந்துபே ரருளே வாழ்த்திப்
பன்முறை வணங்கிப் போந்தாள் பழுதிலா வணிக மாது. (கஉ)

தெரிவுறச் சென்று மன்றிற் போதுமி னென்னச் சீறி
விரைவொடுந் தடுப்பக் [3]கண்டு மேவலர் சால வைது
மருவிய புதல்வ னோடு மண்மிசை மறியத் தள்ளித்
தரும[4]வா சனத்தி லேறச் சங்கரன் நரித்தா னில்லை. (கக)

எ. போகட்டு - இடத்தி. அத்தம் - கை.
அ. மகன்மைகொண்டு-மகனுகக்கொண்டு. மிகை-வரம்புகடந்த செய்கை.
கூ. படிற்றுரை - பொய்யுரை. கo. தரும மன்று - நியாயசபை.
கக. தரும ஆசனம் - நியாயசபை.
(பி-ம்.) 1'மகன்மைக்கொண்டு' 2'என்றே' 3'கண்ட' 4'மாமன்றில்'

குறைவற மாமன் கோலங் கொண்டுவெண் ணீறு சாத்தி
யுறுவையுந் தழையச் சுற்றி யணிமுடிச் சாத்துஞ் சாத்திச்
செறியமோ திரஞ்செ றித்த செழுமலர்க் கரங்கள் வீசி
முறைமையிற் [1]றருஞ்சி றுக்கன் பின்வர முன்ன டந்தான். (கச)

அன்புடை யவள்கண் டைய கோவென வயிற்ற றைந்து
தன்பெரும் புழுக்கந் தீரத் தமையனைத் தழுவிக் கொண்டே
யென்பெருந் துணைநீ போக யானுமென் மகவு மூற்ற
துன்பமோ தொலையா தென்ன வாற்றிஞள் கண்ணீர் சோர. (கரி)

கருணையன் ருனு மேனி கம்பித்துக் கண்ணீர் வார
வொருமரு மகனை யென்ற னுடன்பிறந் தவனை மண்மேல்
வெருவுற வொருவன் [2]சொல்வ தேயென விம்மி விம்மிப்
பொருமினின் றழுதான் யாருங் [3]கலுழுமெய் பூண்டு கொண்டி. (ககூ)

வஞ்சகர் தள்ள வீழ்ந்த மைந்தனை யெடுத்து மோந்து
பஞ்சவ னகரி தன்னுட் பழுதுரை பகர்வா ரில்லை
நெஞ்சின்மே லஞ்ச வேண்டா நீங்களிங் கியாம்வந் தேமென்
றஞ்சினோர் தம்மைத் தேற்றி யாற்றினன் போற்றி யாங்கு. (கஎ)

வணிகரூ ரியரே வாரீர் வாணிக நன்ரே சொல்லீர்
பணிநெடு விலைமா ணிக்கம் [4]விற்றதோ பயனென் போதுங்
குணமுடை யளகைக் கோனீர் [5]மருகனோர் குமர னுண்டே
வணியநீ ரறியீ ரோவென் றவரவர்த் தழுவிக் கொண்டான். (கஅ)

கடம்பரே யுயர்ந்த பொன்னுக் காளுண்டோ [6]காதல் வீதி
விடங்கரே யமரர் கோனூர் [7]பணையமீட் டிலரோ மெல்ல
நடந்திரீர் வைத்த முத்து விற்றதோ நான்முன் வைத்த
குடங்கள்போ யினவோ வென்று கூறியென் னென்ரூன் றேற. (ககூ)

ஆங்கவை யிருந்தோர் நல்ல வவதரத் தணைந்தான் மாம
னீங்குடன் பிறக்கிற் கெட்டே னிப்படி வேண்டு மென்று
தாங்கருந் தாயத் தாரை நிறுத்திநின் றனிவ ழக்கை
யோங்கிய [8]தனபா லாசொ லென்றன ருவகை கூர்ந்து. (உ0)

கச. அறுவை - ஆடை. முடிச்சாத்து - தலைப்பாகை. கைவீசல், வருந்தாக்குறிப்பு. சிறுக்கன் - சிறுவன்.

கஎ. பஞ்சவன் - பாண்டியன்.

கஅ, ககூ. இப்பாடல்கள், ஆங்கு வந்துள்ள வணிகர்களை நோக்கிச் சிவபெருமான் வினவல்: 'வணிகசூரியர்' என்பது முதலியன, வணிகர்களுடைய பெயர் விசேடங்கள். பயன் என் போதும் - இலாபம் யாதவரும்? பணையம் - கடு. 'என்' என்றது, தம்முடைய பழைய ஞாபகத்தைப் புலப்படுத்தியபடி.

உ0. அவதரம்=அவஸரம் - சமயம்.

(பி - ம்.) 1 'கருஞ்சிறுக்கன்', 'தருஞ்சிறுக்கன்' 2 'சொல்வதோவென', 'சொல்வதேயென்று' 3 'இரங்க' 4 'விற்றதென்பயனே' 5 'மருகனே' 6 'கானல்' 7 'பயணமீண்டிலரோ' 8 'தனபாலன்'

மணிகுடி யடிமை காணி மாடுமா ணிக்க முத்துக்
கனகவொண் கிழிநூ றாசு காசுசா தனங்கள் கஞ்ச
மினமுறு பணைய நாம மடையாள மெவையுந் தோன்றச்
சினமுறு தாயத் தாருஞ் சுற்றமுந் தெளியச் சொல்லி. (உக)

என்னுடன் பிறந்தாண் மைந்த னீங்கிவன் றனையெ டுத்து
முன்னமே பிள்ளை யாக வளர்த்தியான் முறைமை தன்னின்
மன்னிய செல்வ மெல்லாங் கொடுத்தனன் மகவி லாமற்
றென்னவன் பெரிய நீதி குன்றுமோ செப்பு மென்றான். (உஉ)

மன்றிடை யிருந்தோ ரெல்லா மாதுல னவின்ற வாறு
நன்றென [1]வியந்து கண்டு ஞாதிக டங்குற் றத்தா
லொன்றுமங் குரையா ராய்விட் டொளித்தனர் தரும மாறன்
றன்திரு நீதி நாட்டுத் தண்டமுண் டாமென் றஞ்சி. (உங)

[2] மாற்றவ ரொளிக்கக் கண்டென் மருமகன் றன்னைக் கொல்வான்
கூற்றென வந்த தாயக் கொடுமைகண் டூர்க ணீங்க
ளேற்றலை செய்தோர் தம்மை யிறைநெறி முறைமை யோங்கச்
சாற்றரும் பெரிய தண்டங் கொள்ளுமின் சான்றீ ராயின். (உச)

தருமமோ வெனக்கம் பித்த சான்றவர் காணுந் தோறு
முருவநீ சொக்க னென்ன விளங்கினை யுளங்க டோறு
மருவலர் விட்டார் விட்ட வகைதொறும் பொருள்கள் கைக்கொண்
டிரியநின் மருகனேகும் [3]போதிநின் னுழைக்க ணென்றார். (உடு)

மன்றுளே வழக்குச் சொல்ல வல்லவ னின்போ லில்லை
யென்றனர் வணிகன் போந்தாங் கிலங்குதன் மருகனேகி
நின்றதன் றங்கை யோடு நேசமார் கிளைஞ ரோடுங்
கன்றினர் விட்டுப் போன கனக[4]மா விகையுட் புக்கான். (உசு)

பாங்கொரு பொருள்சோ ராமற் காட்டிவெம் பயம கற்றி
யாங்கவர் தமையி ருத்தி யவ்வயி னெவருங் காண
வோங்கிய புகழ்க்கு நல்ல சொக்கனு மெனவு ரைத்துத்
தாங்கரு முறுவ லோடு மறைந்தனன் றனிவி சும்பில். (உஎ)

உக. காணி - உரியநிலம். கஞ்சம் - வெண்கலம்.

உஉ. மகவிலாமையாற் கொடுத்தனன்.

உங. அஞ்சி ஒளித்தனர்.

உச. ஏற்ற அலைசெய்தோர் தம்மை - எதிர்த்து வருத்தியவர்களை.

உடு. தருமமோவென - இவர்கள்செயல் தருமமாவென்றுசொல்ல. உளங்கடோறும் விளங்கினை. வகை - இடங்கள். உழை - வீடு.

உசு. கன்றினர் - பகைவர்.

உஎ. 'புகழ்க்குநல்ல சொக்கன்': சுஉ: ஙக.

(பி - ம்.) 1'உவட்டக்', 'வியட்டக்' 2'மாத்தலர்' 3'டோக' 4'மாமலை'

இக்ஷணக் கிப்ப டிக்கார் வெல்லுவா 1ரிரங்கி நந்தஞ்
சொக்கனே யல்லா லுண்டோ தொழுபவர்க் கெளியா னென்று
மிக்கநீ தியையு மாட்டாக் 2கைகந்தலை விரைந்து நோக்குந்
தக்கபே ரன்பை யுங்கண் டதிசயித் தார்கள் சான்றோர். (உஅ)

மண்மிசை வழக்கு வெல்வான் மாமன்மெய் பூணைந்த தன்றி
யெண்மறை யுரைக்கும் வாயா லிகல்வழக் குரைப்ப தேயொண்
3 கண்ணினீர் சோர வாய்விட் டழுவதே கடவு ளென்றுங்
கெண்ணரும் வணிகர் மூற்று மேத்திஞ ரருளே வாழ்த்தி. (உசு)

ஆகத்திருவிருத்தம் - ககசுஎ.

சஉ.—அட்டமாசித்திபகர்ந்த திருவிளையாடல்.*

மல்லலஞ் சிறப்பி னோங்கும் வான்றெடுங் கயிலை யங்கண்
பல்வித மணிபி றங்கு பளிக்குமண் டபத்தி ருந்து
சொல்லரும் பல்க ணங்க ளதிசெய்து விதியிற் கேட்ப
நல்வினைக் கதைக ளின்ற ஞயகன் மூன்றோர் நாளில். (க)

முறைமையி னவிலுங் காலை முனைதெடு வேற்ற டக்கை
யறுமுகக் கடவுட் கின்பா லன்பொடு 4நல்கிச் சற்று
மறுவிலா வியக்க மாத ரறுவரு மகிழ்ந்து வந்து
நெறியொடு சிறந்த நல்கி நின்றடி தொழுது போற்றி. (உ)

கருணைமே னியனே தேவர் தேவனே கயிலை வேந்தே
யரியவை யெவையு நல்கு மட்டமா சித்தி தம்மை
யுரையொடு முரைத்தல் வேண்டு முணர்வுற வெங்கட் கென்னப்
பரமனு மூவகை கூர்ந்து பகர்ந்தனன் றிருந்த வாங்கு. (ங)

வேறு.

இருந்தணி மாமுத லெட்டுச் சித்தியுந்
திருந்திய பொருளொடு செப்புங் காலையில்
விரும்பிய மடந்தையர் வினவ சத்திஞற்
பரம்பிய பொருள்களைப் பராமு கஞ்செய்தார். (ச)

உஅ. கணக்கு - வழக்கு. மாட்டாக்கைகந்தலை - வன்மையில்லாதவிதவை. சான்றோர் - நியாயசபைத்தலைவர்.

(சஉ)

உ. இன்பால் - இனியபாலை. இயக்கமாதர் - யக்ஷமகளிர்.

ங. உரையொடு - பொருளொடு; ச.

*"பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங், கட்டமா சித்தி யருளிய வதுவும்", "இத்தி தன்னின் கீழிரு மூவர்க், கத்திக் கருளிய வரசே போற்றி" (திருவா. கோத்தி. சுஉ-ங; போற்றி. ககஉ-ங.)

(பி - ம்.) 1'இங்கு' 2'கையத்தலை' 3'கண்கணீர் சொரிய' 4'சிறக்கநல்கி'

அப்பொழு திறைவெகுண் டவர்க டம்மையாஞ்
செப்பிய சித்தியைத் தெளியக் கேட்டிலீர்
மெய்ப்படி ஞானமுங் குறையு மேலுமக்
கொப்பொடி நவில்வ தொன் றுண்டு கேண்மினே. (நி)

சிட்டர்வாழ் தென்னவ ஞட்டிற் சீருடைப்
பட்டமங் கலமெனும் பதியொன் றுண்ட தில்
விட்டகோ டியோசனை [1]போந்து விண்மிசை
மூட்டுமோர் வடதரு வுண்டி மூன்னரோ. (சு)

ஆங்கதி னீழலி லாறு மாதருந்
தூங்கதில் விசும்பிடைச் சுழன்றெ ழுந்துபோ
யோங்குரு வொழிந்துகல் லுருவ மாகியே
தாங்குத லறவிழு மெனச்ச பித்தனன். (எ)

குன்றிய மனத்தொடும் வணங்கிக் கோதையர்
மன்றுறை யிறைவனே மங்கை பங்கனே
[2]யின்றிரும் பிழைபொறுத் தருளி யெங்கண்மே
லொன்றிய சாபமு மொழித்தி யென்றனர். (அ)

ஓதிய [3]பகுதிகேட் டிவகை கூர்ந்தியற்
போதமின் மாதரீர் புகன்ற நாட்டிடைச்
சோதிசே ரருளுடைச் சொக்க னென்றியா
மேதகு மதுரையி லிருப்ப மேம்பட. (கூ)

வேறு.

செறிவொடு மாங்கு நீங்கள் சேருமின் சேர்ந்த வாற்கீழ்
முறைமையின் வெளிப்பட் டுங்கள் சாபமு நீக்கி முன்னி
னெறிபட வறிய வெட்டுச் சித்தியு நிகழ்த்து வேமென்
றிறையருள் புரியப் போந்தா ரிளைப்பொடு [4]மினிமை கூர்ந்து. (கo)

நி. மெய்: சிலேடை. மேல - இனி. ஒப்பு - பொருத்தம்.

சு. பட்டமங்கலம்: சிவகங்கையைச்சார்ந்தது ; பட்டமங்கையெனவும் வழங்கும். கோ யோசனை போந்து - கொம்புகள் யோசனையளவு நீண்டு.

எ. தூங்கதில் - ஓய்வில்லாமல்; "தூங்க தில்லாமல்": உஅ: அஅ; சஉ: கக. தாங்குதலற - தடையற. விழும்: ஏவல்.

கூ. பகுதி - பகுப்பு, இயல்பு. இயற்போதம் - இயற்கையறிவு.

கo. இறை: எழுவாய். சாபானுக்கிரகத்தால் முனையே இளைப்பும் இனிமையும் பெற்றனர்.

(பி - ம்.) 1'ஓடி' 2'இன்றரும்' 3'தகுதி' 4'ஏதங்'

ஆங்கிறை யிறைவி யோடு மவ்வயி னெழுந்து வெற்பின்
பாங்குறு திருக்கோ யிற்கண் மேவினன் பாவை மாருந்
தூங்ககில் லாமல் வானிற் சுழன்றுசென் றிழிந்து வீழ்ந்து
நீங்கரு நிழலிற் கல்லாய் நின்றனர் நெடிது காலம். (கக)

வேறு.

மன்னிய குருவடி வாகி வள்ளலும்
பின்னெரு நாணினேந் தணுகப் பேதைய
ருன்னரு ஞ்சிலவடி வொழிந்து காணுமுன்
பொன்னுயர் வடிவொடும் போதம் பெற்றனர். (கஉ)

மைப்படி கண்டனே மதுரை வள்ளலே
துப்பமர் மெய்யனே சொக்க நாதனே
யொப்பொடு கேட்பமென் றுள்ளம் பற்றியே
மெய்ப்படு சித்தியை விளம்பென் றேத்தினர். (கங)

[1]மஞ்சமை குழலுமை மங்கை பங்கனு
[2]மஞ்சலீ ரப்படிச் செய்வம் யாமென
வெஞ்சலில் சொல்லொடு மெட்டுச் சித்தியும்
விஞ்சிய பொருளொடும் விரித்து ரைத்தனன். (கச)

வேறு.

அணிமா மகிமா கிரிமா லகிமா
[3]நணுகே சத்துவம் வசித்துவ நன்குள
விணைசேர் பிராத்திப் பிராகா மியமென்
குணமார் சித்திக ளெங்கக் கூறினன். (கஞ)

வேறு.

தெரிவைய ருளிச் செய்த சித்தியாற் சித்தி பெற்றுங்
குருவொடு மிடையூ றின்றி யுலாவினர் திசைக டோறும்
பொருவில்கல் லுயிர்த்தெ ழுந்து போனது கண்டு மண்ணோர்
பரவயான் சொக்க னென்றே பரமனு மதுரை புக்கான். (கசு)

ஆகத்திருவிருத்தம் - ககஅசு.

கஉ. வடிவும் அறிவும். கங. ஒப்பு - மனப்பொருத்தம்.

கச. சொல்லொடும் பொருளொடும் விரித்து.

கசு. உருவொடும் உலாவினர்.

(பி - ம்.) 1 'மஞ்சமர்' 2 'அஞ்சனீர்' 3 'கணுகும் வசித்துவ மீசத்துவ நன்குள'

சங.—தண்ணீர்ப்பந்தர்வைத்த திருவிளையாடல்.*

மருவு முன்னெரு காலமெய் யழகான் மன்மத னிவனெனச் சிற
ந்து, தருமம் வீரியந் தைரிய முளஞ்சுத் தனதுயர் மரபினுக் கொத்த,
திருவை வேட்டி'டா தகிலமுந் தழைப்பத் தீதறுசெய்யகோ லோச்சிப்,
பெருமை மிக்கதென் மதுரையில் வாழ்ந்தான் பிஞ்ஞகற் கன்புளோர்
செழியன். (க)

அன்னவ னுடனேர் [1]தொன்னெறி வளவ னருங்குல மரபின்
யான் பயந்த, கன்னியைக் கொடித்தே யுறவுகொள் வேமென் றெண்
ணி [2]யொண் காரியத் தோரை, முன்னுற வேண்டும் பொருளொடு
விடுப்ப மொய்ம்புடை வழுதிகண் டுவந்து, மன்னிய வுலகத் தியாவரு
மதிப்ப மறுபொரு ளெதிர்செல விடித்தான். (உ)

வே று.

இனிமையுற வித்தகவி னடக்கு நாளி லெதிரிலா வுயர்வழுதிக்
கினியனைய, சினமலியு மொருவயவன் படையி னேடுஞ் சென்னிமக
டனைக்கொள்வா னெண்ணி னீங்கி, மனவலியி னுடன்செல்லக் கண்ட
சென்னி மற்றவன்ற னுடனெதிர்க்க மாட்டா னுகி,யனநடைசேர் மட
மகளைக் கொடித்தான் மிக்க வறிவுடைய னுயிருந்து மச்சங் கூர்ந்தே.

மன்னுபுகழ்க் கிள்ளிமரு மகனு மந்த மாறனுடன் கூடிமுனம்
வெல்லற் கொண்ணுத், தன்னுடைய பெரும்பகைவ னுய மிக்க தானை
யுடை வடபுடவி யரசன் றன்மேற், முன்னியவெங் கயமுதனுற் படை
யி னேடுந் தோலாது சென்றுவினை தொலைத்து மீண்ட, பின்னரள
வில்லாத சேனை கூட்டி யிருந்தனன்வெங் திறங்கள்பல பிறங்கப் பேசி.

தருமநெறி கோடாத தமையன் றன்னைச் சமரிடைவென் றியா
மதுரை கொள்வ மென்றே, யிருநிலத்தோர் பரிவேத்தா வென்னும்
புன்சொற் கினியாதோ னடலபய னேடுங் கூடிக், கரிபுரவி னெருங்கு
பெரும் படையி னேடுங் கடிமதில்சூழ் மாமதுரை மண்ட லத்து,
விரைமருவும் வஞ்சிமிலைந் தணுகக் கண்ட விமலனடி மறவாத வீர
மாறன். (ரு)

சு. வினை - போர்.

கூ. பரிவேத்தா - தமையனுக்கு விவாகமாகாமலிருக்கும்பொழுது விவா
கஞ்செய்துகொண்டவன்; கக, உ0. வஞ்சி - பகைமேற் செல்வோர் அணியு
மாலை.

* "தண்ணீர்ப் பத்தர் சயம்பெற வைத்து, கன்னீர்ச் சேவக ஞெகிய கண்மை
யும்" (திருவா. கோத்தி. கூஅ - கூ.)

(பி - ம்.) [1]'செந்நெறிவளவ' [2]'யோர் காரியத்தோனே'

செம்பியன்றன் ஞெகிழ்பெரிய சேனை யோடுந் திறம்பேசித் தான்வீர ஞெரிருக்கு, மெம்பிவரு கின்ருன்யா மெதிர்க்க மாட்டே மென்செய்கே மெவ்விடத்து முள்ளான் வல்லான், றும்பிவரை யினம்பரிக்கும் பெரிய கோயிற் சொக்கனுக்கு விண்ணப்பஞ் செய்வே மென்று, கம்பமுறு மெய்யிஞெகிழ் புளகத் தோடுங் காரியமுள் ளனசொல்லிப் பணிந்தான் போற்றி. (சு)

வேறு.

1 மற்றவன் கண்டஞ் சாது நன்னெறி மன்ஞ வொல்லை
யுற்றநின் படையி ஞெடு மோசனை யெதிர்சென் றேறி
வெற்றியி னணியாம் வென்றி தருகுவ மென்று விண்மேற்
கொற்றவன் றேற வங்கட் கிளர்ந்ததோர் குளிர்ந்த வாக்கு. (எ)

இடரொழிந் திறைவாக் கென்றே யினிமையிற் போந்து கொச்சித்
தொடைமிலை யாது பண்டைச் சூழ்ந்ததன் ரூனை யோடு
மடைவுறக் காஞ்சி சூடி நின்றன னஞ்சா ஞகித்
தடமலி மதுரை விட்டாங் கியோசனை யெதிரே சார்ந்து. (அ)

மாற்றலர் வெய்ய தானை மற்றது காணு முன்னங்
காற்றென விசையிற் பாயும் புரவியுங் களிறுந் தேருங்
கூற்றன ²வீரர் தாமுங் குலவுற வாரி யென்ன
வாற்றரு மொலியி ஞெடும் பரந்ததாங் கவனி யேங்க. (கூ)

சென்றவன் கண்டு தேறித் திறத்தெதிர் கடந்து சீறி
யொன்றிய ³சிங்க காதஞ் செய்ததன் னுடைத்தாம் வெய்ய
துன்றிய தானை யோடுஞ் சொக்கனை நினைந்து ளத்து
வென்றிகொண் ஞாட்புச் செய்யத் தொடங்கினன் மிலைந்து தும்பை.

அங்கது காணு முன்ன ரடற்பெருந் தானை மிக்க
வெங்கொடும் பரிவேத் தாவும் வெடிக்கவா னுறச்சி ரித்துத்
துங்கவேன் மாம ஞெடுந் தோன்றிவெம் பூசல் செய்தா
னிங்கெஞ் டெதிர்த்தற் கின்று வலியுனக் கேதோ வென்றே. (கக)

அணிபொலி தேருந் தேரு மலைந்தன வாளு மாளுந்
துணிவொடு நின்ற டர்ந்து பொருதனர் துரகத் தோடு
தணிவிலாத் துரகஞ் சென்று தாக்கின தந்தி யோடங்
கிணையிலாத் தந்தி வந்து மூண்டன வெங்கு மெங்கும். (கஉ)

சு. தும்பி - யானை.

எ. ஓசனை - யோசனை. அணி - சேனையை வகுப்பாயாக; ஏவல்.

அ. கொச்சித் தொடை - கொச்சிமாலை; இது தன்மதிலைக் காத்தற்குரிய வீரன் அணிந்து கொள்வது. காஞ்சி - காஞ்சிப்பூமாலை; இது பகைவர்க்கு எதிருன்றி நிற்போர்க்கு உரியது.

கஅ. ஞாட்பு - போர். தும்பைமிலைந்து.

கஉ. ஆளும் ஆளும் - வீரர்களும் வீரர்களும். காஉ. இனன் - சூரியன்.

(பி - ம்.) 1'கற்றவன்' 2'வீரருக்கிக்கொடுங்கடல் கிளர்ந்தென்ன' 3'சங்க'

இங்கெறி யாகுங் காலை யிறைதிரு வருளால் வெம்மை
மன்னிய கோடை முற்றி வாயுலர்ந் துதக மின்றிச்
செங்கிற வினன்றீ யென்னத் தீக்கதிர் விரிப்ப வாற்ரு
தொன்னலர் படையி னேத்து வீழ்ந்ததவ் வுறுக ளத்து. (கசு)

மேவருந் தலத்து மேவி வெஞ்சமர் செய்த பத்திக்
காவலன் சேனை தானுங் காலநீ தியினல் வாடி
யாவிசேர் [1]தண்ணீர் வேட்டங் காவிசோர்ந் தருங்க ளத்துப்
போர்வினை மாட்டா தாகி நின்றது பொலிவ ழிந்து. (கச)

கருணையன் கண்டி ரங்கிக் [2]கடிதுதற் சேர்ந்த பத்தன்
பொருபடை நடுவு சென்று பொருவருஞ் சயமுண் டாகத்
திருவுருக் கரந்து மற்றோர் சேவக னுருப்பு னேந்து
தருமநேர் விளங்க வைத்தான் றண்ணினீர்ப் பந்த ரோங்க. (கடு)

தாதவிழ் கழுநீ ரேலஞ் சந்தன முசீரங் கோட்டங்
கேதகை யிலவங் கஞ்சண் பகமதி மதுரங் கேடில்
பாதிரி முதற்கற் பூர மளவிய பரிம ளஞ்சேர்
சீதள வமுதை நல்கத் தெளிந்தது குடித்த சேனை. (கசு)

தெளிந்தவ ருயிர்ம ருந்தாய்த் தெள்ளிதாய் மணந்து நொய்தாய்க்
குளிர்ந்தநீ ரிவ்வி டத்தார் [3]நல்குக ரெனக்கொண் டாடிக்
கிளர்ந்தமர் செய்யக் கண்ட கேளலர் தானை பின்னும்
[4]விளிந்தொரு சாம முன்னின் மலிந்தது மிலைந்து தும்பை. (கஎ)

வெந்திறல் வீரர் நின்று மடிந்தனர் மேல டர்ந்த
சிந்துரப் பட்ட யானை பட்டன திசைப ரந்து
வந்தவெங் துரக வெள்ளம் வற்றின மற்ற டர்ந்த
கொந்தவி ழலங்கல் வையங் குலைந்தன நலங்கு லைந்தே. (கஅ)

சேயவேற் றடக்கை வீரர் செங்குடர் பிடுங்கி யேறிப்
பாய்பருந் திட்ட நெட்டைப் பவளக்காற் பந்தர் நீழ
லாயசெங் குருதி யாற்றிற் குளித்தவி நயங்கள் காட்டிப்
பேயிருங் கணங்க டம்மிற் பிணங்கின நிணங்க டின்று. (கக)

கசு. ஆவி - குளம், உயிர். மாட்டாதாகி - வலியில்லாததாகி.

கக. உசீரம் - விலாமிச்சவேர்.

கஎ. உயிர்மருந்து - உயிரைக்கொடுக்கு மருந்து; மிருதசஞ்சீவனி; "அரும் பெறற் பாவா யாருயிர் மருந்தே" (சிலப். உ: எடு) என்பதனுரையைப்பார்க்க. விளிந்து - வெட்கி. முன்னின் - முன்பொருததுபோல.

கஅ. வையம் - தேர்.

(பி - ம்.) [1]'தண்ணினீர்வேட்டாவி' [2]'கடிதுதற்' [3]'நல்குவர்' [4]'விளிந்தது சமர்'

வன்புறு கவந்த மாட மடிந்தசெங் கொடுங்க ளத்து
முன்புறப் போனர் போனு ரொழிந்தவர் [1]முளிந்து மாண்டார்
மின்பொலி வேற்ற டக்கை வீரனும் வீர மிக்க
தன்பரி வேத்தா வான தம்பியு நிற்பக் கண்டான். (உ0)

இருவரு முகமு கம்பார்த் திளைத்துமு னிற்ப வாகைத்
திருமலி தொடையன் மார்பன் சிரித்துயர் களிப்பி னெடுஞ்
சுரரடி பரவுஞ் சொக்கன் .கருணையைத் தொழுது வாழ்த்தி
யுரனுடை யோர்க டம்மைப் பிடித்தன னுறுதி கூர. (உக)

திருந்தல ரகப்ப டாமுன் றிண்டிறற் சேனை யுய்யப்
புரந்தர னயன்மா லாதி சயசய போற்றி யென்ன
வருந்திரு மேனி வேர்ப்ப வோடிமீண் டரிய தண்ணீர்
பரிந்தளித் தாளெ விப்பப் பந்தருங் கண்டா ரில்லை. (உஉ)

எந்தைவல் லனயார் வல்லா ரெனமனத் ததிச யித்து
வெந்திறத் தவர்க டம்மை வெற்றிமா முரசத் தோடுந்
[2]தந்திரத் தலைவ ரோடுஞ் சாற்றரு மமைச்ச ரோடுஞ்
சுந்தரன் றிருமுன் சென்று காட்டினன் ரெழுது வாழ்த்தி. (உங)

வே று.

துய்ய தண்ணீ ரளித்துச் சுவைபட
மைய றீர்த்தெனை வாழ்வித்த வள்ளலே
யைய னேயின் றிவரை யடியனேன்
செய்யு மாறுரை செய்யெனச் செப்பினன். (உச)

சில மன்ன சிறந்தநின் காரிய
மேல வின்று முடித்தே மிவர்தமை
மேலு னக்கினி வேண்டுப செய்யெனச்
சால நல்லவன் சாற்றினன் ரெற்றிட. (உரு)

உ0. கவந்தம் - தலையில்லாத உடம்பு. போனர்போனர் - தப்பிப்போன வர்கள் பிழைத்தார்கள். முளிந்து - உலர்ந்து.

உக. முகமுகம்பார்த்து - ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்து; "இனப்புரவி முகமுகம்பார்த்து" (உகூ: க.)

உஉ. மனிதவுருவங்கொண்டதற்கேற்ப நடித்தருளினரென்பார், "அருந்தி ருமேனிவேர்ப்ப வோடிமீண்டு" என்றார்.

உங. வெற்றிமாமுரசம் - சயபேரி.

உச. 'வள்ளல்' என்றுன், உயிரையும் அரசுரிமையையும் கொடுத்ததுபற்றி.

(பி - ம்.) [1]'முடிந்து' [2]'தந்திரித்'

வேறு.

மெய்ப்பட வுயர்திரு வாக்கு விண்ணிசைச்
செப்பிட வடியவர் திறத்து நல்லவன்
றுப்பமர் வடிவுடைச் சொக்கை யல்லதிங்
கிப்படி யாருள ரெனத்து தித்தனன். (உசு)

முன்னுற நின்றதி சயித்து முத்தணி
பொன்னணி செம்மணி யிலங்கு பூணணி
பின்னரும் வேண்டுவ பிறங்க நல்கியே
தன்னுடைத் திருமனைத் தலத்துச் சார்ந்தனன். (உஎ)

வேறு.

அருளுடைச் சுந்த ரற்கே யடிமைபூண் டதனு லந்தப்
பெருவலிச் சோழன் செய்த பிழைபொறுத் துவந்து காத்துப்
பொருவரும் புகழ்வி ளங்க வேண்டுப கொடுத்துப் போகத்
தரமொடும் விடுத்தா னுளோ ரைந்தினிற் றனது தேத்து. (உஅ)

கயவனுந் தம்பி தன்னைக் காசினி காணத் தாழ்ந்த
நயமிலாத் தொழில்க டம்மி னிறுத்திநு னுனு னென்று
சயமுற மாலை யிட்டுத் தண்டிவந் தெதிர்ம லைந்த
வயமுறு சேனை வெள்ளம் வற்றிடச் [1]செற்ற மாறன். (உகூ)

பகையறக் கூபங் கண்டு பந்தருட் டண்ணீர் வைத்த
புகலருங் கருணை மேனிப் புண்ணியன் றனையு நாளுந்
தகவவன் றனக்கே யன்பு சார்ந்ததென் னனையுங் கண்டாங்
ககமகிழ்ந் தேத்தி னுர்க ளவனியோ ரதிச யித்தே. (ஈ0)

ஆகத்திருவிருத்தம் - கஉசஈ.

உக. அடியவர் திறத்து நல்லவன்: இப்பெயர் அடியார்க்கு நல்லானென்றும் இந்நூலில் சில இடங்களில் வந்துள்ளது.

உஅ. தரம்-தருதி. "ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந்துணையும் புகழ்" என்னும் தீர்க்கதரிசனத்தின் கருத்து இச்செய்யுளிற் காணப்படுகின்றது.

உக. நான் நான் என்று - நான் போர்செய்வேன் நான் போர்செய்வேனென்று. மாலை-தும்பைமாலை. தண்டி - அலைத்து.

ஈ0. கூபம் - கிணறு.

(பி - ம்.) [1]'செயிர்த்த'

சச.—இந்திரன் முடிமேல்வளையெறிந்த திருவிளையாடல்.*

விண்ணகத் தலைவ னைய தேவர்கள் வேந்த னுக்கு
மண்ணகத் தலைவ னைய பாண்டிய மன்ன னுக்கு
மெண்ணறச் சிறிது ளத்துள் வெறுப்புள திமையோ ராலுங்
கண்ணுற வறியொ ணாது காரண மதனுக் கென்ன. (க)

முனிவர்கள் கேட்பான் வேட்டு முக்திய வுலகத் தெல்லா
நினைவையு முணர வல்ல நிகரிலா மலயக் கோவே
மனமகிழ் வோடி மந்த மறைப்பொரு டன்னை யின்று
வினையற விளம்பல் வேண்டும் விளங்கிட வெங்கட் கென்றார். (உ)

ஆங்கது சொல்ல ஞான வருத்தியன் பகர்வா னீதி
யோங்கிய முன்னோர் கால மொளிவளர் சேர னூடு
நீங்கரும் வளமை குன்ற நிகரிலா வளவ னூடும்
பாங்குடை யறிவான் மிக்க பாண்டியன் பெரிய நாடும். (ங)

ஈனமில் வளங்க ணல்கு மிரும்புனன் மழைம றுத்துத்
தானமுந் தவமுங் குன்றி னென்முதற் றூனி யங்க
ளானவை விளைவி லாம லாதவன் கதிராற் காய்ந்து
[1]மானிட ரற்ற முற்று வாடினர் வருத்தங் கூர்ந்து. (சு)

க. வெறுப்பு - பகைமை; 'ஆர் வெறுப்பாருவட்பே', "பிறிவிலா வெறுப்பி வர்க்கிங் கிப்படிப் பிறங்கிற் றென்னை" (உஎ: அஉ; சச: ஙஉ.) கண்ணுற - கருத.

உ. மறைப்பொருள்-இரகசியச் செய்தி; "மறையுரை பகர்ந்தாப்" (ஙஉ.)

ங. ஒளி - தெய்வத்தன்மை; "மின்னெளி யெறிப்பத் தம்மொளி மழுங்கி" (பட்டினப். உகஉ.)

சு. "தானத்தவ மிரண்டுந் தங்கா வியலுலகம், வானம் வழங்கா வெனின்" (குறள், உக) என்பவாகலின், 'தானமுந்தவமுங் குன்றி' என்றார். அற்றம் உற்று - சோர்வுற்று.

* "அடுபடைப் பூழியன் கடுமுரண் பற்றி, யிட்டவெங் கொடுஞ்சிறைப் பட்ட கார்க்குலத், தலையொடு கிளைநீர் விடுவன போல" (கல். உச); "திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச், செங்கண் யிரத்தோன் றிறல்விளங் காரம், பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி, முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென், றடியுடைப் பெருமழை யெய்தா தேகப், பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப, மழைபினித் தாண்ட மன்னவன் வாழ்க" (சிலப். ஙக: உங - ங); "தேவர்கோன் பூணுரந் தென்னவர்கோன் மார்பினவே" (ஷை ஆய்ச்சியர்குரவை); "வச்சிரத தடக்கை யமரர் கோமா, ... ச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை" (ஷை. உங: நிo - நிங); "தேவா ராச மார்பன் வாழ்க வென்றுபந் தடித்தமே", "வானவர்கோனரம் வயங்கிய தோட்பஞ் சவன்றன், மீனக் கொடிபாடும் பாடலே பாடல்" (சிலப். வாழ்த்துக்காதை.)

(பி - ம்) [1]'மானிடர் முற்றுமுற்ற'

இன்றெறி யொழுக்கங் கண்டவ் விருநிலங் காக்கு மிக்க
பொன்முடிச் சேரன் சோழன் பாண்டியன் புகழ்வி ளங்க
முன்னுறத் தம்மிற் கூடி முறைமையின் வான நாட்டு
மன்னிய புரந்த ரன்பாற் சென்றனர் மழையை வேண்டி. (டு)

பைந்தமிழ்ப் பொறையன் கிள்ளி பாங்குதா ழாச னத்து
மூந்துற விருப்பக் கண்ட மொய்ம்புடை நிம்ப மாறன்
சுந்தரன் றனோடு னேந்து துதிசெயா தெதிர்சென் றேறி
யிந்திரன் பெரிய சிங்கா சனத்திடை யுடனி ருந்தான். (சு)

அரியபே ரவனி காக்கு மரசர்மூ வருந்தி ரண்டு
பரிவொடும் வருதற் கென்ன பாக்கியஞ் செய்தே மென்று
சுரர்பதி யதுகாட் டாமற் காரியம் வினவத் தோன்ற
வுரைசெய்வா ரவரின் முன்ன ரொளிவளர் சேரன் சோழன். (எ)

எங்கண்மா நிலங்க டம்மு ளெழிலிபெய் யாமல் யாரு
மங்குதல் கண்டி ரங்கி வந்தன மழையை வேண்டிச்
சங்குசெங் கமலஞ் சிந்தா மணிதரு சுரபி யுள்ள
பொங்கெழி லுட னேயென் றினையன புகழ்ந்து சொன்னர். (அ)

மற்றவர் புகழா முன்னர் வாசவ னினிமை கூர்ந்தாண்
டுற்றெழு மழைக்கு லத்தை யழைத்திவ ரொளிசேர் நாடு
முற்றுநீர் தாழா தெய்தி முழங்கியின் னருள்சு ரந்து
பொற்பமர் புனலேச் சாலப் பொழியுமி னெனமொ ழிந்தான். (கூ)

வென்றிகொள் செழியன் குன்ற மேதகு விழுப்ப மிக்க
தன்றலை மானங் காத்துத் தன்னுறு காரி யத்தை
யின்றுநா மொருவன் பாற்றுழ்ந் திரக்குமா றெங்ங னென்று
சென்றவ னுரையா னுகி யிருந்தனன் றிறமை பூண்டு. (கo)

ஆங்கது கண்டி வாஞ்ஞ ரதிபதி பொருமை யெய்தி
வாங்கரு நலங்கள் செய்து மற்றவர்க் கன்பு கூர்ந்து
தாங்குபொற் பூணு ரங்க டலமெலா மதிப்ப நல்க
வோங்கிய துதியின் வாங்கி யாங்கவ ருவந்தார் பூண்டு. (கக)

சு. பொறையன் - சேரன். கிள்ளி - சோழன். நிம்பம் மாறன் - வேப்பமாலையையுடைய பாண்டியன். துதிசெயாது - (இந்திரனைத்) துதியாமல். உடன் - இந்திரன் கூட.

எ. அது - அம்மகிழ்ச்சியை. 'ஒளிவளர்சேரனே' என்றார் முன்னும்; ஊ.

அ. இச்செய்யுள் கருத்துடை யடையணி.

கo. மானம்: "மானிமாதன்", "மானம் வலிசேர்த்தவள் வழுதி" என்பன் பின்னும்; ஊஉ, ஙஉ; "மானவருங் கலம்" (நாலடி. சo) என்னுஞ்செய்யுள் இக்கே அற்தற்பாலது.

கக. அதுகண்டு - குதையிரவாமையைக் கண்டு. தலமெலாமதிப்ப - உலகத்தாரெல்லாரும் நன்குமதிக்க, உலகமெல்லாம் இதற்கு விலையாகு மென்று மதிக்க.

அலேவிலா நெஞ்ச மாற ணடல்வலி யறிவா னெண்ணித்
தொலேவிலா [1]விமையோ ராலுஞ் சுமக்கொணாக் கனமு டைத்தாய்
வில்லேயில தாயெ வர்க்கும் வேதனே செய்ய வற்ரு
யிலகுபன் மணியாற் பொங்கி யிருப்பதோ ராச மீந்தான். (கஉ)

சகமகிழ் வெய்த வங்கட் டானது காணு முன்னர்
மிகவதி சயித்து வாங்கி மென்மலர் மாலே யென்னப்
பகையறப் பூண்டான் வென்றி யாயிர முகஞ்சேர் பாரத்
தொகுமணி தரும்பே ராரச் சொக்கனே யகத்துள் வைத்தே. (கஙு)

சேஞுளார் மண்ணு ளார்கீழ்த் திசையுளா ரொருவ ராலும்
பூணெணு [2]மணிப்பே ராரம் பூண்டபே ராண்மை கண்டு
மாணுற வாழ்த்தி ஞர்கள் வாடிய முனிவர் வானேர்
நாணிய தேவர் கோனு நனிகயந் ததிச யித்தான். (கசு)

நேர்வலி கண்டு கொண்டு நெஞ்சுறு வினேம றைத்துப்
பேரியன் மன்னு சாலப் பெரியையா யிருந்தாய் கூட
ஞரின்மும் முலேயாள் பெற்ற வுக்கிர குலத்து தித்த
வீரனீ யென்னுந் தன்மை கண்டன மெனவி யந்தான். (கஞ)

வென்றியா லாரம் பூண்ட பாண்டிய னென்று மேன்மை
துன்றிய வழுகான் மிக்க சுந்தர மாற னென்று
நன்றியி னேங்கு நாம நானில மீது னக்கே
யின்றுமுன் னுவ முங்கக் கடவவென் றிலங்கச் சொன்னுன். (கசு)

வேறு.

தென்ன மன்னனுங் கண்டவன் செய்திபோற்
பின்ன மற்ற வுறவாற் பெருமையா
லுன்னே யொப்பா ரிலேயென் றுயர்புற
மன்னு ளத்தொன்று வைத்துப் புகழ்ந்தனன். (கஎ)

வாய்ந்த கொற்ற மகவான் மழைக்குமுன்
சார்ந்த மூன்று முடிமன்னர் தம்மையுஞ்
சேர்ந்து நல்லன சொல்லிச் சிறந்தன
வீந்து போக விடித்தாங் கிருந்தனன். (கஅ)

கஉ. வற்ரும் = வல்லதாய்.

கங. ஆயிரமுகத்தையுடைய [2]போராம் = ஆதிசேடனுடைய ஆரம். இச்செய்புள் கருத்தையுடையணி.

கச. கீழ்த்திசை = பாதாளம்; திசை = இடம்.

கஞ. நேர்கண்டு = பிரத்தியக்ஷமாகக் கண்டு.

(பீ - ம்.) 1'விடும்பாலும்' 2'மிஞ்சப்போராம்', 'மிஞ்சப்போரால்'

மற்றை மன்னவர் மாசறு மீனவன்
வெற்றி கண்டு [1]புகழவம் மீனவ
னுற்ற காலத் துதவுவ னுய்யவென்
சுற்ற மாகிய சுந்தர னென்றனன். (கசு)

பாரின் மன்னவர் தத்தம் பதியிடைச்
சாரு மன்பொடு சார்ந்தனர் சாருமுன்
சேர ஞட்டினுஞ் செம்பிய ஞட்டினு
நீர்கொண் மேக நிறையப் பொழிந்ததால். (உ0)

வே று.

புன்மைதீர் சாரா சரங்கள் பொலிவுடை யனவா யோங்கி
சென்முதற் [2]முனி யங்க ளெங்கணு நிறைய மல்கி
மன்னிய மனித ரெல்லாம் வரவர மகிழ்ச்சி யெய்தி
கன்னய மூடைய தத்தம் வேந்தரை நனிவி யந்தார். (உக)

*துங்கமா றணுஞ்சேய் [3]துர்க்கை தும்புரு வாதி போதன்
சங்கமால் கின்ன ராதி சனகாதி கணேசன் வியாழங்
கங்கைமா விதுவென் றேத்துங் கடவுட்டென் கயிலை யென்னுஞ்
சிங்கமா தங்க ணீங்காத் திருப்பரங் குன்றைச் சார்ந்தான். (உட)

*தருமலி பாங்குன் றத்துச் சரவணப் பொய்கைப் பாரத்
தரசறு பன்னம் வீழ்ந்த தப்புறின் மீளு மன்றிக்
கரையுறிற் பறவை யாகுங் கரையினன் னீரி னேர்கான்
மருவுமோர் பன்ன மீனின் பறவையின் வடிவா யிற்றே. (உங)

*ஒன்று[4]நீர் மிசையி ழுப்ப வான்மிசை யொன்றி ழுப்பக்
குன்றியாங் குழலுங் காலைக் குறுகிய கீர னேர்ந்து
வென்றியின் விடாத தொன்றை விலெய்ப்பான் முயன்ற னின்ற
கன்றிய பிரம ராக்க தம்பிடித் ததுக வுத்தே. (உச)

*அங்கது கொடுபோய்க் குன்றோர் முழைஞ்சினு ளடைத்துப் போகத்
தங்கிய துயரா றுது சரவண பவவென் றன்பிற்
றுங்கமந் திரத்தை நூல்கள் சொன்னமீ தியிற்றியா னித்தோர்
கங்குலும் பகலு மோதக் கண்டருள் சுரந்தா னன்றே. (உடு)

கக. மாசறு - இரத்தந் குற்றமற்ற. உற்ற - துன்பமுற்ற.

உக. "சென்முதற் முனியங்க ளெங்கணு நிறையக் கண்ட" என்பர்பின்; இசை.

உட. விது என்று - சந்திரனும் சூரியனும்.

உங. பாரம் - கரை. அரசு - அரசமரம். பன்னம் - இலை. அப்பு உறின் - நீரிற் பொருந்தினால்.

உச. முழைஞ்சு - குகை.

* இவ்வடையாளமுள்ள செய்புட்கள் சிலபிரதிகளில் இல்லை.

(பி - ம்.) [1]'மகிழ்' [2]'பல்வளங்கள்' [3]'கன்னி' [4]'நீரிடை'

*தலமகிழ் தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகன் சென்று
நலமுறு கனவிற் சொல்வா னற்றமிழ் முருக னம்பேர்
பலரிகு தமிழி னுலோர் பாட்டாற்றுப் படையா நமமை
யுலகமென் றெடித்துப் பாடென் றுள்ளுறை கொடுத்தா னன்றே. (உ)

வே று.

*உயர்வுற வுலக முவப்பவென் றெடித்தாங் கொண்டமிழ்த் தண்
டல முவப்ப, வியனுற வுரைப்பக் கேட்டலு மடைந்து வெற்பகந்
திறக்கவேல் விட்டு, நயனெடு மெடித்து வினை[1]கடீர்த் தருளு நன்
சுனை காட்டிநீ ராட்டி, யயிலுடை நம்மைக் கிழவனென் றனையென்
முலயத் தடைந்தனன் காண. (உன)

வே று.

* இனிதொர்கவி குன்றமெறிந் தாயெ னப்பி
னென்றுமிளை யாயழகி யாயென் றுங்கான்
மனமகிழ்ந்தீ தியார்பகர்வா ரவர்க்கு வேண்டும்
வரங்கொடுப்போ மதுரையிற்போ கென்னப் போந்து
கனமலிசங் கத்துரைப்பக் கேட்டி யாருங்
களிகூர்ந்தார் தமிழ்முருக னருளா வாழ்த்திப்
பனுவறிரு முருகாற்றுப் படையென் றோங்கிற்
றெனநயந்து பாண்டியனென் செய்தா னென்றார். (உஅ)

வே று.

பாண்டியன் கந்தற் போற்றிப் பரமெனப் பரங்குன் றத்துப்
பூண்டபே ராரம் வைத்துப் போந்துய ராலயத்திங்
காண்டகா யகனே நின்ற னருளினு லடைந்தே னென்று
வேண்டியே துதிப்ப வாண்ட விமலனு மஞ்சே லென்றான். (உக)

உக. தண்டமிழ் முருகன் - செந்தமிழ்ப் பரமாசாரியராகிய முருகர். நம் பேர் முருகனென்பது.

உஎ. தமிழ்த்தண்டலம் - தமிழ்நாடு. "கிழவனென்றனை" என்பதைத் திருமுருகாற்றுப் படையின் இறுதியில், "பழமுதிர்சோலை மலைகிழவோனே" என்பதனுணர்க.

உஅ. 'குன்றமெறித்தாய்' என்னுங்கலி வருமாறு: வெண்பா - "குன்ற மெறித்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய், புன்றலைய பூதப் பொருபடையாய் - என்றும், இனியா யழகியா யேறூர்ந்தா னேமே, உனையாயென் னுள்ளத் தமை."

உக. பரமென-அடியேனுக்காத்தருளுவது உம்முடைய பாரமென்றுகூறி

(பி - ம்.) [1]'கடிதீர்த்தனன்'

வேறு.

சீத [1]மண்ட லக்கு லத்து தித்த தீதின் மன்னவ
ரோது மண்ட லத்தர் மாரி யின்றி யுள்ளம் வாடியே
கோதை மண்ட லததி னுங்கு ணம்பொ ருந்து சென்னிதா
னீதி மண்ட லத்தி னும்ப ரந்து போவர் நித்தலும். (கo)

மூண்டம் வெம்ப நெஞ்ச நோவ முந்த வந்து தானியங்
கொண்டு வந்தி யாவ ருங்கு மும்ப ரீதி செய்யமுன்
கண்டு [2]கண்டி ரங்கி நெஞ்ச மிஞ்ச ஈணு கைதவன்
பண்டை வெந்தி றத்தி னுலி ருந்த னன்ப கர்ந்திலன். (கக)

வேறு.

பிறிவிலா வெறுப்பி வர்க்கிங் கிப்படிப் பிறங்கிற் றென்ன
வுறவுடை முனிவர் ஞான முனிவகே ஞணர வொண்ணு
மறையுரை பகர்ந்தா யந்த வரிசைமா மானி மாறன்
றிறமொடி பின்னென் செய்தான் செப்பெனச் செப்பு வான்முன். ()

வேறு.

அந்த மன்னவ னடற்பெரு வேட்டைவேட் டொருகாற்
சந்து மேவிய வரையினும் வனத்தினுஞ் சார்ந்து
சிந்தை யின்புறத் திண்டிறல் விலங்குகா ணும
லுந்து வீரர்க டம்மொடி மெங்கணு முலாவி. (கங)

தக்க வேங்கைக டழைசெவிக் கயங்கள்சிங் கங்கண்
மிக்க மாக்கள்கான் மேதிகள் கரடிகள் கலைக
டொக்க மானினம் பன்றிக [3]டிவன்றிய சாரன்
மைக்கு லங்கள்சேர் மலயமாக் கிரியினை யடைந்தான். (கச)

வேறு.

வன்பெரு ஞாளி விட்டும் வார்வலை விட்டும் விட்ட
தன்கொடுங் கணையால் வாளாற் சத்தியாற் பகைத்தெ ழுந்து
மூன்பொரு மாக்க டம்மை மூகத்திடை மனமுங் கண்ணு
மின்புற மலைந்தான் குன்ற மெங்கணுஞ் சூழ்ந்த தார்த்து. (கரு)

கo. சீதமண்டலகுலம் - சந்திரகுலம். கோதைமண்டலம் - சோணாடு; கோதை - சேரன். சென்னிமண்டலம் - சோழநாடு.

கக. மூண்டம் வெம்ப - தலையெரிய. பகர்ந்திலனுயிருந்தனன்.

கஉ. இவர்க்கு - இந்திரனுக்கும் பாண்டியனுக்கும்; 'வெறுப்பு' என்றது முதற்செய்யுளிற் கூறியதை. மானி மாறன் - மானியாகிய பாண்டியன்.

கங. வரை - பக்கமலை.

கச. கயங்கள் - யானைகள். காண்மேதி - காட்டெருமை.

கரு. சத்தி - வேல். முகத்திடை மலைந்தான்.

(பி - ம்.) 1 'மண்டிலக்' 2 'கண்டிதைஞ்சி மிஞ்சுநெஞ்சு' 3 'னன்றிய'

[1] இத்தக வாற்சி றக்கு மெல்லியி னிரவி யென்ன
வொத்தொளி மணிவி ரிக்கு மூயர்ந்ததாள் வரைப்பு றத்துப்
பொய்த்திடா தென்றுஞ் சேரும் புட்கல மூன்று மின்னும்
வித்தக நான்கு மேக [2]வேந்தரை விளங்கக் கண்டான். (உசு)

சொல்லரும் பரிவா லெந்தை சுந்தர னருளா லிந்தச்
செல்லுய ரரசர் தம்மைக் கண்டன மென்று தேறி
நல்லசே வகரான் மூன்று நாட்டரு மதிச யிப்ப
[3] வொல்லையி னவரை மெல்லப் பிடித்தன னுறுதி கூர்ந்து. (உள)

பிடித்தது நமக்கு வேட்டை வாய்த்ததின் றென்னப் பேசிச்
சடக்கெனப் போந்து கட்டித் தன்னுடை வினைஞ ராலே
துடிப்பற விலங்கு பூட்டித் துணிந்திருஞ் [4]சிறைவைத் தானவ்
விடப்பெயர் கட்டி நல்லூ ரிருஞ்சிறை யென்ப ரின்றும். (உஅ)

கண்டவர் விரைவிற் சென்று கனகநா யகனே யுன்றன்
றிண்டிற லெங்கே கண்டேஞ் சிக்கெனப் பிடித்துக் கட்டி
மண்டலத் திடையி ருக்கு மாறனென் றிருவன் கொண்மூ
விண்டலத் தரசர் தம்மை விலங்கிட்டான் கொடுபோ யென்றார். ()

ஆங்கது கேளா முன்ன ரழல்விழித் தெழுந்து சீறி
யீங்கியா னிருப்ப வெண்ணு தொருநா னிருநி லத்துப்
பாங்குவா னரசர் தம்மைப் பருவிலங் கிடுவ தேயென்
றோங்கிய தானை யோடி மிழிந்தன னுயர்ந்த மண்ணில். (சo)

சூடுமா லுகட யங்கச் சுடர்விடு மகுட மோங்கச்
சேடுவான் முகடு வம்மச் சிறந்ததூ ரியங்க றங்க
கூடிய சேட னைக ளெளியமூப் பத்து மூன்று
கோடிவா னவரும் வந்தார் குவலயத் திடைக்கொ தித்து. (சக)

ஒளிவளர் வீர மாற னும்பர்கோன் வரவு கேட்டுத்
தளர்விலபார் வேந்தர் மொய்ப்பத் தாளவெண் குடைகி ழற்ற

உக. தாளவரை - அடிமலை; பாதசைலமெனபர் வடநூலார்.

உஎ. பரிவால - அனபோடி. செல் உயர் அரசர் - மேகங்களினுயர்ந்த அரசர். அவரை - மேக வேதரை.

உஅ. சடக்கென - விரைவாக. துடிப்பற - அசைவற. கட்டுநல்லூர், இருஞ்சிறையன்னமூர்கள், மானமதுரை (வானரமதுரை)க்குச் சமீபமா னவை.

சo. வானரசர்தம்மை - மேகஅரசர்களை.

சக. ஒளி - உறங்காநிற்கவும் உலகங்காக்கின்ற அரசரது கடவுட்டன்மை; இதனை, "உறங்குமாயினு மன்னவன் றன்னொளி, கறங்கு தெண்டிரை வையகம்

(பி - ம்.) 1 'இத்தகவனிற்' 2 'காதரை' 3 'ஒல்லியின்மெல்ல' 4 'சிறையில் வைப்புவிடத்தினைக்'

வளவில்பல் லியங்க றங்க வடர்ந்தெழு தானை [1]பொங்க
வளஞெடிம் பொருவான் [2]சென்றான் மதுரைவிட் டெதிரே பேசி.()

வியனுறு சிறப்பாற் பொங்கு மிருவகைத் தானை வெள்ளங்
[3]கயமுறு முழக்கத் தானுங் காகளச் சும்மை யானுஞ்
சயமுறு வீர ரங்கைத் தணுமணி யொலியி ஞனு
மூயர்தரு கடைநாட் பொங்கு முததியிற் கலித்த வன்றே. (சஉ)

வாசவன் கண்டாண் டேடா வழுதியின் றெதிரே வந்தாய்
பூசல்செய் வதற்கோ கல்லே புரந்தரன் யான்காண் வேண்டா
வீசிய புகழ்கெ டாமன் மேகமன் னவரை விட்டுத்
தேசொடிம் போபோ வென்று செப்பிவச் சிரம சைத்தான். (சச)

விருத்திரா சுரனைக் கொன்ற வென்றியா ரறியார் வென்றிப்
பொருப்பெலாஞ் சிறக ரிந்த புகழுடைப் பெரியோன் மண்மீ
துரைப்பின்மா னிடனீ யான்வா ஞள்பவ னுன்னை வெல்லல்
பெருத்ததொன் றல்ல வென்று பேசினுன் வாசி காட்டி. (சடு)

நரபதி யதுகே ளாமுன் னனிநகை செய்து நாணு
துரைசெய்தா யெனக்கி ரண்டு கண்ணுனக் காயி ரங்கண்
பரிகரி தேரா ளீண்டும் படையினை வருத்தல் வேண்டா
விருவரும் [4]பொருவோ நந்த மிகல்வலி யறிவே மின்றே. (சசு)

தொண்டர்கள் பரவுங் கூடற் சொக்கனிங் கிருப்ப வேடா
வண்டர்கோ னேயு னக்கிங் கஞ்சுவா ஞருவ னல்லேன்
மண்டலத் தெவருங் காண வலியவென் [5]வஜாயி னுலுன்
றிண்டிறன் முடிபி ளக்க வெற்றுத றிண்ண மென்றான். (சஎ)

இன்னன பேசிச் சிங்க மிரண்டுபோர் மூண்ட வென்னக்
கொன்னுற முழங்கி நீங்காக் கோடக வமர்செய் காலைப்
பொன்னுல காளு மன்னன் பொன்முடி சிந்த மண்ணுண்
மன்னவர் மன்னன் சேர்ந்து [6]வஜாயினு லுருத்த டித்தான். (சஅ)

காக்குமால்'' (சீவக. உசஅ), ''ஒளியோ டொழுகப்படும்'' (குறள். கஙஅ) என்பவற்று லுணர்க. வீரமாறன் - வீரத்தையுடைய பாண்டியன்.

சஉ. தணுமணி - வில்லிற் கட்டிய மணி; ''ஏன வம்மணி யேழுரை நாழி கை யாடிய தினிதன்றே'' (கம்ப. மூலபல. உஉஅ.)

சச. கல்லே: இகழ்ச்சிக் குறிப்பு. 'புரந்தரன்' என்பதற்குப் பகைவரு டைய ஊரினை அழிப்பவனென்பது பொருள்.

சடு. வாசி - விசேடம்; வேறுபாடுமாம்.

சக. 'உலக்காயிரங்கண்' என்றது இகழ்ச்சிக்குறிப்பு.

சஎ. வஜ்ர - ஒருவகையாயுதம். [டை. உருத்து - கோபித்து.

சஅ. கொன் - அச்சம். கோடக அமர் - குதிரைமேலேறிச் செய்யும் சண்

(பி - ம்.) 1'ஓக்க' 2'வந்தான்' 3'கயனுறு' 4'பொருதகந்தம்' 5'வஜ்ரக்கை யாலுன்' 6'வஜ்ரக்கையாலுருத்து'

கொத்தலர் முடியிற் சாடக் கோபம்விட் டமர ரோடுஞ்
சுத்தமா தவர்சூ ழெந்தை சுந்தரன் பரிந்தி ருக்கும்
வித்தகன் றனையார் வெல்வா ரென்றுவிண் ணவர்கோன் [1]போனான்
புத்தியாற் றனித்து வென்ற புரந்தனிச் சயம தென்பர். (சசு)

பொருவரு மறிவான் மிக்க புகழுடைப் பெரியோ ரெல்லா
முரைசெய்வா ரதனையானு முரைத்தன னுமக்கு மிக்க
வரனுளார் தேவ ரென்று மற்றவர் மனித ரென்றுந்
தெரிதர வேண்டா சத்தி தெய்வீக மன்றே காணின். (நிo)

சோகநீ யுறேன்மூற் சாப மெனநல்லோர் சொல்ல வாறி
மேகநா யகரை யொல்லை விடுவிப்பா னயங்கள் கூர
வாகைவேன் மாற னுக்கு வாசவன் ரூழ வோலை
போகயாம் விடுவ மென்றே யெழுதுவான் பூண வோலை. (நிக)

வே று.

தேவர் கோனெழுது மோலை மானம்வலி சேர்ந்த வாள்வழுதி
காண்கநல், லார்வ மேவுகுல மேக மன்னரைவி லங்கு விட்டருள்க
வரவிடின், சார்வு நாடுதழை வெய்த [2]நாண்மழைபொ ழிந்தி டக்கடவ
தென்றுதன், காவன் மேவுமுயர் தூதர் பாணியுழை கட்டி யோலைவர
விட்டனன். (நிஉ)

வந்த வோலையி னியைந்த [3]பாசுரமி ருந்து கண்டுளம கிழ்ந்துபின்
மூன்றை மன்னர்நெறி நீதி யாய்ந்துயர்மு கிற்கு லத்தலைவர் தங்களைப்
பந்த நீக்கிடவு ளத்து நன்கொடிபு ணைப்ப டும்பெரிய பண்புளா
ரிந்த நல்லவையு ளாரெ னக்கடிதெ ழுந்து முன்சிலரி றைஞ்சினார். ()

சசு. பரிந்திருக்கும் - அன்புவைத்திருக்கப் பெற்ற; "அந்தத் தென்னவற் கன்பு பூண்ட, பொன்முடிச் சொக்கநாதன்" என்பர் பின்னும்; நிசு. தனித்து வென்றதை, "இருவரும் பொருவோம்", "சிங்கமிரண்டுபோர்மூண்ட வென்ன" (சசு, சஅ) என்பவை வலியுறுத்துகின்றன. தனிச்சயமென்னுமூர் மதுரைக்கு மேற்கேயுள்ளது; திருப்புகழ்பெற்ற முருகக்கடவுளின் ஆலயமொன்று அதி லுண்டு; "பச்சிமத் திசைசகுளுத்த மத்தனிச்ச யத்தினிற் பிளப்பெருமாளே" என்பது திருப்புகழ், சுஉo;இவ்வூர் ஐயங்கோட்டை தனிச்சய மெனவழங்கும்.

நிo. மற்றவர் - மேன்மையில்லாதவர்.

நிக. சாபம் - துருவாசமுனிவரிட்டசாபம்.

நிஉ. இரவாமையால் மானத்தையும், வென்றமையால் வலியையும் உடை யாய் என்பான் 'மானம் வலிசேர்ந்த வாள் வழுதி' என்றான்.

நிஎ. பூண - சூடு; இச்சொல் பிணையெனவும் வழங்கும்.

(பி - ம்.) 1'போக' 2'கன்மழை' 3'பாயிரம்'

வேறு.

பரிந்தது காண முன்னோர் பாண்டியன் [1]சோழற் காய்ந்து
பெருங்கள வேள்வி செய்த பீடுடைக் காட்டு நாட்டு
ஞரங்கொளே மூர்க டம்மி லொருவனு முன்னென் றோதி
வரும்பெயர் தம்மைத் தள்ளிப் [2]புனைகின்றன் மண்ணிற் றேறி. ()

விரைவொடு மவன்றன் மாட்டு மேகமன் னவரை விட்டுப்
பரிவுசெய் யாமு னந்தப் பாண்டியன் பாண்டி நாட்டுக்
கருணைகூர்ந் தெழுமு முங்கிக் காலங்க டோறும் பொய்யா
[3] தருண்மழை பொழியக் கண்ட வமரரு மதிச யித்தார். (நடு)

நென்முதற் [4]ரூனி யங்க ளெங்கணு நிறையக் கண்ட
நன்மறை யோர்கண் முன்னு நானிலத் தெவரும் வாழ்த்து
தென்னவன் றனையு மந்தத் தென்னவற் கன்பு பூண்ட
பொன்முடிச் சொக்க நாதன் றன்னையும் புகழ்ந்தார் போற்றி. (நசு)

தொழுதமுன் னெழுந்தா ரென்று தவரைநன் னாட்டிட் டோன்றிப்
பொழின்மிசை நம்மைத் தேறிப் புனைகின்ற னன்னு டென்றுங்
கெழிலிகா லூன்றிப் பெய்யு மிருங்கள வேள்வி நாட்டு
மொழிகுவ ரவனூர் [5]நாமுன் னெனலினு முன்னூ ரென்றே. (நஎ)

[6] வந்திருந் தாரம் பூண்டு மலைவலி தொலைத்த வென்றி
யிந்திரன் முடிமேன் மிக்க வினவலீ புடைத்து மற்றைக்
கந்தர வரசர் தமமைக் கனவிலங் கிடவுங் கண்டு
ரெந்தையை நினைவார் தங்கட் கியாதுசெய் திடவொண் ணுதால். ()

ஆகத்திருவிருத்தம் - கூஉக.

நிச. ஒருவன் நாமுன்னென்றோதிப் புனைகின்றனென்க. 'வரும்பெயர்' என்றது, தவரை நாட்டாரை. காட்டு நாடென்பது பாண்டிவள நாட்டிலுள்ள சிறுநாடுகளில் ஒன்று; இது களவேள்வி நாடனவுங்கூறப்படும்; நிள. இக்கோடு மலையாளன்வண்ணத்திற் பாராட்டப்பெற்றுள்ளது. மதுரைக்குக்கிழக்கேயுள்ள வீரசோழ னென்னுமூர் இதன்கண்ணதென்று தெரிகின்றது; எழுர்கள் மேகத்தக்குப்புனைகொடுத்த உபகாரியினுடைய ஊர்கள்; இவற்றுள் நாமுனூ ரென்பது ஒன்று.

நிடி. 'கருணைவான்' என்பது மரபாதலின் 'அருண்மழை' என்றார்.

நிஅ. பூண்டு புடைத்து விலங்கிடவென்க.

(பி - ம்.) 1'சோழற்' 2'பிணை' 3'அருமழை' 4 'பல்வளன்கள்' 5 'நாமுன்னூ ரெனாவின்றுமுன்னோர்' 6'வங்கிகலாரம்'

சரி.—பொன்னனையாளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.*

தென்னவனுட் டினியமனே கரமாந் தொல்லைத் தென்றிருப்பூ
வணநகர்வாழ் பதியி லாரிற், பொன்னனையா ளென்பாளோர் பூவை
யாடற் பூவையர்தந் திலகமத வேள்பண் டார, மன்னியகா முகர்கொ
டுக்கும் பொருளனைத்தும் வருந்தொண்டர்க் கறுசுவையி னமுதுசெய்
வித், தின்னல்கெட முன்னைருகா லிருக்கு நாளி லிறைவனுருத்
தாபிப்பா னெண்ணி ஞளால். (க)

நித்தனரு ளானமது நினைவிங் கொல்லை நிறைவுறுமென் 1றுறுதி
பட நினைந்து கொண்டு, சித்தம்2வருஞ் சிற்பர்களான் மெழுகு சாத்தி
யிருந்தவ டான் வரும்பாருள்கள் சிவனே நீங்காப், பத்தருயர் பூச
னைக்கே போதி னல்லாற் பரமனுக்குப் போதுகின்ற தில்லை யென்று,
3 புத்தியழுங் குறநாளுங் கண்டி ரங்கிப் புகழ்ச்சொக்க னருட்சித்த
ஞகி வந்தான். (உ)

வே று.

மனையிடை யழுது செய்வான் 4வந்தவொண் டொண்டர் நாப்பண்
டினியற வணைந்த சித்தன் றொண்டரைப் பூசை செய்வான்
றனவட வரைசு மந்து தனியிடை யிடைய வந்த
வனநடை மாதை நோக்கி யருள்பட முறுவல் கூர்ந்தான். (ஊ)

ஆங்கவ டானுந் தன்க ணணையமேல் வைத்த கண்ணி
னீங்கருங் கருணை கண்டிட் புகுந்தன ணிறைவு செய்தே
பூங்5கழற் றொண்டர் துய்த்துப் போகவும் போகா ஞகி
யோங்குகூ டத்தி ருந்தா னுயர்ந்த6மாத் திரைக்கோ லூன்றி. (எ)

தேற்றுதா தியர்கள் கண்டு சென்றுநா யகியே யாரும்
போற்றவீற் றிருந்த சித்தர் போயினு ரில்லை யென்ன
வேற்றருங் கண்ணுண் மிக்க 7விருப்பொடுஞ் சார்ந்தி றைஞ்சிச்
சாற்றுவா ரிறைவன் றானே வறிகிலேன் நமியே 8னென்றாள். (ரு)

க. பதிபிலார் - உருத்திரகணிகைமார்; "உருத்திர கணிகைமாராம், பதி பிலார்" (பெரிய. தடுத்தாட். கஙக.) இறைவன் - திருப்பூவண மூடையார்.

உ. பரமனுக்கு - சிவபெருமான் திருவுருவமைத்தற்கு. நாளும் புத்தி அழுங்குற.

ஊ. தனி - பொன்னனை யாளுடைய தன்பம்; எ. எ. துய்த்த-உண்டு.

* "பூவண மதனிற் பொலிகிருந் தாளித், தாவண மேனி காட்டிய தொன்மையும்" (திருவா. கீர்த்தி. இ0 - இக.)

(பி - ம்.) 1'அறுதிபட' 2'முறுசாத்தியான்' 3'புத்தியழுங்குதல்கண்டன் நெஞ்சுமிக்க புகழ்' 4 'வந்தசித்தன்' 5 'கமழ் தொண்டர் வந்து' 6 'மாத்திரையு மூன்றி' 7'வியப்பொடும்' 8'னும்மை'

கொல்லுமை நீல வொண்கட் கொவ்வையஞ் செவ்வாய் மாதே
நல்லணி மெய்வி ளங்க நாசிகா [1]பரண மாகச்
சொல்லருங் குன்றி தேடிச் [2]சூடிய தென்னை யென்ன
வல்லிவாய் புதைத்தி மைப்பிற் றெழுமகிழ்ந் துயர்முத் தென்றான். ()

கண்ணிலா னென்ப துண்மை காமனைப் [3]பொரிய நீரு
மெண்ணிலா வென்னை யெண்ணற் கென்னபுண் ணியஞ்செய் தேன்மற்
றண்ணிய கரும மில்லை யடியவர் கரும மல்லா
லுண்ணிறை விருப்பிற் றூநா துள்ளெழுந் தருளு மென்றாள். (எ)

நற்றவன் கண்டு மெல்ல நகைத்துமா னிகர்த்த மாதே
மூற்றிய பத்தி யுள்ளார் கண்டில முனைப்போன் முன்னர்
மற்றுநின் வருத்தங் கேட்டே மதுரையி னின்று வந்தேங்
கொற்றரு மிருப்பு மூட்டி முட்டறக் கொடுவா வென்றான். (அ)

கேட்குமுன் [4]பழைய வாள்வேல் கிடந்தபே ராசு சீரா
வீட்டிநீள் கொழுகசு டார மிணையவேண் டெகொ ணர்ந்து
காட்டவோர் மருந்து பூசிக் கரத்தினற் பரிசஞ் செய்து
கூட்டின னயங்கள் கூரக் கூறுவான் றேற வாங்கு. (கூ)

மெத்திய தழலிற் [5]றூழச் செருகிவை விடியு முன்னம்
பத்துமாற் றினிற்சி றந்த பசும்பொனு மெழுகு பூண்ட
வுத்தம நாய னுரை யுயர்ந்தசெங் கனகங் கொண்டே
சித்திர மாவ மைத்துக் கும்பிடின் முயரக் தீர. (கo)

சு. நாசிகாபரணம் - மூக்கணி. குன்றி - குன்றுமணி. இமைப்பு - இமை மூடல். இவள் மூக்கணியாகியமுத்து, கணனெளியால மேற்பாற் கருமையையும் வாயொளியாற் கீழ்ப்பாற்செம்மையையுமபெற்றுத் தோன்றினமையின், குன்றி யென்றும், வாயைப புதைத்துக கண்ணீரமூடிக்கொண்டு இவள் அஞ்சலித்த பொழுது அது முத்தென்றும் நிணைக்கப்பெறாது; "இவண மூக்கணிமுத்திதழொளியாற் பெற்ற, துவண பதமாகத் தோள்" எனபர் (அ நிநூல்.)

எ. காமனைக்கண்ணிலா னென்பது உணமை யன்க; 'காமனுக்குகண்ணில்லை' என்பது ஓ நபழமொழி. எண்ணிலா என்ன - அழதுடையவர்கள் வரிசையிற் சேராத என்ன. நீரும் எண்ணுகென்க; சித்தர்தன்ன விரும்பியதாகக் கருதி இதுகூறினள்.

அ. கொல்தரும் இருப்புமூட்டி - கொல்லர்களால் செய்து தரப்பெற்ற இரும்பாலாகிய பொருள்கள.

க. ஆசு - கவசம். சீரா - தலைச்சீரா. மருந்து - பச்சிலை.

கo. நாயனுரை - சோமாகசுந்தரை; "நாயகர்" என்பர்பின்னும்; கசு.

(பி - ம்.) 1 'பரணம்பொல்லாச்' 2'சூட்டுமோவென்னக்கண்ட' 3 'பெரிய தொன்றுவெண்ணிலா' 4 'பணையவாள்வேல','மணையவாள்வேல்' 5'சூழச்செரு கிடு', 'செருகிவை'

என்றலு மேத கீங்கி யின்றிரா விங்குத் தங்கி
வென்றிகொ ணுய னீரே விடிந்தெழுந் தருளு மென்ன
வொன்றவஞ் சினர்போ லின்று நன்முகன் மூரைத்த தென்று
[1]சென்றவன் விசும்பிற் காண மறைந்தனன் சிரித்தெ ழுந்து. (கக)

உயர்தரு சித்தர் கைவிட் டொளித்தன ரென்று சால
வயருவாள் விரைவிற் [2]கூட்டி யறைந்தவா றடைவிற் செய்யப்
[3]புயறவழ் மேரு வென்னப் பொன்னிருங் குவையைக் கண்டா
ணயனுற வதிச யித்தாள் விடியுமு [4]னடித்தெ ழுந்தே. (கஉ)

வே று.

அந்த ணுளர் [5]தபதிய ராங்கது
வந்து கண்டு மனமகிழ்ந் தன்பர்கள்
சிந்தை யாகுலந் தீர்க்கவல் லானருட்
சுந்த ரன்னல துண்டோ வெனச்சொனர். (கங)

காய்ந்த செங்கன கங்கொடு காமுற
வேய்ந்த நாயகர் மேனி யமைத்துபர்
வாய்ந்த வாகம மந்திரத் தானெறி
சோர்ந்த நல்லபி டேகமுஞ் செயதனள். (கச)

வே று.

பணிபவ ளழகு கண்டே பரவுமெம் பெருமா னுக்கிங்
கணிபொலி வடிவ மச்சோ வழகிய வாவென் றன்பி
னிணையிலா வருங்க போலத் திருகையான் மாறி யள்ளித்
தணிவற மூத்த முண்டாள் சம்புவி னருளா வாழ்த்தி. (கஞ)

அள்ளியுண் டிடக்கு ழைந்த வங்குலிச் சுவடி கண்டே
தெள்ளுமெய் யர்க்கு மெய்யன் சிவனலா லுண்டோ வென்று
வள்ளலே யன்பு பூண்ட வலலியை வியந்தார் யாரு
மொள்ளிழை விழாவுங் கற்பித் துரியன சிறக்கச செய்தாள். (கசு)

மணமலி பெருமாற் கச்சோ வழகிய தெனலான் மண்மீ
தணிதிரு நாம நின்ற தழகிய பெருமா னென்றே
யுணர்வுளா ணுளுஞ் சிததர் சிததரென் [6]ரெழியா ளாகி
யிணையிலா வடிவத தோடு [7]மேகிஞள் சிவம்லா கத்து. (கஎ)

கக. காயனீரே - தலைவரே. கங. தபதியர் - ஸ்தபதியர்.

கஞ. அச்சோவழகியவா; கஎ. [6]போலம் - கன்னம்.

கசு. அங்குலிசசுவடி - விரற்முழும்பு.

கஎ. வடிவமழகியதென ஒருசொல் வருவிக்க; கஞ-ஆம் செய்யுளைப்பார்க்க. அழகிய பெருமாளென்பது, திருபபூவணமுடைய நாயகரது திருநாமம்.

(பி - ம்.) 1'சென்றவாழ்' 2'கூடி' 3'புயல்வரை' 4'நடித்தாள்வாழ்த்தி', 'நபத்தெழுந்தே' 5'தபத்திய', 'அதிபதியாகத' 6'ஓயாளாகி' 7'ஏறினாள்'

அற்புதன் மேனி கும்பிட் டருளினோர் கணிகை மாதும்
பொற்சிவ லோகத் தியாரும் போற்றவீற் றிருப்பக் கண்டு
செற்றரும் பிரமா ணத்தோ டியாவரா யினும்பி றைஞ்சி
னற்சிவ லோகத் [1]தின்று நணுகுதற கையு மின்றே. (கஅ)

ஆகத்திருவிருத்தம் - உஉஅக.

சசு.—சோழனைக் கொண்டாழியிற்றழுத்த திருவிளையாடல்.*

மூத்தையோர் காலத் தின்கண் முதுவலித் திறத்தோர் சோழ
னந்தமில் படையான் மிஞ்சி யாயிரம் பரிக்கி யாளோர்
வெந்திறற் பரியா ளென்று விளம்பியோர் காமம் பூண்டு
[2] சந்தமா மறைக்கன் பின்றி வாழ்ந்தனன் றனைவி யற்று. (க)

வேறு.

ஆங்கவன் றிசைவிச யஞ்செ யாதர
நீங்கரும் பெருவிளை யாட்டி னெஞ்சுவைத்
தோங்கமுத் துசைமுடி வுலாவி மீண்டியற்
றேங்கிய பெரியதென் றிசையை நோக்கினன். (உ)

மன்னவர் மன்னவன் மாசி றேசுடைக்
கன்னிநன் [3]ஞாட்டின்வாழ் கருணைத் தென்னவன்
றன்னைமுன் வெல்லுவான் முனை யோடுசூழ்
பொன்னெயின் மதுரையம் புரத்த ணைந்தனன். (ங)

கஅ. பிரமாணம் - ஆஸ்திகபுத்தி; சசு: ஙக.

(சசு)

க. மிஞ்சி - மிகுத்து. ஆயிரம்பரிகசு-ஆயிரம் குதிரைவீரருக்கு. பரியாள்- குதிரை வீரன். சந்தம் - சுருதஸ்.

உ. திசைவிசயம் - திகுகுவிசயம். முத்திசை: தெற்கல்லாதன. இயல் - இலக்கணம்.

* "வேடுவ னுகி வேண்டுருக் கொண்டு, காடது தன்னிற் கரந்த கள்ள மும்" (திருவா. கீர்த்தி. சுச - ஙி); "மண்டிரு வேட்டுப பஞ்சவற் பொருத, இள்ளியுங் கிளையுங் கிளர்படை காவலுங், திண்மையுஞ் செருகுஞ் தேற்றமும் பொன்மட, வெரிவா யுரக நிருணுட் டுருவக, கொல்கொகொ டாழி குறியுடன் படைத்து, மறையப் புதைத்த மதங்கெழு பெருமான்" (கல். அசு.)

(பி - ம்.) 1 'ஆவர் நயந்த யாவையு முடித்தே' 2'சந்தையாமறைக்' 3'ஞடு டைத்'

வேறு.

மற்றவ னணைய விப்பால் வழுதிவாழ் சொக்கன் மாட்டுப்
பற்றிய பத்தி பூண்டு படையினை நிந்தை செய்தே
யுற்றகா லத்துத் தெய்வ மலாதிலை யுதவி யென்று
நற்றவர் சொல்வா ரென்று நவின்றுளத் துணர்ந்து தேறி. (சு)

பூவியா யிரமி யாணை நூறுபோர் புரியும் வீர
ரொருபதி னாயி ரர்தே ருற்றன வமையு மூண்மைக்
கரியதீ லிகாள் வேந்தர்க் கீதொழிந் தளவில் சேனை
பெருமைகா ரணம தல்லாற் பிறிதுவே றில்லை காணின். (ரு)

ஈதொழிந் தெமக்கு மிக்க விரும்படை யாரு தற்கோ
ராதர மில்லை நெஞ்ச மமைவுடைத் தான தொண்பூ
மீதிலிச் சேனை கோண்டே வெல்லரும் பகையும் வெல்வே
1மேதகுஞ் சொக்குண் டாக வேணுமோ வுயர்ந்த தானை. (சூ)

மன்னுமம் மறையுட் பட்ட 2வான்பொரு டன்னை நோக்கி
மின்னுமிப் படைவா டாமல் வேண்டுப விட்டு நின்ற
பொன்னைநஞ் சொக்க னுக்கும் பூசுரர் தமக்கு மிக்க
வின்னருட் டொண்டர் கட்கு மீயுமி னிரங்க லென்றே. (எ)

இத்தக வமைச்சர் தங்கட் கியம்பவாங் கவர்க டம்மூட்
சித்தனன் குற்றி யைந்தார் சிலர்சில நியைந்தா நில்லை
பத்திசேர் நிலைமை யோடிப் பகுதியி னடத்திக் கொண்டாங்
கொத்தவெம் படையி லேகி மிருந்தன னுபர்புண் டாக. (அ)

இங்கெறி யிருப்போன் 3றன்மே லிகல்செய்வா னடைந்த சென்னி
தன்னுடை வலியும் வெற்றித் தலம்புகழ் விருது மிக்க
துன்னிய 4படையும் வல்ல சூழச்சியுங் கேட்டுச் சற்றுந்
தன்னுள மிளைத்தா னில்லை சங்கர னமக்குண் டென்று. (கூ)

வேறு.

உன்னரு மிறைவனுக் குணர்த்து வேமென
5மின்னமர் கோபுரம் விண்ட லத்தமர்
பொன்னெயி லாலயத் தணைந்து பொங்கருண்
மன்னிய சொக்கனை வணங்கிச் சொல்லுவான். (கo)

அ. உறைகாலத்து - ஆபத்துவருதகாலத்தில்; 'ஆபத்திற்குந் தெய்வமே துணை' என்பது ஒருபழமொழி.

இ. அமையும் - போதும். ஈ. பூ - பூமி. உயர்ந்த - மிக்க.

எ. அறை - பொன்னறை. நின்ற பொன் - எஞ்சிய பொன். இரங்கல் - இரங்கற்க; வியங்கோள்.

கூ. சென்னி - சோழன். சங்கரன் - சுகத்தைச் செய்பவர்.

(பி - ம்.) 1'ஓதருஞ்' 2'வண்பொரு' 3'றன்கண்' 4'வலியும்' 5'மின்னுயர்'

வேறு.

புக்கவா யிரம்ப ரிக்கோர் புரவியா ளவன மக்கோ
மிக்கவா யிரம தல்லா லில்லெவெம் புரங்க டந்த
சொக்கனே யடிமை செய்யுங் காரிய மருள்செய் தோன்றத்
திக்கெலாம் வென்று நம்மேற் செம்பிய னடைந்தா னென்றான். (கக)

விரிவுடைப் பகைவன் வெய்ய படையையும் விளங்க முன்ன
மொருதனக் குள்ள வைய படையையு முள்ளவாறும்
பொருவிலா ஐண்ணி னேத்துப் [1]புறம்புடைத் தீர ஞெகி
யுரைசெயக் கண்டி விண்மீ துரைசெய்வா னன்பர்க் கன்பன். (கஉ)

மனாலை முடைய பத்தி வழுதிகே ணினக்கே நல்லே
மினியநம் மூரையைத் தேறி யிளைத்திடா தெதிர்சென் றேறி
னினதுறு படையி ஞெடு மமர்செய்நீ டுலக வேந்த
ரனைவரு மெச்ச [2]வென்றி தருகுவ மைய மின்றே. (கங)

விரைவொடு மென்ன முன்னம் வேந்தனு லித்தெ ழுந்து
பெரியவ னன்பர்க் கன்பன் பேரருட் டிருவாக் கென்றே
தருமமீ டுரையைச் சேலைத் தலைமிசை முடிந்து கொண்டு
பொருவருந் துதியி னேத்திப் போந்ததன் கோயில் [3]புக்கான். (கச)

வேறு.

மற்ற வன்செய லின்ன தன்மையின் மன்ன வைத்துதி னத்தியா
முற்றி [4]வெஞ்சமர் செய்வ மென்றுமொ ழிந்து முன்னம டைந்தவக்
கொற்ற வன்றறு கட்பெ ரும்படை கொண்டி மண்டல மசையவே
வெற்றி மாமுர செற்றி யங்கண டார்ந்து வந்தனன் மேலெழ. (கரு)

வளமை யோங்கிய செழிய ஞங்கது கண்டு [5]மாறற நீறிடா
வுளந யந்தெதிர் சென்ற ணிந்தன னும்பர் நாதனே நம்பியே
களம்வி ரும்பிய பின்ன ரன்புறு காவ லன்சிறு தானையு
மளவில் வெம்படை யாய்வி ளங்கிய தப்பெ ரும்படை தன்னினும்.()

கக. புரவியாள் அவன் - புரவிவீரன் அச்சோழன். அடியை - அடியேன். செம்பியன் - சோழன்.

கஉ. ஐய - சிறிய. புறம்புடைத்தீரஞெகி - வெளியே தைரியமுடையவனுகப் புலப்படுத்தி. "அன்பர்க்கன்பன்": கச.

கச. ஆலித்து - முழங்கி. உரையைச் சேலைத்தலைமிசை முடிந்து கொண்டு ஆகாயவாணியை ஆடையன் தலைப்பில் முடிந்து கொண்டு; இங்ஙனம் செய்தல் மரபு.

கசு. நீறிடா - திருநீறிட்டு. அணிந்தனன் - சேனையை வகுத்தனன். களம் - போர்க்களம். அப்பெரும் படை - சோழன்படை.

(பி - ம்.) 1'புறம்பிடைத்' 2 'வென்றுதருகுவல்' 3 'சேர்ந்தான்' 4 'வெம் பகை' 5 'மாசற'

வே று.

வெற்றிறல் பேசி யங்கண் மேவரும் வினைக்க ளத்து
வற்றமர் செய்யுங் காலை மாறனர் சிறுதா னைக்குச்
சுற்றர னருளால் வெய்ய தொலைவிலா வலிய தானை
முற்றுற வாற்ற தாகி முதுகிட்ட தமர்விட் டோங்கு. (கள)

என்னுடை விருதை வையத் தியாரறி யார்கொ லென்று
மின்னெழ விழித்த மூல பலத்தொடும் வெகுண்டு கிள்ளி
முன்னெதிர் நடப்பக் கண்டு மொழிந்தது கொண்டெ திர்ந்தே
யென்னையா ருடையா யென்னப் பொறுத்தில னெங்கு முள்ளான். (கஎ)

வே று.

திருந்தியபொற் பீலிமுடி முடியிற் சாத்தித் திங்களென வெண்
ணீற்றுத் திலக மிட்டுக், கருங்களத்து வெண்கவடித் தாமஞ் சேர்த்துக்
1காதின்க ணிபமருப்புத் தோடு பெய்து, மருங்கெங்கு மயிற்கழுத்து
நாற்றி வேங்கை வரித்தண்டை யுத்தரியம் விளங்க மார்பிற், றருங்க
வன மாவேறி நெடுவேல் வாங்கித் தந்தமணித் தொடைபிறங்கத்
தாண்ட விட்டான். (கக)

வே று.

விரைவின்வெங் களத்துத் தோன்றி வேட்டுவப் பரியா ளாகித்
திரள்கொளா யிரம்ப ரிக்கோர் திண்டிறற் குதிரை யாணீ
குரைகழ லபயா நாறு குதிரைக்கோர் குதிரை யாள்யான்
2 பொருவது நினக்கு நன்றே புகலென 3நகைத்தெ திர்ந்தான். (உo)

வே று.

சாற்றரு மிடும்பையன் றானை றைத்துயர்
வேற்றரு ளெழியன்யா னென்ன வெய்யகால்
போற்றிகழ் கோரமா முகத்துப் போய்ப்புகக்
கூற்றென வெறிந்தனன் கொடிய வேலினே. (உக)

கள. வினை - போர்.

கஅ. மூலபலம் - மூலப்படை. கிள்ளி-சோழன். 'எதிர்ந்தேன், என்னை யாளுடையாய்' என்றது, பாண்டியன் வார்த்தை.

கக. பீலிமுடி - பீலித்தொகுதி. களம் - கழுத்து. கவடித்தாமம் - பல கரைமாலை. இபமருப்புத்தோடு - யானைக் கொம்பாற் செய்ததோடு. மயிற் கழுத்து - மயிற்கழுத்தாலாகிய கோவை. வேங்கை வரித்தண்டை உத்தரீயம் - வேங்கைத்தோலாகிய கோடுகளையும் வாலையுமுடைய மேற்போர்வை; தண்டை - வால். தந்தமணித்தொடை - யானைத்தந்தத்தாலாகிய மணிகளையுடையமாலை. மார்பிற் பிறங்கவென்க. "மார்பிற் சிறுதந்த மணித்திரண் மாலைதாழ" (பெரிய. கண்ணப்ப. கூo.) வாங்கி - கைக்கொண்டு. [சோழா.

உo. வேட்டுவப் பரியாள் - வேடராகிய குதிரைச் சேவகர். அபயா - உக. இடும்பையன்றானை மறைத்து - துன்பத்தையுடைய பாண்டியனைப் புறத்தே தோன்றுமறம் செய்து. செழியன் யான் என்ன - யானே பாண்டியன் என்று. கால் - காற்று. கோரம் - சோழன் குதிரை.

(பி - ம்.) 1'காதின்கணணிமருப்பு' 2'பொருவரு' 3'அதைத்தெதிர்'

வேறு.

கூசமுன் விட்ட வேல்வாய் குருதிகொப் புளிப்பக் கண்ட
வாசையாள் வளவ ணுணி யவனிமீ தொருவ னென்மூன்
பூசலென் றெதிர்க்க மாட்டான் புகுமிடம் புகுந்து சேர்ந்து
வாசியோ டின்னே நாடிப் பிடிப்பன்மா வேந்தர் மெச்ச. (உஉ)

விளங்கயா னெனவி ளம்பி மேல்விட வென்றிச் சொக்கன்
றளர்ந்தவர் போன டித்துத் தளர்ந்தமன் னனைமூன் போக்கிக்
களந்தனை விட்டுவிட்டுக் கடிதுவென் னிட்டுக் காணத்
துளங்குமா வோடும் போகத் தொடங்கினன் மதுரை நோக்கி. (உங)

தாதகித் தெரியன் மார்பன் றன்விதி வசத்தா லின்று
தீதில்வேற் றருவங் கொண்டு தென்னவன் புறமிட் டானென்
றுதரித் தவனி கொள்ளா வடுபடை வெள்ளத் தோடுந்
தூய்தகு சிங்க நாதஞ் செய்துபின் றொடர்த வுற்றான். (உச)

வம்பவி ழிதழிச் சொக்கன் வன்கன வட்டத் துங்க
வெம்பரி காட்டிக் காட்டி விளிவுறக் கொண்டு போந்து
[1]நம்புறு நகருண் மேல்பா னுகமீ தளவுந் [2]தாழ்ந்து
பம்புறு மலர்த்த டத்துட் பாய்ந்தன னபயன் காண. (உடு)

சுந்தர னகையி னோடுந் தூண்டுவெம் பரிமா வோடும்
வந்துபாய் வதன்மூன் நீரத் தேறினன் வருத்த மின்றி
வெந்திறற் சோழன் செல்லும் விசையினிற் குசைதாங் காம
லந்தவொண் டடத்துப் பாய்ந்தா னேறினு னில்லை யாழ்ந்தான். (உசு)

பண்டாழு மொழியாள் பங்கன் பத்தர்கள் பத்தன் மண்ணிற்
கண்டார்க ளதிச யிப்பக் கடற்பெருஞ் [3]சேனை யோடுந்
தண்டாம வளவன் றன்னைத் தாழ்த்திட வன்று மூன்னுக்
கொண்டாழி யென்னு நாமம் பெற்றது குடபா லோடை. (உஎ)

உஉ. ஆசை - விருப்பம், திக்கு. வாசி - குதிரை.

உங. மேல்விட - மேலே குதிரையைச் செலுத்த.

உச. தாதகித் தெரியல் மார்பன் - ஆத்திமாலையை யணிந்த மார்பையுடைய சோழன். சிங்கநாதம் - சிங்க முழக்கம்போன்ற முழக்கம்; வில்லி. பாரதம், வாரணவத. சுக.

உடு. இதழி - கொன்றை. கனவட்டம் - பாண்டியன் குதிரை. விளிவுற - அவமானம் அதிகரிக்க. மேல்பால் - மேற்றிசையில். நாகம் - நாகருலகம்.

உசு. வருத்த மின்றித் நீரத்து ஏறினன்; நீரம் - கரை.

உஎ. கொண்டாழி: கொண்டு தன்னுட் சோழன் முதலியோரை ஆழ்த்தினமையால், இவ்வோடை இப்பெயர் பெற்றது; "மண்டிரு வேட்டுப் பஞ்சவர் பொருத இள்ளியும் இகலியும் இளர்படை நான்கும், திண்மையுஞ் செருக்கும் தேற்றமும்பொன்றிடளரிவா யுரக நிருணட் டிருவக், கொலைக்கொண் டாழி குறியுடன் படைத்து மறியப் புதைத்த மறங்கெழு பெருமான்" (கல்லாடம், அகு.)

(பி-ம்.) [1]'தம்பெரு' [2]'தாழ்ந்த வம்புறு' [3]'படையினோடும்'

வேறு.

துன்று பல்படைச் சோழனை யாழ்த்திய
கொன்றை மாலைக் குதிரை [1]யிராவுத்தன்
வென்றி கீள்குரல் காட்டி விளங்குபொன்
மன்று ளாலயம் புக்கு மறைந்தனன். (உஅ)

ஒளித்த சென்னிமற் றுய்ந்த படையினைக்
களித்த மன்னவன் கைக்கொண்டு காத்துயி
ரளித்த நாதவென் னுலயத் தெய்தியே
விளித்துக் காட்டினன் மெச்சவ மைச்சர்கள். (உக)

வேறு.

மின்னுயிர் கோயின் மூற்றும் விளங்குசெம் பொன்னுன் மேய்ந்து
பொன்முடி யாடை மற்றும் பூடண முதலா னல்கித்
தென்னவர் கிளைக்கு நல்ல செல்வனே யுய்ந்தே னென்று
பன்முறை யிறைஞ்சி யேத்திப் போந்தனன் பரிவிற் கூடி. (ஙo)

ஓதரும் பிரமா ணத்தோர்க் கேதுசெய் திடவொண் ணுது
வேதநன் னெறிகோ டாமல் வழுவின்றி விளங்க நாளு
[2]மாதரஞ் செய்வோர்க் கேது சாதிப்ப வரிதி ரண்டு
னேதுமொன் றிலாதா ரன்றே விடுக்கணுக் கிரையே யாவார். (ஙக)

தொழுதுதே வர்க்குத் தேவன் சொக்கனே யல்லா லில்லை
பழுதின்மன் னவர்க்கு மன்னன் பாண்டிய னல்லா லில்லை
யழிகலி யுகத்துங் காணி லறுதியீ தென்று கொண்டு
விழுமிய மனித ரெல்லாம் வியந்தன ரெங்கு மென்றும். (ஙஉ)

ஆகத்திருவிருத்தம் - கஙஉக.

உஅ. குதிரை இராவுத்தன் - குதிரைத்தலைவன்.

உக. விளித்து - அழைத்து. ஆலயத்தை எய்தி, 'உயிரளித்த நாத' என்று விளித்துக் காட்டினனென இயைக்க.

ஙo. பூடணம் - ஆபரணம்.

ஙக. பிரமாணத்தோர் - ஆஸ்திகர். இச்செய்யுள், பாண்டியனது வெற்றிக்கும், சோழனுடைய கேட்டிற்கும் காரணங்கூறியது.

(பி - ம்.) 1 'இராகுத்தன்' 2 'ஆதரவுடையோர்க்கேது சாதிப்பதரிது வையத்து

சள.—திருவாலவாயான திருவிளையாடல்.*

மூன்னமோர் பிரம கற்ப முடிவினின் முடிவி லாத
செங்கிறப் பரிதி விட்ட தீக்கிர ணங்க ளானு
மின்னிடி மேகம் விட்ட வெங்கொடுங் துளியி னுனுங்
தன்னிக ரில்லா மண்ணிற் சராசர மாண்ட வன்றே. (க)

ஒண்சரா சரங்கண் மாண்ட வுலகினை யொலித்தெ ழுந்து
திண்கடல் கொள்ளக் கண்ட [1]செந்தமிழ்ச் சுந்த ரன்றன்
வண்பெருஞ் [2]சமாதி யாலே மண்மகட் குயிராங் தொல்லைப்
பண்புடை யால யத்தைக் காத்தனன் பழுது ருமல். (உ)

ஒன்றிய பெருவெள் ளத்து நடுச்சிதை யாம லோங்கி
[3] நன்றிய லுலகுக் கெல்லாம் [4]படிமமா நலஞ்சேர் வெள்ளி
மன்றுடன் விளங்க லாலே மண்மிசை நகர்க்கு நாம
மன்றுமுன் னடிவு ரென்று விளங்கிய தமரர் மெச்ச. (ங)

பிரளய காலஞ் சென்று முடிந்தபின் [5]பெருகி வந்த
திரைபொருங் கடலு மூன்போற் சேர்ந்துதன் னிலையி னிற்பச்
சுரர்பர னருளால் வையந் தோன்றிடு மடைவின் முன்னோர்
தருமமார் வடிவ மன்னன் ரூன்றினுன் சசிகு லத்து. (ச)

தேனலர் நிம்ப மாலைத் தென்னவன் பிரள யத்து
மாநில முழுதுங் குன்ற வடிவுகுன் ரும னின்ற
வீனமி லால யஞ்சே ரிருந்திரு நகரி கண்டு
தானுள மதிச யித்துத் துதித்தன னருளைச் சால. (ஞ)

நன்குறு மித்த லத்து நயம்பெற விருப்ப மென்று
தன்குறி யறிவா லாங்கு நகர்செய்து சயமுண் டாக
வின்புறச் சிறிதி யாண்டாண் டிருந்தவ னிடம் பெருமற்
பின்புதன் புறப்பு குந்தான் பெருங்குடி நெருங்கக் கண்டு. (சு)

உ சமாதி - சங்கற்பம்.

ங. படிமம் - ஒப்பு வடிவம்.

ச. சுரர் பரன் - தேவர்கள் தலைவர்; மகாதேவர்.

சு. குறியறிவு - குறித்தலையுடைய அறிவு.

*. "பகுவாய்ப் பாம்பு முடங்க லாக, வாலவாய் பொதிந்த மதிமுடித் தனிமுதல்", "வடதிரு வால வாய்திரு நடவூர்" (கல். சஅ, சுக.)

(பி - ம்.) 1 'தென்தமிழ்' 2'சத்தி' 3'நன்றிகொளுலகுக்கு' 4'படிவமாய்' 5 'பெருமைமிக்க'

அன்பொடு விளங்கு மெந்தைக் கறிவிப்ப மென்று சென்று
நின்படை வீடு காணி னீள்பெரும் படைவீ டாகு
மன்சிறி தறிவால் வாழு மனிதரு ளறிவா ரில்லை
யின்புற வறிய வல்லா யெல்லையை [1]யுரைத்தி யென்ரூன். (எ)

பத்தர்கள் பத்தன் பத்தன் பத்தியைக் கண்டி பூண்ட
வுத்தம நாகந் தம்மு ளொருபெரு நாகந் தன்னை
யித்திரு நகரி னெல்லை காட்டெனக் கன்பு பூண்ட
வித்தக மாறற் கென்று விளம்பினன் விளங்க வாங்கு. (அ)

விளம்புமு னெழுந்தி றைஞ்சி வெய்யவென் செலவு சொல்லி
னெளிந்திடி னேர்போ காது பொறுத்தரு ணேர்குன் ரூத
விளம்பிறை மவுலி யானே யெனத்திரு வுள்ளம் வாழ்ந்தே
யுளம்படும் விருப்பத் தோடிம் புறப்பட்டா னுரக [2]நாதன். (கூ)

வாலினைச் சுந்த ரேசன் வலத்திரு மருங்கு வைத்துக்
கோலமா ருடலை நீள நிமிர்த்தெல்லை குன்ரு வாறு
சாலமுன் வலம தாகத் தன்னுடைச் செலவி னூற்சூழ்ந்
தாலவாய் வைத்துக் காட்டிற் [3]றிடத்திரு மருங்கி னுங்கு. (கo)

[4] ஓசனை யகல நீள மூத்தரத் திசைபு றம்பாத்
தேசுடைத் [5]தான தத்தத் திருப்பதிக் கெல்லை நாம
மாசற வன்று மூன்னு வாலவா யெனவ ழங்க
வாசற வாயை முன்னிட் டாலவா யெனவுஞ் சொன்னர். (கக)

உளமகிழ்ந் தரவு போன நெறிமிசை யோங்க மன்னன்
வளமதில் கண்டா ராம மறுகுகோ புரத்த டாகங்
கிளரொளி மாடங் கூட மண்டபங் கெருடி மற்று
மளகையம் புரமே யென்ன வாக்கினு [6]ளேக்கி யாங்கு. (கஉ)

பொருவரு மால யத்தைப் பொன்னினுன் மேய்ந்து வேண்டும்
பரிவுசெய் தளவில் வானோர் பணிதிரு வால வாயான்
றிருவடி மறவா தங்க ணிருந்தனன் சீரார் பேரூர்
பிரளய காலத் திற்கு முன்னையிற் பிறங்கிற் றன்றே. (கங)

எ. படைவீடு - அரசிருக்கை.

அ. நாகம் - பாம்பு.

கூ. 'நேர்குன்ரு' என்பது சிவபெருமானுக்கு அடை.

கo. தன்னுடைச் செலவு - தெளித்து செல்லுதல்.

கக. வாலம் - வால்.

கஉ. ஆராமம் - சோலை. கெருடி - ஆயுதப்பயிற்சி செய்யும் சாலை.

(பி - ம்.) 1'உணர்த்தி' 2'ராசன்' 3'இடத்தினினமருமாங்கு' 4'யோசனை' 5 'தானத்தத்த', 'தானந்தத்த' 6'நோக்கினுங்கு'

நன்மறை யோரைப் போற்றி நவையற வறநெ றிக்கண்
முன்வரு மன்னர் மன்னன் முறைமையான் மனுவே யென்ன
மன்னுல கினைத்துஞ் செங்கோல் செலுத்தவு மதிற்றி ருக்காற்
பின்னரும் பதியை நல்லோர் பெயர்திரு மூடங்க லென்றூர். (கச)

* உருகாத நீசராயினும்.....ஆணையால்.

ஆகத்திருவிருத்தம் - கஙஙடி.

சஅ.—வரகுணனுக்குச் சிவலோகங்காட்டின திருவிளையாடல்.

இதமுற முன்னோர் கால மிருநில மடைவிற் காத்துச்
சுதையெயின் மதுரை தன்னுட் சுந்தரற் கன்பு பூண்டு
முதுவலி கூர்ந்து வாழ்ந்தான் மூவெழெடுத் தானை சூழ
மதிகுல திலக னுய வரகுண னென்பான் மன்னோ. (க)

ஆங்கவ னொருகால் வேட்டை யாடுவான் கவச முன்னு
வோங்குபல் கலன்கள் பூண்டு போகிவெவ் வனத்து லாவிப்
பாங்குறு மாக்க ளோடு பகலொழித் துழையை நோக்கி
நீங்கரும் விரைவிற் கூடி நிசியிடை மீண்ட காலை. (உ)

மின்னும்வெம் புரவி நோன்றூள் விசையினிற் றுகையுண் டாங்கே
மன்னிமுன் விதிவ சத்தால் வழியிடைக் கிடந்து றங்கு
நன்னெறி மறையோ னொந்து நாவெழக் குழறி யாற்ரு
தின்னுயிர் விட்டான் விட்ட தறிந்தில னினிய தென்னன். (ங)

வே று.

உன்னுன் மறையோ னுயிர்[1]விட் டனனிங்
கென்னு மிதுவென் றறியே [2]மினியாய்
நன்னீ தியனே நந்தா வருள்சேர்
மன்னு முறையோ வென்றூர் மறையோர். (ச)

அந்நாண் முதலா வறநீ தியின்வாழ்'
முன்னு வலவா முறையோ முறையோ
தென்னு முறையோ செழியா முறையோ
மன்னு முறையோ வென்றூர் மறையோர். (ஙு)

கச. மதிற்றிருக்கால் - மதிலின் முடக்கத்தால்.

(சஅ)

உ. உழை - மான்; வீடுமாம்.

* இச்செய்யுளின் முழுப்பாகத்தை ஙு-ஆம் பக்கத்திற்பார்க்க.

(பி - ம்.) 1'விட்டனன்மே லென்னு' 2'இனியா'

வே லு.

வெறிகமழ் தாரான் கேட்டு வாயிலில் விடியு முன்னர்
முறையிடு வானே னென்ன வேவினன் முறைசெய் வோர்கண்
மறையவர் தமைவ ணங்கி மரித்தவற் கினிய செய்வா
னுறுபொரு ணல்கி மீண்டாங் குரைத்தவா றுரைப்பார் மெல்ல. (சு)

நென்னலின் குதிரைத் தாளி னெறியிடைக் கிடந்தோர் பார்ப்பான்
முன்னுற விறந்தா னென்று முறையிட்டார் மறையோர் விம்மி
யென்னுமுன் றெண்ண னேங்கா வென்னிது விளைந்த 1தென்னு
மின்னெழ விழுவன் சோர்வன் விதிவச மிதுவோ வென்பான். (எ)

அந்தண ரமைச்சர் நீங்காப் புரோகித ரதுகண் டஞ்சிச்
சிந்தையா குலமி தற்குத் தீர்வையன் றபாயத் தான்மேல்
வந்தவிப் பிரம கத்தி யுபாயத்தான் மாறும் வேதச்
சந்தைக ளறைந்த வாற்றுற் றணிப்பதே தரும மாகும். (அ)

பொன்பரி திலமி யானை தாதியர் புவிபே ரில்ல
முன்பெருங் கொடித்தேர் கன்னி பசுவென மொழிந்த பத்து
நன்பெருந் தான மாக நல்கிமா முனிவர் தம்மை
யின்புறு தலத்தி லேற்றி யினியசெய் திறைஞ்சி யேத்தே. (கூ)

அன்றியும் விசேட மிக்க வகமரு டணங்க ளான
வென்றிமந் திரங்கள் கொண்டு விழுமிய குருக்க டம்மா
லின்றய ரோமஞ் செய்வித் திடந்தொறுந் தண்ணி னீர்வைத்
தொன்றிய வதிதி கட்கு முணவுநல் கென விதித்தார். (கo)

ஆங்கவர் விதித்த தூய2வருமறைத் திறத்தி லுள்ள
வோங்கிய வறம்பி றங்க வொல்லையிற் செய்த பின்னும்
பாங்குறு பிரம சாயை பழுதறு குணத்தான் மிக்க
தேங்கம ழலங்கன் மார்பச் செழியனை விட்ட தில்லை. (கக)

சு. முறைசெய்வோர்கள் - வேலையாளர்.

எ. லிம்மி முறையிட்டார்.

அ. தீர்வை - பிராயச்சித்தம். அபாயம் - ஆபத்து; "அம்புனிற்றுவிள் கன்றே ரபாயத் தினூடு போகி", "வந்தநிங்க பாய மென்று" (பெரிய. திருவா ரூர்ச். கசு, உச.)

கூ. நிலம் - எள்.

கo. அகமருடணங்களாகிய மந்திரங்கள் - ஒருவகை வேதமந்திரங்கள் (பெரிய. திருஞான. சுo.) தண்ணினீர் வைத்து - தண்ணீர்ப்பந்தர்வைத்து. விதித்ததற்கு எழுவாய் அந்தணர், அமைச்சர், புரோகிதர்; அ - ஆம் பாட்டிற் காண்க.

கக. பிரமசாயை - பிரமஹத்தி. கஉ. குஞ்சி - தலைமயிர்.

(பி - ம்.) 1'என்பன்' 2'அறைகெறித்தவத்தில்'

எரிந்தசெங் குஞ்சி வெண்பற் கருநிறத் [1]துடனி ருப்புப்
பெருந்தடி யதிர வூன்றிப் பின்றொடர்ந் துணவு மூன்றுப்
பொருந்திய கைக்கொண் டஞ்சப் பூணித்துப் பற்க டித்துத்
திரிந்தது பிரம சாயை சிரித்தவி னயங்கள் காட்டி. (கஉ)

அப்பெருந் துன்பந் தன்னு லுள்ளுட றளர்ந்த மூங்கிச்
செப்பரும் பயத்தி னுடென் செய்வமென் றிருப்ப விப்பாற்
றுப்பமர் திறத்தோர் சோழன் றொகுபெரும் படையி னோடு
மிப்பொழு திவனை வெல்லக் காலமென் றெண்ணி வந்தான். (கங)

ஆங்கது கண்ட தென்ன வுலையத் தணைந்து சென்னி
பாங்குற வடைந்தான் செய்வ துரையெனப் பரவுங் காலத்
தூங்கிடா தெதிர்சென் றோட்டிச் சோழனைட் டேகி யேகாத்
தீங்கொழித் [2]தெய்தென் றீசன் விண்மிசைச் செப்பத் தேறி. (கச)

வே று.

இந்து ஞாயிறு தாரகை வந்தீளைப் பாறுஞ்
சந்து மேவிய தண்டலை மதுரையம் புரத்து
வந்த தெவ்வின்மேல் வலம்படி படையொடு மெதிர்சென்
றந்த மெய்யொடும் பொருதன னவன்வலி தொலைய. (கடு)

மற்று நேரொவ்வா வரகுணன் பெருவலி வளவன்
முற்று சேனையுஞ் சுந்தர னருளினுற் றொலைத்து
வெற்றி பூண்டபின் மகிழ்ந்தவன் மேதகு நாடுங்
கொற்ற மேன்மையுங் கொண்டனன் மண்டல மதிக்க. (கசு)

பொன்னி நாட்டிய ராலயம் போற்றுவ மென்றே
மன்னு மாலய மூள்ளன வணங்கிமுன் வருங்கா
லின்ன நீருவா [3]னிருடிக ளமரர்க ளிறைஞ்சுஞ்
சென்னெ னீள்வயற் றிருவிடை மருதிடை [4]யடைந்தான். (கள)

ஆதி நாதரை யன்பொடு வணங்குவான் விரும்பிச்
சோதி யாலயத் தணுகுமுன் றொழுதுவிட் டஞ்சி
நீதி வாயிலி னின்றது நீண்மதிற் புறத்தாங்
கேத மேதர வருந்திற லிரும்பிர மகத்தி. (கஅ)

கஉ. இப்பால் - மேலே.

கச. தாங்கிடாது - தாமதியாமல். ஏகாத்தீங்கு - நீங்காத பிரமகத்தியை.

கடு. காயிறு - சூரியன். சந்து - சந்தனமரம். தெவ் - பகை. வலம் - வெற்றி. அந்தமெய்என்றது சிவபெருமானுடைய திருவாக்கை.

கள. பொன்னி - காவிரி. திருவிடைமருது - திருவிடைமருதூர்.

கஅ. 'ஜ்யோதின்மய மஹாலிங்க மூர்த்தி' என்பது அத்தலத்தில் ஸ்வாமி திருநாம மாதலின், 'சோதி' என்றார்.

(பி-ம்.) [1]'இருப்புப்பாரப்' [2]'தேகென்' [3]'அமரர்களிருடிகள்' [4]'சென்றான்'

வெய்ய சாயைவிட் டகன்றபின் விரைவினுட் புகுந்து
நொய்ய மேனியு நோக்கருங் குளிர்ச்சியுங் கண்டே
யைய னேயருள் வாரியே யடைந்தவர் துணையே
தையல் பாகனே சரண்சரண் சரணெனத் துதித்தான். (கசு)

வேறு.

வெம்பெருந் துயரா லிந்நாண் மெலிந்தனன் மேல்வா ராம
லெம்பிரான் காத்தல் வேண்டு மின்றுனை யடைந்தே னென்று
செம்பொன்வேண் டுபவ ழங்கிச் செய்யதாள் பரவி நிற்ப
வும்பர்கோன் றிருவாக் கங்க ணேங்கிய துயர்வா னத்து. (உ0)

வேண்டிய தருமெம் மாட்டும் விசேடித்து மறையோர் மாட்டும்
பாண்டியர் தலைவா வென்றும் பரிவுளே யாயி ருப்ப
[1]வீண்டிமூன் வினைவ சத்தா லேறிய பிரம சாயை
பூண்டவிந் குன்னை விட்டுப் போனது போனதின்றே. (உக)

என்றுகொண் டிலங்கத் தேறி யிறைஞ்சிய மன்னன் முன்ன
ரொன்றிய பயத்தால் வேரூர் வாயிலாற் போந்தாங் கோங்கப்
பொன்றிகழ் தருவி மானப் புரிசைசெய் தகர மேற்றி
நன்றிகொ [2]டேவ தான நல்கியாங் கிருக்கு நாளில். (உஉ)

மிஞ்சிடை மருதர் கோயிற் பதக்கணம் வரும்வீ திக்க
ணஞ்சிநாய்க் கட்டங் கண்டூ தெடுத்தவர்க் கவனி பாதி
நெஞ்சிலுற் கொடுப்ப லென்றே நினைந்தன னெடுப்பக் காணுன்
பஞ்சவன் [3]பகுதி யில்லென் றெடுத்தனன் பரிவட் டத்தால். (உங)

தேம்பழ பழனஞ் சூழ்ந்த திருவிடை மருதி னெல்லைப்
பாம்பொடு மதியஞ் சூடும் பரமனு ருருவ மென்னக்
[4]காம்பவிழ்ந் துதிர்ந்த செய்ய கனியுருக் கண்டாங் கெல்லாம்
வேம்புகட் குயர்வி மானஞ் சாத்திலுன் வேந்தர் வேந்தன். (உச)

பரிந்திடை மருதர் நன்னீ ராடமுன் பரப்பு மெள்ளைக்
கரந்தொரு கள்ளன் றின்னக் கண்டவர் கொடுசெ லுங்கா
லருந்திய தென்னை யென்ன வரன்றமர்க் கடிமை யாக
வரும்பிற வியின்க ணென்றுன் மன்னவ னயின்றுன் வாங்கி. (உரு)

கசு. நொய்ய - கனமற்ற. உக. பரிவு - அன்பு.

உஉ. வேரூர்வாயில் - மேற்குவாயில்; அதிலுள்ளகோபுரம் பாண்டியன் கோபுரமென்று இன்றும் வழங்கும். விமானப்புரிசை - கொடுமேடமதில். அகரம் - அக்கிரகாரம்.

உங. பதக்கணம் - பிரதக்ஷிணம். நாய்க்கட்டம் - காம்மலம். அவனி பாதி கொடுப்பலென்று நெஞ்சிலுற் நினைந்தனன். பகுதி - பங்கு.

உரு. வரும்பிறவியின்கண் அடிமையாக.

(பி-ம்.) [1]'ஈண்டியவினை' [2]'தெய்வத்தான' [3]'பகுத்தி' [4]'காம்புவீழ்ந்து'

சோதிசேர் மருதர் தேர்போம் வீதியிற் றொழுவான் செல்லும்
போதின்முன் கிடந்த பொல்லாப் புன்றலை யோடு கண்டு
நாதவித் தலைபோ லென்ற ஞெய்த்தலை யோடு மிந்த
வீதியிற் கிடக்க வென்றே மிலேந்தன னிலங்கு தென்னன். (உசு)

கள்ளனைக் கட்டிச் செல்லுங் காலையிற் கள்ள னீண்டத்
தெள்ளிய நீற்றின் வீழ்ந்து சிரித்தர கரவென் றெய்த
வுள்ளம்வாழ்ந் தெதிர்கொள் வேந்தன் விடும்விடு முயர்பான்மிக்க
வெள்ளரைக் கள்ள ரென்றே விளம்புவ தெனப்ப ணிந்தான். (உஎ)

தேடருஞ் சிறப்பின் மிக்க திருவிடை மருதி னெல்லைக்
காடிடை நரிகள் விட்ட கடுங்குர லோசை கேட்டுப்
பீடிடை யிறைவன் றன்னைப் பேசரும் விருப்பத் தோடும்
[1]பாடிய வென்று தென்னன் பல்பெரும் படாங்கொ டித்தான். (உஅ)

நேசமார் தேவி தன்னை [2]நின்னுடை யடிமைக் காமென்
றுசைசூர்ந் [3]தளித்தவ் வேந்த ஞுவியிற் றவனே பல்காற்
றேசுற வொலிப்பக் கேட்டுச் சிவனையே பாடிற் றென்று
காசொடு பொன்னு மின்னக் கலந்துதூ வினன்க சிந்து. (உக)

இன்னன பலவுஞ் செய்தவ் வெல்லையைத் தொழுது போந்து
கன்னிநா டடைந்து கூடற் கடவுளா லயத்துப் புக்குச்
சென்னிநாட் டெளவி சேடஞ் செப்பிடக் கருணைச் சொக்கன்
முன்னுற விசும்பிற் றேற மொழிந்தன னறிந்தோ மென்று. (ஙo)

உக. தலையோடு - மண்டையோடு. கிடக்க: வியங்கோள். மிலேந்தனன்- அத்தலையோட்டைச் சூடிக் கொண்டான்.

உஎ. விடும் விடும் - முன்னிலைப்பன்மை. வெள்ளரை - திருநீற்றால் வெண்ணிறமுடையாரை. பணிந்தான் - அக்கள்ளனைப் பணிந்தான்.

உஅ. படாம் - ஆடை. உக. ஆவி - தடாகம்.

உங - கூ. இச்செய்யுட்களிற் கூறப்பெற்றுள்ள சரித்திரத்தை "வெள்ளை நீறு மெய்யிற் கண்டு, கள்ளன் கையிற் கட்ட விழ்ப் பித்தும், ஓடும் பன்னரி யூனைகேட் டரனைப், பாடின வென்று படாம்பல வளித்தும், குவளைப் புனலிற் றவனே யரற்ற, ஈசன் தன்னை யேத்தின வென்று, காசும் பொன்னுங் கலந்து தூவியும், வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய, செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு, பிடித்தது மவனிப் பிறப்புக் கென்ன, இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்த்தும், மருத வட்டத் தொருதனிக் கிடந்த, தலையைக்கண்டு தலையுற வணங்கி, உம்மைப் போல வெம்மித் தலையுங், கிடத்தல் வேண்டுமென் றடித்தடித் திரந்தும், கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப, வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும், காம்பவிழ்த் துதிர்ந்த கனியுருக் கண்டு, வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும், விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று, புரி குழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த, பெரிய வன்பின் வரகுண தேவரும்" (தீ நுவிடைமருதூர் மும்மணிக்கோவை, உஅ) என்பதனாலுமறிக.

(பி - ம்.) 1 'பாடுவ' 2'நின்னுடைத் தமராக்கொண்மென்று' 3'அளித்தத் தென்னன்'

மன்னவன் கேட்டுச் சால மனமகிழ்ந் திறைஞ்சி வேண்டும்
பொன்னணி யாடை நல்கிப் பொலிவொடும் போந்தி லங்குந்
தன்னுழை யிருந்து வேதந் தருமநூல் சிவபு ராண
நன்னெறி யாக மங்க ளுடொறுங் கேட்கப் புக்கான். (நக)

ஓதரு மூலகுக் கெல்லா மூயர்ந்துள துணர்வுக்கெட்டா
வாதிரா யகனி ருக்கு மருஞ்சிவ லோக மென்னு
வேதநூல் விளம்பக் கேட்ட வேந்தர்புங் கவனு மிக்க
காதல் கூர்ந் ததனைத் தன்னூன் கண்ணிஞற் காண்பான் வேட்டி. ()

நீணய வடியார் தங்க ணினைவினை முடிக்க வல்லான்
மாணெழிற் சொக்க னல்லால் வல்லவ ரில்லென் றெண்ணிச்
சேணுய ராலய த்துச் சென்றருட் டேவே நின்றன்
காணரு மூலகங் காண்பான் கருதுகின் றதுக ருத்தே. (நகந)

வே று.

நின்றம டியனே னினைவு தீரவே
யொன்றிய வுகங்கலி யுகம தாயினு
மின்றிகழ் பெருஞ்சிவ லோக மேம்பட
வின்றுகாட் டாயெனி னிறப்ப லென்னுமுன். (நகச)

குளிர்ந்தருள் புரிபவன் கோடி நாயிறு
கிளர்ந்தன வெனவிடு கிரணம் வானெழ
விளங்கிய வொளிவளர் விமான மெங்கணுந்
துளங்கிய வுலகினைத் துலங்கக் காட்டினான். (நகஞ)

நடாவி றும்புரு நார தாதிகள்
படிபுகழ் [1]துந்துபி யார்த்துப் பாடினர்
சுடர்விடு கற்பக மலர்க ளேவியே
வடிவுடை யரம்பையர் வாழ்த்தெ டுத்தனர். (நகசு)

விண்ணுல கெவற்றினு மேல தாகிய
நண்ணரு மூலகமு நண்ணக் கண்டனி
ரெண்ணிய மதுரையை யொப்ப தேதிறை
கண்ணுறி லெதுமுடி யாத காரியம். (நகஎ)

நகஉ. சிவலோகம் உலகுக் கெல்லாம் உயர்ந்துளதென்பதை நகஎ - ஆம் பாடலாலுமுணர்க.

நகச. நின்றமர் - நின்னடியார். நினைவு - கவலை.

நகஞ. கோடி நாயிறு - கோடி சூரியர்கள்.

நகஎ. கண்ணுறில் - நினைத்தால்.

(பி - ம்.) [1]'துந்துமி'

வேறு.

இருகரங் குவித்தி றைஞ்சி யெழுந்தெழுந் தருளா னந்தத்
திரைபொருங் கடலு ளாடித் திளைத்தனன் கண்ட தென்னன்
விரைகமழ் மலர்சொ ரிந்து வெண்பொரி சிந்தித் தொண்ட
ராரகர வென்று துள்ளி யார்த்தன ரதிச யித்தே. (சஅ)

நெறிப்படக் கண்டி ளங்க ணிறைந்தன நிறைந்த வெந்தாய்
மறைத்திடு மறைத்தி டென்ன மனோகர வுலக மங்க
ணிறைப்பொழு திடைவா னுச்சி மறைந்திட விறைஞ்சி மண்ணோர்
சிறப்பொடுந் துதித்தார் சொக்கன் றிருவிளை யாடல் கண்டு. (சக)

மறுவறு தென்ன னுண்டென் றேகிவந் திராம னேக்க
ணறிவுறு புதல்வன் றன்னை யிழந்ததன் மனைவி யாற்ரு
துறைதரு கிணற்றில் வீழ வுதவிய மறையோன் றன்னை
யிறையினில் வெட்ட முட்ட வெழுந்ததென் பாரு முண்டால். (சஎ)

உறுபிர மகத்தி யாலே யுண்முதற் சுகங்க ளான
[1] பிறவெலா மொழிந்த மன்னன் வரகுணன் பெருந்துன் பத்தை
யிறையினின் மாற்றிக் காணு வினியதன் னுலகங் காட்டி
மறைநெறி குலவு மால வாயனை வாழ்த்தல் செய்வாம். (சக)

ஆகத்திருவிருத்தம் - கஉசுரு.

சகூ.—விடைக்குறியம்பெய்த திருவிளையாடல்.

வரகுண மன்ன வற்கு மனமகிழ் மைத்தன் வென்றிப்
பொருவிலா வறிவி னுனேர் பூழியன் மதுரை தன்னுட்
சுரரடி பரவு [2]மேன்மைச் சொக்கனுக் கன்பு பூண்டே
யுரனெடும் வாழ்ந்தான் முன்ன முலகினை யடைவிற் காத்து. (க)

நம்புற வாழ்வோன் றன்மே னவையிலா வறிவான் மிக்க
செம்பிய னெருவன் பேசித் தெறுங்கரு நாடர்க் கூட்டி
வெம்பெரும் படையி னேடும் வினைசெய்வா னடைந்தா னுரு
மும்பர்சூழ் மதுரை மூதூ ரோசனை யென்ன வாங்கு. (உ)

சஅ. மகிழ்ச்சியடைந்தோர் மங்கலப் பொருள்களாகிய பூவும் பொரியும் சிந்துதல் மரபு.

சக. உளம் கண்நிறைந்தன - உள்ளமும் கண்களும் நிறைந்தன.

சஎ. இராவில்வந்து. உதவியமறையோன்றன்னை - கிணற்றினின்றும் எடுத்த மறையோனை. 'மறையோன்' என்றது, கணவனை.

சக. பிரமஹத்தியாலே ஊண் முதலியவற்றை இழந்ததை, கஉ - ஆம் செய்யுளாலு முணர்க. (சக)

உ. பேசி - போர்செய்ய வருதலை முன்னே தெரிவித்து; சூளுரைத்தென் றுமாம். கருநாடர் - கருநாட தேசத்துவீரர். வினை - போர்.

(பி - ம்.) 1 'பிறவையுமொழிந்த தென்னன்' 2 'அன்பார்'

வேறு.

[1]தடங்கரை யுடைத்து மானிரை கவர்ந்துக் தானிய நணுகிடா வாறு, தொடர்ந்ததர் [2]மறித்தும் பொழில்களைச் சிதைத்துஞ் சூழ்தரு பலகுடி நடுங்க, வடர்ந்திடை விடாம லிகல்செயக் கண்டாண் டனை யவுஞ் சுருங்கவாற் றூது, மடங்கலை யனைய [3]வெந்திறன் மாற னமைச் சரை வரவழைத் துரைப்பான். (கூ)

புத்திரன் குள்ளீ ரென்செய்கேம் வேறு புகலிலை யிரவொடு பகலு, மெத்திய படையால் வரும்பெருஞ் சோழன் மேலெழ வினை செயா நின்றா, னெத்துடன் பொருதற் கிரும்படை யில்லை யொல்லை நம் மாலவாய் மெய்ய, [4]னத்தியன் றெய்த சேவகன் றன்க்கின் றடைக் கலம் புகுவமென் றறைந்தான். (சு)

நின்றது சொல்லக் கண்டமந் திரிக ணிலைமைகண் டதிசயித் தேத்தத் தென்றல்வந் துலவுங் கோயிலட் டாலைச் சேவகன் சன்னி தியடைந்து வென்றிசேர் வீர செம்பொன்மா மன்ற வெள்ளியம் பலவரீ புகலென் றுன்றிய வடியார் தந்துயர் [5]தீர்க்கு மொருவகே ளடிமைவின் ணப்பம்.

பின்னமில் குணஞ்சே ரெந்தையு மடியேன் பேதையாம் யாண் டினி னினது, மன்னிய வுலகத் தடைந்தனன் கிடந்த வரைபுரை காஞ்சன மனைத்து, மன்னிய ஞாதி கொள்ளலா லினைத்தே னடைந் தனன் பெரும்படை யபய, னின்னுடைப் பதிக்கோர் தாழ்வுறி னின க்கே தாழ்வது நிச்சய மீதால். (எ)

அற்றவர்க் [6]கற்ற சிவனென நின்னை யறைகுவ ரடைக்கல முனக்கே மற்றொரு பற்று மில்லையென் பதனை யறிந்தனை மாசற நாடிக் கற்பனை யொழிப்பாய் நீயலா லுண்டோ காத்தருள் காத்தரு ளென்று கொற்றவ னிறைஞ்சி நின்றனன் சாலக் குறைந்துகண் [7]ணிறைந்தநீர் ததும்ப.

நிருபகே ளஞ்ச னிலைமையை விடாது நின்னுள படையொடு மெ திர்சென், றுரனெடு மமர்செய் விரைவுடன் யாம்வந் துதவுவ முதவுவ மென்றென், றிருநில மன்னன் செவிப்புல நிறைய யாவருந் தெளி வுற வங்கண், வரமலி விசும்பிற் பிறங்கிட வருளான் மலர்ந்தது பெருந்திருவாக்கு. (அ)

கூ. ஆன்நிரை - பசுக்கூட்டங்கள். அதர் மறித்தும் - வழிமறித்தும்; இச் செய்யுளின் பொருளை, பு - வே. வஞ்சிப்படலம், உக - ஆம் செய்யுளாலும் வி. பாரதம் நிரைமீட்சிச்சருக்கம், உடு - ஆம் செய்யுளாலும் உணர்க.

சு. அத்தி அன்று எய்த சேவகன் - அட்டாலைச் சேவகர்; அத்தி - யானை.

எ. அற்றவர்க்கற்ற சிவன் (சு; கூ); "அற்றவர்க்கற்ற சிவனுறைகின்ற வாலவாயாவது மிதுவே" என்பது தேவாரம். நீ யலாற் புகலுண்டோவென ஒருசொல் வருவிக்க.

(பி - ம்.) 1'தடங்கரை' 2'மறைத்தும்' 3'வெந்திறன்' 4 'அத்தியேன்று' 5 'நீக்கும்' 6'உற்ற' 7'நிறைந்து'

அவ்வுரை [1]கேட்கு முனமகிழ்ந் திறைஞ்சி யதிசய மனத்தெ
டும் போந்து, மெய்யிலி கவசம் பூதியென் றிட்டு மேதகு காமமுச்
சரித்துச், செவ்விய [2]நெறிசேர் பல்சிறப் புறுந்தன் சிறுபடை தன்
ஞெடும் விரைவிற், பௌவநேர் படைமுன் சென்றெதி ரணிந்தான்
பத்திசேர் [3]பார்த்திபர் தலைவன். (கூ)

வறுவிய படையா னெதிர்வதே யென்று வருபெரு கேரியன்
சீறித், திறமுடைச் செழியன் [4]வெருவுற வடர்த்துச் சிங்கநா தஞ்செ
ய்யச் செழியன், நிறைதரு கருணைப் பெருமைய வெங்கு நிறைந்தவ
நிறைந்தவ வெனுமுன், றுறைபடி மிறைவ னுதவின னிரங்கித் தும்
மினர் சிவாயபோற் றொடர்ந்து. (கo)

பொருவில்வில் லாளாய்த் தோன்றிமுன் னினைத்த பூழியன் சரி
படை நடவு, தெரிவுற நின்று விடையினைப் பொறித்தோர் திண்டிற
லேவினை யேவக், கரிபரி யடர்ந்த படையுட றுணிந்து [5]கணத்திடைக்
களத்திடை விழக்கண், டிரணுடை வளவ னறிஞ ரலினு ளுளத்ததி
சயத்தொடு முரைப்பான். (கக)

துப்பமர் மெய்ய ஞெப்பிலா வறஞ்சேர் சொக்கநா யகன்பெருஞ்
செய்தி, செப்பிடிற் பத்த ரளவினிற் காம தேனுவென் றியாவரு
மறைவர், மெய்ப்பட [6]விவனு மவனைமுன் னிட்டே வென்றனன்
மற்றியார் வெல்வார், தப்பிலை யிவன்றன் றக்கையன் றனக்கு முதவி
னன் முரணி வியப்ப. (கஉ)

விடைக்குறி யம்பொன் றளப்பருஞ் சேனை விழத்தனி தூளித்
தது களத்துத், தொடைச்செயல் கண்டீர் மனிதரோ வல்லர் சொக்க
னென் றுணருமின் றெளிய, வடர்த்தறி வின்றிப் பொருவமேல் யாமு
மழிகுவம் விடைதரப் பெற்றேரும், படைத்தொழில் வேண்டா நமக்
கெனப் பிழைத்த படைக்[7]குளந் தெளிவுறப் பகர்ந்தான். (கங)

கேட்டவெஞ் சேனைத் தலைவர்தாழ்ந் திறைஞ்சிக் கிளர்ந்தவெங்
கொடும்[8]பகைப் படைக, ளோட்டிய தானை வீரனே யாராய்ந் தரைத்
தவா றெருக்கு மென் றுவந்து, நாட்டுயர் படையை மீட்டிட வங்க
ணணுகிய [9]காரிய முணரா, வேட்டுவர் யவனர் கருநடர் முதலா வேற்
றுருத் தானையர் வெகுண்டி. (கச)

ஒள்ளிய கிள்ளி தன்னுளம் விளிய வுறுபடைக் கஞ்சினை யென்று
தள்ளிமுன் சொல்லிச் செல்லமுன் கண்டு தனக்குவந் துதவுபே ராண்

கூ. பூதி - விபூதி. கo. கேரியன் - சோழன்.
கஉ. தந்தையன் - தந்தை. கங. விடைதரப் பெற்றேம்: சிலேடை.
கச. சேனைத்தலைவர் மீட்டிட.
கடு. கிள்ளி - சோழன். விளிய - அவமானமுற.
(பி - ம்.) 1'கேட்டு' 2'நிறை' 3 'பாத்திபர்' 4'மெலிவுற' 5 'களத்திடைக் கணத்திடை' 6'வவனுமிவனை' 7'குலம்' 8'பெரும்' 9'காரணம்'

மைத், தெள்ளிய வில்லி யழகனட்டா லெச் சேவகன் றனையுளத் திருத்தித், துள்ளிமுன் சிங்க நாதமுஞ் செய்து தோன்றினன் வென்றுயர் செழியன். (கடு)

C வ ஐ.

துன்றமர் தெரியா தென்று சுந்தரன் மூன்போற் ரேன்றி
வன்றிற லிடப மிட்ட வாளியை யேவ வாளி
யொன்றள விலாத தாகித் துணித்ததாங் குறுக ளத்து
வென்றிகள் பேசி வந்த வெந்திறற் ரூனை வீழ. (கசு)

C வ ரு.

தரமுற்றெதிர் வரும்வெற்றிகொ டனிவீரர்கள் வலிகூர்
சிரமற்றன புயமற்றன வதுவோதிறன் முகமோ
டிரமற்றன குரமற்றன வுடலற்றன துரகங்
கரமற்றன சரணற்றன களமற்றன விபமே. (கள)

C வ று.

நெற்றியிற் பாய்கோ ணேக்கு வித்தைகாட் டிநரை நேரு
மூற்றவாய் தைத்த வாளி [1]யொற்றையூ துநரை யேய்க்கு
மூற்றுமெய் புகுந்த பாண [2]மூட்பன்றி நிகரு மூடிச்
சற்றிடை விடாது பெய்த சரமழை தன்னி லன்றே. (கஅ)

[3] திரைபடுங் குருதி வெள்ளச் செங்கொடுங் கடலு ளாடிப்
பெரியவான் முகடு தோயும் பிணப்பெருங் குன்றத் தேறிப்
பொருவருங் கணங்கள் கூளி பூதசா லங்கண் மற்றும்
வரிசையி னுடிப் பாடி யிருந்தன [4]மண்ட வுண்டி. (கக)

பெருமைசேர் சென்னி [5]பின்னும் பிணம்படக் கொன்று வீழ்த்த
சரமுகத் திடபங் கண்டு [6]தன்னுளத் ததிச யித்திங்
கரனயந் திருப்ப வெல்வா ராரென விரைவின் வாங்கி
முரணுறு பிழைத்த சேனை பின்வர முன்னர்ப் போனன். (உ0)

நலங்கொள்பே ராண்மை வில்லி நயந்துயர் கோயின் மேவ
வலந்தரு மன்னன் கண்டு மகிழ்ச்சிமாக் கடலின் மூழ்கிக்
கலந்துபோ காது நின்ற கருநடர் [7]முதலோர்க் கூட்டித்
தலம்புக ழால யத்துச் சார்ந்தனன் பரவ யாரும். (உக)

கக. வாளி - அம்பு. கள. துரகம் - குதிரை. இபம் - யானை.

கஅ. நோக்குவித்தை உடையோர் தம்வித்தை காட்டுகையில் நெற்றியிலே ஒருகம்பை நிறுத்திக்காட்டுதலியல்பு. ஒற்றை - ஒருவகை வாத்தியம்.

கக. பூதசாலம் - பூதக் கூட்டம். உ0. வரங்கி - பின்வாங்கி.

உக. வில்லி - அட்டாலெச் சேவகர்.

(பீ - மீ.) 1 'யொத்தை' 2 'எகினமாநிகர்க்கும்' 3 'திரள்' 4 'மன்ற' 5 'மன்னும்' 6 'தானுளத்து' 7 'முதலாக்'

வேறு.

இந்து மன்னர் குலத்துக் கினியவன்
சுந்த ரன்னல துண்டோ வெனச்சொலி
மூந்த வேண்டுப நல்கி முறைமையிற்
பந்த நீங்க வணங்கினன் பன்முறை. (உஉ)

வேறு.

திருமதிற் புடையட் டாலைச் சேவகன் றன்னை யன்பிற்
பொருவரு [1]மமைச்ச செல்லாம் புகழ்ந்தது சயித்தார் போற்றி
வரகுணன் மைந்த [2]னென்று வந்தித்தா னன்று முன்னுப்
பரவுபாண் டியர்க ளெல்லாம் வந்தித்தார் பகைக ளூர. (உங)

செழுமைசேர் புரத்தி ருந்து சென்னிமண் டலமே யன்றி
யழகுறு நிலைமை மாற னளவின்மண் டலங்கள் கொண்டு
விழுமிய யானை முன்னு வெம்பெருந் தானை யாண்டு
தொழுபுவி யடைவிற் காத்துத் துயரொழிந் தூழி வாழ்ந்தான்.(உச)

ஆகத்திருவிருத்தம் - கசஂஂ.

நெ0.—உலவாக்கோட்டைவைத்த திருவிளையாடல்.

மூதுரை வாணர் போற்று மதுரையம் பதியின் முன்னங்
தூய்தகு குணத்தான் மிக்க சூத்திர குலத்தோர் பத்தன்
நீதிலா வுழவான் மல்குஞ் செல்வத்தான் மிகவு நீடிக்
காதல்கூர் நினைவின் மேவுங் காதலி யோடும் வாழ்ந்தான். (க)

பூதிசா தனங்கண் டாலங் கியாவரா யினும்பொ ருந்திப்
பாதநே ரிறைஞ்சி யில்லுட் பரிவொடுங் கொண்டு புக்குத்
தீதிலா சனத்தி ருத்திச் சிறந்தசே வடிவி ளக்கிக்
கோதைதூ பாதி மற்றுங் கொடுத்தருச் சனைகள் செய்து. (உ)

முருகெழு வமைத்த வன்ன முறைமையிற் படைத்து நான்கு
மருவிய விதத்தி னூறு சுவையினுண் மகிழ்ச்சி கூரக்
கருதிநின் றமுது செய்வித் தவரவர் கசிந்து வைத்த
பரிகல சேட முண்டு வாழ்வன் பத்தி கூர்ந்து. (ங)

உங. என்று வந்தித்தான் - எந்த நாள்வந்தித்தானே.

(நெ0)

க. தூய்தகு-தூய்மை பொருந்திய. ஒருமனமுடையாளென்பார் 'காதல் கூர் நினைவின் மேவுங் காதலி' என்றார்; "காதலிருவர் கருத்தொருமித் தாதாவு, பட்டதே யின்பம்" என்றார் ஔவையாரும்.

உ. பூதிசாதனம்-விபூதியும் உருத்திராக்கமும். கோதை-மாலை. [படும்.

ங. உணவு: உண்பன தின்பன நக்குவன பருகுவன என நான்குவகைப்

(பி - ம்.) [1]'அமைச்சர்முற்றும்' [2]'னென்றும'

உருத்தகு மனைவி யோடு மொருவழிப் பட்ட நெஞ்ச
னிரைத் [1]தெழு தொண்டர் கொண்ட நினைவினிற் பூசை செய்யுஞ்
சரித்திரங் கண்டு நாளுஞ் சம்புவுங் கருணைகூர்ந்து
திருத்தகு மங்க யற்கட் டேமொழிக் கருளிச் [2]செய்வான். (ச)

இங்கெறி [3]யொழுகுவோனல் குரவினு மிகரிமை கூர்ந்து
மன்னுமிச் செய்தி செய்ய [4]வல்லனென் றறிவித் தற்கே
நன்னெறிச் செல்வ மெல்லா நாடொறு மாற்றி மற்றும்
பன்னெறி விளைவுங் குன்றப் பண்ணின னெல்லாம் வல்லான். (ரு)

பல்பெருஞ் செல்வ மெல்லாஞ் சுருங்கவும் பத்தி மிக்கோன்
சொல்லரும் பெரிய நெஞ்சஞ் சுருங்கிடான் பெருங்க டன்கள்
செல்வர்பால் வருபோ கத்துத் தருகுவ லென்று சென்று
நல்லன சொல்லி வாங்கி நாடொறும் பூசை செய்தான். (சு)

வீறு[5]சான் மழைம றுத்து விளைதலில் லாமை யாலே
மாறரும் விருப்பத் தோடும் வாங்கிய பெருங்க டன்கள்
கூறிய நாட்க டம்மிற் கொடாதது கண்டி யாரும்
பேறிலை யென்ரு நெண்ணிக் கொடுத்திலர் கடன்கள் பின்னர். (எ)

ளக்கமில் லாதோன் மண்ணிற் கடன்கொடா தகுகண் டாரு
ளத்துறு தயரத் தோடுங் கடன்றரு வாரை யோங்கல்
வளைத்தவன் காட்டி னானேற் காண்கின்றே மென்று வாடி
யிளைத்தயர் மனைவியோடு மெண்ணியா வயத்த டைந்தான். (அ)

வே று.

ஆத ரத்தொடு பேணி நின்னடி யாரை முன்னையில் வித்தபின்
கோதி லாதவர் வைத்த சேடம குந்தி யோர்குறை வின்றியெப்
போது நின்னரு ணோக்கி நான்மூனி ருந்த னன்புகழ் குன்றவே
வாதை யேதரு [6]மாய மாமிடி வந்த டைந்தத றிந்திலேன். (கூ)

வே று.

நினைப்பினிங் கிறுத்தற் கொண்ணு நீள்கடன் கொண்டு பின்னு
மனைக்கணு லாறு திங்கண் மன்னனி னருளி னாலே
யனைத்துப சாரத் தோடு மமுது செய் வித்தேன் வையத்
தினிக்கடன் றருவா ரில்லை யிளைத்தனன் காட்டி டின்றே. (கo)

இ. செய்தி - செய்கை. ஈ. வருபோகத்து - பின்உண்டாகும் வினையில்.

எ. வீறு - வேறென்றற்கில்லா அழகு. பேறு - இலாபம்.

அ. களக்கம் - களங்கம், குற்றம்; கலக்கமுமாம். ஓங்கல் - மேருமலை.

கூ. வாதை - துன்பம்.

கo. இறுத்தற்கு - கொடுத்தற்கு. இன்றுகாட்டிடு.

(பி - ம்.) 1'உறத்' 2'செய்தான்' 3'ஒழுகுவோர்' 4'வல்லரென்று' 5'சார்' 6'மாயையாமிடி'

கடந்தரு வாரை யொல்லைக் காட்டிடா யாயி னிங்கே
மடிந்திட லல்லான் மற்றேர் கதியில்லை யென்று மண்ணிற்
படிந்துவீழ்ந் தழுது விம்மிப் பழிச்சுதல் கண்டி ரங்கி
யிடும்பை[1]கீக் கிடுவா னங்க ணிலங்கிய துயர்ந்த வாக்கு. (கக)

வேறு.

தொல்லுலகி னம்மடியார்க் கன்பு செய்த சூத்திரசூ ளாமணிகே
ணின்னைப் போனின், மெல்லியலா டன்னைப்போற் கண்டே மில்லை
மெல்லியதா யதுசோறு பொலிய வற்றுய்க், கல்லிலதாய் வெள்ளிய
தாய்ப் புதிதாய் நல்ல கந்தமலி பந்தமுறு மரிசிக் கோட்டை, நல்ல
வர்க ளதிசயிப்ப நின்னிடத்து நணுகுவித்தே நல்குரவுநீங்க வென்றே.

அப்பெருமை தருமூலவாக் கோட்டை தன்னை யருச்சனைசெய்
தரிவையொடு நினக்கு வேண்டு, மொப்பருந்தண் டலமெடித்தொண்
டொண்டர்க் கெல்லா மூட்டுவித்து நயந்தபொருள் விற்றுண் டாக்
கித், தப்பறமற் றுயர்ந்தபெருந் தருமஞ் செய்து தணியாத பெருங்க
டன்க டணித்து வாடா, திப்படியில் வேதஞ்சொ லியாண்டும் வாழ்ந்
தாண் டிருந்துவா நம்மூலகத் தெவரும் போற்ற. (கஉ)

வேறு.

அவ்வுரை கேளா மூன்ன ராதரங் கூர்ந்து வாழ்ந்து
கொவ்வையங் கனிவாய் மாதுங் கும்பிடு மன்பன் முனு
மெய்விதிர்ப் போடு நின்று மிகவதி சயித்துச் செங்கை
நவ்விய னருளை வாழ்த்தி நடமொடு தொழுது போந்தார். (கச)

[2] வணங்கியே தொண்டர் துன்று மனைபுகா நேர்தாங் கண்டாங்
கணைந்தபே ராவத் தோடு மதிசயித் துள்ள ரங்கிற்
பணிந்துய ராசனத்துப் பற்றிவைத் தருச்சித் துள்ளத்
துணர்ந்துசெல் வத்தின் வாழ்ந்தா ருரைத்தவா றடைவிற்செய்து. ()

கக. இடும்பை - துன்பம். உயர்ந்தவாக்கு - அசரீரி.

கஉ. சூளாமணி - முடிமணி; 'சூத்திரர் தலைவன்' என்பர் பின்னும்; கள; சூத்திர சூளாமணி என்பதைப் பெயராகவே கொண்டனர், பயகராமாலை யுரையாசிரியர். வற்றுய் - வல்லமையுடையதாய். கந்தம் - மணம்.

கங. உலவாக்கோட்டை - எடுக்க எடுக்கக் குறையாத அரிசிக் கோட்டை. தண்டுலம்-அரிசி. விற்றுப் பொருளையுண்டாக்கி யென்க. வேதஞ்சொல் யாண்டும்-நூறுவருடமும்; "வேதநூற் பிராயநூறு" (தீவ்ய. திருமாலை, கூ) என்ப தனாலுமுணர்க.

கச. மெய்விதிர்ப்பு - உடம்பு நடுக்கம். செங்கை நவ்வியன் - செவ்விய திருக்கரத்தில் மானையணிந்தவர்.

கரு. புகா - புகுந்து. உள் அரங்கில் - அரங்குள்ளில்; என்றது அறை யின் உள்ளே உள்ள மற்றேர் அறையை; "எழினிவாங்கிய வீரறைப் பள்ளி" (முல்லைப்பாட்டு, கச.)

(பி - ம்.) [1]'நீங்கிடுவான்' [2]'மணக்கமழ்'

மன்னிய செய்தி கேட்ட மதுரையம் பதியோ ரெல்லாங்
தன்னிய செல்வ மீந்த தொலைவிலாக் கோட்டை கண்டு
முன்னுற வதிச யித்து வாழ்த்திஞர் முற்றும் வல்ல
சென்றெறிச் சொக்க னல்லாற் றெய்வம்வே றுண்டோ வென்றே. ()

சூத்திரர் தலைவன் வேதஞ் சொல்லுங்கல் லியாண்டும் புக்குக்
கோத்திர மனைவி யோடுங் குவலயத் தெவருங் காணப்
பார்த்திப ரதிச யிப்பப் பல்பெருஞ் சிறப்பி னோங்கி
யேத்தருஞ் சிவலோ கத்தி லேறினு னிமையோ ரேத்த. (கஎ)

பத்தியான் மிக்க வேளாண் டலைவன்றன் பத்தி காண்பா
னத்துயர் மிடியை யேவி யம்மிடி யினுமை வன்றன்
சத்திய பத்தி கண்டு தண்டில வுலவாக் கோட்டை
வைத்தவ னெவன வன்றன் மலரடி வாழ்த்தல் செய்வாம். (கஅ)

ஆகத்திருவிருத்தம் - கசகஅ.

நக.—மூர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடல்.*

வளமை மீடிய மதுரையின் முன்னொரு கால
மளவி லன்புடை மூர்த்தியென் றறையுமோர் வணிகர்
தளர்வில் சுந்தரற் கானது சந்தன மென்றே
யுளவி ருப்பொடு சாத்துவா ரொழிவற நாளும். (க)

தன்னு சேனையிற் றுளங்கிய வொருகரு நாட
மன்ன னன்னாள் வந்தருட் டென்னனை யோட்டிக்
கன்னி மண்டலங் கொண்டமண் கையர்கை விழுந்து
முன்ன மீடிய வைதிக முறையையு மொழித்தான். (உ)

கஎ. மனைவியோடும் சிவலோகத்தில் ஏறினனென்க.

(நக)

உ. கருநாட மன்னன் - கருநாடக தேசத்தரசன்; சுசு: உ; "வடுகக்கரு நாடர்காவன், மானப் படைமன்னன்" (பெரிய. மூர்த்தி. கக.) கையர் - கீழ் மக்கள்.

* "படைநான் குடன்று பஞ்சவற் றுரந்தி, மதுரை வவ்விய கருநட வேந்த, னருகர்ச் சார்ந்துநின் றருட்பணி யடைப்ப, மற்றவன் றன்னை யெடுக்கு யிலில் வருத்தி, யிறையவன் குலத்து முறைமையின் மையினும், குருதித் தாரை கல்லொடு பிறங்க, மெய்யணி யளறுக் கைமுழக் தேய்த்த, போன் புருவப் பசுக்கா வலனே, யுலகினிற் றமது முக்குறி யாக, மணிமுடி வேணியு மூருத்திரக் கலனு, நிலவுமிழ் புண்ணியப் பானிறச் சாத்தும், மணிவித் தருள் கொடுத் தாச ஞக்கி, யமோ லகத்தி லெடுகொள் புரக்க, வைபக மளித்த மணி யொளிக் கடவுள்" (கல். நிஎ.)

சாற்று மீசனே யல்லது சமணரை வணிகர்
போற்றி டாதது கண்டுதன் புண்ணிய முடிவால்
வேற்று ளோர்களுஞ் சந்தனம் விற்றிடா வாறு
மாற்றி முன்னது வரும்பெருந் துறைகளு மடைத்தான். (கூ)

மிறைகள் செய்யவும் விடாதவ ராங்கது கண்டு
பறித லுச்சமண் பாதகன் மாண்டியர் வேத
நெறிவி ளங்குவ தென்றுகொ லென்றுணர்ந் தொருநாள்
வெறிகொள் சந்தனந் தேடினர் பகலெலா மெலிந்து. (சு)

ஏங்கி மூன்கிடை யாதது கண்டிருட் போதிற்
றூங்க ரும்பயத் [1]தோடிறை கோயிலுட் சார்ந்து
தேங்கொள் சந்தன மூட்டிய தாயினுந் தேய்க்கு
மோங்கு செங்கையு மூட்டுமோ வென்றுறத் தேய்த்தார். (ரு)

வட்டப் பாறையின் முழங்கையை மணங்கொள்சந் தனமா
முட்டுப் பாடற மூளையுஞ் சோரியுஞ் சோர
விட்டுத் தோறசை தேய்வுறத் தேய்க்குமுன் [2]விரைவிற்
கிட்டிச் சார்வுறக் கிளர்ந்தது பரன்றிரு வாக்கு. (சூ)

வேறு.

அரிய [3]சந் தனம ணிந்தே மையனே விடுவி டன்பின்
பெருமை [4]கண் டனஞ்ச லஞ்செய் பேரமண் குண்டர் மன்ன
னிரவிடை மாள்வன் வேந்தா [5]யிவ்வுல கடைவிற் காத்து
மருவிய பணியுஞ் செய்து வாமகிழ்ந் தென்று கொண்டே. (எ)

இங்நெறி யாகா யத்தி லெழுந்திடா முன்ன ரென்பு
முன்னுறு நரம்பு மூனுஞ் [6]சொரிந்தபுண் ணூறி மேனி
மன்னெளி பெற்ற ரேவு மண்மழை தன்னு லில்லுண்
[7]மினனுயக் கங்குற் போதே மாண்டனன் வடுக வேந்தன். (அ)

மற்றது கண்ட மைச்சர் வள்ளலே வியந்து பாண்டிக்
கொற்றவன் வழியோ ரில்லை யென்செய்கேங் கோவி லாமை

சு. மிறை - கடுக்கம்; "அத்தமிலவா மிறை செய்யவும்" (பெரிய. மூர்த்தி. கடு.) பறிதலை-உரோமங்களைப்பறித்துக் கொள்ளும் தலை; ஷெ புராணம், கஅ - ஆம் திருவிருத்தத்தைப்பார்க்க.

டு. "கட்டம் புரிவா ரணிநற்றிரு மெய்ப்பூச் சின்று,மூட்டும் பரிசாயி னத் தேய்க் குங்கை முட்டாது" என்பது ஷெ புராணம், உ0.

சு. வட்டப்பாறை - சந்தனக்கல்; "வட்டத்திகழ்பா றையின்வைத்து முழங்கை தேய்த்தார்" என்பது ஷெ புராணம், உ0.

எ. சலம் - துன்பம்; என்று கொண்டு இளர்ந்ததென முன்னே கூட்டுக; ஷெ புராணம், உஉ-ஆம் திருவிருத்தத்தைப் பார்க்க.

(பி - ம்.) 1'தோடுகற்' 2'விசையிற்' 3'சந்தணிந்தேமஞ்சேலியனே' 4'கண் டஞ்சலஞ்சல்' 5'இலகுலகு' 6'சேர்த்து' 7'மன்னும்'

யுற்றதொன் றல்ல வென்று புலருமுன் னேடைக் குன்றை
விற்றரு கண்ணைக் கட்டி விட்டனர் பூசித் தாங்கு. (சூ)

பாய்விடை யிறைவன் சொன்ன பரிதியை நினைந்து [1]கொண்டு
கோயிலின் பாங்கர் நின்ற குணப்பெருங் குன்றைத் தாழ்ந்து
போயுல கெங்குஞ் சூழ்ந்து புரவலற் றேடி [2]மீண்ட
காய்தழ லுமிழ்கட் குன்றங் கண்டிகைக் கொண்ட தன்றே. (கo)

பிடர்மிசை யெடுத்து வைத்துப் பிறங்கமுற் செல்லக் கண்ட
[3] நடமலி யமைச்சர் முன்ன நகர்வலங் கொண்டி ழிச்சி
மூடிபுனை மண்ட பத்து முழவொடு புகுந்தி யாரு
மடிதொழு தார்க ளிங்க வரிகொளா சனத்து வைத்து. (கக)

தடமணிக் குடம்பூ ரித்துத் தந்திர விதியின் முற்றக்
கடவபி டேகஞ் செய்வா னணைவது கண்டு மூர்த்தி
மூடிசடை முடிபூ [4]ணென்னின் முக்கணன் சாத னங்கள்
சுடரபி டேக நீற்றுத் தூளன மல்லா லுண்டோ. (கஉ)

வன்சம ணிருள்விட் டேக வைதிகத் தீப மேற்றி
யின்பர சாள்வ லென்ன வியைந்தியா வருமுன் சொன்ன
வன்புறு பருதி மூன்றுஞ் செய்தருச் சித்தார் போற்றி
மூன்பருள் சுரந்த சொக்க [5]மூர்த்தியின் மூர்த்தி வேந்தை. (கங)

சடைமுடி [6]முடியா வந்து தமக்கருள் சுரந்த செம்பொற்
சுடர்முடிச் சொக்க வேந்தைத் தொழு[7]தெழின் மதவே ழத்துத்
தடமுழ வொலிப்பக் கற்றைச் சாமரை யிரட்டக் கொற்றக்
குடை[8]நிழ னிழற்றப் போந்து குவலய நெறியிற் காத்தார். (கச)

மம்மர்சேர் சமணர்க் காய்ந்து வைதிக நெறிவி ளக்கி
வெம்மைசேர் தெவ்வை மாதர் விருப்பையும் புலனை வென்று
செம்மையி னூழி வாழ்ந்து சிவனுல கத்த டைந்த
மும்மையா லுலகை யாண்ட மூர்த்தியை வாழ்த்தல் செய்வாம். (கரு)

ஆகத்திருவிருத்தம் - கசஙஞ.

கூ. ஓடைக்குன்று - யானை. வில் - ஒளி.

கo. குணப்பெருங்குன்றை - மூர்த்தி காயனரை.

கக. இழிச்சி - இறக்கி யருளச்செய்து; "வெங்கட் களிற்றின் மிசை நின்று மிழிச்சி" என்பது பெரிய. மூர்த்தி. ஙஎ.

கஉ. தந்திரவிதியின் - தூல வ்தியால். முடிசடை முடி - கிரீடம் சடை முடியாக; ஷி புராணம் சக - ஆம் திருவிருத்தத்தைப் பார்க்க.

கங. யாவருமியைத்து. மூன்று - சடைமுடி, உருத்திராக்கம், திருநீறு.

கரு. "மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்" என்பது திருத் தொண்டத்தொகை, ங.

(பி-ம்.) 1'சென்று' 2'போக்து' 3'நடலியவமைச்சர்முன்னு' 4'எண்ணின்' 5 'மூர்த்தியை லியத்தவேந்தை' 6'யாக' 7'எழு' 8'னிநிமற்ற'

திரு.—காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடல்.

கற்பமார் மூன்றோர் நாளிற் காரியார் நாரி யாரென்
றற்புதப் புலவர் நீதி யரசனைக் கவிதை பாடி
யுற்றபல் சிறப்பி னோடு மூயர்வட நாட்டினின்றும்
வெற்றியி னணைந்தார் கொற்ற வியன்றமிழ் மதுரை நோக்கி. (க)

வருபவர் நெறிம யங்கி வனத்திடைப் புகுந்து சாலத்
தெருமர வுறுங்காற் கண்டு செந்தமிழ்க் கினிய சொக்க
னிரைதரு காலி மேய்த்தோ ரிடையனாய் நேயங் கூர்ந்து
பொருவரும் புலவர் காணத் தோன்றினன் புகழை வேட்டு. (உ)

கனகவொண் குழைசேர் காதிற் களங்கனிக் கொத்த ணிந்து
பூனையும்வெண் பாசி பூண்டு பூதிமெய் பூசி யாவு
மனமுரு கிடவாய் வைத்து வரைநெடுங் குழலு மூதித்
தனிநெடுந் தண்டு மூன்றி னின்றனன் முளுந் தெற்றி. (ங)

ஆங்கவர் காணு மூன்ன ரதிசயித் தச்ச நீங்கி
யோங்கிய மதுரை யூர்க்குப் போம்வழி யுரைத்தி யென்னப்
பாங்குடைப் புலவீர் நீங்கள் பல்சிறப் பொடுமை டைந்தீ
ரீங்குரை யீர்று மக்குக் காரிய [1]மென்கொ லென்றான். (ச)

என்றுமன் றடி சொல்ல வேடநீ யென்ன சொன்னை
யொன்றிய காரி யந்தா னுன்றனக் குரைக்க வற்றே
வன்றுகாண் பெரிய வெங்கட் கதர்சொலென் றடரக் கண்டு
நின்றவ னுவ னோத்து நெறிசொலே னென்று நக்கான். (ஞ)

வேறு.

மென்புலவ ரதுகண்டு வழிவிருப்பான் மீனவனே
யின்புறுநற் கவிபாடி வருகின்றே மெனக்கேட்டு
வன்புலவ ரிருக்கின்ற விடமஃதான் மதியாது
நன்கவிதை சொன்னேமென் றுரைத்தீரே நாணுது. (சு)

உ. காலி - பசுக்கள்.

ங. களங்கனிக் கொத்து - களாப்பழக்கொத்து. வெண்பாசி - ஒருவகை மணி. பூதி - விபூதி. யாவும் - எல்லாம்; 'ஆவும்' எனப்பிரிப்பினும் பொருந்தும்; ஆ - பசு. வரைநெடுங் குழல் - வேய்க்குழல்; வரை - மூங்கில். தெற்றி-பின்னி.

ஞ. மன்றடி யென்பது சிலேடை; சபையில் ஆடுபவனென்றும், எருமன்றத்தில் ஆடுபவனென்றும் பொருள்படும்; பசுமந்தையை எருமன்றமென்றல் மரபு. அதற்சொல்-வழியைச் சொல். நாவனைத்து-சிற்க்கையொல்லையைச் செய்து; நின்றவன் ஆவனைத்தெனப்பிரிப்பினும் பொருந்தும்.

சு. வன்புலவர் - சங்கப்புலவர். மதியாது நாணது உரைத்தீரே.

(பி - ம்.) 1'ஏதோ'

அளந்தபுல வீரான தாகவவற் றொருகவிதை
விளம்பிடுமி னெனவிடையன் கொச்சையல னதிவிடமன்
றுளங்கியகங் கவிதைசொலு லொழியவழி சொல்லானென்
றுளம்படுமோர் [1]கவிபகர்ந்தா ருயர்புலவர் தாழாது. (எ)

அக்கவிதை கேட்டலுமே யழகியது நுமதென்று
சொக்கனுமங் கணரிட்டுத் துடைதட்டிச் சிரித்தருளி
யிக்கவிதை யோகவின்றீ ரேழையீர் யாரறியார்
மிக்கவிது தினைமாடு மேய்ப்பவர்வாய்க் [2]கேட்டிடுமின். (அ)

கேட்டிடுமி னெனவடைவிற் கிளர்வுறவெங் கணுங்கிறைந்த
காட்டிடையன் பாட்டனைத்துங் கற்றுரைப்ப மற்றவரு
நாட்டிடைய னல்லனிவ ஞர்கொலென நனிநாணி
மீட்டுமையா ரொன்றையுமுள் வெருவுற்ரு ருடல்வியர்த்தார். (கூ)

நல்லவடி வனுமாகி யிருக்கின்ரு ரான்மறைகள்
சொல்லரியான் சொல்லினல்லான் [3]மற்றொருவர் சொல்வாரில்
வல்லவுனக் கிதுவந்த வாறுரைப்பை யேன்மன்னன்
செல்வமுறத் தந்தவெலாந் தருகின்றே மெனச்செப்ப. (கo)

மட்டவிழ்பூம் பொழில்புடைசூழ் மாமதுரை யூர்ப்பொதுவன்
சிட்டர்புகழ் தருமண்டன் சிற்றிடைச்சி மணவாளன்
விட்டபசு மூட்டாமன் மேய்த்தடக்கிப் பாசத்தாற்
கட்டிவிடு மன்ரூடி கான்மாறி யாஞவேன். (கக)

பெரும்பொருளி ஞசையிலை பெயர்பெரிய சொக்கக்கோன்
[4] பரிந்திடுநுங் கவிதைகளிற் பாதி[5]பகுந் தின்றென்மேற்
றிருந்தநவின் றிடுவீரேற் சேர்ந்தவழி யானுமக்குப்
பொருந்தவுரை செய்வலெனப் புலவர்களு மியைந்தனரால். (கஉ)

எ. கொச்சையலன் - இழிந்தவனல்லன்; "அறக்கிழவன் மனிதன்விர கில்லாக் கொச்சை" என்பது ஆனந்தலகரி, கூ. விடமன் - விஷமன்.

கூ. ஒன்றையு மீட்டுரையார். கo. இல் - இல்லை.

கக. ஊர் பொதுவன் - ஊர்ப்பொதுவிலுள்ளவன்; பொது - சபை; பொதுவன்-இடையன். அண்டன்-தேவன், இடையன். சித்திடைச்சி - சிறிய இடையையுடைய உமாதேவியார், சிறிய இடைச்சாதிப் பெண். பசு-உயிர்கள், பசுக்கள். முட்டாமல் - குறையாமல், முட்டுதல் செய்யாமல். பாசம் - ஆணவ முதலிய மலங்கள், கயிறு. மன்ரூடி - சடையில் ஆடுபவன், எருமன்றத்திலாடு பவன். கால்மாறி- கால்மாறி ஆடுபவர், கால்மாறிநிற்கும் இடையன். இச்செய்யுளும் "பாச நீக்கிமூ வகைப்ப சுக்கனை, மாசின் முத்தியாம் வனத்தின் மேய்த்திடு, மீசன் மினனைகே ரிடைச்சி காதல, ஞசில் பால்வணத் தண்டர் நாதனே" (திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி, எக) என்பதும் ஒருவாறு ஒத்திருத்தல் காண்க.

கஉ. கோன் - அரசன், இடையன். பகுந்து - பங்கிட்டு.

(பி - ம்.) 1'கவிதைசொல்வார்' 2'கேட்டருளீர்' 3'மற்றொருத்தர்' 4'பரிக்குள' 5'பகுத்து'

ஆங்கவர்க ளியையாமு னதர்காட்டி யொளித்தருள
வீங்கிவனும் பாங்கருள்சே ரியற்சிவனே யெனத்தெளிந்து
தேங்குபுகழ் தருமதுரை சேர்ந்துயரா லயத்தணைந்து
தாங்கருமன் பொடுபகுந்து சாத்தினுர் தமிழ்மாலை. (கஊ)

சாத்திய[1]நற் றமிழ்கொண்டு தமிழ்ச்சொக்கன் புயிபோற்றும்
பார்த்திவரே யெனப்பாத்து விடைகொடுப்பப் பாவலர்கள்
சேர்த்ததமிழ்ப் பாதிகொடு தென்னனையுங் கண்டறிஞ
ரேத்துசிறப் பொடுங்களித்துப் போயினர்த மியனுட்டி. (கசு)

ஆகத்திருவிருத்தம் - கசசஎ.

நிகூ.—புலிமுலை புல்வாய்க்கருளின திருவிளையாடல்.*

தலமிலங்க மூன்ஞெருகாற் றண்கடம்ப வனத்தின்கட்
புலிநெருங்கி வரும்புல்வாய் பொலிவின்றி [2]யுலவுங்காற்
பலமிலங்கோர் நிலைப்புல்வாய் பயந்தபுனிற் றிளமறியை
நிலைதுவன்று மூதுதூற்றின் புடையொதுக்கி நீர்வேட்டு. (க)

போயெங்கும் புக்குழன்று புற்றீந்த கோடையின்கண்
வாயுலர்ந்தோர் வாவியின்கண் வந்துபுனல் பருகுங்கா
னேயமிலா வொருவேட னீங்காம லொளிநிற்பான்
காய்பசியா லதுகண்டு களிகொண்டு படவெய்தான். (உ)

கணைபடுங்கான் மறியைநினைந் தழுதுகனி கசிந்துவிழுந்
திணையிலுயிர் நீக்கியபின் யாவுக்குந் தாயாகித்
தணிவறவெங் கணுநிற்பான் றரியாது பிரியாத
வணியதொரு புலியைமுலை யூட்டென்ன வருள்சுரந்தான். (கூ)

கக. இயற்சிவன் - சுத்தரேசர், இலக்கணத்தையுடையசிவன்; இயல் - அழகு, இலக்கணம்.

(நிகூ.)

க. புல்வாய் - ஒருவகைமான். ஓர்நிலை - ஓரிடத்தில். பயந்த - பெற்ற. புனிற்றிளமறியை - ஈன்ற அணிமையையுடைய கன்றை. [இறக்க.

உ. புல் நீந்த - புற்கள் கரிந்த. ஒளி நிற்பான் - ஒளித்துநிற்பவன். பட - கூ. பிரியாத - பகைமையினின்றும் நீங்காத.

* "புலிமூலை புல்வாய்க் கருளினை போற்றி" (திருவா. போற்றி, உஎ); "தழல்விழிப் பேழ்வாய்த் தரக்கின் முளிமூலை, பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட, வருணிறை பெருமான்" (கலி. சூஉ); "புல்வாய் புலியின் முலையுண்ணும்" (திருநாட்டு. கூ); "பொன்னெயிற் கடம்ப வனத்தபுல் வாய்க்குப் புலி முலை யளித்த புண்ணியம் போல்" (திருகாளத்தி. பரந்து. நிகூ); "கொல் வாய்ப் புலிமுலை புல்வாய்க் கூதவிய, தொல்வினை யென்ன" (மதுரை மும் மணிகோவை, உஅ.)

(பி - ம்.) [1]'கற்கவிதை' [2]'யுலர்ந்ததாற்', 'உலவியதாற்' [3]'இலாதொரு'

பாய்புலியு மிரங்கிமனஞ் சுரந்துமுலை பாலளிப்பா
னேயமொடு வரக்கண்டு வால்குழைத்து நேர்வந்து
தாய்வரவு காணுமற் றளர்ந்தமறி பயந்தணிந்து
தூயமுலைப் பாலுண்டு துள்ளிவிளை யாடியதால். (சு)

வே று.

மலைய ஞணி முன்னர் வரும்விதி மாற்றல் கண்டு
சிலைமலை வில்லா னல்ல தியார்வல்லா ரென்று சென்று
தலையிலுல் வணங்கி வாழ்த்தச் சசிபதி யதிச யிப்பப்
புலிமுலை புல்வா யுண்டு பொலிவுற வளரு நாளில். (ரு)

பொருளினு மொழுக்கத் தானும் பொருவரும் போதத் தானு
மருளினுஞ் சிறந்து நீடோ ரருங்குல வணிகன் பொங்கர்
மருமலி மலர்த்த டஞ்சூழ் மாமண லூரி னின்றுங்
கருதிய பொருள்கண் மேலுந் தேடிவான் கருதிப் போனான். (சூ)

பச்சிம திசையை நோக்கிப் பரிவொடும் போகி னன்கு
நச்சின தேயம் புக்கு நன்பொரு டேடி மீண்டாங்
கிச்சையி னடந்து மெல்ல விலங்குதன் பதியை நோக்கி
[1]யச்சமற் றெல்லு மல்லு மதரிடை வருத லுற்றான். (எ)

வே று.

வழிவசத்தினி ருங்கடம்ப[2]வ னத்துவந்துழி வணிகனும்
பொழுதுபுக்கது கண்டுவெம்பியு ளம்புலம்புறு காலையி [னே
லெழின்மிகுத்ததொ ரொலியொலித்திட வேதம்விட்டதன் வழியி
ரொழுகவற்புத மாவிருப்பதொ ருத்தமப்பதி கண்டனன். (அ)

கண்டவங்கர் தன்னுளன்பொடி கண்டனன்களி றெட்டும்வாழ்
பண்டையாயத லத்தையும்பழு தொன்றிலான்படி மத்தையு
மண்டர்நாயக தொண்டர்நாதவெ னத்துதித்தரு ளாலருந்
தொண்டுசெய்தவ ணங்கியங்கொரி டத்தமர்ந்து துயின்றனன். (கூ)

இ. விதிமாற்றல் - புலி மான்கன்றுக்குப் பாலளிக்கச் செய்தல். சிவபெரு மானுடைய ஆச்சரிய சக்தியைப் பிரமதேவர் வியந்ததாக இங்கே கூறியிருத் தல் போல, சுஎ: கறி - ஆம் செய்யுளிலும், சுஉ:கள - ஆம்செய்யுளிலும் கூறி யிருத்தல்காண்க. சிலைமலைவில்லான் - மலைஇன்ற வில்லாக மேருவையுடைய வன்; சிலை - மலை. சசிபதி - இந்திரன்.

சு. சிறந்துநீடிய. மணலூர்: பாண்டியர்களின் பழைய இராசதானி; மணற்புரமெனவும்வழங்கும்; மதுரைக்குக்கிழக்கே யுள்ளது. மேலும் - பின் னும்; பொருள்களைப் பின்னுந்தேட.

எ. பச்சிமதிசை - மேற்றிசை. எல்லும் அல்லும் - பகலும் இரவும்.

கூ. படிமம் - திருவுருவம். தலத்தையும் படிமத்தையும் கண்டனன்.

(பி - ம்.) [1]'அச்சமுற்று' [2]'வனத்தின்வந்து'

துயில்கொளுந்தனி வணிகனுஞ்செறி தொலைவிலாவிரு டொலையவே
வெயில்விரிந்தபி னணுகரும்பெரு வனமதாகவெ ருண்டெழுந்
தெயிலிலங்கிய கோயில்கண்டிதி கைத்திதென்கொலெ னத்தெருண்
டயிலிலங்கும ணற்புரத்தர சற்குவந்தறி வித்தனன். (கo)

வே று.

மன்னிய வமைச்ச ரோடும் வணிகன்முன் னவின்ற வெல்லா
முன்னுற நவின்று காண்பா ஞசையான் முடுகி யாங்கட்
டென்னவ னடைந்தா னென்றுஞ் சித்திரைச் சித்தி ரைக்குப்
பொன்னகர் மகவான் வந்து போற்றுமா நகரி தன்னுள். (கக)

வே று.

[1]குணமோ டடைந்திந் திரன்பரவுங் குளிர்ந்த கடம்ப வனத்தினையு
மணிசே ரந்த வனத்திலங்கு மழகா ருயரா லயத்தினையுங்
துணைசே ரந்த வாலயத்து ளிருக்குஞ் சொக்க நாதனையும்
[2]பணிகோ யிற்றென் கீழ்பாற்பொற் பதுமத்[3]தினையுங் கண்டிறைஞ்சி.

மற்றும் புதுமை [4]பலகண்டு வருவோன் சொக்கன் றிருவருளாற்
புற்றின் புல்வாய் புலிமுலைப்பா லுண்டு பொருந்தி விளையாடல்
கொற்றந் தருநெஞ் சுறக்கண்டு விசேட நிலமீ தெனக்[5]குறித்துச்
சற்றுந் தாழா தித்தலத்தி லிருப்ப லென்றுன் சயங்கூர. (கஙு)

இந்தத் தெய்வப் பதிக்கெல்லை யாதோ வென்று மயக்குற்றுச்
சிந்தைக் கினிமை தரும்பரம சிவனை யடைந்து துதிசெய்ய
மூன்தைக் கியைந்த மயனூலின் முறையே சித்த ருருக்கொள்ளா
வந்திப் பிறையோ னெழுந்தருளி நடந்தா னெல்லை யடைவாக. (கச)

எல்லை நடவா [6]வொளித்தருள வேத்தி யருளை யதிசயித்துத்
தொல்லை மரபின் மணிமாடங் கூட மஞ்ச தோயிஞ்சி
மல்லல் வீதி [7]மடங்கழக மற்றுந் திருத்தி மாறின்றி
[8]நல்ல குடியும் பல்படையு நயப்ப வியப்ப வீற்றிருந்தான். (கடு)

வே று.

செங்கெறித் தானை சூழத் திறைகொணர்ந் தரச ரேத்த
மன்னம ரேசன் சால வாழ்த்திட வேத்தி நாளுங்

கo. மணற்புரம் - மணலூர். அரசன் - பாண்டியன்.

கக. சித்திரைச்சித்திரைக்கு - சித்திரை மாதத்துள்ள சித்திரை நக்ஷத்திரத்தில் (திருவிளை. இந்திரன். கூச); "சித்திரைச் சித்திரைத்தினத்து" (கஃ நாக); "சித்திரைச் சித்திரைத்திங்கள்" (சீலப். நி : கூச.)

கச. மயன்நூல் - சிற்பநூல்களுள் ஒன்று. எல்லை அடைவாகநடந்தான்.

கடு. கழகம் - கல்விச்சாலை. நயப்ப - விரும்ப.

(பி - ம்.) 1'கணமாவிழித்திந்திரன்' 2'பணிசேர் கோயிற்றென்பாற்' 3'தடமும்' 4'கண்டருகு' 5'குறுகி' 6'ஒளித்தலுமே' 7'தடங்கழனி' 8'கல்லபடையும் பலகுடியும்'

கண்ணிமால் காளி யீசன் காக்குமா நகரி தன்னு
ளின்னநீர்ந் திருந்து தென்ன னெண்டிசை விசயஞ் செய்தான்.(கசு)

ஆகத்திருவிருத்தம் - கசசுஉ.

நிச.—சாதாரிபாடின திருவிளையாடல்.*

ஓங்கிய முன்னோர் கால மூயர்விஞ லறிவான் மிக்க
தேங்கமழ் நிம்ப மாலைத் தென்னவ னொருவன் றெண்ணீர்
வாங்கிருங் கடல்சூழ் வைய மதுரையி லிருந்து காப்பப்
பாங்குடன் சிறந்தா னங்கட் பத்திர னென்றோர் பாணன். (க)

கண்ணுத லழக னுக்குங் காவலன் றனக்கு நிக்க
பண்ணியல் பாடி யீசன் பத்தர்கட் கன்பு செய்தாங்
குண்ணெகிழ் நெஞ்சு நீற்றி னொளிதிகழ் மெய்யு மாகி
மண்ணவர் விருப்ப மெய்த வளம்பட வாழு நாளில். (உ)

பலர்புகழ் சென்னி மன்னும் பண்புடை நாட்டி னின்று
மிலகிய பரிசில் வேட்டங் கிசைவல்லா னென்றோர் பாணன்
றலமதி சயிப்ப வந்து தண்டமிழ் மதுரை புக்கு
வலியுடை மன்னற் கண்டு பாடினன் மதுர மாக. (ங)

வே று.

மின்னும் புகழ்க்கு நல்லோனே வீரா கரனே வியனுலகின்
மன்னர் பரவு மன்னவனே மலயா நிலஞ்சேர் நாட்டரசே
முன்னை நெறிநூ லியலிசைகண் முழுது முணர்ந்த பெருமானே
யென்னை யொழிய விசைவல்லா ரில்லை யுலகி லெனவுரைத்தான்.(ச)

பாணன் பகரு மதுகேட்டுப் பழுதில் வழுதி யுளம்பெருக
நாணி யதனைக் காட்டாம னல்ல சொல்லி யணியாடை.
யூணின் பயனு யினவெல்லா மொருங்கே கொடுத்து நாளும்வர
வேணும் பாண போவென்று விடித்தான் விடித்தற் கிடங்கூறி. (ரு)

கசு. கன்னிமால் காளி ஈசன்காக்கு மாநகரி - மதுரை; (திநநகரா. கஉ - கரு; பயன் முதலியன, நி.) ஏத்த வாழ்த்திட இருந்தென்க.

(நிச)

க. நிம்பமாலை - வேப்பமாலை. ச. மலயாநிலம் - தென்றல்.

ரு. நாளும் வரவேணும் - தினந்தோறும் வரவேண்டும்; "வேணுமாகில் வேணும்" (பாரத. சூதுபோர். கசுடி.) விடித்தற்கு - தங்குதற்கு.

* "முரன்றெழு கான முயன்றுவா தியைத்த, வடபுல விஞ்சையன் வை கிடத் தகன்கடைத், தென்றிசைப் பாண னடிமை யானெனப், போகா விறகு டன் றலைக்கடை பொருத்தி,.....சாதாரி, யுலகுயி ருள்ளமு மொன்றுபட் டொடுங்க, விசைவிதி பாடி யிசைப்பதை தாத்த, கூடற் கிறையோன்" (கல். சச.)

பீடொன் றியவன் றனைமதித்துப் போய பின்னர்ப் பிரிவின்றி
[1]மாடு நின்ற மூறைசெய்வோர் தம்மைப் பார்த்து மதியுடைநம்
பாடும் பாண பத்திரனே யழையு மழையும் பரிவினென
வோடுங் தகைமை யவர்விரைவி லோடி யழைப்ப வுடன்வந்தாண். (எ)

பதறு வந்த விசைப்பாணன் பட்டுச் சட்டை யிட்டணியின்
புதுமா மணிகள் கறிவீசப் பொன்மண் டபங்கள் பொலிந்திலங்கு
மதிதோய் கோயி லுட்புக்கு மன்னர் பெருமா டனைக்கண்டு [னவே.
துதிசெய் திறைஞ்சி வாய்புதைத்துச் சொன்ன னழைத்த தென்னை

வளவன் பொன்னி நன்னாட்டில் வரிசை கூர வொருபாண
னளவில் பாணர் புடைசூழ வரிவைக் குழாத்தி னெடும்வந்து
விளரி மூதலா கல்லிசைகண் மேன்மை பயக்கப் பாடியுளங்
களிகொண் டகத்துப் போனதுகொண் டழைத்தே னிக்குக் கடிதுன்னை.

இன்று பூசை குடமுழக்கம் [2]பருந்து மூங்கி லிலைவீழ்ச்சி
யொன்று முயர்சிச் சிலிபறவை யுச்சி மலைநீர் விழுக்காடு
நின்ற வோசை யிசையனைத்து நெறியிற் பாடி கேனென்று
வென்றி கூறி வந்தவனை வெல்ல வலியோ வெனக்கேட்டான். (கூ)

கேட்ட மாறன் றிருமூன்பு கீத நாத னுரைப்பான்வான்
றீட்டும் புகழாய் நீயிருப்பச் சேர்ந்த வடியார்க் குயர்புகொடித்
தேட்டை நீக்கு மிசைச்சொக்க னிருப்பக் கேட்ட தென்னையிசைப்
பாட்டின் றகுதிக் கெனையொப்பப் பாடற்குண்டோ படிமீது. (கo)

அஞ்சே னஞ்சே னெருவர்க்கு மஞ்சா திங்கு வந்தவனை
மிஞ்ச வஞ்சும் படிபாடி வென்றே யோட்டி விடக்கடவேன்
செஞ்சொல் வல்லாய் தோற்றவர்கள் செயுங்கா ரியங்க ளுரையென்னப்
பஞ்ச வனுகன் பரிவெய்தி வியந்தா னுயர்ந்த பணிகல்கி. (கக)

கூ. பீடு ஒன்று இயவன் - பெருமைபொருந்திய வாத்தியத்தையுடையவன்; எழுவாய்.

எ. பதறு - பதறி. பெருமாள் - பெருமையையுடையவன்.

அ. விளரி - ஒருபண்.

கூ. பூசை - பூனை. சிச்சிலி - மீன்குத்திக் குருவி. பறவை-குயில், வண்டு முதலியவை. உச்சிமலை நீர்விழுக்காடு-அருவியின்வீழ்ச்சி; விழுக்காடு-விழுதல். இச்செய்யுளின் பொருளை, "சிச்சிலி பூனை குட முழக்கஞ் செம்மைத்தா,முச்சி மலை நீர்விழுக்கா டொண்பருந்து-பச்சைநிற, வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கா னிழற்பறவை, யேயுங்கா லோசை யியல்பு" (இசைமரபு) என்பதனுலுமுணர்க; "வண்டின் குரியுங் கஞ்ச நாதமுஞ்,சிரல்வா னிலையுங் கழையிலை வீழ்வது,மருவி யோசையு முழவின் முழக்கமும், வலம்புரிச் சத்தமும் வெருவின் புணர்ச்சியு, மின்னுமென் றிசைப்பப் பன்னிய விதியொடு" என்பது கல்லாடம், உரு.

கo. கீதநாதன் - பாணபத்திரர்; "கானகாதா" என்பர்பின்னும்; கஉ. ஏட்டை - இளைப்பு. உண்டோ - யாரேனும் உளரோ.

கக. பணி - ஆபரணம். கஉ. காயகன் - இசையில் வல்லவன்.

(பி - ம்.) 1'பாடுநின்ற' 2'ஈங்குமூங்கிலிலை வீழ்த்தி'

வேறு.

நலமலி கான நாதா நல்லிசை காண்பே ஞாளப்
பொலிவுடை நின்னி டத்துப் போவென விடைகொ டுப்பக்
கலிமுழு துணர்ந்த செல்வக் காயக னினிமை கூர்ந்து
தலையினல் வணங்கி வாழ்த்திப் போயினன் றனது தேத்து. (கஉ)

இத்தக வதியா ராகி யெதிரிலை யென்று பேசி
யொத்திய ருளம் வல்ல பாடிவா னுடனே வந்த
வித்தகப் பாடி வார்கள் வரவர வீதி யேறிச்
சுத்தசா ளரசங் கீதம் பாடிடத் தொடங்கி னார்கள். (கங)

சுந்தர வணிய ணிந்து தொகு[1]முடிச் சுற்றுஞ் சுற்றிச்
சிந்துரப் பொட்டு மிட்டுச் சிறந்தகுப் பாய மிட்டுச்
சந்தன மிட்டு வீணை தண்டியாழ் கையின் வாங்கி
வந்ததந் திரிதி ருத்திப் பாடினர் மயங்க வெங்கும். (கச)

மற்றவர் பாடக் கண்ட பத்திரன் மனங்க லங்கி
யுற்றது நமக்குக் [2]குன்ற வுயர்புடைக் கான நன்னூல்
கற்றிசை வல்லே மல்லேங் காவலன் றிருமு னின்று
சற்றல வுரைத்தே மென்னுய் முடியுமீ தெனத்த ளர்ந்தான். (கரு)

மிஞ்சநெஞ் சஞ்சி னானு மெல்லிசை வல்லா னெல்லார்
நெஞ்சையுங் கடந்த செல்வ னேசர்கட் கென்று நேசன்
குஞ்சரந் தாங்குங் கோயிற் குழகனிங் கிருப்பக் கொன்னே
யஞ்சுவ தென்கொ லுமென் முலவா யரன்பாற் சென்றான். (கசு)

வேண்டிய தடியார்க் கீயு மெய்யனே கருணை வாழ்வே
பாண்டிநன் னுட னேயிப் பகையினை யடிமை வேண்டிப்
பூண்டிது கழித்தல் வேண்டும் புகலிலை யென்று வீழ்ந்து
மாண்டக விறைஞ்சி யேத்திப் போந்தனன் வருத்தத் தோடும். (களி)

கங. சுத்த சாளர சங்கீதம் - சுத்தமும் சாளரமுமாகிய ஸங்கீதம்; சுத்தம் - இயல்பான நடையுள்ள இசை; சாளரம் - வேறேர் இராகத்தின் நடையைத்தழுவி இனிமையை யுண்டாக்கும் இசை; இது சாலகம் எனவும் சாயாலகம் எனவும் வழங்கும்; "சுத்தசா ளரசங் கீதம் பாடுதற்கு" (சo.)

கச. முடிச்சுற்று-தலைச்சாத்து. குப்பாயம் - சட்டை. வீணையையும் தண்டையுடைய யாழையும்; வீணைவேறு, யாழ்வேறு; "குழலும் வீணையும் யாழு மென் றிவையன குழைய" (கம்ப. ஊர்தேடு. சு.) தந்திரி - தந்தி.

கரு. நமக்கு குன்ற உற்றது - நமக்கு ஓரிடையூறு மலையாகவந்துவிட்டது. வல்லேம் அல்லேம் - வல்லமையுடையேம் அல்லேம்.

கசு. "குஞ்சரத்தாங்கு கோயிற் கூத்தன்" (நூஅ: கரு); "குழகனே" (தி.நா. தே.)

களி. பாண்டிநன்னுடனே: "பாண்டிநன் னுடை யான்படை யாட்சிகள் பாடுது மாகாதே" (தி.நவா. திருப்படையாட்சி. க.) இப்பகையினைக் கழித்தல் வேண்டும். இதுபூண்டு. மாண்டக - மாட்சிமை பொருந்த.

(பி - ம்) [1]முடிச்சாத்துஞ்சாத்தி' [2]'நன்ற'

செப்புறு மிவள்ற னன்பைத் திருவுளத் தடைத்தி ரங்கி
மெய்ப்படு மாது மின்றி விரைவொடு மெவருங் காண
வொப்பருந் துயரந் தீர்ப்பா னும்பர்கட் கரச ளைய
வப்பெருந் தலைமை யோனு மடிமையாம் வடிவு கொண்டான். (கஅ)

வே று.

கடிகமழ் சடையையுங் கங்கை யாளையும்
படமுடை யரவையு மொளித்துப் பான்மைசேர்
முடிமிசை நிறைவுற மூடொ ணுதிதோர்
செடிபடுந் துணியுடைச் சீரை சுற்றினன். (கங)

நெற்றியிற் றிலகநீ ரொளிர நீளரா
வெற்றுமென் குண்டல மிலங்கு காதிடைக்
குற்றமில் குறிஞ்சிலிக் கொத்து மன்றியே
துற்றிய [1]விடத்தரங் காயுந் தூக்கினன். (உ0)

தாவில்வெண் கவடியுந் தரித்துத் [2]தாண்மிசைக்
கோவையிற் சதங்கையுங் கோத்துக் கட்டினன்
காவியந் தார்பொலி மெய்யிற் காந்தளம்
[3]பூவினே டாவிரைப் போதுஞ் சூடினன். (உக)

வெறிகமழ் நீறுமெய் பூசி வீதியி
னுறுமவர் தங்களை விலாவொ டிப்பமென்
கறைமலி கச்சையு நழுவக் கட்டியே
குறைவற நீள்பெருங் கொடுக்கு நாற்றினன். (உஉ)

துறைச்சிறு விரன்மரு தோன்றி தோன்றுகிர்
நிறக்கவிட் டஞ்சன மலர்க்க ணிற்கவிட்
டிறைக்கழற் பெருவிர லிருப்பு மோதிர
மிறுக்கியிட் டிரண்டிகை யாண்டி பாடினன். (உங)

கஅ. திருவுளத்தடைத்து - திருவுளங் கொண்டு. இச்செய்யுளின் காலா மடி முரண்.

கங. செடி - நாற்றம்; செடிகளுமாம். துணி - துண்டம். சீரை - கந்தை.

உ0. குறிஞ்சிலி - ஒருவகை மரம். விடத்தரங்காய் - விடத்தேரை மரத்தின் காய்; இம்மரப்பெயர், விடத்தேரை, விடத்தேரெனவும் வழங்கும்.

உஉ. விலாவொடிப்ப - சிரித்தலால் விலாவை ஒடிக்க; "கையர் விலாவொடி யாக்கி ஞரால்" (கூஅ: சஅ.) கறை - அழுக்கு. கொடுக்கு - ஆடைத்தொங்கல்; "பேதித் தறுதற் கச்சைபூணந் ததிலே விட்டான் பெருங்கொடுக்கு" என்றார் முன்னும்; கூ0: கூ.

உங. துறை - இசைத்துறை. மருதோன்றி - மருதாணி; இதன் இலையை அரைத்து நகங்களிற்பூசினால் அவை சிவக்கும். கையாண்டி - ஒருவகை இசைப்பாட்டு.

(பி - ம்.) 1'விடத்தலங்' 2'தோண்மிசை' 3'பூவினை யாவிரைப்போதி'

வே று.

பரிவிலுன் மிக்க பாண பத்திர னடிமை யானென்
றுரனுடை விறகு வெட்டி யூன்றுகட் டாகக் கட்டி
யரியமென் முடிமேல் வைத்தாங் கம்பலஞ் சந்தி மற்றுந்
தெருவினு முலாவிப் பாணர் தெருவிடை முடிதிச் சென்றான். (உச)

மறுவறு முயர்மென் மூளின் வலிய[1]கோ டாரி மன்ன
முறுவல்செய் தாகம் வேர்ப்ப மொய்ம்பமர் தடக்கை வீசிப்
பொறை[2]யடி யானை வேண்டி யிழிதொழில் பூண்டு கொண்டான்
றிறவொடு நின்று மெல்ல வுலாவினு னுலக நாதன். (உரு)

மாலையங் குழல்சேர் [3]பாணர் மாலையர் மாலை யெய்திக்
கோலவெள் வளைகள் சோர்வா ரவரவர் கோத்து டுத்த
சேலைகள் சரியநிற்பார் திருந்திய நாணி ழப்பார்
மேலுறு பசலைகொள்வார் [4]விரும்புசூல் கொள்வார் வீழ்வார். (உசு)

கந்தரம் வேர்ப்ப வேர்ப்பக் கட்டிய விறகு கூறி
வந்தவன் குமர வேளோ மதனவே ளோவொ ளித்துச்
சந்தைகள் பாட மண்ணிற் றனிவிளை யாடல் வல்ல
சுந்தரன் றனே யோமற் றியாவனு வெனத்து தித்தார். (உள)

வே று.

அருடங்கிய வடிவந்திக ழசலந்தரு முமைபங்கனும்
வரமொன்றும தரையம்பதி வரமங்கல விசைமங்கைய
ரிருகுன்றிரு தனமொன்றிடை யிடையும்படி கொடுவந்தனர்
தெருவென்செயு மினியிங்கர சிவசங்கர சிவசங்கர. (உஅ)

வே று.

உரவிது நெடிதுநின் றெரியு மொன்றுபோ
லரிதிது கொடுவரு மடவி தூரிது
தருமொரு விறகொரு காசு தையலீ
ரெரிவிழுங் கொண்மினென் றினைய [5]கூறுவன். (உக)

உச. உரன் - வைரம்; "உரவிது" (உக.) ஊன்றுகட்டு - ஒருவகைக் [கட்டு.

உரு. மொய்ம்பு - வலி.

உசு. மாலையங்குழல் - பூமாலையணிந்த கூந்தல். பாணர் மாலையர் - விறலியர்; விறலியரை மாலையரென்று வழங்கல் மரபு; நிள: நூறு. மாலை எய்தி - மயக்கமுற்று. காட்சியாற் சூல் கொள்ளுதலை, "சொக்கனைக் கண்ட வீதி மங்கையர்.....பொங்கிய பெருஞ்சூல் கொள்வார்" (உஅ : நஎ) என்ப தனாலுணரப்படும்.

உள. கூறி - விலைகூறி. சந்தைகள் - வேதங்கள். [தல்.

உஅ. இடை இடையும்படி இருதனங் கொடுவந்தனர்: இடைதல் - மெலி

உக. உரவிது - வன்மையையுடையது. எரிவிழும் - தணல்விழும்.

(பி - ம்.) 1'கோடாலி' 2'அடியாரை' 3'மாதர்' 4'விரும்புமால்' 5'கூறி னான்'

ஆவென் விறலிய ரருக ணேந்துபண்
பாடுவன் வளஞ்சொல்வன் பார்ப்ப னிற்பன்முன்
னேவிவ னிப்படி யுலாவிப் பாணர்தம்
வீடெலா நடித்தனன் விறகு விற்றிலன். (நo)

வே று.

கூறிய பின்னர் முன்னர்க் குறுகிய பாண னில்லத்
தேறரும் புறத்துத் தெற்றி யேறல்கண் டிரவி போக
மாறிலா விறகு மூன்றி வைத்துல கங்க டோறும்
வேறற நின்ரூன் யாவுங் கடந்தவன் கிடந்தான் மெல்ல. (நக)

வே று.

பாதார விந்தஞ் [1]சோதி நீண்முடி நேடிப் பண்பார்
வேதாவு மாலுங் காணு விண்ணவ ருலகுக் கெல்லா
மாதார மாகி நின்ரு னரையிருட் போதின் மெல்லச்
சாதாரி யென்னுங் கானம் பாடினன் நரணி யுய்ய. (நஉ)

வே று.

ஓடிக்குள் ளாளம் விந்துநாத மொலியு ருட்டித் தூக்கெடித்தல்
படித்த னலிதல் கம்பித்தல் குடில மென்னுந் தொழில்பத்து
மெடித்துக் [2]காட்ட நாதாதி யிமையோர் முதலா வதிசயிப்பப்
படைத்த விசையைத் தனிப்பாடப் பதினு லுலகு முருகியவால். ()

வே று.

மருவிய விறலி யோடு மஞ்சரீ டலத்து வைகு
மரியசொற் பாணன் கேட்டீ தென்கொலென் றச்சங் கூர்ந்து
[3] விரைவொடு மிழிந்து சென்று வியன்சரா சரங்கள் யாவு
முருகிடப் பாடுவோய்நீ [4]யாரெனக் குரைத்தி யென்ரூன். (நச)

அத்திறங் கேட்டிளைத்தார் போனடித் தொடுங்கி யையா
கொத்திசை வல்லே னல்லேன் கொண்டிலார் விறகொ ருத்தர்
மெத்திய பயத்தால் வந்தேன் மெல்லிசைக் கரச ருய
பத்திரற் கேவல் செய்யும் பண்ணறை யடிமை யாண்காண். (நரு)

நக. தெற்றி - திண்ணை. மாறு - மலாறு; ஒப்புமாம்.

நஉ. சாதாரி-ஒருவகைப் பண்: இது வடமொழியில் தேவகாந்தாரி யென்றுகூறப்படும்.

நங. இதிற்கூறிய இசைத்தொழில் பத்தினையும், "உள்ளாளம் விந்துவுட னாத மொலியுருட்டுத், தள்ளாத தூக்கெடித்த ருன்படித்தன் - மெள்ளக், கருதி னலிதல்கம் பித்தல் குடில, மொருபதிற் றொன்றென் றுரை" என்னும் இசை மாபு வெண்பாவாலும் உணர்க.

நச. மஞ்சம் - கட்டில்.

நரு. கொத்த இசை - தொகுதியாகிய இசைகளில். பண்ணறை அடிமை - இசையற்றவனுகிய அடிமை.

(பி - ம்.) [1]'சொக்கன்' [2]'காட்டினாதாதி' [3]'விரைவினினெழுந்து' [4]'யாரெனவுரைத்தி'

என்றிறை கூறு முன்ன மென்கொலா மெனக்க லங்கிச்
சென்றுதன் னுழையுட் புக்குச் செறிதரு கிளைஞர்க் கூட்டிப்
புன்றலை யடியான் [1]பாடற் கொப்பிலை போற்று நாயன்
வென்றிகொள் பாடல் கேட்க வேண்டுமோ வேண்டா வின்றே. (

[2] இத்திறப் பாடல் யாரே யறிகுவார் யாவும் வல்ல
வுத்தமன் பாடி னல்லா லொருவராற் பாட வொண்ணு
தெத்தலத் தோருங் காணப் பரிபவப் படுமு னின்றே
புத்திர ரோடுங் கூடிப் போவதே கரும மென்று. (ஈள)

வரையறு சிவிகையோடு மடிதரு கவிகை யோடு
முருவுடை மாத ரோடு முதவிய கிளைஞ ரோடு
[3] மரையிரு விடையின் மெல்ல வெழுந்தடற் பரியி னேடு
நிரைகளி ரேடும் போது னெஞ்சறை பறை[4]முன் னுக. (ஈஅ)

வே று.

ஒக்குமொக்குமெ னக்கலங்கிமொக்கலோடும்வி ரைந்துதன்
மிக்கபோர்வலி கெட்டுமூட்டொடும் விட்டவூரில்வி டாதுளந்
துக்கமெய்திய கன்றுபோனது கண்டுதூய்தகு நகையொடு
மிக்கபத்திர னுக்கரன்கன வின்கண்வந்துவி ளம்பினன். (ஈஊ)

வே று.

பத்திரன் புலரு முன்னம் பரிவினு லயத்துச் சென்று
சத்தியக் குன்றே யுய்ந்தேன் றருமமாக் கடலே யுய்ந்தே
னெத்தலத் தினுமெ னக்கிங் கெதிரியார் நீயி ருப்பச்
சுத்த[5]சா ளரசங் கீதம் பாடுதற் கெனத்து தித்தான். (சஅ)

முன்புரந் தரனே மாலே யடிமையா வுடையாய் முற்று
மன்பிலா வடிய னேனுக் கடிமையென் றுரைப்ப தேதின்
[6] மென்பசுங் கரஞ்சி வப்ப விறகினே வெட்டிக் கட்டித்
துன்புறச் சுமப்ப தேயென் றழுதுகை தொழுது சொன்னன். (சக)

வழுதிபால் விரைவின் வந்து மனவலி சாலப் பேசிப்
பழுதறு பாடு வானைப் [7]பண்ணியல் வாது பாட
வழைமுடி மன்ன ரேறே [8]யென்னுமுன் னுங்கு கின்ற
தழைவுடை முறைசெய் வோரை யேவினன் றரணி வேந்தன். (சஉ)

ஈசு. இறை - விடை, தலைவன். நாயன் - தலைவன்.

ஈள. பரிபவப்படுமுன் - அவமானப்படுமுன். புத்திரர் - மாணாக்கர்கள்.

ஈஅ. மடிதருகவிகை - மடக்கிய குடை. மிக்க அச்சமுண்டான பொழுது நெஞ்சம்துடிக்குமாதலால் அதனைப் பறையறைதல் என்று கூறுதல் மரபு; "நீத்தரு மூளம்பறை யறைய" என்பர்பின்னும்;ருள:உரு;"இருவர்மா மனமும் பறையறைக் தயர்வுட னடுங்க" (வி. பாரதம், இராச. உசு.)

ஈஊ. முட்டு - வாத்தியங்கள். சஅ. விட்ட - தங்கிய.

(பி-ம்.) [1]'பாட்டுக்கு' [2]'இத்திறப்பாடலாரே' [3]' அரையிருளோர்டும்' [4]'கறங்க' [5]'சாளகசங்கீதம்' [6]'மென்றிருக்கரம்' [7]'பண்ணிசை' [8]'என்னமுன்'

மற்றவர் சென்று வந்த பாணனே மனைக்கா ணுமற்
கொற்றவன் றிருமு னெய்திக் கூறுவா ரறியாப் பாண
ஞற்றபே ரச்சத்தோடு மொருவரு மறியா வாறு
மூற்றிர வின்கட் கெட்டுப் போயினன் மூட்டுங் கட்டி. (சஎ)

[1] என்றவர் சொல்லத் தென்னன் வென்றவா றெங்ங னென்ன
னின்றபத் திரனு ரைப்பான் யானல னெருனற் கங்குற்
றன்றிரு மிடற்ருன் மெல்லச் சாதாரி பாடிச் சென்று
வென்றிகொள் கருணைச் சொக்கன் வென்றனன் விறகா ளாகி. (சஅ)

வித்தக மன்ன வென்ன வேந்தனு நெருனற் போது
பத்திர னடிமை யென்று பண்படை விறகு கூறி
யுத்தமத் தெருக்க டோறு மூலாவிஞேன் றன்னே யானுஞ்
சித்திரச் சொக்க னென்றே கண்டனன் செய்தி [2]கொண்டி. (சடு)

பேசுவ தென்கொல் காணப் பேரருள் கூர்ந்து காணு
வீசனுன் னினைவின் வந்தா [3]னென்னினி வேண்டி மென்று
தூசணி மூதலா நல்கித் தும்பிநீ டெருத்தத் தேற்றி
யோசைசேர் நகரி தன்னே வலம்வரு வித்தா னேங்க. (சகூ)

தன்றிருக் கரங்கள் கூப்பி யாவர்க்குந் தலைவர் நீரிங்
கின்றெழுந் தருளு மென்ன வின்னிசைப் பாணன் வாழ்த்திச்
சென்றுதன் னுழையுட் சார்ந்து சேர்ந்தவர்க் [4]கியன்ற நல்கி
மன்றுளு தனேயே பாடி யிருந்தனன் மகிழ்ச்சி கூர்ந்து. (சஎ)

பாண்டியன் பல்கா லீசன் [5]பரிவுகண் டதிச யித்து
வேண்டிய செய்ய வல்லான் வெல்லவல் லான ருட்சேர்
காண்டகு சொக்க னல்லாற் கண்டதுண் டோத லத்து
மீண்டொரு தெய்வ மென்ருன் சென்னியும் வியந்தான் கேட்டி. ()

கனத்திறை சொல்லக் கண்ட கருணேசே ரிறைவி சென்று
பனிப்பற நகைத்து வாங்கிப் பாணர்தம் மடியார் சாலத்
தனிப்பர தேசம் போலுல் விறகையுஞ் சுமந்து தாமே
நினேப்பற வருவ ரென்ற வளவுரை நின்ற தென்றும். (சகூ)

ஓதரு மனத்தால் வாக்கா லுலகொணன் கருணை கூர்ந்து
தூய்தகு மடிமை வேண்டி யடிமையாய்ச் சுமத்தல் கண்டு
ராதலா லடியார் தங்கட் கெளியவ னரன லாது
வேதவாய்க் கண்ட துண்டோ வேறெருரு தெய்வ மென்ணினின். (நிo)

ஆகத்திருவிருத்தம் - கருகூ.

சகூ. நீடு தும்பி எருத்தத்து - நீண்டயானையின் பிடரியில்.

சஅ. பல்கால் அதிசயித்து. சென்னி - பாணபத்திரன்.

சகூ. கனத்திறை - விறகின் சுமையையுடைய சிவபெருமான். சொல்லதாம் பாணர்க்காகச் சென்றுவந்ததைச் சொல்லியருளு. பனிப்பு அற - நடுக்கம் நீங்க. வாங்கி - விறகுகட்டை வாங்கிக்கொண்டு; வாங்கி என்றவென இயைக்க.

(பி - ம்.) 1'என்றது சொல்லத்' 2'கண்டு' 3 'ஏதினி' 4 'இனியகல்கி, மன்றுளுயனேயே' 5'பத்திகண்டு'

நிநி.—திருமுகங்கொடுத்த திருவிளையாடல்.*

மின்னுபுகழ்ப் பத்திரன்றென் னவன்க ணுரு மேவாது சுந்தர ன்பான் மேவி யன்பி, னன்னெறியிற் பாடுங்கா ணுத மெய்ய [1]ஞதா ந்த ஞதத்துக் கினிய நாத, னின்னிசைக்குத் தானரசா யிருப்பப் பாடு மிவன்கண்டத் திசைக்கினிமை கூர்ந்து பாங்கர், மன்னுமைமா தொடுநீங்கா துருக்க ரந்து வந்திருப்ப னந்தரத்து வானோர் [2]வாழ்த்த.

கானெறி பாடிமுடித் தேகுங் காலைக் காசொருகா [3]லணியொரு கான் மணிக ளோர்கா, லீனமிலா சனமொருகான் மவுலியோர்கா லின் னனெதனு தெடுத்தடைவே யிலங்க வைத்து, ஞானமுதல் வன்போகக் கண்டு [4]வாழ்ந்து நாளுமகிழ் மிகவிரைவிற் கொண்டு போந்து, தீன மற [5]வுண்டு டுத்து வந்தோர்க் கிட்டஞ் செய்தருள்சிந் தினைசெய்வன் றிறத்துச் சேர. (உ)

இத்தகவு தனிநடந்து செல்லுங் காலை யிறைவனுக்குந் தனக்கு மூத லில்லை யாகச், சித்தமகிழ் பொருள்வேட்டோர் மன்னர் மாட்டுஞ் செல்லாதங் கிரவுபகல் சிவனைப் பாடி., மெத்துமிடி யினுமிருப்போ [6] ருருநா ணுடி விறலியர்பா டகர்பாணர் புகழக் கண்டு, புத்தியினைத் தென்செய்கே னிறைவா வீவான் பொருளில்லை யென்றறையிற் றுயி ன்றன் புக்கு. (ங)

[7] அறியுமிவன் கொடைத்தகவுந் தன்பால் வைத்த வன்புங்கண் டின்பங் கூர்ந் தறையிற் சென்று, மறுவறுநல் லிசைப்பாண கொடித்த லாலே வறுமையடைந் தினைந்தம் பொருளு னக்கே, பிறரொருவ

க. தான் அரசாய் இருப்பதும். அத்தரத்து - ஆகாயத்தில்.

உ. ஞானமுதல்வன் = சிவபெருமான். தீனம் = வறுமை. அருள்சிந்தினை செய்வன் = திருவருளைச்சிந்திப்பன்.

ங. ஈவான் = புலவர்களுக்கு ஈதற்கு; உசு: ஙங.

* "தாரு முய்த்தது பாணற் கருளொடே" (திருஞா. திருவியமகம், திரு வாலவாய்); "பாணனிசை பத்திமையார் பாடுதலும் பரிக்தளித்தான்" (திரு ஞா. தே. கோளிலி); "குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென, மதி மலி புரிசைத் திருமுகங்கூறி, யன்புருத் தளித்த வின்னிசைப் பாணன், பெற நிதி கொடுக்கென வறவிடுத் தருளிய, மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்" (கல். கடி.)

(பி - ம்.) [1]'காதாகத்தத்துக் கினியநாத ஞேதும்' [2]'போற்ற' [3]'அணியொரு கா லமனி யோர்கால்' [4]'நாளு நாளு மவாவற விரைவிற்' [5] 'உண்டுடுத்தும் வந் தோர்க் கிட்டுஞ் சிறந்தருள் சிந்தனை செய்வன்' [6]'ருருகாளுடி' [7]'அறியுமவன்'

றியாமற் றருத லாலே பிறங்குபொரு ளறைகாப்போர் மூதலா யாரு
ங், குறைவிலுயர் பண்டாரப் பொருள்க டம்மிற் குறித்தனகண் டில
மென்னக் கொதித்தெ ழுந்தே. (சு)

வே று.

எப்பெரும் பொருளுஞ் சாலக் களவு [1]போ கின்ற வென்றுந்
தப்பிய மூரிவா யில்லே தாளுறு கதவுஞ் சென்று
கைப்படத் திறந்தா ரில்லே கள்ளர்யா ரியாவும் வல்ல
வொப்பருஞ் சொக்கன் றன்னை யொழிய[2]வே றில்லை யென்று. (ரு)

இன்னல்கூர்ந் தைய கோவென் றிராப்பக லெயுற் றென்னை
முன்னுற நாடி நாடி முறையிடத் தொடங்கா நின்ரூர்
மின்னிய பொருள்க டம்மை மீளவுந் தருவே மாயின்
மன்னிய மனிதர் முற்று [3]நோகுவர் வழக்கு மன்றே. (சூ)

[4]உனக்கினி யளித்தற் கென்பா லுறுபொரு ளில்லை யென்றன்
மனத்தினுக் கினியான் றாயான் மகிழ்ந்துநம் மடியார்க் கென்று
நினைத்தன கொடுக்க வல்லா [5]னிலத்துயிர் கழறுஞ் சொற்க
ளனைத்தையு மறிந்தி ரங்கு மன்புடைச் சேர மான்காண். (எ)

விதமுறு [6]தனங்கண் மிக்க வேண்டுபெ வளிப்பன் சூழா
[7] ததர்வுற விரைவிற் சென்றிவ் வோலையை [8]யளித்தி யென்று
மதிமலி புரிசை யென்ரூர் வரைதரு திருமு கத்தை
முதிர்தரு கனவிற் காணக் கொடுத்தனன் முக்கட் சொக்கன். (அ)

சு. பண்டாரம் - பொன்னறை; "பல்லாருங் கொள்கவெனப் பண்டாரந் தனைத்திறந்து" திருவிளை.

ரு. மூரிவாய் - கன்னவாயில்.

சூ. வழக்கு - நீதி.

எ. எல்லாவுயிர்களுஞ் சொல்லுகின்ற சொற்களை அறிந்துகொள்பவராத லால் அவருக்குக் கழறிற்றறிவார் என்பது திருநாமமாயிற்று; பெரிய. சமறிற் றறிவார். கசு - ஆம் திருவிருத்தம்பார்க்க.

அ. "மதிமலிபுரிசை" என்னும் திருமுகப்பாசுர அகவல் வருமாறு:—"மதி மலி புரிசை மாடக் கூடற், பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறை, யன்னம் பயில் பொழி லால வாயின், மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம், பருவக் கொ ண்மூப் படியெனப் பாவலர்க், குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ். குரு மா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச், செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க, பண் பால் யாழ்வல பாண பத்திரன், றன்போ லென்பா லன்பன் றன்பாற், காண்பது கருதிப் போந்தனன், மாண்பொருள் கொடுத்து வரவிடப் படுவே."

(பி - ம்.) [1]'போகின்றதினும், தப்பியமுறிவாய்' [2]'வேறேகா தென்று', 'வேறுகாதென்று' [3]'நோவர்கள்' [4]'உனக்கினியெனக்சளித்தற்கு' [5]'நிலத்துவாழு பிர்த்தாங்கள்' [6]'தனங்கள்வாழ' [7]'இதமுற' [8]'கொடீ'

துய்யநன் னெஞ்சன் வாங்கி முடிமிசைச் சூடிக் கொண்டிங்
கையமே பொருளே வேண்டி [1]யன்புடை நின்னை விட்டு
வையகங் காப்போர் தம்பான் மண்ணவோ வென்ன நந்த
மெய்யுரை மறுத்தல் வேண்டா [2]மேவென மறுத்தா னில்லே. (கூ)

பழுதிலா நாயன் சொல்லே மறுத்திடல் பாவ மென்று
தொழுதுமுன் றுயிலு ணர்ந்தான் சொக்கனைக் கண்டா னில்லே
யெழுதிய திருமு கங்கண் டதிசயித் திறைஞ்சி யொல்லே
யுழைகடந் திரவிற் போனு ளொருவரு மறியா வாறு. (கஏ)

மல்லலஞ் சிறப்பி னேங்கு மாமலே நாட்டு ளன்பார்
வில்லவன் விரும்பி வாழு மேதகு மணிக்கு டங்கள்
சொல்லரு மிரவி யென்னச் சுடர்விடு மூயர்மா டத்துச்
செல்லமர் கொடிங்கோ வூரிற் சென்றனன் சிறிது நாளில். (கஐ)

தாங்கரும் பசியா னெஞ்து தளர்வுறும் வறுமை யாள
னீங்கிவ ளொருவ னுரென் றியாவரு மிகழ்ந்து கூற
வோங்கிசை யுருவமெங்கு மொளிகொள்வெண் ணீற்றன் மூடி
யாங்கொரு தண்ணீர்ப் பந்தர் மூலையி லமர்ந்தான் மெல்ல. (கஉ)

இன்னதன் மையினி ருப்ப விரவிடைச் சேர மான்கட்
பன்னிசைச் சொக்கன் சென்று பாடுநம் பத்தன் காண்பா
னின்னக ரடைந்தான் றேடி நிறைவுசெ யென்னக் கேட்ட
மன்னவன் றுயிலு ணர்ந்து மந்திரி களோடி தித்தான். (கஊ)

நயந்துறு கனவின் செய்தி நவின்றுமுன் விடுப்பப் போனோர்
[3]பயின்றநீண் மறுகு தோறும் [4]பரந்துறு நவம தாக
வியைந்தவோர் பத்தர் மேவக் கண்டிரோ வென்று நாடி
வுயர்ந்தவன் றன்னை யந்த வுழையிடை யிருப்பக் கண்டார். (கசு)

அரியமா தவத்தீர் காண்பா னுசையா யிருந்தா னும்மை
யுரைகெழு மரசன் றன்பா லுவந்தெழுந் தருளு மென்னக்
கருதிநீ ரழைப்ப மேவேன் காவலற் கிறையிற் சென்று
பெரியகா ரியத்தின் வந்தே னுரைத்திடும் பிறங்க வென்றான். (கஙி)

கக. நாயன் - தலைவன். வில்லவன் - சேரன். செல் - மேகம்.

கஉ. பசியும் வறுமையுமுடைமையை, "பரிவினல் குரவலைப்பப் பசியொரு புறத்தலைப்ப" (கஅ) என்பதனுலு முணர்க; "இசையுருவம்" என்றது அவருக் குள்ள ஸங்கேதப்பயிற்சியின்மிகுதி கூறியவாறு.

கஙு. நிறைவு - மகிழ்ச்சி.

கச. அந்த உழை இடை - தண்ணீர்ப் பந்தரிடத்தே.

கஙி. அரசன் உம்மைக்காண்பான் ஆசையாயிருந்தான். உரை - புகழ். பெரியகாரியம்: "பெரியகாரியமுளை" (கம்ப. வேள்வி. நுகூ.)

(பி - ம்.) [1]'அன்புறு' [2]'மேகென' [3]'பயின்றநீண்' [4]'பகர்ந்துறு'

பணிவிடை யமைச்சர் போந்து பகர்ந்தது சாற்றப் போற்று
மணிமுடி யரசன் சால மகிழ்ந்துவா கனத்தி னேரு
ணணிபொலி மணிகள் சிந்த வடியிணை நோவச் சார்ந்தாங்
கிணையிலா தவனைச் சொன்ன வெல்லையி லிருப்பக் கண்டான். (ககூ)

நின்றமன் னவனைப் பாரா னிறைந்தபே ரருளைப் பார்த்தாங்
கொன்றிய புளகத் தோடு மொழிவிலாக் கண்ணீ ரோடுஞ்
சென்றவ ரதிச யிப்பச் சிறப்புடை யிசையெ டுத்து
மன்றினு ளாடுஞ் சொக்கைப் பாடினன் மதுரைப் பாணன். (கள)

அரசனுஞ் சிவன்பால் வைத்த வன்புகண் டுருகி யந்தோ
பரிவினல் குர[1]வ லேப்பப் பசியொரு புறத்[2]த லேப்ப
வுரைகெழு கானம் பாடி முறுதியைப் பாரா திப்
பரமனே யிவர்வே றல்ல ரென்றுபன் முறைது தித்தான். (கஅ)

பத்தரெங் குள்ளீர் வந்த காரியம் பகரு மென்ன
வுத்தம மதுரை நம்மூ ருன்றனக் கென்று நல்ல
சித்திரச் சொக்கன் றந்த திருமுகங் கொணர்ந்தே னென்று
பத்திரங் கொடித்[3]தொ துங்கிப் பத்திரன் பணிந்து நின்றான். (கஉ)

வே று.

இருமைசேர் திருமுக மிறைஞ்சி யீடுகொண்
டரிதிகழ் தவிசின்[4]மீ திருத்தி யாதரித்
துரைகெழு பாசுர வுரையைக் கண்டெழும்
பரிவொடு சூடினன் பாடி யாடினன். (உ0)

தன்வயிற் சுந்தரன் சால வைத்துள
மன்னிய பரிவினைக் கண்டு [5]கண்டுவாழ்ந்
தின்னிசைப் பாணனே யெடுத்த ணைத்தன
னுன்னரு மவன்செய லொன்றும் பார்த்திலன். (உக)

கக. விரைந்து வந்தமையால் மணிகள் சிந்தின. சேரர் நடந்து சென்றமை, நெ0 - ஆம் பாடலாலும் வலியுறுகின்றது. சொன்ன எல்லை-தண்ணீர்ப் பந்தர்; கஉ.

ககூ. பத்திரம் - திருமுகம். உன்றனக்கென்றுதந்த திருமுகமென்க; உன்றனக்கு என்றும் நல்ல சொக்கன் என இயைத்தலுமாம்.

உ0. இருமை - பெருமை. ஈடுகொண்டு - மனங்கனிந்து. சூடினன் - தலைமேல் வைத்துக்கொண்டான்.

உக. திருமுகப் பாசுரத்தில், "தன்போலென்பா லன்பன்" என்றதனால் தன்வயின் வைத்துள்ள பரிவு காணப்பட்டது.

(பி-ம்.) 1'அசைப்ப' 2'அசைப்ப' 3'ஓடுங்கி' 4'மீதேற்றி' 5'வாழ்ந்தனன்'

வேறு.

ஓடை யானைப் பிடர்மிசை யோங்குற
நாடி காண நகர்வலங் கொண்டுபோய்க்
கூட நீடுதன் கோயிலுட் புக்கல
1 ரேடு தாங்கு தவிசி லிருத்தினன். (உஉ)

வேறு.

இருந்தவன் றன்னை யீச னுகவே பாவித் தெண்ணெய்
வருந்துமெய்ம் முழுதும் பெய்து மஞ்சன மாட்டிச் சூட்டிச்
சுரும்புசூழ் மாலை சாத்தித் தூசுதண் கலவை பூசிப்
பரிந்தறு சுவையி னூட்டிப் பணிந்தனன் கரங்கள் கூப்பி. (உங)

பேணுற்ற காவற் றொல்லைப் பெரும்பொரு ளறையுட் பட்ட
வாணிப்பொன் காசு தூசு தேசுடை யணியா ரங்கண்
மாணிக்க முத்து மற்றும் வகைவகை பொதிசெய் தோங்கப்
பாணற்கெண் ணிறைந்த கோடி பரிப்பவர்க் கொண்டு கட்டி. (உச)

திரள்பரி கயங்க டிண்டே ரவனிகள் சிறக்க நல்க
வருளுடை யன்பன் கோதை யன்புகண் டதிச யித்துக்
கருதிய தனம னைத்துங் கண்டிகைக் கொண்டு மன்னர்க்
குரியன கொள்ளேன் சொக்க னுயர்திரு வாணை யென்றான். (உடு)

மன்னது கண்டு சால வாடிமுன் றெளிந்து றைஞ்சி
யென்னபுண் ணியஞ்செய் தேன்மற் றிங்கிறை யருளின் வந்து
மின்னுபா வலர்க்கு நாளும் விதரணஞ் செய்ய வேண்டும்
பொன்முழு தையுங்கைக் கொள்ளப் பெற்றதே போது மென்றான்.()

முன்புற நின்று போற்றி யின்னன மொழியக் கண்ட
வன்புடைப் பாண னஞ்சி யடிதொழு தவனி காக்கு
நன்குல வரசே யென்னை யிப்படி நவிலா நின்ற
தென்கொனன் கிலாத யானே ரிழிகுலப் பாண னென்றான். (உஎ)

உஉ. ஓடை - யானையின் நெற்றிப்பட்டம்.

உங. மெய்முழுதும் எண்ணெய் பெய்து மாலை சூட்டித் தூசுசாத்தி.

உச. பொருளறை - பொன்னறை.

உடு. கோதை - சேரர். ஆணை - கட்டளை.

உசு. அதுகண்டு - திருவாணை கூறியதைத் தெரிந்து, முன்வாடிப் பின் தெளிந்து. "என்னபுண்ணியஞ் செய்தனெஞ்சமே" (தே.) விதரணம்=கொடை.

உஎ. என்னை - அடியேனை.

(பி - ம்.) 1 'ஏடிலங்குதவிசிலிழிச்சினன்'

இயைந்தனன் பொறையர் கோமா னிலங்கெறும் பீற தாக
நயந்துல கனைத்துந் தந்த நான்முக ஞதி யாக
வுயர்ந்தபல் பிறப்புத் தோறு முயிர்க்குயி ராய்நம் மீசன்
சயம்பெற நிற்றல் கண்டீர் தாழ்ந்தீதே துயர்ந்த தேது. (உஅ)

இரந்திது பல்காற் சொல்ல தெம்பெரு மக்க ளென்னை
பொருந்திய சிவனே யாகக் கண்டனன் புதுமை கூர
வருந்தவ ஞணை யாலே நிற்பதற் கறைய மாட்டேன்
விரைந்தெழுந் தருளு மென்று விடுத்தன னல்லாட் கூட்டி. (உஊ)

நற்றவன் போகப் பின்னர் நடந்துபோய் மீண்ட வஞ்சிக்
கொற்றவன் கோயில் சேர்ந்தான் கோதைதன் பரிச னத்தா
லுற்றெளி யுடம்பு பெற்றுங் குறும்பரி சனங்க ளோடும்
பற்றிய தனங்க ளோடும் பாணனு மதுரை புக்கான். (ஈ0)

வம்பவி முலங்கற் றென்னன் வரிசைகண் [1]டதிச யிப்பத்
தும்பிநீ டெருத்தத் தோங்கித் தோரைசா மரைகள் வீசப்
பைம்பொன்வெண் குடைநி ழற்றப் [2]பார்மக ணெளிய மிக்க
செம்பொனே டணைந்த [3]செல்வன் சொக்கனு லயத்துச் சேர்ந்தான்.

ஐயனே நினக்கு நல்லா னன்புடைச் சேர மான்போல்
வையகத் தில்லை செம்பொன் வரைபுரை தனம னைத்துங்
கையினின் றிருமு கத்தைக் காணுமு னளித்தா னென்று
பொய்யறக் காட்டிக் கொண்டு போயினு னருள்பெற் றுங்கு. (ஈஉ)

உஅ. பொறையர்கோமான் - மலாடாட்டார் அரசர். நான்முகனுதியாக எறும்பு ஈறதாக வென்க; "அயன்மு தலாகத்துன்னித் தப்பற வெறும்பீறுகத் தனுத்தொறு நிற்பேம்யாமே" என்பர்பின்னும்; நிகழ: ச; 'பிரஹ்மாதிபிபீலிகா பரியந்தம்' என்பது வடமொழிவழக்கு.

உஉ. இது - இழிகுலப்பாணன் என்பது. சொல்வது என்னை-சொல்வது யாது. எம்பெருமக்கள்- எமது பெரியோராகிய தேவீர். அருந்தவனுணையாலே- சோமசுந்தரக்கடவுள் 'வரவிடுப்பதுவே' என்றருளிச்செய்ததட்டனையால். அருந்தவன் - சிவபெருமான்; "அருந்தவத்தோற்கே" (புறநா. க.) என்பதன் அடிக் குறிப்பைப்பார்க்க. நல்லாட்கூட்டி - நல்லவீரர்களைச்சேர்த்து; "ஆட்கெலாஞ் செப்பினன்" (சீவக. கஅஉசு.)

ஈ0. வஞ்சிக்கொற்றவன் - சேரர். கோதைதன் பரிசனத்தால் - சேர ருடைய ஸ்பரிசத்தால். பரிசித்ததை, உக - ஆம் செய்யுளாலுணர்க. பரிசனங் களோடும் - பரிவாரங்களோடும்.

ஈக. வரிசை - சம்மானம். தென்னன்கண்டு அதிசயிப்ப. தோரை - பீலியாற் செய்தவிசிறி.

ஈஉ. தாமதிக்காது அன்றைத்தினமே அளித்த விரைவுதோன்ற, 'காணு முன்' என்றார்.

(பி - ம்.) 1'அதிசயித்து' 2'பாராகெளிய' 3' செல்வச்சொக்கன்'

வந்தரா வலர்சற் றத்தார் வறுவியோர் வாழ வென்றுஞ்
சிந்திய பொன்னு முத்துஞ் சேலையுங் கொண்மூ வென்ன
[1] மூக்குறப் பொழிந்து நாளு முறைமையி னாழி வாழ்ந்து
சுந்தரன் றனையே [2]பாடி யிருந்தனன் றுதிப்ப யாரும். (கஉ)

ஆகத்திருவிருத்தம் - கரிசு.

நிசு.—பலகையிட்ட திருவிளையாடல்.

அன்பு மிக்க வறிவுடைப் பத்திரன்
றுன்ப மற்றுத் தொலைவி றனத்தொடு
நன்கு மிக்கவர் நாளும் வியப்புற
மன்சி றக்க மதுரையில் வாழ்நாள். (க)

நீடு செல்வ நிதியினைக் கண்டிசை
பாடு பாணர் பொருமையைப் பற்றியே
நாடி யென்றிவ னல்குர வாவனென்
றூடி யாரு மிருப்ப ருரைத்திடார். (உ)

மெய்மை யற்ற வெறுப்புடைப் பாணர்தம்
பொய்மை யைக்கண்டு புண்ணிய னின்றுமுன்
றையல் கோவைமுச் சந்தியு மன்றியே
மையி ராவும் [3]வழுத்துவ லென்றனன். (ங)

வே று.

இப்பெரு விரதம் பூண்டாண் டியாமினி நடுவு சென்று
போய்ப்பற யாரும் போற்றப் பாடுநாட் புகழ்க்கு நல்லோன்
றுப்புடை நெஞ்ச னேசஞ் சோதிப்பான் கருதி யோர்நாண்
மைப்படி மழைக்கு லத்தை விட்டனன் வருத்து கென்ன. (ச)

பல்வித விலங்கு நாற்காற் பறவைமா னிடர்கண் மற்று
மில்லடைந் தச்சங் கூர விருண்டிற விடித்து மின்னி
மல்லல்வான் முழுது மூடி வாளரா ஞான்ற வென்னச்
சொல்லரும் துளிக டேங்கச் சொரிந்தன சோனை மாரி. (ஞ)

கூகூ. வறுவியோர் - தரித்திரர். என்றும் பொழிந்து நாளும் வாழ்ந்து பாடி யாருந்துதிப்ப இருந்தனன்.

(நிசு.)

உ. ஊடி - வெறுத்து.

ங. பொய்மை-மனம்வேறு வாக்குவேறு. முச்சந்தி-காலை, உச்சி, மாலை.

ச. யாமினி-இரவு. "புகழ்க்கு நல்லோன்" (சுசு: சு.) துப்பு-தூய்மை. நெஞ்சன் - பாணர்.

ஞ. நாற்கால்விலங்கு. இல்-இடம். ஞான்றவென்ன-தொங்கின வென்ன.

(பி - ம்.) [1]மூக்தையினளித்து' [2]'நாடி' [3]'வழுத்துவம்'

அரும்பெரு விரதம் யானின் றழியினு மொழியே னென்று
சொரிந்திடி மழையை நல்ல தூமலர் மழையாக் கொண்டி
வருந்தியா லயத்துக் காலாற் குறிவழி தடவி வந்து
தெரிந்திசை யிசைத்தான் வல்லான் செயலென வுணர்ந்து தேறி. ()

முன்னிகழ் புங்க வத்தின் பின்னுற முதிர நின்று
தென்னிசை பாடும் பாணன் றிறத்தினைக் கண்டி பின்னு
மன்னுகன் மழையை யேவ வாங்கது மருத்தோ டொன்றிப்
பன்மலை யருவி யென்னத் திகழ்ந்தது பயம்வி ளைத்தே. (எ)

மைக்குல மெற்றுங் கல்லா லம்பிஞன் மாம ருத்தாற்
றக்கமெய் சால நோவோன் றந்திரி யாழ்ந ரைந்து
மிக்கசூ ருகிர்ந ரைந்து விரனடிக் குறவும் போகான்
1 சிக்கன வுடனே நின்று பாடிஞன் சிவனே யுள்ளி. (அ)

அயன்றலை யறுத்தல் பாடி 2யருக்கனை யடர்த்தல் பாடிக்
கயந்தனை யுரித்தல் பாடிக் காலனை யுதைத்தல் பாடி
வியன்புர மெரித்தல் பாடி வேள்கெட விழித்தல் பாடிச்
சயந்தரு புகழ்கண் மற்றும் பாடிஞன் சால வாழ்த்தி. (கூ)

மூற்றவெங் தையைநி னைப்பார்க் கெதுமுடி யாது முன்னர்
மற்றது கண்டி ரங்கி வருந்திடா திருந்து பாடென்
றுற்றபே ரிசைக்குச் சென்றுங் குவந்தயர் பலகை யிட்டான்
பற்றியற் பலகை முன்னம் பாவலர் வரக்கொ டித்தான். (கட)

கங்குலி லிறைவன் மேனி காந்திடக் கண்ட பாண
னிங்கிது செய்தற் கெந்தை யெழுவகை யிசைக்கு நல்ல
சங்கர னல்லால் வல்லா ரியாரெனத் தாழா தோங்க
வங்குயர் பலகை யேறி யிருந்தன னருளை வாழ்த்தி. (கக)

சு. யான் இன்று அழியினும் விரதம் ஒழியேன். வல்லான் செயல் - சிவன் செயல்.

எ. புங்கவம் - இடபம். தென் - அழகு. மருத்து - காற்று. மழைகள் மழையாதலின், மலையருவி அதற்கு உவமையாயிற்று.

அ. அம்பு - நீர். சிக்கனவு - உறுதி.

கூ. அருக்கன் - சூரியன்; அரக்கன் என்றபாடத்திற்கு இராவணன் என்று கொள்க. கயம் - யானை. சயந்தரும் புகழ் - பிரதாபம். இச்செய்யுள் "அயன்றலை கொண்டுசென் டாடல் பாடி யருக்க னெயிறு பறித்தல் பாடிக், கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக் காலனைக் காலா லுதைத்தல் பாடி, யியைந்தன முப்புர மெய்தல் பாடி வேழை யடியோமை யாண்டு கொண்ட, சயந்தனைப் பாடினின் றாடி யாதற்குச் சுண்ண மிடித்துகாமே" (திருவாசகம், திருப்பொற்சுண்ணம், கஅ) என்பதைத்தழுவியது; பெரிய. திருநீல கண்ட. இ-ஆம் திருவிருத்தமும் இவ்வாறேயுள்ளது.

கo. இயற்பலகை-சங்கப்பலகை. பாவலர்-சங்கப்புலவர். முன்வரக்கொடுத்தான், இப்பொழுது சென்று இட்டான்; இச்செய்யுள் கருத்தடையணியணி.

(பி - ம்.) 1'சிக்கென' 2'அரக்கன்'

வே று.

ண்டகு ரலொடி துத்தங் கைக்கிளை
வேண்டிய வுழையிளி விளரி தாரமென்
றீண்டிய நெறியினே ழிசையு மின்புறப்
பூண்டதக் கிரிகளிற் புரிந்து பாடினன். (கஉ)

மூன்றிக ழிசைத்துதி முடியப் பாடிமு
னென்றிய வருத்தமு மொழிந்த தொல்லையின்
1வன்றிறன் மாரியு மருத்து மற்றன
மின்றிகழ் வானமு மீனம் பூத்ததால். (கஙு)

வே று.

பல்வி தப்பொற் பலகையைக் காணவே
மல்ல லோங்கு மிரவியும் வந்தனன்
சொல்ல ருஞ்செயல் கண்டு துதித்தெழுந்
தொல்லை சென்றுதன் னுற்றவர்க் கோதினன். (கசு)

ஆல யத்து 2ளணைந்துற் றவரொடு
மேல வன்றிறை யிட்ட பலகையின்
கோல மீதெனக் காட்டக் குறித்தவர்
கால காலன் கருணையை யேத்தினர். (கஞ)

லகு கன்றுக் கிரங்கும் பசுவென
வலவு கண்டனக் கல்லிடை வந்திசைப்
பலகை யிட்டருள் பண்ணிசைச் சொக்கனே
யலது வல்லவ 3ரானெனப் போற்றினர். (கசு)

வெய்ய பாணர் வெறுப்புவிட் டின்வயிற்
செய்ய சொக்கன் றிருவருள் கண்டன
மைய னேனினக் காரொப் பவரென
மைய நீர வணங்கினர் வாழ்த்தினர். (கஎ)

வே று.

மின்றிகழ் தென்னன் முன்ன மேதினி வியப்பப் பாணன்
சென்றுதன் னுழையுட் புக்குச் செந்தமிழ்ச் சொக்க னேப்போ
லின்றியா 4மெக்கு நல்லா னெனத்துதித் திருந்தான் செல்வ
மொன்றிய மதியங் கண்ட வுததியின் விளங்கிற் றன்றே. (கஅ)

சிந்தைசெய் தலகின் மிக்க தென்றிரு வால வாய்வாழ்
சுந்தரன் றன்னை யாவர் துதிசெய்தா ரவர்கள் வேதச்
சந்தைசொல் லிற்யாண்டு புக்குத் தகும்பெருஞ் செல்வத் தோங்கி
வந்தவெங் கயர நீங்கி வாழ்ந்துவா ளுள்வ ரன்றே. (கசு)

ஆகத்திருவிருத்தம் - கடுகுடு.

கள. வெய்யபாணர் - அழுக்காறுற்ற பாணர்; எழுவாய்.

(பீ-ம்.) 1'வன்றிறல்வாரியும்' 2'அணைந்திட்டவரொடும்' 3'ஆனெனச் செப்பினர்' 4'எனக்கு' 5'யாண்டும்புக்கு'

நள.—இசைவாதுவென்ற திருவிளையாடல்.

தரையிற்பழு தில்லாதெறி தருபத்திரன் மனையாள்
பரிவுற்றிடு தன்காதல னளவிற்பரி வினுமுள்
ளுருகிப்புகழ் தருசுந்தர னளவிற்பரி வுற்றே
பெருகப்புண ரிசைபாடிவள் பிரியாதொரு [1]நாள்போல். (க)

பாலேமொழி சூதேமுலை பணையேதிர டோண்மெல்
[2] லாலேரிலை தானேவயி றரவேயக லல்குல்
சேலேவிழி காரேகுழல் சிலையேநுதன் மலராள்
போலேதிகழ் வாணேரிடை பொய்யேயித மெய்யே. (உ)

வேறு.

இரதியு மொவ்வா வடிவினு ளுருக்கொண் டிசையுலா வுவதெனச் சிறந்தா, டரைபயில் சாதித் தருமநீ தியினுற் சசிகுல வேந்தையுங் கண்டு, பரிவொடு போது காடனி லொருநாட் பார்த்திபன் றனிவரக் கண்டு, பொருவில்வேள் கணையான் மெலிந்துமெல் லணையிற் புல்ல வா வென்றனன் மெல்ல. (ங)

மையிலாள் கடைதொட் டியர்கரங் குறைத்த மாசறு தேசடை நீதி, யையனே நந்தஞ் சுந்தர னணை யவ்வுரை [3]யிங்கெனக் கடாது, பொய்யிலா வுண்மைப் பத்திர னெழியப் புவியுளோ ருடன்பிறந் தவ ரென், றையநுண் ணிடையாண் மறுத்தனண் மருத்தா லசையுமென் கொடியென நடுங்கி. (ச)

மறுத்தது கண்டு நெஞ்சக நாணி வலிசெயா தாணையை நினைந்து கறுத்தவ டன்னைப் போவென விடுத்துக் கற்றவ ரவைநடு விளிய முறித்திடக் கடவ மெனப்புற நாட்டோர் மூற்றிசை பாடுவாட் டேடிச் சிறப்புட னழைத்து வாருமென் றுரைத்துத்தெரித்தயர் தூதரை விடுத்தான்.

அருமையா வொருவ ரறிந்திடா வாறங் ககற்றியோர் கரந்துபோய் விரைந்து, தரைமுழு தெங்குந் தேடிமுன் கொணர்ந்த சயந்தரும் வல்லிசை வல்லாள், பரிவொடுங் கூடி கல்லிசை மாதர் பாணர்தற் சூழவொண் சிறப்பிற், கரிபரி நெருங்கு மதுரையுட் புகுந்து கண்டன டிண்டிறல் வேந்தை. (சு)

கூ. அருவமாகிய இசையானது உருக்கொண்டு உலாவுவதென. விறலிபர் கள் அரசனிடஞ்சென்று பாடிவரவேண்டியது மாபாதலின், 'சாதித்தருமநீ தியினுல்' என்றார்.

ச. கைகுறைத்தகதை, சிலப். உஉ-ஆம் பக்கத்தாலறியலாகும்.

ஞ. வலிசெயாது - பலாத்காரஞ்செய்யாமல். கறுத்து - கோபித்து. விளிய - அவமானப்பட.

சு. அகற்றியோர் - நீக்கிய வேலைக்காரர்.

(பி - ம்.) 1'நாட்போல்' 2'ஆலேலிலே' 3'இன்றெனக்'

பல்லித மாக மெல்லிசை பாடிப் பணிந்துமு னிருந்திடுங் காலை, மல்லலேசேர் மாலைப் பத்திரன் றேவி முன்னமாங் கிருந்தவ டன்னை, யெல்லையில் புகழா னிங்கிதத் தாலிங் கிவளுடன் பாடுதற் கின்று, வல் லையோ வென்ன வவளுமிங் கிதத்தான் மண்ணிலா ரெனக்கெதி ரென்றுள். (எ)

அங்ஙது கேட்டு வந்தவட் கிரங்கி யணிமுத் தாடைகள் வழங்கித் தங்குதற் குரிய நல்லிடங் கூறித் தரத்தொடும் விடுத்தபின் றெழுத பொங்குகற பினளா வியந்துதீ தோற்பிற் புகலினந் தோல்வியா யிருக்கு மங்கைகே ளவளை வெல்வதற் கான வழியுணர் பழுதுவா ராமல். (அ)

என்னுமுன் னணங்கு பன்முறை வணங்கி யானுமோர் கற்புடை யாளேன், முன்னது தானே காதலுடும் வறிதே முற்றவோர் குற்றம் வா ராது, மன்னநீ யிருப்ப வென்னையார் வெல்வா [1]ரென்றனண் மன்னவன் கண்டு, கன்னெறி நெஞ்சி னொன்றுவைத் தொன்று நவின் றுயின் போவென விடுத்தான். (கூ)

வே று.

இரவிடை மறைத்து முன்ன ரெய்திய மாலை தன்பாற் பரவுதற் கரிய சீர்த்திப் பதத்திரன் றேவி தன்னை
[2]வெருவுறு தென்முன் வந்தாற் பன்முறை விளிய வைது வரையறப் பாடச் சொல்லென் றேவியோர் மாதை விட்டான். (கo)

வரன்முறை மற்றை ஞான்றோர் மண்டபத் திருந்து முல்லைத் தெரிவைகல் லிசைபா டுங்காற சனறவள் சொல்லக் கேட்ட வரிவையு மதுயா ளாகி யரசன்முன் பேசி வந்து கருகிட வைது கீதம் பாடினளை கற்பி னளை. (கக)

வாதுற வைதல் கண்டு மனமிக மகிழ்வோ னென்றன் மேதகு கீத மாதை விளியுநீ வைவ தென்னை யோதரு மவைக்க ளத்திங் குயர்புடை நீங்கள் பேசிச் சோதிசேர் கானம் பாடுந் தோறறவர் சுமக்க வென்றே. (கஉ)

இப்படிச் செய்த லின்று தகுமென விகல்சேர் மன்னன் செப்புமுன் [3]னுங்கி யைந்து சீறியாழ் திருத்தி வந்த

எ. முல்லை சேர்மாலை - முல்லைப் பூமாலையையணிந்த; இம்மாலை கற்பிற்கு உரியது. இங்கிதம் - குறிப்பு.

அ. தரம் - தகுதி. புகலின் - சொல்லுமிடத்து.

கூ. அது - அக்கூடு.

கo. எய்தியமாலை - வந்தவிடலி. மறைத்து ஒருமாதை விட்டானென்க.

கக. முல்லைத் தெரிவை - பத்திரர் மகள். முன்பேசி வந்து - முன்பு சபதஞ் செய்துவந்து; முன்பு ஒசிவந்து என்றுமாம். கருகிட - கோபிக்கும்படி. கற்பினளை.

(பி - ம்.) [1]'என்றலுமன்னவன்' [2]'பிரிவுறுதென்முன்' [3]'ஆங்கிருந்து'.

துப்பிலா மாது பாட [1]வியைந்துமென் சுருதி மாது
மொப்பிலா யாழ்தி ருத்திப் பாடிஞ ளுயர்புண் டாக. (கஉ)

காதிவர் தவடன் பாட்டைக் காகவெஞ் சுரம தென்றுங்
கோதில்கற் புடையாள் பாட்டைக் கோகிலச் சுரமதென்றுங்
[2] தீதற வவையி ருந்தோர் செப்பிடக் கேட்டுந் துப்பின்
மாதினே வியந்தான மாறன் மாறிமுற் செற்றங் கொண்டே. (கச)

நெறிகெட வாரம் பட்டு நீதிமன் சொல்லக் கண்ட
வறிவுளோர் களுமி ராசா [3]வனுமதி தருமு மென்னு
மறைமொழி தணிந் னேன்று மாதுர மாக வந்த
விறலியே பாடி ஞளென் றறைந்தனர் வியந்து சால. (கரு)

மற்றது கண்டு வந்த விறலியுள் களிப்ப மன்னன்
கற்புடை யாள்வ ருந்தக் கண்டிளம் வருந்தேன் மண்ணிற்
சொற்றரும் வெற்றி தோல்வி சொல்லிடி னியாவர்க் கில்லை
யெற்றிகழ் மாதே வித்தை செயுமிடத் தென்ரூன் மெல்ல. (கசு)

மன்றிடை யின்று போகி நாளைவந் தேதறும் வாதி
லென்றுபி னிசைத்துப் [4]போக்க வேந்திழை போந்து சாலக்
கன்றுநெஞ் சோடு நந்தங் கணவனுக் குதவி செய்த
வென்றிகொள் சொக்க னுக்கு விண்ணபஞ் செய்வ மென்றே. (கள)

வே று.

கருணைசேர் [5]கடவு ளாலயத் தணைந்து கண்ணினீர் சோரவீழ்ந்
தாற்றித, தரைமிசை யெவர்க்கும் வைத்தவன் பொழியத் தனியொ

கஉ. துப்பிலா மாது - வந்தவிடலி; 'துப்பின்மாது' என்பர்பின்னும்; கச.

கச. காகசுரம-காகம் கத்தினுற் போலப்பாடுவது; அஃது இசைச்தொழிற் குற்றம் எட்டினுள் ஒன்று; இதனை, "பெருக்குரல் கட்டை மழுவல் விலங்க, லொருக்கி யொதுக்கம் புரைததல் - விருப்பிலாக், காகுளி காக சுரமென்னு மிவ்வடபும், ஆகாவெனச் சொனனு ராய்ந்து" என்னும் இசைமரபு வெண் பாவால் உணர்க. 'மாதன்' என்பதற்கு மாறுதலையுடையவனென்னும் பொருள்புலப்படக் கூறியிருத்தல் ஆராய்தற்பாலது.

கரு. வாரம்-பக்ஷபாதம்; "ஓரங்கூர்த்து" என்பர் பின்னும்; உ0; "வாரம் பட்டுழுத நீயவு கல்லவாங், நீரக் காய்ந்தழி கல்லவுந் நீயவா, மோரும் வையத் நியறகையன் றேவெனு, வீர வேனெடுங் கண்ணி விளம்பினுள்" (சீவக. அஅஅ) என்னுஞ்செயயுள் ஈண்டு உணரற்பாலது. இராசா அனுமதிதருமம் - இராசாவுடைய அனுமதியேதருமம்; "மன்னவனெப்படி மன்னுயிரப்படி" என்னும் பழமொழியும, "மன்னவன் சொன்ன வாறே சொல்வது வழக்காதன்றே" (திருவிளை. இசைவாது. கஅ) என்பதும் இங்கே அறியற்பாலன. மாதர மாக - இனிமையாக.

கசு. சொல் - புகழ். எல் - ஒளி. கள. ஏறும்: முன்னிலைப்பன்மை.

கஉ. எங்களென்றது கணவரையுமுளப்படுத்தி.

(பி - ம்.) [1]'வியந்துபின்' [2]'தீதறுமவை' [3]'அனுமதோதருமம்' [4]'போக' [5]'சொக்கன்'

ரன் பெங்கண்மேல் வைத்தா, யுரைகெழு மரச னுளக்கருத் தறிவை யுய்யுமா றறிகிலே னரசே, திருவரு ளொழிய வொருவழி யில்லை காத்தரு ளெனத்துதி செய்தாள். (கஅ)

வேறு.

அன்புடை யாளே நெஞ்சக மஞ்சே
னன்பரி வோடி முதவுவ ஞாலே
மின்பொலி மாறன் றன்புலம் விட்டே
யென்புலம் வாபோ [1]வென்றன னெம்மான். (ககூ)

வேறு.

நின்றதிரு வுரைவிசும்பிற் கேட்டு நீங்கா நேசமொடு நனிவாழ்ந்து போந்த பின்றை, வன்றிறன்மன் னவனவரை மற்றை ஞான்று வரவழைத்தின் னிசைவாது கண்ட வைக்க, ணெஞ்ஞ்நியவர் தம்மொடுமூன் னையினுஞ் சால வுண்மைமறைத்[2]தோரங்கூர்ந் தினிய நெஞ்சங்,குன்ற நவின் றிடத்தோலாக் கற்பு மாது கூறுவாள் சீறியுளங் கொதித்து விம்மி. (உ0)

கைதவகேள் கைதவமா காதி யானுங் கழறுமொரு விண்ணப்பங் கைக்கொ ளொப்பின், மைதிகழுங் கண்டத்தன் சொக்க நாதன் மன்ன டபத்துப் பாடியக்கா லிருந்தோர் தம்மு, ளெய்தியவா ரூருத்திதனை வென்ரு ளென்றங் கியாரொருவர் சொல்கின்ரு ரவளே வென்ற,மெய் தருநா யகிமற்றிங் கென்மு கத்து விளம்புமது [3]செற்றங்கொண் டென்ருண் மெல்ல. (உக)

ஒள்ளியவ டள்ளியுரை செய்யா முன்ன ருயர்புடைய வுலகத்தைப் பேணி யொன்றும், விள்ளுதல்செய் யாதங்கண் மேவி ஞல்யாம் வேறுருவ ராவேமோ வெனப்[4]போ தென்ன, வள்ளலெளி யவர்க்கெளிய சொக்க நாதன் மண்டபத்து ளெண்டிசைமண் டலிகர் போற்றத், தெள்ளுதமிழ் வாணரிசை வாணர் சூழச் சேர்ந்திருந்தான் போக்தெவரும் வியப்ப வேந்தன். (உஉ)

புகழ்தருபத் திரன்றேவி யுண்மைக் கின்று புவிகாண நமைச்சமப்ப ளென்று கொண்டே, யகமகிழ்வி ஞெடும்வந்தாங் கறிவி லாதாளைவையேற வறிவுடையா ளெங்குந் தானுஞ், சகமுதல்வன் றனைநினைந்து மெல்ல வொல்லைச் சார்தலுமற் றங்கிருந்த வேந்தற் சார்ந்தோர், முகமுகம்பார்த் தனசென்னுய் விளையு மிந்த முன்னவன்றன் செய தெரியா தென்று கொண்டே. (உங)

உ0. ஓரங்கூர்ந்து = பக்கபாதமிருந்து. உக. கைதவம் = வஞ்சனை. உஉ. என - என்று தன்னுட்கருதி. தமிழ்வாணர் - தமிழ்ப்புலவர்கள். உங. முகமுகம்பார்த்தனர் = ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்; "கண்மல்கு நீரார் முகமுகக்க ணேக்கினரே" (சீவக. கஅ0அ.)

(பி - ம்.) 1'என்றனனிறைவன்' 2'ஓரம்பட்டு' 3'செற்றமகோளென்ருண்' 4 'போதென்று'

கவ மு.

பரந்தவன் கண்டு பாடும் பாணரு முருக்க ரந்து
பொருந்தவந் திருந்தா [1]னப்பாற் போதமின் மாது முன்னர்
நிரைந்ததந் திரிதி ருத்தி நேசமன் னவனே வாழ்த்தித்
தெரிந்துதான் வல்ல பாடல் பாடினு டீரம் பேசி. (உச)

கவ மு.

வேர்த்தன ணடுங்கினள் விதிர்வி திர்த்தனள்
வாய்த்தில விசையென வாயு லர்ந்தன
டீத்தரு முளம்பறை யறையத் தென்னனைப்
பார்த்தன ளவையவை கண்டும் பாடினள். (உடு)

கவ மு.

புனைபெருக் குரல்க டத்தல் புரைத்தன்மே லொருக்கன் மிக்க
வினைபடி காக வோசை காகுளி விலங்க னீங்காத்
தனிபடி கட்டை யெட்டின் றகுதியிற் றிகழும் பொல்லா
வினிமையில் சுரத்தைக் கண்டாங் கிருந்தவர் வியந்தா ரில்லை. (உசு)

மூத்தவெண் ணகைகது ளங்க முறுவல்செய் திறையை வாழ்த்திச்
சித்திர யாழ்தி ருத்தித் திருமலி களந்தி ருத்தி
மெத்திய மடப்பத் தோடி மெல்விரல் சிவப்ப வொற்றிப்
பத்திரன் றேவி மெல்லப் பாடினுள் பண்ணி னேங்க. (உஎ)

ஆங்கரி மூரற்சி யென்ன வருங்குயி லோசை யென்ன
வாங்கிருங் கடலுள் வாழும் வலம்புரி முழக்க மென்ன

உச. பரந்தவன் - சிவபெருமான். போதமில்மாது - வந்த விதலி.

உடு. உளம்பறை அறைய-நெஞ்சுநடுங்க; நிசை: ஈஅ-ஆம் பாடலின் குறிப்பைப்பார்க்க.

உசு. பெருக்குரல் - வெடித்தகுரலாகிய வெள்ளோசை. கடத்தல் - ஓர் ஓசையான தன்மைநீங்கிப் பலவோசையாய் வருதல். புரைத்தல் - ஒருதானத்தே பாட ஒருதானத்தே நழுவுதல். மேலொருக்கல் - ஒதுக்கிப்பாடுதல். காக வோசை - காகம் கத்தினற்போலப் பாடுதல். காகுளி - பேய்கத்தினற் போலப் பாடுவது. விலங்கல் - ஒருபண்ணைப்பாட வேறொருபண்ணிலே விலகிநின்று இசட்டல். கட்டை - நிறமும் தானமுங்குறையுங் கீழிசை. இவற்றை, "பெருக்குரல் கட்டை.....சொன்னூலாய்ந்து" என்னும் இசைமாபு வெண்பாவாலும், "நாசிகாகுளி வெடிகுரல் வெள்ளோ, பேசாக் கீழிசை யொருபுற மொட்ட, னெட்டுயிர்ப் பெறித லெறித்தநின் றிரட்ட, லோசை யிழைத்தல் கழிபோக் கென்னப், பேசுறு குற்ற மசைவொடு மாற்றி" (கல். உடு) என்னும் செய்யுளாலு முணர்க.

உஎ. இறை - சிவபெருமான். மடப்பம் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை.

உஅ. அரிமூரற்சி - வண்டின் நாதம். மூவிசை- - மூவகை ஓசை; "தீம்பமொழி மென்குயிலுஞ் சோலைவரி வண்டினமும், வைய முழங்கும்

(பி - ம்.) [1]'இப்பாற்' [2]'பெருக்குரல்'

வோங்கிய சராச ரங்க ளுருகிடப் பாடி நீதி
தூங்குமூ விசையைக் கண்டு துதித்தன ரிருந்தோர் யாரும். (உ.அ)

தணிவின்மாத் திரையொன் பானுந் [1]தானங்க ளெட்டி னுனு
கணுகிய கிரியை பத்து நண்பதின் மூன்றெ ழுத்தா
லணுகிய தொழிலா ரேங்கு மைந்திலை விளங்கு மும்மைத்
திணையெழு பாடல் கண்டு தேவரு மதிச யித்தார். (உசு)

வேந்தனுர் செவிப்பு லத்து வினைபட வாங்கி விட்ட
வாய்ந்தமென் சரம்ப டாமுன் மாண்டது செற்ற மேனி
சோர்ந்தது நெகிழ்ந்த துள்ளந் தும்புரு நார தாதி
வாய்ந்தவர் பாடும் பாட லென்றது வாக்கு வாழ்த்தி. (ஈ0)

பரிந்தது புதுமை யேயோ [2]பகைத்தவ னெஞ்ச மெங்கு
நிரம்பியோன் முன்னின் றுலெங் நெஞ்சக முருகா தங்க
ணுரம்படச் செவிப்பு லத்தி லொண்டொடி பாடு மென்மைச்
சரங்கொடுஞ் சரம்போற் றைப்பச் சரங்கொண்டாள் சரமி லாதாள்.

மற்பொலி திண்டோட் டென்னன் வன்பிழை பொறுத்தி வென்ற
கற்புவீ றுடையாய் தோற்றுள் கழுத்திடை வளைத்தே றென்ன
விற்பொலி நுதலாள் கேட்டு மெய்த்தவ னருளை வாழ்த்திப்
பொற்புறு கழுத்தி லேறி யிருந்தனள் [3]பொலிவுண் டாக. (ஈஉ)

மாலையைக் கழுத்தி லிட்டோர் மாலெனின் றுலாவக் கண்ட
ஞாலமீ துள்ளோர் மிக்க நகையொடுங் கூடி வாழ்த்தி
யேலவர் நிறைஞ்சிற் கூட லிறைவனை யிறைஞ்சி னல்லான்
மேலொரு தெய்வ முண்டோ விதியிலீ ரெனவி யந்தார். (ஈஈ)

வலம்புரியும் - கைவைத்துத், தும்புருவு நாரதரும் பாடியமூ வோசை யென, நம்புநீர் நால்வேதத் துள்'' என்பது இசைமாபு.

உசு. தானங்கள் எட்டு - இடங்கள் எட்டு. இச்செய்யுட் பொருளை, ''மாத்திரைக ளொன்பானு மன்றுன மோரெட்டு,மேத்துங் கிரியையெண் பீரைந்தும்-கோத்துப்,பதின்மூன் றெழுத்தாற் றொழிலெங்கும் பண்ணின்,மதியோர்க ளேந்து சிற மாம்'' என்னும் இசைமாபு வெண்பாவால் ஆராய்க.

ஈ0. சரம் - ஸ்வரம்; அம்பென்பது மற்றொருபொருள்; அடுத்த செய்யுளாலு மூணர்க.

ஈக. பகைத்தவனெஞ்சம் பரிந்தது புதுமையேயோ. 'எங்கும் நிரம்பியோன் முன்னின்றுல் எங்நெஞ்சக முருகாது' என்பது, ''யார்க்கு முன்னவனே முன்னின்றுன் முடியாத பொருளுளதோ'' (பெரிய. திருவாரூர்ச். சுள) என்பதைத்தழுவியது. சரம் - ஸ்வரம், அம்பு. சலம் - தணியாக்கோபம், சலனம்; லகரத்திற்கு ரகரம் இங்கே போலியாகவந்தது.

ஈஉ. மெய்த்தவன் - சிவபெருமான்.

ஈஈ. மாலையை - விதலியை; பூமாலையை யென்பது மற்றொரு பொருள்; ''வாடிய மாலை வாடா மாலைதாள் வீழக் கண்டே'' என்பர்பின்னும்; ஈடு.

(பி - ம்.) 1'தாளங்கள்' 2'பகைத்தவர் நெஞ்சோ' 3'பொலிவுகூர்ந்து'

மறுவில்சுந் தரனைப் பாடி மதுரைவாழ் விறலி வந்த
விறலியை வென்ரு ளென்றல் புதுமையோ வெனவி யந்து
செறிமணிக் கவிகை தூசு சிவிகைமற் றெவையு நல்கிக்
கறைகெழு வேற்கண் ணூளைக் [1]கழுத்தினின் றிறக்கி விட்டான். ()

வாடிய மாலை வாடா மாலைதாள் வீழக் கண்டே
யாடரும் பெரிய நாம மாலவாய் மாலை யென்று
சேடுறக் கொடித்துத் தெய்வச் செயலல்லான் மனிதர் செய்யு
மீடிய செயல்கள் சற்று நிலைநில்லா நிலைநில் லாவே. (நடு)

கண்டன மெங்ங னென்னிற் கருணைசேர் சொக்கன் றன்னை
யுண்டென விருந்தாள் வென்ரு ளுலகினை யாளு கின்ற
வெண்டரு நம்மை யுண்டென் றிருந்தவ டோற்ரூண் மற்றென்
பண்டிறன் மொழிவ தென்று பன்முறை யதிச யித்தான். (நசு)

மற்றவர் தம்மைத் தத்த மனைவயிற் போக வேவிக்
கற்றைவார் சடிலச் சொக்கன் கருணையை விறலி கற்பைப்
பொற்புற வாழ்த்தி வேந்தன் போயின [2]னினிய நல்கி
நற்றமி ழிறைவன் ரூனு நகையொடிங் கோயில் புக்கான். (நஎ)

பத்திரன் ரூனு மிக்க பழுதில்கற் புடையா ளோடும்
வித்தக னருளா லங்கண் வீற்றிருந் தளவில் கால
முத்தம விமானத் தேறி யும்பர்கோன் முதலோர் வாழ்த்த
வெத்தலத் தோருங் காண வேகினன் சிவலோ கத்தே. (நஅ)

ஆகத்திருவிருத்தம் - கசுஅ.

நடு. சேடு - பெருமை.

நசு. பண்டுதல் - பழைய செய்தி.

நஎ. 'சொக்கன்': "ஆலவாய்ச் சொக்கனே" (திருஞா. தே; மதுரைக் கலம். நி, கஅ, கநு, கசு, அஉ.; மீனுட்சி இரட்டைமணிமாலை, உ,கஅ.) கற்ற மிழிறைவன் - சிவபெருமான்.

நஅ. அளவில்காலம் வீற்றிருந்த.

(பீ - ம்.) [1]'கழுத்தினினிறக்க' [2]'உயர்பூணல்கி'

நி அ.—பன்றிக்குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல்.*

முன்னமோர் காலம் வெய்ய மூரணடு படையான் மிக்க
வின்னெறி பயக்கும் வேளாண் மரபினி லிலங்கு வாளோர்
வன்னியர் தலைவன் ரோன்றி மாசறு குலத்துக் கொத்த
கன்னியை மணந்த றத்தின் வாழ்ந்தனன் காட்டு நாட்டு. (க)

ஆங்கவன் றனக்கு முன்னை யரும்பெருந் தவத்தா னன்மை
1 யோங்கிய விராறு மைந்த ரவள்வயிற் றுதித்து நீங்காப்
பாங்குறு செல்வத் தோடும் பழுதற வளர்ந்தி யாருந்
தாங்கரு மிளமைத் தன்மை யடைந்தனர் சால வன்றே. (உ)

விழைதரு நாளி னல்ல மேம்படு தந்தை தாய
ருழையிடை 2யிறப்ப மிக்க செல்வமு மொழிந்து தூய
வழகினல் வலியா லோங்கு மருங்குல மைந்தர் முன்னைப்
பழவினை யிழுப்ப வாடிப் போயினர் பரதே சத்து. (ங)

தொல்லியம் பதிவிட் டொன்னர் துரப்பமற் றியாவும் விட்டு
நல்குர வலைப்பப் 3போனோர் நாடொறும் வருந்த மேனி
பல்வித நிலங்க டோறு நாஞ்சிலாற் பகலு மல்லும்
புல்லற வுழுது 4கொண்டு புன்பயிர் விளைத்துண் டாரால். (ச)

அடைவினித் தகவிற் போது மரும்பெரும் புதல்வ ரங்கண்
படிபுகழ் வேட்டை வேட்டுப் பாசவெஞ் ஞாளி விட்டுத்
தொடர்விடா விதிவ சத்தாற் சுழன்றுழன் றுளத்தன் பின்றிக்
கடியபல் விலங்கு கொன்று காட்டிடை யுலாவு நாளில். (ஞ)

க. மூரண் அடு - பகையை வெல்லுகின்ற. இன்னெறி - இனியநெறி; இல்லறநெறியுமாம். வன்னியர்-ஒருவகைச் சாதியார். காட்டு நாடு-பாண்டிய காட்டின் கண்ணதாகிய சிறியதாரு நாடு; அது களவேள்வி நாடென்றும் பெயர்பெறும்; "முன்னோர் பாண்டியன் சோழற் காய்ந்து, பெருங்கள வேள்வி செய்த பீடிடைக் காட்டு நாட்டுள்" என்பதனாலு முணர்க; சசு: இசை.

உ. அன்று, ஏ: அசைநிலைகள். ஙா. உழை - வீடு.

ச. தூரப்ப - ஓட்ட. மேனி வருந்த. நாஞ்சில் - கலப்பை. புன்பயிர் - நெற்பயிரல்லாதவைகள்.

ஞ. ஞாளி - நாய்.

* "ஏனக்குருளைக் கருளினை போற்றி" (திருவா. போற்றி. கஙக); "கோலமேனிவராகமே" (ஷெ. திருக்கழுக்குன்றப்பதிகம், ஞ); "ஏவண்டபன்றிக் கிரங்கி யீச னெனக்தை பெருந்துறையாதி யன்று, கேவலங் கேழலாய்ப் பால் கொடுத்த கிடப்பறி வாரெம் பிரானுவாரே" (ஷெ. திருவார்த்தை. ச); "தாயாய் மூலையைத்தருவானே" (ஷெ. ஆனந்தமாலை. ஙி.)

(பி - ம்.) 1 'ஓங்கியபுதல்வீராறு' 2 'இறந்தகல்ல' 3'போனகாட்டிடை' 4 'நாளும்'

மெய்ப்படி சாபம் வல்ல மேதகு முணர்வி னுலே
சொப்பிலா முனிவன் றாற்றி னுழைபுகுந் திருந்து மிக்க
செப்பருந் தவஞ்செய் காலைச் சென்றவர் திரண்டு சூழ்ந்து
தப்பென வங்கை [1]கொட்டிப் பாடினர் சால நக்கு. (சு)

வே று.

மற்றது கண்டு முற்றிய தவஞ்செய் மாமுனி சீறியாங் கவரைப்,
பற்றியெங் கிலமு முழும்பழ மையினுற் பரிவுடைத் தழுந்தொழி லுமக்கே,
யுற்றதோர் பன்றி வயிற்றகத் துதித்தின் றுழுமின்வெங் குருளைக ளாகிப்,
பெற்றதா யினையு மிழந்திடக் கடவீ ரென்றுமுன் பிழையறச் சபித்தான். (ஏ)

முனிவரன் சபிப்ப நெஞ்சக மஞ்சி முதிர்தரு பத்தியிற் கூடி, நினையடி
தொழுதே மாசிலா தவனே நீள்பிழை பொறுத்தரு ளின்றென், றனைவரும் வணங்கக் கண்டுதா யிறந்தா லருளுடைச் சொக்கனின் னருளான், மனிதரா யுதித்துத் தலைவரா கென்று மறுபெருஞ் சாப
மும் கொடுத்தான். (அ)

வே று.

இக்கெறிச் சபிப்பப் போந்தாங் கெல்லைசூழ் முதிய வெற்பில்
வன்னியர் நெடுமு கத்து மைந்திறக் கூனற் கேழ
றன்வயிற் றுதியா முன்னந் தாயையொண் புவியாண் மாறன்
மின்னிய கணையா லெய்து கொன்றனன் வேட்டை யாட்டில். (கூ)

வே று.

யாயிழந்த போதகங்கள் யாய்வரவு காணுமற்
காய்துயரங் கொண்டழுங்கல் கண்டுகரு ணைச்சொக்க
னேயவுரை யாவு முணர்வா னியைந்தவற்றின்
ரூய்வடிவங் கொண்டான் றவத்தோ ரதிசயிப்ப. (கo)

சு. தூறு - புதர். தப்பு - ஒருவகைப்பறை.

எ. உழுந்தொழில் உமக்கே பரிவுடைத்து. குருளைகளாகி - குட்டிகளாகி. முன்பிழை - தப்பெனக்கையைக் கொட்டிப் பாடியது.

அ. சொக்கன் இன்னருளால் - சொக்க நாயகரது இனிய அருளினால். மறுபெருஞ் சாபம் - சாபவிமோசனம்; இதனைப் பிறிது சாபமென்றார் முன்; உ: கஉ.

கூ. வன்னியர் - மேற் கூறிய பன்னிரு மைத்தர்கள்; எழுவாய்.

கo. யாய் - தாய்ப்பன்றி. போதகங்கள் - பன்றிக்குட்டிகள். அழுங்கல்-வருத்தலில். உரையாவும் உணர்வான் - சொக்க நாயகர்.

(பி - ம்.) [1]'கொட்டியாடினர்'

வட்ட முறிமதிய மென்ன வலைதுண்ட
நெட்டை முகமிலங்க நேர்ந்ததனி வாறுடிப்பக்
குட்டிபரிந் துண்ண விருபாலுங் கூர்மூலைப்பால்
விட்டொழுக வோடி நடந்ததால் வெவ்வேனம். (கக)

படியிடந்த கோலம் பரவுகின்ற கோல
முடையபெருங் கோல முறுமிக் குறுகி
யடிப்பப்பி யாவு மலைப்பப் படிந்தே
மடிசுரந்து காட்டிமூலை யூட்டியதால் வாழ. (கஉ)

வே று.

அருள்சுரந் தெழில்சேர் மடிசுரந் தளித்த வமுதபா னத்தினு லன்றே
குருளைபன் னிரண்டு மெழிறர வளர்ந்து குஞ்சர நிகரவப் பொருப்பி
லுரனுறு கோட்டாற் றழல்விழி யுமிழ 1வொண்டல மேடவ லாகப்
புரையற வுழுது திரிந்தன வியைந்த பொலிவுறு வலியினு லோங்கி.

வே று.

பொருவி லாத பொதியின் முனிவகே
ளரிய நாத னருள்கூர் திருமூலை
வரிசை கூர்வாய் மடித்துக் குடித்தநற்
பெரிய கோலங்கள் பின்னரென் செய்தன. (கச)

ஆகத்திருவிருத்தம் - கசுகள.

நுகூ.--பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.*

அருள்பொழியுந் திருமேனி யங்கயற்க ணுமைமமங்கை
தரைபுகழு முதுகேழற் றனுக்கொண்ட தலைவனைப்பார்த்
துருகியபே ரருள்கண்டாண் டதிசயித்தன் புறத்துதித்துத்
தெரிதரின் முரைசெய்வாள் செய்யதிரு வாய்மலர்ந்து. (க)

கக. வட்டமுறி மதியம் -வட்டம் முறிந்த சந்திரன்; என்றது பிறை மதியத்தை. துண்டம் - மூக்கு. இருபாலுமுண்ண - இரண்டுபக்கத்தும் உண்ணும்படி.

கஉ. படியிடந்த கோலம் - ஆதிவராகம். கோலம் - வடிவு, பன்றி.

கங. அன்றே - அக்காலே. அவல் - பள்ளம்.

கச. இச்செய்யுள் அகத்தியமுனிவரை நோக்கி முனிவர்கள் விஞ்ஞபித்தது.

* "கருமுகிற் கனிநிறத் தழற்கட் பிறையெயிற், சரிதரு குட்டி யாயபன் னிரண்டினோ டெக்கோல் மூவெயிட் டருணீர் தேக்கிக், கொக்கள வென்னும் படர்கலை கட்டுத், திப்பட ராணை வேலி கோலித், தருமப் பெரும்பயி ருலகு பெற விலக்கு, நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்" (கல். சO.)

(பி - ம்.) 1'ஒண்டலமிடம்வலமாகப்'

வேறு.

விலங்குகள் கொன்று காட்டு வேட்டையா டுதலைப் போதுக்
தலம்புகழ் மன்ன வர்க்குத் தருமமா மதனுற் பாவ
மலைந்தவர் மேற்செல் லாது வறிதுவெவ் விலங்கு சாக
நலந்தக ஹருவங் கொண்ட தென்கொலோ நாய னீரே. (உ)

அன்றியும் பெருமை மிக்க வலகில்லை யோ னிகளிற் றேயா
தென்றுமே லாக வோங்குந் தலைவர்நீ ரிழிந்த பொல்லாப்
பன்றியு நாற்கா லுள்ள பல்பெருஞ் சாதிக் கெல்லா
மொன்றிய கடைய தன்றே வுளத்திடை யோருங் காலே. (ஊ)

அப்படி யிருப்ப விந்த வங்கங்கொண் டிலாவு கின்ற
தெப்படி யருளிச் செய்யுங் காரண மென்றி றைஞ்சத்
துப்பிதழ் மாதே கேளா யயன்முத லாகத் துன்னித்
தப்பற வெலும்பீ ருகத் தனுத்தொறு நிற்பேம் யாமே. (எ)

அவ்வவ யோனி தோறு மவ்வவ வுருவங் கொண்டே
யெவ்வுயி ரையும்வ ளர்ப்பே மிரங்கியா மீது நிற்க
வுய்வுற வளித்த மக்க ளியாவரு மொத்தி ருப்பச்
செவ்விய வன்பு தாயர்க் கொருவர்மேற் செல்லக் கண்டேம். (ஏ)

வேறு.

ஆதலா லெமக்கு மீங்கித னளவி லன்புமிக் கதுவது பிறங்க
வோதுவா மதற்குக் காரண முன்ன மொருபெருந் தவமுனி சபிப்ப
வேதமில் வராக வயிற்றுதித் திடுமு னிறந்தது தாயுமப் போதே
வேதனை யுறுதல் கண்டியாம் வளர்ப்பான் கொண்டன மிரங்குதாய் மேனி.

ஈங்குமுன் வளர்த்த தருமமா மிவைதா மிக்கொடுங் காட்டிடைச் சின்ன
ஊங்கற வுலாவி யிவ்வுடல் விட்டோர் தீதிலா வினியசூத் திரனுக்
கோங்கிய புதல்வ ராகிநல் லொழுக்க மூயர்புக ழறிவுற வுதித்தே
யாங்குதென் னவற்குச் சேனைநா யகர்க ளாகுகம் மாணையா லென்றான். (ஐ)

வேறு.

துப்பிதழ்ப் பச்சை மேனிச் சுருள்கருங் குழலா ளங்குச்
செப்பிய மாற்றங் கேட்டுத் திருவுளங் கண்டு வாழ்ந்து
மெய்ப்புழுப் பிரம லோகப் பிரமன்மெய்ப் புழுவ தாக
வொப்புட னுக்க வல்லீ ருமக்கிது புதுமை யன்றே. (அ)

உ. கலக்கு - விரும்பி.

ச. இந்த அங்கம் - பன்றிவடிவம். காரணத்தை அருளிச் செய்யும். துப்பு - பவழம். தனுத்தொறும் - உடம்புகள் தோறும். இச்செய்யுளின் பின்னிரண்டடியின் கருத்து, நிந: உஅ - ஆம் செய்யுளிலும் வந்துள்ளது.

ஞ. யாம் எவ்வுயிரையும் வளர்ப்பேம்.

சு. இதன் அளவில்-இப்படன்றிக்குட்டிகளிடத்தில்; இது சாதியொருமை.

எ. நம்மாணையால் இவைதாம் சேனை நாயகர்களாகும்.

வேறு.

அடைந்தது சிறிய தாயினு மருள்கூர்ந் தளப்பரும் பெருமையை யளிக்குங், கடம்பமா வனத்தீர் நும்பெரு மூலைப்பாற் கடல்குடித் தவைகளி கூர்ந்து, மடங்கல்போல் வலியுஞ் செல்வமு மோங்கி மன்ன வர்க் கமைச்சராய் வாழ்ந்து, நெடும்பெருங் கால மிருப்பதிங் குரைக்க வேணுமோ நினைத்திடி னென்ன. (கூ)

வேறு.

1 திருந்துநா யகன்ம கிழ்ந்து தேவர்பூ மாரி பெய்யப்
பொருந்திய கோலக் கோலம் பூண்டது விட்டு நீண்ட
வரந்தரும் பெரிய துங்க மதுரையம் பதியிற் போந்தாங்
கரும்பெருங் கோயில் புக்கா னங்கயற் கண்ணி யோடும். (கo)

கனலுமிழ் செங்கட் டுங்கக் கடும்பிறைக் கோட்டு மாக்கள்
வினையறச் சிறிது கால மூலாவிமீண் டருளால் வெற்பிற்
பூனையுரு விட்டுப் போந்து புனிதவே ளாண்கு லத்தோர்
தனியுயர் தலைவ னுக்கு மைந்தராய்ச் சார்ந்த வன்றே. (கக)

2 பிறந்தபின் ரூய்மார் தந்தை பேசரு முவகை கூர்ந்தாங்
கறம்பல செய்து போற்றி யடைவினின் வளர்ப்ப யார்க்கு
நிறங்களும் வலியும் வாக்கு நீதியு மறிவு மற்றெத்
திறங்களு மொப்பக் கண்ட தேவரு மதிச யித்தார். (கஉ)

மண்ணவ ரதிச யிப்ப வளர்ந்தவா றுயர்ந்தோர் சொல்லத்
தண்ணளிச் செழியன் கேட்டுத் தன்னுழை வரவ ழைத்துப்
புண்ணிய வடிவீர் நும்போற் கண்டிலே மென்னப் புல்லி
யுண்ணிறைந் ததிச யித்தா லொருவர்போ லுருவங் கண்டே. (கங)

3 இந்தவெந் திறஞ்சேர் மைந்த ரெழிலினு லறிவா னந்தஞ்
சுந்தரன் குமாரர் போலு மிருந்தன ரெனத்து தித்துத்
தந்திர மூற்றும் போற்றத் தனித்தனிப் பட்டங் கட்டி
மந்திரித் தலைவ ராக வைத்தனன் வரிசை கூர. (கச)

மழைமதப் புழைக்கை யானை வாம்பரி தேர்ப தாதி
செழுமையிற் பொங்கு நான்கு சேனைக்குந் தலைவ ராகிப்
பழுதிலா நினைவா லோங்கும் பன்னிரண் டமைச்சர் கட்குந்
தழைகதிர் மதிதேர்ந் மாடந் தனித்தனி யிருப்ப வீர்ந்தான். (கந)

கூ. அளித்தல், கடம்பவனத்திற்கு அடை. வேணும் - வேண்டும்.

கo. கோலக்கோலம்: மடக்கு.

கக. பிறைக் கோட்டு மாக்கள் - பன்றிக்குட்டிகள். மாக்கள்சார்ந்த.

கச. அறிவால் ரத்தம். தந்திரம்-சேனை. போற்ற-பாதுகாக்க. பட்டம்-சேனைபதிப்பட்டம். சேனைத்தலைவர், மந்திரிகளாக இருத்தலும் உள்ளதாதலின்

(பி - ம்.) 1'திருந்தாயகன' 2'பிறங்குபன்னிருதாய்தந்தை' 3'இந்தவோர் பருவமைத்தர்'

ஈநறிப்படி மதுரைத் தென்ன னீள்பெருங் கோயில் வாயில்
சிறப்புற விருந்து நாளுஞ் செய்தியா ராய்ந்து சால
[1] வறத்தினே ரொழுகிச் சொக்க ஞாணையால் விளங்கி யெங்கு
முறப்புகழ் கொண்டார் சேனை யோட்டிசா மந்த ராகி. (கசு)

கலமலி சிறிது காலஞ் சென்றபி னவையொன் றில்லா
வலியினு லறிவா லோங்கி வன்னியத் தலைவ ராகிச்
சிலைபொலி தடக்கை வேந்தைத் திசைவிச யஞ்செய் வித்தார்
தலமெலா மதிச யிப்பச் சாற்றரும் [2]பகைக டந்தே. (கஎ)

வே று.

கொன்றைச் சடில மூடிச்சொக்கன் கொற்ற மாறற் கிரவின்க
ணொன்றிப் புகுந்த செய்தியெலா மூணர்த்தச் சொக்கன் குமரரல்லா
லின்றிப் புதுமை வல்லவரா ரென்று தெளிந்தா னன்றுமுதற்
பன்றிக் குறும்பர் பன்னிருவ ரென்னச் சிறந்தார் படிமீது. (கஅ)

கருணை கூர்ந்து கேழலுருக் கொண்டு கருநி மூலியூட்டி
வரிசை பூனைவன் னியராக்கி மண்மேல் வளர்த்து வாழ்வித்தாங்
கரிய சிவலோ கமுமளித்தோன் சீர்த்தி விளங்க வவைவளர்ந்த
கரிய மலையைப் பன்றிமலை யென்பா ரின்றுங் காசினியில். (கசு)

ஆகத்திருவிருத்தம் - கசுருசு.

சுo.—கரிக்குருவிக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.*

விரும்பி யுயரமுனம் விண்ணிற் பறக்குங்
கருங்குருவி யெந்நாளுங் காக்கைக் கொளித்தே
நெருங்கு வனத்தொதுங்கி நீள்பதங்க முன்னு
வருந்த லொழிந்துலர்ந்தாங் கஞ்சியுழல் காலம். (க)

"மந்திரித் தலைவராக வைத்தனன்" என்றார்; இதனை, வருஞ்செய்யுட்களாலு முணர்க. போலும்: உம்மை, அசைநிலை.

— கசு. மந்திரிகளும் சேனைத்தலைவர்களும் அரசனுடைய அரண்மனைவாயிலிலிருந்து தத்தம் தொழில்களை இயற்றுதல் இயல்பு; சுக: சo - ஆம் செய்யுளைப்பார்க்க. சாமந்தர் - சேனைத்தலைவர்.

கள. வன்னியத்தலைவராகி - சேனாபதிகளுக்குத்தலைவராகி; இக்குறிப்பு கம், சு-ஆம் செய்யுட் குறிப்பைப்பார்க்க.

கஅ. முன்பு, "சுந்தரன் குமாரர் போலுமிருந்தனர்" (கச) என ஐயுற்றவன், இப்பொழுது தெளிந்தானென்றுணர்க.

கசு. அவை - அப்பன்றிக்குட்டிகள்.

(சo)

க. பதங்கம் - விட்டில்.

* "கருங்குருவிக் கன்றருளினை போற்றி" (திருவா. போற்றி. உoசு); "இவ்வல குயிரளித்த, பஞ்சின் மெல்லடிப் பாவைசூ றுகிக், கருங்குரு விக்குத் கண்ணருள் கொடுத்த, வெண்டிரு நீற்றுச் செக்கர் மேனியன்" (கல். எ.)

(பி - ம்.) [1]'அறத்தினினேங்கிச்' [2]'பகைகடிந்தே'

ஆங்கவற்றுண் மிக்க வறிவுள்ள தோர்குருவி
யோங்கு மொருகா லருளா லுணர்ந்தபடி
மீங்கிவ் வுலகி லியாவர்க்கு முண்டுபகை
தீங்ககல வெல்லாரு மூண்டதனைத் தேருங்கால். (உ)

வென்றிப் புரம்வென்றோன் வேதா முடியறுத்தோன்
குன்றக் கரியுரித்தோன் கூற்றங் கெடவுதைத்தோன்
மன்றற் பதம்பணிந்தே வாலே ரதிசயிப்ப
வின்றிப் பகைவெல்ல வல்லே மெனத்தேறி. (ஊ)

காணி னினியிதற்கோர் காரணமுண் டெங்கிலத்தும்
பூணு முருக்கொண்டி பூசைகொளு மீசர்களிற்
சேணிமிருங் கோயிற் றிருவால வாயனல்லாற்
பேணுங் கருணை யுடையா ரிலைபிறங்க. (எ)

என்று கருதி யிரணியத்தன் டாமரையிற்
சென்று விரைவின் முழுகிச் சிறகடித்துத்
துன்றுபுகழ் கொண்டானைச் சூழ்ந்துலகோர் கொண்டாட
நின்று பரவப் புகுந்ததுமுன் னீங்காது. (ஏ)

வே று.

அருந்தவ னதிச யித்திங் கருங்கருங் குருவி நெஞ்சிற்
பொருந்திய நினைவு கண்டி பொருவின் மூன் றெழுத்தா லோங்கி
விரைந்துயர் பலத்தை கல்கு மிருத்தியுஞ் சயம தென்னுங்
திருந்திய மந்தி ரத்தைச் செவிப்புலத் துபதே சித்தான். (ஐ)

1 வழிபடு வோரி னின்போன் மண்மிசைச் சொல்லற் கில்லை
பிழையிலை விடியு முன்னம் பிரமமா 2முகுத்தத் துன்ற
3 னுழையினிம் மந்தி ரத்தை யுவணரா சனுமுள் ளஞ்சும்
பழுதற வோது னக்குக் காக்கையாற் பயமோ வில்லை. (ஒ)

உ. உணர்ந்தபடியாவது.

ஊ. வென்றிப்புரம்-மூன்று வெற்றியையுடைய புரங்கள்; "வென்றிக்களிற் றை விரிதாரவன் வென்ற வாறும்" (சீவக. கசு.) சிவபெருமானுடைய செயற் கருஞ் செய்கைகளுள், பெரும்பகைகளை வென்றமை பகையை வெல்லக்கருதிய கரிக்குருவியாற் கருதப்பட்டது.

சு. சேண் நிமிரும்.

கூ. இரணியத்தண்டாமரை - பொற்றுமரைத் தீர்த்தம்.

எ. அருந்தவன் - சிவபெருமான்; "தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோன்" (புறநா. கடவுள்) என்பதன் கீழ்க்குறிப்பைப் பார்க்க.

ஏ. முகுத்தம் - முகூர்த்தம். பிரமமா முகூர்த்தமென்பது, இரவில், இருபத்தைந்து நாழிகைக்குப் பிற்பட்டகாலம். இம்மந்திரத்தை ஓது. உவண ராசன் - கருடன்.

(பி - ம்.) 1'வழிபடுவோர்களின்போன்' 2'முகிழ்த்தத்' 3'உழையில்'

அரும்பெரும் புத்தி யுள்ள வன்புடைச் சடக மேகின்
பெருங்குலக் கிளைக்கு மப்பாற் பெறும்பெறு மிளம்பார்ப் பிற்கும்
பொருந்துமிம் மந்தி ரத்தைப் போதியிப் புவன மெச்சப்
பரிந்தவை யாவு மூய்ந்து பயமறத் திரிவ தற்கே. (அ)

அயர்வறு சிறப்பின் மிக்க வவனிமீ தென்று ரைந்த
மூயர்விளை யாடல் காண வும்பரு மதிச யிப்பச்
செயிரறு பறவைக் கெல்லாந் தீபமே யனைய வுன்றன்
[1]பெயரது வலியா னென்று பேசிடக் கடவ தென்றே. (கூ)

கருணையிற் பரிசஞ் செய்து கருதியித் தகவுஞ் சொல்லிப்
பொருவரு நின்னி டத்துப் போவென விடைகொ டுப்பக்
குருவியு மாலித் தன்பு கூர்ந்துபோய் விடியு மூன்னர்
விரைவொடும் புகுந்து காட்டில் வெல்லுமந் திரமோ திற்றூல். (கo)

மறுவறு சிகரம் பன்னுள் வலஞ்செய்து சிறகு நோவ
நெறியினின் வணங்கிப் பெற்ற நிகரிலா மந்தி ரத்தைப்
பிறிவருஞ் சாதிக் கெல்லாம் பிஞ்ஞக னருளாற் கூடி
யறிவுற வுபதே சிப்ப வப்படி யோதிற் றன்றே. (கக)

நன்பரி வெய்தி யாவு நவையற வோது மூன்னர்
வன்பெரும் பகையை வெல்ல வல்லநன் னினைவு தோன்ற
மூன்பது கண்ட பின்ன ரவையவை மூடிக்கிக் காக்கை
யின்புறு தலேயி லெற்றப் புகுந்தன வெங்கு மெங்கும். (கஉ)

[2] கோக்கய நோக்கை நீக்கிக் கூர்க்குமுக் குடைய யாக்கைக்
காக்கைக ளலேபி ளக்கக் கத்தமுற் பகைகி னேந்து
மேக்குறீஇ யொன்றுக் கொன்று விரைவொடி மாறி மாறிப்
போக்கறத் தொடர்ந்து குட்டப் புகுந்தன வெங்கு மெங்கும். (கங)

ஆங்கது கண்ட போதே யதிசயித் தவனி யோர்கள்
பாங்குடைச் சொக்கன் வல்ல வல்லபம் பாரீர் பாரீ

அ. சடகம் - கரிக்குருவி. இளம்பார்ப்பு - இனையகுஞ்சு. போதி - உபதேசஞ்செய். பரிந்தவையாவும் - தன்புற்றவைகளெல்லாம்; பரிந்து - நீயன்புற்று என்றுமாம். திரிவதற்குப் போதி.

கக. நிகரிலா மந்திரம் - பகையில்லாமைக்குக் காரணமாகிய மந்திரம்; "நீலமொடு செய்த னிகர்க்கு மூான்" (ஐங்குறு.உ); "நிகரடு விகுயே"(சிலப். பக்கம், ஈஉக.)

கங. கோக்கயம் - தலைமையாகியகரிக்குருவி. நோக்கைநீக்கி - கண் ணோட்டத்தை யொழித்து. மேக்குஉறீஇ - மேலேசென்று.

கச. பாரீர் பாரீர் - பூமியிலுள்ளவர்களே பாருங்கள்; "பகராங்கக் கலம் பகுத்தைப் பாரீர் பாரீர்" (அரங்கக்கலம். தனியன், உ); அடுக்குமாம். இதை ஞ்னைபின்னரே வன்மையுண்டாயிற்றென்று வருவிக்க.

(பி - ம்.) 1'பெயரையும்' 2'கோக்கை நீஞோக்கை', 'நோக்கிய நோக்கை'

நீங்குமுன் கண்ட தன்றிங் கிறைஞ்சின பின்ன ரென்றே
வாங்கரு முவகை கூர்ந்தார் பெயரையும் வலியா னென்றார். (கச)

வே று.

செங்கெறி நாயன் றேவர்க டேவன்
முன்வரு நீதி முடித்தன னென்றே
தொன்னெறி மலரோன் வந்து துதித்தான்
றன்னுடை யுள்ளஞ் சால வெருண்டே. (கடு)

வே று.

சொற்ற ரும்பெரிய சுந்தர னருளா
னற்க ருங்குருவி நாமிசைத் தோன்றும்
விற்பொலி மந்திர [1]மித்திஞ் சயத்தின்
கற்ப னையின்றுங் காணப் படுமே. (கசு)

ஆகத்திருவிருத்தம் - கசுடூ.

ஊக.—மாமேருவிற் கயல்செண்டுபொறித்த திருவிளையாடல்.*

தேர்பரி கரியா ளீண்டுந் திறற்பெரும் படையான் மிக்குப்
போர்புரி தெவ்வர்க் காய்ந்து புனிதனுக் கன்பு பூண்ட
சீரிய புகழான் முன்னோர் தென்னனுக் கிர[2]கு லத்து
வாரிசூ முலக முற்று மதுரையி லிருந்து காத்தான். (க)

மன்னுயிர் காப்போ னோர்கான் மறையவர் தமையி கழ்ந்து
தொன்னெறி யருள்சே ரெந்தை சொக்கனுண் டென்றி ருப்ப
நன்னெறி மறையோ ரெல்லா [3]நல்குர வுற்றே யெங்கு
மின்னல்கொண் டுழலப் புக்கா ரியாகமுஞ் சடங்கும் விட்டே. (உ)

கடு. நூடூ: நு; நாயன் - தலைவன்.

கசு. இத்தலத்தில், சோமசுந்தராக்கடவுள் உபதேசித்தருளியபின்பு, ஒவ்வொருதினத்திலும் விடியற்காலத்தில், கரிக்குருவிகள் மிருத்தியுஞ்சய மந்திரத்தை ஜபித்துக்கொண்டு வருகின்றன வென்பது ஐதிஹ்யம்; "ஆற்றல் வேண்டுசொலா மரனே யன்பினுல், போற்றியிம் மனுப்புகல் கென்னல் போன்றமுன், சாற்றிய மந்திரத் தன்னைக் கார்க்குரீஇ,வீற்றுவீற் றுருவிருக் துரைத்தன் மேயினன்" (காஞ்சிப்புராணம், பன்னிரு.சூடை: விடியல்வருணனை)என்னுஞ் செய்யுளாலுணர்க. மித்திஞ்சயம் - மிருத்தியுஞ்சய மந்திரம்; "சத்தியஞான மித்திஞ் சயத்தினையுடதே சித்தான்" (தீருவிளை. கரிக்குருவிக்கு.கூ.)

(சுக) [லிக்க.

க. ஆள் - காலாட்கள். உக்கிரகுலத்துத் தோன்றியென ஒருசொல்வரு

உ. சடங்கு என்றது யாசமல்லாத கர்மங்களை.

* "சேலுடன் செண்டிட்டமேருப் பொன்வாகை" (பரகா. சுக.); "கயலெழுதிய விமய நெற்றியின்" (சிலப். ஆய்ச்சியர் குரவை.)

(பி - ம்.) [1]மிருத்தியுஞ்சயத்தின்' [2]'குலத்துள்' [3]'கல்குரவாகியெங்கும்'

ஆங்கவர் நீங்க [1]கில்லா வரும்பெரு வேள்வி மூன்ரு
வோங்கிய தருமம் யாவு மொழிதலா லொழிவி லாத
தாங்கரு மழைம றுத்து நென்முதற் ரூனி யங்கள்
பாங்குற வினைவில் லாமற் படைகுடி தளர்ந்த வன்றே. (கூ)

மாநிலந் தளர்தல் கண்டு வழுதிவெங் துயருற் ரோர்நாட்
டானிருந் தரைக்கி டந்து தனிமனத் தோர்வான் யாமின்
றீனமின் மறையோர் தம்மை யிகழ்தலா லிறைவி ரும்பு
மூனமில் வேள்வி குன்ற வொழிந்தது பொழிந்த மாரி. (சு)

இன்றியா மறிந்தோ மூண்மை யெங்ஙன மென்னி னல்லோர்
சென்றுதே வரையும் வேள்வித் திறத்துளோர் தமையும் பூசித்
தொன்றுவ ரதனுற் பெய்யு மூயர்மழை காலத் தென்று
நன்றிகொள் பழையோர் சொல்வ ரென்றுகள் விருட்டி யின்ரூன். ()

கருணைசேர் சொக்கன் கண்டி கனவிடைச் சென்று சொல்வான்
நெரிவுற நமக்கே நல்ல தென்னவ வருந்தே லின்று
பெருகிய படையு மூன்றன் [2]பீடிடைக் குடியு மற்ரே
சொருவரும் வாடா வாறிங் குரைப்பனீ யுணர்ந்த தொக்கும். (சூ)

விண்படர் துங்கச் செம்பொன் மேருவைச் சென்று ணர்த்தித்
தண்பெரும் பொன்னு னக்கு வேண்டுப தறித்தெ டுத்தாங்
கொண்கிரி நின்ன தாக வுனதுறு குறியு மிட்டுப்
பண்பொடு கொண்டு போதி பகட்டிலொட் டகத்தி னன்றே. (எ)

நின்னுடைத் தானைக் கெல்லா நிறைவுற யாண்டொன் நிற்கு
மன்னுமப் பொன்னிற் செம்பொன் மழையென வெடித்துப் பெய்து
செந்நெறித் தேவர் கட்குந் தீதிலா வொழுக்க மிக்க
நன்னெறி மறையோர் கட்கு நல்கிடு நயங்கள் [3]கூர. (அ)

பொழிமழை மறுத்த நந்தம் புரமதா மறையோர் தம்மைத்
தொழுதெழா திகழ்ந்த லான்மேற் றுதிசெய்து நம்மேல் வைத்த
பழுதிலா வன்பு போல வவர்கடம் பாலும் வைத்து
[4]வழிபடின் யாண்டொன் நிற்குள் வையகந் தழைக்கு மன்றே. (கூ)

கூ. அரசருக்குரிய ஆறங்கங்களுட் சிறத்தமையின், படையும் குடியும் கூறப்பட்டன; "பெருகிய படையுமூன்றன் பீடிடைக்குடியும்" (சு.)

கு. காலத்துப் பெய்யுமென்க. சு. நமக்கே: ஏகாரம், பிரிநிலை.

எ. தறித்து - வெட்டி. உனதுறுகுறி யென்றது, மீனமுத்திரையை. போதி - வா. பகடு - யானை. நன்று - மிகுதியாக.

அ. இச்செய்யுளின் கருத்தை கக-ஆம் செய்யுளும் புலப்படுத்தும்.

கூ. நந்தம் புரமதாம் - நம்முடைய வடிவமாகிய; புரம் - உடம்பு. இழுத்தலால் மறுத்த.

(பி - ம்.) 1'நில்லா' 2'பீடுசேர்குடியுமற்றும்' 3'கூர்ந்தே' 4'வழிபடி'

வே று.

தூணவன் யானெனைச் சொல்லிமுன் மறைந்திடக் கனவை
யுணர்வு ளானெழுந் ததிசயித் தொருவருக் குரையா
னணைய வாயில்வா யமைச்சர்கள் குறிப்பறிந் தளவி
றணிவில் சேனையை விடியுமுன் சாற்றினர் கிளர. (கo)

அடர்ந்த தானையோ டாங்கவன் வடதிசை நோக்கி
நடந்து பல்பெருங் காதமூ ரளிடைப் போக்கி
[1] மடங்கல் யாளிகள் வானவர் தானவர் மற்று
மிடைந்த காஞ்சன மேருமால் வரைமருங் கடைந்தான். (கக)

மற்றதன் சாரன் மாட்டோர் வளநகர் மேவி யங்க
ணுற்றதா னையை[2]யி ருத்தி யோங்குதன் றிறலி னோடு
மூற்றிர விற்சென் றீசன் மொழிந்தன மொழிந்து கிற்பச்
சற்றுண ராமை கொண்டு சாடினன் பாணிச் செண்டால். (கஉ)

அங்கது கண்டு கம்பித் தமரர்மெய் புனைந்து வந்து
செங்கமே றனைய மன்னன் [3]றிண்மையை யதிச யித்தின்
றீங்கியா னுரைப்ப தொன்றுண் டென்னுடை யுருவஞ் சாற்றிற்
சங்கம மென்றொன் றுண்டி தாபர மென்றொன் றுண்டால். (கங)

வே று.

மன்னிய சங்கம வடிவம் யானிது
மூன்னிகழ் தாபர வடிவ மூன்னரிற்
மின்னிய வெற்பகத் தனக்கு வேண்டுசெம்
பொன்மூறித் தேகெனப் புகழ்ந்து சொன்னதால். (கச)

மூற்றிகழ் தச்சரான் மூறித்தி லங்குசெங்
கற்படு வரையென வெடித்துக் காஞ்சன
வற்புதச் சிகரிபண் டார மாகவே
கொற்றவன் றன்கயற் குறிபொ றித்தனன். (கரு)

சென்றுகந் துகமென மறுகச் செண்டினாற்
கன்றின்மு னடித்தவன் பரவக் கண்டு வாழ்ந்
தொன்றிய சங்கம வுருக்கொண் மேருவும்
வென்றீ போகென விடைகொ டுத்ததால். (கசு)

கo. கனவை ஒருவருக்கும் உரையானுமி அணைய. [பொன்.

கக. மடங்கல் - சிங்கம். யாளிகள் - யாளியாளிகள். காஞ்சனம் -

கஉ. செண்டு - ஒருவகையாயுதம்; "செண்டுகொண்டு கரிகாலனெருகாலி லிமையச் சிமயமால் வரைதிரித்தருளிமீள" (கலிங்க. இராசபா. கஉடு.)

கங. சங்கமவுருவம் தாபரவுருவமென எனக்கு இரண்டுவடிவங்கள் உள்

கச. 'யான்' என்றது, தன்னுருவத்தை. இது - இம்மலை. [ளன.

கரு. சிகரி - மலை. கயற்குறி - மீனமுத்திரை; "வழுதிக்கொடிச் சேலெழுதிய மால்வரை' (கூ. ம. சம்பு. கo.)

(பி - ம்.) [1]'மடங்கலாளிகள்' [2]'இருத்தியோங்கிய' [3]'திண்மைகண்டு'

வேறு.

ஒருவரா லணுக வொண்ணு வுயர்வட கிரியிற் செம்பொன்
கரையறத் தறித்தெ டுத்துக் கயலொடு செண்டுங் தீட்டிப்
பெரியவ னருளே வாழ்த்திப் பெருங்கடற் படையி ருப்பின்
விரைவொடும் வந்தான் வந்தா னிரவியும் வென்றி காண. (கள)

மன்னிய மனிதர் முற்று மற்றுமோர் மேரு வென்னக்
கொன்னுறு நாவற் செம்பொற் குன்றினைக் கண்டு வாழ்ந்து
பொன்வரை யடித்து மீனம் பொறித்துயர் பொன்கொ ணர்ந்த
தென்னவ னினக்கா ரொப்பா ரென்றனர் செய்தி கேட்டு. (கஅ)

பெரும்படைக் கியாண்டொன் றிற்குப் பெரும்பொருள் விரும்பலங்கி
யிருங்கிரி மச்ச மாக்கி யீழங்கொண் டொட்ட கங்கள்
பரும்புழைத் தடக்கை நோன்முட் பகடியர் சகடு முன்னு
வருந்தவோர் வருத்த மின்றி வந்துமா மதுரை புக்கான். (ககூ)

வந்துதன் னுழைபு காமுன் வள்ளல்பொற் கோயில் புக்கிங்
கெந்தையே யடைந்தே னின்ற னருளினு லென்று வாழ்த்திச்
சுந்தர மாக முன்னர் வழங்குவ யாவுந் தோன்றச்
சந்திர மாவ ளித்தான் சந்திர மாகு லத்தான். (உ0)

தங்குயர் வேள்வி யோங்கத் தவிசிடை யிருத்தித் தெய்வ
மங்கல மறையோர் தம்மை மகிழ்ந்துப சாரத் தோடு
பொங்குசெங் கனக நல்கிப் பூசனை செய்தான் வையந்
திங்கண்மும் மாரி பெய்து சிறந்தது செல்வத் தோங்கி. (உக)

ஆண்டியாண் டொன்றிற் குள்ளீண் டகிலமுந் தழைப்பக் கண்டோர்
காண்டகு புதுமை யீது கண்டில மென்று வாழ்த்திப்
பாண்டியன் றனையு மந்தப் பாண்டியற் கன்பு பூண்டு
வேண்டிய தளிக்குஞ் சொக்க வேந்தையும் வியந்தார் சால. (உஉ)

மாநிலங் காப்போர் வேள்வி மறையவர் தேத்துந் தூய
வானிரை மாட்டு மீச னளவினு மடியார் கண்ணு
மீனமி லன்பு பூண்டாண் டினியன செய்வ ரேன்மற்
றூனமேல் வருமோ வாரா துண்மையீ துண்மை யீதால். (உங)

ஆகத்திருவிருத்தம் - ககூஎடு.

கள. பெரியவன் - மகாதேவர்.

கஅ. நாவற்செம்பொன் - சாம்பூநதமென்னும் தங்கம்.

ககூ. மச்சம் - வெட்டியெடுத்துக்கொண்டு வைத்திருக்கும் மிச்சப்பொன். ஈழம் - பொன்; மேருவை மீனுகச்செய்து அதிலுள்ள பொன்னையெல்லாங் கொண்டென்பது மற்றொருபொருள்.

உ0. முன்னர் வழங்குவ - திருமஞ்சனக் கலசமுதலியவை. சந்திரமா - பொன்னுக; சந்திரம் - பொன். மடக்கணி.

உஉ. ஆண்டு - அப்பொழுது.

சூ உ.—சான்றழைத்த திருவிளையாடல்.

ஓங்குதன மூடையானோர் வணிகன் வையத் துயர்புளதோர் பட்டினத்து மூன்னோர் ஈவி, னீங்கரிய சுற்றமுட னிருப்ப முன்னை [1]நீள்வினையின் வசத்தாலோர் புதல்வ னின்றி, யீங்குலகி ணுணமட மச்ச முன்னு வெத்தகவு மிவட்கல்லா தில்லை யென்னும், பாங்குதி கழ் வுறுமொருபெண் ணருமை யாகப் பயந்துசிறப் பொடுவளர்த் தான் பரிவு கூர்ந்தே. (க)

வருத்தமற [2]வளர்கின்ற கன்னி தன்னை மதுரைநக ரிருப்பா னோர் மருமகற்குப், பொருத்தமுறக் கொடுப்பலென வறுதி யிட்டுப் பொருவிலருங் குலவணிகன் விருத்த ணுகித், திருத்தமுடை மனைவி யொடு மரித்த பின்னர்ச் செட்டிகளாங் கவற்கான கடஞ்செய் தஞ்சி, விரித்துநிகழ் செய்தியெல்லாந் தோன்ற வோலை [3]விரைவினவன் றனக்கெழுதி விட்டார் கட்டி. (உ)

உன்னுடைய மாமனெழிற் பிள்ளை வேண்டி யுயர்தருமத் தொ ருப்பட்டாந் தவங்கள் செய்து, [4]பின்னரொராண் மகவின்றி யருமை யாகப் பெறற்கரிய பெற்றியினோர் பெண்ணைப் பெற்றிங், கென்னுடை நன் மருமகற்கே கொடுப்ப லென்று யாருமுணர் வுறவுரைத்து விரு த்த ணுகித், தன்மனைவி யொடுமிறந்தான் விரைவின் வந்தித் தையலை யுங் கைப்பிடித்துத் தனங்கைக் கொள்ளே. (ஈ)

இந்தவா சகவோலை செல்லா முன்னுங் கிருங்குலமா தொடும்புத ல்வர்ப் பெற்று வாழ்வோன், முந்தவெதிர் வாங்கிவா சித்துக் கண்டு முதிர்ச்சியினுற் சிறிதழுங்கி மகிழ்ந்து சாலச், சிந்தைவரு நல்லுற்றோர் சிலரோ டொன்றிச் சின்னுளிற் பல்காதங் கடந்து சென்றே, யந்தநக ரடைந்தளவில் சிறப்பாற் பொங்கு மன்புடைமைத் துனியிருக்கு மக த்துட் புக்கான். (ச)

நீதியுடை வணிகனுநல் லடிமை முன்னு நிதிகளுங்கண் டெதிர் வரவு பார்த்தி ருந்த, மாதையுங்கண் டிரும்பதியோர் விரும்பச் சின் னுண் மனைக்கணிருந் தறநெறியை மனத்தி னோர்ந்தின், றோதுமணஞ்

க. பட்டினத்து - காவிரிப்பூம்பட்டினத்தில்; "முட்டாச் சிறப்பிற் பட்டி னம் பெறினும்" (பட்டினப்பாலை, உகஅ.)

உ. அறுதியிட்டு - நிச்சயித்து. மரித்தபின்னர் - இறந்தபின்னர். கடம்- அபரக்கிரியை. ஓலையிலெழுதி அதனைக்கட்டி விட்டார். [கூட்டுக.

ங. கைக்காள் என்று ஓலையெழுதிக்கட்டி விட்டாரென முன்னதனோடு

ச. 'சின்னுளிற் பல்காதம்': முரண். மைத்துனி-அம்மான்மகள்; "மைத் துனி நடக்கமாட்டே னினைத்தன னென்ன" (எ.)

(பி - ம்.) 1'நீள்விதியின்' 2'வளர்க்கின்ற' 3'விரைவில்வணிகனுக்கெழுதி' 4 'பின்னொரான் மகவின்றி யினிமைகூர்ப்'

செய்வதுமம் மதுரை மேவு முற்றவர்முன் ஞவென்றே யுரைத்து வான்றேய், போதுதிகழ் பொழின் மதுரை நகரை நோக்கிப் புறப்பட்டா ஞெருப்பட்டான் றனக்கட் டோடும். (நி)

வேறு.

செந்துவர் வாய்க்க ருங்கட் செப்பிளங் கொங்கை மங்கை
யிந்திரை யனையா ளோடு மினிமைசூ [1]ரடிமை யோடு
நந்துபல் பொருள்க ளோடு நண்ணிய சுற்றத் தோடும்
வந்தன சொல்லி யொல்லை வழியிடை நடக்குங் காலை. (சு)

மைத்துனி நடக்க மாட்டே னிளைத்தன னென்ன வாய்ந்த
வுத்தமன் பொருள னேத்து முற்றவர் கைக்கொ டுத்து
மெத்தென மாதைக் கொண்டு வருகுவல் விரைவி னீங்கண்
[2]மூத்தெயின் மதுரை தன்னிற் போமென மொழிந்து விட்டான்.(ரு)

மற்றவர் போய பின்னர் வல்லியை மெல்லக் கொண்டாங்
குற்றநல் லடியா ரோடு மோசனை காதம் வந்து
சிற்பரன் விரும்பி வாழுந் திருப்புறம் பயம தென்னும்
பொற்பமர் திருப்ப திக்கட் பொருந்தியொண் கோயில் புக்கான். (அ)

[3]ஆங்கொரு புடையிற் றங்கி யடிசினன் குறவ மைத்துத்
தீங்கற வுண்டு மூன்னார்த் திகழ்விதி வசத்தா லாங்கட்
டாங்கருங் கண்ப டிப்பத் தையலு மரபை நோக்கி
நீங்கவோர் புடைத்து யின்ரு ணெருங்கடி யார்கள் சூழ. (கூ)

நிறைவிலு லறிவால் வாழ்வா னீதியா லிளமை யாலோர்
குறைவிலா மரபாற் பொங்குங் [4]குலப்புகழ் வணிகன் றன்னைக்
கறுவிவா ளாவு சென்று கடித்தலு நிசிக்கட் கண்டே
மூறையிடா வீழ்ந்தார் சூழ்ந்த வடியவர் முதிர வாங்கு. (கo)

விரைவின்மின் னசனி யன்னார் வெவ்வலிக் கருட ஞெப்பா
ரூரனுடைக் கேழல் போல்வா ரொப்பிலா மயூர நேர்வார்

நி. தனக்கட்டு - பணப்பொதி. சு. இந்திரை - திருமகள்.

எ. மெத்தென - மெல்ல. முத்தெயில் - முதியமதில்.

அ. அடியார் - அடிமை வேலைசெய்பவர்; "அடிமை முன்னு" (நி.) ஓசனை யுங்காதமும். சிற்பரன் - பரமசிவன். திருப்புறம்பயம் - சோழநாட்டுத்திருப் பதிகளுள் ஒன்று; பிரளயகாலத்தில் ஊழிவெள்ளம் சிவாஞ்ஞையால் இதன் புறத்தே சூழ்ந்திருந்ததுபற்றி, இஃது இப்பெயர் பெற்றதென்பர்; "பாஹ்யாம்பு புரம்" என்பது இத்தலத்தின் வடமொழிப்பெயர்.

கூ. மரபு - முறைமை. கo. கறுவி - கோபித்து. நிசிக்கட்கடித்தலும்.

கக. மின் - மின்னல். அசனி - இடி; மின்னுதலையுடைய இடியுமாம். கேழல் - பன்றி. மயூரம் - மயில். நகுலம் - கீரி. எண்கு - கரடி. இச்செய்யு ளில், பாம்பிற்குப்பகையாய் உள்ளவைகள் கூறப்பட்டிருத்தல் காண்க.

(பி - ம்.) [1]'அடியாரோடும்' [2]'மூத்தையின்மதரை' [3]'ஆங்கான்றனைப்ப னிக்தே யருளுமனையிற்றங்கித், நிக்கதவருத்தி முன்னார்த்' [4]'குலப்பெரு'

பொரு1நகு லத்தை யேய்வார் பொருவிலெண் குக்க டிப்பார்
கருதிமுன் பார்த்துஞ் சாரகக் கண்டனர் கைவிட் டார்கள். (கக)

செங்கயற் கண்ணுஞ் சாம்பு தீண்டவுந் தீண்டா ளாகி
யெங்குல வரசே யாற்றே னின்றெனை யிங்குத் தள்ளிக்
கங்குலி லெளித்தா யென்று கண்ணினீ ரொடுமை சற்றி
யங்கொரு மதிநி னைந்து புலம்புவா ளரனை நோக்கி. (கஉ)

வாளரா வேணி யானே வாரிநஞ் சுண்ட கோவே
காளமார் கடல்போய் மீண்ட கலங்கவிழ்த் தவர்போ னின்றேன்
வேளுரு விரதி வேண்ட மீண்டளித் திலையோ வின்றென்
ஞளரி யுயிர்தா ராயே லவன்வழி யடைவேன் யானே. (கஙி)

என்றவ ளடியா ரோடு 2மிரவிடை யரற்ற முன்ன
நன்றியிற் றொழுவான் வந்த ஞானசம் பந்த ரொல்லை
வென்றியி னுணர்ந்தெ ழுந்து மெலிவதிங் கென்னை யென்னை
நின்றவ ருரையு மென்ன வுரைசெய்வா னிலனை நோக்கி. (கச)

வே று.

எந்தையுயர் 3பட்டினத்தோர் பெரிய செட்டி யெனைத்தவத்தாற்
பெற்றழகார் மதுரை மன்னு, மூந்தியகன் மருமகற்குக் கொடிப்ப லெ
ன்றே மொழிந்துவா னுலகெய்த வணிகர் கூடி, நொந்தெழுதி யோலை
விடக் கண்டு வந்து நானெறியிற் போய்மன்றல் செய்வ மென்றே, யந்
தமிழ்பல் பொருளுயுங்கொண் டென்னை யுங்கொண் டணைந்திரவின்
கிவண்மாண்டா னரவு தீண்டி. (கடு)

வே று.

என்பெருந் தவத்தா லெந்தை யிங்கெழுந் தருளப் பெற்றேன்
றுன்பமு மகன்ற தென்று சொல்லுமுன் பெரிது ரங்கி
மின்பொலி யங்க மென்பூம் பாவையாப் பாடும் வென்றி
நன்குறு கருணை மேனி ஞானசம் பந்த ராங்கு. (கசு)

வென்றிகொ ணஞ்சுண் டானை விதிமுறை யிறைஞ்சி யிந்த
மன்றலங் குழலா ளுற்ற வருத்தநீக் கிடுவ மென்றே
நன்றிகொ டிருக்க ணேக்கா ஞன்முகன் மறலி யஞ்சப்
பொன்றிய வணிகன் றன்னை யெழுப்பினர் புதுமை கூர. (கஎ)

கக. காளம் - கருமை. ஆளரி - ஆண்சிங்கம்; என்றது வணிகனை. இச் செய்யுளில் விடத்தின் கொடுமையையும், கணவனையிழந்த மகளிர் துன்பத்தையும் எளிதில் மாற்றியருளும் ஆற்றலையுடையவரென்பது புலப்படச் சிவபெருமானைத் துதித்திருக்கும் அழகு மிகப்பாராட்டற்பாலது.

கச. நின்றவர்: வினை. கஎ. மன்றல் - கலியாணம்.

கசு. எந்தை - தேவீர். அங்கம் - என்பு; திருஞானசம்பந்தர் அங்கத்தைப் பூம்பாவையாகப் பாடியதலம்: மயிலாப்பூர்.

கஎ. வென்றிகொள் - மற்றைத்தேவர்களைவென்ற. 'நஞ்சுண்டானை' என்பது கருத்தடை அடையணி. அஞ்ச எழுப்பினர்.

(பி - ம்.) 1'நகுலேயம்' 2'இரைகடையரற்ற' 3'பட்டணத்தோர்'

துயின்றவ ரெழுமா போலத் துண்ணென வெழுந்தி றைஞ்சும்
வயங்கொளி வணிகற் கண்டு வாடிய தொண்ட ரெல்லாம்
வியந்துற வேத்தி ஞர்கண் மிகமிக வதிச யித்து
நயந்திதார் வல்லா ரென்று ஞானசம் பந்தர் தம்மை. (கஅ)

மற்றுமே ரொவ்வா நீதி வணிகனைப் புகழ்ந்த தன்றிச்
சொற்புக ழணங்கை நெஞ்சங் களிப்பவுந் தொடாது [1]நின்ற
பொற்பையு மவன்பால் வைத்த வன்பையும் பொருவி லாத
கற்பையுங் கண்டு சால வாழ்த்தினர் காழி வேந்தர். (ககூ)

வேறு.

தொன்மை நீதி வணிகற்குச் சொல்லுவார்
நன்மை நீமை பயப்பினு நற்சிவன்
வன்னி கூவம் வருநடு வாகவே
கன்னி மாதினைக் கைப்பிடி யென்றனர். (உ0)

முறைமை மன்னிட முன்ன முனக்கிவள்
குறைவி றந்தையுங் குற்றமி ருயரு
முறவி னல்கின துண்டே மருண்டினி
யறையும் வார்த்தையை யைய முரையென. (உக)

இணையில் வைதிக வாரண மிப்படித்
துணிவு சொல்லத் துணிந்து வணிகனுந்
தணிவி லாத விருப்பிற் றயாவுடை
வணிகன் மாதை விதியின் மணந்தனன். (உஉ)

தெய்வ நீதித் திறங்கண் டதிசயித்
தய்ய வந்தெ னுயிர்தரும் வள்ளலே
யைய னேநல் லருமருந் தேயெனத்
தைய லாளொடும் வீழ்ந்தனன் முண்மிசை. (உங)

மற்ற வன்றனை வைதிக வாரணங்
கற்பி லங்குகின் காதலி தன்னொடு
முற்ற நல்லடி யாரொடு மொல்லென
பொற்ற நன்னகர் போகெனச் செப்பினர். (உச)

கஅ. இது - இவ்வரியசெயல். ஞானசம்பந்தர்தம்மை ஏத்தினர்கள்.

உ0. சிவன் வன்னி கூவம் - சிவலிங்கப் பெருமானும் வன்னி மரமும் நிறைந்த. நடுவாகவரும்.

உஉ. வைதிகவாரணம் - திருஞானசம்பந்தர்.

உச. பொற்ற - பொலிவுபெற்ற.

(பி - ம்.) [1]நீங்கி, நிற்பது கண்டு சால நிறைவுளோர் போற்றுதற்கிய, கற்பியாங் கண்டு லேமென் றேத்தினர் காழி வேந்தர்

வே று.

மாண்டிகன வெனவெழுந்த வணிகன் கற்பின் மாதினெடு நல்
லடியார் போற்றப் போந்து, காண்டகுதென் மதுரைநக ரடைந்து
பொற்பிற் கருணையுட னெதிர்கொண்ட கிளைஞர் கட்கு, மூண்டபெ
ருஞ் செய்தியெல்லாந் தோன்ற வங்கண் மொழிந்தெவரு மதிசயிப்ப
மகிழ்ந்து மாம, னீண்டியநன் பொருளொடுந்தன் பொருளுங் கொண்
டாண் டிருந்தனனன் னயம்படவா ணிகஞ்செய் தோங்க. (உரு)

மன்னு[1]முய ரற்பொடிவாழ் நாளி னல்ல வடிவுகுண முடையா
ளுேர் மதலே தோன்றிப்,பொன்னணியா லிலகுபெருஞ் சிறப்பி னேங்
கிப் பொலிவினுடன் வளருங்காற் பொருமை மிக்க, முன்னமவன்
கொண்டகுல மாதின் மைந்தர் முதிராத சிறுபுதல்வ னேடுங் கூடி,
மின்னியபாஞ் சாலிகமுன் ஞன நல்ல விளையாட்டி ஞெருப்பட்டார்
வீதி யேறி. (உசு)

வே று.

தகவிளே யாடு நாளிற் றகவிலாப் புதல்வ ரோர்நாட்
புகலரும் புதல்வன் மேனி புடைத்திட வடிப்பச் சென்று
மிகவெருண் டழுது சொல்லக் கேட்டலும் விம்மி யாற்ருள்
பகைபட வடித்த தென்கொல் கெடுவிர்கா ளெனப்ப கர்ந்தாள். (உஎ)

வே று.

ஆங்கது கேட்டு விரைவின்வந் தேடி யார்மக ளார்கொலென்
கணவ, னேங்கிய விதியிற் கைப்பிடித் தவளோ வொண்பொருட்
பரத்தைய ரனைய, தீங்குள நீயோ மைந்தரைச் செறுப்பாய் செப்பிய
வாறுநன் றென்று, பாங்குடை யாளை யெழுவெழ வைதாள் பன்
முறை பரிபவ மாக. (உஅ)

இன்னன விளிய முன்னவ ளேச விளையவள் சாலநொந் தழுது,
பின்னுற நவில்வா ளறிவிலா தவளே பேசருஞ் சிறப்புட னடைவின்,
வன்னியுங் கிணறும் புறம்பயத் திறையு மருவிய பெரியசான் ருக,
வுன்னுடைக் கொழுந னெனேமமணஞ் செய்தா னுனக்கெனே வுரைப்
பதிங் கென்ருள். (உசு)

இப்படிச் சொல்ல மற்றவ ணைகையா வியம்பிய நிறமெலா நன்றின்
ருெப்பிலாச் சிவனும் வன்னியாங் கிணரு மோதிய சான்றனக் குண்டேற்
செப்பவா ரூரச் சான்றது சான்றேரு சிறக்தகம் முற்றவர் முன்னு
மெய்ப்பட வந்து நலிவுமேற் கற்பார் மெல்லிய லல்லவேற் கணிகை.

உசு பாஞ்சாலிகம் - மரப்பாவை விளையாட்டு. [பம்; அவமானமுமாம்.
உஅ. செறுப்பாய் - கோபிப்பாய். எழஎழ - மிகமிக. பரிபவம் - துன்
உகூ. சான்று - சாட்சி. [லாவாயின்.
கூ0. கற்பார்ந்த மெல்லியலாக ஆவாய். அல்லவேல் - அவைகள் சொல்
(பி - ம்.) 1'உயிரற்பொடு'

வேறு.

சான்றலள் சொல்லக் குன்றி யிளையவ ளெங்குந் தானுப்
தன்றிய புகழ்க்கு நல்ல சொக்கனே யறிவ னென்று
சென்றுபொற் கோயில் புக்குச் செங்கணீர் வார வார
மன்றலங் குழல்கள் சோரப் புரண்டனண் மண்ணில் வீழ்ந்து. (ஈக)

மன்னுபுன் குணத்தான் மிக்க மைந்தரைப் பயந்த பொல்லாப்
புன்மைசேர் மடந்தை சொன்ன வார்த்தையோ பொறுக்க கில்லே
னென்னுடை நாணை முன்னு யாவையு மழித்த வின்றே
யுன்னையல் லாலெ னக்கிங் காருள ருற்றூர் மற்றே. (ஈஉ)

மறுவினீ யறிய யானோர் பத்தினி மாதே யாயி
னறிவுளோ ரெவருங் காண வவனிமீ தன்றைச் சான்றின்
றிறையில்வந் துரைத்தல் வேண்டு மின்னருட் சண்பை வேந்தர்
துறைபட நவின்ற சான்று பொய்க்குமோ சொக்கே யென்றாள். ()

ஆங்கது சொல்லா முன்ன மரும்பழிக் கஞ்சு சொக்கன்
பாங்குளாள் செயல்கண் டுள்ளங் கசிந்துமுன் பரிப வஞ்செய்
தீங்குசேர் மாதி னுள்ளக் தெளிதல்கா ரணம தாக
வோங்கிய சான்று மூன்று மொல்லையின் வரவ ழைத்தான். (ஈச)

வேறு.

வந்து தோன்ற வணிகர் திரண்டுவந்
தெந்தை யல்ல துண்டோவென் றிறைஞ்சின
ரந்த ரத்த ரதிசயித் தேத்தினர்
சிந்தை யாகுலந் தீர்ந்தன டேமொழி. (ஈடு)

வேறு.

ஏற்றமார் பெரிய கோயி லீசான திசையின் மீது
1தோற்றிய தன்றி யாங்க ளறிவமென் றன்று சொல்லச்
சாற்றரு முவகை கூர்ந்து மூத்தவ ளிளையா டாளிற்
போற்றிவந் திறைஞ்சி நின்றாள் பொறுத்தருள் பிழையென் றஞ்சி. ()

உத்தமத் தலைவன் கண்டாண் டளங்களித் தறிவி லாத
புத்திரர் தமையு மந்தப் புன்மைமா தையுமி கழ்ந்தே
யத்தனை நாளு மேத்தி யறிவுடைப் புதல்வற் பெற்ற
பத்தினி மாதி னோடும் வாழ்ந்தனன் பரிவு கூர்ந்து. (ஈஎ)

ஈக. 'புகழ்க்கு நல்லசொக்கன்': சுக: உஎ. பொற்கோயில்: "பசும்பொனு லிலங்குவான்றேய், திருக்தமாலயம்" என்பர்பின்; சுச: கூ.

ஈஉ. "பத்தினிமாது' என்றது கற்புடையவளென்னும் பொருளில் வந்தது; "பத்தினிமாதினோடும்" என்பர்பின்னும்; ஈஎ. சண்பை - சீகாழி.

கூஎ. பரிவு - அன்பு.

(பி - ம்.) 1'தோற்றுதல் கண்டி யாங்க ளறிவமென்று'

மூல்லைசே ரணங்கு நெஞ்ச முண்டக மலரிற் பொய்யா
நல்லருட் சொக்கன் றன்னே நாடொறும் வைத்து வாழ்த்தி
யில்லினே விட்டு முன்றி லேகிடா திருந்து மிக்க
பல்பெருஞ் சிறப்பி னேங்கி வாழ்ந்தனள் பழிச்ச யாரும். (கூஅ)

மருத்தயில் பாப்புக் காப்பு வள்ளலே மனத்து வைத்துத்
தருக்கமார் காழி வேந்தர் சடையெனும் யாப்பெ டுத்து
விரைத்திரு மருக றன்னில் வெவ்விடந் தீர்த்த தன்றித்
திருப்புறம் பயத்த லத்திற் றீர்த்தனர் திருக்கண் சாத்தி. (கூகூ)

ஆகத்திருவிருத்தம் - கஎகூ.

கூகூ. –நாரைக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.

மூந்தியகா லத்தொருகான் முதுநாரை வடதிசைக்கட்
கந்தமலி செங்கமலங் காவிதிகழ் வாவிதொறுஞ்
சிந்தைகளி கூரவுகள் சேல்கள்வரால் [1]வரிவாளே
வந்தனயா வையுமருந்தி வாழுங்கான் மழையின்றி. (க)

ஆழியுரு வனேயபெரு வாவியினீ ரறக்கண்டே
யூழுடைநல் விதிவசத்தா னுழன்றுநுக ரிரைதேடித்
தாழ்வகல [2]நயந்தறஞ்சேர் தவமுனிவர் நிறைந்திருந்து
வாழுமொரு வனத்தணைந்த தங்குளதோர் மலர்வாவி. (உ)

தேங்குபெரும் புனறதும்பிச் சிறந்திலங்கத் தனிகண்டு
தாங்கரிய பசியினெடுஞ் சென்றிருப்பச் சலசரங்க
ளோங்குமுயர் வடிவினவா யளவிலவா யுகண்டெழுந்து
பாங்கணைந்து விளையாடிப் பயமின்றி யுலவினவால். (ங)

வேறு.

தவவள வலியி னுலே சார்ந்துமுன் விளங்கக் கண்ட
நவமுறு நாரை வாழ்ந்து நனிமனத் ததிச யித்திங்
கிவைதமி லொன்றே காம லிரும்பசி தீர வின்று
சுவைபட நுகர்வ மென்று சொல்லிமுன செல்லுங் காலை. (சு)

கூஅ. மூல்லை - கற்பு.

கூக. மருத்த அயல் - காற்றை யுண்ணுகின்ற. பாப்புக் காப்பு - பாம் பாகிய காப்பையுடைய. சடையெனும் யாப்பு: "சடையாயெனுமால்" என்னு முதற்குறிப்பையுடைய தேவாரம். திருமருகல்-ஒருதிருப்பதி; அதில் விடந்தீர்த்ததை, திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் புராணத்துள்ள சமண - ஆம் திருவிருத்த முதலியவற்றுணர்க.

(கூங)

கூ. சலசரங்கள் - நீர்வாழ்வன.

(பி - ம்.) [1]'கையல்வாளே' [2]'வந்தறஞ்'

வேறு.

மரவுரி [1]யுடையினர் மார்பி னூலினர்
தரும[2]குண் டிகையொடு தண்டு தாங்கிய
பொருவருங் கரத்தினர் புனலுண் மூழ்குவரின்
விரைவொடு நணுகினர் விடியு முன்னமே. (சு)

அங்கவர் தங்களத் தளவு நீரினுட்
பங்குற விழுந்தது கண்டு பான்மைமீன்
பொங்குமெய் நலிந்திடா தன்பு பூண்டருட்
டிங்கமா முனிவரைச் சூழ்ந்து கொண்டவால். (சூ)

வேறு.

உருகிமுன் கண்ட நாரை யதிசயித் துறையை யுண்டு
பெரியகா யம்ப டைத்தும் பிறிவரும் புதல்வர்ப் போல
நிரையின் மெய்ந் நலியா வாறு நின்றன வறிந்துங் கெட்டே
னருவினைப் பாவி நாமே யயின்றன மறிவி லாமல். (எ)

இனியுயிர் செகுத்துண் ணெமென் றெண்ணிவெங் கொலைத விர்ந்து
புனலையே யுண்டு சூழ்ந்து பொய்கையுள் வாழு நாளில்
வினைதரு முன்னம் போகா வெம்பசி போகக் கண்டு
மனமகிழ்ந் ததுசி றந்த முனிவர்கள் வரத்தை வாழ்த்தி. (அ)

மருவிய கிளைகள் கண்டு வந்துயிர் செகுத்துண் ணுது
பெரியநீ மெலிவ தென்கொல் பேசென வுளத்துச் சற்றுங்
கருணையில் லாதீர் நுங்கள் காரியத் தேகு மென்று
பரிவுற நவின்று போக்கி யிருந்தது பத்தி பூண்டு. (கூ)

வேறு.

சந்தி [3]யாமடத் தேகித் தபோதனர்
புந்தி நம்பு புராணம் படித்திட.
வந்து கேட்கப் புகுந்தது மாசறன்
முந்து வேட்டுயர் முத்தியை வேட்டது. (கo)

வேறு.

மற்றொரு தெய்வ மண்ணின் மதுரைநா யகன்போ லில்லை
முற்றிய கருணை கூர்ந்து முத்தியை யளிக்க வல்லா
ருற்றுழைச் செய்யி னென்னுங் குயர்தவ முனிவ ரோர்நா
னற்சிவ புராணஞ் சொலலக் கேட்டது நயந்து நாரை. (கக)

சு. சூழ்ந்துகொண்டவைகள், மீன்கள்.
எ. உறை - நீர்த்துளி. [விசேடத்தை.
அ. சூழ்ந்து - சுற்றிக்கொண்டு, ஆராய்ந்து. வினைதருபசி. வரத்தை -
கo. நம்பு - விரும்புகின்ற. மாசுஅறல் - குற்றமற்றகுதல்.
(பி - ம்.) [1]'இடையினர்' [2]'கண்டிகை' [3]'மாமடத்து'

வரமுடைச் சொக்கன் றன்னை வழுத்துவ மென்றெ ழுந்து
தரைபுக ழோடை விட்டுத் தவத்துளோ ரதிச யிப்ப
விரைவொடும் பாண்டி நாட்டு மேதகு மதுரை யந்த
ணருளுடைச் சொக்க நாத ஞலயத் தணைந்த தன்றே. (கஉ)

உத்தமக் கனகப் போதா ரோடையின் மூழ்கி யேறிப்
பத்தியிற் பறந்து நாளும் பகலுட னிரவுஞ் சித்தம்
வைத்துடல் வருந்தச் சூழ்ந்து வலஞ்செயக் கண்ட மண்ணோர்
புத்தியு ளதிச யித்தார் புதுமையீ தென்ன வாழ்த்தி. (கங)

எங்குமோ நிரைதே ராம [1]லினியதன் னுடலம் வாட
மங்கைபா ரின்று நம்மேன் மண்ணிலோர் பறவை வைத்த
பொங்குபே ரன்பு தன்னை யென்றிறை புகலக் கேட்ட
வங்கயற் கண்ணி மங்கை யகமகிழ்ந் ததிச யித்தாள். (கச)

கொன்னுறு தடத்தி லோர்காற் கடுங்குரற் கொடுங்கூர் மூக்கு
மின்னெடுங் கழுத்துப் பார வெண்சிறைச் செங்கா ஞரை
மன்னிய கயல்சேல் வாளை வரிவரா லுளுவை யார
நுன்னிய பனைமீன் றுள்ளித் துறைவிளை யாடல் கண்டு. (கரு)

சாதிவா தனையி ஞலே தருமநூ னெறிம றந்தே
யாதர வுடனே கூடி யயிலுவா னலகங் காந்து
மீதெழச் சென்று கௌவி மீண்டையி லாது மிழ்ந்து
நீதிகண் டருவ ருத்து நெஞ்சக மஞ்சி யோரும். (கசு)

முன்னைவா தனையை விட்டு முற்றிய வறிஞர் நெஞ்சிற்
பின்னொரு விகார மின்றி யிருப்பரிப் பிணைப்பு லாலை
நன் னெறி யறிந்த நாமு நாவழி யொழுகிக் கெட்டேன்
றின்னமே நயந்தே நம்போற் றீங்குளா ருண்டோ வின்றே. (கள)

வல்லவன் வாவி மீனை மாற்றுமே லொன்றே வென்னப்
புல்லிய பறவை யாகி யிருப்பவும் பொருவி லாத
நல்லறி வுடைய தாகி யிருந்ததிங் கெனக யன்தே
யொல்லையவ் வாவி மீனை யொழிவித்தான் விழியா லாங்கு. (கஅ)

கஉ. கனகப்போதா ரோடையில் - பொற்றமரையில்.

கச. அன்புதன்னைப்பார்.

கரு. செங்காஞரை: "நாராய் நாராய் செங்காஞராய்" (தனிப்பாடல்.) உளுவை, ஆரல், பனை என்பன மீன்விசேடங்கள்.

கசு. வாதனை - பழக்கம். அலகு - மூக்கு.

கஅ. வல்லவன் - சிவபெருமான். ஒன்றே - ஒருவகையான கலந்தானை.

(பி - ம்.) [1]'இனியதோருடலம்' [2]'தெரியதியாகமும்'

நலமலி யறிவான் மிக்க நாரை[1]வந் தணைய வேண்டித்
தொலைவிலா மீன னேத்துந் தொலைவித்த புதுமை கண்டு
பலகலை வல்லான் வல்ல வல்லபம் பாரீ ரென்றே
யலகிலா மனித ரெல்லா மேத்திஞ ரதிச யித்தே. (ககூ)

வே று.

உடலி னோத்த பறவைக் குவகைகூர்ந்
தடைவி னிற்சிவ லோகத் தடையென
விடர கற்றி யிருங்கண நாயகர்
வடிவு பெற்றங் கிருந்தது வான்மொழி. (உ0)

வே று.

[2] பிரிவறக் கொன்று தின்னுங் கடைப்படும் பிறப்பு நாரை
வரனுறு தேவ ராகி வான்மொழி விருப்பக் கண்டீர்
[3] கருதினிங் கின்றும் பொல்லாக் கடையரா யினுங்[4]கொல் லாதிங்
கரனவந் திப்ப ரேல்வா ஞள்வதற் கைய மின்றே. (உக)

ஆகத்திருவிருத்தம் - களஉடு.

சூசை.—வேதம் உணர்த்திய திருவிளையாடல்.*

—→✻✻←—

நந்தலி லாத கால நான்குக வடிவ மாக
வந்தமில் கற்பந் தோறு மடைவினில் வாரா நிற்ற
திந்தவொண் பிரம கற்பத் தியைந்தவைந் தாவ தான
மூந்திய வுகங்க ணுன்கின் முதலுகத் தாதி தன்னில். (க)

கண்ணுவன் முதலா வுள்ள காரண மூனிவர் யாரு
மண்ணிலோ ரிடத்துக் கூடி மனத்திடை யோர்வா ரங்க
ணெண்ணுமுற் கலியு கத்தி னிருக்குமுன் வேத நான்கும்
பண்ணமை நெறியி னோதா தொழிந்தனர் பார்ப்பார் யாரும். (உ)

ஒருமைநெஞ் சகமு முன்னை யிருபிறப் பொழுங்கு மோங்கும்
பெருமைமுத் தழலு நான்காச் சிரமமும் பீடி லங்கு
மரியபால் வேள்வி யைந்து மாதிரு லங்க மாறுந்
தருமவே ழிசையு மற்றுந் தவிர்ந்திழி தொழிலிற் சார்ந்தார். (ஙு)

க. காலம்: எழுவாய்.

ஙு. வேள்வி ஐந்தாவன: பிரமயாகம், தேவயாகம், மானிடயாகம், பிதுர் யாகம், பூதயாகம் என்பன. ஆதங்கங்களாவன: நிருத்தம், வியாகரணம்,

* "வேத நூல்பயில் கின்றது வாயிலே", "மதையிலங்கு பாடலாய்", "நால் வேதமும் டொருள்களு மருளி, யங்கயற் கண்ணி தன்னெடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே" (திருஞா. தே. திருவாலவாய்); "வேதியா வேதகீதா" (திருநா. தே. ஷி.)

(பி - ம்.) [1]'வந்தனையை' [2]'பரிவற' [3]'கருதுதிரென்றும்' [4]'கொல்லாமல்'

தொன்மைகன் கிலாத கால சுபாவத்தா லோரோர் நாட்டி
நன்மறை [1]யோதி னேரு நயத்தரும் பொருடே ரார்கண்
மன்னிய பொருடேர்ந் தோரு மனத்திடை யழுக்கு வைத்துப்
பின்னெரு வர்க்கு நல்கார் பெரியபா வியர்க ளாகி. (ச)

வே று.

மறந்திக ழுவ்வுக மறைந்த தொப்பிலா
நிறந்திக ழுவ்வுக நிசழ்ந்த தின்றியா
மிறந்தநால் வேதமு மிலங்க மண்மிசை
யறிந்திடு மாறெவ்வா றென்ற ழுங்குமுன். (ஞ)

வே று.

வரனுறு மண்ம கட்கு மணிமுடி யாகுந் தொல்லே
விரிபொழின் மதுரை தன்னு ளிருப்பகா மெலியா தங்கண்
வருவிரேல் வேத நான்கு மயக்கற நவில்வ மென்றே
தெரிதர வுரைத்தான் விண்மேற் றீதறு புகழ்க்கு நல்லோன். (சு)

அந்தநல் லுரைகே ளாமு னழகன்வாக் கென்ரு லித்து
வந்துமா மதுரை தன்னுள் வள்ளல்பொற் கோயில் புக்குச்
சந்தையே வடிவாம் வேத புருடனே தாழா தெங்கள்
சிந்தையா குலங்க ளுரத் தெளிதர வுரைத்தி யென்ரூர். (எ)

மணங்கம ழிறைவன் யாருந் தொழுங்குரு வடிவங் கொண்டாங்
கணங்குயர் முனிவர் யாரு மதிசயித் திறைஞ்சி யேத்த
வினங்குநால் வேத நான்கு மினிய[2]வங் கங்க ளாறும்
பிணங்குத லறந வின்ரூன் பிணங்குநூ லிணங்கு மார்பன். (அ)

பொருந்திய தவத்தான் மிக்கோர் பொருளொடு மடைவிற் கேட்
கரும்பெரு நிறைவு கூரு மளவினி லெழுந்து காணப் [டாங்
பருங்கைவெங் கயங்க டாங்கும் பசும்பொ னிலங்கு வான்ரேர்
திருந்துமா லயத்தொ ளித்தா னருளுடைத் தேசி கேசன். (கூ)

வே று.

அன்னே யொப்ப வருள்சுரந் திப்படி
நன்ன யத்தி னடிமைக்கு நல்லவர்
சொன்ன யப்புறு சொக்கரை யல்லதிங்
கெங்கி லத்திறு மில்லென வாழ்த்தினர். (கo)

கற்பம், கணிதம், பிரமம், சுத்தம் என்பன: இச்செய்யுள் இரத்தினவளி யென்னும் அணி.

சு. 'புகழ்க்கு நல்லோன்': நிசு: ச.

எ. 'அழகன்': "அழகனீபுயங்களீ", "மூப்புரஞ் செற்றவழக" (திருஞா. தே.) "அழகனேயால வாயிலப்பனே" (திருநா. தே.) சுத்தை - வேதம்.

(பி - ம்.) 1'ஓதியோரும்' 2'அங்கங்களோடு'

ஏட்டை [1]நீக்கு மிருடிகண் மன்னுயிர்
வாட்ட நீங்க மகிழ்வொடு மோதியே
கேட்ட வேதங் கிளரப் பொருளொடு
நாட்டி னெங்கு நயக்க விரித்தனர். (கக)

ே ல று.

அண்டம டங்கலும் வெந்துக டுங்கனல் கொண்டொழி யுங்கடைகாட்
[2] கண்டக டம்பவ னத்தர னருளது கலவலின் மாலுந்தி
புண்டரி கந்தர வந்தவி ரும்பிர மன்றரு புந்தியினின்
றெண்டிசை யும்மறை யும்பிர வஞ்சமும் யாவையும் வந்தனவே. ()

ஆகத்திருவிருத்தம் - கஎசஎ.

ப ய ன் மு த லி ய ன.

சொக்கனென் றெருகா லோதிற் றுயர்கெடும் பகையு மாளுஞ்
சொக்கனென் றெருநா லோதிற் றெரிவிலாச் செல்வ முண்டாஞ்
சொக்கனென் றெருகா லோதிற் சுருதிசொல் யாண்டுஞ் செல்லுஞ்
சொக்கனென் றெருகா லோதிற் சொர்க்கமு மெளிதா மன்றே. (க)

திருந்திய விறைவ னெண்ணெண் டிருவிளையாட்டி லொன்றைப்
பொருந்திமுன் கற்போர் கேட்போர் புவிபுக ழரச ராகிப்
பெரும்பயன் றுய்த்து நீங்காப் பிறப்பிறப் பொழித்திங் கெய்தா
வரும்பெருஞ் சிவலோ கத்தி னனைவதற் கையு மின்றே. (உ)

* சுந்தர னவதானங்கள்.....சிவலோகத்தே.

தீதில்வண் டருமை நுபத் திருவிளை யாட றன்னை
யாதொரு போதி யாவ ரோதுவார் யாவர் கேட்பா
ராதரத் தோடு மங்க ணங்கயற் கண்ணி யோடும்
வேதநா யகனுங் கேட்பான் மேவுதற் கையு மின்றே. (ங)

வரனுளீர் முற்றுஞ் சொன்னே னென்னவோர் மாற்ற மின்றிச்
சுரர்தொழு முனிவர் கண்ணீர் துளிப்பமெய் விதிர்ப்பச் செங்கை
நிரைமலர் குவியச் சிந்தை நிறைமல ரவிழத் துங்கக்
கரையழி பேரா னந்தக் கடலிடைத் திளைத்தா ரன்றே. (ச)

கக. ஏட்டை - இளைப்பு. கஉ. கலவலின் - கலத்தலினால்.

* இச்செய்யுளின் முழுப்பாகத்தை இப்புத்தகம் கடுகை - ஆம் பக்கத்திற் காண்க.

(பி - ம்.) 1 'நீக்கும்' 2 'கண்டுகடம்ப வனத்தாளுத்திகள் கலவிடமால் கடலிற்'

வேறு.

மின்னுபுகழ் தரும்பெரிய கருணைச் சொக்கன் விளையாட லறு
பத்து நான்குஞ் சொன்னே, னென்னமறை விதியின்கட் கேட்ட
பத்தி யிருடிகளெய் தாதபே றெய்தி யார்த்தார், கன்னிதிரு மால்
காளி யீசன் காக்குங் கடிமதில்சூழ் மாமதுரைப் புராண மின்று,மூன்
னரிய விதியின்கட் கற்போர் கேட்போ ருயரும்ப ருலகாள்வ ருண்
மை யீதால். (ரு)

வேறு.

வியாதன்வான் மீகி யெச்சன் விரித்திறை விளையாட் டோங்க
வாதியில் வருமென் ருய்ந்த வறுபத்து நாலி லக்கந்
தூய்தகு கவிக டம்மைச் சுருக்கிமூ வாயி ரத்தி
லோதிரு னகத்தி யன்பின் புரைத்தனன் றமிழா லின்றே. (சு)

ஆகத்திருவிருத்தம் - எஎஙஈ.

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிலகையெழுத்துப் பிரதிகளில் மட்டும்
மிகையாக முதலில்வரையப்பெற்றிருந்த
கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள்.

சித்திவிநாயகர்.

விருத்தம்.

க. அத்த னுர்வினை யாடல்க ளாமறு
பத்து நாலையும் பாடுந் தமிழ்மூற்ற
மத்த யானை யவுணனை மாய்த்தருள்
சித்தி யானைதன் சேவடி யேத்துவாம்.

பொய்யாவிநாயகர்.

வெண்பா.

உ. செய்யபுகழ் மேனியனைத் தேவர் தொழுந்தேவை
மெய்யருளும் பொய்யா விநாயகனை - வையமெலாங்
காத்தானை யார்க்கு மிளையானைக் கந்தற்கு
மூத்தானை நாவே மொழி.

முருகக்கடவுள்.

ங. மன்றல் கமழ்குழல்சேர் வள்ளிக்கு வாய்த்தானை
வென்றி மயிலேறும் வேதியனை - யொன்றின்
மூளையானை யாவர்க்கு மூத்தானை யானைக்
கிளையானை நெஞ்சமே யேத்து.

கலைமகள்.

ச. *ஆடகனு நின்றுறையு மன்னமே நின்னுடைய
பாடகமுஞ் சீறடியும் பற்றினேன் - நேடரிய
வற்புதமே யம்மே யணங்கே மணநாறுங்
கற்பகமே நாயேனைக் கா.

கவியின்கூற்று.

ஞ. பல்லக்கு மேலேறிப் பல்லக்கு மேலிட்டோம்
பல்லக் கணிசொக்கைப் பாடினேம் - பல்லக்கு
மன்னு குறையுண்டு மண்மதிக்கும் விண்மதிக்கு
மென்ன குறையுண் டெமக்கு.

ஞ. பல்லக்குமேல் - சிவிகையின்மேல். பல்அக்குமேல் இட்டோம் - அகேக மாகிய உருத்திராக்கங்களை உடம்பின்மேலணிந்தோம். பல் அக்கு அணி - பலவாகிய எலும்புகளை யணிந்த. பல் அக்கும் மன்னு குறையுண்டு - பலருடைய கண்களும் சேரப்பெற்ற குறையுண்டு; மேற்கூறிய காரணங்களால் எமக்கு என்ன குறையுண்டு என்றபடி.

*இச்செய்யுளுள்ளபிரதியில், 'புத்தக மக்க மாலை' (பக். எ) என்னும் செய்யுள் இல்லை.

நூற்சிறப்புப்பாயிரம்.

வெண்பா.

அம்பதுமத் தார்ச்சல்லி யாண்டான் கவுணியர்கோ
னம்பெரும்பற் றப்புலியூர் நம்பிவியங் . தெம்பெருமா
ஞதிவிளை யாட லறுபத்து [1]நான்கினையு
மோதி முடித்தா னுவந்து. (க)

விருத்தம்.

[2] கார்வளங்கொண் மண்டலத்துக் கப்பிஞ்சி நாட்டுரைத்தோன்
சார்பரசு ராமச் சதுர்வேதி மங்கலமாஞ்
சீர்தருதென் செல்லிநக ராண்டான்சொற் றில்லைநம்பி
[3] யார்பூவான் விளையாட லறுபத்து நான்கன்றே. (உ)

நூற்சிறப்புப்பாயிரம்.

க. பதுமத்தார் - தாமரைப்பூமாலை; அந்தணர்களுக்குரியமாலை தாமரைப் பூமாலை யென்பது நூல்வழக்கு. "தாமரைத் தாராருரன்" (சுந்தர. தே. ஓமாம் புலியூர்.) செல்லி ஆண்டான்-செல்லியூரையுடையான்; இவ்வூர் பரசுராம சதுர் வேதி மங்கலமென்றும் வழங்கப்பெறும். கவுணியர்கோன் - கௌண்டின்னிய கோத்திரத்தார்களுள்ளே தலைமைவாய்ந்தவர். பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பது நூலாசிரியரது இயற்பெயர்; அது தில்லைநம்பியென்றும் வழங்கும்.

உ. கார்வளங்கொள் மண்டலமென்பது மதுரையம்பதிக்குக் கிழக்கேயுள்ள தான, 'மழைக்குப் புகுணகொடுத்த மங்கல நாடென்னுமிடமென்றும், கப்பி ஞ்சி நாடென்பது, மேற்கூறிய நாட்டிலுள்ள ஒரு சிறிய நாடென்றும் சிலர் கூறுகின்றனர். உரைத்தோன் - உரைத்தான்; வினைமுற்று; ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாயிற்று. சொல் - புகழ். தில்லைநம்பி - பெரும்பற்றப்புலியூர் நம்பி. ஆர் பூவான் - ஆத்திப்பூமாலையை யணிந்தருளுகின்ற சோமசுந்தரக்கடவுளுடைய. விளையாடல் - திருவிளையாடல். தில்லைநம்பி விளையாடல் அறுபத்துநான்கையும் கப்பிஞ்சி நாட்டில் உரைத்தானன்க.

(பி - ம்.) [1]'நான்கடைவே' [2]'கார்வளவன் மண்டிலத்துக்', 'காரவளமண் டிலத்துக்' [3]'ஆர்வானவிளையாடல்'

கணபதிதுணை.

வீரபத்திரக்கம்பரியற்றிய

திருவாலவாயுடையார் திருவிளையாடற்

பயகரமாலை.

காப்பு.

சித்திவிநாயகர்.

கட்டளைக்கலித்துறை.

மன்னிக்கிடக்குகின் பொற்குளல் லாற்கதி மற்றில்லையென்
றுன்னிக்கிடக்குமென் னுள்ளங்கண் டாயர வொன்றொடொன்று
பின்னிக்கிடக்குஞ் சடைமீதஞ் சாமற் பிறைக்கொழுந்து
மின்னிக்கிடக்குந் தமிழ்க்கூடற் சித்தி விநாயகனே. (க)

கற்பகவிநாயகர்.

பரிவொடு செல்வ மதுரா புரிச்சொக்கர் பாங்கிற்செய்த
திருவிளை யாடற் பயகர மாலையைச் செப்பிடவே
சொரிதரு மும்மத நால்வாய்த் தழைசெவித் துங்கச்செங்கட்
கரிமுகக் கற்பகக் கன்றே கழறற்று காத்தருளே. (உ)

நூல்.

க.—இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடல்.

பூவிற் கவட விருத்தா சுரனைப் பொருதுகொன்று
மேவுற்ற பாவத்தை மண்பெண் புனன்மர மேனிறுத்திச்
சேவித் தொளிர்பொன் விமானமுஞ் சாத்திய தேவர்கள்கோன்
பாவத்தைத் தீர்த்தசொக் கேசர தேசி பயகரனே. (க)

காப்பு.

க. கதி-புகலிடம்; "கதியாரு மில்லை' என்பர் பின்; கஉ. கண்டாய்: முன்னிலையசை. பிறைக்கொழுந்து - மிகக இளமையை யுடையபிறை. பயகரன்-தம்மை நினைப்பவர்களுடைய பயத்தைக் கெடுப்பவர்; என்றது சோமசுந்தரக்கடவுளை; அவர்மீது செய்யப்பட்ட சொன்மாலை பயகரமாலை.

உ. பாங்கு - அழகு. நால்வாய் - தொங்கியவாய். தழைசெவி - தழைந்த காது. கழறற்று - கழலத்தற்று.

நூல்.

க. பூவில் - பூமியில். கவடம் = கபடம் - வஞ்சனை. விருத்தாசுரன் - விருத்திராசுரன். தேவர்கள் கோன் - இந்திரன். சொக்கே - சொக்கநாதக்கட

உ.—வேள்ளாணைக்குச்சாபந்தீர்த்த திருவிளையாடல்.

இந்திரன் கையிற் முருவாச னிட்ட விணைமலரைச்
சிந்திவெண் சிந்துரந் தீங்கணைந் தேதென் மதுரைவந்து
மூன்றுறச் சென்று பணிந்தேத்த மெச்சி முதுபெருஞ்சா
பந்தனைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே. (உ)

ங.—தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்.

சீராக வாழு மதுரா புரியிற் செழியர்குலப்
பேரா மரசன் மகமேவண்டித் தந்தருள் பிள்ளையென்ன
நேராக மூன்று முலையா ளொருபெண்ணை நீதியுடன்
பாராளத் தந்தசொக் கேபர தேசி பயகரனே. (ங)

ச.—மணஞ்செய்த திருவிளையாடல்.

தாண்டிய வெம்பரித் தேரேறி மன்னர் தளத்தைவென்று
மீண்டிடு மூன்று முலையா டடாதகை மேவிநின்கண்
டுண்டி யிரண்டு முலையா மணஞ்செய்து தென்மதுரைப்
பாண்டிய ஞனசொக் கேபர தேசி பயகரனே. (ச)

ஞ.—பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்.

விதம்பெற லேப்தென் மதுரையி லேமண வேள்வியிலற்
புதம்பெற வந்த முனிவர் குழாத்தைப் புசியுமென்ன
இதம்பெறத் தில்லை நடங்கண் டலாதுண லில்லையென்ற
பதஞ்சலிக் காடுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (ஞ)

வுளே. பரதேசி பயகரன் - யாதொரு துணையுமில்லாதவருடைய அச்சத்தைக்கெடுப்பவர்; "அடுபழி யஞ்சா நீச ராயினு நினைக்கி னச்சம், படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும், விடுவதை யின்றி வேறு கனைகணு மின்றி வீயக், கடவனைக் காப்ப தன்றே காப்பென்றுங் கருணை மூர்த்தி" (திருவிளை. மாபாதகங். ங்ஙி), "அடியவருக் கெளியரிவர் பரதேசி காவலரென் றடியில் வீழ்ந்து" (ஷி அங்கம். உஎ) என்னுந் திருவிருத்தங்களும் இதனைப் புலப்படுத்தும். பரதேசி பயகரனே அடியேனையும் காத்தருள்வாயாகவெனச்சில சொல்வ நவித்து முடிக்க.

உ. இணைமலர் - தாமரைப்பூவும் துளவமாலையும்; "பங்கய நறும்பூ வொன்றுஞ் பகர்துள வத்தா ரொன்றுஞ், செங்கையினல்க" (கூ: ச) என்பதனாலுணர்க. வெண்சிந்துரம் - வெள்ளையானை. சாபம் - காட்டானையாகுக வென்று துருவாச முனிவர்இட்டசாபம்.

ங. பேராம் - புகழையுடையவனுகிய; அரசன் - மலயத்துவசன்; பிள்ளையைத் தந்தருள்.

ச. தளம் - சேனை; "நன்றென்று தளமிரண்டி னரபாலர் பலர்திரண்டு நவிலாநிற்ப" (வி. பாரத. சங-ஆம் போர். கசரு) என்பதனாலும், தளகர்த்தன், தளகாயகன், தளவாயென்னும் வழக்காறும் அறியலாகும். நின்கண் தீண்டி - உம்முடைய திருவிழிகள் நோக்கப்பெற்று.

ஞ. விதம்பெறல் ஏய் - வந்தோர் பலவகைப்பயன்களையும் பெறுதல் பொருந்திய. மணவேள்வி - திருக்கலியாணம்; இருபெயரொட்டு. அற்புதம்

சு.—பூதமுண்ட திருவிளையாடல்.

சுசியா ரமுதி னறுசுவை கூட்டித் துலங்குமன்ன
முசியா தளித்தவை யெல்லாரு முண்டு முடிவிலவாப்
புசியாக் குறையமு தூட்டக்குண் டோதரப் பூதத்திற்குப்
பசியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே. (சு)

எ.—ஆறழைத்த திருவிளையாடல்.

அருகிருக் குங்குழ லன்னமெல் லாமுத ரத்தடக்கி
மருவுறு கேணி குளமுத லாவுண்டு வற்றியபின்
பெருகுவிக் கும்வையை வெள்ளமெல் லாம்பெரும் பூதத்திலுற்
பருகுவிக் குஞ்சொக்க னேபர தேசி பயகரனே. (எ)

அ.—கடலழைத்த திருவிளையாடல்.

பிரியா வெனது பிதாவின் றிவசம் பெருங்கடல்போய்த்
தரியா திரங்கி யருள்புரி வாயென்று சாற்றிடவே
[1] முரியா ரளகத் தடாதகை யாரன்னை மூழ்கமுங்கீர்
பரிவா யழைத்தசொக் கேபர தேசி பயகரனே. (அ)

கூ.—மலயத்துவசனையழைத்த திருவிளையாடல்.

வித்தார மாக மதுரா புரியின்மூங் கீரைவிடக்
கத்தா வுடனன்றி யான்மூழ் குவது கணக்கல்லவே
மைத்தா ரளகத் தடாதகை யென்ன மலயத்வசப்
பத்தாவைக் காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கூ)

கo.—உக்கிரன்பிறந்த திருவிளையாடல்.

தடாதகை யார்தென் மதுரா புரியிற் றவமுமன்பும்
விடாவகை யாலுக் கிரனும் புதல்வனை மேதினிமே
லடாவகை யின்றி யரசாளும் வண்ண மழகிற்குறை
படாவகை யீந்தசொக் கேபர தேசி பயகரனே. (கo)

பெற - அறிவை அடைவதற்கு; "அற்புத மூர்த்தி" என்பர். புசியும் - உண்ணுமின். இதம் - இனிமை; "இதமாகடித்தனை" என்பர்பின்; ஈடீ திலீல நடம் பரமாகத்த தாண்டவ மெனப்படும்; "பதஞ்சலிக்காடிய பரம நாடக" (திருவா.)

சு. சுசி - சுத்தம். அமுதின் - அமுதம்போலவே. முசியாது - இளைப்பு உறுதபடி. அன்னம் முடிவிலவாக.

எ. உதரம் - வயிறு.

அ. திவசம் - புராத்ததினம். தரியாது - தாமதியாதபடி. முரி-வளைவு, சுருள். பரிவாய் - அன்புடன்.

கூ. கத்தா=கர்த்தா - கணவன். கணக்கு - முறை. தடாதகை: விளி. பத்தா=பர்த்தா - கணவன்.

கo. புதல்வனை யீந்த.

(பீ - மீ.) [1]முரியாவளகத்'

கக.—வளைவேல்கொண்டுகொடுத்த திருவிளையாடல்.

தெரியலர் வந்து வணங்கித் திறையிடுஞ் சீர்மதுரை
தரிபெற வேண்டுஞ் சடைமன்ன னேதரு நாட்டரையன்
கிரிகட லேபகை கிட்டின் வளைசெண்டு சத்திதந்தோம்
பரிகரி யென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கக)

கஉ.—நான்மாடக்கூடலான திருவிளையாடல்.

மதியா வருணன் மழையால் வருத்தவிம் மாநிலத்தோர்
கதியாரு மில்லை சரணெனப் புட்கலா வத்தமுன்னு
னதியார் மதுரையை நான்மாடக் கூட னலஞ்சிறக்கப்
பதியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே. (கஉ)

கஙூ.—சித்தரான திருவிளையாடல்.

சகம்புக ழுந்தென் மதுரா புரியிற் றரைமதிக்க
வகற்தொறு நீசெய்த வாடல்கண் டேயழ கார்வழுதி
யிகழ்ந்துநின் னுமமென் னென்னவெல் லாம்வல்ல சித்தரெனப்
பகர்ந்தருள் காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கஙூ)

கச.—கல்லானை கரும்புவாங்கின திருவிளையாடல்.

நீங்காத செல்வ மதுரைநன் னுட்டி னிறைபுவியைத்
தாங்காவ லிற்புய மீதுவைத் தேதார்தண் மதிக்குலத்தோ
ராங்கார மார்மன் னவன்கைக் கரும்பைக்கல் லானையினற்
பாங்காக வாங்குஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கச)

கடு.—சங்கப்பலகைகொடுத்த திருவிளையாடல்.

உலக மகிழ்வெய்த முன்னுட் புலவ ருடனிருக்கு
மிலகு தவிசை யளித்தருள் வாயென் றெதிர்புகழும்
புலவர் மதுரையி லேழேழு பேரும் பொருந்தச்சங்கப்
பலகை தருஞ்சொக்க னேபர தேசி பயகரனே. (கடு)

கக. தரிபெற - தரித்தலைப் பெற; கிரிபெற. உக்கிரபாண்டியர் சடையுடன் அவதரித்தமையால், 'சடை மன்னனே' என்றார். தரு நாட்டரையன் - இந்திரன். கிரி - மேருமலை. இந்திரன் முதலிய மூவரே ஒருகாலத்துப் பகையாவார். கிட்டின் - வருவாராயின். வளையும் செண்டும் ஒவ்வோராயுதம். சத்திவேல். பரிகரி - ஒழிப்பாய்.

கஉ. வருத்த - வருந்தச்செய்ய. புட்கலாவத்தமுன்னுல் - புட்கலாவர்த்த முதலிய நான்கு மேகத்தால்; மதுரையை நான்கு மேகத்தால் நான் மாடக் கூடற்பதியாக்கியவரே. நான்மாடங்களின் பெயர்களாவன - கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்பன.

கஙூ. அகற்தொறும் - வீடுகள் தோறும்.

கச. வைத்தோர் - பாண்டியவரசர். ஆங்காரம் - அகங்காரம்.

கடு. தவிசு - ஆசனம்.

கசு.—கீழியறுத்த திருவிளையாடல்.

மாப்பாட லஞ்செறி மாமது ராபுரி வாழ்வழுதி
காப்பா னினைந்த படிகவி பாடிக் கனகத்திணைற்
கோப்பாகக் கட்டுங் கிழியை யறுத்துக் குலதிலகப்
பாப்பானுக் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (கசு)

கள.—நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடல்.

உயர்ந்தநற் கூடல் வழுதிமுன் னேயுன் னுடனெதிர்க்க
வியந்திட நன்னுதற் கண்ணழல் காட்டி மிகவஞ்சியே
கயந்தனில் வீழுங் கிரனை நீர்க்கரை யேற்றியவன்
பயந்தனைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே. (கள)

கஅ.—குறுமுனிக்குத் தமிழரைத்த திருவிளையாடல்.

எண்ணுந் தமிழின் பெருமையிற் காட்டி விசைந்திடவு
முண்ணின்ற ஞானக் கிரற்குண் டாகவு மோங்குபுகழ்
நண்ணுங் குறுமுனி வற்குப தேசநற் கூடலிலே
பண்ணுந் தமிழ்ச்சொக்க னேபர தேசி பயகரனே. (கஅ)

கக.—ஊமை தமிழறிந்த திருவிளையாடல்.

எழிறிகழ் கூடலி னின்பா லகப்பொரு ளின்பயனே
வழிபடு சங்கத் தவர்மொழி வாயென்று வந்துநிற்க
வொழிவிலிவ் வூர்ச்செல்வ னுப்பூர் கிழார்மக னூமன்றன்னுற்
பழுதொழி கென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (கக)

உ0.—இடைக்காடன்பின்போன திருவிளையாடல்.

திருந்திய செல்வ மதுரைச் செழியன்முன் சென்றடியே
னருந்தமிழ் பாடினன் றள்ளின னேயென் றவன்செல்லவே
கருமபன சொல்லி யுடன்வட பாலிடைக் காடனுக்காப்
பிரிந்துபின் போனசொக் கேபர தேசி பயகரனே. (உ0)

கசு. பாடலம் - பாதிரிமரம். காப்பால் - சோலையின்கண். கோப்பு - கோத்தல், பெருமை. கிழி - கிழிக்கப்பட்டதுணியாற்கட்டிய பொன்முடிப்பு. குலதிலகம் - குலத்தில் மேலான. பாப்பான் - தருமியென்பவன்.

கள. எதிர்த்தலாலும் தன்னெதியந்திடலாலும். நக்கீரன்: க, சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச்சொல்.

கஅ. உள் நின்ற. குறுமுனிவற்கு - அகத்தியமுனிவருக்கு. உபதேசத் தைப்பண்ணிய.

கக. அகப்பொருளின் பயனை - இறையனாரகப் பொருளென்னு நூலின் பெருமை. உப்பூர்: ஓரூர். ஊமன் - உருத்திரசன்மர்.

உ0. அவனென்றது இடைக்காடரை. கரும்பை அன்ன.

உக.—கடல்சுவற வேலெறிந்த திருவிளையாடல்.

செருவேறு மன்ன ருடன்புவி மீதிற் றிகழ்சனமு
மருவே தனையுட னீங்கணைந் தாரணி கூடனகர்ப்
பெருவேலை வந்தது வாலுக் கிரனே பிடித்தெறிநின்
பருவேலை யெண்ணுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (உக)

உஉ.—வலைவீசின திருவிளையாடல்.

இருமீன் பிடிக்கு மதியரை யன்முன் பெழின்மதுரைப்
பொருமீன்கண் ணூசேத் தருகெனக் கென்று பொருந்தியபின்
வருமீனுங் கப்பலு மங்குற வேசெயு மாமகரப்
பருமீன் பிடித்தசொக் கேபர தேசி பயகரனே. (உஉ)

உங.—வளையல்விற்ற திருவிளையாடல்.

நிகரற்ற தாரு வனமட வார்நின் மதுரைதன்னிற்
றகவுற்ற செட்டிப் புதல்விக ளாகச் சமைந்தவங்ஙாண்
மிகவுற்ற நல்வளை கொள்ளுமென் றேயவர் வீதிதொறும்
பகர்செட்டி யானசொக் கேபர தேசி பயகரனே. (உங)

உச.—இலச்சினையிட்ட திருவிளையாடல்.

ஓங்கிய கூடற் பதிச்செம் பியன்வர வுள்ளஞ்சியே
யாங்குள வாச லிலச்சினை யிட்டிறை யாங்கிருப்ப
வீங்கொரு வாசல்விட் டேதொழு வித்திட பக்குறியே
பாங்குட னிட்டசொக் கேபர தேசி பயகரனே. (உச)

உஙி.—மாணிக்கம்விற்ற திருவிளையாடல்.

சாத்திய மேன்மை தவரு மதுரைத் தலமதனில்
வாய்த்தநற் செல்வ வணிகனைப் போல வளர்மதியின்
கோத்திர மன்னன் முடிசூட மாணிக்கங் குற்றமறப்
பார்த்திவற் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (உஙி)

உக. அருவேதனை - தீர்த்தற்கரியதுன்பம். பெருவேலை - பெரியகடல். ஆல்: அசை. வேலையெறி.

உஉ. இருமீன் - பருத்தமீனை. அதியரையன் - வலைச்சாதிக்கு அரசன். தருக எனக்கு. மகரப் பருமீன் - சுத்திதேவராகிய பருத்த மகரமீனை.

உங. தாருவனம் - தாருகாவனம். பகர்தல் - விற்றல்.

உச. செம்பியன் - சோழன்; சிபிமரபிற் பிறந்தவ னென்றபடி. வாசலில். இலச்சினை - மீனமுத்திரை. இறை - அரசன்; இங்கே பாண்டியன். இடபக் குறி - இடபமுத்திரை.

உஙி. கோத்திரம் - குலம். மன்னன் - பாண்டியன்.

உசு.—ஆனையெய்த திருவிளையாடல்.

வகையான தொன்றை யறியார் மறுமண் டலத்தமணர்
தொகையாக மேவி வழுதிதன் மேல்விடச் சூழ்ச்சியினுன்
மிகையானே வேந்தினைக் கூடற் பதியை விழுங்கவந்த
பகையானே யெய்தசொக் கேபர தேசி பயகரனே. (உசு)

உஎ.—ஞானோபதேசஞ்செய்த திருவிளையாடல்.

ஞாலத்தர் போற்று மதுரைமன் னன்பொரு ணல்கியனு
கூலப் பெரும்பரி கொள்ளப் பெருந்துறை கூடியரு
ளாலித்த ஞான வுபதேசம் வாதவூ ராளிக்கன்பிற்
பாலித் தருளுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (உஎ)

உஅ.—நரி குதிரையான திருவிளையாடல்.

அரியார்க்குஞ் சோலை மதுரையின் மன்ன னடற்பரிக்கா
வெரியார்த்த கோபத்தின் வாதவூ ராளி யிடுக்கணுறத்
தரியாத் திருவுளத் தாலே நரிதன்னைத் தாரணியிற்
பரியாக் கியசொக்க னேபர தேசி பயகரனே. (உஅ)

உஉ.—குதிரை நரியான திருவிளையாடல்.

வரிபயின் மீனத் துவசன்முன் னேதென் மதுரைதன்னில்
விரிவுறச் செண்டு வெளிதனிற் காட்டி விழுப்பமுட
னெருநலின் முன்றந்த பொன்னுக்கெல் லாம்பரி நீரென்றபின்
பரிநரி யாக்குஞ்சொக் கேபர தேசி பயகரனே. (உஉ)

ஈ0.—மண்சுமந்த திருவிளையாடல்.

அடல்வந்த மானப் பரிக்கு நரியிட் டமைச்சனுக்காக்
கடல்வந்த வெள்ள மழைப்பித்துத் தென்கரை கட்டுதற்காச்
சுடவந்த பிட்டுக்குக் கூடையி லேமண் சுமந்தடியும்
படவந்த தென்சொக்க னேபர தேசி பயகரனே. (ஈ0)

உசு. வகை - நற்செயலின் கூறுபாடு. மறுமண்டலம் - வேறு நாடு; பகைவர்நாடு. அமணர்-சைனர். அமணர் சூழ்ச்சியினுல்விட. யானே வேந்து - யானையையுடைய பாண்டியன்.

உஎ. நல்கி - நல்குதலால். பெருந்துறை - ஆருடையார் கோயில்; பிரு ஹத்தீர்த்த மென்பது இத்தலத்தின் வடமொழிப்பெயர். ஆலித்த - களிப்புறு தற்குக் காரணமாகிய. வாதவூராளி - திருவாதவூரை ஆள்பவர்; திருவாதவூரர்.

உஅ. அரி-வண்டு. எரியார்த்த-நெருப்பை யொத்த. தரியா-தாங்காத.

உஉ. வரி - கீற்று. மீனத்துவசன் - பாண்டியன். செண்டு வெளி - குதி ரையைச் செலுத்தும் முற்ற வெளி. விழுப்பம் - சிறப்பு. நெருநல் - நேற் றைத்தினம்.

ஈ0. அமைச்சனுக்கு - மந்திரிக்கு. என் - யாது.

ஈக.—விருத்தகுமார பாலரான திருவிளையாடல்.

சேலிகல் கூடற் புரத்தே மறையவன் செல்வமின்னே
மாலடி போற்று மறையோன் புதல்வன் வதுவைசெய்யக்
கோலமென் னென்ன விருத்தனு மாகிக் குமாரனுமாய்ப்
பாலனு மானசொக் கேபர தேசி பயகரனே. (ஈக)

ஈஉ.—மாறியாடின திருவிளையாடல்.

விதமான வெண்ணெண் கலைவல்ல கூடலின் மீனவனற்
புதமா கடத்தி னருமைகண் டேபொற் பதம்வருந்த
விதமா கடித்தனை யெத்தனை கால மெனவிரங்கிப்
பதமாறி யாடுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (ஈஉ)

ஈஈ.—பழியஞ்சின திருவிளையாடல்.

செழியன் றமிழ்தெரி கூடலிற் பூசுரன் றேவிவடத்
திழியுமம் பாலுயி ரேகிற்றென் னுதித்த வேடன்கொன்றான்
மொழியும் பரிசிவை யென்றுற்கும் வேந்தற்கு மூதலித்துப்
பழியஞ்சி யானசொக் கேபர தேசி பயகரனே. (ஈஈ)

ஈச.—மகாபாதகந்தீர்த்த திருவிளையாடல்.

தோதக வாசகன் மாமது ராபுரி சூழ்பதியிற்
பேதக மாக மறையோன் புதல்வன் பிதாவைக்கொன்று
தீதகந் தன்னிலுஞ் செய்யா ததுசெய்யச் சேர்ந்தபெரும்
பாதகந் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே. (ஈச)

ஈடு.—அங்கம்வெட்டின திருவிளையாடல்.

புடவிக்குன் வீறு மதுரா புரியிற் புகழ்ப்பணிக்கன்
றிடமுற்ற மைந்தரிற் சித்தனென் போன்செய்த தீமையிலுற்
கடகொட்டி வாளிட் டெதிரிட் டவன்றனைக் கண்டதுண்டம்
படவெட் டியசொக்க னேபர தேசி பயகரனே. (ஈடு)

ஈக. கூடற்புரம் - கூடல் நகரம். என்னென்ன - என்னவென்று கூறிக் கண்டோர் ஆச்சரியமடையும்படி.

ஈஉ. வல்ல மீனவன் - பாண்டியன். அற்புதமா - ஆச்சரியமாக. என - என்று பாண்டியன் வருந்திக் கூறினமையால்.

ஈஈ. வடத்து - ஆலமரத்தினின்றும், என்னுது-என்று நினையாமல். என் றற்கும்-என்ற பிராமணனுக்கும். மூதலித்து-ஒப்புவித்து. அஞ்சி-அஞ்சியவன்.

ஈச. தோதக ஆசகல் - வஞ்சகமாகிய குற்றம் நீங்கிய. பேதகம் - வேறுபாடு.

ஈடு. வீறு - ஒப்புயர்வற்று ஓங்கிய. பணிக்கன் - ஆயுதவித்தை கற்பிக்கும் உபாத்தியாயன்; ஈடு: க, பார்க்க. மைந்தரில் - மாணாக்கருள்ளே. கடகு - கேடகம். எதிரிட்டவன் - சித்தன். ஓட்டி - பொருந்தி; சபதஞ்செய்தென்றுமாம். வாள்இட்டு - வாள்கொண்டு.

ஈசு.—மதுரையான திருவிளையாடல்.

கதியங்கெய் தாத வமணர்க ளேவுங் கடியரவைத்
துதிகொண்ட பாண்டியன் வில்வாங்கிக் கொல்லத் தொடர்விடத்தை
மதிபொதி நீர்கொண்டு மாற்றிக் கடம்ப வனமதுரைப்
பதியெனப் பண்ணுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (ஈசு)

ஈஎ.—வெப்புத்தீர்த்த திருவிளையாடல்.

வந்தித் தவர்த மனத்துயர் தீர்க்கு மதுரையென்றே
சிந்தித் துயர்கதி சேராமற் றீநெறி சேர்ந்தபொல்லா
நிந்தைச் சமணும் வழுதிவெப் புங்கெட நீறிடச்சம்
பந்தர்க் கருள்சொக்க னேபர தேசி பயகரனே. (ஈஎ)

ஈஅ.—கழவேறின திருவிளையாடல்.

இதத்த செழுந்தமிழ் சேர்கூடன் மன்னன்மு னேடெழுதி
விதத்துடன் சம்பந்தர் தீநீரிற் போட்டிட வெற்றிகண்டே
மதத்தபொல் லாத சமணரெண் ணுயிரர் வன்கழுவிற்
பதைத்திட வேறுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (ஈஅ)

ஈக.—மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்.

விண்ணுடர் போற்று மதுரைதன் மேன்மறு வேந்தன்வரத்
தண்ணுரு மந்திரிக் கொந்தக ஞர்செய்த தன்மங்கள்கண் [போர்
டெண்ணுப் பெரும்படை மெய்க்காட்டிட் டேயன் றெதிர்த்துவெம்
பண்ணுமல் வெல்லுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (ஈசு)

சo.—உலவாக்கிழிகொடுத்த திருவிளையாடல்.

கோத்திர மன்னவன் வேதாந்தத் துண்மைகொள் ளாமன்மூனஞ்
சாத்திர வேள்வி மறந்திட மாமழை தாழ்த்ததனாற்
காத்தரு ளென்ன மதுரையி லேகன கக்கிழியப்
பார்த்திபற் கிந்தசொக் கேபர தேசி பயகரனே. (சo)

ஈசு. கதி - முத்தி. கடியரவு - கடிக்கும் பாம்பு; கடி - அச்சமுமாம். மதிபொதி நீர்கொண்டு - அமுதத்தைக்கொண்டு.

ஈஎ. சிந்தித்து - நினைத்து. தீநெறி - பாவமார்க்கத்தை. சமணும் - சைனமதமும். வழுதிவெப்பும் - பாண்டியனது சுரநோயும். நீறிட அருள்.

ஈஅ. இதத்த - இனிமை செய்தலையுடைய. விதம் - வகை. தீநீரில் - தீயிலும் வையையாற்று நீரிலும். வெற்றி - ஏடு வேவாததும் எதிரேறியதும். ஏறும் - ஏறுதற்குக் காரணமான.

ஈக. மறுவேந்தன் - வேற்றரசன். மந்திரிக் கொந்தகனர் - கொந்தகக் குலத்திற்பிறந்த மந்திரியாகிய சுந்தர சாமந்தன். மெய்க்காட்டிட்டு - உடம்பு களைக்காட்டி.

சo. கோத்திரம் - குலம். தாழ்த்தல் - தாமதித்தல்.

சக.—மாம்னுகவர்து வழக்குரைத்த திருவிளையாடல்.

எண்பார் மதுரை வணிகன் புதல்வரில் லாமையினு
னண்பா மருகை மகவாக்கிச் சென்றபி ஞதியர்கள்
கண்காணி கைக்கொள்ள மாமனைப் போல்வழக் காடச்செட்டிப்
பண்பாக வந்தசொக் கேபர தேசி பயகரனே. (சக)

சஉ.—அட்டமாசித்திபகர்ந்த திருவிளையாடல்.

நலங்கிளர் வெள்ளிப் பொருப்பினின் மூவிரு நாரியர்க
ளிலங்குப தேசம் பாராமுகஞ் செய்திடத் தொன்மரத்தி
னிலங்கிய நீழலிற் கல்லாக்கி மாற்றிமுன் பெண்சித்தியும்
பலந்தரச் சொன்னசொக் கேபர தேசி பயகரனே. (சஉ)

சகூ.—தண்ணீர்ப்பந்தர்வைத்த திருவிளையாடல்.

மூந்திப் பருதி குலத்தடன் மன்னன் முதிர்படையால்
வந்திடக் கண்டு மதுரையர் கோன்செய்யும் வாறெதென்னத்
தந்திரத் தாலவன் முன்றேற்கு நீசெல்க வென்றுதண்ணீர்ப்
பந்தரை வைத்தசொக் கேபர தேசி பயகரனே. (சகூ)

சச.—இந்திரன்முடிமேல் வஜ்யெறிந்த திருவிளையாடல்.

மடலவிழ் சோலை மதுரையர் வேந்தன் மழைபொழியா
திடர்செயுங் காரைச் சிறைவைக்க நீக்கென் றிமையவர்கோ
னடல்செயு நாளி லவன்முடி மேல்வஜ் யார நின்று
படவெறி யென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (சச)

சஙு.—பொன்னனையாஞுக்கருள்புரிந்த திருவிளையாடல்.

மணிதிகழ் மாட மலிமது ராபுரி வாழ்சித்தசேர்ந்
துணிவுட னின்னன்பு கேட்டணைந் தேமென்று சொல்லிப்பின்ன
ரணிதிகழ் பூவணப் பொன்னனை யாளுக்கன் முனிப்பொன்னைப்
பணிவிடைக் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (சஙு)

சக. மருகை - சகோதரியின் பிள்ளையை. நாதியர்கள் - ஞாதியர்; தாயாதியர். கண்காணி - கண்காணிக்கப்பட்ட விளைநில முதலியவை. செட்டிப் பண்பாக - வைசியவேடமாக.

சஉ. பராமுகஞ்செய்திட - அசட்டை செய்ய. தொன்மரம் - ஆலமரம். மாற்றி - மாறச்செய்து; பெண்வடிவமாக்கி. முன்பு எண்சித்தியும். பலம்-பிரயோசனம்.

சகூ. வாது - விதம்; பிற்காலத்து நூல்களில் இச்சொல் இந்த உருவத்துடன் மோனையில் வழங்குகின்றது. தந்திரத்தால் - சேனைகளுடன். தோற்கும் - தோற்பான்.

சச. காரை - மேகத்தை. அடல் - போர். வஜ்யைஎறி.

சஙு. பூவணம்-திருப்பூவணம். ஆணிப்பொன்-உரையாணியாகிய பொன். பணிவிடை - கைங்கரியம்; "மூர்த்திபணிவிடை" என்பர்பின்; இத.

சசு.—சோழனைக்கொண்டாழியிற்றழ்த்த திருவிளையாடல்.

வேதா வணங்கு மதுரா புரியில் வெகுண்டடைத்தான்
றீதாக வந்த வளவனென் றேதச் செழியனுக்கா
வாதார மாய்ச்சென் றமராடிப் பண்டுகொண் டாழியென்னும்
பாதாளத் திட்டசொக் கேபர தேசி பயகரனே. (சசு)

சஎ.—திருவாலவாயான திருவிளையாடல்.

ஆம்பா ரனைத்து மலைகோத்து நீங்குமந் நாளினின்னை
வேம்பார் தொடைப்புய னெல்லை விளம்பென வேண்டிடவே
தேம்பாத செல்வத் திருவால வாயெனச் சீருடைய
பாம்பால் வளைத்தசொக் கேபர தேசி பயகரனே. (சஎ)

சஅ.—வராதணைவுக்குச் சிவலோகங்காட்டின திருவிளையாடல்.

வரகுண தேவன் பிரமத்தி வந்து வருத்தியகாட்
டிரமூட னேயிடை மாமரு தூரிற் செறுத்ததனை
யுரகமுற் சூழ்ந்த மதுரையி லேயவற் கூரறியப்
பரகதி காட்டுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (சஅ)

சகூ.—விடைக்குறியம்பெய்த திருவிளையாடல்.

மடைத்தலை முத்தங் கொழிக்கு மதுரையின் மேல்வளவன்
றிடத்துட னேவரப் பாண்டிய னுள்ளந் தெளியச்செய்து
விடைக்குறி தீட்டிய வம்பாற் கரிபரி வீழ்ந்துமுற்றும்
படத்தொலை வித்தசொக் கேபர தேசி பயகரனே. (சகூ)

ரூ0.—உலவாக்கோட்டைவைத்த திருவிளையாடல்.

பெருங்கோ டிலாவும் வயல்சூழ் மதுரைப் பெரும்புரியின்
மருங்கோடி வாழ்கின்ற சூத்திர வாதித்தன் மாதவர்க்கா
யிருங்கோ டிலாத வழுதிட் டிளைத்தன னென்றவற்குப்
பருங்கோட்டை யீந்தசொக் கேபர தேசி பயகரனே. (ரூ0)

சசு. வளவன் - சோழன். வளவன் வெகுண்டடைத்தான். கொண்டாழி-தன்பாற் கொண்டு உள்ளேயழுத்திய இடம். பாதாளம் - மிகவும் ஆழமான நீர்நிலை.

சஎ. அலை - கடல். விளம்பென்று நின்னை வேண்டிடவே. தேம்பாத-குறையாத. ஆலவாயென்பது அன்மொழித்தொகையாகப் பாம்பின்பெயரா இப் பின் அதன்வேண்டுகோளின்படி மதுரைக்காயிற்று.

சஅ. தேவரென்று அரசரைக் கூறுதல்மரபு. அதனைச் செறுத்தென்க. பரகதி - மேலான முத்தி.

சகூ. மடைத்தலை - நீர்மடையில். திடம் - வலி. விடைக்குறிதீட்டிய அம்பு - இடபமுத்திரை பொறித்தபாணம். பட - அழிய.

ரூ0. கோடி - கரை. மருங்கோடி - சுற்றத்தாரோடி. சூத்திரவாதித்தன் - வேளாளருள் உயர்ந்தோன்; சூத்திரசூளாமணியென்று முதனூலில் இவன் பெயர் கூறப்படும். கோடி-மறு. பருங்கோட்டை - பருத்த தெற்கோட்டையை.

நிக.—மூர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடல்.

கலித்துயர் தீர்க்கு மதுரையி லேயன்பர் காதலினு
லொலித்திடு பூசைக்குச் சந்தன மூட்ட வுரைத்துச் செங்கை
சலித்திடு மூர்த்தி பணிவிடை யிம்மையிற் ரூழ்வறவே
பலித்திட வீந்தசொக் கேபர தேசி பயகரனே. (நிக)

நிஉ.—காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடல்.

மாப்பல வுங்கமு கும்புடை சூழ மதுரைதன்னிற்
கோப்புடன் காரியர் நாரியர் மேற்குல வேந்தன்றன்மேல்
யாப்பலங் கார மெழுத்துப் பொருட்சொற் கியையச்செய்த
பாப்பகுந் திட்டசொக் கேபர தேசி பயகரனே. (நிஉ)

நிஊ.—புலிழலைபுல்வாய்கீகநளின திருவிளையாடல்.

மாலொடு தேவர் மகிழ்ந்தேத்து நீப வனத்துழையைக்
கோலொடு வேடுவர் கொல்லக்கண் டேயதன் குட்டிக்குத்தாய்
போலுடன் வந்தந்தப் புல்வாய் மறிக்குப் புலியைழலைப்
பால்கொடு வென்னுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (நிஊ)

நிசு.—சாதாரிபாடின திருவிளையாடல்.

புயவறழ் சோலை மதுரையின் மன்னன் புகழவந்தோ
னியலிசை வல்ல னெனவே வரவியற் பாணனுக்கா
வியனுற வேழிசைச் சாதாரி பாட விறகுசுமை
பயனுற வேந்துசொக் கேபர தேசி பயகரனே. (நிசு)

நிடு.—திருமுகங்கொடுத்த திருவிளையாடல்.

வேடிக்கை யாக மதுரா புரிமன்னன் மேன்மையெலா
நாடிப் புகழு மியற்பாண பத்திர னல்லிசைக்காத்
தேடிக் கொடுக்கவும் போதாமற் சேரற்குச் சீட்டுக்கவி
பாடிக் கொடுத்தசொக் கேபர தேசி பயகரனே. (நிடு)

நிக. கலித்துயர் - வறுமை முதலியவற்றில் துயர். ஒலித்திடு - மணி முதலியவைகள் முழங்கப்பெற்ற. மூர்த்தி - மூர்த்திநாயனார். சந்த - அர சாட்சியைக்கொடுத்தருளிய.

நிஉ. மாப்பலவும் - மாமரமும் பலாமரமும்; பெரியபலவுமாம். காரியர் நாரியர் - காரியார் நாரியார் என்னும் புலவர்கள். யாப்பும் அலங்காரமும் எழு த்தும் பொருளும் சொல்லும் என்னும் ஐந்திலக்கணத்திற்கும் பொருந்த. பாப் பகுந்திட்ட - செய்யுட்களைப்பிரித்திட்ட.

நிஊ. நீபவனம் - கடம்பவனம்; மதுரை. உழையை - மானை. கோலொடு- அம்பைக்கொண்டு. புல்வாய் மறிக்கு - மான்குட்டிக்கு; "புலிழலை புல்வாய்க் கருளினை போற்றி" (திருவாசகம்.)

நிசு. பாணனுக்கு - பாணபத்திரர் பொருட்டு. சாதாரி - சாதாரியென் னும் பண்ணை; இப்பண்ணைத் தேவகாந்தாரி என்பர் வடநூலார்.

நிடு. பாணபத்திரன் - மேற்கூறிய பாணபத்திரர். சீட்டுக்கவியென்பது "மதிமலி புரிசை" என்னுங்கவியை.

நகூ.—பலகையிட்ட திருவிளையாடல்.

மூத்தமி ழோரெண் மதுரையி லுன்னெழுப் போதுமல்லான்
மெத்திய யாமத்தும் பாடப்பெய்ம் மாரிக்கு வேண்டியதோர்
சித்திர மாம்பொற் பலகை செழுந்தமிழ்ப் பாணனென்னும்
பத்திரற் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (நகூ)

நஎ.—இசைவாதுவென்ற திருவிளையாடல்.

மூடிவொன் றிலாத மதுரா புரிமன்னன் மூத்தமிழ்நூல்
குடிகொண்ட வெற்றி விறலிதன் னெடிசை கூறென்றகாள்
வடிவங் திகழ்பத் திரன்மனை யாளிசை வாதுவெல்லும்
படிவங் துதவுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (நஎ)

நஅ.—பன்றிக்குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடல்.

வென்றிகொள் கூடலில் வேளாளன் சேய்கண்மென் றூறகழ்ந்து
வன்றிறன் மாமுனி சாபத்துக் கேழல் வடிவுறத்தாய்க்
கொன்றிடப் பாண்டியன் முய்போல வந்து கொழுமுலையப்
பன்றிகட் கீந்தசொக் கேபர தேசி பயகரனே. (நஅ)

நகூ.—பன்றிக்குட்டிகளுக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.

நீலக் கரும்பன் றிக் குட்டிமூன் நான்குநின் பாலருந்திக்
கோலத் துடன்வளர்ந் தக்கோல நீங்கித்தென் கூடலிலே
சீலத் தவர்புகழ் வேளாளர் கோத்திரத் திற்செனிக்கப்
பாலர்க் கருள்சொக்க னேபர தேசி பயகரனே. (நகூ)

கூ0.—கரிக்குருவிக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.

பொறையற்ற காகத்துக் காற்றுமை லேதினம் போதகொந்தே
குறைவற்ற செல்வ மதுரைவந் தேதன் குறையனைத்து
மறையமித் துஞ்சய மந்திரத் தாலக் கரிக்குருவிப்
பறவைக் கருள்சொக்க னேபர தேசி பயகரனே. (கூ0)

நகூ. எண் - எண்ணுகின்ற. மெத்தியயாமத்தும் - நிரம்பிய பாதியிரவி லும். மாரிக்கு - மழையாலுண்டாகும் துன்பத்தை நீக்கும்பொருட்டு.

நஎ. விறலி தன்னெடி - மாற்றாளாகிய விறலிதன்னெடு.

நஅ. சேய்கள் - பிள்ளைகள். தூறு அகழ்ந்து - புதர்களைப் பெயர்த்து. கேழல்வடிவு - பன்றிவடிவம். பாண்டியன் தாய்ப்பன்றியைக் கொன்றிட.

நகூ. மூன்றான்கும் - பன்னிரண்டும். கோலத்துடன் - அழகுடன்; பன்றி களுடன் என்றுமாம். அக்கோலம் நீங்கி - அந்தவடிவம் நீங்கப்பெற்று. செனிக்க - பிறக்க. அருள் - மந்திரிகளாக இருக்கும்படி கருணைசெய்த.

கூ0. காகத்திற்கு ஆற்றுமல் - காகம்செய்யுந் துன்பத்தைப் பொறுத்தற்கு வலியில்லாமல். போத கொந்து - மிககொந்து. மித்துஞ்சயமந்திரத்தால் - மிர்த்தியுஞ்சய மந்திரத்தால்.

சுக.—மாமேருவிற் கயல்செண்டுபொறித்த திருவிளையாடல்.

நான்மறை யோரை வழுதி யிகழுநன் மாரியின்றி
மேலுயர் பூதலத் தெல்லோரு மாழு றிடிகெடவே
சேலுடன் செண்டிட்டு மேருப்பொன் வாங்கித் திகழ்மதுரைப்
பால்வரச் செய்தசொக் கேபர தேசி பயகரனே. (சுக)

சுஉ.—சான்றழைத்த திருவிளையாடல்.

கதிசேர் வணிகன் விடத்தா லுயிர்விடக் கன்னிகையால்
விதிசேர் சம்பந்த னெழுப்ப மணந்தவர் மேவுறுநா
ணதிசேர் புறம்பயக் கூவ றிறைவன்னி நன்மதுரைப்
பதிசேரப் பண்ணுஞ்சொக் கேபர தேசி பயகரனே. (சுஉ)

சுங.—நாரைக்கு அருள்புரிந்த திருவிளையாடல்.

கத்திக் கழனி தொறுமீ னருந்துஞ்செங் காஞரைதான்
மூத்திக் குரிய பெரியோரைச் சேர்ந்த முகிழ்த்தத்திரு
லெத்திக்கு மெண்ணு மதுரா புரியிற்சென் றேகிச்செய்த
பத்திக் கருள்சொக்க னேபர தேசி பயகரனே. (சுங)

சுச.—வேதமுணர்த்திய திருவிளையாடல்.

மரியாத மாமறை மாய்ந்திட முன்னுகம் வந்தவங்காட்
டெரியாம லந்தண ரெல்லாக் திகைப்பத் தெளிந்திடவே
விரிவான வேதத்தை யெல்லாருங் கண்டு விளம்புகென்னப்
பரிவாய்ப் பகர்ந்தசொக் கேபர தேசி பயகரனே. (சுச)

திருவிளையாடற் பயகரமாலை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சுக. மிடி - தரித்திரம். சேலுடன் செண்டிட்டு - செண்டென்னும் ஆயுதத்தாலடித்து மீனமுத்திரைவைத்து.

சுஉ. சான்று - சாட்சி. கதி - விளங்குதல், நடை. கன்னிகை - விவாகமாகாதவள். அவர்மணந்து - அவ்வணிகனும் அக்கன்னிகையும் கலியாணம் செய்துகொண்டு. கூவம் - ஜிணபுரி. இறை - சிவலிங்கப்பெருமான். வன்னி - வன்னிமரம்.

சுங. கத்தி - முழங்கி. முகிழ்த்தம் - முகூர்த்தம்; நல்வேளை.

சுச. மரியாத - இறவாத. முன்யுகம் - முதல்யுகம். தெளிந்திடவே விளம்புகென்ன. கண்டு - தரிசித்து.

கூ

கணபதிதுணை.

கடம்பவன புராணம்.

பத்தாவது

இலீலாசங்கிரகவத்தியாயம்.

க.—இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடல்.

புரந்தரன்முன் விருத்திரா சுரனை வீட்டும் புன்பழிநாற் கூரூக்கி நீக்கி வந்தே, யரந்தைதவிர் நிருத்தங்கண் டிருக்கத் தேவர் மனங்க வரு மடல்வேட்ட மென்னப் போந்து, வரந்தருநற் கதம்பவனத் தருளா லெய்தி வரதனைக்கண் டாவிப்பொற் கமலஞ் சூட்டித், திரந் தருசித் திரையில்விடாப் பழிநீங் கற்கெண் டிண்கயமா னஞ்சாத்திச் சிறப்பின் வாழ்ந்தான். (க)

உ.—வெள்ளானைக்குச் சாபந்தீர்த்த திருவிளையாடல்.

வாசவன்கூ றிடவயிரா வதமீ பக்கான் வந்தருளா லீசனைக்கண் டிறைஞ்சி வேந்தன், றேசுபெறு துருவாசன் கொடுத்த சேடந் திரு மூடிசூ டாதிகழத் தென்னர் கோவாற்,பேசுமுமா மூடிபிளக்க வெற்று ணென்றும் பெரிதுதுகைத் திடுமெனைவின் னகன்று மண்ணிற், காசுறச்செல் கென்றுமுடன் சபிப்பப் போந்தே னெனக்கழறிக் கடிஞ் சாபந் தீர்ந்தே கிற்றால். (உ)

கூ.—தடாதகையார் அவதரித்த திருவிளையாடல்.

தென்னன்மல யத்துவசன் காதன் மாதர்ச் சேர்ந்துநெடுங் காலங்கள் போக்கி வேந்த, ரின்னகைமா தினைமணந்து மகவி லாம லியற்றுதவத் தான் மூன்று முலேயி னுலோர், மின்மகவை யருளவரு

க. வீட்டும் - கொன்ற. புன்பழியை. அரந்தை - துன்பம். நிருத்தம் - ஆடல். வேட்டம் மனங்கவருமென்று தேவர்கள்கூற. கதம்பவனம் - கடம்ப வனம்; கதம்பம் - கடம்பு. ஆவி=வாவி. திரம் - நிலைபெறுதலை. சித்திரை யில் - சித்திரைமாதத்தில், சித்திரைநட்சத்திரத்தில். எண்திண் கயமானம் - திண்ணிய எட்டு யானைகளாற் சுமக்கப்பட்ட விமானம்.

உ. கூறிட - சொல்ல. நீபக்கான் - கடம்பவனம். வேந்தன் - இந்திரன். தேசு - ஒளி. சேடம் - சேஷம். இகழ - இகழ்தலால். எற்றுண் - அடிக்கப் படுவாய். காசு - குற்றம்.

கூ. மலையத்துவசன்: கொடியில் பொதியில்மலை எழுதப்பெற்றிருத்தலின், இவனுக்கு இப்பெயர் வந்தது; இவனை மலைக்கொடி மன்னனென்பர்; சு: க.

ளால மைச்சன் விளங்கியபேர் தடாதகையாங் கணவற் கண்டான், மன்னுமுலே மறைந்தரசா மெனப்பொன் மோலி வைத்தரசன் வான டைந்தான் மதுரை யாண்டாள். (க.)

ச.—மணஞ்செய்த திருவிளையாடல்.

மும்முலேயாள் கணவனேவேட் டெழுந்தெண் டிக்கு முடுகிவிச யஞ்செய்து கயிலே மேவ, வம்மினென விமையவர்போர் புரிந்தாற் ரூது வந்துரைப்ப வஞ்சலென்றீ சன்முன் கண்டான், செம்மையிற் காண் பளவின்மற்றைத் தனம றைந்த செயலறிந்தே யருளெனலுங் திருக்கண் சாத்தித், தம்முறையான் மணந்துமுடி சூடி வையந் தனே யாண்டு சிவலிங்கார்ச் சனேயுஞ் செய்தான். (ச)

ஞ.—பதஞ்சலிக்கு நடஞ்செய்த திருவிளையாடல்.

திருமணத்தின் வந்தோர்க டமைநீ ராடிச் சென்மினிவ ணென மூழ்கிமுனிவர் தேவர், வருமவரிற் பதஞ்சலிமா முனிவன் றில்லே மன்றினடங் கண்டல்லாற் புசியே னென்னத், தருமகவான் சாத்திய பொன் மான மீது தளிர்ப்பொகிகண் டறிதியெனக் காட்டி முன்னே, யருமறைசூழ் கனகசபைத் தென்பால் வெள்ளி யம்பலத்தி னடம் புரிந்தான் புசித்தான் கண்டு. (ஞ)

ஃ.—பூதமுண்ட திருவிளையாடல்.

தடாதகைசொல் வாளிறைவ நின்னே டிங்குத் தாவில்பலர் வருவ ரென வமைத்த வன்னம், விடாதசுரர் சுரர்நாகர் நரர்க ளுண்டி மிக வளருந் தொலேந்தநிலே யென்னும் வேலே, யடாதபசி யால்வருந்தி மெலிந்த குண்டோ தரனுற்றே னெனவலற வீசன் காட்ட, வடாது கயி லேக்கிரிநே ரன்னக் குன்றை வாரியயின் றதுகொடியின் மங்கை நாண. (ஃ)

எ.—ஆறழைத்த திருவிளையாடல்.

பொருவருமா தபத்திரந்தாங்கியநான் சிற்றாண் புசித்திளத்தே னென்றன்னங் குழிக ணுன்கின், வருதலுநாற் றிரலேயாய் விழுங்கித் தெண்ணீர்த் தாகத்தான் மடிபொய்கை வாவி கூபப், பொருபுன லுன் னனகுடித்தம் புனிதா நீரென் றேலிட்ட பூதநதி யழைத்துக் காட்ட, வொருவுகிழக் ககன்ற புனன் மீண்டுஞ் செல்ல வறிஞ்சியது மணல்பிறங்க வாயங் காண்டு. (எ)

காதல் மாதர் - போகஸ்திரீகளே. அமைச்சன் கூறியதை, "ஐயமில்" (க: அ) என்னுஞ் செய்யுளாலறிக. வேந்தரின்னகைமாது - குலஸ்திரீ.

ச. வேட்டு - விரும்பி. வம்மின் - வாரும். ஆற்றது - வலியில்லாமல். அஞ்சல் - அஞ்சற்க. சிவலிங்கம் என்றது மடியூரிற் பூசித்த சிவலிங்கப் பெருமானே. அந்தச் சிவலிங்கத்தின் திருநாமம் இம்மையே நன்மைதருவார் என்பது.

ஞ. கனகசபை, இப்போதுள்ள வெள்ளியம்பலத்திற்கு வடக்கே யிருந்ததாக வேறுநூல்களாலும் தெரிகின்றது.

ஃ. வடாது - வடக்கின்கண் ணுள்ளது.

எ. ஆதபத்திரம் - குடை. கூபம் - கிணறு. ஓலிட்ட - ஓலமிட்ட.

அ.—கடலழைத்த திருவிளையாடல்.

அன்புடைய வன்னைகட லாடற் கெண்ண வவண்மொழிகேட் டீசனைத்தன் வயத்த தாக்கு, நன்புடையா டொழுதுரைத்தம் மாற் றங் கூற நயந்தறியா ரெனவிருந்து முகம்வா டக்கண், டின்புடைநின் முகவாட்டந் துணிந்து காண்பா னெண்ணிபிருந் தேனெனவேழ் கடலுங் கூவத், தென்புடவி கடவாதவ் வடைவின் வந்து சிவதீர்த் தத் தடத்துறவேழ் கடலென் றார்கள். (அ)

க.—மலயத்துவசனையழைத்த திருவிளையாடல்.

வாருதியொன் றுவந்தளையேழ் கடலு மிங்கு வந்தனகம் மிறை யருளா லாடி கென்னப், பேருததி மாமடவா ராடிற் கொண்கன் பிறங் குசுத ஞன்கன்றே டாடி னல்லாற், சாருறவா டாரென்பர் வர ரென் றியாய்முன் சாற்றுதல்சாற் றப்பதியை யழைத்துக் காட்டிச், சீருதவு கணவனெடா டிப்போற் றுமுன் சிவலோகங் கொடுக்கவவர் சேர்ந்து வாழ்ந்தார். (கூ)

கo.—உக்கிரன்பிறந்த திருவிளையாடல்.

பொன்மலய மயிலாசு புரிந்து காக்கும் புவிமுழுதோர் புரமென வே புரக்கும் வேந்தன், மன்மதிநன் மரம்போங்க விருங்கோ மாறன் மாறறுசுர் தரமாற ஞதி மாறன், மென்மூளரிக் கண்ணுவந்தோ னருளால் வேலோன் விமலைதடா தகைவயினுக் கிரனு ரென்றோர், நன் மகவாய்ச் சடையொடுமூற் பவிக்க மோலி நனிகவித்தான் கோச்சடில வருமு னென்றார். (கo)

கக.—வளைவேல்சேண்டுகொடுத்த திருவிளையாடல்.

தாவருமுக் கிரன்றலையிற் புவிவன் பாரந் தாங்கெனவைத் தருள் புரிந்தங் கிமையோர் வேந்த, னெவமுடி சாடுகென வளையுந் தந்து நூக்குகடல் சுவறவெறி கெனவே லீந்து, மேவருகந் துகம் போல விமையோர் வாழ்பொன் மேருவினை யடிக்கெனவன் செண்டை நல்கித், தேவர்புகழ் மணம்புணர்வித் தமலையோடுஞ் சிறந்த கணத் தொடுமறைந்தான் செழிக்க வையம். (கக)

அ. நன்பு - நன்மை. சிவதீர்த்தம் - எழுகடலுண்டாகிய தீர்த்தம்; கடம்ப. சு: சுவை-பார்க்க.

கூ. வாருதி = வாரிதி - கடல். உததி - கடல். சுதன் - பிள்ளை. ஆன்கன்று - பசுக்கன்று. சாருற - பொருந்த. வரர் - பெரியோர்.

கo. மலயம் - பொதியில்மலை. புரம் - நகரம். மதிநன்மரபு - சந்திர குலம். மூளரிக்கண் - அக்கினிக்கண். வேலோன் - முருகக்கடவுள். வயின் - வயிறு, இடம். உற்பவிக்க - பிறக்க. சடிலம் - சடை. வருமன் - இரண்டாம் வருணத்தார்க்குரிய பொதுப்பெயர்.

கக. தாவரும் - கேடற்ற. ஓவம் - சித்திரவேலை. நூக்குகடல் - செலுத்துகின்றகடல். கந்துகம் - பந்து. செண்டு - ஓராயுதம். அமலை - தடாதகை.

கஉ.—நான்மாடக்கூடலான திருவிளையாடல்.

தாணுவலி யறிவானங் கெண்ணி யேவுந் தடங்கடலைச் சுரர்சித் தர் மனிதர் நாகர், பூணரவா வெனுமுன்விடக் குடித்த வென்றிப் புட் கலா வருத்த முதற் புயல்க ணுன்கா, மாணுறுமா மழையையே வுற நான் மாட மாக்கிவலி தொலைவிக்க விகல்விட் டேகி, நாணெடு தாழ்ந் தருச்சித்தான் வருணன் றூய நகரிதனை நான்மாடக் கூட லென்றூர். (கஉ)

கந.—சித்தரான திருவிளையாடல்.

மாத்திரைபொக் கணம்யோக பட்டத்தோடு மதுரையிலெல் லாம்வல்ல சித்த ராகி, யேத்திமட வாரெல்லாம் வீதி தோறு மின வளைசிந் திடவெங்கும் வந்து லாவிச், சேர்த்திடுமன் ஞள்பிடிப்ப வகப்ப டாது சென்றுமருத் தின்றிசைக்கல் லிபத்தின் பாங்கர்த், தோத்திரஞ்சே ராலயத்துட் டென்னர் கோமான் மெழுதிடுவான் வரமதியா திருந்தான் சொக்கன். (கந)

கச.—கல்லானை கரும்புவாங்கின திருவிளையாடல்.

வல்லவரீ யாக்கினை சித்த ஞயின் வாங்குவிகல் லிபத்தால்யாங் காண்ப மென்றே, யெல்லவர்கா ணக்கைக்கன் னலைக்காட் டாமுன் வாங்கியயின் றிதுகமல நாள மென்றே, சொல்லருமார் பணிதரள வடமும் பற்றித் துணைவினயின் றதிரமுழங் கிடமுன் சீறும், வில் லரச னஞ்சியது சயிப்ப வானில் விரைவிலெடு நகைத்தொளித்தான் விமலச் சித்தன். (கச)

கடி.—சங்கப்பலகைகொடுத்த திருவிளையாடல்.

தவிசுவிரும் பிப்புலவர் வேண்டக் கன்மாப் பாவறிவ தொரு பலகை தந்தே பின்பு, புவிபுகழ்கீ ரன்பரணன் கபிலன் முன்னுப் புகழ்ந்தடைவி னிருந்துதமிழ் வைத்தாங் கெய்தி, விவிதமெனுங் காலமீ ளத்தாற் செய்யு டலைமயங்கி மீண்டொருகான் மலைதல் கொண்டாண், டவைபொருந்து பொருள்செய்து கூட்டித் தாணு மேறினு னரனுற்பத் தென்ப தென்றூர். (கடி)

கஉ. தாணு=ஸ்தாணு - சிவபெருமானுடைய. பூண்அரவா - அரவைப் பூணுகவுடையாய். இகல்விட்டு - மாறுபாட்டைவிட்டு.

கந. பொக்கணம் - ஒருவகைப்பை; திருச்சிற். உசஉ-பார்க்க. மன்னுள் - அரசனுடைய ஆள். மருத்தின் திசை - வாயுமூலை. கல் இபம் - கல்லானை.

கச. ஆக்கினைசித்தன் - ஆஞ்ஞாவித்தன்; இஃது அவருடைய திருநாமம். வாங்குவி - வாங்கச்செய்வாய். கன்னலை-கரும்பை. நாளம் - தாமரைக்காம்பு. மார்புஅணி - மார்பில் அணிந்த. துணைவின் - விரைவாக. கமலநாளமென்று வாங்கி அயின்றது.

கடி. கன்மாப்பாவறிவ தொருபலகை - பாக்களை அறிவிப்பதாகிய பெரிய தொரு கற்பலகை; இது சங்கப்பலகை; "கன்மாப்பலக யேறியிருந்து ஆராய் வுழி", "கண்மாப் பலகையேற்றி" (இறை. சூ. க-உரை.) விவிதம் - பலவகை. மலைதல் - போர்செய்தல். அரன் ஏறினன்.

கசு.—கீழியறுத்த திருவிளையாடல்.

திருந்துசிவ மூனிதருமி தளர்ந்தேன் மன்றல் செய்வான்வண் பொருளீலையென் றேத்த விங்குப், பொருந்துமடக் தையரொடியர் தலத்து லாவும் புகழ்மாற னணைந்தமணங் கண்டீ தென்கொ, லருந் தமிழா லிதுபொருந்தப் பாடி வாரே லளிப்பலென்றோர் பொற்கிழிநற் சபையுட் டேக்க, மருந்தனையான் கொங்கென்றோர் கவிதை பாடிக் கிழி யறுப்பான் வழங்கியொப்பித் தனன்கீழ் நின்றே. (கசு)

கஎ.—நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடல்.

காவலவ ரன்பர்பிழை பொறுக்குஞ் சொக்கே நக்கீரன் பிழை பொறுத்துன் னுதற்கட் டீயால், வேவுறச்சுட் டிடுதுயர்நீத் தருளா நல்கி விளங்கியசொல் லெனும்புகழுக் தாதி கேட்டுப், பூவைகயற் கண்ணிபொடும் பொய்கை மேவிப் பொன்மலர்ச்செங் கைகொடுத் துக் கரையேற் றென்றே, தேவர்புக ழாலயத்துட் சென்று போற் றத் தேவியொடுஞ் சென்றுகரை யேற்றி னனே. (கஎ)

கஅ.—குறுமுனிக்குத் தமிழுரைத்த திருவிளையாடல்.

ஒண்கவிகுன் றும்பின்ன முறுகீ ரற்கிங் குரைதமிழ்நூ லருள் பவர்யா ரெனவெம் மன்னே, நின்புவிப்போர் துயர்தருதென் றிசை வை கென்று தென்முனிக்குக் கயிலையின்முன் புகன்ற ஞான்று, விண்புகழ்முத் தமிழுரைத்தா யென்றி றைஞ்ச விளம்பியயான் மறந் தனனீ நினைத்தி ருந்தா, யெண்வழிநன் றென்றவற்கு முணர்த்து வா யென் றியன்முனிவா வெனவழைத்துள் ளுபதே சித்தான். (கஅ)

கக.—ஊமை தமிழறிந்த திருவிளையாடல்.

சங்கத்தா ரிறையனூர் பொருட்டே னேருந் தகைமைபெற வுரை யெழுதி மலிந்து முன்சென், றெங்கட்கீ தறிபவனே நல்ல சொல் லென் றியம்பவெல்லா மறிவனிவ்வூர் வணிகன் மைந்தன், றுங்க வுருத் திரசன்ம னுமன் றன்னைத் தூயமண்ட பத்துவைத்துச் சொன்மி னன்மைக்,கங்கமுறும் புளகெனப்போர் திருத்திக் கண்டே யக்கீரன் முதன்மூவ ருரைகொண் டார்கள். (ககூ)

கசு. சிவமுனி - தருமியின் தந்தை. தருமி - ஒரு பிரமசாரிப் பிராமணன். மன்றல் செய்வான் - கலியாணம் செய்துகொள்வதற்கு. பொற்கிழி - பொன் முடிப்பு. தூக்க - தொங்கக்கட்ட. மருந்து - அமுதத்தை.

கஎ. நக்கீரன் - சிறப்பையுடைய கீரன். வேவுற - வேகும்படி. சொல் எனும்புகழ் அந்தாதி - சொல் என்பதை முதலிலே பெற்ற கைலைபாதி காளத்தி பாதியந்தாதி யென்னும் பிரபிந்தம் (கஎ: நி.) பூவை.-காகணவாய்ப்புள். கயற் கண்ணி - மீனாக்ஷியம்மை. பொய்கை - பொற்றாமரை.

கஅ. யாரென - யாரென்று சோமசுந்தரக்கடவுள் வினவ. தென்முனி-அகத்தியர். எண்வழி - ஞாபக ஆற்றல்.

ககூ. இறையனூர் பொருட்கு -. இறையனாரகப்பொருட்கு. ஏனேரும் - மற்றையோரும். மலிந்து - சொற்போர்செய்து. நன்மைக்கு - நல்ல பொருளை உங்களுக்குத் தெரிவித்தற்கு. மூவர் - நக்கீரர், கபிலர், பரணர்.

உ0.—இடைக்காடன்பின்போன திருவிளையாடல்.

கூறுமிடைக் காடனியற் கவிதை பாடிக் கொடுகொண மன்னி கழ்ந்து தள்ள நொந்தே, வீறுயரா லயத்தணுகிப் பொருணீ சொல் லுன் மெல்லியென மறைபுகலு மிகழ்ந்த துன்னே, மாறகலுன் றேவி யையமற் றீலையென் றேத்தி வரைந்தேக யானுமே குவலென் றேகி, யேறியசங் கத்தொடிருந் தழைப்பப் போந்தா னிடத்தைவட திரு வால வாயென் னூர்கள். (உ0)

உக.—கடல்சுவற வேலெறிந்த திருவிளையாடல்.

சீலமது ரையையாழி கொள்வான் மேவச் சிவனருண்ஞா னக் கண்ணுற் கண்ட போதே, யேலவருங் கனவினிலுக் கிரமா றன்பா லெய்தியரும் புதல்வகே ளெதிர்சென் றேகின், றேலமொடுங் கழிய வருங் கடலே யாமுன் னுதவியவே லெறிந்துசுவற் றென்னப் போதும், வேலைசுவ றிடவேலை யெறிந்தா னுமம் வேலைவடிம் பலம்பகின்று னென்று ரன்றே. (உக)

உஉ.—வலைவீசின திருவிளையாடல்.

